# வள்ளுவர் உலகம்

வானொலிச் சொற்பொழிவுகளை
வழங்கிய தமிழறிஞர்கள் :

தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C
பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார்
திருக்குறளார் வி. முனுசாமி

தமிழ்ச் செல்வம்
மதுரை

முதற் பதிப்பு : மே, 1969
வானொலிச் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல்
வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா வெளியீடு

**விலை ரூ. 6·00**

## நன்றி

"வள்ளுவர் உலகம்" வானொலிச் சொற்பொழிவுகளை நூல் வடிவாக்கிட அனுமதியளித்த அகில இந்திய திருச்சி வானொலி நிலையத்தாருக்கு நன்றி.

MARUTHY PRESS, 83. Peters Road, Madras-14.

# பதிப்புரை

உறுதியும், தெளிவும், இலக்கியச் சுவையும் மிக்க திருக்குறள் உலகச் சிந்தனையாளர்கள் உள்ளங் களையெல்லாம் கவர்ந்துள்ளது கண்டு,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று நாம் பெருமையடைகிறோம்.

அவர்களையெல்லாம் அவ்வாறு கவர்ந்தது எது? திருக்குறளில் உள்ள கவிதை நடையா? உவமை யணிகளா? சொல்லடுக்குகளா? வள்ளுவரின் சிந் தனைத் திறமே அவர்களைக் கவர்ந்தது. இந்தச் சிந்தனை உலகளாவ விரிந்தது. வானினும் உயர்ந் தது. நீரினும் ஆழ்ந்தது. உலகில் அன்பு வளர, அறம் செழிக்க, மனித சமுதாயம் இனிது வாழ என்ன வழி என்று எண்ணிய உண்மையொளி படைத்த ஒருள்ளத்தின் மொழிவடிவே திருக்குறள். இந்த வள்ளுவ நெஞ்சினையே அறிஞருலகம் பாராட்டுகிறது.

கணவன், மனைவி, மக்கள் என இணைந்து வாழும் குடும்ப வாழ்விலும், அரசு, அமைச்சு, அரசியல் சுற்றம், குடிமக்கள் என வாழும் பொது வாழ்விலும் தனிமனிதனும் சமுதாயமும் கொண்டொழுக வேண்டிய ஒழுக்க நெறிகளையும், உணரவேண்டிய உயர்ந்த உணர்வுகளையும் மிகச் செம்மையாகச் சிந்தித்து எழுதியுள்ளார்.

சந்திரமண்டலத்து இயல் கண்டு தெளியும் அள வுக்கு அறிவியல் ஆற்றல் பெருகி வளர்ந்து வரும் இந்த நாளில் — மனிதன் மனிதனாக வாழும் வாழ்க்கை நெறியை மறந்து வாழும் சூழ்நிலை பெருகி வரும் இந்த நாளில்—களையே பயிராக வளர்ந்து காட்சி தரும் இந்த நாளில்—வள்ளுவச் சிந்தனை

வற்றி வரும் இந்த நாளில் மீண்டும் நமது நல்லெண்ணங்களைப் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பாகவே இந்த விழாவைக் கொள்ளவேண்டும்.

திருவள்ளுவர் பெயரால் மன்றங்களும், கழகங்களும் அமைக்கப்பெற்றுச் சொற்பொழிவுகள் வாயிலாகவும், கட்டுரைகள் கதைகள் எழுதி வெளியிடுவதன் வாயிலாகவும் வாழ்க்கையறத்தை வள்ளுவர் வழிநின்று சிந்திக்கத் தூண்டும் முயற்சிகள் அண்மைக் காலத்தில் பெருகியுள்ளன. விடுதலை பெற்ற நாட்டில் மக்களே பெருவலிமை படைத்தவர்கள். அவர்கள் விரும்பினால் அரசுகள் வீழும்; உருவாகும். இந்த நிலையில் சுரண்டலற்ற சமுதாயத்தை, மனிதனை மனிதன் மதித்து வாழும் சமுதாயத்தை, நெஞ்சிலுரமும், நேர்மைத்திறமும் கொண்ட மனிதனை, வாக்கில் நயமும், செயலில் திறமும், உழைப்பில் உறுதியும், உண்மையில் பற்றும், வாழ்வில் இனிமையும் கொண்ட மனிதனைக் காண்பது அரிதாகி வருகிறது. இத்தகைய ஒரு மனிதனை, ஒரு சமுதாயத்தை, ஒருலகத்தைத் திருவள்ளுவர் இலக்கியமாக்கியுள்ளார்.

இந்த வள்ளுவர் உலகத்தைக் காற்றிலே பரப்பி உலகினுக்கே தந்த பெருமை திருச்சி வானொலி நிலயத்துக்கு உண்டு. அவர்களைப் பாராட்டுகிறோம். அதனை நூல் வடிவாக்க எமக்கு உரிமை தந்த அவர்களுக்கு எங்கள் அன்புகனிந்த நன்றி.

இந்நூலுக்கு நல்ல இனிய அணிந்துரை நல்கிய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும் எங்களது நன்றிகலந்த வணக்கம்.

இந்நூல் மிகமிகக் குறுகிய காலத்தில் அச்சாகி வெளிவருவதால் நேரிட்ட குறைகளை அடுத்த பதிப்பில் நீக்கி நிறை செய்வோம்.

வணக்கம்.

**பதிப்பாளர்கள்,**

# அணிந்துரை

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டினை உலகம் கொண்டாடி வருகிறது. உலகத்தினரின் கருத்தைக் கவர்ந்த பெரியார் அவர். திருச்சி வானொலி நிலையம் இதனைச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது.

'வள்ளுவர் உலகம்' என்ற தலைப்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு. அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை, திரு. சரவண ஆறுமுக முதலியார், திருக்குறள் முனுசாமி என்ற நான்கு அறிஞர்களைக் கொண்டு திருக்குறள் முழுவதற்கும் பல கோணத்தில் விளக்கந்தர நிலையத்தினர் ஏற்பாடு செய்தார்கள். இது மிகமிகச் சிறந்த ஏற்பாடு. இதற்கு வானொலி நிலையத்தைத் தமிழுலகம் பாராட்ட வேண்டும்.

வானொலி வழியே காற்றோடு காற்றாக இந்தப் பேச்சுகள் ஓடிவிடாதபடி திரு. பாரதி சாமிநாதன் அவர்கள் அப்பேச்சுக்களை அச்சு வடிவில் நிலையாக எல்லோரும் வேண்டிய பொழுதெல்லாம் படிக்க ஆக்கித் தந்துள்ளார்கள். அவருக்கும் தமிழர்களது நன்றி உரியது.

வாழ்க வையகம் !

அன்பன்,

**தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.**

# பொருளடக்கம்


பக்கம்

## வள்ளுவர் உலகம் I

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

*வழித்துணை* ... 9

**திருக்குறளார் வி. முனுசாமி**

*குடும்பம்* ... 19
*இல்லறப் பண்பு* ... 28
*ஒழுக்கம்* ... 39
*இன்பமும் விரைவும்* ... 49
*தீயவை விலக்கல்* ... 56
*வாழ்க்கையின் குறிக்கோள்* ... 65

## வள்ளுவர் உலகம் II

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

*அருட்செல்வம்* ... 75

## வள்ளுவர் உலகம் III

*மனக் கட்டுப்பாடு* ... 85

## வள்ளுவர் உலகம் IV

*மனத் தூய்மை* ... 94

## வள்ளுவர் உலகம் V

*பேரின்பம்* ... 105

## வள்ளுவர் உலகம் VI

*ஊழ்* ... 116

**பேராசிரியர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை**

*இறைமாட்சி* ... 127
*கல்வி* ... 133
*அறிவுடைமை* ... 140

| | | |
|---|---|---|
| தன்குறை நீக்குதல் | ... | 146 |
| தகுந்த துணை | ... | 152 |
| செயல்முறை | ... | 159 |
| தொழில் நுணுக்கம் | ... | 165 |
| தலைமைச் சிறப்பு | ... | 172 |
| சுற்றமும் பணிவும் | ... | 179 |
| நீதி முறை | ... | 185 |
| இரக்கம் | ... | 193 |
| பிறர் மனம் அறிதல் | ... | 199 |
| ஊக்கம் | ... | 206 |
| முயற்சி | ... | 213 |
| மனவுறுதி | ... | 219 |

**பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார்**

| | | |
|---|---|---|
| அமைச்சனின் இயல்பு | ... | 226 |
| அமைச்சனின் சொல்திறம் | ... | 235 |
| அமைச்சனின் தொழில்திறம் | ... | 242 |
| தூதனின் இலக்கணம் | ... | 250 |
| நாடும் பாதுகாவலும் | ... | 257 |
| செல்வங்கள் | ... | 264 |
| படைவலிமை | ... | 268 |
| நட்பின் வகைகள் | ... | 274 |
| பேதைமையும் புல்லறிவும் | ... | 282 |
| பகையின் வகைகள் | ... | 287 |
| வியக்கத்தக்க செயல்கள் | ... | 294 |
| மருந்து | ... | 302 |

## வள்ளுவர் உலகம் VII

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

| | | |
|---|---|---|
| குடிமை | ... | 307 |

## வள்ளுவர் உலகம் VIII

| | | |
|---|---|---|
| பெருமையும் சால்பும் | ... | 316 |

வள்ளுவர் உலகம் IX
பண்புடைமை ... 326

வள்ளுவர் உலகம் X
பயனற்ற செல்வம் ... 335

வள்ளுவர் உலகம் XI
நாணுடைமை ... 344

வள்ளுவர் உலகம் XII
குடிப் பெருமை காத்தல் ... 353

வள்ளுவர் உலகம் XIII
வேளாண்மை ... 362

வள்ளுவர் உலகம் XIV
வறுமையின் கொடுமை ... 371

வள்ளுவர் உலகம் XV
இழிசெயல்கள் ... 380

வள்ளுவர் உலகம் XVI
கயமை ... 390

திருக்குறளார் வி. முனுசாமி

தோற்றமும் நோக்கமும் ... 398
மன அமைதி ... 406
காதல் சிறப்பும் நாணமும் ... 415
பிரிவின் துயரம் ... 422
உடலின் மெலிவு ... 429
தனிமையும் கனவும் ... 437
மாலைப் பொழுதும், உடல் சோர்வும் ... 446
நெஞ்சொடு குமுறுதல் ... 454
காதலியின் ஏக்கம் ... 462
இன்ப வேட்கை ... 469
புலவியின் அருமை ... 476
ஊடல் இன்பம் ... 483

# வள்ளுவர் உலகம் I

## வழித்துணை

உடலொடு உயிர் ஒன்றி உலவும் காலத்து ஒருங்கு நடைபயிலும் வழிகள் இரண்டு. இரண்டும் இயைந்த வண்ணம் நடை பயில்வதற்கு முன்பாக உயிர் தனது அகத்துறுப்பாகிய மனத்தினுல் நடை பயிலும். அஃது ஒரு வழியே. இவ்வழியேதான் உடற் காரியங்கள் நிகழும். சிந்தை செல்லும் வழியே செயல். சிந்தைக்கு அடிச்சுவடு இல்லை; செயலுக்கு உண்டு. திருவள்ளுவர் தனது ஒப்பற்ற உலகப் பொதுமறையாகிய திருக்குறளின் முன் பாயிரம் ஓதுகிருர். பாயிரத்தில் மனிதரை வழிநடத்தி வாழ்விக்கும் தத்துவங்களை எடுத்துப் பேசுகிருர். கடவுளை உலகத்தின் முதலாக திருக்குறள் கண்டு காட்டுகிறது. ஆதிபகவன் முதற்றே உலகு என்பது நினைந்து நினைந்து மகிழத்தக்கது. இறைவனை உலகம் முதலாக வுடையது. இறைவனே உலகத்தைத் தோற்றுவித்த முதல்வன்; இறைவனே எல்லோர்க்கும் முன்னே தோன்றி மூத்த முதல்வன்; இறைவனே முதற் கருவாக நின்று அகத்தும் புறத்தும் விரிந்து கிடக்கின்ற இவ்வுலகத்தை விரிவடையச் செய்தனன். இங்ஙனம் நினைந்து நினைந்து பொருள் கருதி மகிழத்தக்க நிலையில் அமைந்துள்ளது முதற்

குறள்! இது மட்டுமா? எல்லா எழுத்துக்களிலும் அகரத்தின் ஒலிச் சாயல் உண்டு. அதுபோல, எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் தங்கியிருக்கின்றான் என்ற குறிப்பு உணரத்தக்கது.

இறைவன் இங்ஙனம் முதலாக இருந்து உலகத்தைத் தோற்றுவித்து இயக்குவானாயினும், அவன் வேண்டுதல் வேண்டாமை யில்லாதவன் என்று திருக்குறள் பேசுகிறது.

> "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை இல"

என்பது திருக்குறள். உயிர்கள் உய்யும் பொருட்டு உலக நடைமுறையினை நிகழ்த்தும் இறைவனுக்கு வேண்டுதல் வேண்டாமை இல்லையென்றால் என்ன பொருள்? இறைவனுக்குத் தன் சார்பான விருப்பு வெறுப்பு இல்லையென்றே பொருள்! எந்தவொரு விருப்போ அல்லது வெறுப்போ தன்னைப் பற்றியதாக இருக்குமானால் நிறைவுடையதல்ல. உயிர்களுக்கு விருப்பும் வெறுப்பும் உண்டு; அவை பெரும்பாலும் அவர்களைச் சுற்றியே வட்டமிடல் உண்டு. அவர்கள் பிறரை—பிறவற்றை நேசித்து விரும்புவதெல்லாம் தன்னுடைய நலத்திற்குக் காரணமாக இருப்பதனாலேயாம். இதுவே உலகியலில் பொது விதி. ஆனால், இறைவனோ உலகம் உய்தி பெறுதற்காகவே ஐந்தொழில் நடத்தி வருகின்றான். இறைவனுடைய திருவுள்ளம் உலக உயிர்களைச் சுற்றியே வட்டமிடுகிறது. அகரமாகிய எழுத்து ஒரு சிறு முழு வட்டத்தில் தொடங்குகிறது. பின் அது கீழே வளைந்து வந்து, மீண்டும் மேல்நோக்கி வளைந்து சென்று, பின் அந்த வளைவுகளைக் கடந்து அண்மையில் ஒரு நேர்க்கோட்டில் முடிகிறது. இறைவன் ஒரு முழு வட்டம்; முழு முதல்;

குறைவிலா நிறைவு; கோதிலா அமுது; இன்ப அன்பு. ஆயினும், உயிர்களின் நலங்கருதி இரங்கி அவ்வுயிர்கள் செல்லுழித் தானும் வளைந்து சென்று, உயிர்களை அண்மித்து நின்று அறிவித்து துணையாய் நின்று துறக்கச் செய்து கீழ்மை நிலைமையிலிருந்து பைய மேல்நிலைக்குக் கொண்டுவந்து பின்பு வாழ்வெனும் மையலாகிய சுழலிலிருந்து நேரான இன்ப அன்பு நிலைக்குக் கொண்டுவந்து அருளுவதை 'அ' என்ற எழுத்தை எடுத்துக் காட்டியதன் மூலம் உய்த்துணரலாம். இறைவனுக்குத் தனது நாட்டமில்லை. உயிர்கள்மீதே நாட்டம். அஃதும் பற்றற்ற நாட்டம். ஆதலால், இறைவன்பெரு நெருப்பு. நெருப்பு மாசினை நீக்கும். ஆனால் நெருப்பு மாசுபடாது. அதுபோல இறைவன் குற்றங்கள் பலவுடைய உயிர்களோடு ஒன்றுவான்; உடனுவான்; உடன் பயிலுவான். ஆயினும், மாசுபடமாட்டான். இங்ஙனம் விருப்பும் வெறுப்புமற்ற இறைவனை வாழ்த்தி வணங்குதலின்மூலம் உயிர்களும் அத்தன்மையவாகி துன்பத்தினின்றும் விடுதலை பெறும்.

இறைவன் மனமெனும் மலரில் பொருந்தி அமர்வான். ஆனால், பலருக்கு மணம் மலராக இல்லையே! மனத்தை மணம் பரப்பும் மலராக மலர்வித்துக் கொள்வதே வாழ்க்கையின் முயற்சி. இருந்த முயற்சியே கடவுளை நாடும் வாழ்க்கை. இங்ஙனம், திருவள்ளுவர் கருத்தால் உய்த்துணரும் கடவுளைக் காட்டியவர். உணர மறுப்பார்க்குப் புறச்சான்றாலும், உணர்த்துவான் வேண்டி மழையின் விழுமிய சிறப்பை எடுத்தோதுகின்றார். இளங்கோவடிகளும், "மாமழை போற்றுதும்" என்று போற்றிப் பரவுவார். இயற்கை, இறைவனைப் படித்துணரும் பெரிய சுவடி என்பர் நல்லறிஞர். இறைவனே பெருமழை பெய்விக்கின்றான்;

பெய்து காக்கின்முன் என்பதைத் திருஞானசம்பந்தர் "பெய்தவன் பெருமழை உலகம் உய்யச் செய்தவன்" என்று பாடியுள்ளார். பெருமானிடம் பிரியாதிருந் தருள் செய்யும் அன்னையின் அருளென்னப் பொழிகின் றது மழையென்று வாழ்த்துகிறது திருவாசகம். ஆத லால், இறைவனின் அருளிச் செயற்பாடுகளில் வான் மழையே விழுமியது. இம்மழைக்கும் இறைவனைப் போலவே விருப்பு வெறுப்பு இன்மையும், மாறுபாடும், முரண்பாடுமின்றி எங்கணும் பெய்து நலன் விளைவிப்ப தும் உய்த்துணரத்தக்கது. அமிழ்தம் உண்டால் மகிழலாம்; நீடு வாழலாம்; அதுபோல மழை வாழ்விக் கும். ஆயினும் மழை பெய்யும்பொழுது, காத்திருந்து ஏற்று வாங்கிக்கொண்டு முழுதும் பயன்படுத்துவோ ருக்கே மழை வாழ்வளிக்கும். அதுபோல இறைவனின் தண்ணருள் பொழியும். ஆயினும் தண்ணருளை அனு பவித்து இன்புற உயிர்கள் இறைவன் திருவடிகளைத் தொழுதலும், புகழ்தலும், விரும்பிச் சேர்தலும், அவன் நெறியாகிய அருள்நெறி நிற்றலும் அவசியம் என்பதை உணர்த்த வான்மழையை எடுத்துக் காட் டாகக் கொண்டார்.

உயிர்கள் வாழ்வில் பயிலுதல் உய்தற்பொருட்டே யாம். வாழ்வியலுக்கு நுகரும் பொருள்கள் தேவை. அவையின்றி உலகியல் இல்லை. உலகியல் செழுமையாக இல்லையானுல் உயிர்கள் ஒழுக்க நெறிகளைச் சார்ந்து வாழ முடியாது. ஒழுங்கு, ஒழுகு, ஒழுகுதல், ஒழுக்கம் என்ற சொல்வளர்ச்சி கருதற்பாலது. இரண்டு கரை களைத் தொட்டுக் கொண்டு, ஆனுல் தொடும் கரை களைச் சேதப்படுத்தாமல் செவ்வியதாக இடையருது விழும் வீழ்ச்சியை நீர்வீழ்ச்சி என்கின்றோம். அது போல வாழ்வியலில் மனிதர்கள் உலகத்தோடு ஒட்டி,

ஒழுகி உலகத்திற்கு இடையூறு செய்யாமல் நலம் விளைத்தலும்—நலம் பெறுதலும் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கம் உலகியலில் நிலைபெற வேண்டுமாயின் பொருள் வளம் செழித்திருந்தால்தான் முடியும். வறுமை நிறைந்த வாழ்க்கையில் மனித உலகம் ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தல் அருமையிலும் அருமையே யாம். வானினின்று மழை; மழையின் பயனால் மண் மேல் வளம். வளத்தின் பயனாக ஒழுக்கத்திற் சிறந்த வாழ்க்கை என்றே திருவள்ளுவர் நம்புகிறார். இதனை,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்றார். நீர் என்பதை நீர்மை யென்று விரித்தும் பொருள் கொள்ளலாம். நீர்மை யென்றாலும் ஒழுக்க மென்று பொருள் உண்டு. உலகத்திற்கு ஒழுக்கம் இன்றியமையாதது. உலகு ஒழுக்கத்தால் உண்டு. இதனை "உண்டா லம்ம இவ்வுலகம்" என்ற புற நானூற்றுப் பாடல் விளக்குகிறது. ஆதலால் உலகு ஒழுக்கத்தால் நடைபெறும். ஒழுக்கம் வான் மழையால் தோன்றும் என்பதறிக.

கடவுளை, ஒழுக்கத்தைத் தாமே உய்த்துணர்வோர் மிகச் சிலரேயாம். தாமே உணர முடியாதவர்களை அவ் வழியிற் செலுத்துவோர் அந்தணர். அந்தணர் என் போர் குலத்தினாலோ, கோலத்தினாலோ, ஓதும் வேதங் களினாலோ, எண்ணும் மந்திரத்தினாலோ அல்லர். கொண்டொழுகும் செந்தண்மையினாலேயாவர். செந் தண்மை எப்பொழுது தோன்றும்? பொறிகளை அவித்த பிறகே தோன்றும். நெல்லை அவித்தால் நுகர்தற்குச் சற்றே தகுதிபெற்ற அரிசியாகிறது. அரிசியை மீண்டும் அவித்தால் நுகர்தற்கு மிகுதியும் தகுதியாகிற சோறா கிறது. சோற்றோடு சுவை சேர்த்தால் முழுதும் நுகரி

தற்குத் தகுதியாகிறது. அதுபோல "பொறிவாயில் ஐந்தவித்தல்" முதல் வேக்காடு. புலன்களை அவித்தல் இரண்டாம் வேக்காடு. இங்ஙனம் பக்குவம் பெறும் உயிர்கள் திருவருளின்பத்தோடு கூடும்போது அந் தண்மை பெறுகின்றன. அவர்களே வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள். மற்றவர்களெல்லாம் வாழாது வாழ் பவர்களே யாவர். இங்ஙனம் வாழ்பவர்கள் கடவுளை, அவர்தம் அருளின் மாட்சியை வாழ்க்கையின் சிறப்பை உலகினர்க்குப் பொதுவாக அறவுரைகள் மூலமும்— சிறப்பாக தம் வாழ்க்கையின் மூலமும் காட்டுபவர்கள் பொறிகளையும் புலன்களையும் அழிப்பது வாழ்க் கையின் தத்துவம் அல்ல. அவைகளின் இயல்பு துய்த்தலும் நுகர்தலுமாம். அவற்றின் இயல்புக்கு மாறாகச் செலுத்த வேண்டுமென்ற அவசியமு மில்லை! உயிர்கள் தீயதைத் துய்த்து தீமை விளை வித்துக் கொள்ளாமல் நல்லதைத் துய்த்து நலம் பெறட்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். நலத் திலும்கூட குறை நிறை கலந்த நலமுண்டு. குறையும் நிறையும் கலந்த நலம் அழிவிலின்பத்தைத் தர முடியாது. முழுநிறை நலமே அழிவிலின்பத்தைத் தர முடியும். ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பினைத் தர முடியும். சோறு உண்ட பொழுது பசியைத் தணிப்பது உண்மை. ஆயினும், அது அடியோடு பசியை மாற்றி மீண்டும் பசி தோன் றாமல் இருக்கச் செய்வதில்லை. அது போலவே உல கியல் இன்பங்கள் மீண்டும் மீண்டும் பசியை உண்டாக் குவன. திருவருள் இன்பப் பசியை மாற்றுவதோடு துன்பத்தின் தொடர்பையும் மாற்றும். இவ்வுயர்ந்த நெறியிலே நின்று கண்டு, கேட்டு, உண்டு, தேக் கெறிந்து வாழ்க்கையை வென்றவர்களே நீத்தார்.

அவர்கள் கடவுளைத் தம்மிடத்தே எழுந்தருளச் செய்து கொண்டவர்கள். அவர்கள் அருளிச் செய்யும் மொழிகள் மறைமொழிகள். இறைவன் அவர்களை இடமாகக் கொண்டு ஆடல்பல புரிகின்றான். அவர்கள் நெஞ்சத்தே நின்று உணர்த்தி உலகுக்கு உணர்த்த வைக்கின்றான். "எனதுரை தனதுரையாகக் கொண்டு நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமல" என்று திருமுறை பேசும். இவர்களே நெறியல்லா நெறிதன்னை நெறி யென நினைந்து வழி தவறி வாழ்க்கையில் இடறி வீழ்ந்து இன்ப துன்பச் சுழல்களில் சிக்கிச் சுழலும் உலகின ருக்கு வழித்துணையாவர். இத்தகையோரே ஞானாசிரி யர்கள்; ஞானாசிரியர்கள் தாயிற் சிறந்த பரிவுடை யோர். தாதியிற் சிறந்த கனிவுடையோர்; நோய் நீக்குபவர்; உயிர்க்குப் புகழ் சேர்ப்பார்; இத்தகை யோரே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; நிறை மொழி மாந்தர்; குணமென்னும் குன்றேறி நின்றோராவர்; சித்தத்தால் சிவமேயாவர். அவர்தம் காட்சியும் கனிவிற் சிறந்த சொல்லும் உயிர்க்கு உறு துணையாக நின்று உறுதி பயப்பனவாகும். இவர்கள் சொல்லுவதே அறம். அறம் புலமையில் தோன்றுவது அல்ல. புலன்கள் பழுத்த சான்றோரிடத்தே தோன் றுவது. அறம் ஆரவாரத்தில் தோன்றுவது அன்று; அடக்கத்தில் தோன்றுவது. அறம் மாடமாளிகையில் தோன்றுவது அன்று. யான் எனது என்பனவற்றின் மரணத்தில் தோன்றுவது. இத்தகு அறமே இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் எழுமையிலும் வாழ்விக்கும். அறம் எம்பெருமானின் இருப்பிடம்; பரசிவத்தின் ஊர்தி எருது பரசிவம் உயர்த்திப் பிடிக்கும் கொள் கைக் கொடி எருதுக் கொடி; பரசிவம் எழுந்தருளி யுள்ள திருக்கோயிலின் முன்றுறைக் காவல் எருதுவே

யாகும். எம்பெருமானுக்கும் எருதுக்கும் என்ன இயைபு? எருது உழைப்பின் சின்னம்! பற்றற்ற உழைப் பின் வடிவு! தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்து அருளும் குருஞான சம்பந்தர் "எருதுக்குத் தனதிச்சை உண்டோ" என்றார். அறத்தின் சின்னமே எருது என்று திருமுறை பேசு கிறது. ஓயாத உழைப்பு; பற்றற்ற உழைப்பு. உழைப் பின் பயன் உலகத்திற்கே! தான் துய்க்கும் சிலவாகிய வைக்கோலும் உலகோரால் உண்ண முடியாதது. அதனைத் தின்பதும் தன்னல நாட்டமின்றி மீண்டும் உழைத்துக் கொடுப்பதற்கு வலிமை கருதியேயாம். இத்தகு வாழ்க்கை யியல்புடையோர் நெஞ்சத்தில், இறைவன் எழுந்தருளியிருப்பான் என்பதே தத்துவம்; இதுவே அறநெறி.

அறத்தின் விளைநிலம் மனமேயாம். ஓங்கி உயர்ந்த கோயில் மதிற்சுவர்களில் செடிகள் முளைக்கின்றன. அதனை வெட்டி அப்புறப்படுத்துதல் சிறந்த திருத் தொண்டு என்று திருநாவுக்கரசர் செய்து காட்டினார். இன்று சிலர் இதனைச் செய்கின்றனர். பலர் செய்வ தில்லை. செய்யும் சிலரும் முறையாகச் செய்வதில்லை. மதிற்சுவரில் முளைத்திருக்கும் செடியை மேலாக வெட்டிவிடுவர். கட்புலனுக்குச் செடிகள் தெரியா. ஆயினும் மதிற்சுவரின் இடுக்குகளில் உள்ள வேர் முன்னையிலும் ஊக்கமாக உருத்துப் பருத்து வளரும். அதுபோல பொறிகளாலாய பழக்க வழக்கங்களைச் சிலர் தூய்மை செய்வர். ஆயினும் புலன்களைப் பக்கு வப் படுத்தார். சாந்தலிங்க அடிகள் பெருமான் "வேரினை வெட்டாமல் காட்டினை அழிக்க முடியாது. அதுபோல ஐம்புலப் பகையை வெல்லாமல் பொறிகளை வெல்ல முடியாது" என்பர், சங்க நூலும், "புலனழுக்

கற்ற அந்தணாளன்" என்று பேசும். பாசத்தினை வேரோடு பிடுங்க வேண்டும் என்பதனை "பாசப் பழி முதல் பறிப்பார்" என்று சேக்கிழார் கூறுவர். இந்த இயல்பு மனத்தூய்மையினாலேயே முடியும். உடலியக் கத்துக்குக் குருதியும், உயிரியக்கத்திற்கு உணர்வும் அடிப்படை. உடலும், உயிரும் ஒருங்கிணைந்து செயற் படும்போது குருதியில் உணர்வு கலந்து செயற்படு கிறது. குருதிக்குத் தனியே இயல்பில்லை. குருதியொடு கலந்த உணர்வைப் பொறுத்ததே இயல்பு. உணர்வுத் தோற்றத்தின் மையமாக இருக்கின்ற மனத்தூய் மையே அறத்திற்கு அடிப்படை. இதனைத் திருக்குறள்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று பேசுகிறது. மனத்தூய்மையே அறம். அஃதின்றி இயற்றும் அறங்கள் அறமாகா. அஃது வணிகமேயாகும். வணிகத்திலும் ஊதியம் தரும் வணிகமன்று. இழப்பினைத் தரும் வணிகம் என்று ஆரவாரத் தன்மையுடையவரை அறநெறியில் வழி நடத்துகின்றனர் சான்றோர். வாய்புக் கிடைத்துழி யெல்லாம் முடிந்த வகையிலெல்லாம் ஓயாது அறத் தினைச் செய்யச் சொல்கிறது குறள். அறம் செய்தற்கு காலம், இடம், பொருள் ஆகிய சூழல்கள் அமைய வேண்டுமென்று காத்திருக்க வேண்டியதில்லை. அப்படி யென்று பருமனான ஒரு சூழலுமில்லை. பல கற்கள்— அதனோடே பல சிறு கற்கள் ஆகிய எல்லாமே சேர்ந்து ஓர் ஒப்பற்ற மாளிகையாக எழுதல்போல, அறமும் சிலவாகவும், பலவாகவும் பெருகி வளர்ந்து முழுமை யாகிறது. இதனை,

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்று திருக்குறள் விளக்குகிறது. இத்திருக்குற ளில் "ஓவாதே" என்ற சொல் உணரத்தக்க ஒரு சொல். உலகத்தின் இயக்கம் ஓயாது இயங்குகிறது. அதனு லன்றோ உயிர்கள் வாழ முடிகிறது. உலகம் என்ற பேரடுப்பில் இறைவனுகிய சமையற்காரன் ஓயாது ஒழியாது சமைத்துச் சுவை குன்ருத—சுவை பழுத்த காய்களை, கனிகளைத் தரும் அற்புதத்தை நினைமின்! ஆதலால் ஓயாது அறம் செய்க! எப்பொழுதும் செய்க! புலன்களால் செய்க! பொறிகளால் செய்க! இதுவே வாழ்க்கை முறை! ஜான் வெல்ஸிலி என்ற அறிஞன்,

"உன்னுல் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்.
உன்னுல் முடிந்த எல்லா முறைகளிலும் செய்.
உன்னுல் முடிந்த எல்லா வழிகளிலும் செய்.
உன்னுல் முடிந்த எல்லா இடங்களிலும் செய்.
உன்னுல் முடிந்த எல்லாக் காலங்களிலும் செய்.
உன்னுல் எவ்வளவு காலம் செய்ய முடியுமோ அவ்வளவு காலம் செய்"

என்று கூறினுன். இதனையேதான் சுருக்கமாக ஒல்லும் வகையால் என்றும், செல்லும் வாயில் எல்லாம் என்றும், வள்ளுவம் கூறுகிறது. கடவுளை நினைந்து அவனது அருளாகிய மழையில் அகமும் புறமும் நனைந்து அவ னருள் பெற்ருேர் வழி நின்று, அவருணர்த்தும் அறம் பயிற்றுதல்—வாழ்க்கை நெறி என்று வள்ளுவம் காட்டும் நெறியில் நின்று வாழ்வோம்.

# குடும்பம்

உலக வாழ்க்கையினைத் திருவள்ளுவர் இரண்டு பிரிவுகளாகக் கண்டு வகுத்தார். ஒன்று இல்லற வாழ்க்கை—மற்றொன்று துறவற வாழ்க்கை. உலகில் மனைவி மக்களுடன் குடும்பத்தில் இருந்து வாழ்வது தான் இல்லற வாழ்க்கை என்று எல்லை வைத்துப் பேசுவது மட்டும் ஆகாது. வையத்தில் மக்களோடு ஒன்றுபட்டு இன்பம் நுகர்ந்து எல்லாத் துறைகளிலும் பங்கு கொண்டு வாழ்வதே இல்லற வாழ்க்கையின் குறிக்கோளாகும். துறவு பூண்ட துறவற வாழ்க்கை என்பது ஆசை அனைத்தையுமே விட்டு தவநிலையினை மேற்கொண்டு வாழ்வதாகும். இல்லறத்தான் அப்படி இருக்க வேண்டியவன் அல்ல.

இல்லறத்தான் உலகில் பற்று கொண்டு வாழ்பவன். மனைவி மக்களுடன் இன்பம் பெற்று வாழ்பவன். மக்கள் பலருக்கும் பயன்தர வாழ்க்கையினை நடத்துபவன். பொருளீட்ட கடமைப்பட்டவன். நிறைய முயற்சித்து நன்கு பொருள் சேர்க்க வேண்டியவன். பொருள் சேர்த்து தானம் தருமம் தக்க வழியில் செய்வது இல்லறத்தானின் இன்றியமையாத கடமையாகும். இல்லறத்தான் பல தொழில்களை மேற்கொண்டவனுவான். நாட்டுத் தலைவனுகவும், அரசியல் பணியாளனுகவும், வாணிபத் துறையாளனுகவும் இருப்பான். இவ்வாறு உலக மக்களிடையே இருந்து, தானும் வாழ்ந்து பிறரும் வாழ வழி செய்து மனைவி, மக்கள், உற்ருர், உறவினர் என்பது மட்டுமின்றி, துறவிகள் என்போருக்கும்கூட பயன்பட வாழ்ந்துவர வேண்டியது தான் இல்லற வாழ்க்கையினை மேற்கொண்டிருப்பவன் செய்ய வேண்டியதாகும்.

தான் உழைத்துத் தேடிய பொருளைக் கொண்டு தானும், மனைவி மக்களும் மட்டும் உண்டு ருசித்து, காலம் தள்ளி வாழ்ந்து மறைவதுதான் குடும்ப வாழ்க்கை என்கிற இல்லற வாழ்க்கையாகும் என்று பலர் நினைத்து அப்படி வாழ்ந்து மறைந்தார்கள். வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். அது முற்றிலும் தவறு; அது சுயநல வாழ்க்கையே தவிர, மனிதப் பண்பாடு நிறைந்த இல்லற வாழ்க்கை ஆகாது.

ஆசிரியர் வள்ளுவர் உலக வாழ்க்கையில் வாழு கின்ற மக்கள் அனைவர்க்கும் அறநெறி கூறுகின்றார். இல்லற வாழ்க்கை அல்லது துறவற வாழ்க்கை என்ற இரண்டிலும் இது பெரிது, அது சிறிது, இது உயர்ந்தது, அது தாழ்ந்தது. குறிப்பிட்ட ஒரு வாழ்க்கையில் இருந் தால்தான் வாழ்க்கையின் பயனை அடைய முடியும், மற்ற வாழ்க்கையில் இருந்தால் அடைய முடியாது என்றெல்லாம் ஆசிரியர் வள்ளுவர் குறிப்பிடுவதே இல்லை. யார் யார் எந்தெந்த வாழ்க்கையினை உலகில் மேற்கொண்டு இருந்தாலும், அதற்குத் தக்கபடி மனத் தூய்மையுடன் அறவழியில் அந்த வாழ்க்கை யினை அவன் நடத்துவானே ஆனால் அதுவே வாழ்க்கை யின் பயனாகும்.

பேராசை இல்லாமல், ஆசை வைத்து மனைவி மக்க ளுடன் இன்பம் நுகர்ந்து பகுத்து உண்டு, பழிபாவங் களுக்கு அஞ்சி வாழ்கின்ற இல்லறத்தான், ஆசைகளை எல்லாம் முற்றிலும் விட்டு வாழ்கின்ற துறவிகள் வாழ்க்கைதான் பேரின்பத்திற்கு வழி காட்டும் என்று தவறாக எண்ணி இருக்கக்கூடாது. அப்படி எண்ணி அவன் மயங்கிவிடுவானேயானால், அவன் மேற்கொண் டுள்ள இல்லற வாழ்க்கையினை நடத்த முடியாதவனாகி செய்ய வேண்டிய கடமைகளை மறந்து, பொருளீட்ட

வேண்டிய முயற்சியினைக் கெடுத்து, பலருக்கும் பயன் படவேண்டிய எண்ணத்தையும் விட்டு வீணாகிப்போய் விடுவான்.

> ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்''

என்று குறட்பா கூறுகிறது. இல்லற வாழ்க்கையினை மேற்கொண்ட பிறகு அந்த வாழ்க்கைக்குத் தகுந்த படியே நடந்து கொள்ள வேண்டும். குடும்ப வாழ்க்கையில் இருப்பதும், உலக மக்களிடையே இருந்து தொண்டு செய்து வாழ்வதும் பேரின்பம் என்று கூறப் படுகின்ற உயர்ந்த நிலைக்குக் கொண்டு போகாது என்ற மயக்கமான மனம் கொண்டவர்களுக்குத்தான் ஆசிரியர் இடித்துக் கூறுகின்றார். ''வானவர் உலகம் — பேரின்ப உலகம்—தெய்வீக வாழ்க்கை என்று சொல்லப்படுகின்ற இடத்திற்கு அங்கு வாழ்பவர்கள் என்பவர்களுக்குச் சமமாக இந்த உலகில் முறையாக இல்லறத்தில் வாழ்பவன் வைக்கப்படுவான்'' என்று ஆசிரியர் வள்ளுவனார் கூறுகின்றார்.

இல்லறத்தை மேற்கொண்டவன் ''வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும்; அதுவே போதும். வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசை, அன்பு, பற்று எல்லாம் அவன் கொண்டிருக்க வேண்டும். பேராசை போன்ற தீய எண்ணங்கள்தான் கூடாது. இல்லறத்தில் இருப்பவன் ஆசைகளை விட்ட—அறவே நீக்கிய முனிவர்கள்போல வாழ நினைக்கக் கூடாது. இல்லற வாழ்க்கையின் நின்று அதற்குரிய நல்ல பண்புகளுடன் இயல்பாக வாழ்கின்ற இல்லறத்தான் ஐந்து புலன்களையும் அடக்கித் தவம் செய்கின்ற முனிவர்களிலும் முதன்மையானவன் என்பதாகும். இக்கருத்தினைக்

கூறும் குறட்பாவினையும் நன்கு அறிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

''இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.''

யார் யார் எந்தெந்த வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தாலும் அந்தந்த வாழ்க்கையில் செய்ய வேண்டிய கடமையினைச் செய்து வாழ்வானேயானுல் அவன் வாழ்க்கையின் முழுமையான பயனை அடைந்தவனேயாவான். பலருக்கும் உதவியாக இருப்பவன் இல்வாழ்வானேயாவான்.

''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்'' என்கின்ருர். அதாவது பலரும் உண்டு வாழுமாறு தன்னுல் இயன்றவரை பகுத்துக் கொடுத்து வாழ வேண்டும். அப்படிப்பட்டவன் பரம்பரை—சந்ததி ஒருநாளும் அற்றுப் போகாது.

''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்''

என்றும் குறட்பா சிறப்பிக்கின்றது. எல்லா மக்களுக்கும் துணையாக இருக்க வேண்டியவனும் இல்லறத்தானேயாவான். பலருக்கும் பாதுகாப்பாக இருப்பவனும் இல்லறத்தானே ஆகும். நல்லபடியாகப் பொருளீட்ட வேண்டும் என்பதனை வற்புறுத்துவதற்காகவே இல்லறத்தினை மேற்கொண்ட பிறகு, ஆசையினை விட்டுவிட்ட முனிவர்களாகிய துறவற வாழ்க்கைதான் சிறந்தது···இல்லறத்தினைவிட என்று அவன் நினைக்கவே கூடாது. இதனுல் துறவறம் சிறப்பானது அல்ல என்பது ஆகாது. அதனை மேற்கொண்டவர்களுக்குத் தான் அது மேலானது.

நோன்பு விரதம் என்று சொல்லப்பட்ட அந்த வழிகளில் நின்று தவம் செய்கின்ற துறவிகளைவிட வாழவேண்டிய முறையில் வாழ்கின்ற இல்வாழ்க்கை மிகமிகச் சிறப்பானது என்று மீண்டும் ஆசிரியர் வற்புறுத்துகிறார். ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை என்கின்றார். அதாவது தானும் நல்ல இல்வாழ்வானாக வாழ்ந்து மற்றவர்களையும் அவ்வாறு வாழச் செய்யும் இல்வாழ்க்கையானது "நோற்பாரின் நோன்மை உடைத்து" என்று கூறி வைத்தார். தவம் செய்பவர்களையும் விட சிறந்ததாகும் என்கிறார். இல்லறத்தின் பெருஞ் சிறப்பினைத்தான் கூறினார் என்பது மாத்திரம் அல்ல, இல்லறத்தினை மேற்கொண்ட ஒருவன் தன் வாழ்க்கையில் நாட்டங் கொண்டு இல்லறத்தை விட்டு நழுவிவிட எண்ணவே கூடாது என்பதற்காகவே, தவசிகள் அடைகின்ற சிறப்பினை விட மேலான நிலையினை கடமை தவறாத இல்வாழ்வான் அடைவது உறுதி என்று திட்டமிட்டுக் கூறினார்.

**"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து"**

என்று குறளறம் பேசுகின்றது.

எக்காரணத்தைக் கொண்டும் இல்வாழ்க்கையில் இருப்பவன் இல்லறமல்லாத வேறு துறவு வாழ்க்கை தான் எல்லாவற்றையும் கொடுக்கும் என்று மயக்க மான எண்ணம் கொள்ளுதல் கூடாது. மறுபடியும் திரும்பத் திரும்ப ஆசிரியர் கூறுவதை நாம் நன்கு மனத்திற் கொள்ள வேண்டும். நல்ல முறையில் இல்வாழ்க்கையினை நடத்துபவன் மற்ற வேறான துறவறத்தில் போய்ப் பெறக்கூடியது என்ன இருக் கிறது என்று கேட்கின்றார்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்"

என்று கேள்வியும் கேட்டு உண்மையினைப் புலப் படுத்துகின்றார். இல்லறத்தானுக்கு வேறு எந்த நினைப்பும் இருக்கவே கூடாது.

இல்லறத்தை நடத்த முடியாமல் செல்லுகின்ற ஒருவன் துறவறத்திற்குத் தாண்டுவானேயானால் அவன் தவறு செய்பவனாகின்றான். இல்லறத்தை நன்கு நடத்துபவனும், துறவற வாழ்க்கைதான் மேலானது என்று எண்ணுவானேயானால் அதுவும் தவறானதாகும். அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்று மீண்டும் இல்லறத்தைச் சிறப்பித்துப் பேசினார்.

இல்லற வாழ்க்கை பற்பல கடமைகளைக் கொண்ட வாழ்க்கையாகும். உலகத்தில் பலருக்கும் பயனாக அமைந்துள்ளது இல்லற வாழ்க்கையாகும். ஆதலால் தான் முதன்மையாக அமைத்துப் பேசும்போது இல் வாழ்வானுக்கு வாழ்க்கைத் துணை வேண்டும் என்றார். இன்பம் நுகர்தல் என்பதற்காகத்தான் வாழ்க்கைத் துணை இருத்தல் வேண்டும் என்று எண்ணுதல் தவறாகும். இல்லறம் நடத்துவதற்கே வாழ்க்கைத் துணை இருந்தாக வேண்டும்.

துறவிக்குத் துணை வேண்டியதில்லை. துறவி எல்லா ஆசையினையும் விட்டவன்; பற்று என்பதே இல்லா தவன். எந்தத் துணையையும் நாடாதவனே துறவி. துறவியும் ஏதேனுமொரு துணையினை விரும்புவானே யானால் அவன் துறவியாக இருக்க முடியாது—ஆபத்து.

இல்லறவாழ்க்கையின் துணைவியே மனைவியாவாள். மனை வாழ்க்கைக்குரிய பண்புகள் பெற்ற பெண்தான் மனைவியாக இருக்க முடியும்; இருக்க வேண்டும். பெண்

ணுகப் பிறந்திருந்தாலும் மனைவி என்பதற்கேற்ற குணங்கள் இல்லாதவளை வாழ்க்கைத் துணைவி என்று கூற முடியாது; கூறவும் கூடாது. வாழ்க்கைத் துணைவியைப் பற்றிப் பேச வந்த ஆசிரியர், எடுத்த எடுப்பிலேயே இரண்டு அருமையான நற்குணங்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றார். ஒன்று வீட்டிற்கு, இல்வாழ்க்கைக்கு என்ற குணங்கள் அவளிடத்தில் இருக்கவேண்டும். அதாவது இல்வாழ்க்கைப் பெண்ணுக்கென்ற குடும்பப் பெண்ணுக்கென்றே இருக்க வேண்டிய பண்புகள் அவளிடத்தில் இருக்க வேண்டும். மற்றொன்று கணவனுக்கு உள்ள வருவாய்க்குத் தக்கபடி வாழ்க்கை நடத்துபவளாக இருத்தல் வேண்டும்.

> ''மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.''

இந்த இரண்டு குணங்களும் இல்லாதவள் வாழ்க்கைத் துணைவியாக இருக்க மாட்டாள் என்பது குறிப்பு.

இல்வாழ்க்கையின் சிறப்பே மனைவியின் நற்குண நற்செயல்களைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பதை ஆசிரியர் வள்ளுவனார் மிகத் தெளிவாகக் கூறிவிடுகின்றார்.

மனத்திண்மை, மனோதிடம் என்கின்ற உறுதிப்பாடான கற்பு பெண்ணிற்குப் பெருந்தகைமையினை அளிப்பதாகும். மனைவிக்கு உள்ள கடமைகளை ஆசிரியர் வள்ளுவனார் வரிசைப்படுத்திக் கூறி அழகுற அமைக்கின்றார். தன்னை ஒழுக்கத்திலிருந்து வழுவாமல் காத்துக் கொள்ள வேண்டும். தன்னைக் கொண்ட நாயகனைப் பேணிப் போற்றிக் காக்க வேண்டும். இல்லறத்தின் புகழினைக் காக்க வேண்டும். உறுதி தளராத நிலையான மனத் திடத்துடன் இருத்தல் வேண்டும்,

என்றெல்லாம் வாழ்க்கைத் துணைவிக்கு அரிய பல உண்மைகளைக் கூறுகின்றார்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறட்பா அரிய பல உண்மைகளை அடக்கிக் கொண்டு இருக்கின்றது. தங்களைத் தாமே காத்துக் கொள்ளுவதுதான் பெண்களுக்குச் சிறந்த பாதுகாப்பாகும்.

உலகிற்கு முதலான இறைவனை—வாலறிவனை வணங்குதல் வேண்டும் என்று கூறுகின்ற ஆசிரியர், அற்ப ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள எண்ணிறந்த பலவற்றைத் தெய்வங்களாக வழிபடுவதைக் குறிப்பால் கண்டித்துப் பேசுகின்றார். எல்லாவற்றிற்கும் உரியவனுன கணவனையே வழிபட்டு வணங்கிப் போற்றிப் பிறவற்றைத் தெய்வமென்று வணங்காத மனைவியை மிகவும் சிறப்பிக்கின்றார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பது குறட்பா. அத்தகைய வாழ்க்கைத் துணைவியின் சிறப்பு அளவிட்டுக் கூற முடியாததாகும். கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து இல்லறக் கடமைகளில் தவறாமல் வாழ்கின்ற பெண்கள் மேலுலக வாழ்க்கை எனப்படும் வாழ்க்கையினைவிட மேலான சிறப்பினை இங்கேயே அடைவார்கள். இல்லறத்திற்கு அழகே நற்குணமான மனைவி இருப்பதாகும். அந்த அழகிற்கு ஆபரணமாக இருப்பது நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பதாகும்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற குறட்பா எளிமையாக உண்மையினைக் கூறிவிடுகின்றது. ஒருவன் அடைகின்ற பெறற்கரிய செல்வங்களுக்கெல்லாம் சிறந்த செல்வம் அறிவு நிறைந்த நன்மக்களைப் பெற்றிருப்பதாகும்.

''பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற''

என்கின்றார்.

அறிவு நிறைந்த மக்களைப் பெற்றிருத்தலே மிகப் பெரிய செல்வமாகும். அறிவு இல்லாத மக்களைப் பெற்றிருப்பது செல்வமாகக் கருதப்படமாட்டாது என்பது குறிப்பாகும்.

பெற்ற குழந்தைகளினால் வருகின்ற இன்பம் மிகப்பெரியதுதான். மழலைச் சொல், இன்பம், குழந்தையின் விளையாட்டு இன்பம் என்று இவ்வாறு பல இன்பங்கள் உண்டு. தாம் சாப்பிடும்போது நமது குழந்தை அந்த உணவில் தனது சிறிய கையை வைத்துப் பிசைந்தால் அந்த உணவு தேவாமிர்தம்போல் இருக்குமாம்! அந்த அமிழ்தத்தைவிட மேலாகவும் இன்பம் தருமாம். "அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்." குழந்தைகளினால் அனுபவிக்கும் இன்பம் மிகப் பெரிதுதான். குழந்தைகளைத் தூக்கி அணைத்து இன்புறுதலும் அவர்களின் சொற்களைக் கேட்டு இன்புறுதலும் பெற்றோர்களுக்குக் கிடைத்துள்ள அருமையான இன்பங்களாகும்.

''மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''

என்ற அரிய குறட்பா கூறுகின்றது.

மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமையினை மிகவும் சுருக்கமாகவும் ஆழ்ந்த பொருள் உள்ள

தாகவும் அமைத்தார். தான் பெற்ற பிள்ளை, உலக மக்கள் போற்றிப் புகழும் வண்ணம் வாழ்வதுதான், அவன் பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய கடமை யாகும். ''இப்படிப்பட்ட பிள்ளையைப் பெறுவதற்கு இவனைப் பெற்றோர்கள் என்ன தவம்செய்தார்களோ'' என்று உலக மக்கள் கூறும் வண்ணம் அவன் வாழ்தல் வேண்டும்.

''மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்''

என்பது குறட்பா. மக்களுக்குப் பயன்பட்டு வாழ்தல் வேண்டும் என்பது குறிப்பாகும்.

இப்பகுதியில் ''இல்வாழ்க்கை'', ''வாழ்க்கைத் துணை நலம்'', ''மக்கட்பேறு'' ஆகிய மூன்று அதிகாரங்களில் தொகுப்புக் குறிப்பினைக் கண்டோம்.

## இல்லறப் பண்பு

தன்னைச் சார்ந்து இருப்பவர்களிடத்திலும், பிற ரிடத்திலும் நிறைய அன்புகொண்டு இருத்தலே மனிதத் தன்மைக்கு இலக்கணமாகும். இல்வாழ்க் கையில் வாழ்பவன் அன்பு என்கிற அருங்குணத்தினை முதன்மையாகப் பெற்றிருத்தல் வேண்டும். இல்லறத் தில் வாழ்பவன் பலரிடத்திலும் கலந்து வாழ்பவனாக இருக்கின்றான் என்பது மட்டும் அல்ல; அவன் பலருக் கும் இயன்ற அளவு உதவ வேண்டியவனாகவும் இருக் கின்றான். பலரும் இல்லறத்தானை நாடி வருவார்கள். மனித வாழ்க்கை மனித உயிர் என்பதோடு இணைந்து, சேர்ந்து இருப்பதுதான் அன்பு என்னும் அரிய பண் பாகும்.

''அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு''

என்பது குறட்பா. உயிர் வேறு, மனித வாழ்க்கை வேறு, அன்பு வேறு என்றெல்லாம் தனித்தனியாகப் பிரித்துப் பேசாதே...எல்லாம் ஒன்ருேடொன்று இணைந் திருப்பதுதான் உலக இயல்பாகும்.

உலகிற்குப் பெரும் துன்பம் உண்டாவதற்கும் பொதுவாகக் காரணம் சொல்லப் போனுல் அன்பில்லாதவர்கள் மிகுதியாக வாழ்வதேயாகும். ஏனெனில் அன்பில்லாதவர்கள் மற்றவர்களும் நன்கு வாழ்ந் திருக்க வேண்டுமே என்று எண்ணமாட்டார்கள். அன்பில்லாதவர்கள் சுயநல இன்பத்திலேயே குறியாக இருப்பார்கள். எல்லாப் பொருளும் தனக்கே இருக்க வேண்டும் என்றே பேராசையுடன் வாழ்வார்கள். இதனுல் மற்றவர்களுக்குக் கேடு செய்பவர்களாக ஆகி விடுகின்ருர்கள். அன்பு மனம் பெற்றிருப்பவர்களோ அப்படியில்லே. மற்றவர்களும் நல்லபடியயக வாழ ஆசைப்படுவார்கள். தங்களுடைய எலும்பைக்கூடப் பிறருக்கு அளிக்க முன்வருவார்கள். இவ்வுண்மையினே அழகுற ஒரு குறட்பா எடுத்து இயம்புகின்றது.

''அன்புஇலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

என்று மிக உயர்ந்த கருத்தினே விளக்கி விடுகின்றது. அன்பு இல்லாத மக்கள் ''எல்லாம் எங்களுக்கே வேண்டும்'' என்று சொல்லித் திரிவார்களாம். என்னே கொடுமை!

ஆதலால் இல்லற வாழ்க்கையினே மேற்கொண் டிருப்பவர்களுக்கு அன்பான நற்பண்பு நிலேயாக இருத்தல் வேண்டும் என்பதாகும். அன்பு இல்லாதவன்

வாழுகின்ற வாழ்க்கையும் வாழ்க்கையாகுமா? அவ் வாழ்க்கையில் இன்பம் இருக்குமா? பசுமை இருக்குமா? மகிழ்ச்சி இருக்குமா? அன்பு இல்லாதவனுக்கு நண் பர்கள்தான் இருப்பார்களா? அவன் வறட்சியான பாலைவனம் போலல்லவா இருப்பான். இன்னும் சொல்லப் போனால் கருங்கல், பாறையாகத்தானே அவன் இருப்பான். பாறைக்கல்லில் ஏதாவது முளைக் குமா? மனதில் அன்பில்லாதவனுடைய கொடிய வாழ்க்கையினை ஆசிரியர் வள்ளுவர் தெள்ளத் தெளிய எடுத்துரைக்கிறார்.

"அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று"

பட்டமரம் பாறையிலேயா தளிர்க்கும். ஒருக்காலும் நடக்காது. அன்பில்லாதவன் வாழ்வது உலகிற்குக் கேடு என்றே கூறுதல் வேண்டும்.

மனிதனுக்கு இருக்கும் அவயவங்கள் எல்லாம் உறுப்புக்கள் எல்லாம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? எல்லோருக்கும்தான், கால், கை, கண், வாய் என்பனவாகிய எல்லா உறுப்புக்களும் இருக்கத் தான் செய்கின்றன. அவைகள் எல்லாம் நல்ல செயல் களைச் செய்யவேண்டுமே! அவைகளையும் நல்வழியில் செலுத்துவதற்கு உடம்பிற்குள்ளேயே இருக்கவேண் டிய உறுப்பு ஒன்று இருக்கின்றதே...அந்த உறுப்பு இருக்கவேண்டாமா? அந்த உறுப்புக்குத்தான் அன்பு என்று பெயர். உள்ளேயே இருந்து எல்லாவற்றையும் செயல்படுத்துகிற அன்பு என்கிற உறுப்பு ஒருவருக்கு இல்லை என்றால் வெளியிலே காணப்படுகின்ற அவ யவங்கள், உறுப்புகள் என்ன பயனைத் தரும்? ஒன்றுமே இல்லை என்பதாகும். அழகாக ஒரு குறட்பா கூறு கின்றதே:

"புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில் அவர்க்கு."

அன்பில்லாதவனிடத்தில் இருக்கும் உறுப்புகள் நல்லதையே செய்யாது என்பது குறிப்பாகும்.

அன்பு நிறைந்து வாழ்கின்ற இல்லறத்தான் தன் வீட்டிற்கு வந்த விருந்தினர்களை அருமையாக வரவேற்று அவர்களுக்கு ஆவன செய்துவைத்து அனுப்பக் கடமைப்பட்டவனுவான். அடிக்கடி வீட்டிற்கு வந்துகொண்டிருப்பவர்கள் விருந்தினர் என்ற பெயருக்கு உரியவர்கள் அல்ல. ஆகவே அன்புடன் வாழ்கின்றவனைத்தான் உயிருடனும், உடம்புடனும் வாழ்கின்ற மனிதன் என்று சொல்லவேண்டும். உயிருடன் வாழ்கின்றுன் என்பதற்கு அடையாளமும், அன்புடன் வாழ்வதேயாகும். அப்படி அன்பு இல்லாத உடம்பு, எலும்புத் தோலினுல் மூடிக்கொண்டிருக்கும் வெற்று உடம்பு என்பதேயாகும்.

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற குறட்பா இவ்வுண்மையினை மெய்ப்படுத்திவிடுகின்றது. தமது வீட்டிற்குப் புதிதாக வருகின்ற நல்லோர்கள், சான்றோர்கள், பெரியவர்கள் என்பவர்களே விருந்தினர் எனப்படுவர்.

"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறட்பாவினைத் தந்து இல்வாழ்வானுடைய கடமையினை வற்புறுத்துகிருர் ஆசிரியர். விருந்தினரை போற்றிப் பேணுவதால் இல்வாழ்வானுக்குச் சிறந்த நன்மையும், பயனும் உண்டு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். நல்லவர் வருகை நன்மையைக் கொடுக்கும். விருந்தினர்களை அகமும், முகமும் மலர

வரவேற்று உபசரித்தல் வேண்டும். விருந்தினர்களை உபசரிப்பதால் உண்டாகும் மிகப் பெரிய நன்மையினைக் குறித்துக் காட்டவந்த ஆசிரியர் வள்ளுவர், விருந்தினரைப் போற்றுபவன் வீட்டில் செல்வத்திற்குரியவளாகக் கூறப்படும் செய்யாள் என்றும் தங்கி இருப்பாள் என்று கூறுகின்றார்.

''அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்''

என்பது குறளறமாகும். அதாவது அரிய விருந்தினரைப் போற்றுபவன் வீட்டில் செல்வப்பெருக்கம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும் என்பதாம். இல்வாழ்க்கை நடத்துபவன் கடமைகளில் விருந்தினரைப் பேணுதல் இன்றியமையாததாகும்.

வசதிகள் இருந்தும் அதாவது செல்வப்பெருக்கம் இருந்தும் இல்லாத வறுமையாளர்களைப்போலவே பலர் வாழ்கின்றார்கள். அந்தோ...இது மிகவும் இழிவான வாழ்க்கையேயாகும். இருந்தும் தரித்திரர்களாக வாழ்கின்றனரே, ''உடைமையுள் இன்மை'' என்று இப்படிப்பட்டவர்களை ஆசிரியர் கூறிவிடுகின்றார். செல்வம் இருந்தும் விருந்தினரைப் போற்றிப் பேணாது இருப்பது அறிவில்லாத்தனமேயாகும். அப்படிப்பட்டவர்கள் விருந்தினர்களை உபசரிக்காமல் வாழ்வது மடமைக்குணம் என்றே கூறப்படுகிறது.

நல்ல நிலைமையில் இருந்தும் வறுமையாளன் என்றே கருதப்படுபவன் யாரென்றால் விருந்தினரை உபசரிக்காமல் வெறுத்து ஒதுக்குகின்ற பேதையேயாகும். அப்படிப்பட்ட தன்மை அறிவில்லாதவர்களிடத்தில் காணப்படுவதாகும்.

''உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.''

எவ்வளவு குறைவான தாழ்ந்த பெயரைச் சம்பாதித்துக் கொள்கின்றனர். அறிவு நிறையப் பெற்றிருப்பவர்கள் விருந்தினர்களைப் போற்றி வரவேற்று ஆவன புரிவார்கள் என்பதாகும். மூக்கினுல் முகந்த மாத்திரத்திலேயே வாடிவிடும் மென்மைத்தன்மை நிறைந்துள்ளது அனிச்சப் பூவாகும். அதனையும்விட மென்மைத் தன்மையான உள்ளங்கொண்டு இருப்பவர்களே விருந்தினராவர். இல்லறத்தான் முகமலர்ச்சியுடன் அன்புரை பேசி வரவேற்பான் என்றே விருந்தினர் எண்ணி இருப்பர். இல்லறத்தான் முகத்தில் அன்பு காட்டாமல் வெறுப்பாகப் பார்வையினைச் செலுத்துவானேயானுல் வந்த விருந்தினர் உள்ளம் நைந்து குழைந்து வாடிவிடுவார்கள். இக்கருத்தினை எவ்வளவு அழகாக ஒரு குறட்பா விளக்கிவிடுகிறது.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

பலருடனும் பழகியும், கலந்தும் உதவியும் நட்பு கொண்டும் வாழ்கின்ற நிலையில் இருக்கும் இல்லறப் பண்பாளன் இனிய சொற்களைப் பேசிப் பழகுதல் வேண்டும். மனிதத் தன்மை இனிமை நிறைந்ததாகும்; இனியவைகளாகப் பேசுதலே மனிதத்தன்மையுடன் வாழ்கின்முன் என்பதனை எடுத்துரைக்கும். ஒருவன் இனிமையான சொற்களைப் பேசுவதில் எவ்வளவோ இன்பம் இருக்கின்றது! அதனுல் தனக்கு மட்டும்தான் இன்பம் என்பது அல்ல; மற்றைய எல்லோருக்குமே இன்பமாகும். இனிமையாகப் பேசுவது எளிமையானதாகும். கடுமையான சொற்களைக் கூற ஒருவன் கடுமையானவனுகத் தன்னை செய்துகொள்ளவேண்டும் இனிய சொற்களைக் கூறுவதையே ஆசிரியர் வள்ளுவனுர் சிறந்த அறம் என்று கூறுகின்முர். இனிய முகமும்

இனிய சொற்களும் ஒருவனை அறமான வழியில் நடத்திச் செல்லும்.

இனிமையாகச் சொல்லக்கூடிய சொற்கள் இல்லாமலா இருக்கின்றன. இனிய சொற்கள் எவ்வளவோ இருக்கின்றனவே, அவைகளை எல்லாம் தாராளமாகப் பேசிக்கொண்டு இன்பமும், மகிழ்ச்சியும் பெறலாமே. அப்படி இருக்க ஒருவன் கசப்பான கடுமையான துன்ப மான சொற்களை ஏன் பேசிக்கொண்டிருக்கின்றான். இனிய சொற்களுக்குப் பஞ்சமா? மரத்தில் சுவைத்து இன்புற்றுச் சாப்பிடக்கூடிய கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்னுபவனை என்னவென்று கூறுவது? கனிகளைச் சாப்பிட்டு இன்புறுவதுபோல இனிய சொற்களையே பேசி இன்புறலாமே. நன்றாகச் சொல்லுகிறாரே நம்முடைய திருவள்ளுவர்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''

இனிய சொல் இன்பத்தைக் கொடுக்கிறது வன்சொல்—கடுமையான சொல், துன்பத்தினைத் தருகின்றது. இதனை அறிந்திருந்தும் ஏனோ வன்சொற் களைச் சொல்லுகிறான்.

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது''

என்று குறளறம் பேசுகின்றதே.

இனிமையான சொற்களைப் பேசும் பழக்கம் ஒருவன் பெற்றிருப்பானேயானால் அவனுடைய தீமைக ளெல்லாம் பறந்தோடிவிடுமே. அல்லவை தேயும் என்கின்றார் ஆசிரியர். தீமைகள், பாவங்கள் அனைத் தும் தேய்ந்து மறைந்தேவிடும். இனிய சொற்களுக்கு அவ்வளவு வலிமையும் ஆற்றலும் உண்டு. அறம்

பெருகிக்கொண்டே போகும். இனிய சொற்கள் அவ்வளவு செய்யும். நன்மையினைத் தரும் இனிய சொற்களையே பேசுங்கள் என்று நயமாகக் கூறுகின்றார்.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"

என்ற குறட்பா இனிய சொற்களின் அரும்பெரும் சிறப்பினை எடுத்தோதுகின்றது.

வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து தான் வாழ்தல் வேண்டும். அப்படித்தான் வாழவும் முடியும். ஒருவனே அனைத்தையும் தனக்குத்தானே செய்துகொண்டு பிறர் உதவி, ஒத்தாசை இல்லாமலேயே வாழ்ந்துவிடுதல் முடியாததாகும். உலக இயல்பும் அப்படிப்பட்டதல்ல...தனித்தே தன்னந் தனியாக வாழ்தல் உலக வாழ்க்கையின் பண்பாடு ஆகாது.

நாமும் பிறர்க்கு உதவவேண்டும். பிறர் நமக்குச் செய்த நன்மையினை என்றுமே மறத்தல் ஆகாது. நாளுக்கு நாள் உயர்ந்த நற்குணங்களை வளர்த்து வருவது மனித வாழ்க்கையின் பயனையும் அளித்து, புகழையும் தருவதாகும். மற்றவர் செய்த நன்மையினை என்றும் மறக்கவே கூடாது. ஆனால் தீமையினை நமக்குப் பிறர் செய்தார்கள் என்றால் அதனைப் பெருந் தன்மையுடன் மறத்தல் வேண்டும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

என்பது திருவள்ளுவரின் திருவாக்காகும்.

மனிதப் பண்பாடு நன்றியறிதல் என்னும் அரிய பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருவதாகும். நன்றி மறந்து வாழ்பவர்கள் சமுதாயத்

தில் அதிகரித்துவிட்டால் அந்தச் சமுதாயம் வளர்ச்சி யடையாது. அன்பும் பண்பும் நிறைந்த மக்கள் செய் நன்றி மறவாமல் நடந்துகொள்ளுவார்கள். செய் நன்றி மறந்த மக்களை ஆசிரியர் வள்ளுவனார் வன்மை யாகக் கண்டித்துவிடுகின்றார். அத்தகைய இழிகுண மக்கள் முன்னேறவே முடியாது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொன்னான குறட்பாவினைப் பன்முறையும் சிந்திக்கவேண்டும் மகனே...செய்நன்றி கொன்று வாழ்ந்துவிடலாம் என்று எண்ணாதே என்று அச்சுறுத்து கின்றார்.

மற்றவர்கள் செய்கின்ற உதவியினை பெரிதா, சிறிதா என்று எவ்வாறு அளந்துபார்ப்பது? உதவி யினை அளந்து பார்க்கின்ற அளவு உதவி செய்யப்பட்ட காலத்தினையும் உதவியினைப் பெற்றுக்கொண்டவ ருடைய மனத்தின் தன்மையினையுமே பொறுத்திருப்ப தாகும். மிகச் சிறிய உதவி போன்றதை ஒருவர் செய் திருப்பார். ஆனால் அவர் செய்த அந்த நேரத்தையும் காலத்தையும் நினைத்துப் பார்த்தால் அந்த உதவி இந்த உலகத்தினையும்விடப் பெரிதாக இருந்துவிடும்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞானத்தின் மாணப் பெரிது"

என்று கூறுகிறது குறட்பா. ஆதலால் தக்க காலத் தில் செய்கின்ற உதவி மிக மிகப் பெரிதானதாகவே கருதப்பட வேண்டும்.

ஒருவருக்கு மற்றவர் செய்த உதவி சிறிது போலவே இருக்கலாம். ஆனால் உதவியினைப் பெற்ற வர் மனமோ பெரிதாக இருக்கலாம், உதவியினைப்

பெற்றுக்கொண்டவர் நல்ல பண்பு உள்ளவராகவும் பெருந்தன்மையாளராகவும் இருக்கலாம். அப்படிப் பட்டவர் தாம் பெற்ற உதவியினை மிகவும் பெரிதாகவே கருதிப் பேசுவார். சின்ன புத்தியும் அற்ப குணமும் உள்ளவருக்கு உதவி செய்தால் பெரிய உதவியையும் சிறிதாகவே நினைப்பார். ஆதலால் உதவியின் அளவு அதைப் பெறுகின்றவரின் குணத்தினையே பொருத்திருக்கின்றதென்று ஆசிரியர் வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

**''உதவி வரைத்தன்று உதவி, உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து''**

என்ற குறட்பா இவ்வுண்மையினை எடுத்துரைக்கின்றது.

உலகில் மிகச் சிறந்த சான்றோர்களும் இல்லாமல் இல்லை. பிறருக்கு உதவி செய்வதில் அத்தகைய பெரியவர்கள் இன்பமும் பெருமையும் கொள்ளுவார்கள். ஒரு சிலர் தாம் உதவி பெற்றிருந்தால் மற்றவர்க்கும் உதவி செய்வார்கள். இதுவும் நற்குணமேயாகும். உதவி செய்தாலும் அதனைப் பெற்றுத் தீமையே செய்கின்ற கயவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன கொடுமை! நாம் ஒரு உதவியும் செய்யாதிருக்கும்போதே நமக்கு உதவி செய்கின்ற பெருந்தன்மையான மக்களும் உண்டல்லவா...அவர்களின் பெருமையினை ஆசிரியர் வள்ளுவர் மிகவும் உயர்த்திப் பேசுகின்றார். அப்படிப்பட்டவர்களின் சிறப்பு அளவிட முடியாததாகும்.

**''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது''**

என்கின்ற குறட்பா சிந்திக்கத்தக்கதாகும். இந்த உலகத்தினையும், விண்ணுலகத்தினையும் அளித்தாலும்

ஈடாகாது என்று பெருமையாகச் சொல்லுகின்ருர். யாருக்கு? முன்பின் யாதொரு உதவியினைப் பெருமலிருந்தும், மற்றவருக்கு உதவி செய்கின்ற பெரிய பண்பாளர்களே இவ்வாறு புகழப்படும் தகுதி உடையவர்க்ளாவார்கள். அவர்கள் செய்கிற உதவியைச் "செய்யாமல் செய்த உதவி" என்று உயர்த்திப் பேசுகின்ருர்.

ஒருவர் நமக்குக் கொலை பாதகமான தீமையினையே செய்துவிடுகிருர் என்று வைத்துக் கொள்ளுவோம். நமது மனம் மிகவும் வேதனைப்படுகிறது. அந்த வேதனையைத் தீர்த்துக்கொள்ளுவது எப்படி? அந்த வேதனையை மறப்பது எவ்வாறு? கொடுமை செய்த அவரே, எப்போதாவது ஒரு காலத்தில் நமக்கு நன்மை ஒன்றும் செய்திருக்கலாம் அல்லவா? அந்த நன்மையினை நினைத்துப் பார்த்தால் இப்போது செய்த கொடுமை நீங்கிவிடும் அல்லவா?

**"கொன்றன்ன இன்னு செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்"**

என்பது குறளறம். மனஅமைதிக்கும், இன்பத்திற்கும் தேவையான நற்பண்பு இதுவேயாகும். திருக்குறளில் இல்லறப் பகுதியில், "அன்புடைமை", "விருந்தோம்பல்", "இனியவை கூறல்", "செய்நன்றியறிதல்" ஆகிய அதிகாரங்களின் தொகுப்புரையினைக் கண்டோம்.

# ஒழுக்கம்

ஆறறிவு படைத்த மனிதனுக்குச் சிறப்பாக இருப்பது உள்ளம் என்றும், மனம் என்றும் சொல்லப்படுகின்ற மனச்சாட்சியேயாகும். உண்மை, நேர்மை, நடுவுநிலைமை, ஓரவஞ்சகம் இல்லாதிருத்தல் ஆகிய பண்பாடுகள் மனிதன் என்பவனிடம் இருக்கவேண்டியவைகளாகும். மனம்போன போக்கிலே நடப்பவன் மிருகத்திற்குச் சமமாவான். விலங்கினங்கள் எதையும் நினைத்துப் பார்த்து செய்வன அல்ல.

நடுவு நிலைமை என்கின்ற அரிய குணம் மிகவும் சிறப்பாக ஆசிரியர் வள்ளுவனாரால் எடுத்துக் கூறப்படுகிறது. தராசுபோல மனிதன் எல்லோரிடத்திலும் சமமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். அதுவே மனிதப் பிறவிக்கு அழகாகும். பெருந்தன்மைக்கு அணிகலனுமாகும். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று சாய்ந்து கொடுத்து ஓரவஞ்சனையாக நடப்பவன் கெடுவது உறுதி. ஆதலால்தான் சமமாக இருந்து எடை போடுகின்ற தராசுக்கோல்போல நடந்துகொள்ளுங்கள் என்கின்றார்.

**''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி''**

என்ற குறட்பாவும், மனக்கோணல் என்பது வாழ்க்கையினைக் கெடுத்தேவிடும். மனச் சாட்சிக்கு விரோதமாக நேர்மையில்லாமல் நடுவு நிலைமை தவறி நடந்து கொள்ளுபவன் அந்த நேரத்தில் தன்னைச் சமர்த்தன் என்று நினைத்துக்கொள்ளலாம். நடுவு நிலைமை தவறி நடப்பவன் கெட்டே விடுவான். இது உறுதி என்று ஆசிரியர் அச்சுறுத்தியும் கூறுகின்றார்.

''கெடுவல் யான் என்பதுஅறிக; தன்நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்''

என்பது குறட்பாவாகும். கெடுவது நிச்சயம் என்றே கூறிவைத்தார். நெஞ்சத்தினை மனத்தினை நடுவு நிலைமை தவறி நினைக்கவிடாதே. ஓரவஞ்சனை மனக் கோணல் அப்படிப்பட்டவனைக் கெடுத்தேவிடும்.

வறுமையும், செல்வமும் வாழ்க்கையில் மாறி மாறி வருவனவேயாகும். அதற்காக அந்தந்த காலத்திற்குத் தகுந்த மாதிரி மனச் சாட்சியையும் விட்டு நேர்மை என்கின்ற நடுவு நிலைமையினையும் விட்டு நடந்து கொள்ளுவதென்றால் இந்த உலகம் என்ன ஆகும்? செல்வப் பெருக்கமும், செல்வம் இல்லாதிருப்பதும் ஒருவன் சிந்திக்கவேண்டியவை அல்ல. சான்றோர்கள் எனப்படும் பெருந்தன்மையாளர்களுக்கு ஆபரணமாக இருப்பது மனம் கோணாது இருப்பதேயாகும். நிலைத் திருக்கும் பெருமையினை அப்பண்பாடு கெடுத்து விடும்.

''கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து
கோடாமை சான்றோர்க்கு அணி''

என்று குறளறம் சொல்லுகின்றது. மனக்கோணல், நேர்மையில்லாதிருத்தல், நடுவு நிலைமை போற்றா திருத்தல்—ஆக இப்படிப்பட்ட தன்மைகள் சமுதாயத் தையே அழித்து விடும். மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து—''நடுவு நிலை'' இல்லாமல் பொருள் சேர்ப்பா னேயானல் அப்படிச் சேர்க்கப்பட்ட செல்வம், அதி விரைவில் மறைந்தே போகும். செப்பமாக அதாவது நடுவு நிலைமையில் நின்று செல்வம் சேர்ப்பானேயானல் அச்செல்வம் சிதைந்து அழியாது. அதுமட்டுமல்ல... அவனுடைய சந்ததியார்களுக்கும் அச்செல்வம் நீடித்து

நின்று பாதுகாப்பாக இருக்கும். இது ஆசிரியர் வள்ளுவனாரின் அரிய கருத்துரையாகும்.

**"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து"**

என்று குறளறம் பேசுகின்றது. ஒருவர் நடுவு நிலைமையில் வாழ்ந்தவர் அல்லது நேர்மையில்லாமல் மனச்சாட்சிக்குப் புறம்பாக வாழ்ந்தவர் என்பது அவரவர் அடைந்த புகழ்ச்சியாலும், இகழ்ச்சியினாலும் காணப்படுவதாகும். நடுவு நிலைமை இல்லாமல் வாழ்ந்தவனுக்கு எட்டம்—அதாவது எஞ்சியிருப்பதான புகழ் ஒருக்காலும் வரவே வராது. ஆதலால் அப்படிப்பட்ட எச்சத்தால் உலக மக்கள் பேசும் புகழ்ச்சி இகழ்ச்சி என்பவைகளால் ஒருவனுடைய நன்மை தீமையான வாழ்வினை அறிந்துகொள்ள முடியும். "தக்கார் தகவிலர்" என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்." இந்த அருமையான குறட்பா மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை அமைத்துக் கொண்டிருப்பதாகும். ஆதலால் "எச்சம்" நன்றாக இருத்தல் வேண்டும் என்று எண்ணி வாழ வேண்டியது, மனிதப் பிறவியில் மனிதனாகவே வாழவேண்டும் என்று நினைப்பவர்களின் கடமையாகும்.

உலக வாழ்க்கையில் நடுவு நிலைமையுடன் வாழ்கின்ற நேர்மையான வாழ்க்கையே இனிமை பயப்பதாகும். பிறருடைய பொருளையும் தம்முடைய பொருள்களைக் கவனிப்பதுபோல எண்ணிக் கவனித்தல் நடுவு நிலைமையாகும். நடுவு நிலைமையினைக் கூற வந்த ஆசிரியர் வணிகர்களைக் குறிப்பாகக் கூறி வணிகத் தொழிலினைப் பற்றிப் பேசுகின்றார். வியாபாரம் என்கின்ற வணிகத் தொழில் நடுவு நிலைமைக்கு அடிப்படையாக இருக்கும் எடுத்துக்காட்டாகும்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின்"

என்று குறளறம் வகுத்தார்.

கொள்ளலும், கொடுத்தலும் அறமான முறையில் இருத்தல் வேண்டும். சீர்தூக்கும் தராசுக் கோல் நடுவு நிலைமையினை அறிவுறுத்திக் காட்டுவதாகும். பிறரையும் பேணுகின்ற மனிதத் தன்மை பெற்றவர்கள் நடுவு நிலைமையில் தவறவே மாட்டார்கள். உலகம் என்றென்றும் அப்படிப்பட்டவர்களைப் புகழ்ந்து போற்றும். இவ்வுலகினை விட்டு மறைந்த பிறகும் அவர்களின் புகழும் பெயரும், இவ்வுலகில் பேசப்படும். அப்படியாக வாழ்ந்து மறைவதுதான் மனிதப் பிறவிக்கே இலக்கணமும் ஆகும்.

அடக்கம் என்கின்ற அருமையான குணமும் மனிதத் தன்மைக்குப் பெருமையளிப்பதாகும். அடக்கமில்லாமல் அலைவதும், நடந்து கொள்ளுவதும் தலைவிரித்தாடுவதும், மனிதப் பிறவியில் இழிவான நிலைமையினையே உண்டாக்கிவிடும். அடக்கம் என்கிற குணத்தின் பெருமையினை உயர்த்திப் பேசும் ஆசிரியர் வள்ளுவனார் குறிப்பானதொரு செய்தியினைக் கூறுகின்றார். இன்பமான உலகில் அமரர்கள் என்கின்ற தேவர்கள் வசிக்கின்றார்கள் என்றால், அடக்கம் உள்ளவர்கள் அந்த இன்ப உலகில் வைத்துப் போற்றப்படுவார்கள். அடக்கமில்லாதவர்கள் துன்பமான இருள் கொண்ட நரகத்திற்குப் போய்விடுவார்கள். ஆகவே நற்பண்பான அடக்கமே எல்லாவற்றிற்கும் காரணமாயிற்று.

" அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்று குறட்பா பேசுகின்றது. அடக்கம் உள்ளவர்கள் மக்களிடையே உயர்ந்த இடத்தினைப் பெறுவார்கள். அடங்காப்பிடாரிகளும் இருக்கின்றனவே...திருந்துமா?

அடங்கிக் காப்பாற்ற வேண்டியவைகளில் நாக்கு மிகவும் முக்கியமாகும். நாக்கினால் அடைகின்ற பெருமையும் உண்டு—சிறுமையும் உண்டு. மிகவும் பத்திரமாக இந்த நாவினை அடக்கிக் காப்பாற்ற வேண்டும். நாவினைக் காப்பாற்றாதவன் மிகவும் துன்பப்பட்டு அல்லல்பட்டு அவதிப்படுவான். இது உறுதி. குறட்பாவும் அச்சுறுத்திக் கூறுகிறது.

**''யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்,**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு''**

தவறான சொற்களைக் கூறி துன்பத்தில் இழுத்து விடுவதும் இந்த நாக்கேதான். அடக்கம் இல்லாத மக்கள் கட்டுப்பாடு இல்லாமல் பேசுவார்கள்; பிறருக்கு எளிதில் தீமையினை உண்டாக்கி விடுகின்ற சொற்களைச் சொல்லி விடுவார்கள். ஆதலால்தான் ஆசிரியர் வள்ளுவனார் காப்பாற்றப்பட வேண்டிய உறுப்புக்களில் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் வைத்து நாவினைக் காப்பாற்றுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். நெருப்பு உடம்பில் சுட்டாலும் அந்தப் புண் ஆறிவிடும். ஆனால் நாவினால் பேசும், பேச்சினால் ஒருவரைச் சுட்டுவிட்டால் அந்தப் புண் ஆறவே ஆறாதாம்.

நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**''தீயினால் சுட்ட புண் உள்ளாறும், ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு''**

என்று குறட்பா கூறுகின்றது. நாக்கு சுட்டு விடுமேயானால் அது மிகப் பெரிய கொடுமையினை உண்டாக்கி விடும் என்பதாகும். எனவேதான் அடக்கம் என்கின்ற குணத்தினை வாழ்க்கையில் என்றென்றும் கொள்ளுதல்

வேண்டும். அடக்கத்தின் பெருமைக்குப் பெரிய மலையினை ஒப்பிட்டுக் காட்டுகிறார், ஆசிரியர் வள்ளுவனார். நிலைமையில் மனிதப் பண்பாட்டில் மாறாமல் இருப்பவன் சிறப்பு மலையினையும் விடப் பெரிதானதாகும் என்கின்றார்.

**''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது''**

இக்குறட்பா அடக்கத்தில் சிறந்தவர்கள் எப்போதும் உயர்ந்த மனிதர்களாகவே இருப்பார்கள் என்பதனை நன்கு உணர்த்தி விடுகின்றது. அடக்கமுள்ளவர்களிடத்தில் பணிதல் என்கின்ற பொன்னான குணமும் இருக்கும். பணிதல் ஒருவருக்குக் குறைவினை உண்டாக்கி விடாது; சிறப்பான பெருமையினையே அளிக்கும். பணிவான குணம் செல்வம் படைத்தவர்களிடம் இருக்காது, என்று உலகில் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் செல்வந்தர்களிடமும், பணிதல் என்கின்ற பண்பான குணம் இருந்து விட்டால் மற்றுமொரு செல்வமும் அவர்களுக்கு இருந்து விட்டது போன்றதாகும், என்பது ஆசிரியர் வள்ளுவனாரின் வாக்காகும்.

**''எல்லார்க்கும் நன்றாம் பணிதல், அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து''**

என்ற குறளறம் அரிய உண்மையினைப் புலப்படுத்துகின்றது. அடக்கமும் பணிவும் மேன்மையினையும் உயர்வினையும் அளித்தே தீரும். அடக்கம் என்கின்ற குணத்தினைச் சிறந்த பொருளாகக் கொண்டு காப்பாற்றுங்கள் என்று கூறுகின்றார். இந்த மானிடப் பிறவிக்கு மனித உயிர்க்கு அதனை விடச் சிறந்த செல்வம்—ஆக்கம்—வேறு எதுவுமே இல்லை என்று துணிந்து கூறிவிடலாம்.

**''காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு''**

என்று கூறுகின்ற குறட்பா அடக்கமுடையவர்களின் செல்வாக்கின் சிறப்பினை விளக்கிவிடுகின்றது.

ஆமைக்கு இருக்கும் அருமையான பழக்கம்— குணத்தினை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அந்த ஆமைக்குப் பாதுகாப்பாக அதற்குப் பலம் பொருந்திய ஒரே ஒரு ஓடு தான் இருக்கின்றது. தனது உடம்பின் ஐந்து உறுப்புக்களாகிய பாகங்களை அந்த ஆமை ஓட்டிற்குள் பத்திரமாக வைத்துக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதைப் பார்க்கின்றோம். அது போலத்தான் மனிதனும் தனது ஐந்து உறுப்புக்களையும் பாதுகாத்து வருதல் வேண்டும். ஆமை ஐந்து உறுப்புக்களையும் காப்பதுபோல மனிதன் ஐம்பொறிகளையும் காப்பாற்றாமல் போவானேயானால் அவன் துன்பப்பட்டு தனது முடிவினைத் தானே தேடிக் கொள்ளுபவன் ஆவான்.

**''ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து''**

அவன் ஒருவன் மட்டுமல்ல; பற்பல பிறவிகளுக்கும் அப் பண்பான நற்குணம் பாதுகாப்பாக அமையும் என்று கூறுகின்றார். இத்தகைய அரும் பெரும் குணங்கள் எல்லாம் மனித இனம் ஒன்றுபட்டு வாழ பெரிதும் துணை புரிவன ஆகும். இல்லறத்தில் வாழ்கின்ற மக்கள் முதன்மையான நற்குணங்களைக் கடைப்பிடித்து ஒழுகி வருவார்களேயானால், பண்பும் பயனும் அதுவாகும் என்பது உண்மையாகவே இருக்கும். அடக்கம் என்பது எல்லோருக்கும் எளிமையில் வந்துவிடாது. ஆதலால் கெட்டு அழிபவர்கள் பல பேர் உண்டு. அடக்கமில்லாதவன் தன்மை அழி

விற்கே வழி காட்டிவிடும். கோபமும் அடக்கமுள்ள வர்களிடத்தில் அடங்கியே இருக்கும்; அடக்கமில்லா தவன் கோபத்திற்கு இரையாகிவிடுவான். அறக் கடவுள் என்பான் அடக்கமுள்ளவனிடத்திலேயே தங்கி இருப்பான் என்பது வள்ளுவனாரின் வாக்காகும். கல்வி கற்று அறிவு பெற்றதன் பயன் அடக்கத்தினை மேற்கொண்டு வாழ்வதேயாகும். இத்தகைய அருமை யான பழக்கங்கள் மனித ஒழுக்கத்தில் ஒருவனை நிறுத் தும். "ஒழுக்கம்" என்னும் பகுதியில் ஆசிரியர் அரிய உண்மைகளைக் கூறுகின்றார். ஒழுக்கம் இல்லாதவன் மனிதனாகவே கருதப்பட மாட்டான்.

மனித ஒழுக்கம் என்பது ஒன்று உண்டு. மக்கட் பிறவிக்கு ஏற்றபடி ஒழுகுதலாகும். அதாவது நடந்து கொள்ள வேண்டும் என்பதே குறிப்பாகும். ஒழுக்க மில்லாதவனை இழிபிறப்பாளன் என்றே ஒதுக்குதல் வேண்டும். ஒருவன் உயர்வுக்கும், தாழ்வுக்கும் சாதி, மத, சமய கருத்துக்களை அடிப்படையாக வைத்துப் பேசுதல் கூடாது. ஒருவன் மனிதத் தன்மையுடனும், மக்கள் பண்பாட்டுடனும் வாழ்கின்றானா என்பதனை வைத்தே அளந்தறிதல் வேண்டும். ஆதலால்தான் ஒழுக்கத்தினை உயிரினையும்விடப் பெரிதாக எண்ணிப் பாதுகாக்க வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாக அமைந்துள்ளது ஒழுக்கம் மிகச் சிறந்த பெருமையினை ஒருவனுக்கு அளிப்பதாகும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

என்றார். உயிரினையும் விடப் பெரிதாகப் போற்றப் படும் என்பது குறிப்பாகும்.

ஒழுக்கமில்லாதவனுக்கு இவ்வுலகில் உயர்வே கிடையாது. உதாரணம் ஒன்று காட்டப்பட வேண்டு

மாகில், அழுக்காறு என்கின்ற ஒருவனிடத்தில் செல்வமே இருக்காது. அழுக்காறு என்கின்ற பொறாமை கொண்டவனிடத்திலும் செல்வம் இருப்பது போலக் காணப்பட்டாலும், அச் செல்வம் விரைவில் மறைந்தே போகும். அது போலவே மனித ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வு என்பதே வராது.

**''அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை;**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு''**

என்று குறட்பா அமைத்தார். ஒழுக்கம் என்பது மனித தன்மைக்கேற்ற பண்பாடுகளுடன் வாழ்வதாகும். அது இல்லையென்றால் அவனை மனித இனத்தில் சேர்த்து எண்ணக் கூடாது. ஒழுக்கமில்லாதவன் படிப்பினால் மட்டும் பெருமை வந்து விடும் என்று எண்ணுதல் முற்றிலும் தவறாகும். மறை நூல்களைப் படித்துக்கொண்டிருக்கும் ஒருவன் அவைகளை மறந்தான் என்றாலும் பிறகு படித்துக் கொள்ளலாம்; ஆனால் அவன் ஒழுக்கம் கெட்டுவிட்டால் அழிந்தே போய் விடுவான்.

ஆகவே உயர்ந்த மறையான நூல்களை ஓதுவதையே சிறந்த ஒழுக்கம் என்று இருத்தல் கூடாது. மனிதப் பிறவிக்குத் தகுந்த உகந்த ஒழுக்கத்தினைப் பின்பற்றி வாழ்கின்றானா என்பதையே கவனித்தல் வேண்டும். மறை நூல்களைப் பார்த்து ஓதிக் கொண்டிருப்பவனைப் பார்ப்பான் என்று ஆசிரியர் அழைக்கின்றார்.

**''மறப்பினும் ஒத்துக்கொள்ளலாகும், பார்ப்பான்**
**பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்''**

என்றார். மறைகளை ஓதிக்கொண்டிருப்பவனுக்கு மனித ஒழுக்கமே முக்கியம் என்பது வலியுறுத்தப்பட்டது. ஓதுகின்ற நூல்களை மறந்தாலும் பரவாயில்லை; பிறகு படித்துக் கொள்ளலாம். ஒழுக்கம் குறைந்தவனாக

வாழாதே என்று அச்சுறுத்தி வற்புறுத்துகின்றார். அற மான வாழ்க்கைக்கு முதலாக இருப்பது—அதாவது மூல காரணமாக இருப்பது வித்துப் போன்று விதை போல இருப்பது நல்ல ஒழுக்கமேயாகும். அந்த ஒழுக்கம் இல்லை என்றால் அவன் மனிதப் பிறப்புப் பெற்றவ னாகவே கருதப்பட மாட்டான். மனித இன்பமும் அவனை வந்து சேராது. தீய ஒழுக்கம் உடையவனாகி இடும்பைக்கே இடமாக இருப்பான். அதாவது துன் பத்திற்கே ஆளாகி இருப்பான். இதனைக் கூறும் குறட்பா நன்கு சிந்திக்கத் தக்கதாகும்.

**''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்''**

மனித ஒழுக்கத்துடன் ஒருவன் வாழவில்லை யென்றால் அவன் மனித இனத்துடன் சேர்ந்து வாழும் உரிமை இல்லாதவன் என்றே கூறலாம். உலகத்துடன் வாழத் தெரியாதவனை என்னென்று கூறுவது? ஆசிரியர் விளக்கம் தருகின்றார்.

உலகத்துடன் பழகுவதற்கு உலக மக்களுடன் கலந்து வாழ்வதற்கு நல்ல புத்திசாலித்தனமும், ஒழுகு கின்ற முறையும் தெரிந்திருத்தல் வேண்டும் ஒரு சிலர் நல்ல கல்வியினைப் பெற்றிருப்பார்கள். பல நூல் களைப் படித்திருப்பார்கள். பல நூல்களைக் கற்றிருக் கின்றோம் என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். எல்லா வற்றையும் கற்றிருந்தும், உலகத்துடன் உலக மக்க ளுடன் கலந்து வாழக் கற்றிருக்க மாட்டார்கள். என்னே அறியாமை. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து அறிவில்லாதவர் என்றே ஆசிரியர் கூறுகின்றார். உலகத்துடன் ஒழுகக் கற்கவில்லை என்றால், பல நூல் களைப் படித்தும் பயனில்லை என்பதே ஆயிற்று.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்''

என்னும் குறட்பா அரிய உண்மையினைக் கூறுகின்றது. வள்ளுவர் வகுத்த இல்லறப் பகுதியில், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை என்ற அதிகாரங்களின் கருத்துரைத் தொகுப்பாகக் கூறப்பட்டதாகும்.

## இன்பமும் விரைவும்

உலக வாழ்க்கையில் மிகவும் சிறப்பான இடத்தினைப் பெற்றுத் திகழ்ந்து வருவது காதலர் வாழ்க்கையும், நாயகன் நாயகியாக இன்ப வாழ்க்கை என்கின்ற இல்லறமும் ஆனபடியால், ஆசிரியர் வள்ளுவனார் அத்துறைகளையும், தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றார். காதலர் வாழ்க்கையினைப் பேசுகின்ற பொழுது காதலர்களாக இணைந்துவிட்ட ஆணும், பெண்ணும் நடத்தி வருகின்ற இன்பச் செயல்களையெல்லாம் எடுத்துரைக்கின்றார்.

திருமணம் செய்து கொள்வதற்கு முன்னதாக நடைபெறுகின்ற வாழ்க்கையே காதல் வாழ்க்கை அல்லது களவியல் வாழ்க்கை என்று கூறப்படும்.

அதாவது பெற்றோரும், மற்றோரும் அறிந்து கொள்ள முடியாதபடி காதலர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதாகும். காதலியினிடம் அன்பு பூண்டு ஒன்றுபட்டு வாழ்கின்ற காதலன் தான் பெற்ற இன்பத்தினை நினைத்து மகிழ்ந்து கூறுகின்றான். ஐம்புலன்களும் ஒன்று சேர இன்பம் பெறுகின்ற வாய்ப்பு இம்மாதிடத்தில்தான் உண்டு என்று கூறுகின்றான்.

''கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள''

என்கிறது குறட்பா. அக் காதலனின் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தினை அப்படியே எடுத்துக் காட்டு கின்றது. அவன் பெற்ற இன்பத்தின் எல்லைக்கு, அளவில்லை என்றே கருதுகின்முன். அவன் கூறுவது முற்றிலும் உண்மையேயன்றே!

ஒருவருக்கு ஒரு நோய் வந்தால் அந்த நோய் நீங்குவதற்கு மருந்து கொடுக்க வேண்டும். அந்த மருந்தின் தன்மை வேருகவே இருக்கும். அந்த நோய் உண்டாவதற்குக் காரணம் எதுவாக இருந்ததோ, அதற்கு முற்றிலும் மாருன குணமுடைய மருந்தைத் தான் கொடுப்பார்கள். அப்பொழுதுதான் வந்த, அந் நோய் போகும். இந்த உண்மை பொதுவாக ஏற்படு கின்ற நோய்களுக்குப் பொருந்தும். ஆனல், அக் காதலன் பெற்ற நோயினுக்கோ மருந்து, வியப்பாகவே இருக்கின்றது.

நோயும், மருந்தும் ஓர் இடத்திலிருந்தே வந்து விட்டதாம். அவனுக்கு உண்டான இன்ப நோயினைக் கொடுத்த, அந்தப் பெண்ணே அந்த நோய் தீரும் மருந்தாகவும் இருந்துவிட்டாள் என்று கூறுகின்முன்.

''பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து''

என்று குறட்பா சொல்லுகின்றது. காதல் உலகில் உலவி வரும் காதலன் நுட்ப அறிவு படைத்தவ னல்லவா? தான் கொடுத்த நோய்க்குத் தானே மருந் தாளுள் என்று அவன் கூறுகின்றபொழுது அவன் பெற்ற இன்பத்தினை நன்கு புரிய வைக்கின்முள்.

''பெற்ற நோயினைத் தீர்த்துக் கொண்டேன்'' என்று பெருமிதம் கொள்ளுகின்முன். தீர்த்து வைத்

தவள் அப் பெண்தான் என்பதையும் உணரும்படி செய்கின்ருன்.

தன்ஞல் உயிருக்கு உயிராக விரும்பப்படுகின்ற அப் பெண்ணின் இன்பத்தினே மிக அருமையாக மீண்டும் விளக்கம் தந்து சொல்லுகின்ருன். அம் மாதினே விட்டு, தான் மட்டும் தனியாக இருக்க முடியவில்லே என்கின்ருன்.

உலகிலேயே இதுவரை கண்டும், கேட்டும் இல்லாத ஒரு நெருப்பினே—தீயினே அப்பெண் பெற்றிருக்கின்ருள் என்று கண்டு கொண்டாஞம். அவள் பெற்றிருக்கின்ற அவள் கண்டு கொண்ட அம்மாதிடம் இருக்கும் தீயின் தன்மைதான் எப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அக்காதலனே விளக்கம் தருகின்ருள். அந்த நெருப்பு அவன் அம்மாதினே விட்டு நீங்கிஞல்தான் சுடுகின்றதாம். நெருங்கிவிட்டால் குளிர்ச்சியாக இருக்கின்றதாம்.

இயற்கையில், நாம் பார்க்கின்ற நெருப்பு அருகில் சென்ருல் சுடும். அதனே விட்டு நீங்கிஞல் சுடாது. ஆஞல், அம்மாது வைத்திருக்கின்ற நெருப்பு அப்படிப் பட்டதல்லவாம். நீங்கிவிட்டால் சுட்டுவிடுமாம். நெருங்கிவிட்டால் இன்பமான குளிர்ச்சியினேத் தருமாம். இப்படிப்பட்ட தீயினே இப்பெண் எங்கிருந்து பெற்ருளோ, என்று பெரிய திகைப்பும், மலேப்பும் வியப்பும் கொண்டவஞகிப் பேசுகின்ருன்.

இதோ ஒரு குறட்பா அவன் எண்ணத்தைப் புலப் படுத்துகின்றது.

**''நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்ருள் இவள்''**

மாந்தித் திளேக்கின்ற இன்ப வெள்ளத்தில் மூழ்கிய காதலன் சொல்லும் உண்மையில் ஆழ்ந்த

பொருள் அடங்கிக் கிடக்கின்றது. அக்காதலியின் பால் தான் அனுபவித்த மகிழ்ச்சியினையும், இன்பத்தினையும் பல முறைகளில் அவனுக்குச் சொல்லத் தோன்றுகிறது. "புதுமையிலும், புதுமையாக நாள் தோறும் காணுகின்றேன்" என்று கூறுகின்றான். ஆராய்ச்சியாளர்கள், தாம் எடுத்துக்கொண்ட பொருள்களைப்பற்றிப் பலமுறையும் ஆராய்ந்து கொண்டே போவார்கள். அவ்வாறு ஆராய்கின்ற பொழுதெல்லாம் ஒவ்வொரு புதுமையான உண்மையினை அவர்கள் கண்டறிய முடிகின்றது.

"இதுவரை இந்த உண்மையினைக் காணவில்லையே" என்று அந்த அறிஞர்கள் கூறுவார்கள். போகப்போக புதுப்புது புதுமைகளை அறிஞர்கள் காணுவது போல அக்காதலனும், தன்னுடைய காதலியினிடம் தான் மகிழும் இன்பத்தில் அரிய பல புதுமைகளை நாள் தோறும் காணுகின்றேன் என்று கூறுகின்றான்.

**"அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு"**

என்பது குறட்பா.

அறிகின்ற பொழுதெல்லாம், ஒவ்வொரு முறையும், இதனை இதுவரை நான் காணவில்லையே, என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றிவிடுகிறதாம். தான் பெற்ற மகிழ்ச்சியின் எல்லையற்ற நிலையினையே அவன் பேசுகின்றான். அவ்வாறு மறைந்து வாழ்கின்ற காதல் வாழ்க்கையின் சிறப்பிற்கே தனிப்பெருமை உண்டு என்பது அவன் கருத்தாகும். இவ்வாறு இன்பக் கடலாகிய தனது காதலியின் பெருமையினையெல்லாம் எடுத்துக் கூற அவன், உள்ளம் துடிக்கின்றது. மேனி தழைத்த, தளிர்போல் இருக்கின்றதே, பற்கள் முத்துப் போல் இருக்கின்றனவே, கண்கள் வேல் போல் இருக்

கின்றதே, தோள்கள் மூங்கில்போல் காணப்படுகின்றனவே'' என்று இப்படியாக அம்மாதின் அழகினை அடுக்கிப் பேசி மகிழ்கின்ருன்.

**''முறிமேனி, முத்தம் முறுவல, வெறிநாற்றம்,**
**வேல் உண்கண், வேய்த்தோள் அவட்கு''**

என்ற குறட்பா மிகவும் சுருக்கமாக அவன் பேச்சினைக் காட்டி விடுகின்றது.

தன்னுடைய காதலியின் அழகினையும், மென்மைத் தன்மைகளையும் சொல்லுவதில் அவன் அடையும் மகிழ்ச்சிதான் என்னே! அம்மாதின் மென்மையான உடம்பினைப்பற்றிக் கூறுகின்ற அவன் அவளுடைய பாதங்களின் அழகினையும், தன்மையினையும் கூறுகின்ருன். இப்படியெல்லாம் கூறி மகிழ்ந்து கொள்ளுதல் காதலர்களுக்கு இயல்பே அல்லவா!

அன்னத்தின் உடம்பில் உட்புறமாக இருக்கும் சிறகு மிகவும் மென்மையாக இருக்கும் என்பார்கள். அதுபோல, மென்மைத் தன்மை வாய்ந்த மலர் அனிச்ச மலராகும். மூக்கினுல் முகர்ந்த மாத்திரத்திலேயே அனிச்ச மலர் வாடிவிடும். இப்படி அனிச்சப் பூவையும், அன்னப் பறவையின் பஞ்சுபோன்ற சிறகையும் தரையில் தூவி, அதன்மேல் அக்காதலியை நடக்கச் சொன்னுல், அவைகள் அவள் பாதங்களுக்கு நெருஞ்சி முள்போல இருக்குமாம். அப்படியென்ருல், அப்பாதங்களில் மென்மைத் தன்மை எப்படி இருக்குமோ? காதல் மயக்கத்தில் காதலன் கூறுவது கற்பனையே என்ருலும் அக்கற்பனை அவன் உள்ளத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இதனைக் கூறும் குறட்பாவினைக் காணுவோம்.

**''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்''**

இந்தப் பேச்சு அக்காதலன் நுகர்ந்த இன்பத்தினுல் வருவதேயென்ருலும், காதல் வாழ்வின் மகிமை புலப் படுத்தப்பட்டு விடுகிறது.

இரவு நேரமாகையால் காதலன் வானத்தைப் பார்த்தான். சந்திரனின் அழகினை பொதுவாக முகத் தின் அழகிற்குச் சொல்லுவது இயல்பேயாகும். ஆனுல், அக்காதலன் அதனை ஒப்புக்கொள்பவனுக இல்லை. அவனுடைய காதலியின் முகத்தினழகு சந்திரனைவிட எத்தனையோ மடங்கு சிறப்புற்றதும், உயர்வானதும் ஆகும் என்கின்ருன். அதற்கு நல்ல காரணத்தினையும் அவன் சொல்லுகின்ருன். சந்திரன் தேய்ந்து தேய்ந்து வளர்கின்றது. ஆதலால் அதற்கு நிறைந்த அழகு எப்பொழுதும் இருப்பது கிடையாது. இந்தத் தன்மை, அதாவது இந்தக் குறை தனது காதலியிடம் இல்லை என்கின்ருன்.

ஆதலால் அம்மாதின் அழகே சந்திரனைவிட மேம் பட்டதாகும் என்பது அவன் குறிப்பு. அத்துடன் அவன் நின்றுவிடவில்லை. சந்திரனின் அழகை மேலும் குறைத்துப் பேசுகின்ருன். அந்தச் சந்திரனிடத்தில் ''மறு'' இருக்கின்றது. அதாவது சந்திரனுக்குக் களங்கம் உண்டு. அக்காதலியிடம் அப்படி எந்த மறுவும் கிடையாதே என்கின்ருன்.

இப்படியெல்லாம் சிந்திக்கின்றபோது தனது காதலியின் முகத்தின் அழகு ஒன்றுதான் இவ்வுலகில் சிறந்தது என்கின்ருன்.

அந்த அழகிற்கு சந்திரனின் தோற்றம் எம்மாத் திரம்? என்று எளிதாக குறைத்துப் பேசிவிடுகின்ருன்.

**''அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறுவுண்டோ மாதர் முகத்து''**

என்பது குறட்பாவாகும். மறுவுண்டோ?...என்பதே அவன் கேள்வி, சந்திரனிடத்தில் களங்கம் இருக்கின்றதே!...

இவ்வாறெல்லாம் காதல் வாழ்வில் இருக்கின்ற காதலன் தனது காதலியைப் பாராட்டிப் பேசும் வகைகளை எல்லாம் ஆசிரியர் வள்ளுவனார் மிகத் தெளிவாகக் காட்டுகின்றார்.

வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காதலன் வானத்தில் தோன்றுகின்ற விண் மீன்களையும் பார்க்கின்றான். அதாவது நட்சத்திரங்களைப் பார்த்தான். வானத்தைப் பார்க்கின்றபொழுது அந்த விண் மீன்கள் அங்குமிங்குமாக ஓடுவது போலவே தோற்றமளிக்கின்றன. அந்த விண் மீன்கள் அவ்வாறு கலக்கமுற்றுத் திரிவதற்கு காரணத்தினையும் அக்காதலன் கூறுகின்றான். வானத்து நட்சத்திரங்களுக்குத் தலைவனாக, நாயகன் போன்று இருப்பவன் அந்த சந்திரனாகும். அந்த விண் மீன்கள் அந்த சந்திரனிடத்தில்தான் செல்லுவதற்கு இருந்தன.

ஆனால் இக்காதலனுடைய காதலியின் முகத்தினையும், அந்த விண் மீன்கள் கண்டுவிட்டனவாம். உடனே அவைகளுக்குச் சந்தேகம் வந்துவிட்டதாம். எது சந்திரன்? எது பெண்ணின் முகம்? என்ற வித்தியாசம் தெரியாமல் அந்த நட்சத்திரங்கள் எங்கே போவதென்று தெரியாமல் கலங்கித் திரிகின்றன என்று காதலன் கூறுகின்றான்.

அப்பெண்ணின் அழகு, அக்காதலனை கற்பனையின் உச்ச கட்டத்தில் போய் நிற்கும்படி செய்துவிட்டது.

**''மதியும், மடந்தையின் முகமும் அறியா**
**பதியிற் கலங்கிய மீன்''**

என்ற குறட்பா, அந்த விண் மீன்கள் கலங்கித் திரிவன போன்று தோன்றுவதற்குக் காரணத்தை, காதலன் எவ்வாறு எடுத்துரைக்கின்ருன் என்பதை புரியவைத்து விடுகின்ருன்.

காதல் பயணத்தில் இருந்துவரும் காதலர்களின் வாழ்க்கையில் இரண்டு அதிகாரங்களாகக் கூறப்படும் "புணர்ச்சி மகிழ்தல்", "நலம் புனேந்துரைத்தல்", என்ற இரண்டு பகுதிகளின் தொகுப்பினேக் கண்டோம்.

## தீயவை விலக்கல்

நல்லவைகளேப் பேசி மகிழ்வதற்குச் சிலர் விரும்புவதில்லே. தீயவைகளேப் பேசி மகிழ்வதில் இன்பம் காணுகின்றனர். அது என்ன இன்பமோ? அது என்ன பழக்கமோ...மானிடப் பிறவியில் நல்லதையே நினேத்து, நல்லவற்றையே பேசி நற்பணிகளேயே செய்து அதனுல் பெறுகின்ற இன்பம் எல்லேயற்றதென்பதை அறியமாட்டார்களோ...தீயவற்றைப் பேசித் திரிபவர்களில் புறங்கூறுபவர்கள் என்று ஒரு வகையினர் உண்டு. அவர்களேப்பற்றி ஆசிரியர் வள்ளுவனுர் வெட்ட வெளிச்சமாகக் கூறி தெளிவுபடுத்துகின்ருர். மற்றவர்களேக் காணுதபொழுது அவர்கள் இல்லாத இடத்தில் அவர்களேப் பற்றிக் குறைவாகவும் இழிவாகவும் பேசுவார்கள். இவ்வாறு பேசுவதை வழக்கமாகவே கொண்டிருப்பார்கள். இப்படிப் பேசுவதைத்தான் புறங்கூறுதல் என்று சொல்லி கண்டிக்கின்ருர்.

புறங்கூறிப் பேசுபவர்கள் காணுதபொழுது இகழ்ந்து பேசுவார்கள். கண்டபோது மகிழ்ந்து,

புகழ்ந்து பேசுவார்கள். இது என்ன பழக்கம்? இது என்ன வாழ்க்கை? இது ஒரு பொய்யான வாழ்க்கை அல்லவா? இப்படிப்பட்டவர்கள் வாழ்வதைவிட உயிர் விட்டு விடுதலே நல்லது. அறநூலில் கூறப்படும் நன்மைகூட அவர்கட்கு உண்டாகிவிடும்.

**"புறங்கூறிப் பொய்த்து உயிர்வாழ்தலின் சாதல்**
**அறங்கூறும் ஆக்கம் தரும்"**

என்பது குறட்பாவாகும். அவர்கள் அப்படிப்பட்டவர்கள் சாவதே மேல் என்று ஆசிரியர் சொல்லிவிடுவாரேயானுல், அத்தீய குணத்தினைக் கொண்டிருப்பவர்களை என்னவென்று கூறுவது? இந்தப் பொய்யான வாழ்க்கையினை அவர்கள் நடத்துவது ஏனோ? புறங்கூறும் பழக்கம் அவ்வளவு கொடியதேயாகும். இப்பழக்கத்தினை அவர்கள் உடனே விலக்கிவிட வேண்டாமா? ஒருவன் அறத்தினைச் செய்யர் விட்டாலும் பரவாயில்லை, அல்லது அறமல்லாத பாவத்தைச் செய்தாலும் செய்யட்டும் என்றுகூட ஆசிரியர் கூறத் தயங்கவில்லை. ஆனுலோ, காணுதவிடத்தில் இகழ்ந்து பேசும் புறங்கூறுதலைச் செய்யாமல் இருப்பானேயானுல் அது எவ்வளவோ இனிமையினைத் தந்துவிடுமே.

**"அறங்கூருன் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூருன் என்றல் இனிது"**

என்பது குறளறமாகும். புறங்கூறி வாழ்க்கை நடத்தாதே என்று நயமாகவும் கேட்டுக்கொள்ளுகின்ருர் நமது ஆசிரியர்.

நேருக்கு நேரே நின்று ஒருவனிடம் கடுமையான சொற்களைச் சொன்னுலும் சொல்லிக்கொள் என்கின்ருர். கண்ணோட்டம் – தாட்சண்யம் என்று சொல்லு

வார்களே, அப்படிப் பேசினாலும் கொடுமையாகி விடாது. ஆனால், அவன் இல்லாதபோது குற்றத்தினை யும், குறையினையும் உண்டாக்குகிற புறங்கூறும் சொற் களைப் பேசாதே.

''கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்''

நாம் விலக்கவேண்டிய தீமைகளில் புறங் கூறுதலை முதன்மையான தீமை என்றுதான் கூறவேண்டும். மக்க ளிடையே ஒற்றுமையைக் கெடுத்துப் பகைமையை வளர்த்து பற்பல தீமைகளையும் இப்பழக்கம் உண் டாக்கிவிடுமே. மற்றவர்களைப்பற்றி இகழ்ந்து பேசுகின் றவன் ஒன்றை மறந்து விட்டானா? அல்லது தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றானா? தன்னைப் பற்றியும் மற்றவர்கள் பற்பல விதமாக இகழ்ந்து பேசுவார்களே என்பது அவன் தெரிந்துகொள்ள வேண்டியதாகும்.

''பிறன் பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெறிந்து கூறப் படும்''

என்பது புறங் கூறுவோருக்கு நல்ல புத்திமதி கூறும் குறட்பாவாகும். மற்றவர்களைப் பற்றி அவதூறாக இகழ்ந்து இவன் பேசினால் இவனைப்பற்றியும் மிகமிக இழிவாகப் பிறர் பேசுவார்கள் என்பதையும் புறங் கூறித் திரிபவன் உணருவானாக.

தம்முடன் நெருங்கிப் பழகுபவர்களைப் பற்றியும் அவர்களைக் காணாதபோது குற்றமாகக் குறை கூறிப் பேசுகின்றவன், தன்னுடன் பழக்கமில்லாத அயலாரை பற்றி எவ்வாறு புறங்கூறிப் பேசுவானோ! ஆம், நினைத் தாலும் அதிர்ச்சியாக இருந்துவிடுகின்றதே.

''துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு''

என்று குறட்பா கேட்கின்றது. புறங்கூறிப் பேசுபவர் களுக்கு எல்லோரும் ஒன்றுதான் என்பது குறிப்பாகும்.

எல்லோருக்குமே ஒவ்வொரு விதத்தில் குற்றம் குறைகள் இருப்பது இயல்பேயாகும், அப்படியிருக்க மற்றவர்களுக்கு இருப்பதைப்போல நமக்கும் குற்றங் குறைகள் இருக்கத்தானே செய்யும் என்பதை ஒருவன் நினைத்துப் பார்க்க வேண்டாமா? அப்படி நினைத்துப் பார்த்துவிட்டால் பிறரைப் பற்றிக் குற்றங்குறைகளாக தூற்றிப் புறங்கூறமாட்டானே. அப்படிப்பட்ட குணத் தினைப் பெற்றுவிட்டால் எந்த உயிர்க்கும் எவ்விதத் தீமையும் ஏற்படாதல்லவா? மிக உயர்ந்த பண்பாட் டினை ஆசிரியர் நயமாக எடுத்து அமைக்கிறார்.

**"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு"**

என்ற குறட்பாவினை சிந்தித்தால் புறங்கூறும் பழக்கம் நீக்கப்பட்டு விடுவதாகும்.

புறம் பேசுகிறவர்கள் ஒருவகையினர். யாருக்குமே எந்த விதமான பயனையுமே தராத வீணான பயனில் லாத சொற்களையே பேசிக்கொண்டு இருப்பவர்களும் உண்டு. பயனில்லாத சொற்களைப் பேசுவதிலேயே நாட்டமும், விருப்பமும் கொண்டுவிடாமல் பேசுபவர் களும் உண்டு. இவர்களை ஆசிரியர் பயனில் சொல் பாராட்டுபவர்கள் என்று குறித்துக் காட்டுகின்றார்.

இப்படிப் பேசுகின்றவர்களை மக்கட் கூட்டத்தில் இருந்துகொண்டிருக்கும் பதர்கள் என்றே ஆசிரியர் கூறுகின்றார்.

நெல்லின் உள்ளே இருக்கின்ற அரிசிபோல இல்லா மல் உள்ளே ஒன்றுமே இல்லாத பதர்களைப் போன்றவர் கள்தான் இவர்களும் ஆவார்கள். பதரைத் தூற்றிப்

போடுவதைப்போல பயனில்லாத இவர்களையும் தான் செய்தல் வேண்டும். இவர்களை, பயனில்லாத சொற்களையே பேசிக்கொண்டிருப்பவர்களை, மக்கள் என்று சொல்லாதே என்பது வள்ளுவனாரின் கருத்தாகும். பிறகு என்னென்று கூறுவது. இவர்களை மக்களிடையே இருக்கும் பதர்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும்.

**''பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல்**
**மக்கட் பதடி எனல்''**

என்று குறட்பா குறிக்கின்றது. பதர்கள் கூட்டத்தினர் உணருவார்களாக. பயனில்லாத சொற்களைப் பேசினால் நல்ல அறிஞர்கள் வருத்தப்படத் தானே செய்வார்கள். வருத்தம் மட்டுமா?

கோபிக்கவும் செய்வார்கள். பலரும் கோபப்படும்படியாகப் பயனில்லாத வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருப்பவனை எல்லோரும் ஏளனமாகத்தான் பேசுவார்கள். இகழ்ந்தே பேசுவார்கள். பயனில்லாதவற்றைச் சொல்லுபவன் இகழ்ச்சிக்கே ஆளாகி நிற்பான் என்பது உண்மையிலும் உண்மையாகும். இவ்வுண்மையினைக் குறட்பா ஒன்று எளிமையாகக் கூறிவிடுகின்றது.

**''பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்''**

எல்லோருடைய கோபத்திற்கும், இகழ்ச்சிக்கும் ஆளாக்கும் இப்பழக்கத்தினை அவன் விட்டொழிக்க வேண்டாமா?

அறமாக நீதினையிக் கூறும் உயர்ந்த சொற்களை ஒருவன் சொல்லாதிருந்தாலும் இருக்கலாம். அப்படிப்பட்ட சொற்கள் அவனுக்குத் தெரியாமலும் இருக்கலாம். நயமாகச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால் பயனில்லாதவற்றைச் சொல்லி பதராக இருக்கக்கூடாது என்று ஆசிரியர் கட்டளையிடுகின்றார்.

**"நயன்இல சொல்லினும் சொல்லுக; சான்றோர்**
**பயனில சொல்லாமை நன்று"**

என்கின்றார். குறிப்பாகக் கூறவந்த ஆசிரியர் பெரியோர்களைப் பற்றிக் கூறும்போது அவர்கள் வாயினால் என்றுமே பயனற்ற சொற்கள் வரவே கூடாது என்றார். பேசும்போது சிந்தித்துச் சொல்லப் பழகுதல் வேண்டும். பயனுடைய சொற்களாகப் பார்த்துக் கவனித்துச் சொல்லுதல் வேண்டும்.

ஏனெனில் சொற்களுக்கு அவ்வளவு ஆற்றலும் வலிமையும் உண்டு. சொற்களிலே பயனில்லாத சொற்களை எப்போதுமே சொல்லக்கூடாது. இக்கருத்து அமைந்த குறட்பாவினை ஆசிரியர் நயமாக நமக்குத் தந்துவிடுகின்றார்.

**"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லில் பயனிலாச் சொல்"**

என்பது மிகமிக போற்றப்படவேண்டிய அறவுரையாகும். பயனில்லாத சொற்களைப் பேசிக்கொண்டு வருபவன் பயனற்றவனாகவே ஆகிவிடுவான் என்பது உண்மையான கருத்தாகும். அறிஞர்கள் எப்போதும் பயனில்லாத சொற்களைப் பேசவேமாட்டார்கள். பயனுள்ள வாழ்க்கையினை நடத்திக்கொண்டு அறிவோடு பொருந்திய அரிய பொருள்களை ஆராயும் நுண்ணறிவாளர்கள் சிறந்த பெரும் பயன்தராத சொற்களைச் சொல்லவே மாட்டார்கள்.

**"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்**
**பெரும்பயன் இல்லாத சொல்"**

என்ற குறட்பா விளக்கம் சொல்லி விடுகின்றது.

பயனில்லாத சொற்களைச் சிலர் விரித்து விரித்துப் பேசிக்கொண்டே இருப்பார்கள். பேசுவதோ பயனில்லால் சொற்கள். அவைகளையும் விருப்பமுடன் விரித்து விளக்கிக் கொண்டிருப்பானும். அப்படிப்பட்டவனைப் பார்த்து மக்கள் என்ன நினைப்பார்கள். அவனை எப்படிப்பட்டவன் என்று கூறுவார்கள். "இவன் நீதியறியாதவன்; உண்மை உணராதவன் என்று அவனைப் பற்றி உலகோர் முடிவு செய்து விடுவார்கள்" என்பதாகும். பயனில்லாத சொற்களைப் பேசுவதே தவறு; அதை விரித்து விரித்துப் பேசுவதே பெரும் தவறல்லவா? நயனிலன் என்பது சொல்லும்; பயன் இல பாரித்து உரைக்கும் உரை" என்று பயனில்லாதவைகளைப் பேசுகின்றவர்களிலேயே குறிப்பான ஒரு வகையினரைக் குறித்துக் காட்டினார்.

அற்பகுணமும், இழிதன்மையும் வாய்ந்த மக்கள் பயனில்லாதவற்றைக் கூறிக் கொண்டிருப்பர். அவர்களின் வாழ்க்கையும், மனிதப் பண்பாட்டிற்கு மிகவும் தாழ்ந்ததாகவே இருந்து விடுவதாகும். ஆனால் நற்குணமுள்ள மக்கள் மிகவும் கவனிப்புடன் இருத்தல் வேண்டும். மக்களிடையே சீருடனும், சிறப்புடனும் இருப்பவர்கள் பயனில்லாத சொற்களைப் பேசவே கூடாது... அப்படிப் பேசிவிட்டால், அந்த வார்த்தைகள் அவர்களுடைய சீரினையும், சிறப்பினையும் கெடுத்தே விடும். ஆதலால்தான் நேர்மையுடைய நற்குண மக்களின் வாயினால் பயனில்லாத சொற்களே வரக் கூடாது என்கின்றார் ஆசிரியர். ஏனெனில் அவர்களின் உயர்வான நற்பெயரினையும் புகழினையும் கெடுத்து விடுமாம்.

**"சீர்மை சிறப்பொடு நீங்கும், பயன்இல**
**நீர்மை உடையார் சொலின்"**

என்று குறட்பா கூறுகிறது. ஆகவே நல்ல வாழ்க்கையில் இருப்பவர்கள் எப்போதும் சொற்களைப் பாது காக்க வேண்டும். அதுவே அவர்களின் சிறந்த வாழ்க்கையின் பெயரையும் காப்பாற்றும்.

தீமையான சொற்களைக் காப்பது போலவே மக்கட் பிறவியில் சிறப்புத் தேடுகிறவர்கள் தீயவையான செயல்களை முற்றிலும் நீக்கி வாழ்தல் வேண்டும். மனித வாழ்க்கையின் பயன் நிலை பெற்ற புகழையும் பெருமையினையும் உண்டாக்கி விடுவதல்லவா? ஆதலால்தான் ஆசிரியர் வள்ளுவனார் பற்பல அரிய பாதைகளை வகுத்துக் காண்பிக்கின்றார்.

தீமையினை ஒருவன் செய்துவிட்டால் தீய செயலினைச் செய்து விடுவானேயானால் அதன் பயனைத் தீய பயனை அவன் அனுபவித்தே தீர வேண்டும். தீச் செயல் செய்தவன் தான் தீங்கின்றி தப்பித்துக் கொள்ளலாம் என்று ஒருபோதும் நினைத்து விடவே கூடாது. தீய செயல் செய்பவர்கள் கெடுவது உறுதி. நிழல் ஒருவனை விட்டு நீங்காது. தூரமாகப் போவது போன்ற நிழல் பிறகு தனது காலின் அடியில் வந்து சேர்ந்து விடுகின்றது. அதுவே போல தீச் செயல் புரிந்தவனுக்கும் கேடு வந்து அவனுடனேயே இருந்து விடும்.

**''தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடிஉறைந் தற்று''**

என்ற குறட்பா இவ்வுண்மையினைக் கூறிவிடுவதாகும்.

தீயவை—தீச்செயல் செய்யாதிருக்கும் பண்பாடு மிகவும் உயர்ந்த பண்பேயாகும். பகைவர்க்கும், தீமை செய்யாதவன் உயர்ந்த பண்பாட்டின் சிறப்பினைக் கூறவும் முடியுமோ? அறிவு என்பவற்றிற்கெல்லாம்

மு தன்மையான அறிவுள்ளவன் என்று ஒருவன் போற்றப்பட வேண்டுமென்ருல், அவன் பகைவர்களுக்கும் தீமை செய்யாத அருமையான பண்பாளனுகும். அப்படிப்பட்டவன் பெற்றிருக்கும் அறிவு மிகச் சிறந்த அறிவாகும்.

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்"

பகைவர்களுக்குத் தீமை செய்தல் உலக இயல்பே என்ருலும் மிகச் சிறந்த மேலான உயர்வான அறிவு படைத்த சான்ருேர்கள் அதுவும் செய்யமாட்டார்கள் என்பதே கருத்தாகும்.

தீச் செயல் என்பது தீயினைவிட, நெருப்பினைவிட அஞ்சப்பட வேண்டியதாகும். நெருப்பு, தீமையினை உண்டாக்கும் இயல்பு கொண்டதாகும். தொட்டால் சுடும். அழிக்கும் தன்மை கொண்டது. கொடுமையானது. ஆனுல், நெருப்பு வைக்கின்ற ஒருவன் தான் தப்பித்துக் கொள்ளுவான். மற்றவர்களையே நெருப்பு அழிக்கும். தீ வைப்பவனை அத் தீ அழிக்காது. ஆனுல், தீச் செயல் அப்படிப்பட்டதல்ல. தீச் செயல் செய்கின்றவனையும் அழித்துவிடும். ஆதலால்தான் தீயவை தீயினை விட அஞ்சப்பட வேண்டியவை என்று ஆசிரியர் கூறுகின்ருர்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

என்பது குறளறமாகும். தீச் செயல் புரியும் பழக்கத்தினை அறவே நீக்கிவிட வேண்டுமல்லவா? தீவினை தீச் செயல் புரிவதென்பது கொடிய பாவச் செயலே ஆகும். இத்தகைய செயல்களைச் செய்வதற்குத் தீவினையினையே மேற் கொண்டுள்ள தீவினையாளர்கள், தீய பிறப்பைக் கொண்டவர்கள் அஞ்ச

மாட்டார்கள். அதுவே அவர்கட்குத் தொழில் போன்றதாகக்கூட இருந்துவிடும். ஏனெனில் அவர்கள் தீவினை மக்கள் என்ற கூட்டத்தில் சேர்க்கப்பட்டிருப் பவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர்கள் தீச் செயல் புரிய அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் மேம்பட்ட விழுப்பம் உடைய பெரியோர்கள் பயப்படுவார்கள். தீச் செயல்களைச் செய்யவே மாட்டார்கள். இதனைச் சுருக்கமாக ஒரு குறட்பா கூறிவிடுகின்றது.

**"தீவினையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர்;**
**தீவினை என்றும் செருக்கு"**

தீவினையின் கொடுமையும், அதனைச் செய்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் நல்லபடியாகப் பிரித்துப் பார்த்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் வள்ளுவனார் வகுத்துக் கூறும், இல்லறப் பகுதியில், புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம் என்ற அதிகாரங்களின் தொகுப்புக் கருத்துக்களைக் கண்டோம்.

## வாழ்க்கையின் குறிக்கோள்

**தா**ன் மட்டும் உண்டு சுகித்து மகிழ்ந்து வாழ்வது மனிதப் பிறவிக்கு உரிய இலக்கணமாகாது. மனிதப் பிறவிக்குக் கீழ்ப்பட்ட விலங்கினங்கள் அவ்வாறு இருக்கும். நம்மால் இயன்ற வரை மற்றவர்களுக்கு உதவி செய்து உபகாரியாக இருப்பதே உயர்ந்த பண் பாடாகும். பெருத்தன்மை நிறைந்த உயர் பண்பு மக்கள் மற்றவர்களுக்கு எப்போதும் உதவியாகவே இருப்பார்கள். தம்மால் இயன்றவரை எல்லாவிதத்திலும் மற்றவர்களுக்கு உதவுவார்கள். பிரதி உப

காரம் என்று பேசப்படுகின்ற கைம்மாறு என்பதை எதிர்பார்க்கவே மாட்டார்கள். அதுவே ஒப்புறவு அறிதல் என்றும் கூறப்படும். அத்தகைய மக்களை மேகங்கள் போன்றவர்கள் என்று ஆசிரியர் வள்ளுவனார் கூறிப் பெருமைப்படுத்துகின்றார். மழையைப் பெய்து உதவி செய்கின்ற மேகங்கட்கு உலக மக்கள் என்ன பிரதி உபகாரம் செய்கின்றனர். அதுவே போலத்தான் மேகத்தைப் போன்றவர்கள் தாம் செய்யும் உதவிக்குப் பிரதி உபகாரத்தை எதிர்பார்ப்பதே இல்லை. அத்தகைய மக்களும் இவ்வுலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் நின்று இயங்கி வருகின்றதாகின்றது என்றும் கூறலாம்.

**''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என் ஆற்றுங் கொல்லோ உலகு''**

என்று குறட்பா இந்த உண்மையினை நன்கு விளக்குகின்றது. தக்கவர்களுக்குப் பேருதவியாக இருந்து உதவுவதே ஒப்பறிதல் என்கின்ற அருமையான பண்பாகும் என்பதை ஆசிரியர் பல முறைகளில் வகுத்துக் காட்டி விளக்கம் தருகின்றார். ஒப்புறவு என்னும் பண்பினை உணர்ந்த பெரியவரிடம் செல்வம் இருக்குமேயானால் அச் செல்வம் தாராளமாகப் பலருக்கும் பயன்படுவதாகும். எப்படி அச் செல்வம் பயன்படும் என்பதனை அழகான உதாரணங் காட்டிப் பேசுகின்றார்.

ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் நீர் உண்ணுகின்ற குளம் நிறைந்திருந்தால் எல்லா மக்களும் மன மகிழ்ந்து இன்புற்றுப் பயனடைவார்கள் அல்லவா! அதுபோலவே பெருந்தகையாளரிடம் இருக்கும் செல்வமும் பலருக்கும் நல்ல முறையில் பயன்பட்டே தீரும். இக்கருத்தினை மிகவும் அருமையாக ஒரு குறட்பா எடுத்துக் கூறுகின்றது.

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்**
**பேரறி வாளன் திரு"**

பேரறிஞர்கள் பெற்ற செல்வம் எல்லா மக்களுச்கும் பயன்பட்டே தீரும். ஆதலால்தான் அத்தகையவர் களை ஊருணி என்றார் ஆசிரியர். ஊரார் உண்ணுகின்ற நீர்க்குளம் ஊருணி என்று அழைக்கப்படும்.

மக்களோடு ஒத்து—கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு கலந்து ஆலோசித்து பரோபகாரியாக வாழ் பவனே மனித இனத்தைச் சேர்ந்தவன் என்று கருதப் படுதல் வேண்டும். எதையுமே காதில் போட்டுக் கொள்ளாமல் யாருக்குமே எவ்வித உதவியும் பரோப காரமும் உடையவனாக இல்லாமல் இருப்பவனைப் பிணம் என்றே ஆசிரியர் கூறுகின்றார்.

உயிருடன் வாழ்பவன் என்று யாரைச் சொல்ல வேண்டும். செத்தவர்கள் என்று யாரைச் சொல்ல வேண்டும் என்கின்ற பாகுபாட்டினை மிகவும் அழகாக ஒரு குறட்பா எடுத்துக் காட்டிவிடுகின்றது.

**"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்"**

இக்குறட்பா, உலக மக்களுக்குப் பரோபகாரியாக உதவி செய்பவனாக இருப்பவனையே உயிரோடு வாழ் பவன் என்றும், எதுவுமே சம்பந்தம் இல்லாமல் வழ்ப வனைச் செத்தவர் கூட்டத்தில் சேர்க்கவேண்டும் என் றும் கூறிவிட்டது.

உலக ஒற்றுமையும், வளர்ச்சியும் மக்கள் முன் னேற்றமும் மற்றவர்களுக்கு உதவி புரியும் பெருந் தகையாளர் போன்றவர்கள் இருப்பதனால்தான் என்று கூறுவது உண்மையே ஆகும். பிறர் உதவியை நாடுவது மக்களுக்கு இயல்பேயாகும். ஒருவருமே

தேவைப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய இல்லை என்றால் இவ்வுலகம் என்ன ஆகும்? ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வாழ்க்கை நலத்தினை மட்டும் பார்த்துக்கொண்டு போனால் உலகம் வளர்ச்சியடைவது எங்ஙனம் முடியும்? ஆதலால்தான் மக்கள் வளர்ச்சிக்குப் பரோபகார சிந்தனைப் படைத்த பெருந்தகையாளர்கள் தேவை என்கின்றார். அவர்களையே மிகவும் புகழ் வாய்ந்த இடத்தில் வைத்துப் பேசுகின்றார். ஊருக்கு நடுவே பழங்கள் நிறைந்த பயனுள்ள மரம் இருந்தால் மக்கள் எவ்வளவு இன்பம் அடைவார்கள். தாராளமாகப் பழங்களைப் பறித்துண்டு இன்பம் பெறுவர் அல்லவா? அதுமாதிரிதான் செல்வம் ஒப்புறவு அறிந்த பெரியவர்களிடத்தில் இருந்தாலும் பயன்படும் என்று கூறுகின்றார்.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்''

என்ற குறட்பாவின் அரிய கருத்து மிகவும் சிந்தனைக்குரியதாகும். அத்தகையப் பெரியோர்களை மற்றுமொரு உதாரணம் கூறியும் பெருமைப்படுத்துகின்றார். சில மரங்கள் எல்லாவிதத்திலும் பயன்படுவதாகும். இலை, காய், பழம், வேர் முதலிய எல்லா உறுப்புக்களினாலும் மருந்து மரங்கள் மக்களுக்குப் பயன்படுகின்றன. அதுவே போல, பரோபகார ஒப்புறவு அறியும் பெருந்தன்மையாளரிடம் செல்வம் இருந்தால் அது எல்லோருக்கும் பயன்பட்டே தீரும் என்று அருமையாகக் கூறுகின்றார்.

''மருந்தா கித்தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்''

என்ற அரிய குறட்பா எவ்வளவோ பெரிய ஆழ்ந்த கருத்தினை அடக்கிக்கொண்டிருக்கின்றது. பரோப

காரிகள் நிறைந்த நாடுகள் விரைந்து முன்னேறும் என்பதில் ஐயமே இல்லை. ஒப்புறவு என்னும் பண்பாடு நிறைந்த மக்களை ஆசிரியர் வள்ளுவனார் மிகவும் சிறப்பித்துக் கூறுதல் இயல்பேயாகும். தக்கவர்களுக் கும், பொருத்தமானவர்களுக்கும் உதவியாக இருப் பதே ஒப்புறவு என்று விளக்கப்பட்டதாகும். வறிஞர் ளாகி உண்டு வாழ ஒன்றுமே இல்லாத மக்களுக்குக் கொடுப்பதே ஈகை என்கின்ற நற்குணமாகும்.

உலகில் வறியவர்கள் இருப்பதும் இயல்பான இலக்கணமாகவே இருப்பதாகும். உண்ண உடுக்க வாழ வழியில்லாமல் இரந்து அதாவது யாசித்து வாழ வேண்டிய நிலையிலும் மக்கள் இருக்கத்தான் செய் கிறார்கள். அப்படிப்பட்ட வறிஞர்களுக்குக் கொடுத் தல் வேண்டும் என்பது மக்களுடைய நீங்காக் கடமை யென்றே கூறுதல் வேண்டும். வறிஞர்களுக்குக் கொடுக் காமல் மற்றவர்களுக்குக் கொடுப்பது ஈகை என்பது ஆகாது. அப்படிக் கொடுத்தால் ஏதோ பிரதிபலனைக் கருதிக் கொடுக்கின்றார்கள் என்பதேயாகும். ஈகை என் பது என்ன என்பதனை ஆசிரியர் வள்ளுவனார் மிகத் தெளிவாகத் திட்டமாக விளக்கிப் பேசுகின்றார்.

"வறியார்க்கு ஒன்று ஈவதேஈகை, மற்றெல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து"

என்பது குறட்பா. வறியவர்களுக்குக் கொடுப்பது தான் ஈகை. மற்ற எதையும் எதிர்நோக்கி தர்மம் என்று சொல்லிக் கொண்டு கொடுத்தால் அது ஈகை யாகாது.

ஒன்றுமே இல்லாத வறியவர்களுக்குக் கொடுப் பதையே ஈகை என்று வற்புறுத்தி ஆசிரியர் கூறு கின்றார். இக்காலத்தில் தானம், தருமம் என்று நாம் கூறுகிறோம். வசதியுள்ளவர்களுக்குக் கொடுப்பதையே

தானம், தருமம், ஈகை என்று கூருதே என்பது ஆசிரியரின் குறிப்பாகும்.

ஈகை கொடுப்பவர்களின் மனத்தில் அன்பினை வளர்க்கின்றது. அருள் உள்ளம் பெருகச் செய்கின்றது. பெறுகிறவர்களின் பெருங்களிப்பினைக் காண முடிகின்றது. ஈகையினால் கொடுப்பவர்களுக்கு வருகின்ற இன்பம் எவ்வளவோ பெரிதாகும். ஈகை என்பதையே செய்யாத பலர் இருக்கத்தானே செய்கிருர்கள். தாங்கள் வைத்திருக்கும் பொருளில் சிறிதளவுகூட ஈகை என்பதையே செய்யாமல், வைத்திருக்கும் பொருளையும் இழந்துவிடுகிறவர்களும் உண்டல்லவா? எவ்வளவு கல் நெஞ்சம் படைத்தவர்களாக அவர்கள் இருந்துவிடுகிருர்கள். ஈகையினால் தாம் பெறுகின்ற உயர்ந்த இன்பத்தினை அப்படிப்பட்ட மக்கள் அறிந்து கொள்ளவில்லையோ என்று ஆசிரியர் கேட்கின்ருர்.

**''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தம்உடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்''**

என்று குறளறம் பேசுகின்றது. தாம் வைத்திருக்கும் பொருளை இழந்து தவிக்கின்ற காலமும் வரும் என்பதை அறிந்தும் ஈகை செய்து இன்பம் நுகராமல் இருப்பவர்களைக் கொடிய மக்கள் என்று கூறவும் ஆசிரியர் தயங்கவில்லை. பகுத்து உண்ணுகின்ற பண்பாட்டினை வளர்த்துக் கொள்ளுங்கள் என்று ஆசிரியர் அறிவுறுத்துகின்ருர். நோய்களில், பிணிகளில் மிகக் கொடியபிணி பசிப்பிணியேயாகும். பகுத்து உண்டு மகிழ்பவனை ஒருக்காலும் பசிப்பிணி வந்து தீண்டவே தீண்டாது என்று கூறுகின்ருர்.

ஒருவருக்குள்ள பசியை நீக்குதல் ஈகைச் செய்து வாழ்தல் என்பதனையே உயர்ந்த குறிக்கோளாக ஆசிரியர் எடுத்து விளக்கம் தருகின்ருர்.

பகுத்து உண்ணுகின்ற மற்றவர்களுக்கும் கொடுத்து மற்றவர்களையும் உண்ணச் செய்துவாழ்கின்றவர்களுக்கு உணவுத் துன்பம் எப்போதுமே வராது என்பதனைத் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

**"பாத்தூண் மரீஇ அவனைப் பசியென்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது"**

என்பது குறட்பா எடுத்துக்காட்டும் மாபெரும் உண்மையாகும். பகுத்துண்டு வாழ்வதற்கு அவ்வாறு வாழ்வதனை மனித குலத்திற்கே சிறந்த பண்பாடாகக் கூறிவிடுகின்றார். ஒருவன் தான் வைத்திருக்கும் செல்வத்தினைப் பொருளைப் பத்திரமாகச் சேர்த்து வைத்திருக்க வேண்டிய இடம் ஒன்று இருக்கின்றது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அந்த இடம்தான் உண்ண உணவின்றித் துடிப்பவர்களுக்கு பசியினைத் தீர்த்துவைக்கும் நற்குணம் என்று பேசுகின்றார். பசி தீர்ப்பவன் செல்வம் எப்போதும் பத்திரமாக இருக்கும் என்பதே குறிப்பாகும். சமுதாய வளர்ச்சிக்கும் , உண்மையான ஈகை இதுதான் என்பவர்களின் சிறப்பினை விளக்கிப் பேசுகின்றார். ஈகையிலேயே முதற்பொருளாக அடிப்படையாக இருப்பது பசி தீர்ப்பதுதான் என்பது உலகறிந்த உண்மையேயாகும். தவம் செய்கின்ற முனிவர்கள் தமக்கு உண்டாகிற பசிப்பிணியை நீக்கிக் கொள்ளுபவர்கள் ஆவார்கள். அதாவது தவத்தோர் பசிப்பிணிக்கு அஞ்சமாட்டார்கள் என்பதே ஆகும். பசிப்பிணியை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாவார்கள். அதுவே அவர்களின், முனிவர்களின் பெருஞ்சிறப்பிற்குக் காரணமாகும். ஈகை செய்பவர்கள், மற்றவர்களின் பசி நோயை, பசிப்பிணியை நீக்குகிறார்கள். இக்கருத்தினை வேறுபடுத்தி ஆசிரியர் வள்ளுவனார்

நன்கு தெளிவுபடுத்துகிறார். தங்களுக்கு உண்டான பசிப்பிணியை மாற்றிக்கொள்ளுகின்ற முனிவர்களாகிய தவசிகளைவிட மற்றவர்களுக்கு உண்டாகும் பசிப்பிணியைப் போக்குகின்ற இல்லறத்தானே மேம்பட்டவன் என்று குறிப்புக் காட்டிப் பேசிவிடுகின்றார்.

**''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல், அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்''**

என்ற குறட்பா இவ்வுண்மையினைக் கூறி நிற்கின்றது. பசிப்பிணி போக்கும் பண்பினை வலியுறுத்தும் வள்ளுவர் எல்லோரும் இன்புற்றிருக்கும் அறவாழ்க்கையினை அருமையாக எடுத்துக் கூறி சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டிய முறையினையும் வகுத்துக் காட்டினார். ஈகை என்பது மனிதப் பண்பாட்டுடன் இணைந்து ஒன்றுபட்டு இருக்கவேண்டியதாக வள்ளுவரின் கருத்தினை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இப்படிப்பட்ட ஈகையே உண்மையான புகழுக்குக் காரணமாகவும், அடிப்படையாகவும் அமைந்துள்ளது. புகழ் என்ற தனியான அதிகாரத்தில் இல்லறத்தானின் கடமைகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டிக் கூறுவதோடு மனித வாழ்க்கையின் குறிக்கோள் புகழ் பெற்று வாழ்வதேயாகும் என்று திட்டமாகக் கணித்துக் கூறி விடுகின்றார். இந்த உலகில் வாழ்வதின் மக்களாக வாழ்க்கை நடத்துவதில் குறிக்கோள் என்ன என்பதனை சுட்டிக்காட்டுகிறார். ஒரு தொழில் செய்கின்றபோது, வருகின்ற ஊதியம், லாபம் என்ன என்பதனைக் கண்டு தொழில்படுவது இயல்பேயாகும். இது சுயநலம் என்பது அல்ல. இயற்கையின் முறையாகும். அது போலவே உலக வாழ்க்கையின் ஊதியம், குறிக்கோள் எதுவாக இருக்கவேண்டும் என்பதனை மிகவும் தெளிவாகக் காட்டுகிறார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்பது குறட்பா. புகழினை நிலைநாட்டுவதற்கே வாழுங்கள். அதுவே குறிக்கோளாக இருக்கட்டும். அப்புகழும் உண்மையான புகழாக இருக்கட்டும். உலகில் நன்மை செய்வதால் மற்றவர்களுக்கு உதவுவதால், ஈகைத் தன்மையால் வருகின்ற புகழே உண்மையான புகழும், ஊதியமும் ஆகும் என்று வற்புறுத்தினார்.

அப்படிப்பட்ட புகழுடன் வாழ விரும்பாதவர்கள் அவ்வித குறிக்கோள் கொண்டு வாழ்க்கை நடத்தாதவர்கள் உலகில் வாழ்பவர்களாகக் கருதப்பட மாட்டார்கள் என்பது வள்ளுவனாரின் வாக்காகும். புகழ் ஈட்டி வாழாதவர்கள் உலகில் பலரின் இகழ்ச்சிக்கு ஆளாகி வாழ்ந்தவர்கள் என்றும் சொல்லலாம். ஆதலால் உலகோர் வசைக்கு ஆளாக்கப்பட்டு வாழாதீர்கள் என்றும் ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார். வசை நீங்க, பிறர் இகழ்ச்சி சொல்லாமல் இருக்க வாழ்பவர்களே, வாழ்பவர்களாகக் கருதப்படவேண்டும். புகழில்லாமல் புகழ் பெறுகின்ற வாழ்க்கை நடத்தாமல் வாழுகின்றவர்கள், வாழாதவர்கள் என்றே குறிக்கப்பட்டுவிடுவார்கள். அதாவது மக்கள் வாழ்க்கை நடத்தாதவர்கள் என்பதே குறிப்பாகும்.

"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார், இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்"

என்ற குறளறம் இந்த அரிய உண்மையினை நன்கு தெளிவுபடுத்திக் காட்டிவிடுகின்றது. இல்லறத்தின் சிறப்பெல்லாம் புகழ் தேடுவதிலும், அப்புகழ் உண்மையான புகழாக இருக்கவேண்டும் என்பதிலும் நிறைந்திருப்பதாகும். உலகில் அழியாது

நிற்பது என்ன என்ற கேள்விக்கு விடையளிப்பது போல ஆசிரியர் வள்ளுவனார் குறள் அமைத்துத் தந்து விட்டார்.

உலகில் நிலைத்து நிற்பது ஓங்கிய கீர்த்தி எனப் படும் புகழேயாகும். அது ஒன்றே அழியாது நிற்பதும் ஆகும். அந்தப் புகழுக்கு ஈடு இணை இல்லை என்றே கூறவேண்டும். ஆதலினால் அதனைத் தேடுங்கள்—அறவாழ்க்கை வாழுங்கள்—ஈகைத் தன்மையினை நாடுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். குறட்பாவினைச் சிந்திப்போமாக:

**''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பது ஒன்றுஇல்''**

என்னும் அரிய குறளறம் நிலைத்து நிற்பது எதுவென்று கூறிவிட்டது. அழியாத ஒன்றினைத் தேடுவதே அரிய மானிடப் பிறவியினைப் பெற்றதன் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். உலக மக்களிடையே சிறப்புடன் தோன்றி வாழவேண்டுமென்றால் புகழ் பெற்று இருத்தல் வேண்டும். புகழுள்ள வாழ்க்கையினையே நடத்துதலும் வேண்டும்.

**''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதுஇலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று''**

என்றார். புகழ் பெற்றே மக்கள் கூட்டத்தில் வாழ்வோமாக. இல்லறத்தில் ஒப்புறவு அறிதல், ஈகை, புகழ் என்ற அதிகாரங்களின் தொகுப்புரையினைக் கண்டோம்.

# வள்ளுவர் உலகம் II

## அருட் செல்வம்

**வி**த்து முளையாகிறது; முளை செடியாகிறது; செடி மரமாகிறது; மரம் பூக்கிறது; பூ காயாகிறது; காய் கனியாகிறது. இதுபோன்றதே மனித வாழ்க்கையும் வளர்ந்து கனியாகும்வரையில் பல்வேறு பொருட்களின் தொடர்பும், உறவும் தேவை. கனிந்த பிறகு எந்த ஒன்றன் தொடர்பும் கனிக்குத் தேவையில்லை. கனி நிலைக்கு முன்பு சுவையிலும் தர வேறு பாடுகள் உண்டு. கனி நிலையில் சுவை வேறுபாடில்லை. நிறைநலமிக்க சுவையுடையதாகிறது. இறைவனை, "பழத்திடைச் சுவையொப்பாய்" என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். "அது பழச்சுவையென" என்று மணி மொழி பேசுகிறது. அருள் பழுத்த பழச்சுவையென மறைகள் போற்றும். திருக்குறள் கருவுயிர்த்த நாள் முதல், தனிமனிதனைத் தொடர்ந்து வளர்த்து, அவனை அன்புநெறி பயில, குடும்பத்தில் சேர்ப்பித்து, அன்பு நெறியில் பயிற்றுவித்து உள்மேலதாக அருளியல் வாழ்க்கைக்கு உயர்த்துகிறது. உலகில் மனிதர்களுக்கு செல்வங்கள் பலப்பல வேண்டும். ஆயினும் அருட் செல்வமே தலையாய செல்வம்.

**'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள''**

என்று குறள் கூறுகிறது.

''செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்'' என்றும் குறள் கூறுகிறதே என்ற வினா எழலாம். ஞானாசிரியன் செவிவழியாக உபதேசித்தருளிய திருமந்திரச் செல்வத்தால் அருட்செல்வம் விளைவதால், உபசார வழக்காகச் செவிச் செல்வத்தைச் சிறப்பித்தார். அன்பின் முதிர்ச்சியில் அருள் தோன்றுகிறது. ''அன்பீனும் குழவி அருள்'' என்று குறள் கூறுகிறது.

உடலுயிர் வாழ்க்கை இடையீடின்றி நடைபெறப் பொருள் தேவை. அதாவது, உயிர் ஊர்ந்து செல்லும் உடலாகிய எந்திரத்திற்கு எரிபொருளாகக் காருக்கு பெட்ரோல்போல், துய்க்கும் பொருள்களாகிய காய்களும், கனிகளும் தேவை. அதுபோல உயிர்க்கு அருள் தேவை.

**''அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு''**

என்று குறள் கூறுகிறது. அருள் அன்பின் முதிர்ச்சியில் தோன்றுகிறது. எந்த மொழியிலும், எந்தச் சமயத்திலும் அருள்நெறியே நெறியென உணர்த்தப்படுகிறது. உலகியலில் இருள் சூழ்ந்த நிலை துன்பத்தைத் தருகிறது. இருள் நிலையில் மேடும் பள்ளமும் தெரிவதில்லை; பழுதையும் பாம்பும் தெரிவதில்லை. எங்கும் செறிந்த இருள். இந்நிலையில் இருள் கடிந்து எழுகின்றது ஞாயிறு. ஞாயிறு எழுந்தவுடன் இருள் அகலுகிறது. உயிர்களுக்கு ஆன்ற அறிவும் ஆள்வினையும் தோன்றுகின்றன. அதுபோலவே, அருட்சார்பு அற்றவர்கள் மனத்தில் இருட்செறிவால் நன்மையும் தீமையும்

தெரிவதில்லை. அருளியலில் ஈடுபட்டவுடன் அறியாமை அகலுகிறது; மயக்கம் தெளிகிறது; தெளிவு பிறக்கிறது: தெளிவினுள் சிவம் பிறக்கிறது. அருள் தன்மையால் செடிகளையும் மரங்களையும் பேணுபவன்-விலங்குகளைப் பேணுபவன்—பக்கத்தில் வாழும் மனிதர்களைப் பேணுபவன்—தன்னையும் பாதுகாத்துக் கொள்கிறான். ஆதலால், அல்லல் அவனை அணுகுவதில்லை. அவன் தன்னுயிர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. எல்லோருக்கும் தன்னுயிர் அருமையானதே. அதனாலன்றோ, அப்பரடிகளும் 'என்னினும் இனியான்' என்று குறிப்பிட்டார். ஆனால், பலர் தன்னுயிரைக் காதலிப்பர். தன் உயிர்நலன் கருதிப் பிற உயிர்களுக்குக் கேடு சூழ்வர். அந்தோ, அறியாமை! உயிர் வாழ்க்கை இயல்பிலேயே தனித்ததல்ல. அஃதொரு கூட்டு வாழ்க்கை. கூட்டு வாழ்க்கையில் துன்பம் ஒருவருக்கு மட்டும் வருமாறென்ன? உயிர் வானின்றிழியும் நீர்த்துளியைப் போல்வது. நீரும், வளியும் சார்ந்த சார்பின் காரணமாக வண்ணமும், சுவையும், மணமும் பெறுதல் இயற்கை. அதுபோல, உயிரும் சார்பின் வழி, இயல்புகளைப் பெறும். உயிர் யாதொன்றையும் சாராமல் இருக்க முடியாது. ஆதலால், உயிர் தமது சார்பிற்குரியனவாகிய பிற உயிர்களையும் அருள் நலம் செறிந்தவைகளாகத் தாம் காணுந்தொறும் துய்க்குந்தொறும் துய்ப்பதற்கேற்றவாறு அருள்நலச் செறிவுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். வீட்டினுள் வெப்பம் தாக்காதிருக்க வீட்டிற்கு வெளியில் ஒரு தாழ்வாரம் தேவை. அப்போது வெளியில் உலவும் வெப்பக்காற்று தாழ்வாரத் தண்ணிழலில் குளிர்ந்து வீட்டிற்குள் இருப்பவரைத் தண்ணென்ற தன்மையினுல் வாழ்விக்கும். அதுபோல உயிருக்குத் தம்மொடு

தொடர்புடைய பிறவுயிர்களின் அருளார்ந்த சூழலே வாழ்விக்கும்.

தெருக்கோடியிலுள்ள வீடு, தீப்பற்றி எரிந்தால் அந்நெருப்பினை மற்ற வீடுகளுக்குப் பரவாமல் அணைப்பதே எல்லோருக்கும் பாதுகாப்பு. அங்ஙனம் செய்யாமல் யாராவது ஒருவர், தன் வீட்டின்மீது தண்ணீர் அள்ளி ஊற்றுவாராஞல் யாது பயன்? ஊற்றிய முயற்சியும் பாழாகி, அவனும் அவன் வீடும் அழிவது திண்ணம். ஆதலால், எவன் ஒருவன் தன்னுயிர்க்குத் துன்பம் வரக்கூடாதென்று கருதித் தன்னுயிரைக் காதலிக்கின்ருனே, அவன் செய்யவேண்டியது தன்னுயிர்க் காதலல்ல; மன்னுயிர்க் காதலேயாம். செடிகொடிகளை அன்பு காட்டி வளர்த்தால், உயிர் வாழ்க்கைக்குரிய காய்களும், கனிகளும் கிடைக்கும். குடம் குடமாகப் பால் கொடுக்கும் பசுவினுக்கு அன்பு காட்டிஞல் உயிர் வாழ்க்கைக்குரிய பாலமுதம் கிடைக்கும். உயிர்க்கு இன்றியமையாத தேவையான இன்பக் கிளுகிளுப்பாகிய மகிழ்ச்சியை மற்ற மனிதர்களிடத்தில் காட்டும் இனிய முகத்தாலும், கூறும் இனிய சொற்களாலும் திரும்பப் பெறலாம். ஆதலால் தன்னுயிரைக் காதலிப்பவன் செய்யக்கூடிய அறிவுடைய செயல், அருள் உள்ளம் கொண்டு பிற உயிர்களைப் பேணுதலேயாகும்.

> ''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை''

என்று திருக்குறள் ஓதுகிறது.

இயல்பாகவே, உலகியல் அருள் என்ற அச்சிலே சுழன்று நடைபெறுகிறது. ''ஒன்று எல்லாவற்றுக்காகவும், எல்லாம் ஒன்றுக்காகவும்'' என்ற உயரிய

தத்துவமே உலகியல் தத்துவம். விண்ணின்றிழியும் நீர்த்துளி! காய்கதிர்ச் செல்வனின் கதிரொளி! தண் நிலவு! இலையால், மலரால், காயால், கனியால் வாழ் விக்கும் தாவர இனங்கள்! என்னே அருட்காட்சி! அருளின் மாட்சி! எங்கும் அருட்கூத்து! இன்பக் கூத்து! ஆனந்தக் களிப்பு! இதனை உணர்ந்தவர்கள் அருள் நாட்டம் கொள்வர். அல்லவை செய்யார்; இன்புறுத் தும் இயல்பில்லாதவர்க்குத் துன்புறுத்த உரிமை ஏது? ஆக்கும் திறனற்றோர் அழிக்கலாமோ? துன்புறுத்து பவர் துன்பத்தில் ஆட்டுபவர்; நல்வினை இழப்பர்; கொடுவினை மேற்கொள்வர். நெருப்பும் பற்றி எரி கின்ற உடையினுல் மானத்தை மறைத்தல் முடியுமோ? நஞ்சினுல் செய்த பாவை நயப்புறும் இன்பம் தருமோ? நுனி மரத்தில் ஏறி, அடி மரத்தை வெட்டுதல் வாழும் வழியோ? அதுபோல உயிர்களுக்கு அல்லல் செய்தார் வாழுதல் அரிது என்று திருக்குறள் பேசுகிறது,

"பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்"

என்பது குறள். ஈண்டுப் பொருள் என்பது வாழ்க்கை யின் பயன் என்ற பொருளில் உய்த்துணர்வது அதிகப் பயனைத் தரும். மாணிக்கவாசகர் தமது பாட்டின் பொருள் இறைவனே என்றார். வாழ்க்கையின் பயன் இறையருள் பெறுதலேயாம். இதனை அப்பர் "வைத்த பொருள் நமக்கு ஆம்" என்று அருளிச் செய்துள்ளார். வாழ்க்கையின் குறிக்கோளும் பயனுமாகிய அருளை, அருள்வழி பெறுதலேயே "கொண்டும் கொடுத்தும் பெறுதல்" என்று திருமுறை கூறும். அருளை மறந்து, தீமையும் செய்து ஒழுகுதல் அந்தோ பரிதாபம்! குளிக்கப் போனவன் குளிப்பதை மறந்து ஆங்குள்ள சேற்றைப் பூசிக்கொண்டதைப் போல இருக்கிறது.

அதனாலன்றோ, சங்கச் சான்றோர் "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்று அறிவுறுத்தினர். இளங்கோவடிகளும் "அல்லவை கடிமின்" என்று ஓதினார். அருள் உணர்விற் சிறந்து வாழ்வோருக்கு அல்லல் இல்லை. இதற்குச் சான்று, இந்த உலகில் ஏராளம் உண்டு. மணமிக்க மலர்களைத் தரும் செடிகளைப் பலர் விரும்பி வளர்க்கின்றனர் அன்றி அழிப்பார் யார்? இனிய காய்களைக் கனிகளைத் தரும் மரங்களை வளர்ப்பாரன்றி வெட்டியழிப்பார் யார்? ஒருவருமில்லை. அப்படியே யாராவது இருந் தாலும் உலகம் அவர்களை மானிடராக ஒத்துக்கொள்வ தில்லை. அவர்களை உலகம் கீழான கயவர்கள் என்று ஒதுக்குகிறது. அதுபோலவே, அருள் உணர்வு உடையவர்கள் வாழ்வார்கள்; வாழ்விக்கப் பெறுவார் கள். காரணம் அவர்கள் வாழ்வில் ஞாலம் வாழ்கிறது.

**"அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்**
**மல்லம்மா ஞாலம் கரி"**

என்பது குறள். நினைத்தொறும் இன்பம் தரும் திருக் குறள் இது. வாழ்க்கையின் அகத்திலும் புறத்திலும் அருளாட்சி உடையோர் அல்லற்படமாட்டார்கள். அவர்களை அவலம் அடையாது; இஃது உண்மை. முக் காலும் உண்மையென்று திருவள்ளுவர் சாதிக்கின்றார். இந்த உண்மைக்குத் திருவள்ளுவர் காட்டும் சாட்சி எது? காற்று வழங்கும் இந்தப் பெரிய உலகம் சாட்சி என்கிறார். இந்த உலகத்தில் வலிமையுடையார்— வலிமையற்றோர் அனுபவத்திற்கு இடையூறாக நிலத்தை அடைத்து எடுத்துக்கொள்ளுதல் உண்டு. தண்ணீரை அணைகட்டித் தேக்கித் தடுப்பது உண்டு. கதிரொளியையும்—தண்நிலவையும் தடை செய்ய அடைத்துச் சிறைப்படுத்தல் உண்டு. பார்த்திருக்

கிறோம்; கேட்டிருக்கிறோம். ஆனால், காற்றை யாரும் அப்படித் தடை செய்ய முடியாது. காற்று வேலி களுக்கும் சுவர்களுக்கும் அப்பாற்பட்டது. ஆண்டான் அடிமை வேறுபாடுகளைக் கடந்தது. எல்லோருக்கும் காற்று; எப்பொழுதும் காற்று தேடிப் பெறுவதன்று. வலிய வந்து துணை செய்கிறது. முயற்சித்து காற்றுக் குடிப்பதில்லை. இயல்பில் நிகழ்கிறது. இத்தகு காற்று வழங்கும் நிலவுலகம் சாட்சி. மனிதர்களின் கொடிய கரங்கள் இன்னமும் காற்றைத் தடை செய்யவில்லை. களங்கப்படுத்தவுமில்லை. அதுபோல, அருளாள்வார் வாழ்வித்து வாழ்வர்; மகிழ்வித்து மகிழ்வர். அருளாட் சிக்கு ஊனாட்சித் தன்மை குறையவேண்டும். "பூந் துருத்தி பூந்துருத்தி யென்பீராகில், பொல்லாப் புலால் துருத்தி போக்கலாமே" என்பது அப்பர் வாக்கு "ஊன் பொதி சுவர்" என்பது ஆன்றோர் வாக்கு. "ஊனினைப் பெருக்கி உள்ளொளி இழந்தேனே" என்பது ஆரூரர் வாக்கு. இதனால் ஊனுடலின் தன் மையை—பயனைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருதக் கூடாது. ஊனுடம்பு உயிர் நலத்துக்கேற்றவாறு அமையவேண்டும். உடல் பெருத்தால் உயிரின் ஆற்றல் முழுதும் ஊனுடலுக்கு இரை தேடுவதிலேயே, அதிலும் பயன்படும் ஊனுடல் பகுதிக்கு மட்டுமின்றி வெற்றுச் சதைகளுக்கு இரைதேடிப் போட்டு எய்த்துச் சாக வேண்டிய அவசியம் ஏற்படும். உயிர்க்குத் தேவை யான ஊனுடல் போற்றுதற்கு, எளிய சைவ உணவு போதுமானது. எளிய சைவ உணவு—அதாவது காய் களும், கனிகளும் ஊனுடலை வளர்க்கப் பயன்படுவ தோடன்றி நல்லுணர்விற்கும் துணை செய்கிறது. கதறக் கதறக் கழுத்தை அறுத்து இரத்தம் சொட்ட இரக்கமின்றிப் புலாலைச் சுவைத்து உண்பவன்

எங்ஙனம் அருளாட்சியுடையவனுக இருக்க முடியும்? என்று வினவுகிருர் திருவள்ளுவர்.

**"தன்னூண் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"**

என்பது திருவள்ளுவர் வினு.

மனிதன் சுவைத்துத் தின்ற ஊனே அதற்காக ஊனுடலினின்றும் பிரித்த உயிரைத் திருப்பித்தர முடியாது. இங்ஙனம் திருப்பித் தரமுடியாத நிலையிலுள்ள ஆற்றல் குறைந்த மனிதன் உயிர் பிரித்து ஊனைத் தின்பது பாபம். அவனை நரகம் ஏற்றுக் கொள்ளும். எப்படி இவன் தின்ற ஊனைத் திருப்பித் தரமுடியாதோ, அதுபோல நரகமும் இவனைத் திருப்பி விடாது என்பதனை,

**"உண்ணுமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணுத்தல் செய்யா தளறு"**

என்பர் திருவள்ளுவர். அதாவது மீளா நரகத்தில் ஆள்வர். அதனுலன்ருே இளங்கோவடிகளும் "ஊனுண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்" என்ருர். சிலர், தாம் கொல்லமாட்டார்கள்; கடையில் விற்கும் புலாலை வாங்கி உண்பர். இவர்கள் கருத்து கொன்றவனுக்கே பாபம், தமக்கு இல்லை என்பதாகும். பாபம், காரியம் காரணம் இரண்டையும்பற்றிப் படரும். கொலை செய்பவன் ஏன் செய்கிருன்? புலால் உண்பவரின் விருப்பத்தை அறிந்தே கொல்லுகிருன். புலால் உண்பவர் இல்லையாஞல், கொல்பவரும் இல்லை. இன்னும் தெளிவாகச் சொன்னுல், புலால் உண்பவர்களே, புலாலுண்ணும் குற்றத்தைச் செய்வதோடன்றிப் பிறரைத் தன்னுடைய புலால் இச்சையின்மூலம் கொலைக்குற்றம்

செய்யத் தூண்டுகின்றனர். கொலை செய்பவரைவிடக் கொலைக்குத் தூண்டுபவரே கொடியர் என்று திருக்குறள் வன்மையாக எடுத்துக் கூறுகிறது.

**"தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்"**

என்பது திருக்குறள்.

இறைவனை நினைந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஒன்றன் உயிரைச் செகுத்து உண்ணாமை மேலாய அறம் என்று வள்ளுவம் போதிக்கிறது.

**"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத் துண்ணாமை நன்று"**

என்பது திருக்குறள்.

பிறிதோரிடத்தும் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று வலியுறுத்துகிறது. தாயுமான அடிகளும், "கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்குக" என்று கூறினார். வள்ளல் இராமலிங்க அடிகள் வாடிய பயிரின் வாட்டமெல்லாம் கண்டு வாடினார். உயிர் பழக்கத்தின் வழிப்பட்டது. அது சிலபொழுது துன்பத்தைப் பார்த்துப் பழகிவிட்டால் அதற்குத் துன்பத்தின் கொடுமை வழக்கமாகிவிடும். இங்ஙனம் வழக்கப்பட்டோர் சிலர் பிறர் துன்பத்திலேயே மகிழ்வதையும் வாழ்வதையும் பார்க்கிறோம்.

"ஈசனுக்கு அன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்" என்பது திருமந்திரம். ஆதலால், உயிர்த்துன்பம் கருதி புலால் உண்ணலைத் தவிர்த்திடுக! சுவையினால் மட்டுமின்றிப் பயனாலும் சிறந்த காய்களைக் கனிகளை உண்க. காய்களும் கனிகளும் உணவின் பயனைத் தருவதோடன்றி அருளாட்சிக்கும் அரண் செய்கிறது.

எல்லா உயிர்களும் ஈசன் தங்கியிருக்கும் திருவுடல் ஆதலால் அனைத்துயிர் போற்றும் தவம் மேற்சொள்க!

உயிர்களின் நலம் பேணுதலே சிறந்த வழிபாடு. அதுவே அருளின் மாட்சியும் ஆட்சியுமாகும். திருக்குறளின் அருள்நெறி போற்றுமின்! பேணுமின்!

# வள்ளுவர் உலகம் III

## மனக்கட்டுப்பாடு

தாயுமான அடிகள் "எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை" என்று இரங்குகிறார்கள். "மனம் அடங்கக் கற்றிலேன்" என்று அருளாசிரியர் புலம்புகிறார். உலகின் எல்லாப் பயிற்சிகளையும்விட மனத்தையடக்கும் பயிற்சியே சிறந்தது. உயிர் வாழ்க்கையின் பயன், அதனை மேலானதாக மாற்றுவதே யாகும். இதனை "இது அதுவாதல்" என்பர். இரும்பை உருக்கினால் அது எஃகு ஆகும். அதுபோலப் புன்புலால் வாழ்க்கையை அருளுணர்வுகொண்டு உருக்கினால் அது தவமாகும். நிலம் உழுதலின்மூலம் நெகிழ்கிறது. அவ்வழி பயனுடையதாகிறது. தங்கத்தை உருக்கினால் ஒளியுடையதாகிறது. அணிகலன் செய்யப்படுகின்றது. இரும்பை உருக்கினால் எஃகு ஆகிறது; உறுதிப்படுகிறது. உறுதியைத் தருகிறது. நெகிழ்ச்சியும் உருக்கமும் உறுதியும் உள்ள இடத்தில் இறைவன் விளங்கித் தோன்றுகிறான்.

தமக்கு வந்துற்ற நோயினைக் கண்டு பதறாமல் ஏற்று மகிழ்வுடன் அனுபவித்தல், பிற உயிர்களுக்கு

எந்த வகையாலும் துன்பம் செய்யாதிருத்தல் ஆகியவை தவத்தின் அடையாளம்.

**"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு"**

என்பது குறள். உற்றநோய் நோன்றல் மனத்தால் செய்தவம். உயிர்க்குறுகண் செய்யாமை உடலால் செய்யும் தவம். அகமும் புறமும் ஒத்த தவமே சிறந்த தவம். எல்லாக் கதவுகளையும் அடைத்தாலே பொருட் பாதுகாப்பு உண்டு. ஒரு கதவினை அடைத்துப் பிறி தொன்றை அடைக்காதுவிடின், பொருட்பாதுகாப்பு இல்லை. இஃது யாவரும் அறிந்த உண்மை. இதேபோல் பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து ஆகிய அனைத்தை யும் அடைத்து ஒன்றிலிருந்து உத்தமன் திருவடிகளை நினைந்தாலொழியத் தவம் கைகூடுவதில்லை.

துன்பம் உயிரைச் சுடுவதில்லை. உயிரைப் பற்றி யிருக்கின்ற குற்றத்தினையே சுடும். மருத்துவர் கட்டி யினை அறுப்பர். கையினை அறுப்பதில்லை. திருவண்ணு மலை ஆதீன முதல்வர் தவஞானச் செல்வர்மீது "அடியார் தினம் தினம் செய்த பிழை பரியாது அறுத்துச் சுடுவதெல்லாம் அவர் பாசத்தையே" என்று பாடிய பாடல் உணரத்தக்கது. ஆதலால், துன்பத்திற்கு அஞ்சித் தவம் செய்ய முடியாது. துன்பம் பொறிகளின் வழி வந்தாலும் சரி, புலன் களின் வழி வந்தாலும் சரி, அல்லது வேறு எவ்வகை வழிவந்தாலும் சரி, அந்தத் துன்பத்தினைத் தாங்கிக் கொண்டு தடுமாறுமல் நோற்பதே தவம். அங்ஙனம் தவம் செய்வார்மாட்டு திருவருள் மேலோங்கி வெளிப் பட்டு நிற்கும். இதனையே அப்பரடிகள் "உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினுல், முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்ருர்.

உடலேயும் உள்ளத்தையும் சில கட்டுப்பாடு களுக்கு உட்படுத்தித் தன்னை மேலான இயல்புடையவ ளுக மாற்றிக்கொள்ள முயல்வதே தவம். இத்தகு தவத்தைப் புரிந்திலனேயென்று எண்ணி ஏங்குகின்ருர் மாணிக்கவாசகர்.

**''தவமே புரிந்திலன் தண்மலரிட்டு**
**முட்டா திறைஞ்சேன்**
**அவமே பிறந்த அருவினையேன்**
**உனக் கன்பருள்ளாஞ்**
**சிவமே பெறுந்திரு வெய்திற்றி**
**லேன் திருவடிக்காம்**
**பவமே யருளுகண் டாயடியேற்**
**கெம் பரம்பரனே''**

என்பது திருவாசகம். களத்துமேட்டில் நெல்லைத் தூற்றுபவர்கள் நெல்லின்மீதுள்ள கருணை காரணமாக நெல்லைத் தூற்றுவதில்லை. தன்னுடைய பயன் கருதியே தூற்றுகிருர்கள். அதுபோலத் தவம் செய்தால், செய்பவருக்கும் பெருமையே தவிர, தவத்திற்குப் பெருமையன்று. தவத்திஞல் கடவுளுக்குப் பயனில்லை. மனிதனுக்கே பயன். ''பொன்ஞல் பொன்னைப் பெற்ற வருக்கே பயனுண்டு. ஆஞல், பொன்னைப் பெற்றவ ரால் பொன்னுக்கு யாது பயன்?'' என்று விவரிப்பர் சிவப்பிரகாச சுவாமிகள். ஆதலால் திருவள்ளுவர், ''தவம் செய்வார் தம்கருமம் செய்வார்'' என்று கூறு கின்ருர். தவம் செய்வதால், உயிர் துன்பத்தினின்றும் நீங்குகிறது. இன்ப அன்பில் திளைத்து மகிழ்கிறது.

சிலபொழுது தவம் செய்வோர் ஆரவாரத்திற் காகச் செய்வர். புதரும் புற்றும் மூடி மறைக்கும் வரையில் ஊண் உறக்கமின்றித் தவம் செய்வர். ஆயி னும், ''நான் தவம் செய்கிறேன்'' என்ற உணர்வோடு

செய்வர். அவர்களுடைய தவம் பயனற்றது. "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என்பது போலப் பயனற்றுப் போய்விடும். சிலர் தவத்தில் சிறிது வளர்ந்தவுடன் சித்துக்கள் விளையாடுவர். அதனாலும் தவம் அழியும்; அவம் பெருகும். தவத்திற்கு 'நான்' என்ற அகப்பற்றும், 'எனது' என்ற புறப்பற்றும் அறவே நீங்கவேண்டும். இவையிரண்டும் அழியாதவரையில் தவத்தினால் பயனில்லை. தொண்ணூற்று ஒன்பது கல் திறமையாக ஓடி நூறாவது கல்லில் விழுந்துவிட்டால் ஓடி வெற்றி பெற்றதாகக் கருதமுடியாது. புராணங்களில் வருகிற அசுரர்கள் அனைவருமே சிறந்த தவம்செய்தவர்கள். இராவணன், சூரபதுமன், இரணியன் முதலாயினோர் சிறந்த தவம் பயிற்றினும் 'நான்' என்னும் செருக்கினால் நட்டமடைந்தனர்; நடுக்குற்றனர்; தவத்தை இழந்தனர்; தண்டனைக்கு ஆளாயினர். ஆதலால் தவத்தின் பயன்,

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்"

என்று திருக்குறள் பேசுகிறது. தன்னுயிரை—கண்டதை இச்சித்துத் துன்பத்திற்கு ஆளாக்காமல் தன்னுரிமையாக்கிக் கொண்டவரை ஏனைய உயிர்கள் தொழும். தொழுதற்குக் காரணம் சார்பினாலே தானும் நலம் பெறலாம் என்பதேயாகும். தானே ஆற்றினில் நீந்த முடியாதவர் படகின் துணைகொண்டு நீந்திக் கரை சேர்தலைப்போலத் தவத்திற் சிறந்தாரைப் புணையாகக்கொண்டு மற்றவரும் கரையேறலாம். அப்பரடிகளைப் புணையாகக்கொண்டு, அப்பூதியடிகள் உய்தி பெற்றமை உணரத்தக்கது. மேலும், தன்னுயிர் தானறப் பெற்றவர் என்பதற்கு நான் என்ற சுட்டுணர்வு அழிதல் என்று பொருள் கொள்ளுதலும்

சிறப்பாகும். நான் என்ற சுட்டுணர்வு அழிந்தவர்கள் உலகத்தை வாழ்விக்கும் உத்தமர்கள். அவர்களால், உலக உயிர்கள் இன்பநலம் பெறும். ஒரு படகின் வழி பலர் கரையேறுதலைப்போல, ஒரு தவஞானத் தலைவரின்மூலம் கோடானு கோடி உயிர்கள் உய்தி பெறுகின்றன.

மனிதன் தன்னுடைய அகப்பற்று, புறப்பற்றுக்களை ஒவ்வொன்றாக விட்டொழிக்க வேண்டும். அவற்றை விட்டொழிப்பது என்றால், முற்றிலும் விட்டு விலகுவதல்ல. தவத்தின் தொடக்கத்தில் இது இயலக்கூடியதுமன்று. ஆதலால், பொருள்களை வேணவா உணர்வுடனும், விகற்ப உணர்வுடனும் நோக்காதிருத்தல்; தேடாதிருத்தல் ஆகிய பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். பின்பு, தான் துய்க்கும் இன்பத்தை மற்றவர்களும் துய்க்கவேண்டும் என்று கருதவேண்டும். மற்றவர்கள் துய்த்து மகிழ்வதைப் பார்த்து மகிழப் பழகிக்கொள்ள வேண்டும். அதன் பின்பு பிறர் மகிழ்வுக்காகத் தன்னுடைய மகிழ்வை விட்டுக்கொடுக்கப் பழகுதல் வேண்டும். இத்தகு பழக்கம் வளரவும், உறுதி பெறவும் அடிப்படையான நம்பிக்கை ஒன்று தேவை. அதாவது எல்லாம் வல்ல இறைவன் எல்லா உயிர்களிடத்தும் தங்கியிருக்கிறான். அந்த உயிர்கள் மகிழும்பொழுது இறைவனும் மகிழ்கின்றான். அந்த உயிர்கள் அழும்பொழுது இறைவனும் அழுகின்றான் என்ற அறிவும் உணர்வும் தேவை. இத் தத்துவத்தினை விளக்க அன்றோ, தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில், தமிழ்வையை நதிக்கரையில் எம்பெருமான் முதுகில் விழுந்த அடி எல்லார் முதுகிலும் விழுந்தது. அதனால் எல்லா உயிர்களிடத்

தும் இறைவன் தங்கியிருக்கிறன் என்பது போந்த உண்மையன்றோ?

இந்த உலகில் இலர் பலராக இருக்கின்றனர். அதாவது ஏழையர்களாக இருக்கின்றனர். உளர் சிலரேயாம். இந்தக் கொடுமை ஏன்? என்று திருக் குறள் ஆராய்கிறது. ஆராய்ந்து முடிவும் சொல்கிறது. தனக்கென முயலாது, பிறருக்கென முயலுநர் இருப்ப தால், உலகம் நிலைபெற்று நடந்துகொண்டிருக்கிறது என்று புறநானூறு கூறுகிறது.

**''இல்லென்று இரப்போர்க்கு இயைவது கரத்தல்**
**வல்லா நெஞ்சம் நம்எனும் பொருளே**
**காதலர் காதல்''**

என்று அகநானூறு கூறுகிறது. தவம் செய்பவர்கள் இறைவனின் தண்ணருளை வாங்கித் தருபவர்கள்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்கள்; மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்த்து ஒழுகு பவர்கள்; அகத்தே ஒத்த உரிமையுணர்வு உடையவர் கள். இத்தகு தவமுடையோர் பெருகினல், இலர் சிலராவர்; உளர் பலராவர். இதனை,

**''இலர்பல ராகிய காரணம் நோற்பார்**
**சிலர்; பலர் நோலா தவர்''**

என்ற திருக்குறளால் அறியலாம். இந்தக் குறளுக்கு வேறு வகையாலும் பொருள் கருதி மகிழலாம். அதாவது, தவம் செய்தல் செல்வம்.

**''செல்வ நெடுமாடத் தில்லைநகர் மன்னும்**
**செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்''**

என்று திருஞானசம்பந்தர் ஓதுகின்றார். வறுமை என்பது, செல்வம் இன்மையன்று. எவ்வளவு இருப் பினும் ''போதாது, போதாது'' என்று மேலும் தேடு

பவர்கள் உண்டு. அவர்களும் வறியவர்களேயாம். அதனாலன்றோ "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்று சான்றோர் அறிவுறுத்தினர்.

தவம் செய்வோருக்கு நிறைநிலம் மிக்க ஒழுக்கம், வேண்டும். சிலர் பழக்கத்தினால் புறத்தேயுள்ள ஐம்பூதங்கள்—அதாவது நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் இவைகளில் உடலைப் பழக்கி அவற்றினாலாய துன்பத்தினில் வெற்றி பெறுவர். அதாவது நீரில் பல கால் தோய்தல், நிலத்தில் கிடத்தல், நெருப்பில் நடத்தல், விண்வழிச் செல்லுதல், வளியின் திசையினை மாற்றுதல் ஆகிய சாதனைகளில் வெற்றி பெறுவர். ஆயினும், அகத்துறுப்புக்களில் ஒட்டியிருக்கும் ஆசை நீங்காது வாழ்வர். இவர்தம் எளிய நிலையினைப் பார்த்து அவர் தம்முள்ளே ஒன்றித்துக் கலந்துநிற்கும் ஐம்பூதங்கள் நகைக்குமாம் என்பதனை,

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்"**

என்றார் திருவள்ளுவர். தவத்திற்குப் பொதுவாக மக்களிடத்தில் நல்ல வரவேற்பு உண்டு. ஆதலால், முறையாகவாழும் திறனற்றவர்கள் உலகியல் வேட்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தவவேடத்தினை மேற்கொள்வர். இதனைத் திருவள்ளுவர் மிகவும் கடுமையாகக் கடிந்துரைக்கின்றார்.

பசு, புலித்தோலைப் போர்த்திக்கொண்டு மேய்தல் போன்றது தவவேடம் பூண்டோர், பாமர மக்களை வஞ்சித்துக் காணிக்கை என்ற பெயரால் காசுகளைப் பறிப்பது. புதரில் மறைந்து நின்று ஒன்றுமறியாத புள்ளினை வீழ்த்துகிறான் வேடன். அதுபோலக் கயவன் தவவேடத்தில் மறைந்து ஒன்றுமறியாத பாமர

மக்களைத் தன் வலையில் வீழ்த்துகின்றான் என்று திருவள்ளுவர் கண்டிக்கிறார். பற்றற்றார்போலக் காட்சியளித்து, பற்று நீங்காதவர்கள் பாவம் செய்கிறார்கள். அப்பாவத்தால் பின்னை இரங்கிக் கவலைப்படுவதற்கு உரியராகின்றனர் என்பதை,

**"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று ஏதம் பலவும் தரும்"**

என்று திருக்குறள் கூறுகிறது. புறத்துறவு எளிதில் கைகூடக்கூடிய ஒன்று. அதாவது, புறத்துறவு என்பது கோலத்தினைக் காட்டுவது. சில திங்கள் வாளா வாழ்ந்தாலே உடல் துறவுக்கோலத்தை யடையும். அவர்கள் வலிய மழித்தலோ, அன்றி நீட்டலோ செய்யவேண்டிய அவசியமில்லை. தாமேயே பேணுதலின்மையால் உரோமங்கள் உதிர்தலுமுண்டு. தாமே வழுக்கைத் தலை வீழ்தலை இன்றும் பார்க்கிறோம். சிலபொழுது முறையாக நீக்குவன நீக்கித் தூய்மைப்படுத்தாமையின் காரணமாக நீளுதலையும் பார்க்கிறோம். திருவள்ளுவர் உடற்பற்றுக் குறைந்து ஒழுக்கத்திற் சிறந்து விளங்கும் பொழுது தாமே நீளுதலையும் மறுக்கவில்லை. வலிய வேடம் கருதி முயற்சி மேற்கொண்டு மழித்தலையும் நீட்டலையும் மறுக்கின்றார். இதனை,

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்<br>பழித்தது ஒழித்து விடின்"**

என்பதனால் அறியலாம்.

விளக்கு எரிகிறது; சுடர்விட்டு எரிகிறது. ஆயினும் அதன் நடுவே ஒரு கறுப்பு உண்டு. அதுபோல, பொய்த்தவவேடம் பூண்டு, மனத்தில் கறுப்பு வைத்து வந்தான் என்று முத்தநாதன் வருகையைச் சேக்கிழார் வர்ணிக்கிறார்.

திருவள்ளுவர் இதனைக் காட்சியினாலே விளக்கு கின்றார். குன்றிமணி நல்ல சிவப்பு நிறமுடையது; ஆயினும், அதன் மூக்கில் கறுப்பு இருக்கிறது. அது போலத் தவவேடத்தில் அகம் கறுத்த மனிதர்கள் வாழ்வதைத் திருவள்ளுவர் நொந்து கண்டிக்கின்றார். வடிவத்தால் செவ்விய தன்மையைத் திருவள்ளுவர் எதிர்பார்க்கவில்லை. உள்ளத்தினாலேயே எதிர்பார்க் கிறார்.

அம்பின் வடிவம் நேரானதே ஆயினும் அதனால் விளையும் பயன் கொடிதே. யாழின் வடிவம் கோண லானது. ஆயினும் பயன் பலர் கேட்டு மகிழும் இசை யமுது. ஆதலால், வேடத்தால் பயன் இல்லை. நெஞ் சால் துறந்து, தூயதவம் இயற்றுதலே உண்மையான தவம். தவம் செய்யும் இயல்பினரில்லாதோர், நாடகத் தால் அடியார்போல் நடிப்பது நாட்டுக்குக் கேடு. மனிதகுலத்துக்குத் தீங்கு என்பது திருக்குறள் முடிபு. திருக்குறள் காட்டும் தவநெறி பெருகி வளரவேண்டும். இதுவே நமது பிரார்த்தனை!

# வள்ளுவர் உலகம் IV

## மனத் தூய்மை

மனத்தூய்மை, நல்லொழுக்கம், தவம் முதலியன ஒரு நாளில் பொருந்திவிடுவன அல்ல. பல்வேறு நல்லியல்புகளை ஏற்று, வாழ்க்கையிற் செயற்படுத்தி—உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலமே அவை வாய்க்கும். கள்ளாமை என்ற நல்லொழுக்கத்தைத் திருவள்ளுவர் விரித்துரைக்கிறார். ஒழுக்சத்தின் தோற்றத்திற்கும்-வளர்ச்சிக்கும் அல்லது வீழ்ச்சிக்கும், உள்ளமே அடிப்படை. உள்ளத்தில் தோன்றிய ஒன்று, அது நல்லது ஆனாலும் சரி, கெட்டது ஆனாலும் சரி, உடனடியாகச் செயலுக்கு வராது போனாலும், காலப்போக்கில் செயற்பட்டு அதற்குரிய பயனைத் தந்தே தீரும். இதனை,

**"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தாற் கள்வேம் எனல்"**

என்று திருக்குறள் கூறுகிறது.

திருக்குறள் குற்றத்தினை மட்டும் கூறுவதில்லை; கடிவதில்லை. குற்றத்தின் காரணத்தையும் கண்டு கடிகிறது. மனிதனின் தேவைகள் எப்பொழுதும் குறைவாகவே இருக்கவேண்டும். தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால், வாழ்க்கை ஆடம்பரமாவது மட்டுமல்லாமல், ஆசையையும் தூண்டும். ஆசையில்லாத

ஒன்றைப் பெறத் தூண்டும். அப்பொழுது உள்ளம் களவை நாடும். ஆதலால் களவினின்றும் விடுபட, தேவையைக் குறைக்கவேண்டும். தனது பொருளியல்புக் கேற்றவாறு அடக்கமாக, எளிமையாக வாழுதல் வேண்டும்.

**"அளவின்கண் நின்ருெழுக லாற்ருர் களவின்கட்**
**கன்றிய காத லவர்"**

என்பது குறள்.

களவு, கருதிய இன்பத்தையும் தருவதில்லை. மாருக நீங்காத் துன்பத்தையே தருகிறது. அது மட்டுமா? களவில் ஈடுபட்ட நெஞ்சத்தினர் நேரிய முயற்சிகளில் ஈடுபடுதலும் தடைப்படுகிறது. ஆதலால், களவிஞல் ஒரோ வழி ஆக்கம் வந்தாலும், அஃது அளவிறந்து ஆவதுபோல் ஆகிப் பின் கெடும். ஆகிக் கெடுவதால், இன்ப நப்பாசைகளைத் தோற்றுவித்து, பின் அவற்றை நிறைவு செய்துகொள்ள முடியாத அவலநிலைமையையும், களவின் வழிவந்த துன்பங்களையும் ஒருசேர அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது.

ஒருவர்க்குக் கொஞ்சம் பொருள் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். பொருள் எப்பொழுதும் தனித்து வராது. எனவே பொருளை நம்மிடத்துக்குக் கொண்டுவரும் இயல்புகள் என்னென்ன என்பதை ஆராயவேண்டும். பொருளைக் களவு, வஞ்சனை, சூது முதலிய இயல்புகள் கொண்டுவருவதும் உண்டு. இங்ஙனம் வரும் பொருள்கள், செலவழிந்துவிட்டால் பொருளுடன் வந்த இயல்புகள் போகாது. அவற்றை அரிதில் முயன்றே நீக்கிக்கொள்ளலாம். ஆஞல் ஊக்கம், உழைப்பு, ஆற்றல் நிறைந்த முயற்சி ஆகியவைகளுடன் பொருள் வருமாஞல், பொருள் கழிந்தாலும்

அந்த இயல்புகள் நம்மிடத்தே தங்கி நின்று, மீண்டும் பொருளைக் கொண்டுவந்து சேர்க்கும். களவு வீழ்ச்சிக்கே வழி. இந்த வழியை நாடுபவர் பொருளினுல் மட்டுமல்ல, அவர்களது உடல்வாழ்க்கையும்கூட ஒறுக்கப்படும். களவில் விளைவுகள் மட்டும் துன்பமல்ல. களவு செய்தலும் துன்பவினையேயாம். ஆனுல் நேரிய வழியில் பொருளீட்டுதற்கு எளிய, இனிய வழிகள் பலப்பல உண்டு. அதனுல்,

**"அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**
**மற்றைய தேற்ரு தவர்"**

என்று கூறுகிறது குறள்.

வாழ்க்கையை இரண்டு உந்துசக்திகள் வழி நடத்திச் செலலவேண்டும். அந்த இரண்டு சக்திகளும் வெவ்வேருகத் தோற்றம் அளித்தாலும், தம்முள் ஒன்றுபட்டனவேயாகும். ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும்; தோற்றத்திலிருந்து மேலும் வளரும். ஒன்றையொன்று தழுவியே நிற்கும். இந்தச் சக்திகள் அறிவு என்றும், அனுபவம் என்றும் அழைக்கப்பெறும். அறிவில் அனுபவம் விளைகிறது. அனுபவத்தில் அறிவு விளைகிறது. இந்த இரண்டு சக்திகளையும் முறையாகப் பற்றி நெறியில் நின்று வாழ்பவர்கள் வாழ்க்கையின் வரம்புகளை அறிவார்கள். அவர்கள் நெஞ்சத்தில் அற உணர்வு நிலைபெற்றிருக்கும். இதேபோலக் களவுடையார் மாட்டு வஞ்சனை நிலைபெற்று நிற்கும்.

**"அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்**
**களவறிந்தார் நெஞ்சிற் கரவு"**

என்று திருக்குறள் கூறுகிறது.

கள்வர் வாழ்தலும் அரிது. களவினின்றும் ஒதுங்கியவர்கள், தவம் செய்து பெறக்கூடிய புத்தேளுலகத்

தையும் பெறுவர் என்று திருக்குறள் தெளிவுபடுத்துகிறது.

**"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தே ளுலகு"**

என்பது குறள்.

மனிதர்கள் தனிநிலையில் குற்றங்களின் நீங்கி நலம்பெற்று இன்புறுதலுக்கு, வாய்மையிற் சிறந்த ஒழுக்கம் இல்லை. தனி மனிதனை மனித சமுதாயத்தோடு இணைத்து எந்தவித இடையீடுமின்றி இன்ப நலம் செழிக்கப் பிணைத்து வைக்கும் பெருநெறி வாய்மை நெறியாகும். இன்றைய உலகியலில் உண்மை, சத்தியம் என்ற பெயர்களில் நிலவும் ஒழுக்கக் கருத்துக்களைவிட எல்லா வகையாலும் சிறந்த கருத்துடையது வாய்மை என்று வள்ளுவர் ஒழுக்கமாகும் தீமை பயவாத சொல்லே வாய்மை என்பது திருக்குறள் முடிபு. இக்கருத்தினைத் திருவள்ளுவர் வலிமையாகவே அறிவுறுத்துகிறார். உண்மைக் கட்சிக் காரர்களின் வினாவுக்கு விடை சொல்வதுபோல,

**"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்"**

என்று கூறுகிறார்.

எனவே, யாருக்கும்—யாதொன்றுக்கும்—எந்தக் காலத்திலும்—எந்த வகையிலும்—எந்த அளவிலும் தீமை பயவாத சொற்களே வாய்மையிற் சிறந்த சொற்கள் என்பதனை, உணர்த்த "யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்று கூறுகின்றார்.

எனவே, சொற்கள் வாய்மையுடையனவா, அல்லவா என்பதனை ஆராய்வதற்கு அவர், சொற்களுக்குரிய கருத்துக்கள் அல்லது செய்திகள் நிகழ்ந்

தவையா? நிகழாதவையா என்ற அடிப்படையை எடுத்துக் கொள்ளவில்லை. சொற்களின் ஒழுக்கத் தகுதியை ஆராய்வதற்கு அந்தச் சொற்களால் விளையும் பயனையே உரைகல்லாகக் கொள்கிறார். வாழ்க்கை சிறப்பதற்குத்தானே ஒழுக்கம்? அங்ஙனம் சிறக்கச் செய்ய முடியாத—பயனற்ற—நிகழ்ந்தவை களைக் கூறி அல்லற்படுவதில் பயனென்ன? ஆதலால், நிகழ்ந்தது கூறல் வாய்மையன்று. நிகழ்ந்ததைக் கூறலாம், நன்மை பயக்குமாயின். நிகழ்ந்தது கூறல் தீமை விளைக்குமாயின், கூறியது பொய்யேயாம் என்பது வள்ளுவத்தின் தெளிவான ஒழுக்கம். நிகழா தது அல்லது பொய் கூறுவதும்கூட, அதனால் நன்மை விளையுமாயின், வாய்மை என்றே கொள்ளப்பெறும்.

**"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்"**

என்பது குறள்.

சாக்ரட்டீசும் "நன்மைகளைச் சாதிக்க மருந்து போலப் பொய் கூறலாம்" என்றார். இங்ஙனம், பொய்ம் மையும் வாய்மையாதலால் பெரும்பாலும் சமுதாயக் கூட்டு வாழ்க்கையில் அடிக்கடி நிகழும். இங்ஙனம் நிகழ்வதன் இன்றியமையாமை பழகுபவர்களிடத்தி லுள்ள மனவலி—உணர்வு ஆகியவைகளைப் பொறுத்து அமைவதாகும். இதனை,

**"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந் தாற்றாக் கடை"**

என்று கூறியும், விளக்குகிறது. சிலருக்கு நல்லதை அப்படியே நல்லதாக எடுத்துக் கொள்ளும் சக்தியில்லை. அவர்களுக்குக் கவர்ச்சி தேவை; இனிய பூச்சு தேவை. எப்பொழுதும் முறையான நன்மை கவர்ச்சியாகக்

காட்சி அளிக்காது. ஆனால், நெடிய—ஆழமான—மாறாத நல்லின்பத்தைதரும். இத்தகு நல்லின்பத்திற்கு அழைத்துச் செல்லப் பொய்ம்மையும் வாய்மையாக அவசியம் கருதிக் கருதப்படுகிறது. ஆனாலும் பொய், பொய்யேதான். வாய்மையாகி விடுவதில்லை. நன்மை விளைந்தால் போதுமா? அவ்வளவு எளிமையாகவா வள்ளுவம் ஒழுக்கத்தைக் கூறும்? விளையும் நன்மைக்கு ஆழமான இயல்பு கூறுகிறது குறள். நன்மை "புரை தீர்ந்த நன்மை"யாக இருக்க வேண்டும். பெரும் பாலும் தனக்கு நன்மை அல்லது தன்னை மிகவும் நெருங்கிச் சார்ந்திருப்பவருக்கு நன்மை என்ற மனப் போக்கே மக்களின் இயல்பு ஆதலால், யாதொரு குற்றமும் இல்லாத நன்மை விளையும்பொழுதே பொய்ம்மையும் வாய்மைாகக் கருதப் பெறும்.

உலக வாழ்வினில் பகையும் பிணக்கும் சமுதாயத் தில் தோன்றிப் புரையோடாமல் தடுக்கும் நெறியே வாய்மை. வாய்மை சொல்லாகமட்டும் நின்று பொருள் உணர்த்தாமல், சொல்பவரின் ஒழுக்கத்தையும் காட்டு கிறது. மெய்ம்மை, உண்மை என்ற சொற்களுக்கு இத் தகைய ஆற்றலில்லை. உள்ளதைக் கூறல் உண்மை. நிகழ்ந்ததைக் கூறல் மெய்ம்மை. உண்மை உள்ளத் தைப் பொறுத்து. மெய்ம்மை செயல்களை—சம்பவங் களைப் பொறுத்தது. இவைகளால் விளையும் பயன்கள் மிகுதியும் சிறப்புடையனவாக அமையா? வாய்மையே மிகவும் சிறந்த ஒழுக்கம்.

பலர் வாயினால் இனிய சொற்களைப் பேசுவர். கையினால் இனிமையும் செய்வர். வடையின் வாசனையை எலிக்குக் காட்டிப் பிடிப்பதைப்போல மக்களைத் தம் வலையில் வீழ்த்திச் சுரண்டி அடக்கி ஆள. இதனை உணர்த்தவே "தன்நெஞ்சு அறிவது பொய்யற்க"

என்று கூறுகிறது. பிறருக்கு இனியனபோலத் தோற்றமளிக்கலாம். பலர் அதை நம்பவும் செய்யலாம். ஆனால், அதனால் பயனில்லை பலர் நம்புதலின் காரணமாகவே பொய், வாய்மையாகிவிடாது உள்ளத்தினாலும் பிறருக்குத் தீமை கருதாத ஒழுக்கத்தையே வாய்மை ஒழுக்கம் என்று வள்ளுவம் வரையறுத்துக் கூறுகிறது. நெருப்பு மட்டுமா சுடுகிறது? நெருப்பு இருக்குமிடமும் சுடும். அதுபோலத் தீமை தங்கியுள்ள நெஞ்சும் சுடும். உள்ளத்தால் ஒழுகுதலே ஒழுக்கம். "உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலக"த்துக்கு நன்மை விளையும்; உலகத்தில் பல்லுயிர்கள் வாழும். ஆதலால் பருவுடல் அழிந்தாலும் உலகத்தவருடைய உள்ளங்களில் புகழுருவத்துடன் உலவுவர். இதனை,

> **"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
> **உள்ளத்துள் எல்லாம் உளன்"**

என்று கூறி விளக்குகிறது குறள்.

உள்ளத்தால் செயலால் நன்மை நாடும் வாய்மை ஒழுக்கம் மேற்கொண்டொழுகினாலே போதும். உடம்பினை வருத்தும் தவங்கள் செய்ய வேண்டா. ஆரவாரத் தன்மையுடைய அறங்களைச் செய்ய வேண்டா. உடலின் தூய்மை தண்ணீரால் கழுவுவதின் மூலம் கிடைக்கிறது. இன்று கழுவினால் தூய்மையாக இருக்கும். ஆனாலும் நாளை தூய்மை குறையும். மீண்டும் கழுவித் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

> **"புறந்தூய்மை நீரான் அமையும்; அகத்தூய்மை**
> **வாய்மையாற் காணப் படும்"**

என்பது குறள். உடல் தூய்மையைத் தொடர்ந்து கவனித்து அடிக்கடி கழுவித் தூய்மை செய்துகொண்டு, தனக்கும் பிறருக்கும் மகிழ்வைத் தரக்கூடிய வகையில்

வாழ்வதைப் போல, வாய்மையால் அடிக்கடி நினைந்து நினைந்து மனத்தூய்மையைப் பேணிக் காப்பாற்றுதல் வேண்டும்.

புறத்தே கிடக்கும் இருளை நீக்கிக் காட்சி தருவது ஒளிவிளக்கு. விளக்கின் துணைகொண்ட பொருள்களைப் பகுத்துப் பார்ப்பர். சான்றோர் கையில் விளக்குக் கொண்டு நிகழ்ச்சிகளை—சம்பவங்களை ஆராய மாட்டார்கள். அவர்கள் பொய்யா விளக்கை அகத்தில் ஏற்றி நன்மையே கருதுவர்; நினைப்பர்.

**''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு''**

என்பது குறள். திருவள்ளுவருக்கு வாய்மை ஒழுக்கத்தில் ஏற்பட்ட அளவுகடந்த பற்றுதலின் காரணமாக, அவர் ஐயத்திற்கிடமின்றியும்—உறுதியாகவும், தெளிவாகவும் வாய்மையை வலியுறுத்துகின்றார்.

**''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற''**

என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மனித குலத்தை அலைக்கழிக்கும் கொடிய தீமைகளில் ஒன்று வெகுளுதல். அதாவது கோபப் படுதல். பலர் எளிதில் உணர்ச்சிக்கு ஆளாகின்றனர். அவ்வழி வெகுண்டு தமக்கும் பிறர்க்கும் தீங்கிழைக்கின்றனர். நொய்யரிசி உடன் வேகும்; அடிப்பிடிக்கும்; களியாகும்; பொலிவு காணாது; உண்பவர்க்குச் சுவையும் நிறைவும் தராது. ஆனால் அரிசி அப்படியல்ல. நின்று வேகும்; முறையாகவும் வேகும்; சோறும் பொலிவு காணும்; உண்ணவும் இனிமையும் மனநிறைவும் தரும். அது போல, எளிதில் உணர்ச்சிவசப்படுகிறவர்கள் எளிதில் வெகுளிக்கும் ஆளாகின்றனர். தன்னைக் காத்துக்

கொள்ள விரும்புகிறவர்கள் "சேர்ந்தாரைக் கொல்லும் சினத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதே அவரைச் சூழ்ந்துள்ள இனம் தொடர்ந்து சூழ்ந்து நிற்கும். சினத்தினால் நன்மை விளைவதில்லை; இன்பம் விளைவதில்லை. மாறாகக் கேடே விளைகிறது. கையால் நிலத்தை ஓங்கி அறைந்தால் நிலத்திற்கு நோவில்லை; கைக்கே வலி. வலியோடு மட்டுமல்ல கையொடிந்தாலும் ஒடியும். அதுபோல் ஒருவர் சினத்தால் பிறருக்கு விளைவிக்கும் தீமையை விட அவர் பெறும் தீமையே அதிகம் என்பதனை,

> "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
> நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"

என்று கூறுகிறது.

ஆதலால் சினத்தினைத் துறந்து பெரிய துறவியாகச் சொல்கிறார் திருவள்ளுவர். தவத்திற் சிறந்தோர் பலர், சினத்தால் தன்னையும் தவத்தையும் இழந்த வரலாறுகள் ஏராளம் என்பதனை உணர்த்தி, வெகுளியிலிருந்து விலகச் சொல்கிறார்

> "இறந்தார் இறந்தா ரனையர், சினத்தைத்
> துறந்தார் துறந்தார் துணை"

என்பது குறள். வெகுளாமல் இருக்க முடியவில்லையே என்ற குறையிருக்கலாம். பலர் வேண்டுமென்றே நமக்குத் தவறுகளையும், துன்பங்களையும் இழைத்துக் கோபத்தை மூட்டலாம். இதனைக் காரணம் காட்டிக் கோபத்தை நியாயப்படுத்தக் கூடாது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில்தான் கோபம் தம்மை வந்து பொருந்தாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்பதனை,

> "இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
> புணரின் வெகுளாமை நன்று"

என்று கூறுகிறது.

வெகுளியைத் தொடர்ந்து தோன்றும் தீயொழுக்கம் இன்னா செய்தல். பிற உயிர்களுக்குத் தீமை செய்யாதொழுகுதலே அறிவுடைமையாகும்; பேரறமுமாகும். இதனை,

**''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்**
**மாணுசெய் யாமை தலை''**

என்று கூறுகிறது. எனைத்தானும்—எஞ்ஞான்றும்—யார்க்கும்—மனத்தானும்—அவருடைய சொற்களின் அடுக்கு, அந்தச் சொற்கள் தரும் பொருள் மிகவும் வலிமையுடையன. எந்தவொரு மனிதனும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புவான். நோயில்லாமல் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோமா? நோயைத் தடுப்பதற்குக் கம்பளி உறைகளோ, கவசங்களோ முற்றிலும் பயன்படா. பிறருக்கு நோய் செய்யாமல் இருக்க வேண்டும். பிறருக்கு நோய் செய்பவர்கள் இன்றோ நாளையோ நோய்க்கு ஆளாவது இயற்கை. நியதியுங்கூட. பிறர்க்கு நோய் செய்யாதே. நோய்க்கு ஆளாகாதே. என்பதனை,

**''நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்''**

என்று கூறி விளக்குகிறது.

வெகுளாமையைத் தொடர்ந்து போற்றி ஒழுக வேண்டிய அறம் கொல்லாமை. வெகுளி காத்தாலே, கொல்லாமை ஒழுக்கம் தானே அமையும். ஒருகால் வெகுளி எல்லை கடந்தால், வெகுளியின் வழி கொல்லாமலாவது இரு என்று குறள் கூறுகிறது. ''அறவினை யாதெனின் கொல்லாமை'' என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறுகிறது. உயிர்களின் வளர்ச்சிக்கும், உய்தலுக்கும் கருவியாக அமைவது உயிர்க்குப் பருவுட

லோடுள்ள தொடர்பேயாகும். இந்தத் தொடர்பை நீக்குதல் உயிர்களின் முன்னேற்றத்துக்கும் உய்த லுக்கும் தடை செய்தலாகும். இஃது அரசியல் வழி யிலும் குற்றம்; அருளியல் வழியிலும் குற்றமாகும் என்பதனை உறுதிப்படுத்த, "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்றும், "ஒன்ருக நல்லது கொல் லாமை" என்றும்,

> "நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> கொல்லாமை சூழும் நெறி"

என்றும், பல்லாற்ருனும் கூறி, வலியுறுத்துகிருர். கொல்லாதிருத்தலை மட்டும் திருவள்ளுவர் அறமாகக் கருதவில்லை. சமூக ரீதியாக—சமூகம் ஒருவரை உணவு முதலியன இல்லாமல் தாமே சாக விடுதலையும் கொலைக் குற்றமாகவே கருதுகிருர் என்பது வேறு எந்த நீதி நூலிலும் இல்லாத சிறப்பு.

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்ற குறள் நினைந்து நினைந்து மகிழத்தக்கது. வளம் பல படைத்த உலகத்தில் கிடைக்கும் வளங்களைப் பகுத்துக் கொடுத்து, உண்டு, வாழ்வித்து, வாழ்தலே அறமாகும். எல்லா நூல்களும் உணர்த்தும் அற மாகும். ஆதலால், களவு விடுத்து, வாய்மை ஏற்று, வெகுளி நீக்கி, இனியன செய்து, பகுத்துண்டு வாழ்தல் மனத்தூய்மையைப் பெறுதற்குரிய வழி. இங்ஙனம் குறள் கூறும் ஒழுக்க நெறிகள் நம்மிடை நிலவுமாயின் இன்பம் சூழும். இந்த அதிகாரங்கள் துறவற இயலில் இருந்தாலும் மனிதராகப் பிறந்த எல்லாருக்கும் உரியனவேயாம்.

# வள்ளுவர் உலகம் V

## பேரின்பம்

உயிர்களுக்கு இன்ப வேட்கை இயற்கையினும் இயற்கை. இன்ப நலத்தில் நாட்டம் கொண்டே ஓயாது உழைக்கின்றன. சடப்பொருள்களாலாய உலகத்தின் நோக்கமும் உயிர்களுக்கு இன்பம் தருவதேயாம். இறைவன் ஐந்தொழில் நடத்துவதும், பெண்பால் உகந்தாடுவதும் உயிர்களுக்கு இன்பத்தைப் புணர்த்தும் நோக்கத்துடனேயாம். எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்பி அலைந்தாலும் அவை பெறுவது என்னவோ துன்பமாகவே இருக்கிறது. இஃது ஏன்? கடவுளின் இலட்சியமும் உயிர்களுக்கு இன்பத்தைத் தருவது; இயற்கையின் இலட்சியமும் உலக உயிர்களுக்கு இன்பத்தைத் தருவது. மனிதப் பிறப்புகளில் கூட நெஞ்சத்தால், முகத்தால், மொழியால் உயிர்களுக்கு இன்பம் தருதலே இலட்சியமாகும். இங்ஙனம், எல்லாம் இன்பச் சூழலுக்கென அமைந்திருந்தும் துன்பம் ஏன் வருகிறது? எப்படி வருகிறது? இதனைத் திருக்குறள் ஆராய்ந்து வழிகாட்டுகிறது. அறியாமையின் காரணமாக நன்றைத் தீதென்றும், தீயதை நன்றென்றும், இன்பத்தைத் துன்பமென்றும், துன்பத்தை இன்பமென்றும் மயங்கி மாறுபட உணர்வதாலேயே துன்பம் விளைகிறது.

ஆமையை அவித்துண்ணும் ஒரு வீடு. அடுப்பில் உலைப்பானை ஏற்றி, விறகு வைத்துத் தீமூட்டி ஆமையை உலைப்பானையில் இடுகின்றனர். அடுப்பு எரிகிறது; தண்ணீரில் கிடந்து மரத்துப்போன ஆமைக்கு இளம் சூடு இன்பமாக இருக்கிறது. உலைப்பானையில் மகிழ்ச்சிப் பெருக்கில் மகிழ்ந்து ஆடுகிறது. ஐயகோ! சில மணித் துளிகளில் தண்ணீர் கொதி நிலையாக மாறித் தாங் கொணு வெப்பத்தால் வெந்து அழியப் போகிறோம் என்று எண்ணிப் பார்க்க ஆமையால் முடியவில்லை. அதுபோல உயிர்களும் முறை பிறழ்ந்த மனப் போக்கு களாலேயே துன்பம் அடைகின்றன. இதனை,

"பொருளல்ல வற்றைப் பொருள்என் றுணரும்
மருளாணும் மாணுப் பிறப்பு"

என்றும் குறள் தெரிவிக்கிறது.

பொருளும், பொருளினுல் விளையும் பயனும் ஒரோ வழி மாறுபடாமல் இருப்பதுண்டு. பல சமயங்களில் அவை தம்முள் மாறுபடும். அப்பொழுதெல்லாம் பொருள்களைப் பயன் நோக்கியே கருத வேண்டும். பொருள் கருதி எடுத்துக் கொள்ளக் கூடாது. வேம்பு கசப்பானது, கரும்பு இனிப்பானது. கரும்பு உண்பது அதிகப்பட்டால் தீமை விளையலாம். வேம்போ குறை யினும், மிகினும் தீமை தராது. உறவும் நட்பும் இனிமையானது. ஆனுல் எந்த நட்பு இனிமையானது? குற்றங் கடிதலும், குணம் உவத்தலும் கலந்த நட்பே இனிய நட்பு. இத்தகு நட்புறவில் தீமை இல்லை. போலி இன்ப நப்பாசைகள் கலந்த உறவு இன்பம் போல் தோற்றித் துன்பம் தரும். எது என்றும்—எப்பொழு தும் துன்பங்கலவாத அழிவிலின்பத்தை தருமோ அதுவே பொருள். மற்றையவெல்லாம் பொருளல்ல என்பது கருத்து இதனை வலியுறுத்தவே,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று குறள் கூறுகிறது.

துறவு மனப்பான்மை பல காரணங்களால் தோன்றலாம். ஆனால் சிறந்த அனுபவ அறிவின் முதிர்ச்சியில் தோன்றுவதே சாலச் சிறந்த துறவு. துறவு என்றால் சந்நியாசம் என்றே பொருள் கொள்ளுதல் முறையன்று. அது துன்பத் தொடக்கினையுடைய பொருள்களின் நிலைமை அறிந்து உணர்ந்து அவற்றினின்று விலகுதலேயாம். மனையற வாழ்க்கை மேற்கொண்டோரில் மிகச் சிறந்த துறவு மனப்பான்மையுடையோர்களும் உண்டு. திருநீலகண்டர், இளையாங்குடி மாறனார் ஆகிய அடியார்களின் வரலாறும், அண்ணல் காந்தியடிகளின் வரலாறும் எண்ணத்தக்கன; உணரத் தக்கன. உலகம் நிலையற்றது என்று வரலாற்றுத் தத்துவ அறிஞர்களின் முடிபு. உலகம் நிலையற்றது என்றால் உலகம் அழியக்கூடியது என்பது பொருளன்று. உலகம் அழிவதில்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, எப்பொழுதோ ஒரு தடவை உலகத்தின் வடிவம் மாறலாம்; தன்மை மாறலாம். அவ்வளவுதான். உயிர்களுக்கு உலகத்தோடுள்ள தொடர்பே நிலையற்றது. இத்தொடர்பு மாறுதலுக்குரியது: மாறும். ஆதலால் தொடர்பின் அமைப்புக்கள், கூறுபாடுகள் மாறுவதற்கு முன்பு, உரியவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே ஆன்றோர் கருத்து. இளமை, உடம்பு, செல்வம் முதலியவற்றோடு உயிர்களுக்குள்ள உறவு சீக்கிரத்தில் மாறுதலுக்கு ஆளாவது சிலபொழுது அழிந்து மாறுபடும். இவைகளோடு உயிர்களுக்குள்ள தொடர்பே நிலையில்லாதது. பொருள்கள் நிலையில்லாதவையல்ல,

''நில்லாத வற்றை நிலையென் றுணரும்
புல்லறி வாண்மை கடை''

என்று வள்ளுவம் கூறுகிறது.

நிலையில்லாதனவற்றைக் கொண்டு நிலையாயின செய்தல் அறிவுடைமை. செல்வம் நிலையில்லாதது. ஆனால், செல்வத்தினைக்கொண்டு நிலையான பல அறங்களைச் செய்யலாம். செய்யலாம் என்று காலங்கடத்துவதாற் பயனில்லை. மனம் மண் வீட்டில் குடிபுகுந்து கொள்ளும். பின் செய்ய மனம் வராது. அவா வெள்ளக் கடலுள் ஆழ்ந்து அழிவதைத் தவிர வேறு வழியில்லை. அது போன்றதே இளமையும். எப்பொழுதுமே காலம் நாட்கள், மாதம், ஆண்டுக் கணக்கில் உருவம் திரண்டு ஓடிவிடுவதில்லை. நிமிடங்களாக, மணிகளாக, ஒரு நாளாக அற்பமானவைகள் போலக் காட்டி, ஆயுட் காலத்தை அரித்துச் சாப்பிடுவது, கால நியதியின் கொள்கை. நாள்தோறும் கிழிக்கின்ற நாட்காட்டியை - காலண்டரை - ஆண்டுத் தொடக்கத்தில் பார்த்தால், பல தாள்கள் அடங்கியிருப்பதால் பருத்தும் உருத்தும் இருக்கும். நாள் ஆக ஆக ஒவ்வொரு தாளாகக் கிழிக்கப் பெற்றுக் கடைசியில் ஒரு தாளும் இல்லாமல் கிழிபட்டுப் போகிறது? உருவம் இளைத்து விடுகிறது. இதுபோன்றதுதான் மனிதனின் வாழ்நாட்களும். இன்று என்றும், நாளை என்றும் கழிந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் பிணமாகும் நிலை ஏற்படுகிறது. ஆதலால் இந்த உணர்வைத் திருவள்ளுவர் எவ்வளவு எளிமையாக, ஆனால் உணரக்கூடிய வகையில் உணர்த்துகிறார். இதனை,

''நாள்என் ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்''

என்று குறள் கூறுகிறது. நாட்களை அவமே வீணுக்காது, பிறப்பின் பயனை அடைய முயலவேண்டும்.

"காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்" என்பது பழமொழி. இந்தப் பழமொழி இன்றைய உலகியலில் தவருன கருத்தில் வழங்கப்பெற்ருலும்—இந்தப் பழமொழிக்குச் சிறந்த தத்துவப் பொருள் உண்டு; அதாவது உயிர் உடம்பொடு புணர்ந்து இயங்கும்பொழுதே அதற்கு இயக்கம் உண்டு. சிந்தனை உண்டு; செயல் உண்டு. உடம்பொடு உயிர் புணர்ந்து நிற்பதற்குச் சாட்சி, விடும் மூச்சுக் காற்றேயாம். அந்த மூச்சுக் காற்று இருக்கும்பொழுதே தீமையைத் தூற்றிவிட்டு, நன்மையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருள். ஆதலால், நிலைத்தல் நிலையாமை தெரிந்து; துன்பத் தொடக்குடைய பொருள்களைத் துறந்து; இன்பத்தினை யடைதல் வேண்டும். "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்ப அன்பினை" யடைய ஒரே வழி யான் என்ற அகப்பற்றும் எனது என்ற புறப் பற்றும் நீங்குதலேயாம். இதனை,

> **"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்**
> **குயர்ந்த வுலகம் புகல்"**

என்ற குறளால் அறியலாம். அவா என்பது அரைக் கீரை போன்றது. அரைக்கீரை கிள்ளக் கிள்ளத் துளிர்க்கும். அதுபோல, அவா ஒன்றையொன்று தள்ளிக்கொண்டு அடர்த்து எழுந்து வரும். "அவா வெள்ளக் கள்வனேனை" என்பது மணிமொழி. அவாவே எல்லாத் துன்பங்களுக்கும், அத்துன்பங்களை நொந்து அனுபவிக்கும் பிறப்புக்களுக்கும் காரணமாகும். இதனை,

> **"அவாவென்ப எல்லா வுயிர்க்கும்; எஞ்ஞான்றும்**
> **தவா அப்பிறப்பீனும் வித்து"**

என்ற குறளால் அறிக.

திருவள்ளுவர்,

**"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்"**

என்று கூறுவது எண்ணத்தக்கது. ஏன்? செல்வத்தின் பயன் இன்பம் ஆனல் செல்வம் ஈட்டும் பொழுதும் ஈட்டிய செல்வத்தைப் பாதுகாக்கும்பொழுதும், கொடுக்கும்பொழுதும் துன்பமே தருகிறது. அதனுல், "வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை" என்று கூறுகிருர். பேரின்பப் பேற்றுக்குத் தூய்மையே அடிப்படை. அவாவின்மையின் விளைவே தூய்மை. அவா வெளிப்படையாக மட்டும் வேலை செய்யாது. வஞ்சனையாகவும் வேலை செய்யும். ஒன்றைக் காட்டிப் பிரிதொன்றைத் தருவதே வஞ்சனையாகும். வெண்ணெய் என்று கூறிச் சுண்ணும்பைத் தருவதுபோல, அவாவும் போலிக் கவர்ச்சிகளால் மயக்கித் துன்பம் விளைவிக்கும் என்பதை,

**"அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா"**

என்ற குறளால் அறிய முடிகிறது. துன்பமே கொடுமை யானது. துன்பத்துள் துன்பம் எதுவாக இருக்க முடியும்? நிச்சயம் ஒரு துன்பமாக இருக்க முடியாது. காரணம், துன்பம் தோன்றும்; ஆனுலும் மாறுபடும். ஆனல் அவாவோ மாருத் துன்பத்தைக் கொடுக்கும். இதனை,

**"இன்பம் இடையருது ஈண்டும்; அவாவென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்"**

என்று கூறி விளக்குகிறது.

ஆசை கடல் போன்றது. கடலுக்குக்கூடக் கரை யுண்டு. ஆசைக்கு ஏது எல்லை? ஆசை தகுதி பார்க்குமா?

நீதி நியாயம் பார்க்குமா? இல்லை வெட்கந்தான் படுமா? அதற்கு ஒன்றுமில்லை. அது ஒரு பச்சை நிர்வாண தேவதை! அதைப் பூசிப்பவர்கள் அழிவார்கள். அதனாலன்றோ திருமூலரும்,

> **"ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்**
> **ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்"**

என்று கூறினார். திருவள்ளுவரும், அவா நீங்கியவுடனேயே மாறாத பேரின்பம் கிடைக்கும் என்பதனை,

> **"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
> **பேரா இயற்கை தரும்"**

என்று குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர், பிறவி நோயைக் கொடிய பகையாகக் கருதுகிறார். இந்நோய்க்குக் காரணமாயுள்ள காமம், வெகுளி, மயக்கங்களைச் சாடுகிறார். இவைகளின் பெயரும்கூடக் கெடவேண்டும் என்று கூறுகிறார்.

> **"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
> **நாமம் கெடக்கெடும் நோய்"**

என்பதிலுள்ள உறுதி உணரத்தக்கது.

மழை நீருக்கு வண்ணமில்லை; மணமில்லை; ஆயினும் சார்பினால் அவற்றைப் பெறும். காற்றிற்கு மணமில்லை; சார்பினால் அதனைப் பெறும் உயிரும் இத்தகையதே. உயிர் யாதானும் ஒன்றைச் சார்ந்து நிற்கும் இயல்புடையது. உயிர் இயல்பாக ஆணவம் என்ற அழுக்கைச் சார்ந்திருக்கிறது. இந்தச் சார்பின் காரணமாக உயிரின் அறிவு மயங்குகிறது; பேதமை அடைகிறது. இதனை, உயிர் உணர்ந்து இந்தச் சார்பைக் கெடுத்து, தனக்குவமையில்லாதானாக விளங்கும் இறைவனோடு சார்பு ஏற்படுத்திக்கொண்டால், உயிர் அறிவு

நலம் பெறுகிறது; வளர்கிறது; வாழ்கிறது; உய்தி பெறுகிறது. இதனை,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்"

என்று தெளிவு படுத்துகிறது. அதனால், பேதைமை நீங்க வேண்டுமா? பேதைமையின் காரணமாச் சங்கிலித் தொடர்போல வரும் பிறவித் துன்பங்கள் ஒழிய வேண்டுமா? என்று ஆராய்வது அறிவுடைமை. இதனை ஆராய்ந்து பல்வேறு சிறப்புக்கள் அனைத்திலும் சிறந்த—"சிறப்பு" என்றே பேருடைய செம்பொருளைக் காணுதல் வேண்டும். சில பொருள் எதில் ஊறுகிறதோ, அந்தப் பொருளின் தன்மையை—சுவையைப் பெறும். அதுபோல உயிர் எதை நினைக்கிறதோ அல்லது எண்ணுகிறதோ, அவ்வழியாக அது ஆகும். இதனையே இன்றைய உளநூலோர் "எண்ணியபடியே வாழ்க்கை" என்று கூறுகின்றனர். இதனை,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளால் உணர்க. செம்பொருள் காணும் முயற்சிக்கு ஐயம் ஒரு பெரிய தடை. அறியாமையைக் கூட மன்னிக்கலாம். ஆனால், ஐயத்தை அனுமதிக்க முடியாது. காரணம் இதுவோ, அதுவோ என்ற ஐயப் பாட்டிலேயே உழலச் செய்து உருக்குலைக்கிறது. எந்த ஒன்றிலும் துணிந்து இறங்க முடியாமல் தடுக்கிறது. அறியாமை, பேதைமை இருந்தாலும் அனுபவத்தால் மாறும். ஆனால், ஐயமோ, அனுபவத்திற்கே தடை. ஆதலால், பேரின்ப வாயில் நுழைவுக்கு முதலில் ஐயம் நீங்க வேண்டும். பின் தெளிவு தேவை. ஐயம் நீங்கித் தெளிவு தோன்றின் பேரின்பம் எளிதில் கிடைக்கும் என்பதை வள்ளுவர் நயம்படக் கூறுகிறார்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, மண்ணுலகத்தை விட விண்ணுலகமே பக்கத்திலிருப்பதாகக் கூறுகிறார்.

**"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"**

என்பது குறள்.

உடலும், உயிரும் இயைந்து ஒன்றுபட்டு உலாவும் பொழுது தங்கியிருக்கும் இடத்திற்கே வீடு என்று பெயர். வீடு என்ற சொல் விடுதல் பொருள் உணர்த்தும் சொல். குடியிருக்கும் வீட்டுக்கு, வீடு என்று பெயர் வந்தது எப்படி? சிலருக்குப் பலகாலும் பயிலும் வீட்டில் படுத்தாலே தூக்கம் வரும். சிலருக்கு வீட்டை விட்டு வெளியே இருப்பது அமைதியைத் தராது. அது மட்டுமின்றி, சுடும் கோடை வெய்யில், வருத்தும் பனி, கொடிய விலங்குகளின் பகை ஆகியன தரும் துன்பங்களிலிருந்து, விடுதலை தந்து—இன்பம் தருவதால் வீடு என்று பெயர் பெற்றது. இத்தகைய ஒரு வீடு சொந்தத்தில் இல்லாதவர்கள் மிகவும் குறைப்படுகிறார்கள்; துன்பப்படுகிறார்கள். குடியிருக்க வீடுகூட இல்லையே என்று கவலைப்படுகிறார்கள். சொந்தத்தில் வீடு இல்லாதவர்கள் இயல்புக்கேற்ப வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள். வாடகை வீடுகளில் குடியிருப்பது வசதியாக இருப்பதில்லை; மேலும் துன்பமுமாம். வாடகைக்கு வீட்டைத் தந்திருக்கும் வீட்டின் சொந்தக்காரர்களுக்கு வாடகையைப்பற்றிக் கவலையே தவிர, வாழ்க்கை வசதியைப்பற்றிக் கவலையில்லை. அதனாலன்றோ, வாடகை வீடுகளில் குடியிருந்து அலுத்தவர்கள் எப்படியாவது சொந்த வீடு கட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்; கட்டி மகிழ்கிறார்கள். சில ஆண்டுகள் வாழ்ந்துவிட்டுப் போகும் வீட்டுக்கே இந்த

நிலையென்றால் அழியாத இன்பத்தைத் தரும். பேரின்ப வீட்டை என்னென்று புகழ்வது; வாழ்வது!

உயிர் உடம்பில் தங்கியிருக்கிறது. உயிருக்கு இந்தக் குடியிருப்பு நிலைத்ததன்று. இந்த உயிர் முன்னே பல குடியிருப்புகளில் குடியிருந்து, குடியிருந்து களைத்து வீடுகளை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறது. உயிர் முன்னே குடியிருந்து காலி செய்த வீடுகள் பலப் பல என்ற கருத்தினை—"எழு பிறப்பு" என்று சொல்லு வதன் மூலம் வள்ளுவம் விளக்குகிறது. இதனையே,

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன்"**

என்று மணிவாசகமும் பேசுகிறது. ஐயகோ! நினைத் தாலும் துன்பம் தரும் குடியிருப்புகள்! குடியிருப்புக் களாவது தனியே வாழ்ந்த குடியிருப்புக்களா? இல்லை! ஒட்டுக்குடித்தனங்கள். உடன் குடியிருந்தவை ஐம் பூதங்கள்! அவை தம்முள் ஒன்றுக்கொன்று முரண்பாடு தோன்றும்பொழுது ஏற்படும் நிலைமையைச் சொல்ல வேண்டா. "நோய்க்குக் காரணம் யாதோ? மருந்து இடுவது யாரோ?" என்ற நிலை. இத்தகு துன்பம் தரும் குடியிருப்புகளை விட்டு விலகி, விடுதலை பெற்று நிரந்தரமாகக் குடியிருக்கக்கூடிய வீடு—இறைவன் திருவடி—உயிர்க்குக் கிடைக்கவில்லையா? என்று திரு வள்ளுவர் இரங்குகின்றார்.

**"புக்கில் அமைந்தின்று கொல்லோ? உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு"**

என்பது குறள். இறைவன் திருவடியாகிய இன்பம் ஒன்றே உயிர்க்கு நிலையான இன்பம்; வாழ்வற வாழ்விக்கும் இன்பம்; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பும் இதுவேயாம் என்பதே திருக்குறள் முடிபு.

# வள்ளுவர் உலகம் VI

## ஊழ்

வாழ்க்கைப் பண்ணையில் உயிர்கள் பக்குவப்படுத்தப் பெறுகின்றன. திருவள்ளுவர் உலகத்தின் முதலாகவும், பயனாகவும் சாட்சியாகவும் இருப்பவைகளைப் பாயிரத்தில் ஓதுகிறார். பின் மனிதன் மனையிலும், மனையின் நீங்கிய துறவிலும் செய்யும் கடமைகளை விரித்து ஓதிய திருவள்ளுவர்—அச்செயல்களின் பயனாகிய ஊழை ஓரியலாக ஓதுகிறார். ஊழைத் தொடர்ந்து பொருட்பால் வருகிறது. அறத்துப் பாலில் பயின்ற வினைகளே ஊழாக விளைந்து பொருட்பாலில் பயன் தருகிறது. பொருட்பாலில் திருவள்ளுவர் பேசுவதெல்லாம் ஊழின் பயனாக விளையும் உலகத்தையும், அவற்றை வெற்றி கொள்ளும் வழியையும்—வழிவகைகளையுமே பேசுகிறார், அறத்துப்பாலில், ஊழுக்குக் காரணமாக அமையும் ஒழுக்கங்களைப் பேசுகிறார். உயிர், பொறி புலன்களால் செய்யும் செயல்; செயல்களின் விளைவாகிய ஊழ்; அவரவர் செயலின் பயனை—ஊழை அனுபவிக்க வேண்டுமென்ற நியதி; எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் இறைவன். இந்த நான்கினையும் ஆராய்தலே தெளிவு.

ஊழ் வினையின் விளைவு. விளைந்து ஊட்டுதல் என்பது பொருள். "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்பது சிலம்பு. பருவுடலுக்குக் கூழ் உணவு; நுண்ணுடலுடன் கூடிய உயிர்க்கு ஊழ் உணவு; உணவை தகுதி பார்த்து மருந்துபோல உண்ணின் உடலுக்குத் துன்பமில்லை முறைகேடான உணவுகளை முறை தவறித் தேவையை மீறி உண்ணின் நீங்காத் துன்பம். எந்த உணவு இன்பத்தைத் தரவேண்டுமோ அதே உணவு துன்பத்தைத் தருகிறது. குற்றம் உணவின் மேலன்று; உடல்மீதும் அன்று. உணவின்மீது முறைதவறி வைக்கப்பெற்ற இச்சையே காரணமாகும். அதுபோல உயிர்க்குச் சிந்தனையும் செயலும் இன்பம் தரும் பணி. உய்தியினைத் தரும் உத்தமப் பணி. உயிருக்கு இயற்கை செயற்படுதலேயாம். அதனால் அன்றோ திருவள்ளுவரும் "மடிசெய்து" என்றார். வினை செய்தல் உயிர்களின் கடமை. வினை செய்தல் மூலமே உயிர்கள் அறிவும் தெளிவும் அழிவிலின்பமும் பெறுகின்றன. ஆயினும் இன்பத்திற்குரியனவாகிய வினைகளே துன்பங்களையும் விளைவித்தலைப் பார்க்கிறோம்; இன்பத்தையும் விளைவித்தலைப் பார்க்கிறோம். உயிர் இன்ப துன்பங்களால் சுழலும் சுழற்சியில் சிக்கி அலமருகிறது. உண்மையில் வினைசெயல் உயிருக்கு நல்லதா? கெடுதலா? வினை செய்தலைத் தவிர்க்க முடியுமா? அப்படி முடிந்தால் வினை செய்தலிலிருந்து விலகுவது நல்லதா? நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நம்முடைய படைப்புக்களா? அல்லது கடவுளின் படைப்புக்களா? அல்லது உயிருக்கும் இறைவனுக்கும் தொடர்பின்றி ஊழ்படைத்த படைப்புக்களா? இந்த வினாக்களுக்குத் தெளிந்த விடைகளைக் கண்டு கொள்ளாதவரை வாழ்க்கை மையலுறும்; கலங்கும்; நீடிய நல்லின்பங்

கள் விளையா. அன்பு கூர்ந்து தெளிவாகச் சிந்தனை செய்யுங்கள். திருக்குறள் உலகத்திலிருந்து சிந்தனை செய்யுங்கள். திருவள்ளுவர் வழியில் சிந்தனை செய்யுங்கள். வையத்தில் வாழ்வாங்கு வாழுங்கள். இறைவன் அடிநினைந்து இன்புறுங்கள்.

வினை செய்தல் உயிரின் இயற்கை: கடமை; வினை செய்தலே உயிர் உய்தற்குரிய வழி. "எது எமைப் பணி கொளு மாறது கேட்போம்" என்று மணிமொழி பேசுகிறது. அப்பரடிகள் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றார். ஆனால் எந்த வினையை, எந்த அடிப்படையில்—எந்த நோக்கத்தில் செய்வதென்பதே ஆய்வுக்குரியது. தலையில் தண்ணீர்ப்பானையைத் தூக்கிக்கொண்டு ஒருவன் நடக்கிறான். பானை தானே ஆடி வீழ்வதில்லை; பானை ஆடவும் முடியாது. உடல் ஆட்டத்தினாலேயே பானை ஆடும். ஆனால், பானை ஆடி வீழ்ந்தது என்றே சொல்வர். காரணம் தன் உடல் ஆட்டத்தை மறைக்க வேண்டுமென்பதே. தண்ணீர் தூக்குதலான செயல் அவசியமானது. தண்ணீர்ப் பானையும் ஆடி விழாது, உடல் ஆடாமல் நடைபயிலக் கற்றுக்கொண்டால் தண்ணீர் சுமத்தலாகிய செயல் இனிய முறையில் நிகழும். அதுபோல, வினை செய்தல் இயற்கை. ஆனால், வினை செய்யும்பொழுது உள்ளத்தில் விருப்பு - வெறுப்புக்களாலாய கோணல் மாணல்கள் இருக்கக்கூடாது. செயல்களே ஊழாக வடிவம் பெற்றுவிடுவதில்லை. செயலுக்குரிய நோக்கமும், செயலால் விளையும் பயனும் பயனைக் கருதிய முறைமையும் ஊழின் தோற்றத்திற்குக் காரணங்களாகும். இறைவனைப் பூசித்தல் நற்செயலே. பூசை செய்தலாகிய செயலின் மூலம் நாம் இன்பமும் பெறலாம், துன்பமும் பெறலாம். இவ்விரண்டினும் உயர்ந்த அழிவிலின்

பத்தையும்—அதாவது பேரின்பத்தையும் பெறலாம். இறைவனை செல்வங்களை வேண்டிப் பூசை செய்யின் செல்வ விருப்பம் நல்லூழாக—ஆகூழாகத் தோன்றிச் செல்வத்தைத் தரும். வாழ்க்கையின் விருப்பம் ஓர் அத்தியாயமாக நின்றுவிடுவதில்லை. வாழக்கையின் விருப்பம் பல அத்தியாயங்களாகத் தொடரும்; ஏறும்; விகார உணர்ச்சிகளால், பற்று—பாசங்களால் ஆகூழ், போகூழாக மாறிவிடுவதுண்டு. ஆகூழின் பயனுகிய செல்வத்தை அடைந்து அனுபவிக்கும்பொழுது, பற்று விடா உணர்ச்சியும், எனது என்ற இறுமாப்பு உணர்ச்சியும் இருத்தல் கூடாது. மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக்கூடிய சக்திகளை வேண்டியும் பூசை செய்யலாம். இங்ஙனம் வேண்டிப் பெற்றவர்களே அசுரர்கள். தவத்தினுல் சுரர் என்றும், தன்மையினுல் அசுரர் என்றும் உணர்த்தவே அசுரர் என்முர். இத்தகைய பூசையால் விளைவது தீயூழ். எதுவும் கருதாமல், இறைவனையே கருதிப் பூசித்தல் வினைச்சார்பற்றது; இன்பம் தருவது.

உயிர்கள் வினை செய்தல் இயற்கை. வினை செய்தலே உய்தற்குரிய வழியாதலால், வினை செய்தலைத் தவிர்க்க முடியாது; தவிர்க்கவும் கூடாது. இறைவன் நன்றுடையான்; தீயதில்லான்; அவனுடைய படைப்புக்கள் இன்பம் விளைவிப்பனவாம். ஆதலால், நம்முடைய துன்பங்கலந்த இன்பங்களும்—துன்பங்களும் நம்முடைய படைப்புக்களே தவிர, இறைவனுடைய படைப்புக்களல்ல. நம்முடைய தலைவிதியை நாமே எழுதிக் கொள்கிறேம். கடவுள் நியதி என்ற முறையமைப்பில் அவரவர்தம் செய்த வினைகளுக்கேற்ப வினைப்பயனை அனுபவிக்க வழி நடத்துகிறுர். அதுவும் நம் மீதுள்ள கருணையினுலேயாம். பொருந்தா உணவை உண்ட

வர்கள், உண்டமையின் காரணமாகவிளையும் துன்பத்தினை நீக்கிக் கொள்ள முயன்று வெளியெடுக்கும் வாந்தியைப்போல், அவரவர் செய்த வினைகளின் பயன்களை அவரவர்களே முயன்று அவரவர்களே அனுபவிக்க வேண்டுமென்பதே இயற்கையின் நியதி. இங்ஙனம், விருப்பு-வெறுப்புக்களுடன் செய்யும் வினைகள் அனுபவத்துக்கு வராமல் போகாது. அங்ஙனம், அனுபவத்துக்கு வரும்பொழுது, "ஊழ்" என்று பெயர்பெறுகிறது.

ஆர்வம் நிறைந்த முயற்சி, தளராத நெஞ்சம், நிலை கலங்காத உள்ளம் ஆகியவைகள் ஆக்கும் ஊழாகிய ஆகூழின் அடையாளம். மாறாக, சோம்பிய உள்ளம், நெஞ்சில் நிதமும் கவலை, ஏங்கி இளைத்தல் ஆகியவை போகூழின் அடையாளம் என்று திருவள்ளுவர் அடையாளம் காட்டுகிறார்.

**"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி"**

என்பது குறள்.

அறிந்திருந்தும், அறிவு வேலை செய்யாது. உணர்விருந்தும் உணர்வு கைகொடுக்காது. பேதைமைத் துறையில் அழைத்துச் செல்லும். இந்தச் சூழல், இழப்பு ஊழ் மேலோங்கி இருப்பதைக் காட்டுவது. அதுபோலவே, ஆகும் ஊழ் மேலோங்கியிருக்கும் காலத்தில் அறிவு பெருகும்; ஆள்வினை தோன்றும். இதனை,

**"பேதை படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்**
**ஆகலூழ் உற்றக் கடை"**

என்று கூறி விளக்குகிறது.

நுண்ணிய நூல்கள் பல கற்றாலும், கற்ற அளவுக்கு அறிவு மிகுந்து, காணாமல், ஊழின்பாற்பட்ட குறை நலம் உடைய அறிவே மேம்பட்டு நிற்கும் என்று திருக்குறள் கூறுகிறது.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்"

என்பது குறள். நூல் பல கற்றல் அறிவு பெறுதற்குரிய வழி; ஆயினும் கற்றதைச் சிந்தித்தலும், சிந்தனையில் தெளிவு பெறுதலும், துணிதலும் இயற்கையான ஊழொடு தொடர்பை உண்மை அறிவினாலேயே முடியும் என்பது திருக்குறள் முடிபு. ஆயினும் தன்னூழின் தரமறிந்து ஊழின் ஆற்றலை அடக்கக் கருதி அதனினும் விஞ்சியதாகக் கற்றலும் கேட்டலுமுடையவர் சிறந்து விளங்குவர் என்பது குறள் கூறும் கருத்து. இந்த உலகம், இருவேறு பெரும்பிரிவுகளாக இயங்குகிறது. ஒன்று பெருஞ் செல்வமுடையதாக விளங்கும் பிரிவு. பிறிதொன்று தெரிந்து தெளிந்த அறிவுடையவராக விளங்கும் பிரிவு. இந்த இருபிரிவுகளும் தம்முள் மாறுபட்டே இருக்கின்றன. இஃது இயற்கையும்கூட. எங்ஙனம் இயற்கையாகும்? அறிவை விரும்புபவர்கள் அறிவுத் துறையியிலேயே முயன்று முயன்று, ஈடுபாட்டுடன் உழைக்கின்றனர். அவர்கள் கையில் ஏதாவது கொஞ்சம் செல்வம் கிடைத்தால்கூட, அந்தச் செல்வத்தையும் அறிவுக்காகவே செலவழித்துவிடுவர். இவர்கள் செல்வத்தைப் பேணார்கள். அறிவையே பேணுவார்கள். இஃது ஒருவகை. செல்வத்தைப் பேணும் எண்ணமுடையவர்கள், செல்வத்தையே பேணுவார்கள். சிந்தனை, செயல், தயை அனைத்தையும் செல்வத்தின் காலடியில் வீழ்த்தி விடுவர். இவர்களிடத்தில் செல்வமிருக்குமே தவிர அறிவு இருக்காது.

இதனை,

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று கூறுகிறார். இந்த வேறுபாடு நீடிப்பதற்குக் காரணம் ஒவ்வொருவருக்கும் அவரவர் நினைப்பின்படி செயல்கள் தோன்றி, ஒவ்வொருவரிடத்தும் வளர்ந்து ஊழாக மாறுவதேயாம்.

மனிதனின் செயற்பாட்டுக்கு அடிப்படை அவனது சென்றகாலச் செயல்களின் விளைவாகிய ஊழேயாம். இழவூழ் வளர்ந்தமையின் காரணமாகத் தீமையைத் தீமையென்றுணரச் செய்யாமல் பேதைமைப்படுத்தும். இதன் காரணமாக நல்லவைகளாக இருப்பவைகளும் கூடத் தீமையாக மாறும். நல்லூழ் இருக்குமாயின் தீமையும் நன்மையாக மாறும்.

**''நல்லவை யெல்லாந் தீயவாந் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு''**

என்பது குறள்.

ஊழ், உயிரை ஒட்டியிருக்கின்ற தத்துவம். உயிர் கடந்த காலச் செயல் முறைகளுக்கு ஏற்ப பயன்பெற்று அனுபவிக்கும் இந்த முறையும் மரபும் வழிவழிப்பட்டதாகும். ஊழின்பாற்பட்டதல்லாத ஒன்று நாம் உரிமை கொண்டாடினலும், நம்மிடம் தங்கிப் பயன் தராது. இதனை,

**''பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்**
**சொரியினும் போகா தம''**

என்று கூறி விளக்குகிறது.

அடுக்கிய கோடி செல்வம் பெற்றிருப்பினும் இன்புற்று வாழத் தெரியாதவர்களும் நிறையப் பேருண்டு. ஏன் இந்தக் குறை? என்று திருக்குறள் ஆராய்கிறது. முடிவாக,

**''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''**

என்று கூறுகிறது. இங்கு வகுத்தான் என்று குறிப்பிடுவது கடவுளையன்று. கடவுள் பொதுவான இயல்புடையவர். ஆதலால், அவர் யாரொருவருக்கும் வலியச் சென்று தீமை செய்யார். எந்தவொரு உயிருக்கும் தீமை நிகழ்வதற்கும் உடன்படமாட்டார். ஒவ்வோர் உயிரும் சிந்தனையால், செயலால் செய்த செயல்களே பயன் தரும் வகையில், ஊழ் எனப் பெயர் பெற்று வருவது. இந்த ஊழினை உயிர்கள் அனுபவித்துக் கழித்துத் தாமே ஏற்றிக்கொண்ட சுமையினை இறக்கிக் கொள்வதற்கு, இறைவன் துணையாக இருக்கின்றான் என்பதே உண்மை. இஃதன்றி நம்முடைய இன்ப துன்பங்களுக்குக் கடவுளோ ஊழோ காரணம் என்று காட்டுவது நெறியுமன்று; முறையுமன்று. ஆதலால், வகுத்தான் என்பது நேரடியாக ஊழைக் குறிப்பிட்டாலும் அந்த ஊழினை உருவாக்கிக்கொண்ட மனிதனையே சாரும். இந்தக் குறளின் பொருளாவது: கோடானுகோடிப் பொருள்களைச் சேர்த்தாலும், ஊழின் வழியல்லது துய்த்து மகிழ முடியாது என்பதேயாகும். இந்தப் பிறப்பின் தொடக்க காலத்திலோ அல்லது முன்பிறப்பிலோ ஒருவன் தான் துய்த்து அனுபவித்து மகிழாமல், வயிற்றையும், வாயையும் கட்டி, செல்வத்தை விரும்பிச் சேர்த்திருப்பானாகில் அவனுடைய ஊழ் சேர்க்கும் ஊழாக உருவாகுமே தவிர, துய்த்து அனுபவிக்கும் ஊழாக வடிவம் கொள்ளாது என்பதே ஆகும். சிந்தனை செல்லுழிச் செயல் நிகழும். ஊழ் உருவாவதற்கு அடிப்படை சிந்தனையும் நோக்கங்களுமேயாம். செயல்கள் மட்டும் ஆகா.

நல்லூழும் ஆகூழ் இன்மையின் காரணமாக நஞ்சினும் கொடிய வறுமையினை அடைந்து துய்ப்பன—மகிழ்வன ஆகியவற்றை இழிந்தவர்கள், ஊழினை

மாற்றி அமைத்துக் கொள்ளத் தன் முயற்சி மேற்கொள்ளாது, தவத்தினை நாடித் துறவியாவர். அப்பொழுது ஊழ் வந்து ஊட்டாமலே கழியும். இம்முயற்சி ஒரோவழி நன்மையாளுலும் ஆகலாம். ஆளுலும், ஊழினை மாற்றிக் கொள்ளும் முயற்சியே சிறப்புடையது.

மக்களில் பலர் இன்பம் என்ருல் மகிழ்கின்றனர். துன்பம் என்ருல், நடுங்குகின்றனர். புகழ் என்ருல், விரும்பி ஏற்கின்றனர். இகழ்ச்சியென்ருல் மறுக்கின்றனர். இஃது ஏன்? ஊழ் முற்றுப்புள்ளி பெருது, சங்கிலித் தொடர் போல் தொடர்வதற்குக் காரணம், இன்பங் கண்டபொழுது மகிழ்தலும், துன்பங் கண்டபொழுது துவளுதலும ஆகிய செயல்களிளுலேயாம். நோய்க்கு உண்ணும் மருந்து சுவையால் இனிப்பாக இருந்தாலும் மருந்தேயாம். சுவை கருதி மருந்தை அதிகமாக உண்ணமாட்டார்கள். மருந்து கசந்தாலும் நோய் நீக்கம் கருதி, உண்ணுமலிருக்கமாட்டார்கள். அதுபோல, இன்ப துன்பங்களை தன்னுடைய செயல்களின் விளைவாகிய ஊழின் பயனே என்று கருதி, நொந்து நோகாமல், மகிழ்ந்து நெகிழாமல் மீண்டும் ஊழுக்கு உயிர் கொடுக்காமல் இரண்டையும் ஒப்பக் கருதி அனுபவிப்பதே ஊழினைக் கடக்கக் கூடிய ஒப்பற்ற வழி. இதனை,

> **"நன்ருங்கால் நல்லவாக் காண்பவர் அன்ருங்கால்**
> **அல்லற் படுவ தெவன்"**

என்று கூறுகிறது.

முடிவாகத் திருவள்ளுவர், "ஊழிற் பெருவலி யாவுள" என்றே கேட்கின்ருர். ஊழிளுல் தமக்கு வந்துள்ள கேட்டினை மாற்றிக் கொள்ளப் பலருடனும்

கூடிக்கலந்து பேசி, பல்லாற்ருன் முயற்சி செய்தாலும் ஊழின் பயனை அனுபவிக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. இதனை,

> "ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்"

என்ருர். அப்படியானுல் ஊழினை வெற்றி பெற முடியாதா? என்ற வினு எழும். ஊழினை வெற்றி பெற முடியும். வாழ்க்கையின் நோக்கமே ஊழினை வெற்றி பெறுவதுதானே! ஊழினை வெற்றி பெறுவதற்காகச் சூழ்ந்து செய்யும் வினைகள் மீண்டும் மீண்டும் ஊழாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அது எப்படி? ஊழினை அடக்குவேன்; ஒடுக்குவேன்; துன்பத்தை வெற்றி பெற்று இன்பங் கொள்வேன் என்று கருதி முயற்சித்தால், ஊழ் மீண்டும் வலிமை பெற்றுத் தொடர்கிறது. அங்ஙனம் அல்லாமல் "இது என்னுடைய கடமை; செய்கிறேன்; இதனுல் ஆம் பயன்கள் பற்றிக் கவலையில்லை; பயன்கள் வந்தாலும் அவை எனக்குச் சொந்தமல்ல" என்று செய்தால், ஊழ் கழிகின்ற அளவில் நின்று கொள்கிறது; தொடர்வதில்லை. சிந்தனைப் போக்குகளாலும், மற்றும் நம்மைச் சூழ்ந்திருக்கும் சூழல்களாலும் முன்னமே அமைந்துள்ள ஊழின் வலியினை அறிந்துகொண்டு, அதனை மாற்றக் கூடிய அளவுக்குக் கடமைகளின் பரிணுமம் அமைய வேண்டும். நெருப்பைத் தண்ணீர் அணைக்கும். உண்மையே! ஆனுலும், நெருப்பினுடைய அளவும் ஊற்றப்பெறும் தண்ணீரின் அளவும் இயைபாக இருக்கவேண்டும். எரிகின்ற நெருப்பை ஒரு சொட்டுத் தண்ணீர் அணைக்க முடியுமா என்ன? தண்ணீர் அளவு கூடவேண்டும். அது போலவே, முன்னைய ஊழின் வலிமையைக் கடப்பதற்கு ஏற்றவாறு முயற்சி அமைய

வேண்டும். கருங்கல்லை உடைக்க கையின் வலிமை போதாதபொழுது, கடப்பாறையின் வலிமையையும் துணையாகச் சேர்த்துக் கொள்ளுகிறோம். அதுபோல ஊழின் வலிமையை மாற்ற நம்முடைய முயற்சி மட்டும் போதாது. நம்மினும் வலிமையுடைய—மறந்தும் தவறு செய்யாத திருவருட்சார்பைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதே ஊழினை வெற்றி பெற முடியும். ஊழினை வெற்றி கொள்வதென்றால், ஊழின் வழியதாக வரும் இன்ப துன்பத்தால் தாக்கப்பெறாமல்—அலைக்கழிக்கப் பெறாமல் அனுபவிப்பது என்பதேயாகும்.

யாரொருவருக்கும் அவரவர் உண்ட உணவை அவரவரே செரிக்கச் செய்துகொள்ள வேண்டும்! இதுவே நியதி. அதுபோலவே, யாரொருவரும் தாம்தாம் சிந்தனையால், உணர்வால், செயல்களால் செய்த செயல்களின் பயன்களை அனுபவிக்க வேண்டும். இங்ஙனம் அனுபவிக்க வேண்டுமென்ற நியதிதான் ஊழ் ஆகும். ஊழ் மனிதர்களாலேயே தோற்றுவிக்கப் பெற்றது. மனிதன் சிந்தனையால், உணர்வால், செயலால் உயர்ந்து தன்னலப் பற்றின்றிக் கடமைகளைச் செய்யும்பொழுது ஊழ் கழிகிறது. உறுதியும் பயனும் விளைகிறது. அழிவில் இன்பம் தோன்றுகிறது. இதுவே திருக்குறள் உலகத்தின் கருத்து.

# இறைமாட்சி

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் வாழ்ந்தபோது நாட்டில் பேரரசும், சிற்றரசுமாகப் பல அரசுகள் நிலவின. அவற்றுள் நல்லரசும், வல்லரசும் பொல்லா அரசுகளும் இருந்தன. அவற்றையெல்லாம் நுணுகிக் கண்டவர் திருவள்ளுவர். அவற்றின் வளர்ச்சியும், தேய்வும், உயர்ச்சியும், வீழ்ச்சியும் நோக்கினார். அவற்றிற்குரிய காரண காரியங்களை ஆராய்ந்தார். நன்மை தீமைகளைத் தெளிந்தார். உலகில் அரசுகள் யாவும் நிலைபெறத் தக்க உண்மைகளை எண்ணித் தமது திருக்குறளில் உரைக்கின்றார். முதலில் அரசுக்குத் தலைவனான மன்னனைப் பொறுத்த அளவில் அவனிடம் இருக்கவேண்டிய பண்புகளையும், செயல் வகைகளையும் முறையாக உரைக்கின்றார்.

முடிசூடி நாடாளும் தலைவனைத் தமிழ் முன்னோர் அரசன், மன்னன், வேந்தன் என்று குறிப்பது வழக்கம். திருவள்ளுவரும் அரசருள் ஏறு, பண்புடை மன்னன், வேந்தர்க்கு இயல்பு என்றுதான் குறிக்கின்றார். ஆனால் மன்னவர் மாட்சி கூறும் இவ்வதிகாரத்துக்கு இறை மாட்சி என்று பெயர் குறிக்கின்றார். என்ன காரணம்? முறை செய்வதும் நாடு, காவல் புரிவதும் மன்னவன் பணியாகும். அவற்றைச் சிறப்புறச் செய்தால் அவன் மக்கட்கு இறையாகின்றான். இதனை,

> ''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்''

என்று திருவள்ளுவர் கூறுகிறார். வீட்டுக்குத் தலைவன் வாழ்வாங்கு வாழ்வானாயின், அவன் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்றாரல்லவா? அதுபோலவே நாட்டுக்குத் தலைவன் முறையும் காவலும் செம்மையாய்ச்

செய்வானுயின், நாட்டு மக்கட்கு இறை என்று வைக்கப்படும் என்று கூறுகின்றார்.

முறை செய்தல், காப்பாற்றல் என்ற இரண்டினுள் முறை என்பது யாது? யார் மாட்டும் கண்ணேட்டம் இன்றி நடு நின்று உண்மையை ஓர்ந்து வேண்டுவதும் வேண்டா, தேர்ந்து செய்வதுதான் முறை என்று திருவள்ளுவரே பிறிதோர் இடத்தில் விளக்கி இருக்கிறார். நடு நின்று யார் மாட்டும் கண்ணேட்டம் இன்றி ஆராய்வதற்கு அறிவும், ஊக்கமும், அஞ்சாமையும் உண்மை காணும் பொருட்டு ஈகைப் பண்பும் வேந்தர்க்கு வேண்டப்படுகின்றன. அதுபற்றியே,

> **''அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
> **எஞ்சாமை வேந்தர்க் கியல்பு''**

என்று கூறுகின்றார்.

முறை செய்யும்போது, வேண்டுவதும் வேண்டாததும் தேர்ந்தபின், வேண்டுவதை செய்வதிலும், வேண்டாததை விலக்குவதிலும் கலக்கம் இல்லாமல் தெளிந்து செய்தற்குத் துணிவுடைமையும், செய்யுமிடத்துக் காலம் நீடிக்காமல் விரைந்து செய்யும் தன்மையும் இவைகளைக் குற்றமற நூல் முறை பிழையாமல் செய்தற்குக் கசடற்ற கல்வியும் வேண்டும். அதற்காகவே,

> **''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
> **நீங்கா நிலனுள் பவர்க்கு''**

என்று கூறுகின்றார்.

முறை செய்தற்குரிய இம்மாட்சிகள் அரசன்பால் நிறைந்திருந்தாலும் முறை வேண்டியும் குறை வேண்டியும் வருகின்ற மக்களை, இனிது வரவேற்கும் நற்பண்பு உடையனுக வேண்டும். வறியவரும் வேண்டும் போது வந்து காண்பதற்கு எளியனுகவும், அவர்கள்

தங்கள் முறைகளையும், குறைகளையும் ஒழுங்காகச் சொல்லும் திறமில்லாதவராயின், அவர்களைக் கடுஞ் சொல்லால் வெருட்டாமல், முக மலர்ந்து செவிசாய்த்துக் கேட்கும் செம்மையுடையனாக வேண்டும். இச் செவ்விய பண்பு இல்லையாயின் வேந்தனைப் பேய் என்று நாட்டவர் தூற்றுவர். அது நினைந்தே,

**''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்''**

என்று கூறுகின்றார்.

நிலம் மீக்கூறுதலால் நிலத்தவர் புகழ்தல் இவ்வாறு முறை செய்தற்குரிய மாட்சிகளையுரைத்த திருவள்ளுவர், நாடு காவற்கு வேண்டும் மாண்புகளை உரைக்கின்றார். நாட்டின் அரசியல் அமைப்பு, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என ஆறு கூறுபடுகிறது. நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டுவது படை; அதற்குரிய ஆள் தருவது குடி; படைக்கும் குடிக்கும் வன்மை தருவது கூழ், அதாவது பொருள்; இவற்றை முறையே இயக்குதற்கு ஏற்ற அறிவும் கருத்தும் நல்குவது அமைச்சு. இந்த நான்காலும் உண்டாவது தற்காப்பு; பிற நாடுகளின் துணையும் ஒரு காப்பாதலால் நட்பும், மலையும், காடும், ஆறும், கடலும் நாட்டுக்கு இயற்கைக் காப்பாகிய அரணும் நகரத்துக்குக் காப்பாகிய மதிலும், அகழியுமாகிய அரணும் என்ற இரண்டும் அடங்க அரணும் கண்டு,

**''படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு''**

என்று கூறுகின்றார்.

முதலாவதாகிய படையையும் குடிகளையும் ஆளுகின்ற வேந்தன்பால் அறம் பிறழாமையும் மறம் இழுக்காமையும், மனவுணர்வும் நன்கு அமைய

வேண்டும். அறமாவது மனை வாழ்க்கையில் புகழ் விளைவிக்கும் நற்செயல்; மறமாவது போர் முதலிய புற வாழ்க்கையில் புகழ் விளைவிக்கும் ஆண்மைச் செயல்; மானமாவது மனைவாழ்விலும் புற வாழ்விலும் குற்றமும் பழியும் தோன்றுமாயின் உயிர் வாழாமை. இந்த அறவுணர்வும், மறப்பண்பும், மானமும் தலைவன் பால் அமையின் அவன்வழி நின்று பணி புரியும் படையும், குடியும், பிறவும் அறம் பிழையாமல், தன்மையறியாது அல்லது தோன்றுமாயின், அதனைப் பற்றறக் களைந்து, மறப்புகழ் பெற்ற மாண்புறும். அது பற்றியே,

> "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
> மானம் உடைய தரசு"

என்று கூறுகின்றார்.

இங்கே வகுத்துரைத்த படையும் குடியும் நேராக ஆளப்படுவன. அமைச்சும் நட்பும் ஆட்சிக்குத் துணை. இவை இரண்டும் அரசுக்கு இன்றியமையாதவை. ஆயினும் பொருள் இல்லையாயின் இவை பயன்படா. இப்பொருளை விளைவிப்பவர் குடிகள். உழவாலும் தொழிலாலும்தான் பொருள் விளையும். இவை இரண்டுக்கும் அரசு பொருள் உதவியும், விளைவிப் போரை அன்புடை நன்மொழிகளால் ஊக்கியும், செங் கோன்மையால் அவர்களை நேர்மைவழியில் நிறுத்தியும் பகைவராலும் எதிர்பாராத இன்னல்களாலும் தளர்ந்த குடிகட்கு வேண்டுவன உதவியும் நல்வாழ்வு நிகழ் விக்கும் பண்பு மன்னவன்பால் மன்னுதல் வேண்டும். அதனைக் கருதியே திருவள்ளுவர்,

> "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானும் வேந்தர்க் கொளி"

என்று எடுத்துரைக்கின்றார்,

இத்தகைய நன்மாட்சி ஒரு வேந்தனிடம் அமையுமாயின் ஏனை அரசரெல்லாம் அவன்வழி நின்று தாமும் புகழ் பெறுவர் என்று விளக்கவே, கொடை முதலிய நான்கும் உடையான் வேந்தர்க்கு ஒளியாம் என்று கூறுகின்ருர்.

இத்தகைய கொடை, அளி முதலிய மாண்பினுல் நாட்டில் பொருள் விளைவு மிகுதிப்படும். பொருட் பெருக்கம் மேலும் அப்பொருளைப் பெருக்குதற்கே உள்ளத்தை ஊக்குமாதலால், அந்நெறியில் நின்று பொருள் பெருகும் வழிமுறைகளைக் கண்டு அறிந்து அமைப்பது முதற்கண் செய்யப்பட வேண்டுவதாம். பின்னர் விளைவனவற்றை ஒருங்கு திரட்டுவதும், திரட்டியதை வீண்போகாமல் காப்பதும், காத்தவற்றை அரசியல் துறை பலவற்றிற்கும் வகுத்தலும் அரசின் கடனுகும். ஆதலால்,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

என்று கூறுகின்ருர்,

ஈட்டற்குச் செல்லும் உள்ளம், இயற்றலை நாடாது ஒழிவதும், காத்ததை வகுத்தலில் பிழைபடுவதும் இயல்பு. அதனுல் அரசியலில் வல்லவர்க்கின்றி, இச் செயல், நலம் பரவாமல் ஒழிவது அறிந்து தக்கவாறே செய்யவல்லது எதுவோ, அதுவே நல்லரசு என்பாராய் திருவள்ளுவர் "வல்லது அரசு" என்று வற்புறுத்துகின்ருர்.

இனி, இறைமைக்குரிய செயல் வகைகளை ஆய்ந்துரைக்கும், அமைச்சர் முதலிய அரசியல் அறிஞர்களோடு அவைக்கண் இருந்து ஆராய்வது அரசியல் அறமாதலால் அந்நிலையில் அரசன்பால் சில அருங்

குணங்கள் அமைதல் வேண்டும். அரசியற் செயல் வகைகளில் குறையோ, குற்றமோ கண்டு எடுத்துரைக்கும்போது உரைப்பவர் உரைகளில் செவியும், நெஞ்சும் சுடத்தக்க வகையில் சொற்கள் வந்து விழும். சினம் உண்டாகக்கூடிய சிறு சொற்களும் பேசப்படும். அவற்ருல் அறிவு அறை போகாமல் பொறுத்து ஆற்றும் பண்பும் வேந்தனுக்கு மிகவும் வேண்டற்பாலதாம். இல்லையாயின், அறிஞர் நீங்குவர்; அரசு அல்லற்படும். ஆதலால்தான் திருவள்ளுவர்,

''செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு''

என்று கூறுகின்ருர்.

இறுதியாக நண்பரது நட்பு, நாடு காவற்குச் சிறந்த ஆக்கம்; அதனை உணர்கின்ற அரசன், அவர்களைத் தன்ளுேடு பிரியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அஃது எங்ஙனம் எனில், அவர்கட்கு வேண்டுவதை அறிந்து ஈதல் வேண்டும். சில சமயங்களில் அது ஈகையோடு நின்றுவிடுவதுண்டு; ஆதலால் ஈவதை, இன்சொல்லும், இன்முகமும் கொண்டு செய்ய வேண்டும்; அன்றியும் அவரது நிலை இரங்கத் தக்கதாயின், மிகைபடத் தந்து அன்பால் அணைத்து அளி செய்ய வேண்டும். இதனை,

''இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு''

என்று கூறுகின்ருர்.

இப் பண்பும், சூழ்ச்சியும் வன்மையுடையார்க்கே அமைவது என்று குறிக்கவே, வல்லார்க்கு என்று உரைக்கின்ருர்.

இதனுல் நாடாளும் வேந்தன் முறை செய்தும், காப்பாற்றியும் மக்கட்கு இறையாகின்ருன் என்றும்

அவன் செய்தற்கமைத்த மாண்புகள் இவை என்றும், நாடு காத்தற்கமைந்த உறுப்புக்கள் படை முதலிய ஆறும் என்றும், அவை ஒவ்வொன்றையும் ஆளுதற் கமைந்த பண்பும் செயலும் இவையென்றும் நாம் அறிகின்றோம்.

## கல்வி

கல்வியின் நோக்கம் திருவள்ளுவர் காலத்தில் அறிவு பெறுவதும், ஒழுக்கத்தைப் பெறுவதுமாக இருந்தது. இன்றைய கல்வி தொழில் நோக்கமும் வேலை தேடும் நோக்கமும் குறிக் கொண்டு நிற்கிறது. இதற்கு ஏற்ப கற்பிக்கும் முறையும் கற்பிக்கும் சாதனங்களும் மாறியிருக்கின்றன.

அரசியல் தொழில் இயக்கங்களும் கல்வி பயிலும் மாணவர்களிடையே புத்துணர்ச்சியை உண்டாக்கி அவர்கள் மனத்தைவேறு துறைகளில் மாற்றி உள்ளன. இந்நிலையில் கல்வி நெறியில் மிகப்பல கசடுகள் நிறைந்துள்ளன. அவற்றை அறவே நீக்குவது கல்வியாக இருக்க வேண்டும். கல்வி கற்கும் இளைஞர்கள், கற்கப் படும் நூல்களும், கற்பிக்கும் முறைகளும் காலந் தோறும் வேறுபடுகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டு கட்கு முன் தோன்றிய நூல்களும் 50 ஆண்டுகளுக்கு முன் தோன்றியனவும் இருக்கின்றன. இவை அவ்வக் காலச் சூழ்நிலைக்கும், சமுதாயத்தின் நோக்கத்துக்கும் ஏற்றவாறு அமைந்துள்ளன. காலச்சூழ்நிலை மாற்றத்தால் இக்காலத்தில் அக்கால வாழ்க்கை முறைகளை கடைப்பிடிக்க நினைப்பது முறையாகாது. இக்காலக் கண் கொண்டு அவற்றிற்குப் பொருள் செய்து நடைமுறையில் அமையச் செய்வது வேண்டப்படுகிறது.

இறைபுரிந்து முறை செய்யும் வேந்தனுக்கு மாட்சி தருவனவற்றுள் ஒன்ருகக் கல்வியைக் கூறினராதலால் திருவள்ளுவர் இறைமாட்சியை அடுத்துக் கல்வி கேள்விகளை மூன்று அதிகாரங்களாக வகுத்துரைக் கின்ருர்.

நாட்டின் நல்லரசுக்கு வேண்டிய படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறனுள் பொருளை நடுவண் வைத்து, ஏனை ஐந்திற்கும் அதன் இன்றியமையாமையை உய்த்துணர வைத்தார் திரு வள்ளுவர். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என் பதையும் வெளிப்படையாகப் பிறிதோரிடத்தில் விளம்பினர். அப்பொருள் ஒருவனுக்குப் பிறக்கும் போதே வருவதில்லை. அவனுல் இடையிலே தேடப் படுவது; அது போல இடையிலே தேடிப் பெறுவதாகிய கல்வியைப் பொருளோடு ஒப்ப நிறுத்தி இரண்டையும் சீர்தூக்குகின்ருர். செலவிட்ட இடத்துப் பொருள் குறையும். கல்வியோ பிறர்க்கு ஈயும்போது குறைபட லின்றிப் பெருகும். இந்த இயல்பைக் காண்கின்ருர் திருவள்ளுவர்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று எடுத்துரைக்கின்ருர். மாடு என்ருல் செல்வம்.

இங்ஙனம் கொடாமையும் பெருகும் சிறப்பும் உடைய கல்வி, மக்கட்கு இரு கண்கள் போல எண்ணும் எழுத்தும் என இயலுகின்றது. அது பற்றியே,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று கூறுகின்ருர். வலக்கண், இடக்கண் என இரண் டாயினும் கண்கள் ஒன்றையே நோக்குவது போல,

எண்ணும் எழுத்துமெனக் கல்வி இரண்டாயினும் நல்லறிவு என்ற ஒன்றையே நல்குகிறது என்பதற்காகவே, இவ்விரண்டும் கண்ணென்ப என்று குறிக்கின்றார்.

அவ்வறிவு எவ்வாறு கல்வியால் எய்துகிறது? கல்வி ஒரு மணற்கேணி அதாவது கிணறு போல். கேணி தோண்டத் தோண்ட நீர் சுரப்பது போலக் கல்வியும் கற்கக் கற்க அறிவு விளங்கிப் போகும்.

''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு''

என்று கூறுகிறார்.

ஒருவனிடத்தில் இருக்கும் பொருளைப் பெற வேண்டுமானால், அவனோடு அன்பாய்ப் பணிவாய், உரையாடிப் பெற வேண்டியிருக்கிறது. வீட்டில் இருப்பதை எடுத்துக் கொடுப்பதற்கே இத்தனை அன்பும், பணிவும் வேண்டும் என்றால், ஒருவன் உள்ளத்தில் இருக்கும் நுண்ணிய கருத்தைப் பெறுவதென்றால் புறநானூறு சொல்வதுபோல் உற்றுழியுதவியும், உறுபொருள் (மிக்க பொருள்) கொடுத்தும்—அதாவது அன்பு முகமும், பணிந்த நடையும் வணங்கிய சொல்லும் உடையனாய்க் கேட்டால்தான் ஆசிரியன் உள்ளம் உவந்து அந்த நுண்ணிய கருத்தை எடுத்து உரைப்பான்.

ஆனால் ஒன்று. பொன்னும் பொருளும் போல இக்கல்வி, ஒருவன் தானே கண்டு எடுத்துக் கொள்ளத் தக்கதன்று: கற்றவர் ஒருவரையடைந்து கற்றால் வருவது. வேறு எவ்வகையாலும் பெற முடியாதது. அங்ஙனமாயின் அதனை எங்ஙனம் கற்பது எனின், இல்லாதவன் செல்வமுடையாரை அடைந்து வணங்கி

நின்று விரும்பிய பொருளைப் பெறுகிறான். அது போல கல்வியுடையவன் முன் அன்பும் பணிவும் உடையவனாய் நின்றால், அவன் மனம் உவந்து கல்வியை வழங்குவான். இவ்வுண்மை விளங்கவே,

**''உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்''**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அன்பால் வணங்கிக் கற்பவன் உயர்வான்; அவ்வாறு வணங்கி வழிபடாதவன் கல்லாதவனாய்க் கீழ்மையடைவான். அதற்குத்தான் ஏக்கற்றுக் கல்லாதவர் கடையரே என்று குறித்துக் காட்டுகிறார். ஏக்கறுதல், வணங்குதல்.

இவற்றைக் கேட்டதும், இவ்வண்ணமே கற்பேன் என்று எழுகின்றவனைப் பார்க்கிறார் வள்ளுவர்.

**''கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக''**

என்று கூறுகிறார்.

கற்பவற்றைக் கற்பதென்றால் கசடறக் கற்க வேண்டும், கற்றல் என்னும்போது கற்பவன், கற்பிப்பவன், கற்கப்படும் நூல், அக்கல்வியால் பயன் அடையும் மக்கள் எனப் பல கூறுகள் உள்ளன. இவை எல்லாவற்றிலும் குற்றம் குறைகள் உண்டு. அவற்றைக் கசடு என்பர். இக்கசடு நீங்கி நிறைவும் தெளிவும் உண்டாகுமாறு கற்க வேண்டும் என்பதற்காகவே, கற்க கசடு அறக் கற்பவை என்று கூறுகிறார்.

இங்ஙனம் கல்வியைக் கற்றவரேயன்றி கல்லாதவரும் இவ்வுலகில் வாழத்தானே செய்கிறார்கள். வாழும் உயிர்க்குக் கல்வி இன்றியமையா என்பது ஏன் எனில், மக்களும் உயிர் வாழ்கின்றனர்; விலங்குகளும்

உயிர் வாழ்கின்றன. அது போலக் கற்றவர்களும் கல்லாதவர்களும் வாழ்க்கை நடத்துகிறார்கள். என்றாலும் விலங்குகளோடு ஒப்பாக மக்களை எண்ணுவதில்லை. ஏனெனில் விலங்கினிடத்து மனவுணர்வு அதாவது பகுத்துணர்வு இல்லை. அது போலக் கற்றவனிடத்து விளங்கும் தெளிவுணர்வு கல்லாதவனிடத்து இல்லை; அதனால் கற்றவனோடும் கல்லாதவன் ஒப்பாக முடியாது. அதனால்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என்று கூறுகிறார்.

கற்றவர்க்கு இத் தெளிவும் விளக்கமும் எவ்வாறு உண்டாகின்றன? எனின், அவர்கள் கற்பவை, உயிரறிவைத் தெளிவித்து விளங்கச் செய்வன என்று விடை கூறுவாராய் இலங்குநூல் கற்றார் என்று உரைக்கின்றார்.

கல்லாதவரும் ஒட்பம் உடையவராக, அதாவது தெளிவு பெற்றவர்களாக இருக்கிறார்களே என்றால், அவர் தெளிவு மிகவும் நன்றாக இருப்பினும் நிலையாக நில்லாது; அவர்களால் அறிவாராய்ச்சி நெறியில் நிலை நாட்ட முடியாது. அது கருதியே,

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். நீங்கள் இவ்வாறு சொல்லுகிறீர்கள்; உலகில் கல்லாதவர் சிலர் தகைசான்ற சொல்லும் சிறப்பும் உடையவர்களாக உள்ளனரே எனின் கற்றவன் ஒருவன், சென்று கண்டு, அறிவு நெறியில் சொல்லாடுவானாயின், எனின், கல்லாதவன் கொண்டு உள்ள, தகைமை எல்லாம் தவிடுபொடியாய் விடும். அதனால்தான்,

**''கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்''**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நம்முடைய கண், காது, மூக்கு, வாய், உடம்பு ஆகிய ஐந்தும் அறிவு பெறுதற்குக் கருவிகளாகும். ஆயினும், இவற்றுள் கண்ணும் செவியும் சிறப்புடையவை. தொல்காப்பியரும்,

**''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர் வுடை மாந்தர்''**

என்று கூறுகிறார்.

கண்ணால் உலகியற் பொருள்களைக் கண்டு அவற்றின் பண்பும் செயலும் உரைக்கும் நூல்களைப் படித்தும் அறிவு பெறுவது கல்வி. நம்மாற் காணமாட்டாத பொருள்களையும் நூல்களால் காட்டப்படாத நுட்பங்களையும், அறிந்தோர் சொல்லக் கேட்பது கேள்வி. கற்பவை கற்கும்போது காணப்படும் கசடுகள் கேள்வியால்தான் எளிதில் நீங்கும். அதனால்தான் கல்வியாகிய செல்வத்திலும் கேள்விச் செல்வம் சிறப்பு உடையது என்பாராய்,

**''செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாந் தலை''**

என்கிறார் திருவள்ளுவர்.

கல்வியிலும் கேள்வி சிறந்ததாயின், கல்லாதவர் இதனைப் பெறலாமோ? எனின், கல்விக்குத்தான் கேள்வி துணை; என்றாலும் கல்வியில்லாதவனும் கேள்வியறிவு பெறலாம்; அவனுக்குச் சமயத்தில் அவ்வறிவு துணை செய்யும் என்பாராய,

**''கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை''**

என்று உரைக்கின்றார். ஊன்றுகோல் துணை செய்யும் என்பதற்கு, உற்றும் துணை என்கின்றார்.

கல்வியைத்தான் சாகும் வரை கற்க வேண்டும் என்கிறீர்கள்; கேள்வி எவ்வளவில் கேட்பது என்று கேட்கலாம். அதற்குத் திருவள்ளுவர் எவ்வளவு நல்லது கேட்கிறோமோ அவ்வளவும் நமக்கு அது பெருமையே தரும் என்று சொல்கிறார்.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

என்பது அவரது திருக்குறள்.

கற்றறிவுடையவர் கேள்வியறிவும் உடையவர் என்பதை எங்ஙனம் அறிவது எனின், அதனை அவருடைய சொல்லால் அறியலாம். எப்படி எனில் கல்வியும் கேள்வியும் உடையவர், ஒன்றைத் தவறாக உணர்ந்து கொண்டாலும் சொல்லும்போது பேதைமைப்படச் சொல்ல மாட்டார்கள். இதனை,

"பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்"

என்று இசைக்கின்றார்.

ஒருவன் கல்வி பெறாமல் கேள்வி மாத்திரம் உடையனாயின் அவனை எப்படி அறிவது எனில், அதனையும் அவன் வாயினால் அறியலாம் என்கிறார். நுணுக்கமான பொருள்களைக் கேட்டிருப்பானாயின், அவன் வாயில் வணக்கமும் தெளிவும் உடைய சொற்களே வரும் என்பாராய்,

"நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது"

என்று கூறுகிறார்.

கல்வியுமில்லை; கேள்வியும் இல்லை; இப்படி ஒருவன் இருந்தால் என்ன செய்வது என்று ஒரு கேள்வி எழு

கிறது. திருவள்ளுவர்க்கு ஓரளவு ஆத்திரம் வருகிறது. அவன் இருப்பதாலும் மக்கட்கு ஒருவகை நன்மையும் இல்லை; இல்லாமல் இறப்பதாலும் ஒருவகை நட்டமும் இல்லை என்கிறார்.

**''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்''**

என்று வருந்துகிறார்.

இதனை அறிந்தே இக்கால அரசுகள் நாட்டில் கல்லாதவரே இல்லாமற் செய்வதே நோக்கமாகக் கொண்டு பெரும் பொருளைச் செலவிடுகின்றன. ''ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே'' என்ற திருமந்திரம் நன்கு உருவாகி வருகிறது.

உயர்ந்த பண்பாடுகள் இளைஞரிடத்தே உருக் கொண்டு வருகின்றன.

## அறிவுடைமை

கல்வி கேள்விகளால் மனிதனுடைய அறிவு கூர்மையும், விளக்கமும் பெறுகிறது. அந்த அறிவு நம்மிடத்தில் எங்கே இருக்கிறது? அந்த அறிவு மனித உயிரில் உணர்வு வடிவாய் உளது; ஆயினும் அதனிடத்தே இருளொன்று தங்கி வருவதை முன்கூட்டி அறியாமல் மறைப்பதும் கண்டறிந்ததை நினைவில் நில்லாமல் மறப்பதும் செய்கிறது. அந்த மறைப்பையும் மறதியையும் நீக்கி, அறிவை ஒளிவிட்டு விளங்கச் செய்வது தான் கல்வி கேள்வியின் பயன். அதனால் கல்வி கேள்வியால் உண்டாகும் அறிவு செயற்கை என்றும், தாமே கற்பதும் கேட்பதும் செய்யும் அறிவை இயற்கை அறிவு என்றும் கூறுவர். இவ்விரண்டும் ஒன்று சேர்ந்தது தான்

உண்மையறிவு. அந்த அறிவை உடையவரையே அறிஞர் என்றும் அறிவுடையவர் என்றும் கூறுவர்.

அவர்களை எவ்வாறு அறியலாம் எனின் அதற்கு இரண்டு வழி கூறுகிறார். தமக்கு ஆனது இது, ஆகாதது இது என்று முன்கூட்டி அறிந்து தம்மைக் காத்துக் கொள்கிறவர் அறிவுடையார்; அறியமாட்டாமல் இடர்படுகிறவர் அறிவில்லாதவர் என்று அறியலாம்.

**"அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃது அறிவில்லா தவர்"**

என்பது அவரது திருக்குறள்.

அடுத்தது அவர்கள் அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவார்கள். அறிவில்லாதவர் அஞ்சமாட்டார்கள். இதனை,

**"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**

என்று கூறுகிறார்.

இப்படி வருவதை அறிவதற்கும் அஞ்சத் தருவதை அஞ்சுவதற்கும் காரணம். அறிவு என்றால், அதன் இயல்பு யாது என்று அறிந்துகொள்ள வேண்டாமா? அதைத் திருவள்ளுவர் நமக்கு வடித்துக் கூறுவதைக் கேளுங்கள்.

நாம் பார்க்குமிடந்தோறும் நல்லதும், தீயதும், இன்பமும், துன்பமும் நிறைந்துள்ளன; நம்முடைய மனமோ கண்டவிடத்தெல்லாம் கண்ட பொருளெல்லாம் நாடும் இயல்புடையது. அதனைத் தன் போக்கில் விட்டால் இன்பத்தை விடத் துன்பம்தான் மிகுதியாய்க் கிடைக்கும். ஆகையால், கண்டபடி ஓடாமல், தீயதை விலக்கி நல்லதையே நாடும்படி மனத்தை அடக்கியாள்வது அறிவு.

"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்று கூறுகிறார். அறிவுக்கு இந்த ஆற்றல் இருப்பதால்தான் உலகில் உயர்ந்த பண்புடைய நன்மக்கள் தோன்ற இடம் இருக்கிறது. அதனால்தான் இராமலிங்க வள்ளலார் "மனம் எனும் ஓர் பேய்க் குரங்கு மடப்பயலே" என்று கடிந்துரைக்கின்றார்.

அன்றியும் நம்மைச் சூழ்ந்துள்ள மக்களில் நமக்கு நண்பரும் உண்டு, பகைவரும் உண்டு, தீயவரும் உண்டு. இவ்வாறன்றிப் பொதுவானவரும் உண்டு. இவர்களோடு பேசும்போது, நல்லதும் சொல்லுவார்கள், தீயதும் சொல்லுவார்கள். அறிவுடையவரோ சொல்வார் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், யார் எதைச் சொன்னாலும் கேட்டு அவர் சொல்லின் மெய்ம்மையைத்தான் காண்பார்கள். ஏனெனில், எப்பொழுதும் எப்பொருளிலும் உள்ள மெய்ம்மையைக் காண்பதுதான் அறிவுக்கு இயல்பு. அதனால்தான்,

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இத்தகைய அறிவுடையவர் சொல்லாடுவதே ஒரு தனி முறையாகும். தான் சொல்லும் பொருள் எவ்வளவு அருமை வாய்ந்ததாக இருந்தாலும், கேட்பவர் எளிதாக அறிந்து கொள்ளத்தக்க சொற்களினால் உரைப்பார்கள். அதே சமயத்தில் மற்றவர் சொல்லக் கேட்கும் போது, அவர்களுடைய சொல்லைப் பார்க்காமல், சொல்லப்படும் பொருள் நலத்தையே நுணுகிக் காண்பார்கள். நுணுகிச் சொல்வதுதானே இயல்பு. அதுபற்றியே,

**"எண்பொருள் வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு"**

என்று திருவள்ளுவர் சொல்லுகிருர்.

அறிவுக்கு நுட்பமும், வளர்ச்சியும் விளக்கமும் தருவது உலகம். அது பற்றியே உயிர்க்கு உலகத்தின் தொடர்பு உண்டாகியிருக்கிறது. ஆதலால் உலகம் எவ்வாறு இயங்குகிறதோ அவ்வாறு இயங்கித்தான் அறிவு வளர்ச்சியும் விளக்கமும் பெறுகிறது. அதை கருத்திற்கொண்டே,

**"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு"**

என்று திருக்குறள் கூறுகிறது.

உலகமோ இன்பத்தில் மகிழ்ந்து மலர்வதும், துன்பத்தில் வருந்திச் சுருங்குவதும் இயல்பாகவுடையது; அறிவுடையவரும், அறிவில்லாதவரும் கலந்தது; ஒரு தன்மையின்றிக் காலந்தோறும் மாறும் இயல்புடையது; ஆகவே இவ்வுலகத்தினின்றும் நீங்கித் தனித்து ஒழுகுவது நல்லது என்று நினைப்பவர் உண்டு. அது கூடாது. மாறுவது உலகின் தன்மையாயினும் அறிவுக்கு விளக்கம் தருவதில் மாறுதல் கிடையாது. அறிவும் மேன்மேலும் விளக்கம் பெறும் இயல்பினதே அன்றி விரிவதும் சுருங்குவதுமாகிய மாறும் தன்மை உடையதல்ல...ஆதலால் விளக்கம் தரும் உலகத்தை விடாது தழுவிச் செல்வதுதான் அறிவுடைமை. அதனுல்தான்,

**"உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு"**

என்று திருவள்ளுவர் கூறுகிருர்.

இவ்வாறு உலகத்தோடு கலந்து உறைவதாலும், தனைத் தழுவி நடப்பதாலும் உண்டாகும் அறிவு

விளக்கம் என்ன பயனைச் செய்யும் எனில், அறிவில் கலந்து நின்று மறைக்கும் இருள் நீங்கும்; நிகழ்ச்சிகளின் காரணகாரியம் விளங்கிவிடும். வரப்போவதை முன்கூட்டியறியும் திறம் உண்டாகும். அப்போது நம்மைக் காத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றுத் துன்பம் இன்றி இருக்கலாம். இதுபற்றித்தான் திருவள்ளுவர்,

> ''எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
> அதிர வருவதோர் நோய்''

என்று கூறுகிறார்.

வருவது தெரியாமல் துன்பம் வந்து தாக்குமானால் நமது உடம்பும், உள்ளமும் அதிர்ச்சியடைந்து நடுங்கும். வருவது முன்பே தெரியுமானால், மனதில் அதிர்ச்சியோ உடம்பில் நடுக்கமோ உண்டாகாது. அதனால் தான் இல்லை அதிரவருவதோர் நோய் என்று கூறுகிறார். இனி, நடந்ததை மறந்து குற்றப்படும் நிலைமையும் உண்டு. அந்த நிலையை "அற்றம்" என்பர். ஒரு பொருளை மறந்து விட்டோம் எனில், ஒன்றை இருட்டறையில் வைத்துவிட்டது போலாம். அதை மீள எடுப்பதற்கு விளக்கொளி கருவியாவதுபோல, மறந்த பொருளை அறிவு கொண்டு சிந்திப்போமாயின் அது நினைவிற்கு வந்துவிடுகிறது. அதனால் மறந்ததை நினைவில் கொணர்வதற்கு அறிவு சிறந்ததொரு கருவியாவதைக் காணலாம்.

இவ்வாறு கருவியாகவும், மனதை அடக்கி நன்னெறிப்படுத்துவதில் தலைமைப்பொருளாகவும், மேலே வருவதை முன்கூட்டித் தெரிவிப்பதால் ஒளிப்பொருளாகவும் உணர நிற்கும் அறிவு, அன்றாட வாழ்வில் குற்றங்கள் வந்து தாக்காதபடி தடுக்கும் அரணாகவும் இருக்கிறது. அதனைத் திருவள்ளுவர்,

"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்று கூறுகிருர்.

அரண் என்னும்போதே அது பகைவர் உட்புகுந்து அழிக்காதபடி தடுப்பதுக் குறித்து அமைக்கப்படுவது என்ற கருத்து நினைவில் எழுகிறது. பகைவருக்கும் அரண்களைத் தகர்த்து உட்புகுந்து அழிப்பதே நோக்கம். அறிவை அரண் என்போமாயின் அதனைத் தாக்கும் பகைவரும், உட்புகுந்து அழிக்கும் செயலும் யாவை என்ற கேள்வி எழும். அக்கேள்விக்கு விடை கூறுவது போலத் திருவள்ளுவர் உலகியலில் அரசர் அமைக்கும் அரண் போலப் பகைவர் தாக்கி உட்புகுந்து அழிக்க முடியாத அரண் இந்த அறிவு என்பதற்காகவே, "செறுவார்க்கும் உள் அழிக்கலாகா அரண்" என்று சொல்லுகிருர். எனவே அறிவு ஒருவனது வாழ்க்கைக்கு எவற்ருலும் அழிக்க முடியாத பாதுகாப்பு என்று அறிகின்ருேம்.

அறிவு சிறந்த கருவியாக இருப்பதால் எல்லாப் பொருளையும், படைத்துக் கொள்ளும் தகுதியும், அரணுக இருப்பதால் படைத்துக்கொண்ட எல்லாவற்றையும் அழிவுருமல் காத்துக் கொள்ளும் தகுதியும் அறிவுடையோர்க்கு அமைந்துவிடுகின்றன. அதனுல் அவர்கள் எல்லாவற்றையும் உடைய செல்வராகின்ருர். அறிவு இல்லாதவர் எல்லாம் உடையராயினும், ஆக்கிப் பெருக்கிக் கொள்ளும். திறமையும், அழிவதைக் காத்துக் கொள்ளும் வன்மையும், இன்றி விரைவில் கெட்டு ஒன்றும் இல்லாதவராய் விடுகிருர்கள். இதையே சுருக்கமாக,

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்று திருக்குறள் கூறியது.

எனவே, அறிவில்லாதவன் வறுமை எய்திக் கெடுவான். அறிவுடையவன் எல்லாம் பெற்று இன்ப மாக வாழ்வான் என்று அறிகின்றோம்.

## தன்குறை நீக்குதல்

அறிவுடைமை பற்றிப் பேசியபோது "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்று திருவள்ளுவர் சொன்னார். அற்றம் என்பது மறதி; அதுதான் நாம் குற்றங்கள் எல்லாவற்றிற்கு முதற்காரணம். அதனால் நமக்குப் பலருடைய வெறுப்பும் அறவழியாகப் பகைமையும் உண்டாகின்றன. குற்றம் செய்யாமல் இருக்க முடியுமா? குற்றமே உடையவரும் குணமே நிறைந்தவரும் உலகத்தில் இல்லை அல்லவா? சிறந்த அறிவுடையவர்க்கும் ஒரொரு காலத்தில் குற்றம் செய்வதில்லையா? என்று கேட்பவர் உண்டு. மனிதன் குற்றம் செய்யக் கூடியவன் தான், என்றாலும், அறிவு பெற்றவன் குற்றத்தை அறிந்து தன்னிடத்தில் உண்டாகாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், அறிவுடைமையை உரைத்த திருவள்ளுவர் அடுத்தபடியாகக் குற்றத்தைப்பற்றிப் பேசுகிறார்.

நமக்கு இன்பம் செய்பவரை நண்பர், அன்பர் என்றும், துன்பம் செய்பவரை வேண்டாதவர், பகைவர் என்றும் சொல்லுவது உலகியல். எனவே இன்பம் தருவது நட்பு என்றும், துன்பம் தருவது பகை என்றும் நூல்கள் கூறுகின்றன. குற்றம் துன்பம் பயப்பதால் அது நமக்குப் பகையாகிறது. ஆகவே நம்மிடமுள்ள குற்றம் குறைகளே நமக்குப் பகையாய்த் துன்பம் செய்கின்றது. எனவே, அவைகளை அறிந்து நம்மிடம்

உண்டாகாமல் இல்லாமல் நீக்க வேண்டியது கடமை யாகிறது. அதை வற்புறுத்துவதற்கே திருவள்ளுவர்,

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை"

என்று கூறுகிறார். முன்னே சொன்னபடி குற்றத் தைவிட நமக்குப் பகையாய்த் துன்பம் தருவது வேறே இல்லையாதலால், அதை நீக்குவதே நமது குறிக் கோளாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, குற் றமே காக்க பொருளாக என்று கூறுகிறார்.

இங்ஙனம், நம்மிடம் உண்டாகாமல் காக்க வேண் டிய குற்றங்கள் யாவை? அவை, செருக்கு, சினம், சிறுமை இவறல், மாண்பிறந்த மானம், மாணு உவகை என ஆறும் என்று திருக்குறள் கூறுகிறது. இவற்றில் முற்படக் குறிக்கும் செருக்கு, சினம், சிறுமை என்ற மூன்றில் சிறுமை என்பது காமம்; அதாவது ஆசை. பொருள்மேலும், பெண்ணுக்கு ஆண்மேலும், ஆணுக் குப் பெண்மேலும் உண்டாகிற ஆசை. எத்தகைய பெரியவனாயினும் இந்த ஆசைவழிச் செல்வானாயின், பொது மக்கள் எதிரில் பெருமை குன்றிச் சிறுத்துப் போவதால், அதனை ஆசையென்றோ காமம் என்றோ கூறாமல் சிறுமை என்று கூறுகிறார். தன்பால் உள்ள செல்வத்தாலும் பிறந்த பிறப்பாலும், பெற்றுள்ள பதவியாலும் பலர் மதிக்கும் கல்வியாலும் ஒருவனுக் குச் செருக்கு என்னும் குற்றம் உண்டாகிறது. சினம் அதாவது கோபம் குற்றம் என்று எல்லாரும் அறிந் தது. இம்மூன்றும் ஒருவனுடைய வாழ்வில் தன்னை யறியாமல் தோன்றுபவையாதலால் இவை முதலில் எடுத்துக் கூறப்படுகின்றன.

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செருக்கில்லாதவனை மக்கள் அனைவரும் நன்கு மதிப்பர்; சினமில்லாதவனை யாவரும் பரிந்து ஆதரிப்பர். ஆசை அற்றவனை எவரும் விரும்புவர். இதனால், செருக்கும் சினமும் ஆசையும் இல்லாதவர் செல்வம், மக்கள் ஆதரவு, புகழ் முதலிய நலங்களைப் பெருக அடைவர். அப்பெருக்கம் அவர்க்கேயன்றி அவரைச் சூழ்வுள்ள மக்களுக்கும் பெருமிதம் உண்டுபண்ணுவது உறுதி. அதனால், பெருக்கம் பெருமித நீர்த்து என்கிறார்.

இனி இச்செருக்கு முதலிய மூன்று குற்றங்களையும் அடுத்து, இவறல், பொய்யான மானம், பொல்லாத களிப்பு என மூன்று குற்றங்களைத் திருவள்ளுவர் கூறுகிறார். அவற்றுள், இவறல் என்பது கடுமையான பற்றுள்ளம்! அதாவது கடுஞ்சிக்கனம். பொய்யான மானம் என்பது தாழ்ந்து ஒழுக வேண்டிய தாய், தந்தை முன்பிறந்தோர் சால்புடைய பெரியோர் முதலியோரிடத்திலும் தாழாமல் தலைநிமிர்ந்து நிற்பது. இதனால் அவருக்கு மாண்போ மதிப்போ உண்டாகாது; அதனால் மாண்பு இறந்த மானம் என்று திருவள்ளுவர் உரைக்கின்றார். தன்னைத் தவிர மற்றைய எல்லாரையும் இகந்து நகையாடிக் களிப்பது சிலரிடத்தே காணப்படும் குற்றம். அதைத் திருவள்ளுவர் மாணு உவகை என்று குறிப்பர். ஆக கடுஞ்சிக்கனம், பொய்யான மானம், பொல்லாத கறிப்பு என்ற மூன்றையும் தொகுத்து,

> **"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு**
> **உவகையும் ஏதம் இறைக்கு"**

என்று திருக்குறள் கூறுகிறது. முறை செய்வதும் காப்பாற்றுவதும் தொழிலாகவுடைய தலைவனிடம்

இந்தக் குற்றங்கள் இருக்குமாயின், மக்கள் நன்மதிப்பும் நம்பிக்கையும் இன்றி நீங்குவர்; அவனுடைய தலைமையும் போய்விடும்; அதுபற்றியே இம்மூன்றும் "ஏதம் இறைக்கு" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். ஏதம் என்பது குற்றம் அல்லது தீங்கு என்று பொருள்.

பொய்யான மானம் பொல்லாத எக்களிப்பு என்பவைகளைக் காட்டிலும் கடுஞ்சிக்கனம் உற்ற நண்பரையும் நெருங்கின உறவினரையும் அருகில் சேர விடாது பிரித்துவிடும். கடுஞ்சிக்கனம் என்ற குணமுடையவர், வயிறார உண்ணமாட்டார். கட்டாயம் செய்ய வேண்டிய கடமைகளையும் செவ்வையாகச் செய்யார்; தங்களுக்கும், தங்கள் உடைமைக்கும் பாதுகாப்பான செயல்களையும் செய்துகொள்ள நினையார்; இக்குற்றத்தால், சில நாட்களில் காப்பாக இருக்கும் மக்களும் உறவினரும் போற்றுகின்ற நண்பரும் சுற்றமும் நீங்கிவிடுவதால், கடுஞ்சிக்கனமாகத் தேடி வைக்கிற செல்வம் நிலைபெறாமல் சீரழிந்து தொலைந்து போகும். அது கண்டே,

> "செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
> உயற்பால தின்றிக் கெடும்"

என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

கடுஞ்சிக்கனமாக இருக்கும் இயல்பு ஒருவனுக்கு எப்படி உண்டாகிறது என்று திருவள்ளுவர் சிந்திக்கின்றார். தனக்கு என்ன துன்பம் வந்தாலும் தனக்காகக்கூடச் செலவு செய்யவாராத மனநிலை ஒருவனிடம் காணப்படுவதற்குக் காரணம், பொருள் தேடுங்கால் அவனுக்கு அதன்மேல் உண்டாகும் ஆசையும் அதுவழியாக அப்பொருளை விட்டுப் பிரியமாட்டாத பற்றுமே ஆகும் என்று தெளிந்து,

**"பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப்படுவ தொன்று அன்று"**

என்று கூறுகின்றார்.

இவறன்மை எனப்படும் பற்றுள்ளம் அதாவது உலோபத்தனம் என்பது தனியான குற்றம். செருக்கு, சினம் முதலிய மற்றைய குற்றங்கள் செய்கிறவனுக்கு ஓரளவும் மற்றவர்களுக்கு ஓரளவும் வருத்தம் செய்யும். பற்றுள்ளம் என்னும் இந்தக் குற்றம் செய்பவனையே கெடுத்து அழித்துவிடுவதால், குற்ற வகைகள் எதிலும் அடங்குவதில்லை. அதனால் குற்றங்கள் எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்றன்று என்று கூறுகிறார்.

மக்களிடம் அமைந்து வாழ்க்கையைத் துன்பத்து உள்ளாக்கும் இக்குற்றங்கள் எவ்வாறு கெடுக்கின்றன? இதனை எண்ணுகிற திருவள்ளுவர் ஓர் உண்மையைக் கண்டு கூறுகின்றார். "அறிவுடையார் ஆவது அறிவார்" என்றாரல்லவா? இக்குற்றங்கள் ஆவதை அறியும் அந்த அறிவை மறைத்து விடுகின்றன. அதனால், அவர்கள் வருவது முன் அறிந்து காக்கும் வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள். மலைபோன்ற செல்வம் இருப்பினும் வருவதறிந்து காவாத குற்றம், சிறு தீயால் பெரிய வைக்கோல் போர் எரிந்து சாம்பலாவது போலக் கெட்டழிந்து போம் என்கிறார்.

இதுபற்றியே அறிவுடையவர்கள் தங்கள்பால் ஒரு சிறு குற்றம் தோன்றினும் அதனால் வரும் பழி பாவங்களுக்கு அஞ்சி, அதனை மிகவும் பெரிதாகக் கருதுகின்றனர். அதனை,

**"தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணைக்**
**கொள்வர் பழிநாணு வார்"**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அங்ஙனமாயின், இக்குற்றங்கள் நம்மிடத்தில் உண்டாகாமல் தடுப்பதற்குத் திருவள்ளுவர் ஏதேனும் வழி சொல்லுகிறாரா? எனின், குற்றவியல்களைக் கண்டறிந்து சொல்லுபவர், அதைச் சொல்லாமல் இருப்பாரா?

அறிவுடையவருக்கு தம்மிடத்திலும், பிறரிடத்திலும் உள்ள குற்றங்கள் நன்றாகத் தெரியும். குற்றங்களைக் கண்டால் திருத்துவதற்குத்தான் மனம் ஓடும். பிறருடைய குற்றம் கண்டு அதனை நீக்கி முறை செய்வது அரசனுக்கும், தலைவர்களுக்கும் கடனாகும். ஆனால், பிறர் குற்றத்தைக் கண்டு நீக்க முயல்பவர் தம்மிடத்தில் அத்தகைய குற்றம் இல்லாதிருக்க வேண்டும். குற்றமுடையவன் பிறர் குற்றத்தை நீக்க முடியாது. அதனால் வேந்தன் முதலில் தன் குற்றம் கண்டு நீக்கிக் கொண்டு பிறர் குற்றம் காண்பானாயின், பின்பு அவனிடத்தில் ஒரு குற்றமும் உண்டாகாது. இதனை,

> "தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என்குற்ற மாகும் இறைக்கு"

என்று கூறுகிறார்.

இக்குற்றங்கள் எப்படி உண்டாகின்றன எனின், ஒவ்வொருவனும் தன்னை மற்றவனைவிடத் தாழ்வாக நினைப்பதில்லை. தன்னை உயர்வாகவே மதிப்பது இயற்கை. குற்றம் தோன்றுவதற்கு அது ஒரு வழி; அடுத்தபடியாக வினையே ஆடவர்க்கு உயிர் என்பர். அவ்வினைகளில் நன்மை விளைவதும் உண்டு; தீமை விளைவதும் உண்டு. "நன்றி விளைவும் தீதொடு வரும்" என்று நற்றிணையில் ஒரு பெண் கூறுகிறாள். ஆனால் வினைகளை செய்து புகழும் இன்பமும் காணும் பழக்கத்தால், தன்னை வல்லவனாக எண்ணும் மனநிலை

தோன்றும்; எதையும் செய்யலாம் என்ற எழுச்சியும் உண்டாகும். அந்நிலையில் செய்யப்படும் வினையில் குற்றம் தோன்றி தீமை விளைவித்துவிடும்; அதனால்,

**"விபவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை"**

என்று கூறுகிறார்.

பொருள்மேல் ஆசையும், காமமும், குற்றம் வருவதற்கு வழியாகும். இவையிரண்டும் மற்றவைபோல வேரோடு களைந்தெறியக் கூடியவை அல்ல; இவற்றை நுகர்ந்தே கழிக்க வேண்டும். அதையும் பிறர் அறியாதபடி நுகர வேண்டும்; அது மிகவும் வல்லவர்க்குத்தான் முடியும். அவர்களை எத்தகைய நுண்ணிய சூழ்ச்சி படைத்த பகைவராலும் ஒன்றும் செய்ய முடியாது. இதனை,

**"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
**ஏதில ஏதி லார்"**

எனத் திருக்குறள் கூறுகிறது.

எத்தகைய பெரியவரும் தமது விருப்பத்தையும் காதலையும் எவ்வகையாலும் பிறர் அறியாமல் நுகர்வது என்பது அருமை என்பதற்காகவே அறியாமை உய்க்கிற்பின் என்று திருவள்ளுவர் உரைக்கின்றார்.

## தகுந்த துணை

தனி மனிதனுடைய அறிவு ஒரு சுருங்கிய எல்லைக்குள் அடங்குவது. அன்றியும் அது, கல்வி, கேள்விகளின் அளவையும் வாழ்க்கைச் சூழ்நிலையின் தன்மையையும் சார்ந்திருப்பது. அவன் பரந்த உலகில் பல வேறுபட்ட மக்களிடையே வாழ வேண்டியிருப்பதால்

அதற்கு வேண்டிய அறிவும் பரந்த பண்புடையதாக வேண்டும். அப்பண்பு உண்டாவதற்கு அறிவும் ஆற்றலும் உடைய பெரியோர்களின் துணை இன்றியமையாததாகும். வாணிகம் செய்யும் ஒருவனுக்கு முதல் வேண்டியிருப்பதுபோல, நன்கு வாழ விரும்புபவனுக்குப் பெரியோர்களின் துணைதான் முதலீடு. முதல் இல்லையானால் வாணிகமும் இல்லை; ஊதியமும் இல்லை; அது போலப் பெரியோர்களின் துணையில்லாதவனுக்கு வாழ்வும் இல்லை; நிலைபேறும் இல்லையாம். அது விளங்கவே,

**"முதல் இலார்க்கு ஊதியம்இல்லை மதலையாம்**
**சார்பு இல்லார்க்கு இல்லைநிலை"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

எதனையும் தூண் போலத் தாங்குவதால் பெரியோர்களின் துணையை மதலையாம் சார்பு என்று குறிக்கின்றார்.

இத்தகைய பெரியோர்களின் இயல்பைத் தெரிந்தால்தான் அவர்களிடையே துணையின் சிறப்பை நாம் அறிய முடியும். இப்பெரியவர்கள் பலதிறமாக இருப்பர். அறம் பலவற்றையும் உணர்ந்து உலக வாழ்வில் தோய்ந்து முதிர்ந்து பண்பட்ட பெரியோர்க்கும் உண்டு. அவர்களுடைய அறிவின் திறத்தை இயல்பை அறிந்து அவரது நட்பைப் பெறுதற்கேற்ற நெறியைத் தேர்ந்து அவ்வழியில் அவரது துணையைப் பெற வேண்டும். அதனை,

**"அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன்அறிந்து தேர்ந்து கொளல்"**

என்று தெரிவிக்கின்றார்.

இவர்களின் துணை அறிவு வடிவாய் இருப்பது; அதனால் அறிவுடையார் கேண்மை என்று குறிக்கின்றார்.

நமக்கு இடர் வந்தபோது தாங்கி அதனை நீக்கி, மேற்கொண்டு துன்பங்கள் வராதபடி முன்னறிந்து துணைபுரியும் பெரியோர்கள் சிலர். அவரது துணை செயல் வடிவில் இருப்பது பற்றி, அதனை விரும்பிப் பெற வேண்டும். அதற்காகவே,

**''உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்''**

என்று அறிவுறுத்துகின்றார்.

வேறு சிலர், நாம் நெறிமயங்கித் தவறு செய்யும் காலத்தில் செவி சுடத்தக்க சொற்களால் இடித்துரைக்கும் இயல்புடையவராவர். அவருடைய துணை ஒரு காலும் ஒரு கேடும் உண்டாகாமல் காக்கும் நிலைத்த துணையாகும். ஆவது பற்றியே அப்பெரியவர்களை இடிக்கும் துணையென்றும், அவர்களின் துணை பெற்ற நன்மக்களை ஒருவராலும் கெடுக்க முடியாது என்று அறுதியிட்டு,

**''இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்''**

என்று கிளந்துரைக்கின்றார்.

இங்ஙனம் மூத்த அறிவும், முன்னறிந்து காக்கும் தன்மையும், இடித்துரைக்கும் இயல்பும் வாய்ந்த பெரியோர்களின் துணையும், படைபொருள் ஆகியவற்றால் தானே பயன்படும். ஆதலால், பெரியோர் துணையை விடப் படை முதலியவற்றில் வலிமை தானே பெருந் துணை என்றொரு கேள்வி எழுகிறது. படைவன்மை, பொருள்வன்மை ஆகிய வன்மைகளை ஆராய்ந்து நோக்கினால் இவ்வன்மைகள் எல்லாவற்றிலும் பெரியோர்களின் துணையே தலைசிறந்த வன்மையாகும். காலமும் கருவியும் இடமும் வாய்ந்தபோதுதான் படை முதலிய

வற்றின் வன்மை செயற்பட்டுப் பயன்படும். அப் படைக்கு ஊக்கமும் பொருட்கு ஆக்கமும் நல்குவதே இப்பெருமக்களின் துணை. ஆதலால் பெரியோர்களின் துணை போல வேந்தனுக்கு வன்மை தருவது வேறில்லை. அதனால்,

**"தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை"**

என்று கூறுகிறார்.

மேலும், நாம் வாழும் உலகமே பெரியோர்களின் வழியிலே செல்வது. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற பழமொழியே இதற்குச் சான்று. உலக நிகழ்ச்சிகளைக் கண்டு எதிர்காலத்தின் இயல்பை உணர்ந்து மக்களுக்கு வழிகாட்டிடுவதால், உலகம் அவர்களைக் கண் போலக் கருதி ஒழுகுகிறது. அதனால் உலகம் காக்கும் வேந்தன் அவர்களது நட்பின் நலத்தை அறிஞர்களோடு ஆராய்ந்து தெளிந்து தனக்குப் பிரியாப் பெருந்துணைவராகக் கொள்வது கடனாகும். அதுபற்றியே,

**"சூழ்வார் கண்ணாக ஒழுகலால் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"**

என்று திருவள்ளுவர் வற்புறுத்துகிறார்.

நாட்டில் வாழும் மக்களில் பெரியோர்களின் துணையை எடுத்துக் கூறுகின்றவர் ஏனை மக்களும் உள்ளனரே அவர்களை ஏன் ஒதுக்குகிறார் என்றொரு வினா எழுகிறது. பெரியோர்க்கு மாறாக ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அதனைச் சிற்றினம் என்று கூறுவர்.

அதனைக் கண்டாலே பெரியோர் அஞ்சி நீங்குவர்; ஏனெனில், ஒட்டுவார் ஒட்டி போல அருகில் நெருங்

கினுல் நம்மைப் பற்றிக் கொண்டு சுற்றத்தாராய்ச் சூழ்ந்து கொள்ளும்; இது பற்றியே,

**''சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்''**

என்று திருவள்ளுவர் கூறுகிருர்.

சிற்றினமும் மக்களினம் தானே; அது சுற்றமாய்ச் சூழ்ந்து கொள்வதற்காகவா அதனை வெறுப்பது எனின், அது பெரியோர் இனம் போல நன்மை செய்யாமல் துன்பத்தையே உண்டு பண்ணுகிறது. நெஞ்சில் தீய நினைவையும், செயலில் தீய செயலும் தோற்றுவித்துக் கெடுக்கிறது. அது கண்டே,

**''நல்லினத்தின் ஊங்கித் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉம் இல்''**

என்று கூறுகிறது.

மக்கள் உயிர்க்கு அறிவு, மனம் என்ற இரண்டும் சிறந்த உட்கருவிகள். நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் உள்ளவாறு கண்டுகொள்வது அறிவு. அறிவுக்கும் உடம்பிலுள்ள கண், காது முதலிய பொறிகளுக்கும் இடையில் நின்று அறிவு வழியிலும் பொறி வழியிலும் இயங்குவது மனம். அறிவு தன்னிலையில் தூய்மையானது; ஆனுல் எதனைச் சார்கிறதோ அதன் இயல்பை அடையும் தன்மை வாய்ந்தது. அது பற்றியே, சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது அறிவு என்பர். இதனைத் திருவள்ளுவர்,

**''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்கு**
**இனத்தியல் பதாகும் அறிவு''**

என்று கூறுகிருர்.

நீர் நிலத்திலே காணப்படுவது போல, மக்களும் தத்தம் இனத்திடையே காணப்படுகின்றனர். நீருக்குத்

தன்னளவில் நிறமோ சுவையோ கிடையாது. ஆயினும் அது சார்ந்துள்ள நிலத்தின் நிறத்தையும், சுவையையும் அடையும். அதுபோல மக்கள் அறிவும் சார்ந்த இனத்தின் இயல்பால் பெருமையும், சிறுமையும் வருகிறது.

ஒருவனுடைய பேச்சிலும் செயலிலும் அவனுடைய அறிவின் இயல்பைக் காண்கிறோம். பேச்சுக்கும் செயலுக்கும் நேரிய கருவி மனம்; அதனால் ஒருவனது அறிவு அவன் மனத்தில் இருப்பதுபோலத் தோன்றும். ஆனால் நீரின் இயல்பை நிலம் மாற்றுவதுபோல ஒருவனுடைய அறிவு அவன் சார்ந்துள்ள இனத்தால் மாற்றம் அடைகிறது. இதனை,

**''மனத்துஉளது போலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துள தாகும் அறிவு''**

என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

இதனால் அறிவு வெளிப்படுதற்கு மனம் இடமாகுமேயன்றி மனமே அறிவாவதில்லை. அறிவு தூயதானால் மனம் அதன்வழி நின்று தூய்மையுடன் இயங்கும்; பேச்சும் செய்கையும் தூய்மையாக—நல்லவையாக—இருக்கும். ஆகவே ஒருவனுடைய மனத் தூய்மைக்கும், செவியின் தூய்மைக்கும் பற்றுக்கோடு அறிவின் தூய்மை என்று அறிகிறோம். அறிவுக்குத் தூய்மை தருவது அது சார்ந்துள்ள இனம் என்பதை முன்பே கூறினார். ஆதலால்,

**''மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்''**

என்று கூறுகிறார்.

மனம் அறிவின்வழி நிற்பதாயினும், பொறி புலன்களின்வழி நின்று உணர்வுகளைக் கொணர்ந்து ஊட்டி அறிவை வளர்க்கும் தனிச்சிறப்புடையது அது

பற்றியே திருவள்ளுவர் "மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி" என்று கூறுகிருர். ஆனால் மனம் பொறி களோடு கூடிச் செயல்படும் பொது அறிவு கலந்து கொண்டு தனக்குச் சார்பான இனத்தின் பெருமை சிறுமைகளைக் காட்டிவிடும். ஒருவன் அறிவுக்குப் பெரியோர் சார்பு இருக்குமானால், அவன் தக்கோன் என்று பாராட்டப்படுகிருன். சிற்றினத்தின் சார் புடையனானல், மக்களால் கீழோனுகப் பழிக்கப் படுவான். அதுபற்றியே,

**''மனத்தான்ஆம் மாந்தர்க் குணர்ச்சி, இனத்தான்ஆம்**
**இன்னுன் எனப்படும் சொல்''**

என்று கூறுகின்ருர்.

எனினும், மனம் வழி நிற்பது போல, அறிவை யடக்கித் தன்வழி நடக்கச் செய்யும் தன்மையும் மனத் துக்கு உண்டு என்ருலும், அறிவின் சார்பாகிய இனத்துக் குள்ள வலிமை மனத்துக்குக் கிடையாது. மனம் அறிவை நல்வழியில் செலுத்துமாயின், இனமும் அதற்கு ஏற்ப நலமுடையதாய் இருக்க வேண்டும்.

**''மனநலம் நன்கு உடையாராயினும் சான்ருேர்க்கு**
**இனநலம் ஏமாப் புடைத்து''**

என்கிருர்.

மனம் நல்லதாய்த் தன்னை இயக்கும் அறிவையும் தன்வழியில் நிற்கச் செய்வதாயின், சான்ருண்மை வந்து அமைந்துவிடும். அதனுல்தான் மனநலம் மிக உடையவரைத் திருவள்ளுவர் சான்ருேர் என்று சிறப் பிக்கின்ருர்.

இத்தகைய மனநலமும், இனநலமும் ஒருங்கு பெறுவதுதான் மக்களுடைய நோக்கமாக இருக்க வேண்டும். மனநலம் இவ்வுலக வாழ்விற்கு வேண்டிய

செல்வத்தை நல்கும்; இனநலம் எல்லாப் புகழையும் எய்துவிக்கும் என்பாராய்,

**"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்"**

என்று கூறுகிறார்.

அதோடு நில்லாமல், மனநலம் உடையவர்க்கு நல்ல பேரும் புகழும் உண்டாகும்; இன நலத்தால் அவர்கள் செய்யும் செயல் அனைத்தும் நன்மையாகவே முடியும் என்று கூறலுற்று,

**"மனம்தூயார்க்கு எச்சம்நன் றாகும் இனம்தூயார்க்கு**
**இல்லை நன்றாகா வினை"**

என்று உரைக்கின்றார்.

## செயல்முறை

**உ**லகில் வாழ்கின்ற நாம் ஏதேனும் வேலை செய்து கொண்டே இருக்கிறோம். நினைப்பதும், பேசுவதும், செய்வதும் எல்லாம் வேலைதான். வேலை என்ற சொல்லை இலக்கண நூல்கள் வினையென்று கூறும். சமய நூல்கள் குறிக்கும் வினையும் இந்த வேலையைத் தான். சங்ககால இலக்கியங்களும், திருக்குறள் முதலிய அறநூல்களும் நாம் செய்யும் செயல்கள் யாவற்றையும் வினையென்றே குறித்துள்ளன.

இந்த வினை காரணமாகத்தான் நாம் உலகில் பிறக்கிறோம். வினை செய்து வாழ்கிறோம். வினை செய் வதால்தான் இறக்கின்றோம். நம் உடம்பு "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" என்று மணிமேகலை கூறுவதும் இக்கருத்தை உட்கொண்டுதான்.

இப்போது உலகில் பெறுகின்ற இன்ப துன்பங்கட்குக் காரணமாய் நாம் முன்பு செய்த செயல்வகையாக உள்ளவற்றை வினை என்றும், வாழ்வதற்காக, வாழ்வில் பொருளுக்காகவும் புகழுக்காகவும் செய்கின்ற செயல்களை வேலை என்றும் வழங்குகிறோம்.

உலகில் மக்களையும் அவர்கள் செய்யும் வேலைகளையும் பார்த்தால் வேலை செய்யாத ஆணோ, பெண்ணோ இல்லை. செய்யப்படும் வேலை எல்லாம் உற்று நோக்கினால், அவை யாவும் உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், இருக்கும் இடத்துக்கும் நோய் வந்த போது மருந்துக்குமாகவே உள்ளன. வேலையால் வருகின்ற பயனை அதன் அளவை நோக்கி இவ்வேலைகள் பெரிய வேலை, சிறு வேலை என்று பேசப்படுகின்றனவே அன்றி வேறுபாடு இல்லை.

இவ்வாறு பார்க்கின் கோடிக்கணக்கில் வருவாய் தரும் வேலையும், பைசா கணக்கில் வருவாய் தரும் வேலையும் வேலை என்றுதான் ஆகிறது. ஆகவே நாடாளும் அரசனும் வேலை செய்கிறவன் தான்; அவன் அரண்மனையில் கூட்டிப் பெருக்கும் வேலைக்காரனும் வேலை செய்கிறவன் தான்.

அரசனுக்குரிய வேலையை முறை செய்தல், காப்பாற்றுதல் என்றும், இயற்றல் ஈட்டல் காத்தல், காத்தவற்றை வகுத்தல் என்றும் திருவள்ளுவரே கூறுகின்றார்.

இவ்வேலை ஒவ்வொன்றும் காலம் நோக்கியும் இடம் பற்றியும் செய்யத் தக்கதும், தகாததும் என இருவகைப் படுகின்றது. செய்யத்தக்கதைச் செய்தே தீரவேண்டும். செய்யாவிட்டால் துன்பம் உண்டாகும். செய்யுமிடத்துத் தவறான முறையில் செய்தாலும், செய்யத் தகாததைச் செய்தாலும் துன்பம் துன்பமேயாகும்.

இதுபற்றியே திருவள்ளுவர்,

**''செய்தக்க அல்லசெயக் கெடும் செய்தக்க
செய்யாமை யாலும் கெடும்''**

என்று தெரிவிக்கிறார்.

இனி, ஒரு வேலை செய்யத்தக்கது என்று கண்டவுடனே செய்ய முற்படலாகாது. அதைப் பற்றி நன்கு சிந்தித்துச் செயலில் இறங்க வேண்டும். இறங்கின பிறகு அதற்கு வேண்டியவைகளை எண்ணிக் கொள்ளலாம் என்று சிந்திப்பதைவிட நினைப்பது தவறு. சோம்புகின்றவர்கள் உண்டு; அது குற்றம். அதனை,

**''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''**

என்று திருக்குறள் கூறுகிறது.

ஒரு வேலை செய்யத் தக்கது என்று பட்டபின் எண்ணவேண்டியவை யாவை என்ற கேள்வி எழுகிறது. ஒரு வேலையை எடுத்துக் கொண்டால் அதற்கு ஆகும் செலவு, அதனால் பெறப்படும் வரவு, செலவு போக மிஞ்சும் ஊதியம் ஆகிய இவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். உழைப்பவனுக்கு ஊதியமில்லை என்றால் அது பயனற்ற வேலையாய்விடும். அதற்காகவே,

**''அழிவதும் ஆவதும் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்''**

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

வேலையை மேற்கொண்டு தொடங்குதற்கு முன்பே அதற்காகும் செலவு வரவுகளை எங்ஙனம் எண்ணுவது என்று கேட்கலாம். அதுபோன்ற வேலைகளைச் செய்து பயன்கண்ட நண்பர்களைக் கலந்து ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்து செய்தால் எல்லாம் எளிதில் முடியும். முடியாதது ஒன்றும் இராது. இதனை,

**''தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்''**

என்று திருக்குறள் உரைக்கின்றது.

வேலையின் பல்வேறு பகுதிகளையும், நுட்பங்களையும் தெரிந்த உண்மையான நண்பர்களையும் சுற்றத்தாரையும் ''தெரிந்த இனம்'' என்று குறிக்கின்றார். அவர்களோடு கலந்து அவர்கள் கூறுவதைக் கேட்பதோடு தானும் உடனடியாக எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்காகத்தான் ''தெரிந்த இனத்தொடு தேர்ந்து'' என்பதோடு நில்லாமல் ''எண்ணிச் செய்வார்க்கு'' என்று குறட்பா கூறுகிறது.

ஒழுங்காய் வேலை செய்து இன்பமாக இருப்பவரைக் கண்டு மகிழ்வது இன்றைய மக்கள் சூழலில் பொதுவாகப் பெரும்பாலும் இல்லை. பொறாமையும், பகைமையும் கொண்டு குற்றம் குறை ஏற்படின் தூற்றுவதில்தான் இன்பம் காணப்படுகிறது.

ஆகையால் அரசனாயினும் வேலைக்காரனாயினும், தெரிந்த இனத்தாரோடு ஆராய்கின்றபோது, எடுத்துக்கொண்ட வேலைக்கு ஏற்ற காலம், கருவி, இடம், செலவு, வரவு முதலிய கூறுகளை வகைவகையாகக் கூறு செய்து ஒவ்வொன்றையும் நன்றாக ஆராய்தல் வேண்டும். இல்லையானால், பகைவர் என்ற முட்செடியைப் பாத்தி கட்டி நீரூற்றி வளர்ப்பதுபோல ஆகும் என்று சொல்லுகிறார் திருவள்ளுவர்.

**''வகை அறச்சூழாது எழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுதோர் ஆறு''**

ஒழுங்குற வேலை செய்பவனுக்கு மானவுணர்வு மிகுந்திருக்கும். செய்யும் செயலில் எங்கே குற்றம் தோன்றி பிறர் இகழ்ச்சிக்கு இடமாய்விடுமோ என்று அஞ்சியவண்ணம் இருப்பர்; அதனால் அவர்கள்

மேலே சொன்னபடி வகையற ஆராய்ந்து தெளியாத வேலைகளைத் தொடங்கவே மாட்டார்கள்.

ஒரு வேலை செய்யத் தக்கது என்று தெளியப் பட்டாலும், செய்பவர் தகுதிக்கும், நிலைக்கும் ஒத்த தாகவும், உலகம் நன்று என்று கொண்டு பாராட்டத் தக்கதாகவும் இருக்கவேண்டும். அதற்காகவே,

**"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு"**

என்று கூறுகிறார் வள்ளுவர்.

இனி மேற்கொண்ட வேலையின் கூறுகளையும் அவற்றின் இயல்புகளையும் தெளிவாக அறிந்திருந் தாலும் ஒவ்வொரு பகுதிக்கும் செயல்முறை வேறு படும்; செய்பவரும் வேறு வேறுவர். ஆதலால், இவ் வேறுபாடுகட்கு ஏற்ப உரியவற்றை முறைப்படி செய்து வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இந்த ஏற்பாட்டை நேரிய வழியில் செய்யாவிடின், குற்றமும் குறையும், தோன்றி மிக்க வருத்தத்தை விளைவிக்கும். பின்பு எத்தனை பேர் வந்து தாங்கிச் செம்மை செய்தாலும் குறை குறையாகவே இருக்கும். இதற்காகவே,

**"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்"**

என்று திருக்குறள் கூறுகிறது.

இனி, மேற்கொண்ட வேலையின் ஒவ்வொரு பகு திக்கும் நிலைக்கும் தக்க ஆட்கள் வேண்டும். அவ்வவ் வேலைகளைச் செய்து பயின்றவராயினும், தகுதியிலும், திறமையிலும் எல்லாரும் ஒரு தன்மையராக இருக்க மாட்டார்கள். ஒருவர்க்கொருவர் ஓரளவு மிக்கும் குறைந்தும் இருப்பர்; பண்பு செயல்களிலும் வேறு

படுவர். இவர் அனைவரையும் சமமாகக் கருதுவோ மாயின், வேலையின் செயற்பாடு சிறப்பாக இல்லாமல் போய்விடும். அவரவரின் தகுதியும், திறமையும், பண்பாடும் தனித்தனி நன்கு கண்டு அவைகட்கு ஏற்ற வகையில் மதிப்பளித்துப் போற்ற வேண்டும்.

அதுதான் அவர்கள் மனதை வேலையை நேர்மை வழியில் செய்யுமாறு பிணிக்கவல்லதாகும். இதனைக் கருத்தில் கொள்ளாமல் எல்லார்க்கும் எத்தனை நலங் களைச் செய்தாலும் தவறுண்டாகும். இதுபற்றியே,

**''நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை''**

என்று திருவள்ளுவர் சுருக்கமாகக் காட்டித் தெரிவிக் கின்றார். இதுதான் வேலை வாங்கும் மேலாளரிடம் இருக்கவேண்டிய மதிநுட்பம்.

இத்தகைய செயல் முறைகளில் தெளிந்த அறி வுடையார் என்று வேறு சிலர் தாம் செய்ய நினைக்கும் வேலைகளைப் பற்றி ஆராய விரும்பி வருவர். சில வேலை கள் சிந்திக்கும்போது எளியனவாய், ஆய்ந்து வகுக்கும் திட்டப்படி கைகூடுவனவாகவும் மிக்க ஆக்கம் தருவன வாகவும் தோன்றும். தொடங்கி நடத்துங்கால் முதலையே விழுங்கி முன் நிற்பவர்களைப் பேதை களாக்கி மற்றவர் இகழ்ந்து பேசும் அளவுக்கு இழிவை யும் அவர்கட்கு உண்டாக்குவதுண்டு; அத்தகைய வேலைகளை ஒருகாலும் தாமும் ஊக்கமோடு மேற் கொள்ள மாட்டார்கள். பிறரையும் செய்யுமாறு ஊக்கப்படுத்தமாட்டார்கள். அதுபற்றியே,

**''ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்''**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

முதலுக்குக் கேடில்லாமல், கால மாறுபாட்டால் ஊதியத்தின் அளவில் குறைவு தோன்றக் கண்டு சோர்வடையும்போது ஒருமுறைக்கு இருமுறை ஊக்கப் படுத்துவதுதான் அறிவுடையோர்க்குத் தகுதி. முத லுக்கே அழிவு தருவதாயின் அவ்வேலையைச் செய்வ தற்கு அறிவுடையோர் தாமும் ஊக்கம் கொள்ள மாட்டார்; பிறரையும் ஊக்கமாட்டார். அதனால் தான், முதல் இழக்கும் செய்வினை ஊக்கார் அறிவுடை யார் என்று மொழிகின்றார்.

## தொழில் நுணுக்கம்

ஒரு நாட்டின் செல்வ வளத்துக்கு உழவும், தொழிலும் சிறந்த வருவாய்கள். நிலத்தில் பொருள் விளைவிப்பது உழவு; உழவுக்குரிய கருவிகளையும் விளை யும் பயிர்க்கு வேண்டும் எரு வகைகளையும், உணவு, உடை, உறையுள், கல்வி, மருந்து, போக்குவரவு முதலிய வற்றிற்கு வசதி தரும் கருவிகளையும் புதிய புதிய வகையில் செய்து தருவது தொழில், தனிக் குடும்ப அளவில் நில்லாது மக்களினம் முழுதும் பயன்படும் அளவில் உழவும், தொழிலும் பொருள்களைப் பெருத்த அளவில் படைத்துத் தரவேண்டி யிருத்தலால், இத் தொழில்கள், செம்மையான முறையில் நிலைபெற அமைதற்குரியவாகின்றன. இவற்றின் அமைப்புக்கு அரசும் மக்களும் முதல்வராவர்.

ஆகவே, இத்தொழில் வகைகளைச் செய்யக் கருதுவோர், முதற்கண் தங்கள் பொருள் வலிமையை யும், தொழிற்கு வேண்டும் செல்வ வலிமையையும்,

துணை செய்பவர் வலிமையையும், இவற்றைக் கெடுக்கக் கருதும் பகைவர் வலிமையையும் கண்டு சீர்தூக்கிச் செய்வது தலையாய கடன். இதனைத் திருவள்ளுவர்,

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்"**

என்று கூறுகிறார். வினை என்பது தொழில்.

இங்ஙனம் வலியளவறிந்து தொழில் ஒன்றைச் செய்யத் தலைப்படுங்கால் அது தம் எல்லையில் இயலக் கூடியதா, அதற்கேற்ற அறிவு நிறைந்துளதா என்பதை ஆராய்வது அடுத்து நிற்கும் செயல். தொழிலின் இயல்பும் அது தமக்கு இயலக்கூடிய தன்மையும் தெரிந்துகொள்வது மட்டும் போதாது; அதனை முறையே இயக்குதற்கேற்ற தொழிலறிவும், இனிது நடத்துதற்கேற்ற செயலறிவும் தம்மிடம் உண்டா என்று ஆராய்ந்து காணவேண்டும். கண்டு தெளிந்த பின் தொழிலின் கருத்தூன்றித் திண்மை யோடு நிற்கவேண்டும். அதன் பெருக்கம் கண்டு மலைப்பதும், சுருக்கம் கண்டு சோர்வதும் இன்றி விடாது தொடர்ந்து செல்வதுதான் வெற்றி. இதுபற்றியே,

**"ஒல்வது அறிவது அறிந்து அதன்கண் தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்"**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இங்ஙனம் மேற்கொண்ட தொழில் நன்கு நடை பெற்றுப் பயன் விளைவிக்குமிடத்து, உதவி நாடி வருப வர் உண்டு. ஒருவர்க்கொருவர் உதவி வாழ்வதுதான் வாழ்வு. உதவி செய்பவர் தமது அளவறிந்து அதற்கு ஒத்த நிலையில் பிறர்க்குப் பொருளை ஈதல் வேண்டும். அதுதான் பொருள் வலி குறையாமல் நின்று நிலவு தற்கு உரிய வழியாகும். இதனை எண்ணியே,

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி''

என்று கூறுகிறார்.

பொருள் இருப்பது ஒன்றையே நோக்கி அளவு நோக்காமல் ஒருவன் செலவும் உதவியும் செய்வானாயின், அப்பொருளும் இருப்பதுபோலத் தன்னைக் காட்டி முடிவில் இல்லையாய் வறுமையை எய்த்துவிக்கும். நேற்றுவரையிற் பெருஞ்செல்வராய்க் காட்சி அளித்தவர் இன்று வறியராய்த் துன்புறுதற்கு இதுவே காரணம். இதற்காகத்தான்,

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்''

என்று திருக்குறள் அறிவிக்கிறது.

இப்பொருளுக்கு வருவாய் தொழில்; அத்தொழில் காலத்தைச் சார்ந்தது. காலமோ எப்போதும் மாறிக் கொண்டே இருப்பது. தனக்குரிய காலம் வரும்போதுதான் தொழிலும் வளம் பெறும் அதனால்தான் சில காலத்தில் நடக்கும் தொழில் வேறு காலங்களில் நடப்பதில்லை. விதைக்கும் தொழில் அறுவடைக் காலத்தில் நடவாது. மழைக் காலத்தில் நடப்பது வேனற்காலத்தில் பயன்படாது. காலம் அறிந்து செய்யும் தொழில்தான், இடையறாமல் பொருளைத் தந்துகொண்டிருக்கும். அதுபற்றித்தான்,

''பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு''

என்கிறது வள்ளுவம்.

செல்வ மகளான திரு, ஓரிடத்தும் நில்லாமல் நீங்கியவண்ணம் இருப்பாள்; அவளை நீங்காமல் பிணித்து ஓரிடத்தே நிறுத்தும் கயிறு காலமறிந்து

செய்யும் தொழிலன்றி வேறில்லை. அதனை விளக்கவே திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு என்று கூறுகிறார்.

எதனையும் காலமறிந்து செய்யும் அறிஞர் ஒவ்வாக் காலத்தில் ஒன்றும் இல்லாதவர்போல ஒடுங்கியிருப்பர். காலம் வந்தவுடன், அவர் செயல்படுவது தெரியாது. பொருளைக் குவிப்பது தெரியாது. காலம் கழிவதற்குள் மேற்கொண்ட வேலையை முடித்து வெற்றியோடு விளங்குவார்கள். அதனை மீன் வேட்டம் புரியும் கொக்கின்மேல் வைத்து,

**''கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த விடத்து''**

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

அரிசியும் பருப்பும் உண்டானால் அடை மழையிலும் மணம் நடத்தலாம் என்பது பழமொழி. அதாவது ஆட்படையும் ஆற்றலும் இருந்தால் காலம் பார்க்க வேண்டியதில்லை என்று சிலர் கூறுவர். அவர்களுக்குக் காலத்தின் சிறப்புத் தெரியாது என்று சொல்லுகிறார் திருவள்ளுவர். கூகைகள் கூட்டமாய் இருப்பதில்லை; அவைகட்குப் பகல் ஒளியில் கண்ணும் தெரிவது இல்லை. காக்கைகளோ கூட்டமாய் வாழ்பவை; இரவில் அவற்றால் ஒன்றும் செய்ய முடியாது. அதைக் காட்டி,

**''பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது''**

என்று கூறுகிறார்.

பெரும்படை உடையராயினும், காக்கைக்குப் பகற் காலம் வேண்டும் என்று இதனால் விளக்குகின்றார். காலமல்லாக் காலத்தில், கடல்போன்ற படைகொண்டு சென்றாலும் வேந்தர் காக்கையின் கூட்டம் இரவில்

கூகையால் கொல்லப்படுவதுபோல வெற்றி பெற மாட்டாமல் வீழ்வர் என்பது இக்குறட்பாவின் கருத்து.

ஆனால், காலம் பொருந்தாமை கண்டு ஒடுங்கி யிருக்கும்போது மனதைச் செம்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி ஒடுங்கியிருக்கும் போது மனநிலையைக் கலக்கக்கூடிய எண்ணங்கள் எழுந்து பெருகிப் பெருங்கலக்கத்தை உண்டுபண்ணும். மேற்கொண்ட தொழில் சுருங்கி வலியிழந்து போன தாகவும் பொய் நினைவுகள் தோன்றி அலைக்கும். அவற்றிற்கெல்லாம் இடம் கொடுக்காமல் மேல் செய்ய வேண்டியவற்றைத் தெளிவாகச் சிந்தித்துக் காலமே நோக்கி மனத்தைத் திட்பமுடையதாக நிறுத்த வேண்டும். அதுபற்றியே திருவள்ளுவர்,

> **"காலம் கருதி யிருப்பர் கலங்காது**
> **ஞாலம் கருது பவர்"**

என்று கூறுகிறார்.

ஞாலம் கருதுவதாவது, உலகில் உழைப்பால் உயர்ந்து நிலைத்த புகழ் நிறுவுவது.

தொழில் செய்வதற்கு இதுகாறும் சொல்லிய வலியும், காலமும் அறிந்தால் மாத்திரம் போதாது. அதனை நடத்துவதற்கு ஏற்ற இடம் அறிய வேண்டும். எத்தகைய தொழிலுக்கும் இடம்தான் ஆதாரம். தொழிலுக்கு முதனிலை கூற வந்த தொல்காப்பியர் உறுப்பாகிய தொழிலையும், அதனைச் செய்பவனையும் அதனால் செய்யப்படும் பொருளையும் கூறி அடுத்துத் தொழிலைச் செய்வதற்கு இன்றியமையாமை விளக்க நிலம் கருவி காலம் என்ற மூன்றையும் முறையே கூறினார். திருவள்ளுவரும் தொழிலுக்கு வேண்டிய வலியும், காலமும் தெளிந்துகொண்டாலும், இடங்

கண்ட பின்பே தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

> "தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
> இடம்கண்ட பின்னல் லது"

என்று கூறுகிறார்.

அரசர்க்குரிய தொழில்களில் போர்த்தொழில் பெரிதாகையால் அதற்குப் பகைவரை முற்றுகையிடும் இடம் கண்ட பின்பே, முன்னணியாக எத்தகைய செயலையும் தொடங்க வேண்டும். அது நோக்கியே முற்றும் இடம் கண்ட பின்னல்லது எவ்வினையும் தொடங்கற்க என்று சொல்லுகிறார்.

இவ்வண்ணம் இடம் கண்ட வேந்தன் மேற்கொண்ட போர்த் தொழிற்குரிய எல்லாக் கூறுகளையும் நன்கு எண்ணி அமைத்துக் கொண்டானாயின், போர் தொடங்குவது நல்லது.

அந்நிலையில் அவனுக்கு அஞ்சாமை என்ற ஒன்று தான் பெருந்துணை. பலவகை வன்மைகளும் காலமும் தக்கவாறு அமைந்த போதிலும் நெஞ்சில் அஞ்சும் இயல்புடையனானால் அவனுக்கு எளிதில் வெற்றி பெறக் கூடிய அருமையான இடம் கண்டு நிறுத்திய போதும் அது பயன்படாது. அதனால்,

> "அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
> எண்ணி இடத்தால் செயின்"

என்று கூறுகிறார்.

போர் மேற்கொண்டு செல்லும் வேந்தனுக்கு போர் நிகழ்த்தற்கு அமைந்த இடம் சிறப்பாக அமைந்துவிடுமானால், பகைவர் படையினும் தன் படை சிறிதாயினும் வெற்றி உறுதியாம். அவ்விடத்தின்

அருமைப்பாடு பெரும் படையுடையனானலும் பகை மன்னனது ஊக்கத்தை அழித்துவிடும். இதனை,

> ''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
> ஊக்கம் அழிந்து விடும்''

போர் தொடுக்கும் வேந்தன் வேறு பல மன்னர்களை வென்று வீறு கொண்டவனாய் இருக்கலாம்; ஆயினும் சிறப்பில்லாத இடத்திற் சிக்கிக் கொள்வானாயின், மிக்க ஒரு சிற்றரசன் அவனை வென்று அழித்து விடுவான். எங்ஙனம் எனில் வேலேந்திய வீரர் பலரைக் குத்திக் கொம்பில் கோத்து வரும் பெரிய யானை ஒன்று கால் புதையும் சேற்றில் சிக்கிக் கொள்ளுமானால், ஒரு சிறு குள்ளநரியும் அதனைக் கொன்றுவிடும் என்று விளக்குகிறார்.

> ''கால்ஆழ் களரில் நரிஅடும் கண்அஞ்சா
> வேலாள் முகத்த களிறு''

என்பது திருக்குறள்.

இனி போர் செய்து வெற்றி பெறுவதற்கு இடம் ஒரு சிறந்த காரணமாயினும், அது பகைவர் நாட்டில் உள்ளதாயின், வென்றி காண்பது அரிதாகும். பகை மன்னன் வலிய அரண்களும் பிற சிறப்பும் இல்லாதவனாயினும் அவனது நாட்டுட் புகுந்து போர் தொடுப்பது கூடாது. அதனை வற்புறுத்தவே,

> ''சிறைநலனும் சீரும்இலர் எனினும் மாந்தர்
> உறைநிலத்தோடு ஒட்டல் அரிது''

என்று திருவள்ளுவர் உரைக்கின்றார்.

இதனை நீரில் வாழும் முதலையைக் காட்டி விளக்க முற்பட்டு, முதலை ஆழமான நீரில் இருக்குமாயின் பெரிய விலங்குகளையும் வென்று வீழ்த்திவிடும். அதுவே

நீர் நிலையை விட்டு நிலத்தின் மேல் வந்து விடுமாயின் சிறு விலங்கும் அம் முதலையைக் கொன்றுவிடும்.

**''நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்; புனலின்**
**நீங்கின் அதனைப் பிற''**

என்று கூறுகிறார்.

## தலைமைச் சிறப்பு

நாடாளும் அரசு பல்வேறு துறைகளை உடையது. அவை எல்லாவற்றையும் வேந்தன் ஒருவனே பார்ப்பது என்றால் முடியாது. ஆதலால் ஒவ்வொரு துறைக்கும் தக்க தலைவரைத் தேர்ந்து நிறுத்துவது முறை. அத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது ஓர் அரிய செயலாகும். ஒவ்வொரு தலைவரும் நாட்டு மக்களின் நலம் கருதி நடக்கும் அரசின் கருத்தை நெஞ்சில் நினைந்து ஒழுகும் தகுதியுடையவனாக வேண்டும். அத் தகுதி ஒருவனுக்குக் குடிப்பிறப்பாலும் கல்வியாலும், சூழ்நிலையாலும் உண்டாகும். அவன் பிறந்த குடிக்கு ஏற்ப, குற்றமில்லாமல், பழிப்புக்கு அஞ்சி நாணும் தன்மையுடையவனாக இருக்க வேண்டும். அதனை,

**'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு''**

என்கிறார் திருவள்ளுவர்.

பழிப்புண்டாகுமானால் அது புண் வடுப்போல எப்போதும் மாறாதாகையால், வடு என்று கூறுகிறார்.

நிரம்பக் கற்றிருக்கின்றான் என்பது கொண்டு ஒருவனுக்கு தலைமை தருதல் கூடாது; ஏனெனில் கற்று வல்லவரிடத்தும் அறியாமைக் குற்றம் இல்லாமல் இருப்பதில்லை என்று கூறுகிறார்.

**''அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு''**

என்கிறது திருக்குறள்.

அறியாமை இங்கே வெளிறு என்று குறிக்கப்படு கிறது.

தலைமைக்குரிய அறிவுத் தகுதியில்லையாயினும் ஒருவனுடைய உறவினரும் சுற்றத்தாரும் உயர் நிலையில் அரசுக்கு வேண்டியவர்களாயிருப்பர். அந்தத் தொடர்பு பற்றி ஒருவனுக்குத் தலைமைப் பதவி அளிக் கப்படுவதுண்டு. அத் தலைவனிடம் தோன்றும் குற்றங் களாலும், குறைகளாலும், அவனைத் தலைவனாக்கிய பெரியோர்களுக்கும், அரசுக்கும் பேதைகள் என்ற பழி வந்து சேரும் என்கிறார் திருவள்ளுவர்.

**''காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**
**பேதமை எல்லாம் தரும்''**

என்று கூறுகிறார்.

ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்து எடுப்பதாயின் அவனுடைய குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து காணவேண்டும். குணமே உருவாக அமைந்தவர் ஒருவரும் இல்லை. குற்றமே வடிவாக உள்ளவரும் உலகத்தில் இல்லை. இரண்டும் கலந்தவரே மக்கள். ஆகையால் குணமும் குற்றமும் நாட வேண்டியது முறையாகும். அங்ஙனம் நாடியபோது குணம் மிகுதி யாகவும் குற்றம் குறைவாகவும் இருந்தால் அவனைத் தேர்ந்துகொள்ள வேண்டும். குற்றம் மிகுதியாக உடையவனைத் தள்ள வேண்டும்.

இதனை,

**''குணம் நாடிக் குற்றமும்நாடி அவற்றுள்**
**மிகைநாடிக் மிக்க கொளல்''**

என்று திருக்குறள் உரைக்கின்றது.

இந்த முறையில் தலைவர்களைத் தேர்ந்தெடுப்ப தென்றால் மிகவும் கடினமாகவே இருக்கும். அதுபற்றியே தலைவர்களை ஆராயாமல் ஏற்படுத்தவும் கூடாது என்கிறது திருக்குறள். இன்ன துறைக்கு இத்தகைய தலைவர் வேண்டும் எனத் தேடுவது அருமை. மக்களில் தலைமைப் பண்புடையவர் பலர் உண்டு. முதலில் அவர்களைத் தேர்ந்து, அதன்பின் அவர்களுக்குத் தக்க துறை யாது எனத்தேர்ந்து அதற்குத் தலைவராக்க வேண்டும்.

**''தேறற்க யாரையும் தேராது! தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்''**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

தேர்ந்தபின் எவ்வாறு தேறுவது எனின், அதற்கு அவர்கள் செய்துள்ள செயல்களே துணை புரியும். கட்டளைக் கல்லாவது உரைக்கப்படும் பொன்னின் மாற்றைக் காட்டுவது போல அவர்களுடைய செயல்களே அவரிடம் உள்ள பெருமைப் பண்பையும் சிறுமைத் தன்மையையும் காட்டி விடும் என்று சொல்லுகிறார். இதனை,

**''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்''**

என்கிறார்.

மேலே சொல்லிய முறையில் தலைவர்களைத் தேர்ந்து கொள்ளும்போது, ஓர் எச்சரிக்கையையும் திருவள்ளுவர் தருகின்றார். நல்லறிவும், நற்செயலும் உடையவர் ஒருவரைக் கண்டதும் தலைமைக்குத் தக்கவர் என்ற எண்ணமுண்டாகும். அவரது வளர்ந்த சூழ்நிலை யாது? உற்றார் உறவினர் எத்தகையார் என நாடறிய வேண்டும். குடிச்சிறப்போ, உறவினர் தொடர்போ ஒன்றும் இல்லாதவரானால், அரசியல்

தலைமைப் பதவிகட்குத் தக்கவரல்ல என்று விலக்குச் சொல்லுகிறார். ஒரு தொடர்பும் அற்றவர், வாழ்க்கையில் பற்றில்லாதவராவர்; மக்களின் நல்வாழ்க்கையை நாடிப் பணி புரிவது அரசு. கருத்து முரண்படுவதால் அரசியல் தலைமைக்கு ஆகாதவராகின்றார். இத்தகைய பற்றில்லாதவர் பழிபாவங்களுக்கு நாணவும் மாட்டார்களாம். இதனை,

**"அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றவர்**
**பற்றிலர், நாணார் பழி"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

இவ்வகையில் தக்கவரைத் தேறியபின், அவர்களைத் தலைமை நிலையில் வைத்து ஆளும் திறமை ஒரு பெருஞ் செயலாகும். எவ்வளவு தெளிவாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்த போதிலும், பதவி பெற்றதும் மிகப் பலர் முன்னை நிலையிலிருந்து வேறாக மாறிவிடுகின்றார்கள். தேர்தல் நிகழும்போது பண்பும், பரிவும் தோன்ற நிற்பவர்கள் பதவியேற்றதும் வேறுபடுவதை உலகியலில் நாளும் காணலாம். அது கண்டே,

**"எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்**
**வேறாகும் மாந்தர் பலர்"**

என்று கூறுகின்றார்.

பலரிடத்தில் இந்த மாறுதல் உண்டாவது ஏன் எனில், மேற்கொண்ட தொழிலின் தன்மைதான் காரணம் என்பதற்கே, வினை வகையால் வேறாகும் மாந்தர் என்று குறிக்கின்றார்.

இவ்வாறு வேறுபாடும் மாறுபாடும் கொள்ளாமல் செம்மை நிலையில் இருப்பவர் குணம் செயல்கள் யாவை எனின், நான்கு பண்புகளைத் திருக்குறள் எடுத்துக் கூறுகிறது.

**"அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு."**

சிக்கலான நிலையிலும் தெளிந்த உள்ளம் உடையராவதற்குத் தேற்றமும் நேர்மை தவறாமல் செயல் புரிவதற்கு அவா இல்லாமையும் வேண்டப்படுகின்றன. அதனால், தேற்றம் அவா இன்மை என்பவைகளை எடுத்து மொழிகின்றார்.

பதவிக்குரிய செயல் புரியும்போது, அவனுடைய மனம் எவ்வாறு இயங்குகிறது என்பதை ஆட்சியாளர் அறிய வேண்டும். செய்யும் செயலால் விளைவது நன்மையாக இருக்க வேண்டும் என நினைப்பவனே அவ்வப் பதவிக்கும் தக்கவன்.

**"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்"**

என்று கூறுகின்றார் திருவள்ளுவர்.

பதவியேற்பவன் அறிவு முற்றும், தான் பணி புரியும் துறையால் நாடு வருவாய் பெருகி வளம் பெறுதற்கேற்ற செயல்முறைகளையே ஆராய்ந்த வண்ணம் இருக்க வேண்டும்.

**"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை"**

என்று திருக்குறள் கூறுகின்றது.

வருவாயைப் பெருக்குவது நாட்டை வளம்படுத்துவதற்கே என்பது அரசியல் செலவைச் சுருக்கி ஊதியத்தைப் பெருக்குவது வாணிகத்தின் குறிக்கோள். சில வாணிகச் செல்வர் அரசியல் தலைமை ஏற்கும்போது நாடு வளம்படாமல் போவதற்கு இவ்வேறுபாடு அறியாமையே காரணம். அதனால்தான் வருவாய் மிகுவித்து வளம்படுத்தலையும் அதற்கு நாட்டின் நலங்களை ஆராய்வதையும் இங்கே எடுத்து வற்புறுத்துகிறார்.

செல்வத்தாலும் சுற்றம் நிறைந்த சூழ்நிலையாலும் சிறந்துள்ளான் என்பது கொண்டு ஒருவனைத் தலைமை தாங்கிப் பணிபுரியச் செய்வது கூடாது. வருவாய்க்குரிய வழி முறைகளை அறிந்து, இடை நிற்கும் தடைகளைத் தாங்கி செயற்படும் ஆற்றலுடையவனே தலைவனாதல் வேண்டும்.

"அறிந்து ஆற்றிச் செய்கிற்பார்க்கு அல்லால்
சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று"

என்று அறிவிக்கின்றார் திருவள்ளுவர்.

இங்கே தலைமை ஏற்றுச் செய்பவன் என்று சொல்லாமல், செய்கிற்பான் அதாவது செய்யும் ஆற்றலுடையவன் என்று கூறுவது ஏன் என்று கேட்கலாம். செய்தற்குரிய செயலின் இயல்பையும், அதற்குரிய காலத்தையும் நேர்நின்று செய்பவன் திறமையையும் எண்ணிச் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற ஆற்றல் இன்றியமையாதது. அதனை விளக்குவதற்காகவே,

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இவ்வாறு தக்கோர் தலைமையில் அரசின் துறை பலவும் நன்றாக இயங்கினும், நாடாளும் வேந்தன் நாள் தவறாமல் மேற்பார்வை செய்தல் வேண்டும். ஏனெனில் பணிபுரிவோர் நேர்மை தவறுவாராயின் நாடு ஊழல்களும், கொடுமைகளும் மலிந்து கெடும். இதனை நினைந்தே,

"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு"

என்று கூறுகிறார்.

நாடோறும் இவ்வாறு மேற்பார்வை செய்வதால் சிலவகைச் செயல்களுக்குத் தலைமை தாங்குவோர்

பொருந்தாதொழிவதும், வேறு சிலர் பொருந்துவதும் காணப்படும். பலருடைய திறமைகளும் தெரிந்து கொள்வதற்கு இது பயன்படுகிறது. அரசின் ஆட்சி முறை, தலைவர்களின் தகுதி கண்டு ஏற்ற பணியும், பொறுப்பும் தந்து செயல்படச் செய்வதில்தான் சிறப் படையும். அதுபற்றி,

> ''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்''

என்று திருக்குறள் கூறுகிறது.

இவ்வகையில் செயல் தலைவர்களைத் தேர்ந்தெடுக் கும்போது, செயல் அளவுக்கு ஒவ்வொருவர்க்கும் தன் உரிமை இருக்க வேண்டும். செயல்படும்போது ஒவ் வொரு நிலைமையிலும் ஏவின செய்யும் அடிமைபோல மேலவரைக் கேட்டுக் கேட்டுச் செய்வதாயின், மேற் கொண்ட செயலும் முற்றுப்பெறாது; கருதிய பயனும் கைகூடாது. இதுபற்றியே,

> ''வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
> அதற்குரிய னாகச் செயல்''

என்கிறார் வள்ளுவர்.

இத்தகைய உரிமையோடு செயல் புரிபவர்களில் சிலர் ஒரு செயலை, வேலையே மேற்கொண்டதும், ஊண் உறக்கம் இன்றி அதன்கண் மூழ்கிக் கிடப்பர்; இரவும் பகலும் அதனையே எண்ணுவதும் பேசுவதும் ஆக இருப்பர். அவனுடைய ஊக்கமிகுதி கண்டு பாராட்டி ஓய்வின்றி உழைப்பதால் வரும் உடல்நலக் குறைவை அறிவித்து, செய்வினை சீர்பெற நடத்துவதுதான் தலை வர்களின் தலைமைக்குச் சிறப்பு. அது காணும்போது வேறு வகையாக நினைக்கும் தலைவர்கள் சிலர் உண்டு. இவ்வேலையின் இவன் இவ்வாறு அழுந்திக் கிடப்பதால் ஏதோ தனக்கென ஒரு பயன் பெறுகிறான் போலும்

என்று ஐயுறுவர்; சிலர் மனம் பொருமல் இகழ்வர். அவர்களால் மேற்கொண்ட வேலே இனிது நிறைவுருது; பெருங்கேடுதான் விளேயும். இதையும் திருவள்ளுவர் காண்கின்ருர்.

**''வினேக்கண் வினேயுடையான் கேண்மை வேருக**
**நினேப்பானே நீங்கும் திரு''**

என்று வருந்திக் கூறுகின்ருர்.

## சுற்றமும் பணிவும்

சென்ற வாரத்தில் அரசியல் தலைமைப் பணிக்குரியவர்களேத் தேர்ந்து கொள்ளும் திறமும் அவர்களேச் செயல் முறையில் வைத்தாளும் இயல்பும் பற்றித் திருவள்ளுவர் உரைத்தது கண்டோம்.

பலவேறு துறைகளின் தலேவர் வேந்தனேச் சூழ இருப்பினும், தனி நிலேயில் அவனுக்கு உறவினரும் அறிவுடைய நண்பரும் உண்டு. அவர்கள் அவனுடைய உடலோடும் உயிரோடும் அன்பால் பிணிப்பூண்டவர், அதனுல் சுற்றம் எனப்படுகின்ருர்கள்.

ஒருவனது தனி வாழ்வில், அவனேப் பிறர் வந்து சார்தற்குப் பற்ருக உள்ளவை அவனின் வேருகவுள்ள செல்வமும் நிலேயுமாகும். அவை அவ்விடத்தில் நிலேயாக இருப்பதில்லே ஆதலால், அவை தொலேந்த வழி நீங்குவோர் சுற்றமாக எண்ணப்படுவதில்லே. அதனே வேறுபடுத்திக் காட்டவே,

**''பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே உள''**

என்று திருவள்ளுவர் கூறுகின்ருர்.

நில்லாது நீங்கும் செல்வமும் சிறப்பும் நிலேக்கு மாறு அறிவும் செயலும் அவற்றிற்கு உடன் வேண்டிய

உதவியும் செய்பவர் சுற்றத்தார். அவர்களால் ஒரு வனுக்கு உண்டாவன ஆக்கமே. அதனை,

**''விருப்பருச் சுற்றம் இயையின் அருப்பரு**
**ஆக்கம் பலவும் தரும்''**

என்று கூறுகிறார்.

சுற்றத்தார் விளைவிக்கும் நலங்கள் பலவகையிற் கிளைப்பதால், அவைகளை அருப்பரு ஆக்கம் என்று வள்ளுவர் உரைக்கின்றார்.

செல்வம் பெற்றவிடத்து அதனைப் பேணிக் காப்ப தற்குப் பிறர் துணை வேண்டும். துணையில்லையாயின் செல்வமே, உடையவனைக் கொன்றுவிடும். துணை வகையில் அன்புடைய சுற்றத்தாரைவிட உலகில் வேறு யாரும் இல்லை ஆதலால் அச்சுற்றத்தார் எப்போதும் சூழ இருக்கும் நிலையும், அதற்கு ஏற்ப ஒழுகும் திறமை யும் செல்வமுடையவனுக்கு மிகவும் வேண்டப்படுகின் றன. அதை வற்புறுத்தவே,

**''சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்''**

என்று சொல்கிறார்.

இனி, சுற்றத்தார் தன்னை நிழற்போற் சுற்றிச் சூழ்ந்திருக்கச் செய்வது எப்படி? எனின் அவர்க்கு வேண்டுவன அறிந்து கொடுப்பன ஒன்று; சொற்களைப் பேசி மகிழ்விப்பது ஒன்று. இவைகளை,

**''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தாற் சுற்றப் படும்''**

என்று கூறுகிறார்.

இனிமையான சொல்லைச் சொல்வது போதாது. வேண்டுவது கொடுத்தால்தான் சுற்றம் துணை செய் யும் என்பது விளங்கவே, கொடுத்தலும் இன்சொல் லும் எடுத்து மொழிகின்றார்.

இவ்வாறு சுற்றம் சூழ வாழ்பவர் குறையாத நலம் பல உடையராவர் என்பதை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குகிறார். காக்கைகளில் ஒன்று ஏதேனும் இரை கிடைக்குமாயின் தான் தனித்து உண்பதில்லை தன் இனமான காக்கைகளைக் கூவி அழைத்து உடன் இருந்து உண்ணும்; அந்த இயல்புடைய செல்வர்களுக்கே ஆக்கம் மேன்மேலும் உண்டாகும் என்பாராய்,

**''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள''**

என்று கூறுகிறார்.

இனி இச் சுற்றத்தார் நீங்காமல் எப்போதும் சூழ்ந்திருக்க வேண்டுமே என்றால், அதற்கு வழி கொடுப்பதை மிகுதியாகக் கொடுப்பதும், அவர்களிடம் தவறு உண்டானாலும் சினம் கொள்ளாமல் பொறுத்துத் தழுவிச் செல்வதும் வேண்டும்.

**''பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையான் மாநிலத்து இல்லை''**

என்று மொழிகின்றார். மருங்கு என்பது சுற்றம்.

இச் சுற்றத்தாரின் உறவினரின் பேறாய் அறிவும் ஆற்றலும் கொண்ட சான்றோர் சுற்றம் மிகவும் சிறந்ததாகும். அவர்களோடு அளவளாவுவது எப்போதும் வேண்டியதொன்று. அரசன் ''ஏரி நிறைந்தனைய செல்வனாக'' இருக்கலாம்; அளவளாவுவது அந்த ஏரியின் கரையை வலிமைப்படுத்துவதாகும். இல்லையானால், கரையில்லாமல் ஏரியைக் குளத்தை நீரால் நிறைக்க முயன்றால் நீரனைத்தும் நில்லாது போய்விடுவதுபோல் எய்தும் செல்வமெல்லாம் இல்லாமல் கெட்டொழியும். இதனை,

**''அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று''**

என்று கூறுகிறார். குளவளா என்பது குளம் அல்லது ஏரி; கோடு என்பது கரை.

இச்சான்றோர் சுற்றம் ஏனைய உறவினர் போல்வதன்று. கொடுத்தலும் இன்சொல்லும் மட்டும் இச்சான்றோர் சுற்றத்தை ஈர்க்கவோ கட்டிப் பிடிக்கவோ போதாது. சுற்றத்தார் என்ற வகையில் பொதுப்படி நோக்காமல் அவரவர் சிறப்பறிந்து அதற்கேற்ப ஒழுக வேண்டும். சான்றோருள் பலர் அச்சிறப்புக்கென்றே உயிர் வாழ்பவர். இதனை,

**''பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர்''**

என்று கூறுகிறார்.

"பொது நோக்கு ஒழிமதி புலவர்மாட்டே" என்று சங்கச் சான்றோரும் கூறுவர்.

மேலும், சுற்றத்தாரைத் தழுவி ஒழுகும்போது, சிலர் வேறுபட்டு நீங்கிவிடுவர். நீங்கினால், வேந்தனது வன்மையும் செல்வமும் குறைதற்கு வழி உண்டாகும். அதனால், நீங்கினதற்குக் காரணம் யாது என்று ஆராய்ந்து அறிந்து அதற்கு ஒத்தது செய்து பிரிந்தவரைச் சேர்த்துப் பிணித்துக்கொள்ள வேண்டும். பிரிந்தவர் தாமாகவே வந்தாலும், காரணத்தை நன்கறிந்து ஏற்பதுதான் முறை என்பர்.

**''உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்திருந்து எண்ணிக் கொளல்''**

என்பர்.

இவ்வாறு உறவினர், உயர்ந்த சான்றோர், உண்மை நண்பர் ஆகிய சுற்றம் என்றும் நீக்காதபடி பிணித்து ஒழுகினாலும், சிலர் பிரிந்து போவதும் உண்டென்றால், அதற்குள்ள காரணங்களில் வேந்தனுடைய மனநிலை

யும் ஒன்று. அரசனும் மனிதனுகையால் அவனுக்கும், மறதியும் சோர்வும் ஆகாதவையே. இம்மறதி சோர்வுகளை ஒரு சொல்லில் அடக்கிப் பொச்சாப்பு என்கிருர் திருவள்ளுவர்.

பொச்சாப்பு எப்பொழுது தோன்றும் எனில், மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் தோன்றி ஒருவனை உவகைக் கடலில் அழுத்தும்போது இப்பொச்சாப்பு என்ற குற்றம் தோன்றுகிறது. அதனுல் விளைகிற தீமை அளவிறந்த சினத்திஞல் உண்டாவதைவிடப் பெரிது என்று சொல்லுகிருர்.

> "இறந்த வெகுளியின் தீதே சிறந்த
> உவகை மகிழ்ச்சியின் சோர்வு"

என்பது திருக்குறள்.

இப் பொச்சாப்பு, உள்ளத்தில் நிலவுகிறபோது அறிவு மழுங்கிவிடும். அதனுல் வருவதை முன் அறிந்து காக்கும் திறம் இழந்துவிடுகிருன். அதனுல் பின்னே துன்பம் வந்து தாக்கும்போது பெரிதும் வருந்து கின்ருன். இதனை,

> "முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
> பின் ஊறு இரங்கி விடும்"

என்று கூறுகிருர்.

முன்னறிந்து காத்துக் கொள்ளாமை ஒருபுறம் இருக்க, எந்த எந்தச் செயல்களை நல்லவை என்று சான்ருேர் புகழ்கின்ருர்களோ அச் செயல்களை இகழ்ந்து செய்யாது ஒழிகின்ருன். அதனுல் பொச்சாப் புடையவன் இவ்வொரு பிறப்போடு நில்லாமல் எழு பிறப்பும் துன்பத்துக்குள்ளாகின்ருன் என்று திரு வள்ளுவர் வருந்துகிருர்.

''புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்''

சோர்வும் மறதியும் இன்றி யாரிடத்தும் தெளிந்த மனதுடன் எப்போதும் இருக்கின்ற தன்மை ஒருவனிடத்தில் தவறுமல் அமைந்துவிடுமாயின், அதற்கு நிகரான நல்லியல்பு இல்லை என்று கண்ட திருவள்ளுவர்,

''இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அஃதொப்பது இல்லை''

என்று கூறுகிறார்.

ஒருவனுக்கு வறுமை வந்துவிடுமாயின், அது அவனுடைய அறிவையே கெடுத்து விடுகிறது. அது போலப் பொச்சாப்புடையவர்க்குப் புகழ்பெறும் தன்மை இல்லாதொழியும் என்று கூறுகிறார் வள்ளுவர்.

''பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அறிவினை
நிச்ச நிரப்புக் கொன்றாங்கு''

என்று உரைக்கின்றார்.

மறதி என்ற இப்பொச்சாப்பு ஒருவனிடம் உண்டாகாதபடி அவ்வப்போது ஒவ்வொன்றையும் நினைவு கூர்ந்து செய்வானாயின், முடியாது என்று சொல்லக் கூடிய செயல் ஒன்றுமே இல்லையாம் என்று கூறுவாராய்,

''அரியஎன்று ஆகாத இல்லை பொச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின்''

என்று கூறுகிறார். நினைப்பும் மறதியும், மனத்தில் நிகழ்வதால் அதனைப் பொச்சாவாக் கருவி என்று புகல்கின்றார்.

மனதில் கருதிய கருத்துக்களை மறவாமல், மறதிக்கும் சோர்வுக்கும் இடம் கொடாமல், நினைத்த வண்ணம் இருக்க வேண்டும். நினைந்து கொண்டே

இருப்பவன் நினைத்ததை நினைத்தபடியே முடிப்பான்; பயனும் நினைந்த அளவே எளிதில் வந்து சேரும் என்று கூறுகிறார்.

**“ உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்''**

எவ்வளவு விழிப்பாகவும், சோர்வு படாமலும் இருந்தாலும் மறதி புகுந்து விடுகிறதே என்று கேட்டால், எப்பொழுது என்று கேட்கிறார். சோர்வில்லாமல் மகிழ்ச்சியோடு இருக்கும்போதே மறதி வந்துவிடுகிறதே என்று விடை வருகிறது. மகிழ்ச்சி தோன்றும் போது அறிவு மயங்கும்; அந்நிலையில், இத்தகைய மகிழ்ச்சிக் காலத்தில் தான் செய்ய வேண்டியதை இகழ்ந்து கெட்டவர்களை நினைக்க வேண்டும். சோர்வு வரும்போது சோர்வினுல் அழிந்வதரை நினைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மறதியும் சோர்வு மாகிய பொச்சாப்பு தலை காட்டாது, நீயும் புகழ் பெறுவாய் என்று அறிவுறுத்துகிறார்.

**'' இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து''**

என்பது அத் திருக்குறள்.

## நீதிமுறை

**நா**டாளும் வேந்தன் மறதியும் சோர்வுமாகிய பொச்சாப்பு என்னும் குற்றம் கல்லாதவனுயின் அவனது ஆட்சியில் உண்டாகும் நன்மைகள் பல. அவற்றில் நீதிமுறை தலைசிறந்ததாகும். உலகில் வாழும் உயிர்வகை அனைத்தும் மழையை எதிர்நோக்கும். ஆனுல் மனவுணர்வுடைய மக்களினம் மழைக்குக்

காரணம் ஆட்சி புரியும் மன்னனது நீதிமுறை என்று அறிந்து அதையே நோக்கி வாழ்கிறது. இது பற்றியே,

**''வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்,**
**கோல்நோக்கி வாழும் குடி''**

என்று கூறுகிருர்.

மக்களினம் குடும்பம் குடும்பமாக வாழ்வது. குடும்பம் என்பது கணவன், மனைவி என்ற இருவர் சேர்ந்தது; இதைக் குடி என்று கூறுவர். அதனுல் தான் மக்கள் என்று கூருமல் குடி என்று குறிக்கின்ருர். குடும்ப வாழ்வுக்கு நீதியும், முறையும், பாதுகாப்பும் இன்றியமையாதவை. அதனுல் மன்னவன் செய்யும் நீதிமுறையை மக்கள் நோக்குகின்ருர்கள்.

நீதிமுறை என்பது மன்னவனுல் எங்ஙனம் செய்யப் படுகிறது. மக்களிடம் குணமும், குற்றமும் கலந்திருப் பதால் மன்னவன் நடுவுநிலையுடையவனுக வேண்டும். வேண்டியவர், வேண்டாதவர், நண்பர், பகைவர், செல்வர், வறியவர், கற்றவர், கல்லாதவர், பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி யாரையும் ஒப்பக் கருதி நன்மதிப்பும், இரக்கமும் கொண்டு யார்பக்கமும் சாயாமல் நடு நிற்பது இறை எனப்படும். இறை புரிந்து உண்மையை ஓர்ந்து உணர்வது நீதி வழங்கு தற்கு அடிப்படை. குற்றம் எனக் கண்டபோது, தக்க முறையில் தண்டிப்பது நீதி வழங்குவதாகும்.

இதை,

**''ஓர்ந்து கண்ணேடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வதே முறை''**

என்று திருக்குறள் கூறுகிறது. இதை செங்கோன்மை என்று நூல்கள் குறிக்கும்

இவ்வாறு மன்னவன் மேற்கொள்ளும் இறைமைச் செயல்தான் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த பாதுகாப்பாகிறது.

இந்த மன்னவனுக்குப் பாதுகாப்பு யாது எனின், மக்களுக்கு நேர்மை கெடாமல் அவன் வழங்கும் நீதியே யாகும். ஆதலால்தான்,

**''இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்''**

என்று திருவள்ளுவர் செப்புகின்றார்.

உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் இது பொது வுண்மை ஆதலால் வையகம் எல்லாம் இறை காக்கும் என்று குறிக்கின்றார்.

இறைபுரிந்து முறை செய்வதைத்தான் செங்கோல் செலுத்துதல் என்று கூறுவர். இதனைச் செய்யுங்கால் வேந்தன் குடிகளின் வேறுபட்டவனாய்த் தனிமகனாய் இருத்தல் கூடாது. அரசு இருப்பதே குடிகளுக்காக ஆதலால், எதனையும் அவன் குடிகளைத் தழுவியே செய்தல் வேண்டும். அப்போதுதான் குடிகள் அவன்பால் அன்பு கொண்டு அவனைச் சூழ்ந்து நின்று வாழ்வார்கள்.

**''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு''**

என்று கூறுகிறார்.

இடைக் காலத்தவர், நாட்டு மக்களினின்றும் வேந்தனைப் பிரித்து வேறுபடுத்தி தனியினமாக அமைத்தனர்; அதனால் குடிதழுவி இயங்க வேண்டிய அரசு முறை பிறழ்ந்தது; மன்னர்கள் மறைந்தனர். மக்களாட்சி மலர்ந்தது.

எல்லா மக்களையும் அன்புடன் தழுவிச் செல்வது வேந்தர்கள் நிலைபெறுவதற்குக் காரணமாயின், குற்றம் செய்தவர்களை வேந்தன் சிறை செய்து வருத்துவதும், கொல்லுவதும் முறையாகுமா என்று கேட்கலாம். உணவுக்கென நெற்பயிரை வளர்க்கிறோம். அதனிடையே களை தோன்றுவது போல, இன்பம் பெறுவதே நோக்கமாக நடத்தப்படும் மக்கள் வாழ்வில் குற்றம் செய்யும் சிலர் களைபோலத் தோன்றுகின்றனர். அவர்களுக்குக் கொலைத் தண்டனை அளிப்பது களை எடுப்பது போல்வதாம். அதுகுறித்தே,

**" கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
**களை கட்டதனொடு நேர்"**

என்று கூறுகிறார். சிறை செய்வது ஏனெனின் குற்றவாளிகள் தாம் செய்த குற்றத்தை உணர்ந்து திருந்துவதற்காகும்.

மக்களினத்தில் ஒதுக்கப்பட்டு வறுமையில் கிடந்து வருந்தும் குடிகளில் குற்றப் பண்புமிகுந்து கொடியவர் தோன்றுவதுபோல, மக்களிடையே வேடுக உயர்த்தப்பட்டுச் செல்வக் களிப்பில் மகிழும் வேந்தர் குடியில் கொடியவர் தோன்றுவர். அவர் அரசு புரிவாராயின் கொடுங்கோன்மை தலைவிரித்தாடும். மக்களாட்சியிலும் நேர்மையறிவில்லாதார் பெரும்பாலராயின் நாடு துன்பத்துக்குள்ளாகும்.

நீதிமுறை பிறழ்ந்து நல்லவர்களைக் கலந்து ஆராயாமல் வேந்தனது அரசு இயங்குமானால், நாட்டில் குடிகளின் தொகை குறையும்; பொருள் வளமும் சுருங்கிவிடும்.

**" கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு"**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

செங்கோன்மையின்றிச் சான்றோரது துணையும் இல்லாத போது, ஆள்வலியும் பொருள்வலியும் தேய்ந்து அரசு கவிழ்ந்துவிடும்; அரசன் நிலையின்றிக் கொலையுண்டு மடிந்து போவான். அதனால்தான்,

**" மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃது இன்றேல்**
**மன்னாவாம் மன்னர்க்கு ஒளி"**

என்று கூறுகிறார்.

செங்கோல் செலுத்தும் அரசன், கொடுத்தலும் அருள்புரிவதும், குடிகளைத் தழுவி ஒழுகுவதும் இயல்பாகவுடையவனாவன். ஆதலால் அவனுக்கு ஆள் வலியும், படைவலியும், துணைவலியும் மிகுந்து விடுவதால் அவனுக்குக் கேடு செய்யும் செயல்களோ, பகைவர்களோ தோன்றுதற்கு இடமில்லையாம். அவன் புகழும் உலகமுழுதும் பரவி ஒளி செய்யும். அரசின்பால் கொடுங்கோன்மையும் அரசனிடம் கொடுமைப் பண்பும் இருக்குமானால் சிறிது காலத்திற்குள்ளே நாட்டில் அகப் பகையும், புறப்பகையும் தோன்றி அரசனை ஒழித்துவிடும். அதனால்தான் மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை என்று திருக்குறள் கூறுகிறது. முன்பே கொடையாளி செங்கோல் குடியோம்பல் என்ற நான்கும் உடையான் வேந்தர்க்கு ஒளியாம் என்று கூறினாராதலால் இங்கே ஒளிமன்னாவாம் என்கிறார்.

அரசு கொடுமையுடையதாயின் ஏழை எளியவர் தான் துன்பப்படுவார்கள். செல்வர்கள் தங்கள் செல்வத்தால் தம்மைக் காத்துக் கொள்வார்கள் அல்லவா? அங்ஙனம் இருக்க கொடுங்கோல்வேந்தன் ஆட்சியில் நாட்டவர் அனைவரும் நாடோறும் துன்புற்றுத் தேய்ந்து கெடுவர் என்பது எங்ஙனம்? என்று கேட்கலாம். எளியவர் துன்பத்திலே ஆழ்ந்து கிடப்பதால்

அவர்களுக்கு அரசின் கொடுமை தெரியாது. செல்வர்களுக்குத் துன்பம் மிகுதியாக இருக்கும். அந்த அரசில் முறையோ, பாதுகாப்போ இல்லாமையால் அரசேயன்றி வலியுள்ளவர் பலரும் செல்வர்களின் செல்வத்தைப் பல வகையில் துன்புறுத்திப் பறித்துக்கொள்வர். இரவும் பகலும், அச்சமும் அவலமும் செல்வர்களை அலைத்த வண்ணம் இருக்கும். அது பற்றியே,

**"இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோற்கீழ்ப் படின்"**

என்று கூறுகிறார். வறுமையால் எளிமையற்றவரின் துன்பத்தை விடச் செல்வர்களுக்குச் செல்வத்தால் உண்டாகும் துன்பம் பெரிதாகும் என்பதை விளக்குவதற்காக, இன்மையின் இன்னாது உடைமை என்று திருக்குறள் கூறுகிறது.

கொடுங்கோல் மன்னன் குடிகளிடத்தில் வரி வாங்குவதே தனிமுறை. வழிப்பறி செய்யும் கள்வர், கையில் வாளும், வேலும் காட்டி உள்ள பொருளைக் கொடுக்கிறாயா கொல்லட்டுமா என்று கேட்பதுபோலத் தான் கொடுங்கோலரசும் குடிகளை வேலும், வாளும் கொண்டு அச்சுறுத்திப் பொருள் பறிக்கும். இதனை,

**"வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு"**

என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

இத்தகைய அரசியல் மக்கள் என்ன வருமோ என்ற அச்சத்தாலும் பொறுக்கமாட்டாத துன்பத்தாலும் கண்ணீர் சொறிந்தவண்ணம் இருப்பர். ஏழை அழுத கண்ணீர் சும்மா விடுமா? கொடுங்கோல் அரசின் வாழ்வும் கொடுமை செய்பவர் செல்வமும் நெடுநாள் இருக்காது என்று ஆறுதல் கூறுகிறார் திருவள்ளுவர்.

**"அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை"**

என்பது அவரது அருளுரை.

செங்கோல் வேந்தன் நாட்டிலும் மக்களுக்கு முறை செய்யும்போது குற்றத்துக்குத் தண்டனை உண்டல்லவா? தண்டனை என்ருல் அச்சந்தானே என்று கேட்கலாம். செய்யப்பட்ட குற்றத்தைத் தக்க முறையில் தேர்ந்து நீதி நெறியில் ஆராய்ந்து, மீளவும் அத்தகைய குற்றம் செய்யாதபடி உலகியலுக்கு ஒத்த அளவில் ஒறுப்பது செங்கோல் அரசின் செயல். அதனுல் குற்றம் செய்பவன் தன் குற்றத்தை உணர்ந்து தண்டனையை அச்சமின்றி ஏற்றுக்கொள்ளுகிருன். இதனை விளக்குதற்கே,

**"தக்காங்கு நாடித்தலைச் செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து"**

என்று கூறுகிருர்.

தண்டனை அளிக்கும்போதும் அச்சுறுத்துவது போலக் காட்டிக் குற்றவாளியின் அறிவு கலங்காதபடி மென்மை குன்ருமல் ஒறுப்பர், நல்லரசர். அதனுல் நர்ட்டில் நலம் பலவும் பெருகும் என்பர். இதனை,

**"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்"**

என்று கூறுகின்ருர்.

செங்கோல் செலுத்தும் வேந்தன் வந்து காண்பதற்கு எளியவனுகவும், கடுஞ்சொல் இல்லாமல் இனிமையாகப் பேசும் இயல்பினனுகவும் இருப்பதால், அவனைக் காண்பது தெய்வத்தைக் காண்பதுபோல மக்கள் கருதி மகிழ்வர். கொடுங்கோல் மன்னனைக் காண்பதே அரிது. காண நேரின், முகம் கறுத்து, ஏன் தான்

இவனைப் பார்த்தோமோ என்று மக்கள் வருத்தத்தோடு பேயைக் கண்டவர்போலத் துன்பப்படுவர் என்பது விளங்கத் திருக்குறள்,

"அருஞ்செவ்வி இன்னா முகத்தன் பெருஞ்செல்வம்
பேய்கண் டன்ன துடைத்து"

என்று பேசுகின்றது.

இங்ஙனம் கண்டார்க்கு அச்சமும், வாழ்வார்க்குத் துன்பமும் செய்யும் வேந்தனுக்கு எல்லாரும் பகையாவர்; அதனால் காலமும் இடமும் வாய்க்கும்போது அவனைக் கட்டாயம் கொன்றுவிடுவர்; இது யாவரும் அறிந்தது. அதனால்,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

என்று திருவள்ளுவர் உரைக்கின்றார்.

மேலும், அவனைச் சூழ்ந்து நல்லோர் ஒருவரும் இரார்; கல்லாக் கீழ்மக்களே அவனைச் சுற்றியிருப்பர். அவர்களுக்கு வருவதும் தெரியாது. கேடு வந்தால் காத்துக்கொள்ளவும் தெரியாது. அவன் தன் சுற்றத்துடன் ஒருங்கே அழிவான். அவ்வுண்மை விளங்கவே வெங்கோலன் ஒருவந்தம் இல்லை கெடும் என்று ஓதுகின்றார். அத்தகைய வேந்தன் இருப்பது நிலத்துக்கே சுமை என்று நல்லோர் கருதுதலால் அவன் கெட்டழிவதற்கு ஒருவரும் மனம் இரங்கார்.

# இரக்கம்

மக்களினம் எக்காலத்தும், எவ்விடத்தும் தம்மில் கூடி வாழும் இயல்புடையது. அதற்குக் காரணம் அவர்களை அறியாமலேயே ஒருவகைத் தொடர்பு அவர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. இத் தொடர்பு சில விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் எறும்பு முதலிய சிற்றுயிர்களிடத்தும் உண்டு என்றாலும், மக்களிடத்திற்போல வெளிப்படையாய் விளங்குவதில்லை. தம்மவரையும் தம்மினும் தாழ்ந்தவரையும் கண்டால் மனம் நெகிழ்ந்து மதிப்பும் பரிவும் இரக்கமுமாக மக்களிடையே வெளிப்படுகிறது. இப்பண்பும் செய்கையும் ஒருவரையொருவர் கண்ணால் கண்டபோது வெளியாவதால், பரிவும் இரக்கமுமாகிய இவைகளை ஒருசேரத் தொகுத்துக் கண்ணோட்டம் என்று திருவள்ளுவரும் அவர்க்கு முன்னோரும் பெயரிட்டுக் குறித்திருக்கிறார்கள்.

இக்கண்ணோட்டம் உடையவர்கள், தம்மைச் சேர்ந்தவர்களையோ, நண்பர்களையோ, தம்மினும் தாழ்ந்தவர்களையோ கண்டபோது வேண்டுவதை உதவுவார்கள்; சொல்வதை மறுக்கமாட்டார்கள். இந்தப் பண்புதான் சமுதாய வாழ்வில் ஊடுருவி நிற்கும் உயிர்நாடி. இவ்வுயிர்நாடி இல்லையாயின் சமுதாயம் அதாவது உலகியல் வாழ்வு சீர்குலைந்து போகும். இதுபற்றியே திருவள்ளுவர்,

**''கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மையான் உண்டிவ் வுலகு''**

என்று கூறுகிறார். கண்ணோட்டம் என்னும் இந்த இரக்கப் பண்பு மக்கள் ஒவ்வொருவருக்கும் அழகு தருவது.

அரசர், செல்வர் முதலிய உயர்ந்தோரிடத்தில் இருக்குமாயின், மிக்க அழகும் விளக்கமும் தருவதால் கண்ணோட்டமென்னும் கழிபெருங் காரிகை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இக்கண்ணோட்டமாகிய இரக்கப்பண்பு ஒவ்வொருவரிடத்திலும் இருந்தால்தான் இவ்வுலகியல் வாழ்வு நிலைபெறும்; இப்பண்பு இல்லாமல் ஒருவன் இருப்பானாயின், அவன் நிலத்துக்குச் சுமை என்று எண்ணி,

**"கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை"**

என்று உரைக்கின்றார்.

உளத்தில் இடம் பெற்றிருக்கும் பரிவும் இரக்கமுமாகிய நற்பண்புகளைத் தட்டி எழுப்பும் கருவி அவரவர் முகத்திலும் உள்ள கண்களாகும். கண்களுக்கும் இரக்கப் பண்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இத்தொடர்பு பாட்டுக்கும் இசைக்கும் உள்ளது போன்றதாகும். பாட்டோடு தொடர்பு இல்லையானால் பண்ணாகிய இசை பயன்படாது; அதுபோலவே கண்ணும் இரக்கமென்னும் கண்ணோட்டத்தோடு தொடர்பு படாதாயின் பயனில்லை என்பாராய்,

**"பண்என்னும் பாடற்கு இயைபின்றேல் கண்என்னும்**
**கண்ணோட்டம் இல்லாத கண்"**

என்று கூறுகிறார்.

இசையால் பாட்டுக்குப் பெருமையும் அழகும் உண்டாகின்றன. இழுக்குடைய பாட்டாயினும் நல்ல இசை பொருந்துமானால் அப்பாட்டு எல்லாராலும் போற்றப்படுகிறது. அவ்வாறே கண்ணோட்டம் என்ற பண்பு ஒருவனுடைய கண்ணுக்கு அழகு தருகிறது. அந்த அழகு அமையவில்லையாயின் கண் காண்கின்ற

தனக்கும் காணப்படுகிற மக்களுக்கும் தொடர்பில்லாமல் போவதுடன், மனநோயை விளைவிக்கிறது. அது கண்டே,

**''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்**
**புண்ணென்று உணரப் படும்''**

என்று கூறுகிறார்.

இத்தகைய கண்ணோட்டம் இல்லாதவர் உலகில், இருக்கத்தானே செய்கிறார்கள், அவர்களும் சமுதாயத்தில் மக்களாக உலவுகின்றார்களல்லவா? என்கிற கேள்வி எழுகிறது. உலகில் கிளை விட்டுத் தழைத்த மரங்கள் இருக்கின்றன. அவைகளில் கணு என்ற கண்கள் உள்ளன. அக்கண் பார்ப்பதும் கண்ணோட்டம் செய்வதும் இல்லை. அக்கண்களுக்கும் கண்ணோட்டமில்லாத மக்கள் கண்களுக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. ஆகவே, மண்ணிடை நிற்கும் மரமும் அதன்மேல் கண்ணோட்டமில்லாமல் இயங்கும் மக்களும் ஒன்றே என்று விளக்குகின்றார்.

**''மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு**
**இயைந்து கண்ணோ டாதவர்''**

என்கிறார் திருவள்ளுவர்.

அன்றியும், மரத்தின் கண்ணுக்குப் பார்வையில்லை. மக்கள் கண்ணுக்குப் பார்வையுண்டு. பார்வையில்லாதவர் குருடராவர். கண் பார்க்கும் என்றால் காணப்பட்ட உயிர்களின் மேல் கண்ணோட்டம் உண்டாகாமல் போகாது; ஆதலால், கண்ணோட்டமில்லாதவரைக் கண்ணிருந்தும் பார்வை இல்லாத குருடர் என்றே கூற வேண்டும். அதனை,

**''கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்**
**கண்ணோட்டம் இன்மையும் இல்''**

என்று கூறுகிறார்.

பார்க்கப்படுகின்ற மக்களிடத்தில் மதிப்பும் பரிவும் இரக்கமும் ஒருவன் கொள்வானானல், அதாவது கண்ணேட்டம் செய்வானானல், இருக்கிற பொருளெல்லாம் இழந்து நாளடைவில் வறியனாகத்தானே வேண்டும்? பரிவும் இரக்கமும் வாயளவில் இருப்பது போதாது. பரிவால் இரக்கத்தால் ஏதேனும் பொருளுதவி செய்யவேண்டும்; இதைச் செய்துகொண்டே போனல் வேலை செய்பவர் ஒழுங்காக வேலை செய்ய மாட்டார்கள்; வேலை கெடுமானல் பொருள் வருவாய் குறைந்து போம்; பொருளில்லையானல் உலகியல் வாழ்வு இல்லாமற் போகுமே என்று மனத்தில் சிந்தனை எழுகிறது. இதனைத் திருவள்ளுவர் எண்ணமல் இல்லை

கண்ணேட்டம் என்பது கண்ணை மூடிக்கொண்டு செய்வதில்லை. கண்ணல் பார்த்துச் செய்வது. பார்க்கும்போது காணப்பட்ட மக்களைப் பற்றிப் பரிவும் இரக்கமும் கொள்ளும்போது, பார்ப்பவர் மனதில் தம்மிடத்தில் உள்ள பொருள் அளவையும் பார்ப்பர். கண்ணேட்டத்தைச் செய்யும்போது அந்த அளவைப் பார்க்காமல் செய்யமாட்டார். இரக்கத்தையும் பரிவையும் தட்டி எழுப்புகிற கண், அவருடைய தகுதியின் அளவையும் காட்டும். அதைக் காட்டாத கண் பயன்படாது; அளவை அறியாமல் செய்வது கண்ணேட்டமுமாகாது. அது பற்றியே,

> **"உளபோல் முகத்து எவன்செய்யும் அளவினல்**
> **கண்ணேட்டம் இல்லாத கண்"**

என்று கூறுகிருர்.

கண்ணேட்டம் செய்பவர் தமது பொருள் பெருக்கும் ஆற்றல் முதலியவற்றின் அளவறிந்து செய்ய வேண்டும். அளவறியாமல் செய்யும் கண்ணேட்டம் கழிகண்ணேட்டம் என்றும், அது குற்றம் என்றும்

சான்றோர் கூறுவர்; இக் கழிகண்ணோட்டம், "அறம் தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது" என்று சங்கச் சான்றோரும் கூறுகின்றார்கள். அதுபற்றியே அளவினால் கண்ணோட்டமில்லாத கண் பயனில்லை என்று கூறுகிறார்.

கண்ணோட்டம் செய்யப்படுபவர், அதாவது இரங்கத்தக்கவர், உதவி பெறத் தக்கவர் என்று பார்த்தால் மட்டும் போதுமா? உழைத்து வாழத்தக்க தகுதியுடையவர் சிலர், காண்பவர் தம்மைக் கண்டு பரிவும் இரக்கமும் கொள்ளுமாறு நடிக்கிறார்களே; அவர்கள்பால் கண்ணோடுவது பொருட்கேடும், உழைக்காமல் ஏய்க்கின்றவர் கூட்டத்தைப் பெருக்குவதும் செய்து சமுதாயத்தின் சிறப்பைச் சீரழிக்குமல்லவா? என்று ஒரு கேள்வி எழுகிறது. இதற்கும் திருவள்ளுவர் விடை கூறுகிறார். வையத்தார் உள்ளுவவெல்லாம் உள்ளுபவர் அல்லவா?

கண்ணோட்டம் உடைய அரசரும் செல்வரும், தாம் காட்டும் பரிவாலும் இரக்கத்தாலும் தமது வேலையோ தொழிலோ கெடாமல் பார்க்க வேண்டும். வேலையை ஒழுங்காகச் செய்யாதவர், வேலைக்கு இடையூறும் கேடும் செய்பவராவர். அவர்பால் கண்ணோடுவது குற்றம். அது பற்றியே முறை செய்து நீதி வழங்குகிறவர் கண்ணோடுதல் கூடாது.

**"ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து**
**யார்மாட்டும் தேர்ந்து செய்வதுமுறை"**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

வேலையை ஒழுங்காகச் செய்யாமலும் தவறாகச் செய்தும் குற்றம் புரிபவர்களை ஒறுப்பது செய்தக்க செய்யும் செயல் முறையாகும். ஆயினும் குற்றத்தின் இயல்புக்கு ஏற்பத் தண்டனையும் குறைந்த அளவும்

மிகுந்த அளவுமாக இருக்கும். குற்றத்தைக் காணும் போது கண்ணோடுவது கூடாதே தவிர, ஒறுக்கும்போது கண்ணோடிப் பரிவும் இரக்கமும் ஓரளவு வேண்டும்; இல்லையானால், "கையிகந்த தண்டமாய்" கொடுங் கோன்மையாகிவிடும். அது பற்றியே,

**"ஒறுத்துஆற்றும் பண்பினர் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்து ஆற்றும் பண்பே தலை"**

என்கிறது திருக்குறள்.

மேலும், பரிவும் இரக்கமும் கொண்டு கண்ணோடு வது வேலை செய்வோர் வேலையை ஒழுங்காகச் செய்வ தற்கே ஆகும். வேலை செய்வோரும் தமக்குக் காட்டப் படும் பரிவையும் இரக்கத்தையும் கண்டு ஊக்கம் மிகுந்து ஒழுங்காகவும் அன்பாகவும் செய்வர்; அதனால் பொருள் பெருகும்; உலகியல் வாழ்வு இன்பம் செய் யும். சுருங்கச் சொன்னால், கண்ணோட்டம் உடைய வர்க்குத்தான் வேலை தந்து பொருள் பெருக்கி வாழ்வை வளம்படுத்தும் வல்லமையும் உரிமையும் உண்டு. இது கண்டே,

**"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லோர்க்கு
உரிமை யுடைத்துஇவ் வுலகு"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

கண்ணோட்டம்தான் நாகரிகம் என்று சங்க கால மக்கள் கருதினர். அன்பும் பரிவும் இரக்கமும் கொண்டு ஒழுகுபவரையே நாகரிகர் என்றனர். இரக்கமற்ற தன் மையும் விலையுயர்ந்த உடையுடுப்பதும், இவைபோன்ற பிறவும் நாகரிகம் என்று இந்நாளில் கருதப்படுகிறது. நாகரிகம் அரக்கப் பண்புக்கு வழி செய்வதால், இதனை விரும்பத் தக்க நாகரிகமாக எண்ணுதற்கில்லை. இரக் கமும் பரிவும் உடைய பண்பாடுதான் விரும்பத்தக்கது;

யாவர்க்கும் வேண்டப்படுவது; திருவள்ளுவர் கூறுவது போல நயத்தக்க நாகரிகமாகும். இந்த நாகரிப் பண்பாட்டுக்குத் திருவள்ளுவர் எல்லையொன்றையும் கூறுகிறார். தமக்கு வேண்டியவர் ஒருவர், கண் முன்னே நஞ்சு கலந்து கொடுத்தாலும் மறுக்காமல் உண்பது நயத்தக்க நாகரிகமாம். அதனை,

> ''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்''

என்று உரைக்கின்றார். வேண்டியவர் ஒருகாலும் நஞ்சு தரமாட்டார். கண் முன்னே கலக்கவும் மாட்டார்; கண்முன்னே நஞ்சு கலந்து தருவதற்கு ஒரு நல்ல காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணி, அதனை மறுக்காமல் உண்பதோடு, தமது கண்ணோட்டப் பண்பாட்டுக்கு மாறாக அவர்பால் வெறுப்புக் கொள்ள மாட்டார்கள். அக்கருத்து விளங்கவே, நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் என்று கூறுகிறார். இப்பண்பாடுதான் பெரிய நாகரிகம் என்பது புலப்படச் சங்கச் சான்றோர்,

> ''முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்''

என்று கூறுகின்றார்.

## பிறர் மனம் அறிதல்

நமது வாழ்வில் நாம் பலரோடு கூடிப் பேசிச் செய்வதைச் செய்கிறோம். அப்பலருள் நம்மில் உயர்ந்தவரும், ஒத்தவரும், தாழ்ந்தவரும், வேண்டியவரும் வேண்டாதவரும் எனப் பல வேறு வகையினர் உண்டு. நம்மிடையே அரசியல் தலைவர்களும் செல்வர்களும் உள்ளனர். அவர்களை நாடிச் சூழ்ந்திருப்பவரும்

பலர். அவரவர் மனம் அறிந்து நடப்பதில்தான் தலைவர்களின் தலைமையும் செல்வர்களின் செல்வமும் சிறப்படைகின்றன. ஆதலால் பிறருடைய மனக் கருத்தையும் செயல் வகையையும் நேரிற் கண்டும் பிறர் வாயிலாகக் கேட்டும் அறிந்துகொள்வது பொது வாக எல்லார்க்கும் நல்லது. எனினும் சிறப்பாக நாடு காக்கும் வேந்தர்க்கு மிகவும் இன்றியமையாதது.

மற்றவர்களின் நினைவு செயல்களைப் பிறர் வாயி லாக அறிந்துகொள்வது ஒற்றுடல் என்று நூல்கள் கூறுகின்றன. பிறர் பேசுவதையும் செய்வதையும் அவர்கள் அறியாதபடி தெரிந்து கொள்வது ஒற்று. நாட்டு மக்களிடையிலும் மறைந்திருந்து கேட்பதை ஒற்றுக் கேட்டல் என்று கூறுகிறார்கள்.

நாட்டில் வாழும் மக்களில் நல்லவரும் தீயவரும் பகைவரும் எனப் பல திறத்தினர் உள்ளனர். நாட்டின் இயல்பு கூறவந்த திருவள்ளுவர் பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும் கொல் குறும்பும் உண்டு. ஆனால் அவர்கள் இல்லாமல் இருப்பது நாட்டுக்கு நலம் என்று கூறுகிறார். அவர்கள் தங்களுடைய தீச் செயல்களை மிகவும் மறைவாகவே செய்வர். பொதுமக்களுக்கு அவர்கள் இருப்பது ஓரளவு தெரிந்தாலும் அவர்களுடைய தீமைக்கு அஞ்சி வெளிப்படுத்த மாட்டார்கள். தெரிந்து கொள்பவர் ஏழை எளியவராய் இருந்தால், அவர்களுக்கு வேண் டிய பொருள்களைக் கொடுத்து வாயை அடக்கி விடுவர். ஓரளவு செல்வமும் சிறப்பும் உடையவராயின், இரக்க மின்றி அவர்களைக் கொன்று விடுவர். இந்நிலையில் அக்கொடியவர்களைக் கண்டறிந்து உடனடியாக அவர்கள் செயலுக்கு முடிவு காணவேண்டும்; சிறிது சுணங்கினாலும் புறக்கணித்தாலும் சிறு நெருப்புப்

போலப் பையப் பெருகிப் பரவி நாட்டின் நல்லரசையும் கவிழ்த்துவிடும்; பகையரசு புகுந்து கேடு செய்வதற்கு இடம் அளிக்கும். நாட்டவரின் நல்வாழ்வுக்கு இடையூறு செய்யும் இக் குழுக்களையும் குறும்பர்களையும் உடனுக்குடன் கண்டறிந்து ஒடுக்குவது பெரிய பாதுகாப்பாவதால், ஒற்றறிவது அரசுக்கு உரிமைத் தொழிலாகும். இதைச் செய்யும் ஒற்றர் தன் நாட்டார் பிற நாட்டார் என்றும் நல்லவர் தீயவர் என்றும், நண்பர் பகைவர் என்றும், உற்றூர் உறவினர் என்றும் வேறுபாடு நோக்காமல் எல்லாருடைய செயலையும் ஆராய்ந் தறிவர்; அன்றியும், இரவு பகலென்று பாராமல் எக்காலத்திலும் செய்தவண்ணமே இருப்பர். செல்வக் காலம் வறுமைக்காலம், அமைதியான காலம் அல்லலான காலம் என வரும் எல்லாக் காலங்களிலும் ஒற்றறியும் தொழில் நடக்க வேண்டும். இதுபற்றியே,

**''எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**
**வல்லறிதல் வேந்தன் தொழில்''**

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அரசுக்கு மாறு நினைப்பவர் வேறு நாடுகளில் மாத்திரமின்றி உள்நாட்டிலும், அரசனை நெருக்கமாகச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தாரிலும் அரசியல் அலுவலர் சூழலிலும் இருப்பர். அவர்கள் செய்கைகளையும் அரசனுக்கு வேண்டாதார் செயல் வகைகளையும் ஒற்றர்கள் விடாமல் சூழ்ந்து அறிந்து அரசுக்கு அறிவிப்பர்.

**''வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு**
**அனைவரையும் ஆராய்வது ஒற்று''**

என்று கூறுகிறார்.

இவ்வொற்றர்கள் எத்தகையவர் எனின், அரசனிடத்தில் அசைக்க முடியாத அன்பும், கண்டறிந்ததை

எவர்க்கும் உரைக்காத மனவுரமும் படைத்தவர். எவர்க்கும் எதற்கும் எவ்விடத்தும் அஞ்சாத நெஞ்சினர். அவர்களைக் காண்பவர் எவராலும் இவர் ஒற்றர் என்று அறிய முடியாது. இவர்களின் இயல்பை,

> **"கடா வுருவொடு கண்ணஞ்சாது யாண்டும்**
> **உகாமை வல்லதே ஒற்று"**

என்று உரைக்கின்றார்.

தப்பித்தவறி இவர்கள் ஒற்றர் என்று கண்டு பிடிக்கப்பட்டால், எவ்வளவு சிறப்புச் செய்து மகிழ் வித்தாலும், எத்தனைக் கொடுமை புரிந்து துன்புறுத்தி னாலும், தாம் கண்டறிந்ததைத் தம்முடைய மன்னனுக் கன்றி ஒருகாலும் பிறர்க்கு வெளியிட மாட்டார்கள். அதுபற்றித்தான் இக்குறட்பாவில், "யாண்டும் உகாமை வல்லது ஒற்று" என்று கூறுகின்றார்.

இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப மாறு வேடம் கொள்வதிலும் வல்லவர் இவ்வொற்றர்கள். தவச் சிறந்த துறவிகள் போலவும், மிகவுயர்ந்த விரதியர் போலவும் வேடம் தாங்கி ஞானநூற் கருத்துகளையும் விரதங்களின் நலங்களையும் விரித்துரைத்து ஆங்காங்கு நிகழ்வதை நுணுக்கமாக அறிந்து கொள்வர். எவரும் புகமுடியாத இடங்களிலெல்லாம் இவ்வொற்றர்கள் புகுந்து நடப்பவை பேசுபவை யாவற்றையும் தெரிந்து கொள்வர். ஒற்றறியும்போது அகப்பட்டுக் கொண் டாலும், பற்றினவர் என்ன தீங்குகளை எப்படிச் செய் தாலும் மறந்தும் வாய்தவறியும் தாங்கள் அறிந்ததை வெளியிடமாட்டார்கள். இவர்களை நன்கு அறிந்த வரானதால் திருவள்ளுவர்,

> **"துறந்தார் படிவத்தார் ஆகிஇறந் தாராய்ந்து**
> **என்செயினும் சோர்வுஇலது ஒற்று"**

என்று வடித்துரைக்கின்றார்.

இவ்வொற்றர்களை அறியாமல் சில இடங்களில் சில செயல்கள் நிகழும். என்றாலும் எவ்வகையிலேனும் அச் செயல்களை அறிந்த மக்களையோ அவர்களைச் சார்ந்தவர்களையோ அறிந்து கேட்டுத் தெரிந்துகொள்வர். கேட்கின்றபோதும் அதில் தொடர்பு இல்லாதவர் போல நடிப்பர். கேட்டவைகளையும் மறுபடியும் ஆராய்வதற்கு இடமில்லாதபடி ஐயமறத் தெளிந்து கொள்வர். இதை,

> "மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
> ஐயப்பாடு இல்லதே ஒற்று"

என்று கூறுகிறார்.

இத்தனைக் கூர்த்த மதியும் சீர்த்த செய்கையும் உடையராயினும் இவ்வொற்றர்களை ஆள்கின்ற அரசியல் தலைவர்கள் இவர்கட்கு ஒப்பாகவோ உயர்ந்த வகையிலோ இருக்க வேண்டும். இவர்களில் ஒருவர் கூறுவதை மாத்திரம் ஏற்றல் கூடாது. வேறு ஒற்றர்களை விடுத்து இருதிறத்தார் கூறுவனவற்றையும் ஒப்ப நோக்கித் தெளிய வேண்டும். இதுதான் ஒற்றரை ஆளும் முறை. இதனை,

> "ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்
> ஒற்றினால் ஒற்றிக் கொளல்"

என்று உரைப்பர்.

ஒருவர் ஒற்றி வந்ததை வேறோர் ஒற்றரை விடுத்து அறிய முற்பட்டால், இருவரும் தம்மில் கலந்து வந்து தானே உரைப்பார்கள்; அதனால் என்ன பயன்? எனின் ஒற்றரை ஆள்பவர், எப்பொழுதும் ஒருவருக்கொருவர் அறியாமலே விருப்பர். உண்மை தெளிவதற்காக எத்தனை ஒற்றர்களை விடுக்கலாம் என்றால் சில சமயங்களில் ஒருவர் இருவரை விடுவது போதாது. இருவர் இடைப்பட்ட மறைபொருள் பிறர் அறியாதபடி

புதைந்துவிடும்; இருவர்க்கு மேற்படின், எந்த மறை பொருளும் எப்படியும் வெளிப்பட்டுவிடும். அதை எண்ணியே ஒருபொருள் பற்றி ஒற்றறிய விரும்புகிற அரசர், மூன்று பேரை ஒருவரை ஒருவர் அறியாமல் விடுவர்; மூவரும் ஒருமுகமாக உரைப்பாராயின் அதனையே உண்மையென்று தெளிய வேண்டும்.

**"ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்**
**சொல்தொக்க தேறப் படும்"**

என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

இங்ஙனம் நாட்டின் நல்வாழ்வுக்கும், அரசனுக்கும் ஊறு செய்யும் தீயவைகளை தானே நேரில் சென்று கண்டறிவதுபோல இவ்வொற்றர்கள் அறிந்து வந்து சொல்வதால், அவர்களை வேந்தனுக்குக் கண் என்று அரசியற் சான்றோர் உரைக்கின்றனர். முறை செய்யும்போதும், நீதி ஆராயும் போதும் நாட்டின் நிலைமை அறிந்து செய்வன செய்யும்போதும், அறிவு நிறைந்த சான்றோர் எழுதி வைத்த நூல்கள், அறிவுக்கு எட்டாத நுட்பங்களை உரைக்கின்றன ஆதலால் அவற்றையும் கண்ணெனன்பர். அந்த நூல்களைப் போலவே, நேரே சென்று காணக்கூடாத செயல்களைக் கண்டறிந்து வந்து உரைப்பதால் ஒற்றர்களின் செய்கையும் சான்றோர் நூலின் செய்கையும் ஒத்திருப்பதால் இரண்டையும் சேர்த்து, இவை அரசுக்குக் கண்கள் என்று தெளியவேண்டும் என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

**"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்"**

என்பது திருக்குறள். இனிக் காலந்தோறும் மக்களுடைய எண்ணமும் செய்கையும் மாறுபடும்.

இவ்வாறு மாறுவது உலக வாழ்வின் இயல்பு. அதை ஒருவரும் தடுக்கவோ ஒடுக்கவோ முடியாது. மாறும் இயல்பினுல் எண்ணங்கள் விரியும்; அவற்றிற்கு ஏற்ப மக்களின் செயல்களும் செய்முறைகளும் மாற்றமடையும். இவற்றிற்கென அவ்வப்போது நூல்களை எழுதுவது எனின், அது எல்லையின்றிப் பெருகும். இதனை உட்கொண்டே, நூல் வகுக்கும் சான்ருேர் விதிமுறைகள் காலத்துக்கும் நடைமுறைக்கும் ஏற்ப விரிந்து கொடுக்குமாறு சொற்களை அமைத்து எழுதுவர். அவை ஒரு காலத்தே தோன்றினவாயினும் காலத்துக்கேற்ப உரைகாரர்கள் அவற்றின் விதிகளை இலக்கண வரம்பு கடவாமல் உரை கூறி அமைத்துக் காட்டுவர். அது பற்றியே அரசர்க்குக் கண்போல் அறிவு விளக்கும் நூல்களை **உரைசான்ற நூல்** என்று திருவள்ளுவர் உரைக்கின்ருர்.

இனி, நாடாளுமிடத்து வேந்தர், தீயவரின் தீங்குகளை அறிந்து போக்குவதுபோல நல்லவரின் நன்மைகளைப் போற்றிச் சிறப்பிப்பதும் அரசு முறைக்கு அறமும் மாண்புமாகும். அதுபோல ஒற்றரது ஒற்றும் நாட்டுக்கு ஆக்கமும் அரணும் ஆதலால், ஒத்தவகையில் ஒற்றர்களுக்குச் சிறப்புச் செய்வது முறையாகும்; அதனைப் பெறுவது அவர்கட்கு உரிமையுமாகும். ஆயினும் இச் சிறப்புக்களைச் செய்வதில் வேறுபாடு உண்டு.

அரசறிய நலம் புரியும் நன்மக்களுக்கு வேந்தர் நாடறியச் சிறப்புச் செய்யவேண்டும். அது நாட்டில் வாழும் பிறரையும் நல்லது செய்தற்கு எழுச்சியும் ஊக்கமும் அளிக்கும். ஆனுல் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்பு மிகவும் மறைவாக நடத்தல் வேண்டும். வெளிப்படையாக நிகழுமாயின், அச்செயல் ஒற்றர்களை

வெளிப்படுத்திவிடும். அதனால் கேடு நினைக்கும் பல் குழுவும் கொல்குறும்பும் தம்மைக் காத்துக்கொள்ளும்; தீமைகள் தோன்றுதற்கு இடம் உண்டாகும். ஆகையால் நாட்டின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் ஊறு விளையும். இதனைக் கருத்திற்கொண்டே,

''சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுதா ளுகும் மறை''

என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

## ஊக்கம்

நாட்டில் வாழ்கின்ற மக்களில் உயர்ந்தவரும், தாழ்ந்தவரும் எங்கும் உள்ளனர். உயர்ந்தவர் வரலாற்றைக் கேட்டால் அவர்கள் எளியவராய் இருந்து உயர்ந்த கதையையே சொல்கிறார்கள். அதைக் கேட்டால் அவர்களுடைய உயர்வு ஊக்கமும் உழைப்பும் காரணமாவதை அறியலாம். ஊக்கம் முந்தியதா உழைப்பு முந்தியதா என்று நோக்கினால் உழைப்புச் சிலரிடத்திலும் ஊக்கம் சிலரிடத்திலும் முந்தியிருப்பது தெரிகிறது. உழைப்பு என்பது சிறுவரிடத்திலும் பெரியவரிடத்திலும் உண்டு. என்றாலும் உழைப்பினால் வரும் பொருளும் சிறப்பும் இன்பம் தருவதைக் கண்டு மேன்மேலும் மனம் கிளர்ச்சியுற்று மிகவும் உழைத்து பொருள் மிகுந்து உயர்கின்றார்கள். அவ்வாறு உயர்பவர்களைப் பார்த்து மற்றவரும் மன எழுச்சி கொண்டு உழைத்து உயர்வு பெறுகின்றார்கள். இங்ஙனம் உழைக்குமாறு தூண்டும் கிளர்ச்சியும் எழுச்சியும் ஊக்கம் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. உழைப்பின் பயனாக வரும் பொருளையும், இன்பங்களையும்

அறிவில் கொள்ளாதவர் உழைப்பை புறக்கணிக்கின்றார்கள்; அதை விரும்பாமல் கைவிடுகிறார்கள். இச்செயலை மடிமை அல்லது சோம்பல் என்று பெரியோர் குறிப்பர். இதனால் ஊக்கத்துக்கு எதிர் மறுமொழி சோம்பல் என்று அறிகின்றோம். இவ்வாறு பகுத்து அறிவதால் ஓர் உண்மை தெரிகிறது. ஊக்கமுடையவர் பொருள் உடையவராய் உயர்கின்றார்கள். இல்லாதவர் உள்ள பொருளையும் இழந்து தாழ்ந்து போகின்றார்கள். இது கண்டே,

**"உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்**
**உடையது உடையரோ மற்று"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

இந்த ஊக்கம் இருக்கும் இடம் ஒருவனுடைய உள்ளமாகையால், ஊக்கத்தை உள்ளம் என்றும் கூறுவர். ஊக்கத்தையும் அதனால் வரும் பொருளையும் திருவள்ளுவர் சீர்தூக்கினார். பொருளோ நிலையில்லாமல் நீங்கிவிடும் இயல்புடையது; ஊக்கம் எப்போதும் உள்ளத்தில் இருப்பது. அதனால் பொருளைவிட ஊக்கம் குன்றாமல் இருப்பதுதான் பொருள் உடையவராய் வாழ்வதற்குக் காரணம் என்று காண்கிறார். அதனால்,

**"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்"**

என்று கூறுகிறார்.

பொருளை நோக்காமல் ஊக்கம் மாத்திரம் இருப்பது போதுமா எனின் ஊக்கம் இருக்குமானால், விளக்கு எரிந்தால் ஒளி நிலவுவதுபோல உழைப்பு நடந்து கொண்டே இருக்கும். உழைப்புத்தான் பொருளுக்கு வருவாய். பள்ளமிருந்தால் நீர் ஓடி நிறைவதுபோல், உழைப்பவரிடம் பொருள் வந்து சேரும். அது பற்றியே,

"ஆக்கம் அதர்விஞய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

என்று கூறுகின்ருர்.

என்ன இடையூறும் சோர்வும் வந்தாலும் தளராத ஊக்கமுடையவர் எங்கே உள்ளாரோ, அவனிடம் பொருளும் உயர்வும் வழி கேட்டுக்கொண்டு வரும்; அதாவது வேலையும் அது வழியாகச் செல்வமும் தாஞகவே வந்து சேரும். அதை வற்புறுத்தவே, இக் குறட்பாவின், ஊக்கமுடையவனை நாடி ஆக்கம் அதர் அதாவது வழிவிஞய்ச் செல்லும் என்று திருவள்ளுவர் உரைக்கின்ருர்.

ஊக்கம் இத்தகைய சிறப்புடையதாஞல் இதற்கு ஏதேனும் அளவு உண்டோ? ஆசைக்கும் ஓர் அளவு வேண்டும் என்று சொல்கிருர்கள் அல்லவா? அதுபோல ஊக்கத்துக்கும் ஓர் அளவு இருக்கவேண்டுமே என்ருல் உண்டு என்று கூறுகிறது திருக்குறள். யாவரும் உயர் வையே விரும்புவார்கள். அவரவர் விரும்பும் உயர்வு எவ்வளவோ அவ்வளவுதான் ஊச்கத்துக்கும் அளவு. ஒரு தாமரைக் குளம் இருக்கிறது. அக்குளத்தில் தண்ணீர் எத்தனை அடி இருக்கிறதோ, அதற்கேற்பத் தாமரையின் நீளம் இருக்கிறது. பத்தடி நீர் என்ருல் கொடியும் பத்தடி நீள்கிறது; ஐந்தடி என்ருல் கொடி யும் ஐந்தடி அளவில் இருக்கிறது. அதுபோல ஊக்கத் தின் அளவே உயர்வாகும் என்று விளக்குகிருர் திரு வள்ளுவர்.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு."

ஒருவனுக்கு ஊக்கம் மலைபோல உயர்ந்தும் கடல் போல விரிந்தும் இருக்கிறது. அதை மனத்திற் கொண்டே உழைக்கின்ருன். ஆஞல் அந்த ஊக்கத்

தளவு உயர்வு வரவில்லையே என்று கேட்கலாம். இக் கேள்வியைத் திருவள்ளுவரும் நினைக்கின்றார். ஊக்கம் மிகுதியாக இருக்கிறது. உழைப்பிலும் குறைவில்லை எனின், உயர்வு கட்டாயம் வந்தே தீரும். ஊக்கத்தை விடக்கூடாது. உழைப்பாகிலும் காலம், இடம், கருவி, உடல்வலி ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. இச் சார்புகள் தவறுவதற்கு இடமுண்டு; அதனால், கருதிய பொருளும் உயர்வும் நினைந்த அளவு வராமல் போக லாம். அதனை எண்ணி ஊக்கம் குறையக்கூடாது. ஒருகாலத்தில் குறையினும் பிறிதொரு காலத்திலேனும் வந்தே தீரும் என்று சொல்லுகிறார்.

''உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து''

இந்நிலையில், உயர்வு பெற்ற பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப்போமானால் திருவள்ளு வர் கூறுவது முழுதும் உண்மையாவதைக் காணலாம். அரசியல் விடுதலை என்ற உயர்வையே எண்ணி நம் நாட்டுக் காந்தியடிகள் போன்றவர்கள் உழைத்தார் கள்; எத்தனையோ சமயங்களில் உழைப்புக்கு இடை யூறுகள் தோன்றி அலைத்தன. ஆனால் ஊக்கம் குறையவில்லை; அதை அவர்கள் கைவிடவும் இல்லை... முடிவு என்னாயிற்று; இன்று நாம் விடுதலை வாழ்வு பெற்று, உலக நாடுகள் நன்கு மதிக்கும் அளவுக்கு உயர்வு பெற்றிருக்கிறோம்.

இந்த ஊக்கத்துக்கு இத்தனை ஆற்றல் எப்படி அமைந்தது? இதையும் திருவள்ளுவர் சிந்திக்கிறார். காடுகளில் புலியும் உண்டு...யானைகளும் உண்டு; பருத்த உடம்பும் கூர்மையான கொம்பும் உடையது யானை; புலிக்கு உடம்பும் சிறியது; கொம்பும் கிடை யாது. ஊக்கமும் வலிமையுமே அதனிடம் உள்ளன;

ஆனால் புலி தாக்குமாயின் பெரிய யானையும் எதிர் நிற்கமாட்டாமல் தோற்றுப் போகும். அதுபோலவே ஊக்கத்துக்கு எதிராக எந்த வகையான தடையும் நிற்கமாட்டாது; இதனை,

> "பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
> வெரூஉம் புலிதாக் குறின்"

என்று விளக்குகின்றார்.

இந்த ஊக்கத்துக்கு மாறான தன்மை மடி அல்லது சோம்பல் என்று முன்னமே கூறினேன். மாசு மறு வில்லாத ஆடையில் மாசு படிவதுபோல, ஊக்கம் நிறைந்த உள்ளத்தில் இந்த மடியென்னும் சோம்பல் பையப் படிந்துவிடும்; இதற்கு இடம் கொடுக்கக் கூடாது, என்பதற்காகவே, ஊக்கத்தை அடுத்து மடியைப் பற்றி திருவள்ளுவர் உரைக்கின்றார்.

உழைக்கின்ற மக்களைக் கெடுத் தவறுமைக்கு உள் ளாக்கும் தீய தன்மைகளில் சோம்பல் முதன்மைவாய்ந் தது. இதற்கு இனமாக மறதி, தூக்கம், எதனையும் காலம் நீட்டித்துச் செய்யும் தன்மைகள் உடன்வந்து சேர்கின்றன. இந்த நான்கும் விரும்பத்தக்கவை போலத் தம்மைக் காட்டும். மேற்கொண்டவுடன், துன்பத்தில் கொண்டு சேர்க்கும்; இவ்வியல்பு பற்றியே இவைகளைக் காமக் கலன் என்று பெயர் குறித்து,

> "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
> கெடுநீரார் காமக் கலன்"

என்று கூறுகின்றார்.

மடியென்னும் சோம்பல் மாசுபோல, வருவது தெரியாமல் வந்து படிவது நன்றாக உழைத்துத் தனது குடும்பத்தை விளக்கமுறச் செய்யும் நன்மைகளை

இச்சோம்பல் என்னும் மடி வந்து அடையுமானுல், அவனுடைய குடும்பமாகிய விளக்கு அவிந்துபோகும்.

''குடியென்னும் குன்ரு விளக்கம் மடிஎன்னும்
மாசுணர மாய்ந்து கெடும்''

என்று திருவள்ளுவர் கூறுகிருர்.

இக் கொடிய சோம்பல் ஒருவனிடம் பொருந்துமாயின், அவனுடைய இயல்பான மானவுணர்ச்சியே கெட்டுப் போகிறது. எவர் இகழ்ந்தாலும் பொறுத்துக் கொள்வான்; நெஞ்சு சுடுவது போலும் கடுஞ் சொற்களைப் பேசினுலும் அவன் காதில் ஏருது. வெறும் புன்சிரிப்பே அவன் பாழ் முகத்தில் காணப்படும். அதனுல், மாண்புதரும் செயல்கள் எவற்றையும் அவனுல் செய்ய முடியாது. அதுபற்றியே,

''இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்''

என்று கூறுகின்ருர்.

இம் மடி என்னும் சோம்பல், காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் நீடித்து, உறக்கத்தில் வீழ்த்துகிறது. அதனுல் தன் குடிக்கு எத்தகைய பாதுகாப்பையும் அவன் செய்துகொள்ள மாட்டான். பகைவர் எளிதில் அவனைக் கைப்பற்றி அடிமையாக்கிக் கொள்வர். அரசனுயினும் சோம்பலுற்றவன், பின்பு தன்னுரிமை யிழந்து துன்பப்படுவான்.

''மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்ஞர்க்கு
அடிமை புகுத்தி விடும்''

என்று கூறுகிருர்.

சோம்பலுக்கு இரையாகி மடிந்து ஒடுங்குகின்றவன் குடும்பம் தன் செல்வப் பொலிவை இழக்கும்;

அதனோடு பல்வேறு குற்றங்கள் தோன்றிப் பெருகுதற்கு இடமாகிவிடும்.

**"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றி லவர்க்கு"**

என்று உரைக்கின்றார்.

மக்களாகப் பிறந்தவர் மாண்புடைய செயல்களையே செய்தல் வேண்டும். சோம்பல் கொண்டு மடிந்து கிடப்பவர் அச் செயல்களைச் செய்யமாட்டாதவராவர் என்பதற்காகவே, அவர்களை மாண்ட உஞற்றிலவர் என்று திருக்குறள் பல முறையும் கூறுகிறது.

மழுங்குகின்ற விளக்கைத் தூண்டுவது போலத் தக்கவர் துணையாகி நின்று சோம்பலைப் போக்கி ஊக்கமுறச் செய்யலாம் அல்லவா? எனின், சோம்பேறிக்கு அவர்கள் துணையிருந்து தூண்டினாலும் பயன்படாது; இதனை,

**"படியுடையார் பற்றமைந்துக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது"**

என்று கூறுகிறார்.

நினைத்தால் நிலமுழுதும் தான் ஆணைவழி நிறுத்தக் கூடிய ஆற்றலுடையோர் பக்கம் இருந்து ஊக்கினாலும், சோம்பல் உடையவர், அவர் சிறிது நீங்கினவுடன், சோம்பல் அற்று வீழ்ந்து போவதால், அவரால் பெரும் பயன் உள்ள செயலைச் செய்ய முடிகிறதில்லை என்று வற்புறுத்தவே, படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் என்று கூறுகின்றார்.

இவர்கள் கடைத்தேற வழி இல்லையா? உண்டு; அவன் தன்னைப் பற்றியிருக்கும் சோம்பலை மாற்ற வேண்டும்; மாற்றி, தனக்கும், தன் குடும்பத்துக்கும் வந்த குற்றம் நீங்கி வாழ்வு பெறுவான்.

**"குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**மடியாண்மை மாற்றக் கெடும்"**

என்று தெரிவித்துத் தடித்த சோம்பேறியும் வாழ்வு பெறுவதற்கு வழி வகுக்கின்றார்.

## முயற்சி

"வினையே ஆடவர்க்கு உயிர்" என்பர் சங்கச் சான்றோர். வினை என்பது உழைப்பு. உழைப்பு என்றால் எடுத்த வேலையைச் சோர்வு படாமல் செய்வது. வேலையை வினையென்றும், அதனை முடித்தற்காகச் செய்யும் உழைப்பை வினையாளுதல் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. வினையாளுதற்கு வேண்டிய மனவுறுதியினை முயற்சி என்றும் ஆள்வினையுடைமை என்றும் கூறுவதுண்டு. அதனால், சோம்பலின்றி ஊக்கத்தோடு செயலாற்றும் உழைப்பாளியிடத்தில் காணப்படும் முயற்சியை ஆள்வினையுடைமை என்று அழகிய பெயரிட்டுத் திருவள்ளுவர் உரைக்கின்றார்.

உண்மையோடு உழைக்கும்போது கருதிய அளவு பயன் கிடைக்காமல் போவதுண்டு. அதற்குக் காரணம் ஊழ்வினை என்று சொல்லுவரே தவிர உழைப்பாளியை, யாரும் குறை கூறிப் பழிப்பதில்லை. எடுத்த வேலைக்கு வேண்டிய கூறுகளை நன்கு அறிந்து உண்மையாக முயன்று செய்யாதவனைப் பழிப்பார்கள். அவன் ஊழ்வினை என்று சொல்வானானால் அதைவிட மானக்கேடு வேறில்லை. இதனை,

**"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆள்வினை இன்மை பழி"**

என்று திருவள்ளுவர் கூறுகிறார். இக்குறட்பாவின் பொறி என்பது ஊழ்வினை. ஊழ்வினை என்றால் என்ன வெனில் நம்மால் முன்பு செய்யப்பட்ட வினையின் பயன். அது இன்பவடிவிலோ துன்பவடிவிலோ இருக்கும். அது நமக்குத் தெரிவதில்லையாதலால், அதை நாம் எடுத்துக் கொள்ள முடியாது; வினைப் பயனும் அறிவில்லாதது; ஆதலால் அதுவும் தானாக நம்மை வந்து அடைய முடியாது; தெய்வத்துக்குத் தெரிவதால், வினைப்பயனைத் தெய்வம் நம்மிடம் சேர்த்து நுகரப் பண்ணுகிறது. அதனால் ஊழ்வினையை தெய்வம் என்று கூறுவதுண்டு. ஊழ்வினைப் பயன் நாம் செய்யும் வினையில் விளைவதாகையால், நாம் இப்போது செய்யும் வினைவழியாக, முன்னை வினைப் பயனைத் தெய்வம் ஊட்டுகிறது. ஊழ்வினைப் பயன் நல்லதாயின், நாம் செய்யும் வினைவழியாக, மிக்க நன்மை விளைவிக்கிறது; துன்பமாயின் செய்யும் வினைகள் தவறுமிடத்து, உடன் கலந்து மிக்க துன்பம் உண்டாக்குகிறது. இந்நிலையில் நாம் ஒரு வேலையில் முயலும்போது அறிவு மயங்கியோ, முயற்சிக்குரிய கருவியும் துணையும் குறைவுபட்டோ, தவறுண்டாகும் காலத்தில் தெய்வம் ஊழ்வினையைப் புகுத்தி எடுத்த வேலையைக் கெடுத்துவிடுகிறது. இவ்வாறு ஊழ்வினை புகுந்தாலும், நம் முயற்சியின் முழுப்பயனையும் கெடுக்காது; இன்றைய நமது முயற்சியளவுக்குரிய பயன் நமக்கு வந்தே தீரும். அதுபற்றியே,

> **''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
> **மெய்வருந்தக் கூலி தரும்''**

என்று கூறுகிறார். ஊதியம் ஊழ்வினையால் கெட்டாலும் தக்க வகையில் முயற்சி செய்பவர்க்கு முதல் கெடாது என்று உரைக்கின்றார். மேலும், உண்மையூக்கத்தோடு

செய்யும் முயற்சிக்கு, ஊழ்வினையையும் எதிர்த்து, ஓரளவு பயன் அடையக் கூடிய ஆற்றல் உண்டு என்று இதனால் தெரிகிறதல்லவா?

இந்த ஊழ்வினையும் நம்மால் செய்யப்பட்ட வினையே; முயற்சியும் நாம் செய்யும் வினையே ஊழ் வினை ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சார்ந்திருப்பது; காலமோ நிலையின்றி ஓடிக்கொண்டேயிருப்பது. ஊழ் வினைக்குரிய காலம் குறைவாகையால் அவ்வூழ்வினை யைப் பொருளாக எண்ணாமல் நமது முயற்சியை விடாப் பிடியாய்த் தொடர்ந்து செய்வோமாயின், ஊழ்வினைவலி குன்றி மெலிந்துபோகும். இதுபற்றியே,

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்"**

என்று அறிவிக்கின்றார். நம் முயற்சிக்கிடையே ஊழ் வினை புகுந்து இடுக்கண் செய்தாலும், ஊக்கம் குன்றி மனச் சோர்வு கொள்ளாமல், தொடர்ந்து விடாது முயல வேண்டும் என்பதற்காகவே, உலைவின்றித் தாழாது உஞற்றுதல் வேண்டும் என்று கூறுகின்றார்.

முயற்சிக்குச் சிந்தனை ஆற்றலுண்டோ எனின், முயற்சியும் நம்மயல் செய்யப்படுவது; முன்னை வினை யென்ற ஊழும் நம்மால் செய்யப்பட்டது. நம்மால் செய்யப்பட்டதை நம்மால் அழிக்க முடியாதா? மேலும் ஊழ்வினை செயலின்றிக் கிடப்பது; முயற்சி யாகிய செய்வினையோ, தொடர்ந்து செல்லும் வலி யுடையது. ஊழ்வினை இன்ப வடிவாகவும் துன்ப வடி வாகவும் இருக்கும் குறையுடையது; முயற்சியோ இன்பமே வடிவாக இருப்பது. அது பற்றி,

**"முயற்சி திருவினையாக்கும் முயற்சி யின்மை**
**இன்மை புகுத்தி விடும்"**

என்று கூறுகிறார். செல்வத்தைத் தந்து இன்பம் பெறு விக்கும் என்பதைத் திருவினையாக்கும் என்கிறார்.

இங்ஙனமாயின் ஒருவன் முயற்சியுடையவனாவ தற்கு என்ன செய்யவேண்டும் என்றகேள்வி எழுகிறது. முதலாவது இன்பம் என்று சொல்லப்படுபவைகளை அவன் விரும்பமாட்டான்; மேன்மேலும் வேலை செய் வதையே விரும்புவான்; தனக்கு இன்பம் வேண்டா னாயினும் தனக்கு வேண்டியவர்க்குத் துன்பம் வரக் கண்டால் விரைந்து சென்று அத் துன்பத்தைப் போக்கி மேலும் துன்பம் நேராதபடி தூண்போல் நின்று காப்பான். இதனை,

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

என்று கூறுகின்றார்.

இவ்வாறு இன்பத்தை வேண்டாமல், வேலைகளையே விரும்புவது நல்லதுதான். பிறர் துன்பம் துடைக்க முற்படுவது ஏன் என்று திருவள்ளுவரைக் கேட்டால், குடும்ப வாழ்வு நடத்துவதே பிறர்க்கு உதவி செய் வதற்கே யாதலால், முயற்சியுடையவன் அதனைச் செய்யாமல் இருக்க மாட்டான் என்பதற்காகத்தான் "தன் கேளிர் துன்பம் துடைத்துத் தூண் போல் தாங்கு கிறான்" என்று கூறுகிறார்.

இங்ஙனம் பிறர்க்கு உதவி வாழ்வதுதான் வேளாண்மை. அதுதான் ஒருவனுக்குப் பெருந்தன்மை. அதனைச் சார்ந்துதான் அவனுக்கு மேம்பாடு உண்டா கிறது. இதற்கெல்லாம் அடிப்படை அவனது முயற்சி.

"தாளாண்மை என்றுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு"

என்று கூறுகிறார். இக்குறளில் முயற்சியைத் தாளாண்மை என்றும், பிறர்க்கு உதவி செய்வதை

வேளாண்மை என்றும் குறிக்கின்றார். இந்நாளில் வேளாண்மை என்பது பயிர்த்தொழிலுக்குப் பெயராய் விட்டது. வேளாளர் என்பது புலால் உண்ணாத ஒரு சாதியைக் குறிப்பதாயிற்று. இது காலத்தால் வந்த கோளாறு.

பிறர்க்கு உதவி செய்வதைக் குறிக்கும் வேளாண்மை, முயற்சி செய்பவனுக்கே உரியது என்று திருவள்ளுவரே கூறுகின்றாரே, முயற்சியில்லாதவரும் பிறர்க்கு உதவி செய்கிறார்களே, அவர்களுக்கு மேன்மை வராதோ என்று கேட்கலாம். முயற்சியில்லாதவன் வேளாண்மை செய்வானானால் ஒரு சில நாட்களில் உள்ள பொருளையிழந்து தனக்கே கேடு செய்து கொள்வான். அவனை அதைச் செய்யச் சொல்வதே குற்றம். முயற்சியில்லாதவன் பேடி; அவனைப் பிறர்க்கு உதவும் வேளாண்மை என்னும் பெருமை வாய்ந்த செயலைச் செய்யவிடுவது, பேடியின் கையில் கூரிய வாளைக் கொடுத்துப் போர்க்கு விடுவதுபோல் ஆகும்; ஆதலால்தான்,

> **''தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை**
> **வாளாண்மை போலக் கெடும்''**

என்று கூறுகிறார்.

முயற்சியை விரும்பாமல் சோம்பியிருக்கும் செல்வர்களும் உலகில் உண்டு. தம்மை அனைவரும் பாராட்டவேண்டிப் போலிப் புகழ் வேண்டியும் வருபவர் அனைவர்க்கும் வேண்டிய உதவியைச் செய்வர். அது சுரக்காத கிணற்றில் உள்ள தண்ணீரை மேன்மேலும் இறைப்பதுபோலாகும். முடிவில் முயற்சியில்லாதவன் செல்வமெல்லாம் இழந்து வறுமைக்கு இரையாகிக் கெடுவான்.

இனி, முயற்சி செய்வதாயின், அதனை விடாது தொடர்ந்து செய்ய வேண்டும்; ஒருமுறை இரு முறை யல்ல பன்முறையும் முயல வேண்டும்; உலைவின்றித் தாழாது உஞற்ற வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லுகிறாரே, அது முடியுமா? இரண்டு மூன்று முறை முயன்றும் எடுத்த வினை முடியவில்லையென்றால், மனத்தில் சோர்வு படத்தானே ஆகிறது; வெறுப்புத் தோன்றி வேலை குறைபட்டாலும் விட்டொழிக்கத் தானே மனம் நாடுகிறது என்று ஒரு கேள்வி இங்கே எழுகிறது. அந்த எண்ணத்துக்கும் இடம் தரக்கூடாது என்று கூறுகிறார் திருவள்ளுவர். எடுத்த வினையைக் குறைபட விட்டால், திறமையில்லாதவன், கோழை என்று உலகம் தூற்றும். வேறு வேலைக்கும் அவன் தகுதி யற்றவன் என்று நீக்கிவிடும். அதனால், முயற்சியைக் கைவிட்டுச் செய்வினையைக் குறைபட விடலாகாது என்பதை வற்புறுத்தவே,

**''வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு''**

என்கிறார்.

கடைசியாக, ஒரு கேள்வி எழுகிறது. வேலைகள் எல்லாம் ஒரே தன்மையுடையவை அல்ல. அருமையானவையும் உண்டு; எளிமையானவும் உண்டு. ''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்பதனால் அருமையான செயல்கள் உண்டென்று திருவள்ளுவரே கூறுகிறார் அல்லவா? அருமையான வேலையானால் குறையாகத் தானே நிறுத்தவேண்டிவரும் என்று கேட்கலாம். முயற்சியையுடையவன் இந்தவேலை செய்தற்கு அருமையானது என்று மனச் சோர்வு அடையக் கூடாது; அவன் முயற்சியொன்றையே மேற்கொண்டு செய்ய வேண்டும். செய்யச் செய்ய, அந்த அருமையான

வேலையை முடித்தற்கு வேண்டிய பெருமையை, பெரு வன்மையை, முயற்சியே உண்டாக்கிவிடும் என்று ஊக்குகின்றார்.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்று உரைக்கின்றார்.

ஆகவே, முயற்சியுடையவன்தான் வாழத் தகுந்தவன்; அவனுக்கு ஆகாத செயல் ஒன்றும் இல்லை என்பதாயிற்று.

## மனவுறுதி

விடாமுயற்சியுடையவன் வாழத் தகுந்தவன்; அதனால் அவன் மேன்மையடைவான் என்று சென்ற வாரத்தில் திருவள்ளுவர் உரைக்கக் கேட்டோம். ஒரு வேலையை மேற்கொண்டு செய்கிறபோது இடையூறோ இடுக்கண்ணோ உண்டாகுமானால் உடம்பு வலிமை குறைகிறது. உள்ளம் சோர்ந்துவிடுகிறது. அறிவும் அயர்ந்து போகிறது. இதனால் விடாமுயற்சியில் ஒருவன் மனம் ஈடுபட மறுக்கிறதே என்று ஒரு கேள்வி எழுகிறது. இதனைத் திருவள்ளுவரும் எண்ணுகிறார்.

மக்களில் மேலோர், கீழோர் என இருவகையினர் உண்டு. இடுக்கண் நேருமானால் சோர்ந்து கீழே விழுபவர் கீழோர்; அதற்கு அஞ்சாமல் முன்னேறிச் செல்பவர் மேலோர். அவர்கள் தங்கள் உடம்பின் இயல்பு வேறு; உயிரின் இயல்பு வேறாக இருப்பதை அறிகின்றவர். இடுக்கணும், இடும்பையும் வந்து தாக்குவது உடம்பையே தவிர உயிரையன்று. உயிர் எந்தக் கொலைக் கருவிக்கும் அகப்படாதது என்பது அவர்

களுக்கு நன்ருகத் தெரியும். வேலை செய்தாலும், செய்யாமல் படுத்துக் கிடந்தாலும் உடம்பைநோயும் துன்பமும் வந்து வருத்தும். இங்ஙனம் இடும்பையின் தாக்குதலுக்கு உடம்பு இலக்காவது இயல்பு என்று தெரிவதால், அவர்கள் வேலைக்குத் தடை செய்யும் இடுக்கண்களுக்காக மனம் கலங்குவதும் இல்லை; பொருளாக மதிப்பதும் இல்லை.

**''இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்**
**கையாருக் கொள்ளாதாம் மேல்''**

என்று திருவள்ளுவர் கூறுகின்ருர்.

இடுக்கண்களைப் பொருளாக எண்ணிக் கலங்காத நிலை எப்படி உண்டாகிறது? எல்லோரும் கலங்குகிருர்களே எனின், அதற்குத் திருவள்ளுவர் தக்க விடை கூறுகின்ருர். நறுமணமுள்ள சந்தனத்தை உடம்பிற் பூசிஞல் மகிழ்கிருேம்; கூரிய கத்திகொண்டு உடம்பின் தோலை அறுத்தால் வருந்துகிருேம். இந்த இரண்டாலும் வருகிற இன்பமும், துன்பமும் மனத்தால் உணரப்படுகின்றன. ஆனுல், இன்பம் தரினும் துன்பம் செய்யினும் இரண்டையும் ஒப்பாகக் கருதுகின்றவரும் உண்டல்லவா?

**''செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும்**
**நெஞ்சோர்ந்து ஓடா நிலை''**

என்று குறித்து அதனை ஒன்பது வகைச் சுவைகளில் ஒன்ருக நூலோர் உரைக்கின்றனர். ஒன்றை நல்லது என்று கருதி இன்புறுவதும், அதையே தீயது என்று கருதித் துன்புறுவதும் நெஞ்சின் தொழில். ஆகவே, இன்பத்தைத் துன்பமாகவும் துன்பத்தை இன்பமாகவும் கொள்ளும் நெஞ்சம் இடையில் வந்து தாக்கும் இன்னுமையை இன்பமாக நினைக்குமாயின், துன்பத்துக்கு

வருந்த வேண்டிய நிலைமை ஏற்படாது. துன்பம் செய்வதே கொள்கையும், கொள்கையுமாகவுடைய பகைவரும் செயலற்றுப் போவதோடு பாராட்டிவிட்டு நீங்குவர். இதனை,

**''இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையுஞ் சிறப்பு''**

என்று கூறுகின்றார்.

இது கொள்கையளவில் பொருத்தமே; செயற்பட வேண்டுமே; அப்பொழுதுதானே எல்லாரும் இதனால் பயன்பட முடியும் என்று கேட்டால் திருவள்ளுவர் கூறுவதைப் பாருங்கள். இருளுக்குப் பகை ஒளி; துன்பத்துக்குப் பகை இன்பம். ஒளி மிகுந்தால் இருள் ஒடுங்கும்: ''ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; ஒன்று மேவிடில் ஒன்று ஒளிக்கும்'' என்பது மெய்கண்ட சாத்திரம். இருளுக்குப் பகையான ஒளிக்கு நிகர் வேறில்லை. அது போலத் துன்பத்தை ஒடுக்கிப் போக்குவதில் இன்பத்துக்கு ஒப்பானது வேறு ஒன்றும் இல்லை. ஆதலால் துன்பம் வந்தால் இன்புற்று மகிழ்தல் வேண்டும்; இதனை,

**''இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதுஒப்பது இல்''**

என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

இங்கே துன்பம் வரும்போது இன்பமாக எண்ணி நகைப்பதும் எளிதாக இல்லையே; இதற்கு வழி யாது என்ற சிந்தனை எழுகிறது. இதற்குக் காரணம் இன்பத்தையே விரும்பி அதனை நாடிச் செல்லும் பழக்கமே யன்றி வேறில்லை. ஆதலால் இன்பத்தை விரும்பாமல் இருக்கப் பழகவேண்டும்; துன்பம் வந்தால், அதுதான் உலக வாழ்வின் இயல்பு என்று எண்ணி அதனை

அடிக்கடிச் சொல்லிப் பயில வேண்டும். அவ்வாறு பயின்றவன் துன்பம் வருமானுல் அதற்காகத் துன்புற மாட்டான். இதனை,

"இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இவன்"

என்று திருவள்ளுவர் உரைக்கின்ருர்.

இன்பச் சூழ்நிலையில் ஒருவன் இருப்பானுயின், அவ் வின்பத்தை நுகரத்தானே வேண்டும் எனின், நுகர லாம்; ஆனுல் உடலளவாய் இருக்க வேண்டுமே தவிர உள்ளத்தால் விரும்பப்படாமல் ஒழிய வேண்டும். உள்ளத்தில் இன்பத்தை விரும்பாத கொள்கை அமைந் தால், துன்பத்தில் மூழ்கிலும், அத் துன்பத்தைத் துன்ப மாக எண்ணுத நிலை உண்டாய்விடும். இது பற்றியே,

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்"

என்று உரைக்கின்ருர்.

இவ்வாறு இன்பக் காலத்தில் இன்பத்தை விரும் பாமல் பழகியவன், துன்பக் காலத்தில் துன்பத்தை ஒரு பொருளாக மதித்து வருந்தமாட்டான் என்பதை, ஒரு நல்ல சான்று காட்டி விளக்குகின்ருர்.

செல்வத்தில் வாழ்கின்ற ஒருவன், தன்னிடமுள்ள செல்வத்தை இறுகப் பிடித்து நிறுத்தாமல் உடனுக் குடன் செலவிடுவானுனுல், வறுமை வந்தபோது, செல்வம் இல்லையே என்று வருந்துவதில்லை. செல்வம் உள்ளபோதே அதை விரும்பாதவன் அது இல்லாத போது இல்லையே என்று வருந்தமாட்டான்.

"அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்ரு தவர்"

என்று தெரிவிக்கின்ருர்.

இத்தகைய மனவுறுதியுடையவனை இடுக்கண்கள் வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாமல் செயலற்றுப் போகும். எங்ஙனமெனில், தான் மேற்கொண்ட தொழிலைச் செய்யும்போது இடுக்கண்கள் வருமாயின் அவற்றை மனதில் கொள்ளாமல், தன் தொழிலை விடாது செய்துகொண்டே இருப்பான்; அத் தொழிலும் நன்றாக முற்றுப் பெறும். வந்த இடுக்கண் துன்பம் செய்தற்கு இடமின்றித் தானே மாய்ந்து மறைந்து போம். அதனால்தான்,

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்"

என்று கூறுகின்றார்.

வருகின்ற இடையூறு ஒன்று இரண்டாக இருந்தால் முன்னே சொன்னபடி, இடையூறு பட்டு ஒழியும். ஆனால், உலக வாழ்வில் துன்பம் தனித்து வருவதில்லை. ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வருவதே இயல்பு. அந்நிலையில் ஒருவன் இன்பப்பட்டுத்தானே தீர்வான் எனில்,

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

என்று கூறுகிறார்.

துன்பத்துக்கு அஞ்சுவதோ அஞ்சி நெஞ்சு அழிவதோ இல்லாதவனாயின், துன்பம் ஒருவகையல்ல, பல வகையாக மாறி மாறி வந்தாலும் அவனை அசைக்க முடியாது, என்பதற்காகவே, "அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண்படும்" என்று எடுத்துரைக்கின்றார்.

இத்தகைய ஒருவன், துன்பங்களை எவ்வாறு தாங்கித் தன் வேலையை ஒழுங்காகச் செய்து முடிக்கின்றான் என்று அறிய விருப்பம் உண்டாகிறதல்லவா? அதற்கு

ஒரு சான்று காட்டி விளக்குகிருர் திருவள்ளுவர். சுமை யேற்றிய வண்டியை ஒரு நல்ல எருது இழுத்துச் செல்லு கிறது. வழி செம்மையாக இருந்தால், அது இனிது செல்லுகிறது. மேடு பள்ளங்களும் சேறும், தண்ணீரு மாக இருந்தால், மண்டியிட்டு, மூக்கு, ஊன்றியும் இழுத்துச் செல்வதைக் காண்கின்ருேம்: சோர்ந்து நின்றுவிடுவதில்லை. அது போலவே, துன்பம் கண்ட போது, சோர்வில்லாமல் விடாது முயலும் இயல் புடையவன், இடுக்கண்கள் அத்தனைக்கும் ஈடு கொடுத்து எடுத்த வேலையை விடாது செய்து முடிப் பான். அவனைத்தாக்கும் இடுக்கண்களும் அவனுடைய வேலையைக் கெடுக்கும் திறன் இன்றித் தாமே கெட்டழியும்; அதனை,

**"மடுத்தவா யெல்லாம் பகடன்னுன் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து"**

என்று கூறுகின்ருர். பகடு என்பது எருது. இடரான இடங்களை மடுத்தவாய் என்று குறிக்கின்ருர்.

மேடு பள்ளங்களைக் கண்டு அஞ்சி மேற்செல்லாமல் திருகவிட்டுப் படுக்கும் எருதும் இல்லாமல் இல்லை. வண்டியோட்டுபவன் அதனை அறிந்து முதுகிலும் முகத் திலும் குருதியொழுக அடித்துத் துன்புறுத்துவான். அது போலத் துன்பங்களுக்கு அஞ்சுபவன் அடுக்கி வரும் இடுக்கண்களுக்கு ஆளாகித் துன்புற்று மெலிந்து வருந்திக் கெடுவான் என்பது சொல்லாமலே விளங்கும்.

துன்பத்துக்கு அஞ்சி நடுங்குபவனுக்கு அறிவும் மழுங் கிவிடும்; ஆற்றலும் கரைந்து போகும். அத் துன்பங் களுக்கு அஞ்சிச் சலியாத மனத் திட்பம் உடைய வனுக்கு அறிவும் ஒளி பெருகித் திகழும். வரும் துன்பத்தைக் கண்டு, அதற்குரிய காரணத்தையும்,

அது வரும் வழி வகைகளையும் தன் ஒள்ளிய அறிவால் கண்டு, அவற்றை விளக்கும் நெறி அறிந்து விலக்கி விடுவான். அது கண்டு பகைவர்களும், அவனுக்கு இடுக்கண் செய்ய அஞ்சி நீங்குவர். இடுக்கண் செய்தால் அப்பகைவர்களின் சூழ்ச்சிகள் பயனில்லாமல் போகும். அவற்றோடு பொருட்சேடும் மன வருத்தமும் பழியும் எய்தி வருந்துவர். இவ்வுண்மை விளங்கும் பொருட்டே,

> "வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
> உள்ளத்தின் உள்ளக் கெடும்"

என்று கூறுகின்றார். வெள்ளம் போல் வருகின்ற இடுக்கண்களை உள்ளத்தில் கொண்டு ஆராய்வானாயின், அவற்றின் கருத்தும் காரணமும், கருவியும் அவனுடைய அறிவுக்குப் புலனாகுமேயன்றி, அவற்றால் விளையக் கூடிய அச்சம் தோன்றாது. ஆற்றல் மிகுதிப்படுமே தவிர, நெஞ்சில் அவலம் உண்டாகாது. அதனால் அவனை அழிக்க வரும் இடுக்கண்கள் தாமே அழிந்து விடும். இக்கருத்தெல்லாம் தோன்றவே, அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும் என்று விளக்குகின்றார்.

ஆகவே, வரும் இடுக்கண்களுக்கு அஞ்சுதல் இல்லாத மனத்திண்மையும் ஆராய்ந்தறியும் அறிவும் அரசர்க்கும், மற்றவர்க்கும் இன்றியமையாதவை என்று வற்புறுத்தவே திருவள்ளுவர் இம் மனவுறுதியை அரசியற் பகுதியின் இறுதியில் வைத்து உரைக்கின்றார்.

# அமைச்சனின் இயல்பு

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறமறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்றும்,

"எல்லாப் பொருளும் இதன்பா லுளவிதன்பால்
இல்லாதஎப் பொருளும் இல்லையால்"

என்றும், சிறப்பிக்கப்பெற்ற திருக்குறள், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து," என்றபடி அனைத்துலகும் ஏற்கும் முறையில், மக்கள் அடையவேண்டிய உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்ப வீடுகளைப் பொதுவாக முப்பாலில் தொகுத்து மொழிகின்றது. இந்நாற்பால் பொருளை அடைவதற்கு மாந்தர் மேற் கொள்ளும் வாழ்க்கை முறைகளை முறையே இல் வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, சமய வாழ்க்கை என்று ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பூத்துக் காய்த்து பழுப்பதாக வள்ளுவர் திருக்குறளில் முப்பாலில் மொழிந்துள்ளார்.

இவற்றுள், சமுதாய வாழ்க்கையாகிய நடுவ ணுள்ள வாழ்க்கை; இருமருங்குமுள்ள இல்வாழ்க்கை யாலும்-சமய வாழ்க்கையாலும் உறுதியுறுகின்றது. இவ்வாழ்க்கையைச் செம்மையாய் நடத்திவரும் பல குடிகள் சேர்ந்தே ஒரு சமுதாயம் ஏற்படுகின்றது. பல சமுதாயங்கள் சேர்ந்த ஒரு பெருங்குழுவை ஒரு நாடு (Nation State) என்னலாம். ஒரு சமுதாயமும், நாடும் பிற சமுதாயங்களாலும், பிற நாடுகளாலும் நலி வடையாமற் பாதுகாத்து நாட்டை நடத்துவதற்கு ஓர் அரசு (Government) வேண்டியிருக்கிறது. அதன் தலைவன் அரசனாகவோ, குடியரசுத் தலைவனாகவோ

அல்லது பிற உருவத்திலோ இருக்கலாம். திருக்குறள் இத்தகைய அரசுத் தலைவனை அரசனைக்கொண்டு இலக்கணம் வகுக்கின்றது. அவன் காவல் நடாத்தும் போது அவனுக்குறு துணையாயிருந்து உதவும் அமைச்சர்களையும், பிற துணைவர்களையும் அரசனது உறுப்புக்கள் அல்லது அங்கங்கள் என்று அமைத்து, அன்னார் ஒழுகு முறைகளை அங்கவியலில் விதந்தோதுகின்றது. திருவள்ளுவர் காணும் அரசுக்கும் அங்கங்களுக்கும், அரசியல் சமுதாய நிலைகளுக்கும் கௌடில்லியர் காணும் அரசுக்கும், அங்கங்களுக்கும் அரசியல் சமுதாய நிலைகளுக்கும் பெரும்பாலான ஒற்றுமைகள் காணப் பெறுகின்றன. தொல்காப்பியர் காலத்திலிருந்தே இதுபோன்ற தென், வடநாட்டியல் ஒப்புமைகள் காணப்பெற்று வருகின்றன.

எனினும், திருக்குறள் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்த"லை எடுத்துக் கூறும் முழு வாழ்க்கை நூலாதலானும், கௌடில்லியர் நூல்போல் பொருள் பற்றி மட்டும் கூறிப் போகவில்லையாதலாலும், கௌடில்லியரைப்போல அரச உறுப்புக்களைப் பற்றிய முழு விவரங்களுக்குப் போகாமல், தமிழகத்திலும் அதைப்போல உலகிலும் நிலவும் அரசு, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண்-ஆகிய அங்கங்கள் ஆகியவற்றின் தகுதிகளைப் பொதுப்படவே கூறிச் செல்கின்றது. அர்த்த சாத்திரம்போல் அல்லது மகாபாரதம்போல் கூட்டு வாழ்க்கை தேவைகளுக்கேற்ற சமுதாய (மன்பதை)த் தோற்றம் (Origin of society) சமுதாயமும் நாடும் (Society and state) சமுதாயத்திலிருந்து நாடு உருவாகிறது (formation of the one from the other) ஆகியவற்றில் நாட்டத்தைச் செலுத்தாமல், திருக்குறள் ஆசிரியர் ஒரு நாடுண்டு, அதைப் பேணும் அரசுண்டு

என்று உறுதியாக அறுதியிட்டு வைத்துக்கொண்டு அரசையும் அரசுக்குதவும் அங்கங்களையும் பற்றிய அடிப்படைத் தகுதிகளை, விவரங்களுக்குள் போகாமல் பொதுப்படவே கூறிச் செல்கின்றார். இதுதான் திருக்குறளின் தனிச் சிறப்பாகும். இதனால்தான் அனைத்து நாட்டினரும் இதை மேற்கோளாகக் கொள்ள முடிகிறது.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த (கி. மு. 427–347) கிரேக்கப் பேரறிஞரும், மெய்யுணர் வாளருமாகிய பிளேட்டோ, தம்மாசிரியராம் சாக்கிரடிஸைப் பின்பற்றியே, அறநெறி மறநெறிகளையும் (Justice and Injustice) சட்ட திட்டங்கள் எவ்வளவில் இவற்றை நிலைநிறுத்தி வருகின்றன என்பதனையும், இவற்றை அரசியலில் கொண்டு செலுத்துவோர்களுக்கிருக்கவேண்டிய தகுதிகளையும், அறநெறியில் எல்லோருக்கும், எல்லாச் செல்வமும், பகிர்ந்தளிக்கப்பெற்றுச் சென்று சேர்வதையும், உண்மையையும் உறுதிப் பொருளையும் (Truth & Reality) உணரவல்ல மெய் யுணர்வாளரே அரசுத் தலைமை தாங்கி நடத்துதற்குரியரென்பதனையும், மறம் மலிந்த அரசியல் நலிவும் நாட்டுச்சீர்கேடுகளையும் இன்னபிற அரசியல் தத்துவங்களையும் திட்டவட்டமாகத் தம் 'குடியரசு' (Republic) நூலில் 10 பிரிவுகளிலு ் ஆராய்ந்து நிறுவுகிறார்.

இவற்றுள் எந்த அரசியலும், அறநெறி அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும் என்னும் உண்மையை நம்தம் செந்தமிழ் நாட்டில் பண்டு தொட்டே, தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே ஒரு மரபாக மேற்கொண்டு வந்துள்ளனர்.

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல" (புறம் 31)

என்றும், நாற்படை வலியிருந்தும், அரசு அவற்றை ஏவி வன்முறையில் நாடாளும் அதிகார ஆற்றலும் பெற்றிருந்தும், மறநெறியில், வன்முறையில் போகாமல், அறநெறியில் நன்முறையில் போகவேண்டும் என்னும் நல்லெண்ணம் ஒன்றே அதற்குக் கடிவாளமாக மனமுவந்து, கட்டாயப் படுத்தப்படாமல், தன்னியல்பிலேயே மேற்கொண்டு நடக்கும் பெருந்தன்மையும் நேர்மைத்திறமும் தமிழக அரசு கொண்டிருந்ததை விளக்கும்.

" கடுஞ் சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலி மாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்,
நெஞ்சுடைய புகல் மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

(புறம் 55—வரி—7-10)

என்றும், வரும் புறநானூற்றடிகளும்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில" (39)

"அறனிழுக்கா து அல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு" (384)

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்" (546)

என்ற திருக்குறள்களும்,

"அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றாகும்"

என்ற சிலப்பதிகார வாசகமும்,

"உறங்கு மாயினு மன்னவன் றன்றொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்

இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்''

என்னும் சிந்தாமணிச் செய்யுளும்,

''மாநிலம்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னுல்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆபையம் ஐந்துந்தீர்த் தறங்காப் பானல்லனே''

என்பதும்,

சோழ அரசிளங்குமரனை வீதிவிடங்கனது தேர்க் கால்பட்டு பசுக்கன்று இறந்த பாவத்திற்குக் கழுவாயாய், தன் குலத்துக்கு ஒரே மைந்தன் உள்ளான் என்றும் கருதாது, ''தருமம் தன் வழிச் செல்கை கடன்'' என்று, தன் மைந்தன் மீது தேரைச் செலுத்திக் கொன்று நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் அரசியல் அற அடிப்படையில் அமைந்ததை வியந்து, ''அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்'' என்று வியந்து கூறியதும் ஆகிய பெரிய புராண அடிகளும்,

''உருளும் நேமியும் ஒண்சுடர் எஃகமும்,
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளும் நல்லற மும்மனச் செம்மையும்
அருளும் நீத்தபின் ஆவதுண் டாகுமோ''

(கம்பர்—மந்தரை சூழ்ச்சி-11)

என்னும் கம்பராமாயணப் பாடலும், அறநெறி வழி வரும் அரசின் சிறப்பைத் திறம்படத் தெரிவிக்கின்றன.

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்''

என்ற பாரதியார் கூற்றும், பிற இற்றைநாள் இலக்கியங்களும் இங்ஙனமே அறநெறி அரசின் அருமை

பெருமைகளையும் நாட்டுக்கு அதன் இன்றியமையா மையும் எடுத்தியம்புகின்றன.

இதற்கெல்லாம் சிறந்த மேற்கோளாக, மேற் கொள்ள வேண்டிய அரசியல் சட்டமாக, உலகப் பொதுமறையாம் தமிழ்மறை அரசியலும், அரசின் உறுப்புக்களாகிய அமைச்சு, படை, குடி, கூழ், நட்பு, அரண்—ஆகிய அங்கவியலும் அமைத்துப்போகின்றது. இவையனைத்துக்கும் ஆழ்ந்த அகன்ற அடிப்படை அறமே, (Justice) அற அடிப்படையில் கட்டப்பட்ட அரசே, அரச அங்கமே, குடி மக்களே, தமிழக அரசுப் பெருங்கட்டிடமாகும்.

செங்கோல் வழுவாத அரசனைச் சூழ்ந்து, ஐம் பெருங் குழுக்களும், எண்பேராயங்களும் அமைந்திருந் தனவாகச் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறு கின்றன. திருக்குறள் அரசியலிலும், ஐம்பெருங் குழு வினர் இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களுள் சிறந்த அமைச்சரும் காலக்கணிதர், தானைத் தலைவர், தூதுவர், சாரணர், பிறரும், அங்கவியலில் பெரிதும் பேசப் பெறுகின்றனர். அவர்களுள் தலைசிறந்த அமைச்சரது தகுதிகளை முதன்முதலில் வள்ளுவர் வழி நின்று காண்போம்.

'காவற் சாகாடு கைத்தற் கண்' அரசுக்கிணையாய அமைச்சனதியல்பை, அவனது குணங்களை, செயல்களை, முதற்கண் அறிவது முறையே. முதலில், அமைச்சனது குணத்தன்மைகளைக் காண்போம். வினை செய்யுங்கால் அதற்கு ஏற்ற சாதனங்களையும், காலத்தையும், செய்யும் விதத்தையும், அவ்வழியில் செய்யப்படும் அவ்வரிய வினையையும் வாய்ப்ப எண்ண வல்லவனே நல்லமைச்சனுவான். வினைக்குரிய சாதனங்கள் அல்லது கருவிகளாக அதற்கு இன்றியமையாத படை வலியை

யும் பொருள் வலியையும் கொள்ளலாம். சிறிய முயற்சியால் பெரிய பயன் தரும் வினைகளைச் செய்தலே நாட்டின் நல்வாழ்வுக்கு வேண்டியதாதலின், அரசும் அமைச்சும் ஈடுபடும் வினைகள் எல்லாம் அருவினைகள் எனப் பெற்றன. "கருவியும், காலமும், செய்கையும் செய்யும், அருவினையுமாண்ட தமைச்சு." இவ்வினைகளைச் செய்து முடிக்குங்கால், அசைவின்மையும், குடிகளின் நலத்தைக் காத்தலும், அற நூல்களைக் கற்று விதிவிலக்குகளை அறிதலும், முயற்சியும் மேற்கூறியவற்றோடு அமைதல் வேண்டும்.

இனி, வினைசெய்யுங்கால் பகைவர்க்குத் துணை ஆயினரை அவர்களினின்றும் பிரிக்கவேண்டில் பிரிக்க வேண்டும். இதை விக்கிரகம் என்பர் வடநூலார். தம் துணைவரை தம்மினின்றும் பிரிந்து போய்விடாமல் கொடை, இன்சொற்களினாலும் பேணிக்கொள்ள வேண்டும். இதைச் 'சந்தி' என்று கூறலாம். தம்மை விட்டும், தம்மவரைவிட்டும் பிரிந்தவரை, மீட்டும் பொருத்தவேண்டில் சேர்த்துக்கொள்ளலும் வேண்டும். இவ்வாறு வினை செய்யுங்கால், இருவினை யாற்றல் பலவிதமாகத் தோன்றினால் அவற்றுள் எதை மேற்கொள்ளவேண்டும் என்று ஆராய்ந்தறிந்து, அது செய்யுங்கால் வாய்க்குந்திறம் நாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தும் சிலரைச் சேர்த்தும் வினையாற்றுங்கால், அவர்களுக்கு இதுவே செயற்பாலது என்று துணிவு பிறக்கும் வகையில் சொல்லலும் வல்லவனே நல்லமைச்சனாவான்.

இனி, இவன் அரசாற் செய்யப்படும் அறங்களை அறிந்த, தனக்கேற் கல்வியால் நிறைந்த சொல்லை யுடையனாய், தன் அரசன் சுருங்கிய, பெருகிய, இடை நிகராகிய முப்போதும், வினை செய்யுந்திறங்களை அறிந்

தாஞய் இருத்தல்வேண்டும். அதஞல்தான் அவன் அரசுக்கு உற்ற சூழ்ச்சித் துணை ஆக முடிகிறது. இத்தகைய இயற்கையறிவோடு நூற் கல்விச் செயற்கை அறிவும் உற்ற நுட்பமுடைய இவ்வமைச்சன் முன் எதிர்த்து நிற்கவல்ல பிற நுட்பாம் அல்லது மிக அதிக நுட்பம் வேறொன்றும் இருக்காது. இதுவே அவருக்குரிய சிறப்பாகும். இதனை,

> "மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை"

என்னும் குறள் கூறு நிற்கும்.

அடுத்து இத்தகைய அமைச்சர் நூல்நெறியால் வினைசெய்யுந்திறங்களை அறிந்த விடத்தும், அப்பொழுது நிலவிவரும் உலக இயற்கையும் சூழ்நிலையையும் அறிந்து அவற்ருேடு பொருந்தவே வினையாற்ற வேண்டும் என்பர் வள்ளுவர். மேலும் இவர், தாம் அறிந்து சொல்லும் அறிவுரையை அழித்து, தானும் அறியாது நிற்கும் நிலையில் அரசு நிற்பினும், உழையிருந்தாராகிய அமைச்சர் அவ்வரசனுக்கு அஞ்சாது உறுதியாயின கூறற்குரியர். "அறிகொன்று அறியான் எனினும், உறுதி, உழைநின்ருன் கூறல் கடன்" அவ்வாறு உறுதி கூருவிட்டால் அரசு நிலைக்காது. வீழ நேர்ந்தால் அக் குற்றத்தை இவர்மேல்தான் உலகம் ஏற்றும். இப்படிப்பட்ட ஒரு நிலைவருமாயின் ஒரு நல்லரசு அமைச்சரின் இடித்துரைக்கும் வன்சொற்களையும், பொறுக்கும் பண்பைப் பெற்றிருத்தல் வேண்டும் என்று இறைமாட்சியிலும், "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலாறும் கெடும்" என்று பெரியாரைத் துணைக்கோடலிலும் கூறிப்போந்தார் ஆசிரியர். இவற்றையெல்லாம் கருதியே நல்லமைச்சராக,

"காலமு மிடனு மேற்ற கருவியும் தெரிந்து கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குறித்து மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்குநீரார்"

"தம்முயிர்க்குறதி என்னார், தலைமகன் வெகுண்ட போதும்
வெண்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்,
செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையு முணர வல்லார் ஒருமையே மொழியு நீரார்"

"நல்லவும் தீயவும் நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியில்
தொல்லைநல் வினையென உதவும் சூழ்ச்சியார்"

என்பவரையே கவியரசராம் கம்பரும் கவினுறக் கூறு கின்றார். இவர்க்கு நேர்மாறானவரை,

"கடிக்கும் வல்லரவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றுன்ற ஏதுவோ டறிவு காட்டி,
இடிக்குந ரில்லை உள்ளார் எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது முடிவன்றி முடிவ துண்டோ"

என்றும் வெறுத்துக் கூறுகின்றார்.

இனி, எதிர்மறை முகத்தால் நல்லமைச்சரல்லர் என விடற்பாலராகிய தீய அமைச்சரைப் பற்றியும் வள்ளுவர் வகுத்து வைத்திருக்கின்றார். உழையிருந்தே பகுதெண்ணி அரசை அடுத்துக்கெடுக்கும் அமைச்சன் அவ்வரசுக்கு எதிராக வெளிப்படவே நிற்கும் மிகப்பல பகைவரையும்விட மிகப் பெரிய உட்பகைவனுவான் என்கின்றார்.

எனவே, செயல்களை முடிக்குந் திறமில்லாத் அமைச்சர், முறையாக முன்னேயே எண்ணி வைத்திருந்தும் செய்யும்போது குறைவானவைகளையே செய்வர் என்பதாம். இவையே, வள்ளுவர் காட்டும், நல்ல அமைச்சனது, தீய அமைச்சனது தன்மைகளாம்.

## அமைச்சனின் சொல்திறம்

அமைச்சனது நல் இயல்பு கூறுங்கால், "ஒரு தலையாச் சொல்லலும் வல்லதமைச்சு" என்று திருக்குறள் வகுத்துள்ள சொல்வன்மையாகிய அமைச்சரின் சொல் திறத்துக்கு இனிப் போவோம். மனத்துக்கண் தோன்றி எழும் கருத்துக்களையும், விளக்கங்களையும் கொள்கைகளையும் கேட்போருக்கு வாய்மொழியாகவும், எழுத்து வழியாகவும் எடுத்தியம்பும் திறம் மக்களனைவருக்கும், பொதுவாக எல்லா அரசு அலுவலர்களுக்கும், சிறப்பாக அமைச்சருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றும். ஒரு செயலைச் செய்ய வேண்டியதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறிப் பிறர் மதம் மறுத்து, தன் மதம் நிறுத்துவதற்குச் சொல்வன்மையே உற்றுழி உதவும். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானல், வாக்கினிலும் ஒளி உண்டாகும். பொது மேடைகளிலும், சட்ட மன்றங்களிலும், மேல் மன்றங்களிலும், அமைச்சரவையிலும், பாராளுமன்றங்களிலும் பிற நாடுகளிலும் பன்னாட்டுக் கழகங்களிலும் தன் அரசின் கொள்கைகளையும், முறைகளையும் தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்துப் பேசும் திறமை வாய்ந்தவர்களே இக்காலத்து நல்லமைச்சர்களாய் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று

அமர்ந்து வருகின்றனர். 'ஆற்றின் அளவறிந்து கற்க' என்று அமைச்சருக்கு வள்ளுவர் அறிவுறுத்தலால் அவருக்கு அளவை நூலாகிய தருக்க நூல் பயிற்சியும் (Logic) வேண்டப்படுவதாம். சட்ட மன்றங்களிலும், பிற மன்றங்களிலும், அமைச்சரவையிலும், அமைச்சரிடம் கேட்கும் கேள்விகளுக்கும் ஐயப்பாடுகளுக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் அமைச்சர் அஞ்சாமலும், அவ்வப்போதே, மறுக்க முடியாத தக்க, ஆணித்தரமான விடைகளளிப்பதற்கு, அளவை நூலறிவு சொல்வன்மையோடு சேர்ந்து உற்றுழி பெரிதும் உதவும்.

கருதிய வினை முடிப்பதற்குரிய இடம், பொருள், ஏவல்களிருப்பினும், அதை எடுத்துச் சொல்லிப் பிறரையும் தன் வயப்படுத்துவதற்குரிய வாக்குவன்மை அமைச்சருக்கு வேண்டற்பாலது. மெய்யுடை ஒருவன் சொல்வன்மை இன்மையால், அதை எடுத்துரைக்க ஆற்றுனய்த் தான் கூறுவது மெய்யேயெனினும், பிறர் பொய்யெனக் கருதும்படி செய்துவிடலாம். கலைபயில் தெளிவுடைய ஆசிரியர் சிலர், நூல் பல கற்றுத் தெளிந்த நுண்ணறிவுடையரேனும் கட்டுரை வன்மையில்லாததால், தங்கள் கருத்துக்களைத் தெளிவாகக் கேட்போர் உணரும்படி எடுத்துக் கூறும் கலைபயில் தெளிவு இல்லாது தம் கல்விப் பயனைப் பிறரும் நுகர்ந்து இன்புறச் செய்ய இயலாது ஏங்குகின்றனர்.

**சொல்வன்மை**

ஆதலால், முதலில் அமைச்சராவார் நாநலம் என்னும் நலனெனப்பெற்று, சொல்வன்மை சொல்லின் கட்சோர்வு நிகழாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சான்றோர் சிறப்பித்துக் கூறும் நாநலம் என்னும் நலனுடைமை அமைச்சர்க்கு இன்றியமையாத குணமாகும். இந்நலம், கல்வி, பொருள்,

ஆண்மை, அழகு முதலியவற்றுக்கும், பிறர்க்கும் அடங்காது அவற்றின் மிக்கே விளங்கவல்லது. தம் பேச்சுக்களிலிருந்தும் அவற்றால் விளையும் செயல்களி லிருந்துமே தம் அரசுக்கும், தம்மரசுக்குரிய பிற அங் கங்கட்கும் ஆக்கமும், அழிவும் நிகழ இருக்கின்றன. ஆதலால், அமைச்சர் அத்தகைய சொற்களில், பேச்சுக் களில், கருத்து விளக்கங்களில், அரசுக் கொள்கைகளை எடுத்துக்கூறி நிறுவுதலில், இன்னோரன்ன நேரங்களில் சொற்சோர்வு நிகழாமல் போற்றிப் பாதுகாத்துக் கொள்ளற்பாலர்.

அவ்வாறு, சோர்வில்லாத சொல்லின் இலக்கணம் யாது? இவ்விலக்கணத்தை மிகவும் ஆழ்ந்த அடிப் படையில் எத்தகைய அரசியல் அமைச்சரும் ஏற்றுக் கொள்ளும் முறையில் வள்ளுவர் வகுக்கின்றார் என் றால், அச்சொற்கள், கருத்துக்களை எடுத்துக்கூறும் உரைகள், நட்பினரை அதாவது கேட்டாரை பின் வேறுபட்டு அவர்கள் பிரிந்து போய்விடாமல், பிணித் துக் கொள்ளக்கூடிய வழுவின்மை, சுருங்குதல், விளங்கு தல், விழுப்பயன் தருதல் முதலிய குணங்களை அவாவி நிற்கும். இக்குணங்களை அவாவுதலாவது, அச்சொற் களைச் சொல்லுபவர் குறித்தன மட்டுமின்றி அவற் றைக் கேட்கும் நுண்ணுணர்வோம் கொள்பவற்றுக் கும் இடம் கருதலாம். மேலும் இச்சொற்களை கேளா ரையும் அதாவது பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரை யும் பின் அப்பகைமை ஒழிந்து தம் நட்பை விரும்பி வரும்படி அவர்களைத் தம்பால் இழுக்கும் தன்மை உடையனவாய் இருக்க வேண்டும். கேட்டார், கேளார் என்று வள்ளுவர் காட்டியுள்ளவர்களை நண்பர் பகைவர் என்று கொள்ளாமல் நூல்களைக் கேட்டு உணர்ந்தோர் கேளாதோர், நூல்களைப்பற்றியும் நுண்

கருத்துக்கள் பற்றியும் விஞவும் அறிவுடையோரும், விஞவாதோரும் என்றும் கொள்ளலாம். சுருங்கக் கூறின், கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்.

இனி, மேற்கூறிய வழியில், சோர்வுபடாமல், கேட்டார் பிணித்து, கேளாரும் வேட்பமொழியும் முறை யாது என்று காண்போம். முதலில் ஒரு கருத்தை எடுத்து மொழியுங்கால் அமைச்சர் வழங்கும் சொற்கள் திறனறிந்து அளந்து கூறப்பெற வேண்டும். திறன் என்பது, அவ்வாறு சொல்லும்போது அவை கூறுபவர் திறமையையும், அவற்றைக் கேட்போரது திறமையையும் குறிக்கும். அத்திறமை, கூறுபவரது குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் முதலிய பலவற்றையும் தாங்கிவரற்பாலது. திறமை அறிந்து கூறுதலாவது, கூறுபவர்க்கும் கேட்ப வருக்குமிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை அறிந்து அவ்வம்மரபாற் கூறுதலாம். இவ்வாறு சொன்ஞல், இதற்கு மேம்பட்ட அறனும் பொருளும் இல்லை என்றே கொள்ளலாம். இது உலகத்தோடு ஒட்ட ஒழுகு தலையும் இனிமையையும் பயத்தலால் சிறந்த அறஞய் விளங்கும். இதஞல் நினைத்த காரியமும் கைகூடலின் பொருளுமாயிற்று. எனவே தாம் சொல்லக் கருதிய சொல்லைக் கேட்போரும்,மாற்ருரும் வெல்லவல்ல சொல் வேருென்றில்லை என்ற அளவுக்கு ஆராய்ந்து தேர்ந் தெடுத்துச் சொல்லவேண்டும்.

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

இதை வேறுவகையாக, "இதை ஒத்த சொல்லும் மிக்க சொல்லும் உளவாகாமற் சொல்லுக" என்றும் கூற

லாம். பிறருக்குத் தன் கருத்துக்களை எடுத்து மொழியுங்கால், அவர் பின்னும் கேட்டலை விரும்புமாறு அமைச்சர் சொல்ல வேண்டும். பிறர் தமக்குச் சொல்லுங்கால், அச்சொற்பயனையும் கேட்டுக்கொண்டு, அவற்றுட் குற்றமுளதேல் இகழாது ஒழிதல் குற்றமற்ற அமைச்சர் கடனாகும். மேலும், சொல்வன்மை, சொற்சோர்வில்லாது, அவையஞ்சாது மொழியும் அமைச்சனை மாறுபட்ட எவனும் வெல்ல இயலாது.

அடுத்து, இவ்வாறு சொல்லவல்ல அமைச்சரது சிறப்பு யாது? தாம் எண்ணிய காரியங்களை, காரியமல்லவாயினும், காரியம்தான் என்று பிறர் துணியும் அளவுக்கு பிறர் ஏற்கும்படி, சொல்லவல்ல சொல்லும் சொல்பலவாய வழியும் மறதியினால் விட்டுவிடும் சோர்வில்லாத, எடுத்துரைப்பதனைக் கேட்போருக்கு, அதாவது அவைக்கு, அஞ்சாத அமைச்சரை வெல்லுதல் என்பது மிகவும் அருமையாகும். "இத்தகையோர்களைப் பிறர், மாற்றாராய்ப் பிரித்தும் பொருத்தியும் செய்து வெல்ல இயலாது. மேலும் சொல்லும் காரியங்களை, காரண காரிய முறை பிறழாது முன் சொன்னவும் பின் சொல்வனவும், முறை பிறழாது வைத்து, நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லவல்ல நல்லமைச்சரை உலகத்தினரும், குடிமக்களும் விரைந்து ஏற்றுக்கொள்வர். ஏற்றுக்கொண்டு அவர்தம் சொற்படி நடந்து நாட்டிற்கு பன்முக நலனையும் ஆக்கவேலைகளையும் ஆக்கித் தருவர். நாடு வசியும் வளமும் பெற்று விளங்கும். தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்ல அமைச்சர் உளரேல், ஞாலம் அவரை விரைந்து கேட்கும் என்று வள்ளுவர் சுருக்கமாக விளம்புகிறார். அதற்கு மாறாகக் குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையில்

பல சொற்களைச் சொல்லிக்கொண்டே இருக்க விரும்புவர். ஆனால் அவரைக் கேட்க ஆளிருக்காது.

இறுதியாக சொல்வன்மை இல்லாதவரது நிலை என்னாகும் என்பதனையும் வள்ளுவர் வழி காண்போம். இவ்வன்மையில்லாதோர் பொருட்செறிவில்லாத பயனிலவாகிய பலவார்த்தைகளை அடுக்கித் தொகுத்துச் சொல்ல விரும்புவர். இவர்களுக்கு, குற்றமற்ற, பயனுள்ள சில வார்த்தைகளைக் கூறி காரியத்தை இனிதே முடித்துக்கொள்ளும் திறமை இருக்காது. இவர்களுக்கு வழுவின்மை, சுருங்கக்கூறல், விளங்க வைத்தல், இனிதாகக் கூறல், விழுப்பயன் தருதல் முதலிய குணங்கள் கைவரப்பெறா. ஆனால், இவற்றுக்கு மாறாகிய பெருக்கிக் கூறல், தெளிவின்றிக் குழப்புதல், வெற்றெனக் கூறல், விழுப்பயன் தராமை முதலியவற்றை இவர்கள் தழுவி நிற்பர். இவற்றையே சொல்வன்மையாகக் கருதி மகிழ்வர். சொல்வன்மையுடைய நல்லமைச்சர் இவ்வாறு கருதி மகிழார்.

நூலைக் கற்றிருந்தும், பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாத, இத்தகையரை கொத்தின்கண் மலர்ந்திருந்தும், நறுமணம் வீசாத ஒரு மலருக்கு ஒப்பிடலாம். செவ்விபெற மலர்ந்திருந்தும் நறுமணமில்லாத பூவை மக்கள் பயன்படுத்தமாட்டார். அதுபோலவே, நூலைக் கற்று வைத்தும் அதன் கருத்தை எடுத்துச் சொல்ல மாட்டாதாரை உலகம் நன்கு மதிக்காது.

**"வித்தின்றி விளைவ தொன்றிலை வேந்த! நின்**
**பித்தின்றி உணர்தியேல் அளவைப் பெய்குவென்**
**உய்த்தொன்று மொழிவின்றி உணர்தற் பாற்றெனா**
**கைத்தொன்று நெல்லியம் கனியின் காண்டியால்"**

"தன்னுளே உலகங்கள் எவையும் தந்தவை
தன்னு ளேநின்றுதான் அவற்றுள் தங்குவான்
பின்னிலன் முன்னிலன் ஒருவன் போகிலன்
தொன்னிலை ஒருவராற் றுணியற் பாலதோ"

என்ற சுருங்கிய அடிகளுள் இறைவனின் உலகொடு ஒன்றித் தனித்து நிற்கும் தன்மையைக், கேட்டார்ப் பிணித்தும், கேளாரும் வேட்ப, பிரகலாதன் அறிவுரை கூறும் நல்அமைச்சன்போல் நின்று தந்தையாகிய பேரரசன் இரணியனுக்குக் கூறிய தன் சொல் வன்மையும்,

"ஆவத்தின் வந்தபயம் என்றனை
அயிர்த்தகல் விடுதி யாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்ந்த
கொவ்வாதோ கொற்ற வேந்தே"

"பகைப்புலத் தோர் துணையல்லர் என்றிவனை
பற்றுமேல், அறிஞர் பார்க்கின்
நகைப்புலத்த தாமன்றே நற்றயம் உளதாய
பதறுன் மிக்க
தகைப்புலத்தோர் தந்தைதாய் தம்பியர்கள்
தனயர்இவர் தாமே அன்றோ
மிகைப்புலத்து விளைகின்ற தொருபொருளைக்
காதலிக்கின் விளிஞர் ஆவர்"

"ஆதலால் இவன் வரவு நல்வரவே" என்று, பகைப் புலத்திலிருந்து வந்தவனேனும், ஏற்றுக்கொண்டு அடைக்கலம் தரத்தக்கவன் என்று வீடணனைத் தக்க காரணங்கள் சொல்லி ஏற்றுக்கொள்ளும்படி இராமனுக்கு நல்லமைச்சன் நிலையில் இருந்து அறிவுரை கூறிய 'சொல்லின் செல்வன்' அநுமானின் சொல் வன்மையும், கம்பராமாயணத்தில் இருந்து காணலாகும், இலக்கிய ஓவியக் காட்சிகளாம். இவை அரசியலில் சொல்வன்மையெனும் சிறந்த இடத்தை விளக்குவன.

# அமைச்சனின் தொழில் திறம்

மனம், மொழி, மெய் என்ற முறையில்தான் மனிதன் செயலாற்றுகின்றான். பூத்த பூ, பிஞ்சு காய்களாகி, முற்றிப் பின் பழமாகிப் பயன் தருவதுபோல் மனத்தில் தோன்றிய ஒரு கருத்தை அல்லது கொள்கையை எடுத்து, வாய்மொழியாகவோ, எழுத்திலோ, பிறருக்குத் தெரிவிக்கும் நிலையில் அது பிஞ்சு, காய்களைப்போல் படிப்படியாய் வளர்ந்து முற்றிக் கொண்டே வந்து, பக்குவப்பட்டுப் பின், பழம்போல், செயலாக மிளிர்கின்றது. எனவே, செய்யவேண்டிய ஒவ்வொரு செயலையும் முதலில் எண்ணி, அடுத்து எடுத்து மொழிந்து, பின், செயலில் செய்து காட்ட வேண்டும் சொல்லுவது யார்க்கும் எளிது. ஆனால் சொல்லிய வண்ணம் செய்து முடித்தல் மிகவும் அரிது.

ஆதலால், சொல்வன்மை பெற்று அமைச்சராய் வீற்றிருப்போர் செயல் வீரராகவும் இருக்கவேண்டும் என்று திருவள்ளுவர் அமைச்சருக்கு இருக்கவேண்டிய செயலாற்றுந்திறம், முறை, முதலியவற்றைச் சொல் வன்மைக்குப் பின் கூறுகின்றார். வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல்வகை ஆகிய மூன்று அதிகாரங்களும் செயலாற்றும் முறைகளின் இயல்புகளை எடுத்து மொழிகின்றன.

## வினைத்தூய்மை

தமது அரசுக்கு வேண்டிய செயல்களைச் செய்து முடிக்குங்கால், அமைச்சர் பொருள் வருவாய் ஒன்று மட்டுமே கருதாமல், செய்யும் செயல்கள், தமது அரசுக்கு அறமும் புகழும் பயக்கும் நல்ல செயல்களாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது

மேற்கொண்டு ஆற்றும் செயல்கள் அறநெறி நிற்பன வாய் தூயனவாய் இருக்கவேண்டும். இதுவே, வினைத் தூய்மை எனப்படும். வினை நலம், பொருள் வருவாய்க்கு மேலும் போய், இம்மை, மறுமைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடுகளனைத்தையும் நல்கும்.

இனி, தூயவினைகளுக்கு மாறுகிய, பாவமும் பழியும் விளைவிக்கும், வினைகளை அமைச்சர்கள் செய்யக் கூடாது என்பதை ஒரு சிறிது பார்ப்போம். அமைச்சர் தம்மரசுக்கு இம்மைக்கண் புகழும், மறுமைக்கண் அறமும் பயக்காத வினைகளை, அவ்வரசின் பெருகிய காலத்திலும், சுருங்கிய காலத்திலும், இடைநின்ற காலத்திலும், அதாவது எப்போதும் செய்யாது ஒழித்துக் கட்ட வேண்டும். ஆன்ற அமைச்சு, ஆன்ற அரசு என்னும் நற்பெயரும் புகழும்பெற்று மேலாக மதிக்கப் பெறவேண்டும் அரசியலில் "ஒளிமாழ்கும் செய்வினையை" அதாவது தாமுளதாகும் காலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப்படும் ஒளியைக் கெடுத்துவிடக் கூடிய வினைகளை அமைச்சர்கள் செய்யாது தவிர்க்க வேண்டும். ஒளி கெடும் செயல்கள் ஆக்கவேலைகள் ஆகா. அக்காரியங்களைச் செய்யுங்கால் 'இடுக்கண் படினும்' அவ்விடுக்கணைப் போக்கிக் கொள்வதற்கான தெளிவினை உடைய அமைச்சர், இளிவந்தனவற்றைச் செய்யமாட்டார். சிறிதுபொழுதில் கழிந்துபோகக் கூடிய இடுக்கணை ஒழிப்பதற்கு, எப்போதும் கழியாத இழிவைத் தரத்தக்க செயல்களை செய்வது முறையாகாது. முன் தாம் செய்தவை தவறு என்று பின் இரங்கும்படியாக, அரசியலில் ஈடுபட்டவர் நடக்கக் கூடாது. ஒருகால் தெரியாது செய்துவிடினும், பின் இரங்கல்களைச் செய்யாமை நல்லது. அவை மீட்டும்

நிகழாதவாறு பார்த்துக்கொள்வதும் நல்லது. பின்னிருந்திரங்குவானாயின், அது தீரும் வழி அறிந்திலன், திட்பமிலன், பயனில செய்கின்றான், தன் பழியைத் தானே தூற்றுகின்றான் என்றெல்லாம் பிறரெல்லாம் இகழ்வர்.

இனி,

**"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை"**

என்ற அளவுக்கு வினைத் தூய்மையை வள்ளுவர் வற்புறுத்துகின்றார். மிகமூப்பினராகிய இருமுதுகுரவரும், கற்புடை மனைவியும், குழவியும் பசியால் வருந்து மெல்லைக் கண்ணும், தீயனவும், வஞ்சமுடைய களவுமாகிய செயல்களைச் செய்தல் அரசர் தொழிலுக்கும் நன்மதிப்புக்கும் உரிய அமைச்சருக்கு ஏற்புடைத்தன்று.

இனி அமைச்சர்கள் பாவமும் பழியும் விளைவிக்கும் வினைகளை ஏன் செய்யக் கூடாது என்பதை வள்ளுவர் வழியே காண்போம். நூலோர் கடிந்து ஒதுக்கிய வினைகளைத் தாமும் கடிந்தொழியாது பொருள் வருவாய் மட்டும் கருதி அமைச்சர்கள் செய்வார்களாயினும், அவை தூயன அல்லவாதலால் முற்றுப்பெறா. ஒருவேளை முற்றுப்பெறினும் பின் துன்பத்தையே கொடுக்கும். ஆதலால் பழியொடுவந்த இழிசெல்வத்தைவிட தூய்மையோடிருந்துறும வறுமையே மேலானது. "அழக்கொண்டவெல்லாம் அழப்போம்" என்றதுபோலத் தீவினைகளைச் செய்து பிறரிரங்கக் கொண்ட பொருளெல்லாம் கொண்டவர், பின் இரங்கும் நிலையில், வந்த வழியைப் பார்த்துக்கொண்டே போகா நிற்கும். இதற்கு நேர்மாறாக, தூய வினையால் வந்த பொருள்கள், முன் இழக்க நேரினும் பின்னர்

வந்து பயன் கொடுக்கும். சூளையில் வைத்துச் சுடாத ஒரு பச்சை மட்கலத்துள்ளே தண்ணீரை ஊற்றி வைத்தே அதனைப் பாதுகாக்க முடியாது. அது சிதைந்து அழிந்து போகும். அதுபோல் அரசருக்கு வேண்டிய ஏமத்தை, பாதுகாப்பைச் செய்வோம் என்று, அமைச்சர், தீய வினைகளாற் பொருள் சேர்த்தால், அது முன் ஆக்கம் பயப்பதுபோல் தோன்றினும் பின் அழிவையே பயக்கும்.

> **''சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்**
> **கலத்துணீர் பெய்திரீஇ யற்று.''**

இதுகாறும் கூறியவற்றுல் வினைசெயலில் தூய்மையினது இன்றியாமை உணரப்பெறும்.

## வினைத் திட்பம்

தூய்மையைப் பின்றிக்கொண்டே; அதை முடிப்பதற்குரிய மனத்திண்மையையும் பெற்றிருக்க வேண்டும். இதனை வினைத் திட்பம் என்பர் ஆசிரியர். வினைத்திட்பமாவது 'ஒருவன் மனத் திட்பம்' அதாவது ஒரு வினையை முடிக்கும் அமைச்சன் மனத்தினது திண்மை அஃதொழிந்தனவாகிய படை, அரண், நட்பு முதலிய பிற திண்மைகளும் உளவேனும் மனத்திண்மை இல்லாத வழிப்பயனிலவாகும். நீதி நூலோர்கள் வகுத்தவாறு, பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும், ஒருக்கால் வினைகளைச் செய்யுப்போது தமக்கும் அப்பாற்பட்ட, தெய்வத்தாற் பழுதுபட்ட வழி, அதற்குத் தளராமையும் அமைச்சர் பெறவேண்டும். வினையாற்றிக்கொண்டு வருங்கால் அச்செயலை வெளிப்படையாக, முடிவிலேயே புலப்படுத்த வேண்டும். செய்துகொண்டுவரும் இடைக்காலத்திலேயே புலப்படுத்திவிடக்கூடாது. இடையிலேயே அவை புலப்படுத்தப்படுமாயின் செய்வாருக்கு நீங்காத

துன்பம், ஏற்ற விழுமம் உண்டாகும். வினையாற்றிக் கொண்டே இருந்தும், தாம் எண்ணிச் செய்வதைப் பிறரறியாமலும், தாம் அறிந்தவற்றைத் தம் இங்கிதம், வடிவு, செயல், சொல் முதலியவற்றால் பிறர் உய்த்து உணர்ந்து கொள்ளாமல் உள்ளடக்கியும் வினையாற்ற வேண்டும். இதில் தவறியதனால் தம் வினையாற்றும் முறையைப் பகைவர் உளவறிந்து இடையிலேயே தெரிந்துகொண்டு அவ்வினையை விலக்கவும், வினை செய்வானை விலக்கவும் செய்ய முற்படுவர். எனவே சொல்லுதல் யார்க்கும் எளிது. ஆனால் சொல்லியவண்ணம் செயல் மிக அரிது. வினைத் திட்பமில்லாதவர்களும் "வாய்ச் சொல்லில் வீரர்" என்றபடி வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லிவிடலாம். இது ஒரு பெரிய காரியமன்று. மிக எளிது. வினைத் திட்பத்தோடு சொல்லியவற்றைச் செய்து காட்டலே அரிது. இவ்வாறு சிறந்த அமைச்சரின் வினைத் திட்பத்தை, வினை முற்றுப்பெற்றதால் செல்வமும் புகழும் எய்திய அவரது அரசும், நாட்டிலுள்ள பிறரும் நன்கு மதிப்பர். என்றும் மறவாது நினைப்பில் வைத்துமிருப்பர். செயலில் செய்து முடிக்கும் வினைக்கண் திண்ணியராகவே, திண்மைக்கு மாறானவற்றை எண்ணாதிருந்தால், அவர் தாம் எய்த எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் எண்ணியவாறே எய்திவிடுவர் என்பதில் ஐயமே இல்லை.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

இத்தகைய அரிய பெரிய அமைச்சர்களைக் கண்டு கொள்வதெவ்வாறு? ஒரு ஆளின் உருவத்தைப் பார்த்தவுடனேயே, அல்லது அது ஒன்றை மட்டும் கொண்டே, அவ்வாளின் தகுதியை மதிப்பிட்டுவிட முடியாது.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? உருண்டு செல்லா நிற்கும பெருந்தேரை, வடிவாற் சிறிதா யிருந்தே, பெரிய பாரத்தைக் கொண்டு செலுத்தும் திட்பமுடைய அச்சின் ஆணிபோல, வடிவிற் சிறியரா யிருந்தே பெரிய வினைகளைச் செய்து முடிக்கும் திட்ப முடைய அமைச்சருமுளர். ஆதலால், வடிவிற் சிறிய ராயிருக்கின்றார் என்று ஒன்று கொண்டு வினைத்திட்ப முடைய நல்லமைச்சரை இகழ்தல் ஒல்லுமோ? ஒல் லாது எனவே, "உருவுகண்டு" எள்ளாது அவரது திட்பம் நோக்கியே, அவரது உண்மை இயல்பை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்பெற்றியர், மனக்கலக்கம் கொள்ளாது தெளிந்து, பலகால் ஆராய்ந்து தேர்ந்து எடுத்துச் செய்து முடிக்க நினைத்த செயல்களில், பின் அசைதல் இன்றி மனத்திட்பமுடனேயே, செயல்களைச் செய்வதில் நீட்டிப்பின்றி செய்து முடிப்பர். "துன்பம் உறவரி னும்" தளராது முடிவின்கண் "இன்பம் பயக்கும் வினை"களையே செய்வர். மேற்போந்த வினைக்குரிய மனத்திட்ப நலன்களை எல்லாம் இல்லாத அமைச்சர், படை, அரண், நட்பு முதலிய பிற திட்பங்களைப் பெற் றிருப்பினும் வினை முடியாது. உலகும் அவரை நன்கு மதிக்காது.

**வினைசெயல் வகை**

அடுத்து வினைத்திட்பமுடைய அமைச்சர், அவ் வினையைச் செய்யுந்திறம், வினை செயல்வகை எடுத்து ஆராய்தற்குரியதாம், முதலில் பொது வகையால் பார்ப்போம். பொதுவாக அவ்வினை செய்யுந் திறத்தை எவ்வளவுக்குக் கருதவேண்டும். கருதியது போதும், சூழ்ச்சிக்கு ஒரு முடிவு வேண்டும் என்று எப்போது சூழ்ச்சியை முடித்துக்கொண்டு செயலில்

இறங்கத் துணிய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். துணிந்தபின் செயலாற்ற லில் கால நீட்டிப்பு கூடாது. நீட்டிப்பு குற்றமாகும். நீட்டித்துக்கொண்டு போனல் காலம் வீணுகும். பகைவர் இக்கால நீட்டிப்பைப் பயன்படுத்திக் கொண்டு தம்மை அழித்துவிடவும் கூடும். இது தீதாய் முடிந்துவிடும். எனினும் நீட்டித்துச் செய்ய வேண் டியவற்றை நீட்டிக்கத்தான் வேண்டும்—நீட்டியாது செய்யும் வினைகளை நீட்டியாது உடனடியாகச் செய்து விட வேண்டும்.

''தூங்குக தூங்கிச் செயபற்ால; தூங்கற்க;
தூங்காது செய்யும் வினை''

இறைமாட்சியிலும் நிலஞள்பவற்குத் தூங்காமையும் தனிவுடைமையும் வற்புறுத்தப் பெற்றுள்ளன. அத் தூங்காமையே இங்கு விளக்கப்பெற்றது.

இனி, அமைச்சர், தம்மரசு, பகைவரைவிட மிக்க வலி, ஒத்தவலி, மெலிந்த வலி என்ற நிலைகளில் இருந்துகொண்டு செயலில் இறங்கும்பொழுதெல்லாம் ஏற்றவிடத்து, இன்றியமையாது வேண்டும்பொழுது, ஒரு செயலை ஆற்றுவதற்கு ஒரோவழி பகையில் தாம் மிக்க வலியராக காலத்து, தண்டத்தை மேற்கொள்ள லாம். அது இயலாத நிலையில் பகைவரைவிடத் தாம் மிக வலியராயின்றி, ஒத்த அல்லது மெலிந்துள்ள காலங்களில், சாம, பேத, தானங்களுள் செயலை முடிக்க வல்ல ஏதேனும் ஓர் உபாயத்தால் செய்து முடிக்கலாம். செய்யத்தொடங்கிய வினையும் களையத் தொடங்கிய பகையுமென்ற இரண்டனையும், இவற்றை விட்டு வைத்தால் என்ன ஆகிவிடும் என்று இகழ்ச்சியாக இருந்துவிட்டால், முற்றிலும் அணைக்காத தீ நீறுபூத்த நெருப்பு, பின் வளர்ந்து கெடுப்பதுபோல் பின்னர்

வளர்ந்து அரசையும் அமைச்சையும் கெடுத்து விடலாம்.

பகைவரைவிட மிக்க வலியைப் பெற்றிராமல், ஒத்த வலியுடையார் என்ன செய்யவல்லர்? இவர் அழியும் பொருளும், ஆகும் பொருளுமாகிய பொருள், தம் தானையும் மாற்ருர் தானையுமாகிய கருவி, தமக்கு ஆகும் காலமும் அவர்க்காகும் காலமுமாகிய காலம், தாம் வல்லவினையும் அவர்வல்ல வினையுமாகிய வினை, தாம் வெல்லும் இடமும் அவர் வெல்லும் இடமும் ஆகிய இடம், ஆகியவற்றை முறையே ஆராய்ந்து தாம் வெற்றி பெறும் வகையைப் பிழையாமல் தேர்ந்தெடுத்துச் செயலாற்ற வேண்டும்.

> "பொருள்கருவி காலம் வினையிடனெடு ஐந்தும்
> இருள்தீர எண்ணிச் செயல்"

என்பதே இவருக்கு ஏற்ற வினைசெயல்வகை. இவர் வினை முடிவதற்குரிய முயற்சி, அதற்கு வரும் இடையூறு, அது நீங்கி முடிந்தால் எய்தும் பெரும்பயன்களை சீர்தூக்கி, முயற்சி, இடையூறுகளைவிடப் பயன் பெரிதாயிருந்தால், முயன்று முடிப்பர். இவ்வினையைத் தொடங்கினவர், இதே போன்ற வினையை முன்செய்து போந்தவன் கருத்தினையும் அறிந்து செய்வது நல்லது. அவன் மேற்கொண்ட உபாயத்தையும் இவர் மேற்கொள்ளலாம்.

இறுதியாக, பகைவரைவிடக் குறைந்த வலியுடையவர் மேற்கொள்ள வேண்டிய வினை செயல் முறையைப் பார்ப்போம். இவர் "யானையால் பிறிதொரு யானையைப் பிணிப்பதுபோல" எடுத்துக்கொண்ட வினையாலே ஏற்ற உபாயங்களைக்கொண்டு பிறிதுமோர் வினையை முடித்துக்கொள்ளற்பாலம். மேலும், இவர் பகைவர்க்குத் தன் மெலிவு புலனுவதன் முன்னரே,

தம் நண்பர்களுக்கு இனியவை செய்து கொண்டிருப்பதைவிட, மிக விரைவாகத் தன் பகைவரோடு ஒட்டாரை பிறர்பால் அவர்கள் சென்றுவிடாமல், தம் நண்பராக இழுத்துக்கொள்வதில் ஈடுபட வேண்டும். ஆளும் நாடும், அரணும் சிறியராய இவ்வமைச்சர், தம்மின் வலியார் எதிர்த்தவழி, தம் பகுதியும் அஞ்சி நீங்கின் முதலொடுங் கெடுவராகலின், அது வராமல், சிறிது கொடுத்தும் அவர்களோடு சமாதானமாகப் போய்விடக் கூடுமாயின், அதுவே நல்லது.

இவ்வாற்ருல் நல்லமைச்சர் தொழில் திறம் விளங்கும்.

## தூதனின் இலக்கணம்

### தூது

அரசியலில் தம் அரசினது கொள்கைகளையும் அயல்நாடுகளோடு தமக்குள்ள உறவின் முறைகளையும், பிறவற்றையும் எடுத்துத் திறம்பட இயம்பப் பண்டைத் தமிழக அரசினது ஐம்பெருங்குழுவில் தூது வரும் இடம் பெற்றிருந்தனர். பிற அரசர்களிடை ''பிரித்தல், பிரித்தாரைப் பொருத்தல்களாகிய'' சந்தி விக்கிரகங்களைச் செயற்படுத்தப் பிற அரசுகளுக்குத் தூதுவர்கள் போக வேண்டியிருக்கிறது. உரோம அரசு, சீன அரசு முதலிய அரசுகளுக்கு பண்டு நம் சேர, பாண்டிய, சோழ மன்னர்களின் தூதுவர்கள் சென்றிருந்தனர். அங்கிருந்தும் தமிழகத்துக்குத் தூதுவர் வந்தனர் என்று தமிழக வரலாறு உணர்த்துகிறது. தூதுவர்களில் ''தான் வகுத்துக் கூறுவான்'', ''கூறியது கூறுவான்'' என இருவகையினர் உண்டு.

முன்னவர் தம்மரசுக்கு ஆவனவற்றையும், கொள்கைகளையும் தாமே, வேறு யாரையும் கலந்து கொள்ளாமலே ஆராய்ந்து முடிவுக்கு வந்து பிற அரசுகளிடம் எடுத்துக்கூறும் முழு அதிகாரம் பெற்ற தூதராவர். பின்னவர், தம்மரசு கூறும் கொள்கைகளை மட்டும் எடுத்துக்கூறும் தகுதி வாய்ந்த தூதராவர். இவ்விருவரும் தம் சுற்றத்தார்மாட்டு "அன்பும், ஆன்ற குடிப்பிறப்பும், வேற்றரசரும் விரும்பும் பண்பும்" பெற்றிருக்க வேண்டும். தம்மரசன்மாட்டன்புடைமை, அவருக்கு ஆவன செய்யும் அறிவு, வேற்றரசரிடத்துத் தூதுரைக்குங்கால், ஆராய்ந்த சொல்லும் வன்மை ஆகிய குணங்களும் இவருக்கு வேண்டும்.

இனித் தான் வகுத்துக் கூறும் தூதரது இயல்புகளைத் தனியே காண்போம். படைவலி மிக்க வேற்றரசரிடைச் சென்று, தம்மரசனுக்கு வெற்றி தரும் வினையைச் சொல்லும் தூதர், நீதி நூலுணர்ந்த அமைச்சருள் அந்நூலில் வல்லராகத் தாமும் இருக்க வேண்டும். "அறிவு, உரு ஆராய்ந்த கல்வி" இம்மூன்றும் செறிந்துள்ளவரே இவ்வகை வினைக்கு ஏற்றவராவார். இவற்றால் நன்மதிப்புடையராகவே, வினை இனிது முடியும். இவர் காரியங்களை எடுத்துச் சொல்லும்போது, தொகுத்துச் சொல்லியும், இன்னாத காரியங்களை எடுத்துச் சொல்லும்போது உடம்படாதார் தம் மனம் மகிழ வன்சொற்களை நீக்கி, இன்சொற்களை வழங்கியும், தம்மரசுக்கு நன்மையைப் பயக்க வேண்டும். நீதிநூற்கல்வி, பகைவேந்தர் மனங்கொள எடுத்துச் சொல்லல், அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கஞ்சாமை, காலத்தோடு பொருந்த வினை முடிக்கத்தக்க உபாயமறிதல்களும் இவருக்கு வேண்டிய தகுதிகளாம். இன்னும் இவர்

"கடனறிந்து காலம், கருதி'' கருமம் சொல்லுவதற் கேற்ற தம் துணையாவார் உடனுய இடமறிந்து, சொல்லுமாற்றை அதாவது தாம் சொல்லுமாறு, அவர் சொல்லும் உத்தரம், அதற்குப்பின் தான் சொல்லுவன ஆகிய இவற்றை மேன்மேலும் கற்பித் தல், ஆகிய இவையும் இவர்க்குற்ற தகுதிகளாம்.

இனி, கூறியதே கூறும் வழியுரைப்பாளர் பொருள் காமங்களால் வேறுபடக் கூருத் தூய்மை, தமக்குப் பிறரமைச்சர் துணையாந்தன்மை, துணிவுடைமை ஆகியவற்ருேடு கூடிய வாய்மைகள் பண்புகளாம். மேலும் தம் வேந்தர் விடும் மாற்றத்தை மாற்றரசருக் குரைக்கும்போது இவர்கள் தமக்கு ஒருகால் துன்பம் வரலாம் என்பதற்காக அஞ்சி, தமக்குத் தாழ்வான வார்த்தைகளை வாய் சோர்ந்தும் சொல்லக்கூடாது. சுருங்கக்கூறின், தம் தூது மொழிகளால் தம் உயி ருக்கே இறுதி நேரினும், அதற்கஞ்சி ஒழியாது, தம் மரசின் தூதுச் செய்தியைச் சொல்லி முடிப்பவரே இத் தொழிலுக்குரியராவார்.

**மன்னரைச் சேர்ந்தொழுகல்**

அடுத்து, நல்லமைச்சர் மன்னரைச் சேர்ந் தொழுகும் முறையைப் பார்ப்போம். இதையே, தூதுவர்க்குக் கூறியபோது "வேந்தவாம் பண் புடைமை'' என்று சுட்டிப் போந்தார் பொதுவாக, அமைச்சர், வேந்தரைச் சார்ந்தொழுகும்போது, அவரை மிக நீங்காமலும் மிக நெருங்காமலும் "தீக் காய்வார்''போல் இடை நிலத்தில் நிற்பதற்குரியர். மன்னர் விழையும் நுகர்வன, ஒப்பனை, மேன்மை முதலியவற்றைத் தாம் விழையாது ஒழித்தால்தான், மன்னர் தாமே வந்து இவர்க்கு நிலைபெற்ற செல்வத்

தைக் கொடுப்பர். அறைபோதல், உரிமையோடு மருவல், அரும்பொருள் வெளவல் முதலிய அரிய பிழைகள் தம்பால் வராமல் பார்த்துக் கொள்ளற்குரியர். இவை தம்பால் உள்ளனவாக அரசர் ஐயுற்ருல் அவரைப் பின் தெளிவித்தல் அரிதாகிவிடும்.

இனி, இவருக்குரிய சிறப்பு இயல்புகள் சிலவற்றைக் காண்போம். அரசர் அருகிலிருக்கும்போது அவர் காணப் பிறரோடு செவிக்கண் மறைபேசுதல், ஒருவன் முகம் நோக்கி நகுதல், அரசர் பிறரோடு மறைபேசும்போது ஒட்டுக்கேட்டல், கூறிக்கேட்டது யாது என்று கேட்டோரை முடுகி விஞவுதல் ஆகியவை கூடாது. தாமாக அவர் கூறிஞல் கேட்கலாம். கூறுங்கால், அரசன் குறிப்பறிதல், ஏற்ற காலம் கருதல், வெறுப்பில்லாதவையும், வேண்டுவனவுமாகிய காரியங்களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுதல், அவன் விரும்பும்வகை கூறியும் கேட்காமல் விடினும் கூறுதல், எப்போதும் பயனிலவற்றைத்தானே கேட்டாலும் சொல்லாதுவிடல் ஆகியவை இவர் மேற்கொள்ளத் தக்க சிறப்பியல்களாம். மேலும், தாம் கூறத்தகாதவற்றைக் கூறிவிட்டாலும் பொறுத்துக் கொள்ளும்படி செய்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டு அரசர் வெறுப்பனவற்றை எடுத்துக் கூறலாகாது. தம்மின் இளையவர் என்றும் தமக்கு உறவினர் என்றும் தாழ்வாகக் கருதிவிடாமல், அரசனுக்கு ஏற்ற நிலையில் வைத்தே கூறவேண்டியவற்றைக் கூறல் வேண்டும். அரசஞல் நன்கு மதிக்கப்பட்டவர் என்பதை வைத்துக் கொண்டு, விரும்பாதவற்றைச் செய்தல் தவறு. பழமை கருதியும் பண்பல்ல செய்தல் தவறு.

குறிப்பறிதல்

மேலும், அரசர் கருதியவதனை அரசர் கூறாமலே அறிந்து கொள்வது மன்னரைச் சேர்ந்து ஒழுகுவார் கடனும். பொதுவாக, உலகத்தில் பிறரோடு பழகு கின்ற ஒவ்வொருவருக்கும் குறிப்பறிதல் இன்றியமை யாத தொன்றேயாம். மன்னரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் தூதுவர் போன்ற பெரும் அரசியற் பதவி களில் பணியாற்றுவோர், தம் வினைகளை ஆற்றுங்கால், பிறர் "கண், முகம்" முதலிய உறுப்புக்களிலிருந்தும், மெய்ப்பாடுகளிலிருந்தும், அவர்களின் சூழ்ச்சிகள், மனப்பான்மை, வினை செயல்வகை முதலியவற்றைக் குறிப்பாய் அறிந்துகொள்ள வேண்டும். தம் எண்ணங் களை வெளியிடாமல் பிறர் எண்ணங்களைக் குறிப்பால் அறிய முயலவேண்டும். "ஊக்கம் உறுப்பினுல் ஆராயும் ஒண்மையுடையார், குறிப்பின் கீழ்ப்பட்டது இவ்வுலகு." குறிப்பினுல் குறிப்பை உணர்வது அரிய செயல்களுள் ஒன்று. இவ்வாறு உணரக்கூடியவர்களை எதைக் கொடுத்தும் துணையாகப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்புணர்வதற்கு இன்றியமையாத உறுப்புக்கள் கண் களாம். காதலர் கண்கள் பேசிக்கொள்ளும் குறிப்பு மொழியை,

**"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்,**
**என்ன பயனு மில"**

என்று விளக்கினுர் ஆசிரியர். அதே போன்று வினை ஆற்றும் அமைச்சரும்,

**"குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்"**

என்றபடி, பிறர் கண்களில் இருந்து குறிப்பை உணர்ந்து கொள்ளவேண்டும். பகைமையையும்,

கேண்மையையும் கண்ணுரைக்கும் நுண்ணியராகிய அமைச்சர் கருத்தினை அளக்குங்கோலாகக் கண்களையே கொள்ளற்பாலர். அவற்றைக் கொண்டுள்ள முழு முகமுமே குறிப்பறிவுறுத்தும் கருவியாம்.

**"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்"**

என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.

**அவையறிதல்**

இனி, வினையாற்றும் அமைச்சர் அரசனோடிருந்த அவையினது இயல்பை அறிந்தே செய்யவேண்டும். தாம் சொல்லப் புகுந்ததைச் சொல்லுமுன், அவையினை ஆராய்ந்து சொல்லவேண்டும். அவையின் செவ்வியினை உணர்ந்து சொல்வதோடு இடையில் வழுபடாமலும் தெளிந்தும் சொல்லவேண்டும். அவையின் செவ்வி யுணராது சொல்பவர், சொல்லில் வகையுமறியாதவரே. கற்றுவல்ல கலையும் அவர்க்கு இல்லை. கற்றவர்கள், தம்மைப்போல் கற்றவர்களின் கூட்டத்தில் பேசுவது மிகவும் பயனளிக்கும். தம்மின் மிக்காரவைக்கண் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாது அடங்குதல் மிகவும் நல்லது. சொல்வதை நுட்பமாக உணரவல்லவர்களின் முன் பேசுவது தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீர் சொரிவதைப்போன்றது. நல்லாரவையில் நல்ல பொருள்களை மனங்கொளக்கூறும் நல்லமைச்சர் மறந்தும் அவையறியாத புல்லரிடைப் பேசக்கூடாது. அங்ஙனம் அல்லார் முன் ஒன்று சொல்லுதல், பயனில் சொல்லாக முடியும். இது சாவா மருந்தென்று தெரிந்தும் அதை நுகர்வார் கையிலும் தராது, வீணாக, ஊற்றிய அங்கணத்துக்கும் பயன்பெறாது, கெட்டொழியும் அமுதை ஒக்கும்,

**அவையஞ்சாமை**

இனி, குறிப்பறிந்து, அவையறிந்து கூறும் தூதுவர் அவைக்கஞ்சாதும் கூற வேண்டும். அவையஞ்சி மெய் விதிர்ப்பான் கல்விபயனற்றது. செஞ்சொல், இலக்கணை, குறிப்புச்சொல் ஆகிய சொல்லின் தொகை தூய்மைகளை அறிந்து தூதுவர், கற்றுவல்ல அல்லது மற்ற அவைகளை அறிந்து பேசுதல், கற்றூர் அவைக்கண் அஞ்சாது, கற்றவற்றை மனங்கொளக்கூறல்களில் சிறக்கவேண்டும். பகைக்களத்தில் எதிர்த்துப் போர்க் களத்தில் சாகத்துணிந்தவர்கள் பலர் உலகத்தில் இருக்கின்றனர். ஆனல், அவைக்களத்தில் அஞ்சாமல் ஒன்றைச் சொல்லவல்லவர்கள் சிலரே. அவையஞ்சாது கற்றூரவைக்கண் தம் கற்றவற்றைக் கூறவல்ல தூதர் பெறும் பயனும் உண்டு. தம்மைவிடக் கற்றூரிருக்கும் அவையில் தாம் கூறிய பொருள்களைவிடச் சிறந்த பொருள்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இவருக்குண்டு. இத்தகைய தூதருக்கு அளவைநூல் (Logic) பயிற்சி இன்றியமையாதது. உற்றுழி உதவும். அமைச்சர்களிடம், தற்காலப் பாராளுமன்றங்களிலும், சட்ட மன்றங்களிலும் உலகப் பன்னுட்டு மன்றங்களிலும், விஞக்கள் கேட்கப்பட்டு, உடனுக்குடன் ஏற்ற விடைகள் இறுக்கப்படுவதுபோல் அக்காலத்தும் விஞக்கேட்டு விடையிறுக்கும் பழக்கம் இருந்திருக்கவேண்டும். "அவையஞ்சாமாற்றம்" என்று வள்ளுவர் கூறுவது இதைப் புலப்படுத்தும். மன்ற உறுப்பினர் விடுக்கும் விஞக்களுக்கு அஞ்சாது அவ்வப்போது, உடனடியாக, ஏற்ற மாற்றம் தருதற்கு அளவை நூல் நன்ருய் அறிந்திருக்க வேண்டும்.

மேலும், அஞ்சாமை இல்லாருக்கு வாளொடு தொடர்பு இல்லை. அதுபோல் அவை அஞ்சுவோருக்கு

நூலொடு நல்ல தொடர்பு இல்லை. பகைவர்களின் எதிரே போர்க்களத்தில் நிற்கும் பேடி கைக் கூர் வாளும், அவையஞ்சும் தூதன் கை நூலும் ஒன்றுதான். நன்னூலைக் கற்றறிந்தும், அதன் பயனைக் கைவரப் பெறாது அவையஞ்சுபவர் கல்லாத மற்றவரைவிடத் தாழ்ந் தவரே ஆவர். இவர் இருந்தும் இறந்தவரே ஆவர்.

எனவே, நல்லரசைச் சார்ந்து, குறிப்பறிந்து, அவை யறிந்து, அஞ்சாது கூறவல்ல நற்றூதர் இயல்புகளை வள்ளுவர் வழிநின்று ஒருவாறு இதுகாறும் கண்டோம்.

## நாடும் பாதுகாவலும்

நல்லரசும் நல்லமைச்சும் பிற அரசவை உறுப் பினரும் சேர்ந்து ஆட்சி நடாத்தும் ஒரு நாட்டின் நலத்தையும் அதன் பாதுகாவலையும் அடுத்துப் பார்ப் பது நமது கடமையாகும். உலகெங்கும் நாடு என்று கூறும்போது அது எதைக் குறிக்கும்? ஆண்டு உள்ள நிலத்தைச் சூழும் ஆழ்கடலையும், அதன்கண் உயர்ந் துள்ள மலைகளையும், ஆறுகளையும், குளங்களையும், மரங்களையும், செடிகொடிகளையும், பறப்பன, ஊர் வன, நீர்வாழ்வன போன்றவற்றையும்; விண்மீனை யும், தண்கதிரையும், செஞ்ஞாயிற்றையும், நிலத்தை யும் புலத்தையும் அங்கு வாழும் குடிமக்களையும், அவர் கள் வழங்கும் மொழிகளையும் இன்னோரன்ன பிறவற் றையும் மட்டுமே குறிக்குமோ? இவையெல்லாம் அங் குள்ளனவே. ஆனால் நாடு என்பது இவற்றுக்கு மேலும் போய் ஆண்டு, "கல்தோன்றி மண்தோன்றா" மிகப் பழங் காலந்தொட்டே வழிவழியாக வந்த மக்களின் ஆக்கவேலைகளையும், கல்வி—கலைகளையும்,

கைத்தொழில்களையும், நாகரிகப் பண்பாடுகளையும், அறிவியல், மெய்யுணர்வியல், சமயவியல், அரசியல், பொருளியல், சமுதாய வாழ்வியல் போன்ற பன்முகப் பாங்கினையே (Human achievement) அது குறிக்கும் என்பர் நாட்டின் சமுதாய இயல்புணர்ந்த நல்லோர். இதை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஒளவையார்.

> **"எவ்வழி நல்லர் ஆடவர்;**
> **அவ்வழி நல்லை வாழிய நிலனே"**

என்று கூறிப்போந்தார்.

இத்தகைய நாட்டியல்பையும் அதனைப் பாதுகாத்து, மரபு வழுவாது ஓம்பும் அரசுப் பாதுகாவலையும் வள்ளுவர் வழிநின்று சுருக்கமாகப் பார்ப்போம். சுருங்கக் கூறின், "நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம்," ஆகிய நால்வகை வளங்களும் உடையதாய்ப் பசியும், பிணியும், பகையுமின்றி, வசியும் வளமும் சுரந்து விளங்கும் இடமே நன்னாடாகும். குறையாத விளைபொருள் அவற்றை எல்லோரும் "உடையோர்; இல்லோர்" (haves and have nots) என்ற வேறுபாடின்றிப் பெற்று நுகரச் செய்யவல்ல அறம்பேணும் அறவோரும், கேடில்லா செல்வமுடையோரும் உடையதே நாடு.

**நாடு**

> **'தள்ளா விளையுளும், தக்காரும் தாழ்விலாச்**
> **செல்வரும் சேர்வது நாடு'**

என்கிறார் வள்ளுவர்.

> **'நற்றவம் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்**
> **நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கு**
> **மஃதிடம்'**

என்பர் சிந்தாமணியுடையாரும்.

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த வேண்டுமென்று கம்பரும் கூறுவர். ஒரு சிலர் செல்வர்

களாக விளங்கி, மற்றப் பெரும்பாலோரைச் சுரண்டித் தம் வாழ்வை மட்டும் வளமாக்கிக்கொள்ளும் நாட்டின் வாழ்வு தாழ்வுடையதாகுமே ஒழிய, வாழ்வுடைய தாகாது. திருவள்ளுவர் இதை விரும்பவில்லை.

உணவுப் பொருள்களும், பிற நுகர்பொருள்களும் அளவிறந்து, பிற நாடுகளுக்கும் அவர்கள் விரும்ப, ஏற்றி அனுப்பத்தக்க தகுதியுடையனவாய், ஒரு நல்ல நாட்டினர் விளைவிக்கவேண்டும். விளைவிக்கும்போது "மழை மிகுபெயல், பெயலின்மை" முதலியவற்றால் நீர்த் தட்டுப்பாடும் பிறகேடுகளும் ஏற்படாமல் நீர்ப் பாதுகாப்பும் சேமிப்பும் கொண்ட அணைத்திட்டங்கள், எலி, விட்டில்கிளி போன்ற பூச்சிபுழுக்கள், நோய்கள், முதலியவை பயிர் பச்சைகளைத் தாக்காத முன்னேற் பாடுகள் போன்றவற்றைச் செய்து, விளைபொருள்களை விளைவிக்க வேண்டும். பிறநாடுகள் பொறுத்த பாரம் எல்லாம் ஒருங்கே தன்னாட்டிற்குள் வந்தாலும், அவற் றையும் சமாளித்து, அரசுக்குரிய இறைப்பொருளையும் உடம்பட்டுத் தேடிக்கொள்வதே நன்னாடாகும். "உறு பசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்" நன்னாட்டில் சேரத்தகாதவை. இவை, உணவுப்பொருள்களை உண் டாக்கும் முயற்சியும் வழிவாய்ப்புக்களும் உடைய நல்ல உழவுத் தொழில்துறை, மக்கள், உடல் உள்ள நலம்நாடும் சமுதாய நலத்துறை, அரசின் படைபலம் அரண்கள், போன்ற படை, பாதுகாப்புத் துறை களாலும் வாராமல் தடுக்கப்பட வேண்டும்.

மேலும், அரசுக்கு எதிராக அமைந்துள்ள பல குழுக்கள், (Cliques) உடனுறைந்தே கொல்லும் உட் பகை, அரசை ஆட்டி அலைக்கும் குறும்பர் கூட்டம், ஆகியவற்றையும் நாட்டை நலிவிக்காதவாறு அகற்ற வேண்டும். ஆற்றலையும், பகைவரால் புறப் பாதுகாப்

யையும், கடவுள்நெறி அறநெறிகளில் நிற்கும் ஆன்மீக அகப்பாதுகாப்பையும், கொண்ட பகைவராற் கேடுருத நிலையும், அரிதிற் கெட்டதாயினும், அப்பொழுதும் சமாளித்துக் கொள்ளக்கூடிய குன்ருவளமும் கொண்ட நாடு, நன்ருடுகளிற் தலைசிறந்ததாகக் கருதப்பெறும். இதன்கண் உள்ள "கீழ்நீர், மேல்நீர்" ஆகிய இருவகை நீரும், வாய்ந்த மலையும், அதனின்று வருமழைநீரும், அதனுல் ஆகும் துரவு, கேணி, ஏரி ஆறுகளுமாகிய நீராதாரங்களும், இந்நாட்டிற்குரிய நல்லுறுப்புக் களாம். இந் நாட்டிற்கணிகளாவன 'பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்' ஆகிய ஐந்தும். சில நாடுகள் இயற்கை வளமுடையதாய், மக்கள் வலியும் வருத்தமுமின்றிப் பயன்பெறத் தக்கனவாய் அமைந் துள்ளன. இவையே நன்ருடுகளாம். 'நாடென்ப நாடாவளத்தன. நாடல்ல, நாடாவளம் தரும்நாடு' மேற்கூறிய அனைத்து நலனும் பெற்ற நாடு, நல்லரசைப் பெறவில்லையாளுல் எவ்வாறு நலம் பெறும்? பெருது. ஆதலால் அரசாட்சியின் செம்மையும் வேண்டும்.

> "ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
> வேந்தமை வில்லாத நாடு"

### அரண்

இத்தகைய நன்ருடு கேடின்றி இருப்பதற்கு, பகைவர்களாலும் அழிக்க முடியாத அரண்களை—பாதுகாப்பு அமைப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும். இக்காலத்து நல்லரசுகளில், பகைவர்களால் மேற்செலவு, கேடு முதலியவைகள் விளையாமற் செயற்கை அரண்கள் தரை, கடல், வான் படைகள், அணு ஆற்றலால் இயங்கும் போர்க் கருவிகள் முதலியவற்றைத் தற்காப்புக் கெனவும், மேற்சென்றுவரும் பகையை மடக்கித்

துரத்தி, அழித்து, ஒழித்துக்கட்டுதற்கெனவும் அமைத்துக் கொண்டுள்ளனர். இவையேயன்றி இயற்கையிலேயே பகைவர் எளிதில் கடந்துவர முடியாத காடு, கடல், மலை போன்ற இயற்கை அரண்களும் நாடுகளுக்கு அமைந்துள்ளன. இவற்றைக் கடந்துவர முயன்றாலும், தடுத்து நிறுத்தும் வழிவகைகளையும் செய்துகொண்டுள்ளனர். இத்தகைய அரண் எவ்வாறிருக்க வேண்டுமென்று, எக்காலத்தவருக்கும் எந்நாட்டினருக்கும் ஒத்த முறையில் அக்காலத்திலேயே இந்நாட்டில் வள்ளுவர் வகுத்துரைத்துப் போந்துள்ளார். அக்காலத்துக்கேற்ற அரண் வகைகளைக் கருத்திற்கொண்டு, இக்கால அரண் வகைகளையும் போர்க் கருவிகளையும் நாம் பொருத்தி ஏற்றவாறு மதித்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு நாட்டினால் இன்னொரு நாட்டுக்குக் கேடு விளைந்து, ஒன்று வீழ்ந்து அதனால் மற்றொன்று வாழவேண்டுமானால் அவ்வாழ்வு மனிதப் பண்பியல் வாழ்க்கையாகாது. ஆதலால் உலகில் வன்முறை நீங்கி, நன்முறையும், போர்மை முறைபோய் நேர்மை முறையும் வருமானால் மேற்குறித்த அரண்களும் போர்க் கருவிகளும் பயனற்றுத் தேவையற்றுப் போய் விடும்.

**"அறத்துக்கே அன்பு சார்பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"**

என்ற அன்பு நெறியும் அறநெறியும் நிலவுமாயின் வன்முறை, போர்முறை ஆகிய மற நெறி ஓடி ஒளிந்து விடும். ஒழிந்துவிடும்.

இவ்வரண், அரசினது உறுப்புக்களில் சிறந்த இடத்தைப் பெறும். பகைவரால் தொலைவு நேரும்போது

தனக்கும் அரசுக்கும் ஏமமாகும் சிறப்புப் பற்றித் தனியாக ஓர் அரசு அங்கமாக இது கொள்ளப் பெற்றுத் தனி அதிகாரத்தில் வள்ளுவரால் வகுத்துரைக்கப் பெறு கிறது. ஒரு அரசு பிறர் மேற்செல்ல நேர்ந்தால், தன் உரிமை, பொருள் முதலியவற்றைப் பிறனொருவன் பறித்துக்கொண்டு போய்விடாதபடி பாதுகாத்துக் கொள்வதற்கும், தம்மேல் படையெடுத்து வருவார்க் கஞ்சித் தன்னை அடைவாரைப் பாதுகாப்பதற்கும் அரண் இன்றியமையாத சிறப்புடையது. இதை "நீர் அரண், நிலை அரண், மலையரண், காட்டரண்" என நான்கு வகைப்படுத்துவர் வள்ளுவர்.

இனி, அரணின் இலக்கணத்தை ஒருவாறு காண்போம். அரண் நூல்வல்லோர், உணர்வு, அகலம், திண்மை அணுகுதற்கருமை ஆகிய நான்கும் அமைந்த மதிலும் அரணாகும் என்பர். ஏணிகளால் ஏறமுடியாத உயரமும், வெளியிருப்போர் அகழமுடியாத அடியகல மும், உள்ளிருப்போர் வினைசெய்வதற்குரிய தலையகல மும், குத்தப்படாத திண்மையும், சிலப்பதிகார அடைக் கலக் காதையில் மதுரை மாநகர் மதில்களில் நிறுவப் பெற்றிருந்ததாகக் கூறப்பெறும் "வினைவிற் பொறி, மயிற்செறி நிலை, கருவிரலூகம், கல்லுமிழ் களன்" போன்ற பல பொறிகளிருத்தலால் அணுகுதற்கருமை யும் இம்மதில்களுக்குண்டு. பாதுகாப்பிடங்கள் காக்க வேண்டுமிடம் சிறிதாய் ஆனால் அகன்ற இடத்தை உடைத்தாய் வந்து முற்றுகையிட்ட பகைவரது மன எழுச்சியைக் கெடுக்கவல்லனவா யிருத்தல் வேண்டும். இவை பகைவர் எளிதிற் கொள்ள இயலாதனவாய், பலவகை உணவுப் பொருள்களையும் தம்மகத்தே கொண்டுள்ளனவாய், உள்ளிருப்போர்களது போர் நிலைக்கு எளியனவாய் அமையவேண்டும். அகத்

தோர்க்கு வேண்டும் எல்லாப் பொருள்களும் உள்ளிருக்க, புறத்தோர் அழிக்க முற்படு நிலையில் அது நிகழாதவாறு உதினிக் காக்கும் வீரர்களையும் இவை கொண்டிருக்கும்.

மேலும் இவை, வெளியேறிப்போக ஒழியும் வகை நெருங்கிச் சூழ்ந்தும், அங்ஙனம் சூழாது, நெகிழ்ந்த விடநோக்கி ஒருமுகமாகப் பொருதும், அகத்தோரை தெரிந்தவர்களைக் கொண்டு சதிசெய்து கீழறுத்துத் திறப்பித்தும், புறத்தோராற் கொள்ளுதற்கரியன. மிக்க படைவலியுடன் வந்து சூழ்ந்துகொண்ட புறப் பகைவரையும், அகத்தோர் பற்றிய இடம் விடாதே நின்றும் பொருது வெல்வதே நல்லரணும்.

இனி, அரண்களிலிருந்தும் அவற்றைக் காப்பாரின்றிப் பயனில்லை என்றும் வள்ளுவர் கூறுகின்றார். போர் தொடங்கின அளவிலே, பகைவர் கெடும் வண்ணம், அகத்தோர் செய்யும் வினை வேறுபாடுகளைச் செய்து காக்கவல்ல வீரரை மதிலரண் பெற்றிருக்க வேண்டும். வினை வேறுபாடுகளாவன, பகைவர் தொடங்கிய போரினை அறிந்து "எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல்" முதலியன. மற்றும் புறத்தோரறியாமல், புகுதல், போதல் செய்தற்குக் கண்ட சுருங்கை வழிகளும் நல்லரணில் அமைக்கப் பெற்றிருக்கும். வினையாற்றுதலில் ஊக்கமும் சிறப்பும் இல்லாத பாதுகாப்பாளர், அதன்கண் இருப்பரேல், மேற்போந்த மாட்சியனைத்தும் வல்லரண் பெற்றிருந்தும், அதனால் விளையும் பயன் யாதென்றுமில்லை.

இதுகாறும் கூறியவாற்றால் நல்லரணின் இயல்புகளை ஒருவாறு உணர்ந்தோம்

# செல்வங்கள்

நல்ல வளங்களையும், பாதுகாவலையும் உடைய நாட்டில், செல்வமும் கொழித்தால்தான் மக்கள் இன்பமாக வாழ்வார்கள். செல்வம் என்ற அளவில் பணம் அல்லது பொருள் ஒன்றை மட்டும் அது குறிக்காது; பணம் பத்து விதமும் செய்யுமாயினும், அதையே முடிந்ததாகக் கொண்டுவிடாமல், அதன் வழியாக, வேறு செல்வங்களையும் ஒரு நல்லரசு மக்களுக்கு வழங்க வேண்டும்.

**"கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு**
**செல்வமும் செல்வ மெனப்படும்"**

என்பர் ஆன்றோர். கல்வியினால் விளைந்த அறிவே சிறந்த செல்வமாகும்.

**"நுண்ணுணர்வின்மை வறுமை; அஃதுடைமை**
**பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்"**

பலவகைச் செல்வங்களையும் துய்த்தலின்றி விடுதலை பெறும் விடுதலையில் பிறக்கும் நிறைவே அமைதியே ஒரு செல்வமாகும். "செல்வமென்பது சிந்தனையின் நிறைவே; அஃது நல்குரவு அவாவெனப்படுமே" என்பர் இதனை. இனி, இதற்கெல்லாம் அப்பாற்பட்ட மிகச் சிறந்த செல்வம் இறையின்பமாகும்; பேரின்பமாகும். "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" இது அருட் செல்வத்தில் பிறப்பதாகும். அருட்செல்வமே செல்வத்துட் செல்வமாம். இத்தகைய செல்வங்கட்கு அடிப்படையாகிய பொருட் செல்வ வகைகளை வள்ளுவர் வழிகாண்போம்.

பெரும்பான்மையும் நாட்டாலும் அரசனாலும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளை, செல்வத்தை செய்தலின் திறம் அடுத்துப் பொருள் செயல் வகையில்

ஆராய்தற்பாலது. திருவள்ளுவர் காலத்து நிலவிய முடியாட்சியில் தனி உடைமைப் பகுதி மிகுதியாகவும் பொதுஉடைமைப் பகுதி, குறைவாகவும் இருந்திருக்கும். பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையாதலால் நாட்டில் பலவகைச் செல்வங்களும் இவ்வுலக வாழ்க்கை நன்முறையில் செல்ல எல்லோராலும் ஈட்டப்பட வேண்டும். பொருள் செயல் வகை ஓதும்போது திருவள்ளுவர் அறத்தையே வற்புறுத்துகின்றார்.

**பொருள் செயல் வகை**

மதிப்பு இல்லாதவர்களையும் மதிக்கத்தக்கவராகச் செய்யும் சிறப்பு பொருளுக்கு இருப்பதால், பொருளை விட ஈட்டத்தகுந்த பொருள் வேறொன்றில்லை. பொருள் இல்லாதவரை எல்லாரும் எள்ளுவர். "இல்லாளும் வேண்டாள். ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்." அதற்கு மாறாகச் "செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு". ஏனைய விளக்கு, ஒரு சிலருக்கு, ஒரு சிறிது காலத்துக்கு, ஒரு சிறு இடத்தில் மட்டும் விளக்கம் தருவதுபோலன்றி, எல்லார்க்கும், எஞ்ஞான்றும், ஈட்டுபவர் நினைத்த இடத்துக்கெல்லாம் சென்று பகை என்னும் இருளையும் கெடுத்தலால் 'பொருள் பொய்யா விளக்கு' எனப்பட்டது.

இவ்வளவு சிறப்பு எய்திய பொருளை அறநெறியிலேயே ஈட்டவேண்டும். திறம் அறிந்து தீமை இல்லாத வழியில் சேர்ந்த பொருளாக இருக்கவேண்டும். அறம் பயக்கக்கூடியதாகவும் இன்பம் பயக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும் செங்கோலன் என்று புகழப்படுதலாலும், சமய நெறி, ஈகை முதலிய நற்செயலுக்கு உதவுதலாலும் இத்தகைய பொருள் 'அறன் ஈனும்' என்று சிறப்பிக்கப்பட்டது. நெடுங்காலம் நின்று

துய்க்கப் பெறுதலால் "இன்பமும் மீனும்". எனவே இது அருளோடும் அன்போடும் வந்ததாக இருக்க வேண்டும். அருளும் அன்புமின்றிப் பொருள் சேர்க்கக்கூடாது. அருளும் அன்புமின்றிச் சேரும் பொருளை ஏற்று அள்ளிக்கொள்ளாமல் தள்ளிவிட வேண்டும். இனி, உடையாரின்மையின் தானே வந்துற்ற பொருளும் சுங்கப் பொருளும், பகைவர் தந்த திறைப் பொருளும், குடிகள் தரும் இறைப்பொருளும் ஆகியவை எல்லாம் வேந்தன் பொருள்களாம்.

அருள்நெறியை மறவாமல் பொருளை ஈட்ட வேண்டும் என்று அறிவுறுத்திய ஆசிரியர், அந்தப் பொருள் அருளை வளர்க்கவே பயன்பட வேண்டும் என்று பொருளின் பயனைக் கூறுகின்றார். அன்பு என்னும் பண்பிலிருந்து தோன்றி வளர்த்ததாதலால் அருள் சேயாயிற்று. அன்பு தாய் ஆயிற்று. இன்னார் இனியர்; வேண்டியவர் வேண்டாதவர், உற்றோர், மற்றோர் என்ற வேறுபாடுகளின்றி, தொடர்பு கருதாது வருந்துவோருக்கெல்லாமுற்ற மருந்துபோல் செல்லும் அருள், தொடர்பு பற்றியே மட்டும் செல்லும் அன்பு பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் பெற்று முதிர்ந்த வழி அதிலிருந்து பிறக்குமாதலின் "அன்பின் குழவி" யாயிற்று. வறியோருக்கும் வருந்துவோருக்கும் உற்றுழி உதவ, இவ்வருள் சுரக்குங்கால், அவ்வறுமை களையவல்லோர், பொருளைக் கொண்டுதான் களைய வேண்டியிருப்பதால், பொருளாலேயே அருள் வளர்கிறது. எனவே, பொருள் அருளைப் பெற்று நற்றாயாக ஆகாவிட்டாலும், போற்றி வளர்க்கும் செவிலித்தாயாகின்றது. உலகியற் செவிலி போலாது பொருட் செவிலி, தானே எல்லாப் பொருளும் உதவி அருளை வளர்த்தலின், 'செல்வச் செவிலி' எனப் பெற்றது.

இன்னும், இப்பொருளின் பயனை ஒரு சிறிது காண்போம். பொருளைச் செய்த ஒரு பொருளாளர் தாம் ஈட்டிய அப்பொருள் கொண்டு ஒரு வினையாற்றப் புகுந்தால், அச்சமும் வருத்தமுமின்றி, வல்லாரை ஏவி தாம் இனிதே இருந்து முடிக்கவல்லவராவர். இது ஒருவன் "மலைமேல் ஏறி நின்று அச்சமும் வருத்தமுமின்றி, கீழே நிலத்திடை யானையும் யானையும் செய்யும் போரை இனிதிருந்து காணுவதை ஒக்கும். இனி ஓர் அரசியலும், இவ்வாறே நாட்டிற்கு வேண்டிய பல்வகைப் பொருளும் சேர்ந்திருந்தால், அது அவ்வரசுக்கு எதிரிகளாகிய பகைவர் தருக்கினை அறுக்கும் கூரிய படைக்கலம் போன்றதாகும். பொருளைச் செய்யவே பெரும் படையும், நட்பும் அவ்வரசை வந்தடையும். அடையவே பகைவர் தருக்கொழிந்து தாமே அடங்குவர். மேலும், அறவழியில் ஈட்டிய பொருள் மிகமிகப் பெரிய அளவுக்குச் சேர்ந்துவிட்டால், அதன் வழியாக அறமும் இன்பமும் ஒருங்கே எளிதாக வளர இடமுண்டு. பல்வகைச் செல்வமும் பாங்குடன் கொழிக்கும் அமெரிக்கா, சப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் இன்று தாம் பெற்ற செல்வ வளங்கொண்டு உலகில் பல பின்தங்கிய, முன்னேறி வருகின்ற நாடுகளுக்குப் பல வழிகளிலும் உதவி உலகிடையே அறத்தையும் இன்பத்தையும் வளர்த்து வருவதை இன்று நாம் கண்கூடாகக் காணலாம்.

இவ்வாறெல்லாம் சிறந்த பொருள், முடியாட்சிகள் மாறிப் பெரும்பாலும் குடியாட்சிகளாக மாறிவரும் நம் காலத்தில், கொஞ்சம் கொஞ்சமாக, தனி உடைமையிலிருந்து பொது உடைமையாக "எல்லார்க்கும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தல்", "இல்லோரும் இல்லை உடையோரும் இல்லை", "வறுமையுமில்லை வன்

மையும் இல்லை", "இடுவாருமில்லை, ஏற்பாருமில்லை" என்ற ஓர் ஒப்பற்ற நன்னிலைக்குப் போய்க்கொண் டிருக்கிறது. மின்சாரம், குடிநீர், அஞ்சல், தந்தி, வானொலி, மருந்து, போக்குவரவுச் சாதனங்கள், பெருங் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள் போன்றன, அரசாங்கப் பொதுவுடைமைகளாக மாறிக்கொண்டு வருகின்றன. எல்லாம் அரசாங்கத் தின் செல்வம். அதை நுகர்ந்து துய்க்க அரசாங்கத்தின் உறுப்பினர்களாகிய அனைத்துக் குடிமக்களுக்கும் உரிமை உண்டு. இத் தத்துவமே இம்மாறுதலின் அடிப்படையாகும். செல்வம் அரசாங்கத்தின் உரிமை என்று கொண்டு குடியாட்சியில் மக்களும், மக்கள் சார்பான தலைவர்களும் பொறுப்பேற்று அரசாங் கத்தை மக்கள் ஆட்சியாக மாற்றி வருகின்றனர். இவையெல்லாம் அற அடிப்படையில் பொருளீட்டுக, அதன்வழி இன்பமும் அறமும் வளர்க்க, என்று அரசுக்கு அறிவுறுத்திய வள்ளுவர் அடிப்படையில், முகிழ்த்து வரும் புதுத் தத்துவக் கருத்துக்களேயாம். "செல்வத்துப் பயனே ஈதல்". இதுகாறும் கூறிய வாற்றால் ஒரு நல்ல நாட்டின், செல்வ வகைகளையும், அறநெறியில் ஈட்டும் முறைகளையும், நல்ல வழிகளில் நாட்டின் நலத்திற்கெனச் செலவழிக்கும் துறைகளையும் வள்ளுவர் வழி நின்று கண்டோம்.

## படை வலிமை

நல்லரசு, அறநெறியிற் பொருளீட்டும் முறையை வகுத்துக் கூறிய வள்ளுவர் அடுத்து, அப்பொருள் வலியால் அமைக்கப்பெற்று, வெல்லும் ஆற்றல் வாய்ந்த படை வலிமையை, படைமாட்சி, படைச்

செருக்கு என்னும் இரு அதிகாரங்களில், தொகுத்துக் கூறுகின்றார். "மாநிலங்காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை, தானதனுக்கிடையூறு தன்னால், தன் பரிசனத்தால் ஊனமிகு பகைவரால், கள்வரால், உயிர் தம்மால் ஆனபயம் ஐந்தும்" நிகழாதவாறு பாது காக்கக் கடமைப்பட்டவனாவான். பலருக்கு இன்னல் இழைக்கும் கூட்டம் ஒன்று, தீயசக்தி ஒன்று, உலகத்தில் உள்ள அளவும், அதை அடக்குவதற்கென ஒரு படை இருந்தே தீரும். அதைப் போற்றி ஏற்ற முறையில் பயன்படுத்துவது அரசின் கடமையும் பொறுப்பு மாகும். முடியாட்சிக் காலங்களில் பெரும்பாலும் வெளிநாட்டோடு போர் செய்யும் புறப்பகைக்கே இப் படை பெரிதும் பயன்பட்டது. குடியாட்சி முறை செம்மையாக அமைந்துவரும் இந்நாட்களில் அயல் நாட்டுப் போர்களுக்குப் பயன்படாமல், உள்நாட்டுக் கலகங்களை அடக்க ஒரோவழி மட்டும் பயன்படுத்தப் பட்டு வருமானால் உலகில் அமைதி நிலவுவதற்கு வழி ஏற்படும்.

**படைமாட்சி**

திருவள்ளுவர் காலத்துப் படைவலி நிலைமையை திருக்குறள்வழிச் சுருக்கமாகக் காண்போம். ஏனைய அங்கங்களுள், படை தலைசிறந்த இடத்தைப் பெறற் குரியது. நாட்டிற்கும் குடிமக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்காக அதிலும் எப்பொழுதும் ஆயத்தத்தில் தொன்றுதொட்டே தொடர்ந்து இருந்துவரும் மூலப் படை சிறந்தது. அப்படையிலும் வீரர்கள் சிறந் தவர். படை என்பது அக்காலப் போர் முறைப்படி யானை, குதிரை, தேர், காலாள் முதலிய எல்லா உறுப் பாலும் நிறைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாத

தாகவும் இருந்தால், அதுவே அரசுச் செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வமாகும். இப்படைகளுள்ளும், அரசுக்குப் போரின்கண் உலைவு வந்தால் அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மையுடைய தொல் படையாகிய மூலப்படை சிறந்ததாகும். கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப் படை என்றவற்றைவிட மூலப்படையே ஆதார மானது. இதில் மிகச் சிறந்த வீரரே இடம் பெறுவர். எலிகள் போன்ற பலர் திரண்டு வந்து கடல்போல் ஒலித்தாலும், நாகப்பாம்பு உயிர்த்த அளவில் கெட் டொழிவதுபோல், வீரரல்லார் பலரினும், மூலப்படை யினர் போன்ற வீரன் ஒருவன் மேல் என்று சொல்லப் படுகிறது.

இப்படை எப்படிப்பட்டது? இதன் இலச்கணம் யாது? பகைவர்களால் கீழறுக்கப்பட்டு, அவர் பக்கம் இழுத்துக்கொள்ளப்படாத தம்மரசின்மாட்டுக் குலையாத பற்றும் (Loyalty) போரின்கண் அழியாத வன்கண்மையும் உடையது இது. கூற்றுவனே சினங் கொண்டு வந்தாலும், ஒற்றுமையாய்க்கூடி, எதிர் நின்று வெல்லக்கூடியது; தறுகண்மை, மானம், முன்வீரர் சென்ற நன்னெறியிற் செல்லல் (Tradition), அரசனுல் தேறப்படல் என்ற நான்கு குணங்களும் உடைத்து. இவற்றுல் பகைவரைக் கொன்று நிற்றல், தம்மாசுக்குத் தாழ்வு வராமல் காத்தல், புறமுதுகு கொடுத்தோடுவோரை அழிக்காமை, எதிரிகளிடம் கைக்கூலி வாங்கி, அறைபோகாமை ஆகிய நல்ல மரபு களைப் பின்பற்றும். இக்காலத்தும் எந்நாட்டுப் படை யும் மேற்கொண்டிருக்க வேண்டிய அடிப்படை நல்லியல்புகள் இவை. மாற்றுரால் வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை, விலக்கும் வகுப்

பறிந்து, வகுத்துக்கொண்டு முன்செல்வது—தார் தாங்கிச் செல்வதும் இப்படை (Van-guard).

இனி, அடல் தகையும் ஆற்றலும் ஆகிய இரண்டோடு ஒரு படை அதன் முழு அமைப்பு கட்டுக்கோப்பு ஆகிய தோற்றப்பொலிவும் (good organisation) கொண்டிருக்க வேண்டும். அக்காலத்துக்கேற்ற தேர், யானை, குதிரைகளுடன், பதாகை, கொடி, குடை, பல்லியம், காகளம் முதலியவற்றை அணிந்து செல்லும்போது அக்காலப்படை 'அழகு' உறத் தோன்றிற்று. இவை இக்காலப்படை, போர்க்கருவிகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பெறும். சிறிதாகிக்கொண்டே தேய்ந்து வருதலும், மகளிரை வெளவல், இனி வந்த செய்தல்களால் விளையும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும், படையை விட்டுவிட்டு ஓடுதலும், கொடுக்கப்படும் ஊதியம் நல்கூர்தலால் ஏற்படும் வறுமையும் நிலவாத படையே பகைவெல்லவல்லது. மேலும் இப்படையில் நிலைத்து நிற்கும் வீரர் பலரிருப்பினும், தக்க தலைமை வீரர் (Commanders) இல்லாத வழி அப்படை நிலைத்து நிற்காது.

**படைச்செருக்கு**

அடுத்து, இப்படையில் உள்ள வீரர் ஒவ்வொருவரும் அரும்பெருஞ் செயல்களைச் செய்யும் ஆர்வம் மிக்க படைச் செருக்குடையராதல் வேண்டும். என் தலைவன் எதிர்நின்று ஆற்றாது அழிந்து, பின் நடுகல்லில் நின்றவர் பலர்; ஆதலால், என் தலைவன் எதிர் போர் ஏற்று நிற்றலை ஒழிமின் என்று 'நெடுமொழிவஞ்சி' கூறுபவராயிருத்தல் வேண்டும். காட்டில் ஓடும் முயலை, குறி தப்பாது எய்து கொன்ற அம்பை ஏந்துவதைவிட, வெட்ட வெளியில் நின்ற

யானைமேல் எறிந்து, அது தப்பி ஓடுமாறு விட்டுத் தவறிய வேலை ஏந்துவதே மேல் என்னும் எண்ணம் இவருக்கு நிலைக்க வேண்டும்.

"கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

பகைவரைத் தாக்கி அடக்கும் ஆற்றல் பேராண்மையாகுத்தான். ஆனால், அதே பகைவர்க்கு ஒரு துன்பம் வந்தால் இரக்கங்கொண்டு உதவி செய்வதே அந்தப் பேராண்மைக்கு மேலும் சிறப்பாகும். இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென்று இராமபிரான் இராவணனுக்குக் கூறிய பெருந்தன்மையை,

"இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

என்று கம்பர் கவினுற அமைப்பர். வில் விசயன் கர்ணனைப் பார்த்துக் கூறிய வீரப் பெருந்தன்மையையும் வில்லிபுத்தூரார்,

"அன்று போர்புரி சேனையின்பதி யானவீரனை நீ,
இன்று போயினி நாளை வாவென இனிதியம் பினனால்"

எனக் கம்பர்வழிநின்று கூறுவர்.

ஆண்மையோடு அளாவிய அருளைச் சிந்தாமணியாசிரியரும்,

"மாறன்மையின் மறம் வாடுமென் றிளையாரையு மெறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்"

என்று சிறப்பிப்பர். இவை 'தழிஞ்சி'யின்பாற்படும்.

ஆற்றலும் அருளும் ஒருங்கே பெற்ற இத்தறுகணாளர் தம்முடம்பிற்கு எத்தகைய ஊறு வரினும் அஞ்சாத திண்ணியராவர். தன் கை வேற்படையைத் தன்னை எதிர்த்து வந்த களிற்றின்மேல் ஏவி விடுத்து,

இனி, அடுத்து வரும் களிற்றைத் தாக்குதற்கு வேண்டிய, வேலைத் தேடுபவனாய், தன் மார்பின்கண் தைத்து நின்ற வேலைக் கண்டு பறித்து மகிழ்வானும் இத்தகைய வீரன். இதனால் கொல்களிற்றுப் படையைத் தனித்து நின்றே தாக்கவல்ல தறுகணாளன் இவன் என்பதும், சினமிகுதியால் தன் மார்பிடை வேல் புகுந்ததும் அறிந்திலன் என்பதும், பின்னும் போர்மேல் விரும்பினன் என்பதும் பெறப்படுகின்றன அன்றோ?

> "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
> மெய்வேல் பறியா நகும்"

இதை நூழிலாட்டு என்பர் பிற்காலத்தவர்.

மேலும் பகைவரை வெகுண்டு நோக்கிய கண், வேல்கொண்டு அவர் எறியும்போது அஃதாற்றாது அந்நோக்கை அழித்துக்கண் உறை இமைத்துவிட்டால், இவ்வண்கண்ணவர்க்கு அது ஒரு பெரிய பழியாகும். புறங்கொடுத்தலையே ஒக்கும். இன்னும் இத்தகையர், முகத்திலும் மார்பிலும் விழுப்புண் படாத நாட்களையே பயனற்ற வீணாட்களாகக் கருதுபவர்.

அடுத்து இவர் தம் நாட்டிற்காகப் போரில் உயிரையும் கொடுத்து—அதனால் பொன்றாப் புகழை என்றும் எய்தி நிற்பர் என்று ஆசிரியர் கூறி முடிக்கின்றார். புகழ் வேண்டி, உயிரையும் பொருட்படுத்தாத இவருக்கு வீரம், கழல் கட்டிப் பெருமைப்படுத்துபவர் "போரெனிற் புகலும் புனைகழல் மறவர்" என இவரைப் புறநானூறு போற்றிக் கூறும்.

இவர் போர் மேற்செல்லும் வாய்ப்புப் பெறின் தம்மரசன் தடுப்பினும், வேண்டாமென்று முனியினும் அவ்வீரமிகுதி குன்றார்.

**''ஏவனுகலிற் சாவேம் யாமென, நீங்காமறவர்**
**வீங்கு தோள் புடைப்ப''**

இவர் போவர் என்று அதே பனுவல் மீட்டும் ஓரிடத்தில் இவரை ஏற்றிக் கூறுகிறது. இவர் மேலும், இன்னது செய்யேனுயின் இன்னன் ஆகுக என வஞ்சினம் வகுத்துக் கூறி முடிப்பர். அவ்வாறு வஞ்சினம் கூறியது செய்ய முடியாமல் சாவினும், அது வீண் சாவாகாது. செய்து முடித்தாராகவே கருதப்படுவர். தவறிவிட்டார் என்று எள்ளி நகையாடுவார் யாருமிலர். இத்தகைய வீரர் போரில் உயிர் கொடுத்து புகழுடம்பை நிறுவிச் சென்ருல், அவர் இறந்த நிலையில் 'புரந்தார் கண்நீர்மல்கும்'. சுற்றத்தார் அழ, இல்லிடை நோயால் இறந்து போவார், பழவினை காரணமாகப் போவாராவர். ஆனுல், எடுத்துக் கொண்ட போர்த் தொழிலைத் தொடுத்து முடித்துத் துறக்கம், எய்தும் இவ்வீரர் சாவு, ''இரந்து கோள் தக்கதுடைத்து.''

இவ்வாறு, கேட்கக் கேட்க வியப்பும் நயப்பும் நல்கும் படைவலிமை பெற்ற நாடு பெருமிதம் கொள்ளுதற்குரியதாம்.

## நட்பின் வகைகள்

### நட்பு

படைவலிமைபோல அரசுக்கு வினையிடத்து உதவுவது நட்பாகும். சமுதாய வாழ்க்கையிலும், தனிப்பட்டோர் வாழ்க்கையிலும் இன்பத்தை அளித்து ஊக்கத்தையும் கொடுத்து, மன எழுச்சியைத் தந்து, தன்னம்பிக்கையோடு இருக்கும்படி உற்றுழி உதவுவது நட்பேயாகும். நட்பைப்போல் செயற்கரியது

வேறென்றுமில்லை. அதுபோலவே பகைவர் செய்யும் வினைக்கு எதிராகப் பாதுகாவலாக நட்புப்போல் பிறிதொன்றில்லை. நேச நாடுகள் ஒன்று சேர்ந்து இரு உலகப் பெரும்போர்களில் பெரும் பகைவர்களை வென்ற வரலாறு தற்கால உலகம் நன்கறியும். "பெரியோர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்." சிறியோர் கேண்மை "வானூர் முழு மதியம்போல் வைகலும் தேயும்." "நிறை நீர் நீரவர் கேண்மை, பிறை மதிப்பின்னீர பேதையார் நட்பு." ஒரு நூற்பொருள். கற்குந்தோறும் கற்றார்க்குப் புதுப்புது கழிபேரின்பம் தருவதுபோல், பண்புடையாளர் தொடர்பும் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் புதுப்புது நுகர்வுகளை அளிக்கவல்லது. தம் முன் கரு தற்கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று நட்பு. மிகுதிக்கண் மேற்கொண்டு இடித்தற் பொருட்டேயாம் முகம் மட்டும் மலருமாறு பழகுவது நட்பாகாது. அன்பினால் அகமும் மலரவேண்டும். இடத்தின் தொடர்பும் பழக்கமும் இல்லாமலே நட்பு அமையும். ஒத்த மன உணர்ச்சியே நட்பாம் கிழமை தரும். ஒருவரையொருவர் முன் கண்டிலராயினும், மன ஒன்றிப்பாலேயே நட்பினராகிய பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் இத்தகைய நட்பிற்கு தலையாய எடுத்துக்காட்டாவர். "காண்ட கைமையின்றியுமுன் கலந்த பெருங் கேண்மையினால்" ஒன்றுபட்ட உணர்வினராகிய திருநாவுக்கரசப் பெருந்தகையும் அப்பூதி அடிகளாரும் இத்தகைய நட்புக்கு மற்றொரு ஈடும் எடுப்புமற்ற எடுத்துக்காட்டாவர். அழிவு தரும் கெட்ட வழியில் இருந்து நீக்கி நல்ல வழியில் செலுத்தி எதிர்பாராது கேடு வருமாயின் உடனிருந்து துன்பத்தில் பகிர்ந்துகொள்வதே சிறந்த நட்பாகும்.

சுருங்கக்கூறின் அற்றம் மறைக்கும் ஆடை குலைந்த போது, கேளாமலே, மனத்தினும் முற்பட்டு, விரைந்து சென்று இழுத்துக் கட்டி, நேர் செய்து, அற்றம் மறைக்கும் கைபோலவே, துன்பம் வந்த அப் பொழுதே, நண்பன் கேளாமலே விரைந்து சென்று உதவியைச் செய்து துன்பம் துடைப்பவனே உண்மை நண்பனாவான். நட்பிற்கு முடிந்த எல்லையாக, நல்ல காலத்தும், அல்ல காலத்தும் எப்போதும் திரிபின்றி ஒல்லும் வாய் எல்லாம் தளராமல் தாங்கும் திண்மை யைக் கூறலாம். நெஞ்சத்தில் அது ஊன்றியதாக இருக்க வேண்டும். புறத்தில் புனைதல் இருக்கக் கூடாது. 'இவர் எமக்கு இவ்வளவு அன்புடையவர். நாமும் அவ்வளவு அன்பு கொண்டுள்ளோம்' என்று நண்பர்கள் ஒருவரையொருவர் புனைந்து பேசிக் கொண்டாலும் நட்பு சிறப்பு இழந்துவிடும்.

**நட்பாராய்தல்**

இனி, மேற்கண்ட நட்பை ஆராய்ந்தறிந்த பின் னரே கொள்ள வேண்டும். நட்புச் செய்த பிறகு விடுதலை இல்லை. எனவே 'நாடாது நட்டலிற்' கேடில்லை. நட்பாளரது குணஞ்செயல்கள் நன்கு ஆராய்தற்பாலன இவ்வாறு இவை ஆராயப் பெறு மல் நட்புச் செய்யப்படுமாயின், முடிவில் சாவதற் கேதுவாகிய துன்பம், மாற்றார் விளைவிக்காமலேயே, தானே விளைக்கும். ஆராயுங்கால், தாம் நட்புச் செய்ய விரும்புவோரது குணம், குடிப் பிறப்பு, குற்றம் (சுற்றப் பிணிப்புடையோர் நட்டோரோடு பிணிப் புடையோராதலின்) குறைவற்ற சுற்றம் ஆகியவற்றை யும் ஆராய வேண்டும். உயர்குடிப் பிறந்து பழி நாணும் பண்பினரை எவ்வாறாகிலும் நட்புக்கொள்ள

வேண்டும். "அழச்சொல்லி, அல்லது இடித்துரைத்து, உலகினர் மேற்கொண்டொழுகும் வழக்கறிந்து செய்தும், செய்வித்தும் வருபவர்கள் நட்பு, ஆராய்ந்து கொள்ளற்பாலது. கேடு வருங்காலும் நட்போரை விட்டு நீங்காது உடனிருந்தே அவரோடு துன்பங்களைப் பகிர்ந்து கொள்வோரின் உறுதியே உண்மை நட்பாளரை அளந்து காட்டும் கோலாகும். பேதையார் நட்பை ஒழித்துக்கட்டி, அவரைவிட்டு நீங்கிவிடுவது பெரிய 'ஊதியம்' ஆகும். அதுபோல, துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும். 'கெடுங்காலை கைவிடுவார் கேண்மை' தான் இறக்கும் முடிவு நிலையில் நினைத்தாலும் நினைக்கும் உள்ளத்தைச் சுடும் அதை நினைக்குங்கால் அக்கேட்டினைவிட மிகவும் சுடும் எனவே "மாசற்றார் கேண்மை"யைப் பயில வேண்டும். உலகத்தோடு ஒத்துப்போகாத மாசுற்றார் நட்பினை அறியாது செய்ய நேரிடின், அதை விலை கொடுத்தாவது ஒழித்துவிட வேண்டும்.

**பழமை**

அடுத்து, நட்பினரோடு பழகிவிட்ட பழமையால், அவர்கள் பிழைகள் செய்வார்களாயின், பொறுத்துக் கொண்டு விட்டுக்கொடுத்து நட்பை நீடிக்கச் செய்ய வேண்டும் குற்றமே இல்லாதோரை இவ்வுலகில் காண்பதரிது. நண்பர்கள் என்ற உரிமையில் நண்பர்கள் சில வருந்தத்தக்கவற்றைச் செய்துவிட்டால், அது அறியாமையால் மட்டுமன்று; நட்புரிமையாலும் இருக்கலாம் இதை உணர்ந்துகொண்டால் நட்பு வளர்ந்துவரும் "நல்லார் எனத்தான் நனி விரும்பிக் கொண்டாரை, அல்லார் எனினும் அகற்றிக்கொளல் வேண்டும்." நெல்லுக்கு உமியும், நீர்க்கு நுரையும்,

புல்லிதழ் பூவிற்கும் இருப்பதால் அவற்றை வேண்டாம் என்று நீக்கிவிட முடியுமா? பழகியவர் உரிமை பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பு-பழமை எனப்படும். கெழுதகைமை நட்பிற்கு உறுப்பாகும். உணவை உருவாக்கும் உப்புப்போல், நட்பின் கெழுதகைமை உரிமையைப் பாராட்டுபவரை உணர்ந்து நட்பின் இனிமையை வளர்த்துக்கொள்ளல் சான்றோர் கடனாகும். அதேபோல், நட்புச் செய்தாலும் இதற்குடம்படல் வேண்டும். நட்புச் செய்தார்-செயப்பட்டார் ஆகிய இருபாலாரும் பழைமை பாராட்ட வேண்டாமா?

இனி, முன்னரே கேட்டுக்கொள்ளாமல், உரிமையால் நட்டார் ஒரு காரியத்தைச் செய்துவிடுவராயின், அச்செயல் விழையப்பட்டது ஒன்றே கருதி விரும்பிக் கொள்வர் அறிவுடையார். நட்டார், வெறுக்கத்தக்கனவற்றை செய்துவிடின் அது பேதமை அல்லது உரிமை காரணமாக இருக்கலாம் என்று அமைத்துக்கொள்ளலே மேல். தொலைவிடத்தும் தொல்லைக்கண் நின்றார் தொடர்பை''யும் நட்பின் வரம்பிகவாது, ''எல்லைக்கண் நின்றார்'' துறந்துவிடமாட்டார். ''அன்பின் வழி வந்த கேண்மையவர்.'' தம் நண்பர் அழிவு வேலையே செய்வாராயினும், அவரிடத்திற்கொண்ட பழைய அன்பு நீங்காமல் வாழ்வர். மேலும், கெழுதகைமை கொண்டு தம்மை நட்டார், சொல்லாது நற்பொருள் வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலிய பிழைகளைச் செய்தாலும், இவ்வுரிமையை உணர்ந்தவர், அப்பிழைகளைத் தாமாகவே, பிறர் எடுத்துக்காட்டித் தவறாகக் கொள்ளத் தூண்டினாலும் பிழைகளாகக் கொள்ளாமல் அமைத்துக் கொள்வராதலால், உரிமையால் பிழை செய்தார்க்கு அந்நாள் நன்னாளாகப் போய்

விடும். இத்தகைய "கெடா வழிவந்த கேண்மையார் கேண்மை"யை உலகம் விழையும். சுருங்கக்கூறின் "பழையார்கண் பண்பின் தலைப் பிரியாத" பண்பாட்டு நண்பரை விழையாரும் அதாவது-பகைவரும்-விரும்புவர் என்றால் நட்பில் உரிமையால் வரும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளுதலின் மாட்சி மிகப் பெரிது என்பது விளங்கும்.

நிற்க, நட்பாராய்தலிற் சுருக்கமாகக் கூறியவிடத் தக்க தீநட்பினதியல்பை தீநட்பு என்னும் தனித் தலைப்பிலும், பகைமையால் அகத்தே கூடாதிருந்து கொண்டே, கூடியவரையில் வாய்க்குமிடமெல்லாம் கூடி ஒழுகுவார் போன்று, புறத்தால் நடிக்கும் கூடாதார் நட்பினைக் 'கூடா நட்பு' என்னும் தனித் தலைப்பிலும் சற்று விவரமாக வள்ளுவர் இருவகைப்படுத்தி அடுத்துக் கூறுவதைக் காண்போம்.

## தீ நட்பு

பண்பிலார் கேண்மை பெருகுவதைவிடக் குறைந்து கொண்டே இல்லாமற் போவது மேல். தமக்குப் பயனுள் வழிமட்டும் நட்டு, அஃதில்வழி விட்டுச் செல்பவர் நட்பிலும் பயனில்லை. நட்பின தருமை பாராது, பயன் அளவை மட்டும் கருதும் நண்பர், கணிகையரையும் கள்வரையுமே ஒப்பர் தங்குவது போன்று ஏமாற்றிச் சமயத்தில் களத்திடை வீழ்த்தும் நற்பண்பும், பயிற்சியும் இல்லாப் புரவியை ஒத்த நன்பர் பலர் இருப்பதைவிட, தன்னந்தனியா யிருத்தலே மேல். உதவிகளைப் பெற்றுக்கொண்டே யிருந்தும், உற்ற சமயத்து விட்டு நீங்கும் கீழ்மக்களது நட்பு இருப்பதைவிட இல்லாததே மேல்

இனி, அறிவில்லாதவனுடன் மிக நெருங்கிப் பழகும் நட்பைவிட, அறிவுடையோர் பகையே கோடி மடங்கு

மேலானது என்றும், அறிவும் பண்பும் இன்றி, நகை யாடுவதற்கு மட்டும் உரியவர்களின் நட்பைவிடப் பகைவரால் வரும் பத்துக்கோடி துன்பம்மேல் என்றும், இவ்வளவிற்குத் தீ நட்பின் தீமையை ஆசிரியர் வற் புறுத்திக் கூறுவரேல், எவ்வளவிற்கு இது ஒழிக்கத் தக்கது என்பது கூறாமலே விளங்கும். முடியும் செயல் களை முடியாது கெடுப்பவரின் உறவை, அவருக்குத் தெரியாமலேயே விட்டுவிட வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடிப்பார் நட்பு நனவில் மட்டுமன்றி கனவிலும் கருதற்பாலதன்று. "வினைவேறு சொல்வேறுபட்டார் தொடர்பு கனவிலும் இன்னா" ததாம். தனியே வீட்டிலிருக்கும்போது நட்புக் கொண்டு பழகி, பலரோடு மன்றத்திலிருக்கும்போது பழி கூறுகின்றவர்களின் நட்பைச் சிறிதும் நெருங்கா மல் நீக்கிவிடவேண்டும்.

### கூடா நட்பு

தீநட்பினர் இவ்வாறாகக் "கூடா நட்பினரின்" இயல் பையும் வள்ளுவர் காட்டுமாறு காண்போம். அடிபடும் வரை—வெட்டும் வரை—தன் மீதுள்ள பொருளைத் தாங்குவது போன்று இருக்கும் பட்டடை, அப் பொருளின்மீது அடி, வெட்டு விழும்போது அடிபடுவ தற்கோ, வெட்டுவதற்கோ உதவுமே ஒழியத் தடுக் காது. அதுபோல, கூடாதிருந்தே, கூடியவர்போல் நடிப்போர் நட்பும் இறுதியில் அழிவையே தரும். உறவுபோல் இருந்து உறவு கொள்ளாது வாழ்வார் நட்பு, நிறை இல்லாத பொதுமகளிர் மனம் போல மாறுபடும். நற்பண்பில்லாதவர்கள் நல்ல, பல நூல்களைக் கற்றாலும், நல்ல மனமுடையவர்களாக மாறுவதில்லை. முகமலர்ந்து சிரித்துக்காட்டி, அகத்தில்

இன்ஞதவராய் இருக்கும் வஞ்சகரைப் பெரிதும் அஞ்ச வேண்டும். இவர்களே நம்பித் தெளியக்கூடாது. நட்டார் போல் நல்லவை சொல்லினும், ஒட்டார் சொல்லே உடனே உணர்ந்து கொள்ளலாம்.

வில் வணங்கியதாக இருப்பது எதிரியின்மேல் அம்பைச் செலுத்திக் கேடு விளேப்பதற்காகவே. பகைவரது சொல்வணக்கமும் இத்தகையதே. அவர்கள் தொழலாம். அழலாம். ஆனுல் அவர்கள் உள்ளத்துப்பகையும் வஞ்சமும் வாழ்ந்து கொண்டேயிருக்கும். அவர்கள் தொழுதகையுள்ளும் கொலேக்கருவி மறைந்திருக்கும். அவர்கள் அழுத கண்ணீரும் அவ்வாறே தீமையை மறைத்து வைத்திருக்கும். தொழுத கையுட்படை ஒடுங்குதலேயும் அவர்கள் அழுத கண்ணீரும் அன்னதாதலேயும், மெய்ப்பொருள் நாயனுர் வரலாற்றில் தெய்வப்புலமைச் சேக்கிழார் இலக்கியச் சொல்லோவியமாய்த் தீட்டிக் காட்டியுள்ளார். புறத்தே நட்பினர் போல் நடித்து, அகத்தே இகழ்பவரைத் தாமும் அந்நட்பில் நகைத்து மகிழுமாறு செய்து அத்தொடர்பு சாகுமாறு நடக்கவேண்டும். எனவே, பகைவர் தமக்கு நண்பராவதற்கு முயலுங்காலம் வரின், தாமும் அவரோடு முன் முகத்தால் நட்புச் செய்து, அகத்தால் நட்புச் செய்யாது இருந்து, பின் முகத்தால் செய்வதையுந் தவிர்த்துவிடுக என அதை ஒழிக்கும் வழியை வள்ளுவர் நமக்குக் காட்டுகின்ருர்.

இதுகாறும் கூறிய ஆற்ருல் நட்பின் தகுதிகளே யெல்லாம் விதிமுகத்தாலும், எதிர் மறைமுகத்தாலும் வள்ளுவர் வழிநின்று சுருக்கமாகக் கண்டோம்.

## பேதைமையும் புல்லறிவும்

நட்பின் வகைகளைப் பலப்படக் கூறிய வள்ளுவர், நட்பின் எதிர்மறையாகிய பகைமையைக் கூறத் தொடங்குவார், அப்பகைமைக்கு அடிப்படைக் காரணங்கள் வெகுளி காமங்கள் என வகுக்கின்றார். இவ் விரண்டுக்கும் அடிப்படைக் காரணமாகிய மயக்கம், பேதைமையாலும் புல்லறிவாலும் வருவது. இவற்றை ஒரு சிறிது காண்போம்.

**பேதைமை**

ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றிலும் மிக்கதொன்றாகிய பேதைமை, வறுமை, பழி, பாவங்கள் போலத் தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு, ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதலாம். தன் ஒழுக்கத்திற்குத் தகாத ஒன்றில் அன்பு செலுத்துவதும் பேதைமையே. தகாதவைகளைச் செய்ய நாணமையிருப்பது, யாரிடத்திலும் அன்பில்லாமல் நடப்பது, பேணத்தக்க யாதொன்றையும் பேணாது விடுவது ஆகியவையும் பேதைமைப்பாலனவே. அறிவிலார் மட்டும் பேதையரல்லர். 'ஓதியுணர்ந்தும், பிறர்க்குரைத்தும்' தானடங்காத அறிவுடையோரும் பேதையிற் பேதையே. படிக்காதவர் நூலறிவின்மையாற் பேதையராயிருப்பது போக, படித்தறிந்தும், கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்து ஓதியும் அடங்காதிருப்பவர் பேதையரை விட மிகப் பேதையர் என்பதில் ஐயமுண்டோ? இதனால்தான் இவர்களைப் 'பேதையிற் பேதையர்' என்கிறார் ஆசிரியர். பேதை ஒருவன் முடிவில் காலமெல்லாம், வரும் பிறவிகளில் எல்லாம் நிரயம் புக்குத் துன்பம் அனுபவிக்கத்தக்க அவ்வளவு கேட்

டினையும் ஒரு பிறப்புக்குள்ளேயே செய்துவிடுகின்ருன். முறைமை அறியாப் பேதை ஒரு காரியத்தை மேற் கொள்வாளுயின் அக்காரியம் கெடும். அதோடு அவ னும் கெடுவான்.

இனி, பேதை ஒருவன், பொருள், பதவி, பட்டம், நல்ல வாய்ப்புக்கள் போன்ற பல்வகைச் செல்வங் களைப் பெற்ருல், அவனேடு தொடர்பில்லாதவர்கள் சூழ்ந்துகொண்டு அவனை அரித்துத் தின்று இன்பம் அடைவார்கள். ஆனல் அவனைச் சார்ந்தவர்கள் பசித் துன்பத்தால் வாடுவார்கள். அவன் பேதைமையால் அந்தச் செல்வம் இவ்வாறு தகாத வழியில் செல வாகும். 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்'. மேலும் அவன் கையில் ஒரு பொருள் கிடைக்கப்பெற்ருல் அவன் நிலைமை, முன்னமேயே பித்தனுக உள்ளவன் அதன் மேலும் கள்ளுண்டு மயங்கியதுபோல் ஆகும். பேதை மையும் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன, மையலும், மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோல் தலைதடுமாறும்.

இத்தகைய பேதையின் நட்பு ஒதுக்கற்பாலதே. இவன் நட்பு, பின் பிரிவு தரும்போது இருவருக்கும் தருவதொரு துன்பம் ஒன்றுமில்லை. ஆதலால் பேதை யாயினர் தம்முட்கொண்ட நட்பு இனிதே. ஏன் என்ருல் அது பிரிந்தாலும் துன்பம் தராது. இப் பேதை கற்றறிந்தார் நிறைந்த அவைக்கண் புகுதல் தகாது. தூயவல்ல மிதித்த கழுவாத காலொடு, இன்பந்தரும் படுக்கையிற் புகுந்து கொண்டு புரண் டால், அப் படுக்கையும் இழிக்கப்படும். அதே போல் பேதைபுகும் சான்ருேரவையும் இழிக்கப்படும்.

தூய வல்லவற்ருேடு தொடர்புகொண்ட படுக் கையும் கெட்டுவிட்டது. அதை மாற்றினலன்றி

விரும்பமாட்டார்கள். அது போலவே பேதை புகுந்த சான்றோரவை, மாற்றியமைக்கப்படும்வரை, தன் நற்பெயரையும் புகழையும் இழந்துவிடும்.

"யாதுமறியாத பேதைமைபோன்றே, தான் சிற்றறிவினனாயிருந்தும் பேரறிஞனாகத் தன்னைத்தான் மதித்துக்கொண்டு, உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற்களைக் கொள்ளாத புல்லறிவாண்மையும் மாந்தர்க்கு மயக்கத்தை விளைவிக்கும். இது, கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழியும் தன்னை மயிலாக மதித்துக் கொள்வது போன்றதாகும். மயக்கம் காரணமாக மக்கள் காம, வெகுளி வயப்பட அவற்றின் வழியாய் உலகில் நட்புக்கெதிராகிய பகைமை பிறக்கின்றது. ஆதலால் இவை ஒழித்துவிடற்பாலன.

**புல்லறிவாண்மை**

ஒருவனுக்குச் செல்வம் முதலியன இல்லாக் குறையைப் பெருங்குறையாக உலகத்தவர் கருதார். ஆனால், அறிவில்லாத குறையே வறுமையிலும் பெரிய வறுமையாம்.

**"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை**
**இன்மையா வையா துலகு"**

**"நுண்ணுனர் வின்மை வறுமை; அஃதுடைமை**
**பண்ணைப் பணைத்த பெருஞ்செல்வம்"**

ஆயினும் அறிவில்லாதவன் இந்தக் குறையை உணர்வதில்லை. "யாம் ஒண்மை" யுடையேம் என்னும் செருக்கு அவனிடத்தில் உள்ளது. இதுவே புல்லறிவாண்மையாகும். ஒரு நல்ல நாட்டில் பொருள் வறுமை இருந்தால் நாடு உருப்படாது; ஆனால் அறியாமையாகிய வறுமை பொருள் வறுமையை விடக் கொடிது. அறியாமையாலேயே அறம், பொருளின்ப

வீட்டு நெறிகள் பாழாகிவிடும். நாட்டில் உள்ள அனைவரும் பால் வேற்றுமையின்றி தக்கார் ஆகிய அறவோர்களாக மாறிவிட்டால் நாடு பன்முக நலனும் பாங்குடன் பொருந்தி, மக்கள் நலநாடாக விளங்கும் (Welfare State). "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழுமூரே" என்ற சங்க காலக்கிராம வாழ்க்கை கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம் முதலிய செறிந்ததாய் உலகுக்கே எடுத்துக் காட்டாக விளங்கிற்று.

அந்நிலைக்கு மக்களாட்சிக் காலமாகிய இக்காலத்தில் நம் நாடு திரும்பிக் கொண்டிருக்கிறது. திருக்குறள் எழுந்த நம்நாடு அந்நிலைக்கு உயர்ந்துவிடுமானால், தமிழகம், உலகுக்கே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழும் என்பதில் ஐயமுண்டோ?

அறிவில்லாதவன், மனமகிழ்ந்து ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுப்பது அருமை. ஒருவேளை கொடுத்தால், பெறுபவன் நல்வினையன்றி, வேறில்லை என்றே கூறலாம். பிறருக்கு உதவாவிடினும், அறிவில்லான் தனக்கு நலம் விளையும்—வாழ்க்கையையும் நடத்துவதும் இல்லை. தனக்குத்தானே, பகைவராலும் செய்ய முடியாத துன்பத்தைச் செய்துகொள்கிறான்.

கல்லாத நூல்களையும் கற்றதாக நடித்து ஒழுகும் இப்புல்லறிவாளன் கசடறக் கற்றதொரு நூலிலும் ஐயங்கொள்வர். இவன் தன் குற்றங்களை மறைக்காது அதாவது ஒழித்துக்கட்டாது, ஆடைகளால் மட்டும் தன்னுடம்பை மறைத்துக்கொண்டு, ஒழுக்கமுடையவன் போல் மதித்துக்கொண்டு திரிதலினாற் பயன் ஒன்றுமில்லை. பெறுதற்கரிய மெய்யறிவுரைகளைக் கேட்டாலும் உட்கொள்ளாத இவன், அவ்வுரைகளின் உறுதிப் பொருளை அறியாமல், தானே தனக்கு வருத்

தத்தைச் செய்துகொள்வான். அறிஞர் தனக்கு நல்லன சொல்லி நல்வழி காட்டினலும், அவ்வழிச்சென்று அவர் ஏவலின்படி செய்யமாட்டான். உணர்த்த, உணரத்தக்க, தன்மையை உயிர் பெற்றிருந்தும், அது புகுந்துள்ள யாக்கை வயத்தால் மருள் வயப்பட்டு வேறுபட்டுள்ள இப்புல்லறிவாளன், பூமிக்குப் பெரும் பாரமாய்த் துன்பஞ்செய்தலின், அவன் உடலைவிட்டு உயிர் போகுமளவும், உற்றவனுக்கு ஊறுசெய்து, அடுத்து வந்தவரையும் பற்றிக்கொள்ளும் தன்மை வாய்ந்த ஒரு நோயே போல்வான்.

இப்பெற்றித்தாய புல்லறிவாளனுக்கு அறிவுரை கூறப் புகுந்தவரும் அறியாதவர்போல் கருதப்பட்டுப் பழிக்கப்பெறுவர். ஆதலால் "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பதுபோல் தான் அறிந்ததே அறிவாகக் கொண்டு திரிவான். உலகத்துச் சான்றோர் உண்டு என்று சொல்லுகின்ற கடவுள், மறுபிறப்பு, இருவினை முதலிய உண்மையை அவன் இல்லை என்று சொல்லித் திரிவதால், "உலகத்தார் உண்டென்ப தில்லை" என்பதால், அவன் மக்கள் வாழ் உலகில் ஒரு பேயாகவே கருதப்படுவான். அலகை, தன் உடம்பை விட்டு நீங்கினல் 'மக்கள் உடம்பில் தோன்றுதல் வல்லது. அவ்வாறு தோன்றுங்கால்' தானும், பயன் பெருது, பீடித்தவனுக்கும் துன்பம் விளையும். அது போல் புல்லறிவாளனும் உலகத்தில் நல்லனவற்றை இல்லையென்று தன் புல்லறிவாற் கூறித் திரியும்போது தானே சென்று கூறலாம், தானே சென்றடையும் பேயை ஒத்து, தானும் பயன் பெருது, பிறருக்கும் நன்மையின்றித் தீதே விளையும்.

எனவே, பேதைமை புல்லறிவாண்மை இயல்புகளை ஒருவாறு கண்டோம்,

## பகையின் வகைகள்

### இகல்

தொடர்புடையவர்களிடத்தில் நட்பு நிலைத் தால் ஒரு நாட்டில் ஒற்றுமையும் ஆக்க வேலையும் மிகும். ஆனால், அதற்கு மாறாக வெகுளி காரண மாய், வெறுப்பு நிலைத்தால் மாறுபாடும், அழிவு வேலையும் மிகும். மாறுபாட்டிற்குக் காரணமான வெறுப்பு எண்ணத்தளவில் நிற்பது. அது இகல் எனப்படும். இருபக்கமும் விட்டுக் கொடுத்தால், பகையை ஒருவாறு நீக்கிக்கொள்ளலாம். இகல், உயிர் கள் பிற உயிர்களோடு கூடாது பிரிக்கும் நோயாகும். இந்நோய் நீங்கிவிடில் நிலைத்த புகழ் வந்தடையும். தம்மோடு கூடாமை கருதி ஒருவன் வெறுப்பனவே செய்யினும், அவனோடு மாறுபடுதலைக் குறித்து, தாமும் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாதிருத் தல் நல்லது. துன்பங்களில் பெரிய துன்பமாகிய இகல் நீங்கினால் இன்பம் உண்டாகும். மாறுபாடு தோன் றிய வழி அதை விடுத்து 'எதிர் சாய்ந்து ஒழுகவல் லாரை' வெல்ல முடியாது.

இனி, மாறுபடுவதனால் மேம்பாடு உண்டாகலாம். ஆனால் அந்த மேம்பாடே இனியது என்று ஒருவன் மாறுபாட்டை வளர்த்து வந்தால், அவன் வாழ்க்கை தவறுவதும், அடியோடு அழிவதும் விரைவில் நிகழ்ந்து விடும். இகலுக்கு இடம் கொடுத்து மாறுபாடுற்று நடப்பவர், நல்லறிவில்லாத 'இன்னா அறிவினர்' ஆவர். அவர்களுக்கு வெற்றி வழிகாட்டும் அறநூல் அறிவு கிடையாது.

எல்லா வகையாலும் ஒத்திருக்கும் இருவரை அல்லது இரண்டு பொருள்களை உலகத்திற் காண முடி

யாது. ஒற்றுமையில் வேற்றுமையும், வேற்றுமையில் ஒற்றுமையும் இருக்கிறது. எதை மிகுதிப்படுத்தி வளர்க்கிருேமோ, அதுதான் மேலோங்கும். ஆதலால் வேற்றுமையைப் பெரிதாக்கி வளர்த்துக்கொண்டே போகாமல் வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு, அன்பு கொண்டு, நட்பை வளர்ப்பதே கடமை. இதைவிட்டு சிறுசிறு வேறுபாடுகளைக் கண்டு அவற்றைப் பெரிது பண்ணி வளர்ப்பது நல்லது அன்று. ஒற்றுமைப் பகுதியைக் காணுமல் வேற்றுமைப் பகுதியையே வளர்ப்பதனுல்தான் உலகில் பல நாடுகளிடையும், குடும்பங்களிலும் மாறுபாடே மிகுதியாக இன்று காணப்படுகிறது.

இனி, மாறுபாடு வேண்டாம் என்று பொதுப்பட வள்ளுவர் வகுத்தாலும், பிறர் இகல் தம்மோடு மாறுபட்டால் என்ன செய்ய வேண்டும், என்றும் நமக்கு அறிவுறுத்துகின்ருர். மாறுபாட்டுக்கெதிர் மாறுபாடு காட்டி இயைந்து நிற்காமல், அதைப் பொருட்படுத்தி வெல்லக் கருதினுல் கேடு மிகுந்துவரும். ஆக்கம் வரும்போது ஒருவன் காரணம் உண்டான வழியும் இகலை நினைக்கமாட்டான். அதே சமயத்துத் தனக்கு போக்கு வரும்போது, கேடு வரும்போது காரணமின்றியும் இகலைப் பெரிது பண்ணிக்கொண்டு போய்விடுவான். இவ்வியல்பை மக்கள் அனைவரையும் மனத்துட்கொண்டு நடத்தற்குரியர். சுருங்கக்கூறின், மாறுபட்டால் துன்பமும், நட்பால் இன்பமும் உலகிற்பெருகும்.

**"இகலானும் இன்னுத எல்லாம் நகலானும்**
**நன்னயம் என்னும் செருக்கு."**

**பகைமாட்சி**

இனி, மாறுபட்டால் விளையும் பகையின் வகைகளை ஒரு சிறிது காண்போம், பகைமாட்சி முதலிற்

க்ருதற்குரியது. மாறுபாட்டை வளர்க்காது மறந்து ஒழுகுவதால் நன்மை உண்டுதான். ஆனால், அதை மறக்காது, அழிவு வேலைச் செயலில் இறங்குவோரை என் செய்வது?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்பதெல்லாம் "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல்" என்பதெல்லாம் அறத்துப்பாலில் காணும் அறநெறிதான். ஆனால் தீமையைப் பொறுத்து இன்னா செய்யாதிருத்தலுக்கும் ஓர் எல்லை இல்லையா? எல்லை மீறின் அப்பகையை அழிக்காமல் வளரவிடுவதே குற்றமாகிவிடும். தீய சக்தியை அழித்து, அடக்கி ஒடுக்குவது அறமேயாகும். விட்டு வைப்பதுதான் மறமாகும். எனவே, பகைமாட்சியை வள்ளுவர் இகலுக்கு அடுத்து வைத்துள்ளார் என்று கொள்ளலாம். தன் வலி, படைபொருள், அறிவு, அறநூல் வழி ஒழுக்கம் ஆகிய அகப்புறத் துணைகளைப் பெற்றுத் தம்மைவிட வலிமை மிகுந்தவர்களைப் பகைப்பதில் தோல்வியும் அழிவும் நேருமாதலால், அதை விடுத்து இவற்றையெல்லாம் பெற்றிராத மெலியவர்களோடு பகை கொள்வதை மேற்கொள்ளலாம். தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தின் அன்பைப் பெறாது, தானும் வலியற்று நிற்கும் பகைவன் மிக எளிய பகைவன். இவன் அஞ்சத்தகாதவற்றுக்கு அஞ்சுவான்; அறிய வேண்டியவற்றை அறியான்; பிறரொடு பொருந்தான்; யாவர்க்கும் ஈகைக்குணமிலன்; இவன் வெகுளியுடையவன்; மறைபிறரறியா நிறைவுமிலன். அறநூல்களை ஓதி அவை விதித்தன செய்வான்; தனக்கு வரும் பழியைப் பாரான்; பண்பிலன்; சினத்தோடு கழிபெருங் காமத்தன்; அடுத்துத் துணையாக இருக்கும் நிலையிலும்,

தீமையைச் செய்ய விரும்புவான்; இத்தகைய பகைவனைப் பொருள் கொடுத்துக் கூடக் கொள்ளலாம் என்றால், இவன் வெல்லற்கு மிக எளியன் என்று கூறவும் வேண்டுமோ?

இனி, இப்பகைவரை வெல்லுவதற்கான செய்வதற்கு, இவர்தம் திறங்களை நன்கு ஆராய்ந்து இறங்க வேண்டும். இத்திறங்கள், மாட்சியில்லாப் பகையை ஆக்குதற் குற்றம், முன்கொண்ட பகைவரை நட்பாக்குதல், கட்சிச் சார்பற்றவர்கள் என்னும் நொதுமலராக்குதல், களைய வேண்டியவற்றைக் களைதல், களையும் பருவம், களையாக்காற்படுமிழுக்கு போன்றனவாகும்.

**பகைத்திறம் தெளிதல்**

பண்பில்லாத பகை விளையாட்டாக நகைப் பொருட்டாகவும் விரும்பத்தக்கது அன்று. எண்ணமே வாழ்வாக மலர்வதால் உலகத்தில் கருத்துக்களைப் பேசி, எழுதி நாடெங்கும், மூலை முடுக்குகளிலும் பிரசாரம் செய்து மக்கள் உள்ளத்தைக் கவரும் சொல்லேஉழவர் எனத்தக்க சிந்தனையாளர், உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லவர். இவர்கள் எண்ணங்களுக்கு தடை விதிக்கவல்லார் யாருமில்லை. சிறையிலும்கூட இச்சிந்தனையாளர் எண்ணுவர். வல்லரசுகளும் இவர்களை அடக்க முடியாது. இவற்றை எல்லாம் அன்றே திருவள்ளுவர் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டு வைத்து இவற்றுக்குத் தக்க அறவுரை வழங்குகின்றார். வில்லும் வேலும் கொண்டு உடம்பைத் தாக்கி உடல் வெற்றி கொள்ளும் போர்வீரரைப் பகைத்துக்கொண்டாலும், மேற்கூறிய ''சொல்லேருழவர் பகையை எல்லாம் கொள்ளாதொழிக்க வேண்டும்'' என்று ஆசிரியர் வற்புறுத்துவரேல், சொல்லேருழவர் பகை

மிக மிகப் பெரிது, அஞ்சற்பாலது என்பதன் இன்றி யமையாமை புலப்படாமற் போகாது.

தனியனாய் இருந்துகொண்டே, பலரைப் பகைத்துக் கொள்பவன் பித்தரைவிட அறிவற்றவனாவான். ஏற்பட்டுள்ள பகையையும் இயன்ற வழியில் முயன்று, நட்பாகக் கொள்ள முடியுமானால் அப்பண்புடையவனை உலகம் போற்றும். அவன் பெருந்தன்மையில் உலகம் பொருந்தி நிற்கும். சில சமயங்களில் துணை ஒன்றும் ஒருவனுக்கு இல்லாமல் இருக்கலாம். நலிவு செய்யும் பகை இரண்டிருக்கலாம். இப்படிப்பட்ட நிலையில், பகையிரண்டில், பொருந்திய ஒன்றைத் தனக்குத் துணையாகச் செய்துகொள்ளக்கடவன். இனி, பகைவன் யார் என்று முன் தெளிந்துகொண்டாலும், தெளிந்து கொள்ளாவிட்டாலும், தனக்குத் தாழ்வு வர நேருமானால், அவன் உள்ளாய நின்று கெடுப்பானாகலின் கூடவும் செய்யாது, அழிவிற்குத் துணை செய்வானாதலின், நீக்கவும் செய்யாது இடையாக விட்டுவைக்க வேண்டும் என்னும் அறிவுரை எல்லோரும் ஏற்றுக்கொள்ளற்பாலதாம் மேலும் தாமாகத் தாமுற்ற துன்பங்களை அறியாத நண்பர்களிடம் ஒருவன் தன் துன்பங்களைத் தானே சொல்லக் கூடாது. பகைவரிடமும் தன் வலியின்மையைப் பார்த்துக் கொண்டிருக்கும் பகைவரிடத்தும் அவ்வலியின்மையை மேலிட்டு மேவுதல் செய்யக்கூடாது. எப்போது போர் செய்யலாம், எப்போது போர் செய்யாது விலக்கலாம் என்னும் வினை செய்யும் வகையறிந்து, அது செய்து முடித்தற்கேற்பத் தன்பொருள், படைகளைப் பெருக்கிக்கொண்டு, தன்னைக் காத்துக் கொள்ள எப்போதும் ஆயத்தமாயிருப்பவனை 'பகைவர் செருக்கு' ஒன்றும் செய்துவிடாது.

பகை தோன்றுமலே தடுத்துவிடுவது நல்லதுதான். ஒருக்கால் அது தோன்றி வளர்ந்துவிட்டால், அது முதிருமுன்னமே தொடக்கத்திலேயே வென்று அழிக்க வேண்டும். ''ஒரு முள் மரத்தை இளைதாக'' இருக்கும் போதே களைந்து எறிந்துவிடாமல், விட்டு வைத்தால், பின் அது காழ்ப்பு ஏறி முற்றிப்போய் வெட்டுவோர் கைக்கே துன்பம் தந்துவிடும். பகைவரின் தருக்கினை, இகழ்ச்சியால் கெடுக்காதிருக்கும் அரசர், பின் அப்பகைவரால் அழிவது உறுதியாதலால் இறந்தவராகவே கருதப்படுவர்.

**உட்பகை**

இதுகாறும் நாம் கண்டவை வெளிப்படையாய்த் தெரிந்துகொள்ளக் கூடிய புறப்பகைவர் பற்றியன. ஆனல் புறத்தே தோன்றும் பகையைவிடப் பொல்லாதது ஒன்று உள்ளது. அதுதான் உட்பகை என்பது. புறப்பகைவருக்கு ஒருவனை உடனுக்கி கொடுத்து அவர் வெல்லும்வரை, உள்ளாய் நிற்பது இவ்வுட்பகை. இதையும் வேரோடு களைய வேண்டும். இத்தகைய உட்பகைவரை தன்னவர் என்று எண்ணி ஏமாந்திருப்பது தீமை பயக்கும்.

வெய்யிலின் கொடுமையைத் தணித்துத் தண்மை நல்கும் நிழலும், நீர்வேட்கையைத் தணித்து உள்ளம் குளிரச் செய்யும் நன்னீரும் என்றும் இனியனவே. ஆனல், முதலில் இனியனபோல இருந்து பின் நோய் செய்வனவாயின் அவை இன்னுதனவே. அதுபோலவே உட்பகைவராகிய 'தமர்' முன் இனியராய்ப் பின், இன்னுதாராகிவிடின், அவர்களுடைய தொடர்பை அறுத்துக் கொள்ளலே மேல். பின்னும், வாள்போல் வெளிப்படையாய்ப் பகைத்து நிற்பவர்களின் பகையைக் கண்டு

அஞ்சவேண்டியதில்லை. ஏன் எனில், இவர் பகைவர் என்று வெளிப்படையாகத் தெரிவதால், தற்பாதுகாப்புக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ள வழி உண்டு. ஆனால், அதற்கு மாறாகக் 'கேள் போல் பகைவர் தொடர்பு'தான் அஞ்சத்தக்கது. எனவே, உட்பகையை அஞ்சித் தற்காப்புச் செய்து கொள்ளவேண்டும். இல்லையேல் குயவன் மண் கலத்தைக் கருவியால் அறுப்பதுபோல் அறுத்துக் கெடுத்துவிடுவர். அகம் திருந்தாத உட்பகையை உடைய அரசனுக்குத் தன் அமைச்சர் போன்ற சுற்றத்தாரும் வயப்படாதுபோக, அச்சுற்றத்தாரை வேறுபடுத்தல், வேறுபட்டதைத் தெளியாமை, அவற்றால் விளைவனபோன்ற 'ஏதம்பல' விளையும். இன்னும், புறத்தே உற்றவர்போல் நடிக்கும் மற்றவராகிய உட்பகைவரால், புறப்பகைவருடன் துணையாயிருந்துகொண்டே அது தோன்றாமல் தம்மரசைக் கொல்லல், அமைச்சர் முதலிய அங்கங்களை ஒழித்துகட்டல் போன்ற பிற ஏதம்பலவும் விளையும் உட்பகை உள்ள ஒருவனுக்கு இறத்தல் எப்போதும் வரும் என்று சொல்ல முடியாது. எந்தக் கணத்திலும் வரலாம். அரசியலிற் போலவே குடியியலிலும், உட்பகையுள்ள குடியிலுள்ளோர் அகத்தே தம்முள் கூடார். ஒரு செப்பும் அதன் மூடியும் புணர்ந்து ஒன்றுபட்டது போல் புறத்துத் தோன்றினும் அகத்து வேறு வேறாகவே இருக்கின்றன. அதுபோலப் புறத்தே ஒன்றுபட்டவர் போலத் தோன்றினும் உட்பகைவர், அகம் வேறுபட்டமையில், புறப்பகை வந்துற்றால், தம்மரசை விட்டு விட்டு, தனித்தனியாகப் போய்விடுவர். அரத்தாற் தேய்த்துக் கொண்டே போகப்பெறும் இரும்புபோல, உட்பகை உற்ற குடி தன்வலி தேய்ந்து கொண்டே போய்விடும்.

ஆதலால் உட்பகை, எள்ளின் பிளவுபோல், மிக மிகச் சிறிதாயிருந்தாலும், உட்பகையால் கேடு உறுதியாக விளைந்துவிடும். சிறிதென்று அதனை இகழக் கூடாது. ஒருவீட்டில் பாம்போடு கூடி உறைந்தால் எக்கணத்திலும் பாம்பிற்கு இரையாகலாம். அதுபோலவே மனப்பொருத்தம் இல்லாத உட்பகைவரோடு ஒருங்குறைதல் என்றும் உயிருக்கு உலைவைக்கும்.

இவற்றால் ஒருவாறு பகையின் வகைகளை உணரலாம்.

## விலக்கத்தக்க செயல்கள்

இதுகாறும், அரசனுக்குதவும் அங்கங்களாகிய அமைச்சர், அவருக்கு இருக்கவேண்டிய நல்லியல்புகள், தூதுவரின் இலக்கணம், அமைச்சர் மன்னரைச் சேர்ந்தொழுகி, குறிப்பறிந்து, அவையறிந்து, அவையஞ்சாது கூறிச் செயலாற்றும் திறம், நாட்டின் நல்லியல்புகள், அதன் பாதுகாப்பாய் அமையும் அரண் பற்றியும் நாட்டின் செல்வச் சிறப்பு, படைமாட்சியும், செருக்கும் பற்றியன அறிந்தோம். அடுத்து அரசனுக்கு வினையிடத்து உதவிதாகிய நட்பினை விதிமுகத்தாலும், அதன் எதிர் மறைமுகத்தான் பகையினையும், பகைக்கடிப்படைக் காரணமாகிய பேதைமை, புல்லறிவாண்மைகளையும் கண்டோம்.

இனி, இவ்வளவும் அறிவுறுத்திய வள்ளுவர், அரசு அங்கங்கள், ஆற்றலாற்பெரியராகிய வேந்தரையும், தவத்தாற் பெரியராகிய முனிவர்களையும், அவமதிக்காமல் போற்றிக்கொண்டொழுகும் பான்மையினை அறிவுறுத்துகின்றார். பின், பொதுவாக, மக்கள் அனை

வரும், சிறப்பாக அரசும் அதன் அங்கங்களாகிய அமைச்சர் பிறரும் தம்மிடமில்லாமற் பாதுகாத்துக் கொள்ளத்தக்க, விலக்கத்தக்க செயல்களாகிய, பெண் வழிச்சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணுமை, சூது ஆகிய குற்றங்களைக் கூறுகின்ருர். இவற்றை ஒரு சிறிது பார்ப்போம்.

**பெரியாரைப் பிழையாமை**

முதற்கண், ஆற்றலும் அறிவுமிக்க மன்னர், அறவோர்களைப் பிழையாது போற்றிக்கொண்டு ஒழுகல் அறிகற்பாலது. ஆற்றல் உடையவர்களின் ஆற்றலை இகழாது போற்ற கொள்முதல் அரசு அங்கங்களுக்குத் தலையாய கடனும்; அவர்களைப் போற்ருதிருந்தால் அவர்களால் 'பேரா இடும்பை'வரும். ஆற்றல் மிக்க அரசர்மாட்டுக் கெட்டுப்போகவேண்டுபவனே, அவர்பாற் பிழை செய்வான். அதற்கு மாருகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புபவன் பிழையான். ஆற்றலுடையவர்க்கு, ஆற்றல் இல்லாதவர்கள் தீமை செய்தால், அது கூற்றுவனை, அதாவது தன் அழிவைத் தானே வருக என்று வரவேற்பது போன்றது. வலியுடை வேந்தராற் செறப்பட்டார் எங்கு சென்ருலும் உய்வில்லை. தீயினுல் சுடப்பட்டவரும் ஒருகால் உய்ந்தாலும் உய்யலாம். ஆனுல் பெரியாரைப் பிழைத்தொழுகுவாருக்கு உய்வே இல்லை. மேலும் இவர்கள் செறின், செறப்பட்ட அரசனது அமைச்சு, நாடு, அரண், படை போன்ற 'வகை மாண்ட வாழ்க்கை' 'வான்பொருள்' ஆகியவற்றின் கதி என்னுகும்? 'மலையனைய மாதவர்' செறின், இம்மாநிலத்து நிலையுற்றதுபோன்று தோன்றும் பெருஞ்செல்வரும் குடியொடும் மாய்வர். பெரியார், இயல்பாக எளிதில் செறமாட்டார். ஒருகால் பொது நன்மை கருதிச்

சினங்கொண்டு எதிர்த்தால், ஆளும் தலைவனும் இடைக் காலத்திலேயே சீரழிந்து கெடுவான். சுருங்கக்கூறின் 'சிறந்தமைந்த சீர்'மையுடையார் செறின், மிகப் பெரிய அரண், படை, பொருள், நட்புக்களை உடைய அரசரும் உய்யார்.

இனி, ஆக்கஞ்சிதைத்தல், அழிவைத்தருதல்களை அகத்திற்செய்யும் காமப்பகையைப் பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர் என்னும் இரு அதிகாரங்களில் கூறிப் போகும் ஆசிரியர் இவற்றை சிறப்பாக அரசியலில் ஈடுபட்டார்க்கு மட்டுமன்றி, பொதுவாக மற்றோர்க்கும் கூறிச்செல்கின்றார்.

### பெண் வழிச்சேறல்

இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே பொது வாழ்க்கையில் ஈடுபடுவர் ஒரேவழித் தம் பொதுக் கடமை மறந்து, தம் குடும்பத்தின் நலத்தில் மட்டும் நாட்டத்தைச் செலுத்தி அதுவும் அவர் மனைவிமாரின் தன்னலம் மட்டும் கருதி அதனால் இழுக்கப்பட்டு விடுகின்றனர். அம்மனைவிமாரும் இத்தவறை உணர்வ தில்லை. கணவன்மாரின் பெரும் பதவியைப் பயன் படுத்திக்கொண்டு, வீடுவாசல், நிலம்புலம், ஆடை அணிகலன் முதலிய பொருட்செல்வத்தைத் திரட்டிக் கொள்ள விரும்புவதால், அரசியலலுவலர்களிற் சிலர் இதற்கடிமையாகி நடுவுநிலை பிறழ்ந்து கையூட்டுக் கொடுமைக்கு ஆளாகிவிடுகின்றனர். பொதுக்கடமை உணர்ச்சி உடைய கணவன்மார் இதற்கு இணங்கார். பண்பட்ட மனைவியாயின் கணவன் உள்ளத்தை உணர்ந்து தீமையைத் திருத்திவிடுவாள்.

பெண்வழி ஒழுகுதல் பற்றி, வள்ளுவர் வழிநின்று ஒருசிறிது காண்போம். பொதுக் கடமையை மேற்

கொண்டுள்ள ஆண் பெண் பித்தால் பெண்ணுக்கு அடங்கி நடக்கும் இயல்பையே ஆசிரியர் ஈண்டு கண்டிக்கின்றார். இயல்பான இல்லறத்தையன்று "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற பெண்ணல்லள் இங்குப் பேசப்படுகின்றவள். மனைவியை விரும்பி அவன் வழியில் வாழ்கின்றவன் சிறந்த பயனை அடையமாட்டான். இத்தகையன் எய்திய செல்வம் இவ்வுலகத்து, ஆண் குலத்துக்கே ஒரு நாணத்தைக் கொடுத்துவிடும். அவனுக்கும் நாணத்தைத் தரும். இல்லாளிடம் தாழ்ந்த இயல்பினன், நல்லாரிடையும் நாணுவான். மனையாளை அஞ்சுபவன், வினையாகுந்தன்மை உடையவனாயினும் இங்கு கொண்டாடப்பெறான். மறுமையுமில்லை அவனுக்கு. இல்லாளை அஞ்சுவான். எப்பொழுதும் தேவர், அருந்தவர், சான்றோர் இருமுதுகுரவர் உதவி நாடுவோர் விருந்தினர் போன்ற நல்லோர்க்கும் நல்லன செய்யவும் அஞ்சுவான். இவன், வீரர் தோள்களை வென்ற ஆண்மையாளனாகிலும், இல்லாள் தோளுக்கு அஞ்சுவராயின் ஆண்மையில்லாதவனே. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைய அவள் பெண் தன்மையே பெரிதாகும். தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுபவன் தன்னட்டார் குறையும் நிறை செய்யான். தன் மறுமைக்கு வேண்டிய அறனும் செய்ய மாட்டான். "அறவினையும் ஆன்ற பொருளும்" பிற வினையும் அதாவது இன்பமும் பெண்ணேவல் செய்வானுக்கில்லை. சுருங்கக் கூறின், பெண்வழிச் சேரும் பேதைமை கருமச்சூழ்ச்சி எண்ண வல்ல நெஞ்சுடையானுக்கு ஒருபோதும் இருக்காது.

**வரைவின் மகளிர்**

இனி, 'விலை பகர்ந்து அல்குல்விற்கும் வேலினும் வெய்ய கண்ணார்' ஆகிய வரைவின் மகளிரின்

தொடர்பு நீக்கத்தை ஒரு சிறிது காண்போம். மன உறுதியும் அறிவுத்தெளிவும் இல்லாத சிலர் நாடுகின்ற சில இழிபொருள்களாகிய பொதுமகளிர் கள்ளுண்ணல் சூதாடுதல்கள் உள. இவற்றை நாடுபவனும் பொதுக் கடமையினின்றும், இல்லறக் கடமையினின்றும் வழுவினவனுவான். அன்புகொண்ட மனைவியின் வழிச் செல்பவனை பொதுக் கடமையில் வழுவ நேரும்போது, பொதுமகளிர் வழிச்செல்பவனை பொதுக் கடமையில் வழுவுவது கூறவும் வேண்டுமோ? வரைவின் மகளிர் சொல்லும் செயலும் பொய்யானவை. அவர்கள் அன்பு பற்றி விழையாது பொருள்பற்றி விழைந்து, பொருள் கைவரப் பெறுமளவும் அன்பு பற்றி விழைந்ததாக இனிக்கப் பேசுவர். ஆனால், அது பின்னால் இன்னாதனையே பயக்கும். ஒருவனிடமிருந்து எவ்வளவு பயன் பெற முடியுமென்று, அது பெறும் வரையில் தம் பண்பைப்பற்றிப் பலப்படக் கூறிக்கொள்ளும் பண்பில்லாத மகளிரினது ஒழுகலாற்றை உணர்ந்து அவர்களைப் பொருந்தாது ஒழியக்கடவர். பொருளையே விரும்பும் பொதுமகளின் பொய்ம்மை மயக்கம், இருட்டறையில் முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும் என்று இவ்வளவிற்கு இழிந்த உவமையை, இக்குற்றம் எவ்வளவு பெரிய மிக இழிந்த குற்றமாகும் என்பதை விளக்கவே வள்ளுவர் வழங்கியுள்ளார் போலும்.

அறநெறி நின்று அருளீட்டும் அறிவுடையோரும், மதிநலத்தால், அதாவது இயற்கை அறிவால் மாட்சியுற்ற கல்வியறிவுடையோரும், அறிவு ஒழுக்கங்களால் தம்புகழ் பரப்பும் உயர்ந்தோரும், பொருளைமட்டும் ஈட்டும் பரத்தையரின் புன்னலந்தோயமாட்டார்கள். இதற்கு மாறாக நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் நிறை இல்லாதவர்களும், எதையும் ஆராய்ந்து காணும் அறி

வில்லாதவர்களும், உயர்வு சிறிதும் இல்லாத கீழ் மக்களும், பொது மகளிரை விரும்பித் தம் வாணாளை வீணாக்குகின்றனர். இப் பொதுமகளிர் சேர்க்கை அறிவில்லாதவர்க்கு அணங்குதாக்கே—மோகினிமயக்கே—ஆகும். இவர்கள் மெல்லிய தோள், கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கும் நரகமேயன்றி வேறன்று. இவ்விருமனப் பெண்டிரை விரும்புவது போலவே, கீழ்மக்கள் கள்ளையும், கவறையும் மேவுவர்.

### கள்ளுண்ணாமை

பரத்தையர்போல் அரசியல் வாழ்வில், பொருளியல் வாழ்வில் கள்ளும் கவறும் ஒதுக்கத்தக்கனவாம். பொதுவாழ்விற்கும் பொதுக் கடமையாற்றுவதற்கும் இவை இடையூறானவை. சமுதாய வாழ்வில் மட்டுமின்றி, இல்லற வாழ்விலும் இவை கேடுவிளைப்பனவாம். கள்ளின் மேல் காதல் செய்து ஒழுகும் அரசரைப் பகைவர் அஞ்சார். ஆகையால் கள்ளை எக்காரணத்தாலும் உண்ணக்கூடாது. உண்டால் சான்றோரின் உறவு போய்விடும். சான்றோரின் நல்லெண்ணம் வேண்டாதவர்கள் உண்ணட்டும். மகனுடைய எந்தக் குற்றத்தையும் மறைத்து வைத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு அன்பு செய்யும் எந்தத் தாயும் தன் மகன் கள்ளுண்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டாள். தாய்க்கே இவ்வாறிருப்பின் சான்றோர்க்கு எவ்வாறு இருக்கும்?

நாணமும் கள்ளுண்பானை விட்டு அகலும். கையிலுள்ள பொருளைக் கொடுத்து அதற்கு மாறாக உயர்ந்த பொருள் ஒன்றும் வாங்காமல், மெய் மறக்க வல்ல கள்ளை விலைக்கு வாங்குதல் வாங்குவோனின் பழவினைப் பயனினாலோ? கள்ளால் அறிவுகெட்டு அடியோடு அழி

வதால், அறிவைத் திருடுவதால்தான் இது 'கள்' ஆயிற்று. உறங்கினவர் செத்தவர்போல் தோன்றுகிறார்கள். மூச்சு விடுதல் தவிர வேறு ஒன்றும் இவர் தம்முள் வேறுபாடில்லை. அதுபோலவே, அறிவுகெடுவதில் கள்ளுண்பவர் நஞ்சுண்பவரைப் போன்றவர்களே. கள்ளுண்பாரை உள்ளூரார் எள்ளி நகையாடுவராதலின், காணாது மறைந்து குடிப்பேன் என்றும் மறைந்து குடித்தலாகாது. அவ்வாறு செய்யின், உண்டபொழுது பிறரறியின் இழுக்காமென்று, முன் ஒளித்து வைத்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்பட்டுவிடும். கள்ளுண்டு மயங்கினவனுக்குக் காரணம் காட்டி அதன் தீமையை விளக்குவது முடியாத செயல்; அது நீரின்கீழ் மூழ்கிய ஒருவனை, மற்றொருவன் தீவட்டி கொண்டு துருவித் தேடுவது போலாகும். நீருள் தீவட்டி செல்லாது. தானும் அவிந்து, பயனும் கெடும். அது போல, குடித்தவன் மனத்தில் காரணமும் செல்லாது. காரணம் காட்டுபவன் அறிவும் பயனற்றுப் போகும். கள்ளுண்பான் ஒருவன், அஃதுண்ணாது தெளிந்திருந்த சமயத்து, அஃதுண்டு களித்த பிறனொருவனைக் கண்டு அதனாலுளதாகும் சோர்வினை அறிந்தானாயின், ஒரு வேளை கள்ளுண்ணலை ஒழிக்க வழியுண்டாகலாம், என்று வள்ளுவர் கூறும் இவ்வழி கள்ளுண்போர் ஒவ்வொருவரும் பின்பற்றக் கூடியதாகவே உள்ளது. வள்ளுவர் கூறும் கள்ளுண்ணாமையின் உண்மைகளெல்லாம் அறிந்து வள்ளுவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் நிலவும் நம் தமிழக அரசு, கள்ளுண்ணாமையை நாடு முழுவதும் சட்டமாக்கி நிறுவியுள்ளது போற்றுதற்குரியது.

**சூது**

இனி, கள்ளோடு கருதற்குரிய சூதும் அரசியலிலீடு பட்டவர்களோடு பொது மக்களும் ஒழித்தற்குரிய தாம். காமம், கள் போன்றே, பொதுக்கடமையி னின்றும் வழுவச் செய்துவிடவல்லது சூது. சூதினல் செல்வம், பெருமை, பதவிகளை இழந்துள்ள அரசர் பலருளர். இவ்வுலகில் பல குடும்பங்களும் சூதினல் அழிந்துள்ளன. நாடு, பொருள், செல்வம் முதலிய வற்றைச் சூதில் இழந்தது போதாதென்று, அறி விழந்து, மனைவியையும் பந்தயம் வைத்துத் தோற்கும் அளவுக்கு ஒருவனைச் சூது தூண்டுமாயின், இதன் கொடுமையைக் கூறவும் வேண்டுமோ?

இச்சூதினல் வென்று பெறும் பொருள், மேல் வரும் இழப்புக்கும் துன்பத்திற்கும் உள்ளாகுமாறு கெடுப்பதற்கே முன்னறிவிப்பாகுமே ஒழிய வேறென் றில்லை. முதலில் வெற்றியடைவதைப்போன்று தோன் றினும், இரையால் மறைந்த தூண்டில் இரும்பினை, இரையென்று கருதி விழுங்கி இறக்கும் மீனின் செய லையே இது ஒக்கும். சூதில் ஊதியமாக ஒன்று வந்தால், நூறு போகும். உருளும் கவற்றினல் வரும் ஆயத்தை, இடைவிடாது கூறிச் சூதாடுமாகின் பொருளும், வரு வாயும் விட்டு நீங்கிப் பகைவரிடம் போய்விடும். "சிறுமை பலசெய்து சீரழிக்கும்" சூதுபோல் வறுமை தருவது வேறென்றில்லை. கவறும், அஃதாடும், கழக மும், சூதாடும் திறமும் உற்றுவிடாது மேற்கொண்ட வேந்தர் இருந்தும் இல்லாதவரே.

சூது என்னும் முகடிக்கு, மூதேவிக்கு அடிமை யானர் வயிராற உண்ணவும் மாட்டார். அல்லலும் உழப்பர். "பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் கழகத்துக் காலை புகின்". அதோடு சூது பொய்யையும்

மேற்கொள்ளும்படி செய்யும். பொருள் கெடும். அருளும் கெடும். மேலும் 'உடை, செல்வம், ஊன், ஒளி, கல்வி' என்ற மக்களுக்குரிய ஐந்து செல்வமும் சூதாடியைச் சாரா.

இனித் தன்பால் எப்பொழுதும் ஆளை இழுக்கும் ஆற்றல் இச் சூதாட்டத்துக்கு உள்ளதுதான். மக்களை இப்படுகுழியில் ஆழ்த்தவல்லதாயிருக்கிறது. துன்பம் விளைய விளைய, அதை அனுபவிக்கும் உடலொடு வாழும் வாழ்க்கையில் உயிருக்கு ஆசை மேன்மேலும் வளர்கிறது. அதுபோல், பொருளை இழக்க, இழக்க, சூதாடுவானுக்கு இழந்த பொருளை மீட்கவும், மேலும் பொருளீட்டவும் ஆசைகொண்டு சூதின்மேல் ஆசையை வளர்த்துக் கொள்கிறான். இப்படிப்பட்ட கவர்ச்சி சூதுக்கிருப்பதால் விழிப்பாக இருந்து, அதை ஒழித்துக் கட்டவேண்டும்.

## மருந்து

### மருந்து

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமா'கும். இவ்வுலக வாழ்வில் வாழ்வாங்கு வாழ நல்ல நோய் நொடியற்ற, நலம் வாய்ந்த உடல் வேண்டும். அருளைப் போலவே பொருளைத் தேடிக்கொள்ள நல்ல உடல் நலம் வேண்டும். சுவரை வைத்துக்கொண்டு ஓவியம் வரைவதுபோல், உடலை வைத்துக்கொண்டே உயிரை ஓம்பவேண்டும். அப்படி ஒருகால் உடலுக்கு நோய் வரின் அதைத் தீர்த்துக்கொள்ள நல்ல மருந்தும் மருத்துவமும் வேண்டும். இவையெல்லாம் பொதுவாக நாட்டு மக்கள் அனைவருக்கும், சிறப்பாக அரசிய

வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இன்றியமையாதன. இதுபற்றியே பொருட்பாலில் அரசவியல், அங்கவியல் களுக்கு ஈற்றில் மருந்து என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்துவகுத்துரைக்கின்றார்.

மருந்து என்ற பெயரை அதிகாரம் பெற்றிருப்பி னும் முதல் ஏழு குறள்களில் நோயில்லா வாழ்க்கை வாழ்வதற்குரிய இயற்கை வழியை ஆசிரியர் கூறி, பின் நோய் வந்தால் அதை போக்குவதற்குரிய மருந்தின் திறத்தைக் கூறுகின்றார். மருந்து என்ற அதிகாரத்தில் மருந்தே வேண்டாத நோயற்ற வாழ்வையே வாழும் வகை கூறிவைத்து, "மருந்தென வேண்டாவாம் யாக் கைக்கு" என்றே வெளிப்படையாகக் கூறிவைத்து, மருந்தை மிகச் சுருக்கமாக மூன்று குறள்களில் இறுதி யிற் கூறுவதிலிருந்தே நோயற்ற வாழ்க்கைக் குறிக் கோளை வற்புறுத்துவதற்காகவே இவ்வாறு வள்ளுவர் வகுத்தார் என்று தெளியலாம்.

பழங்காலத் தமிழகச் சித்த மருத்துவ முறைப்படி கையின் நாடி பார்த்து அறிந்து, வாதம், பித்தம், சிலேட்டுமம் என்னும் முக்குணங்கள் மிகாமலும் குறை யாமலும் இயல்பாக இருக்கும் நிலையை நோயற்ற நிலை என்பர். இம்மூன்றில் ஒன்றோ, இரண்டோ குறைந்தா லும் மிகுந்தாலும் நோயுண்டாகும். நாம் அருந்தியது செறித்துவிட்டது என்பதைக் குறிகளால் தெரிந்து கொண்டு, பின் உண்டால் "யாக்கைக்கு மருந்தென வேண்டாம்". யாக்கையின் நொய்ம்மை, தேக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற்குரியவாதல், பசிமிகுதல் என்னும் அறிகுறிகளைக் கொண்டு உண்டது, செரித்து விட்டதை உணர்ந்துகொள்ளலாம். முன் உண்டது அற்றதை அறிந்து, வேண்டிய அளவாக உண்டுவந் தால் உடம்பை நெடுங்காலம் பாதுகாத்துக் கொள்ள

லாம் என்னும் உண்மையையும், எளிய வழியையும் ஒவ்வொருவரும் நடைமுறையில் கையாண்டால் ஒரு நாடு எவ்வளவு நலமுடைய நாடாகத் திகழும்? அற்றது அறிந்து, நன்ருகப் பசித்து, உணவுக் கொள்கைகளை மாறுபாடின்றிக் கடைப்பிடித்து உண்ண வேண்டும். இவ்வாறு மாறுபாடில்லாத உணவையும், தன் மனம் விரும்பும் அளவு உண்ண மறுத்து, உடலுக்குத் தேவையான அளவே உண்டுவந்தால் "உயிர்க்கு ஊறுபாடு இல்லை".

இனி செரித்தலை நன்குணர்ந்தே உண்பான்கண் இன்பம் நிலைத்து நிற்பதேபோல் 'கழிபேர் இரையான் கண்' நோய் நீங்காது நிற்கும். அளவுக்குமிஞ்சி தலைகால் தெரியாமல் உண்பவன் உணவை, விலங்குண்ணும் இரையென இழித்துக் கூறினர். பசித் தீயின் அளவுக்குத் தக்கவாறு, அதற்கு ஏற்ற உணவும், காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை, வேண்டியதோர் காலத்து உண்பவனிடம் நோய் அளவின்றி வளரும்.

நோய் வராமல் எப்பொழுதும் தடுக்க முடியாமல், ஒருகால் நோய்வாய்ப்படின் தக்க மருத்துவரிடம் சென்று மருத்துவம் செய்துகொள்ள வேண்டும் தக்க மருத்துவர் என்ன நோய் என்று ஆராய்ந்து, அது வந்ததற்குரிய காரணத்தை ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழி என்ன என்று ஆராய்ந்து, அதனைச் செய்யும் போது பிழையாமற் செய்ய வேண்டும். "மருந்து செய்தல், உதிரம் களைதல், அறுத்தல், சுடுதல் முதலியவற்றைத் தணிக்கும் வாய்"களாகப் பரிமேலழகர் கூறுகின்ருர். இவற்றைப் பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறையில் தப்பாமல் செய்யவேண்டும். மருத்துவத்தில் கற்றுத் துறைபோகிய மருத்துவன், நோய் தணிக்கும் வழி செய்யும்போது, நோயுற்ருன்

அளவும், அதாவது நோயுற்ற பகுதி பருவம், வேதனை, வலிகளின் அளவும், பிணி நீக்குவது சாத்தியமா அசாத்தியமா, யாப்பியமா என்றும் தொடக்க, நடுவு, ஈறு என்னும் பிணியின் பருவ வேறுபாட்டளவு என்றும், அதன் வன்மை மென்மை என்றும், வரும் பிணியினளவும், நோய்க்கு மருத்துவம் செய்யத்தக்க பெரும் பொழுது சிறு பொழுதுகளாகிய கால வேறுபாடுகளினளவும், கருதியே செய்யவேண்டும். சுருக்கமாகக் கூறினல் மருந்தை நான்கே கூறுகளில் அடக்குவார் வள்ளுவர். இவ்வடிப்படை நாற்கூற்று மருத்துவ முறை, தற்கால மருத்துவ முறைகளுக்கும், இனி எக்கால மருத்துவ முறைகளுக்கும் பொருந்தவேயமைக்கப் பெற்றிருத்தலை உற்றுக் காண்பார் உணரலாம். "உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச் செல்வான் என்று அப்பால் நாற்கூற்றே மருந்து". நோயாளி, மருத்துவன், மருந்து, மருந்தைப் பிழையாமல் இயற்றுவான் என நான்கு பகுதிகளில், மருத்துவம் அடங்கும். அவ்வாறே ஒவ்வொரு பகுதியின் இயல்புகளையும் நான்கில் அடக்கிவிடுவர். நோயாளிக்கு, பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய் நிலையை உள்ளபடி உணர்த்தும் ஆற்றல், மருந்துத் துன்பம், பொருத்தல்களைக் கூறலாம். மருத்துவனுக்கு, நோய் கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியும் நுண்ணறிவுமுடைமை, பலகாலும் தீர்த்து வருதல் மன மொழி மெய்த் தூய்மைகளைக் கூறலாம். மருந்துக்கு பிணிகட்கு ஏற்றல், சுவை, வீரியம், விளைவு, ஆற்றல்களால் மேம்படுதல், எளிதின் எய்தப்பெறல், பகுதியொடு பொருந்துதல்களைக் கூறலாம். மருந்து இயற்றுவானுக்கு, நோயாளிகளிடம் அன்புடைமை, மனமொழி மெய்த்தூய்மை, சொல்லியபடியே மருந்

தைச் செய்து தருமாற்றல், அறிவுடைமைகளைக் கூறலாம். இவையனைத்தும் அனைத்து மருத்துவ முறையினருக்கும், அனைத்துக் காலத்தினர்க்கும் பொருந்துவனவே.

எனவே, மருந்து அருந்தும் நிலைக்கு, நோய் வரப் பெற்று, அதன் பின் அதைப் போக்கிக்கொள்ளும் வழி நாடும் அளவுக்கு விட்டுக் கொடுக்காமல் வருங்காலும் வந்தபின்னும் காக்காமல், வருமுன்னரே உடல் நலத்துக்கு ஏற்ற, தக்க கலப்புணவை (Balanced diet) உட்கொண்டு நல்வாழ்வு வாழ்தல், நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். சிற்றின்ப வளர்ச்சியைக் கிளர்ச்சி செய்யும் உணவு வகைகளை ஒதுக்கியும், நல் உடல் சட்டமைப்புக்குற்ற கலப்பு உணவு வகைகளைச் சேர்த்துக்கொண்டு, வாழும் வகையறிந்து வாழ வேண்டும்.

**"செங்நெல் மாற்றிய சோறும் பசு நெய்**
**தேக்கிய கறியின் வகையும்**
**தன்னிகர் தானியம் முதிரை கட்டித்**
**தயிரொடு மிளகின் சாறும்,**
**நன்மது ரஞ்செய் கிழங்கு காணில்**
**நாவி லினித்திடு மப்பம்**
**உன்னை வளர்ப்பன தமிழா**
**உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே"**

என்று தமிழ் மக்களின் உடலுக்கும், உயிருக்கும், உணர்வுக்கும் உற்ற நல்லுணவைத் தம் செந்தமிழ்க் கவிதையில் தீட்டித் தந்துள்ளார் பைந்தமிழ்ப் பாவேந்தர் பாரதிதாசனார்.

இதுகாறும் கூறியவாற்றால் நோய் வராமல், நல்ல உடல் நலம் பெற்று வாழும் வழியையும், நோய் வந்தால் மருந்தின் வழிப்போக்கும் முறைகளையும் ஒருவாறு உணர்ந்தோம்.

# வள்ளுவர் உலகம் VII

## குடிமை

ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்துக்கும் நாட்டிற்கும் ஏற்றவாறு ஒழுகும் இயல்பினைக் குடிமை என்று சிறப்பித்துக் கூறுவர். குடிமைப் பயிற்சி, குடிமைப் பண்பு, "Citizenship" என்றெல்லாம் பேசப் பெறுவதும் இந்த இயல்பேயாகும். பழங்காலத்தில் நாடு, சிறிய அமைப்புக்களேயாம். அன்று பெரும்பாலும் குல அடிப்படை சிறப்புற்றிருந்தது. இன்று நாடு என்ற அமைப்பு விரிந்தும்—பரந்தும் விளங்குகிறது. ஆதலால், குலம் என்ற அடிப்படை மறைந்து, நாடு என்ற பேரமைப்புத் தோன்றியுள்ளது. ஆனாலும், பாரதி, பாரதநாட்டு மக்களை 'பாரத ஜாதி' என்றே அழைத்தான்.

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்திற்கும், விருப்பத்திற்கும் காரணமாகக் குடி அமைந்து விளங்குகிறது. சொல்லும் செயலும் மாறுபடாத—செப்பமும், பழி பாவங்களுக்கு அஞ்சுதலும் இயல்பாகவே உயர்குடிப் பிறந்தார்களிடம் உண்டு. தாழ்வான குடியினருக்குக் கற்பித்தாலும் வருவதில்லை. இங்கு உயர்குடி என்பது பண்பிலும் குணத்திலும் உயர்ந்த குடியேயாம். பிறப்

பாலும் செல்வத்தாலும் செயற்கையில் உயர்த்தப் பெற்ற குடியல்ல.

செப்பமும் நாணும் உயர்குடியின்கண் இயல்பாகவே உண்டு என்பதற்கு, சிலம்பில் வரும் பாண்டியன் நெடுஞ்செழியன் சான்று. சிலம்பில் வரும் நெடுஞ்செழியன் தன் குற்றம் மட்டும் உணராமல், தன்னுடைய தென்னவன் குடிக்கே இழுக்கு வந்து விட்டதே என்று ஏங்குகிறான். உயர்குடிப் பிறந்தார் ஒருவர் அந்த உயர்குடிப் பிறப்பின் சிறப்பியல்புகளை மேலும் வளர்க்கவே முயற்சிப்பர். ஒருகால் அது இயலாது போனால், குறைக்காமலாவது இருக்க முயல்வர். அதன் காரணமாக ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய ஒழுக்கங்களினின்றும் விலகார்; கீழிறங்கி வாரார்.

உயர்குடிப் பிறந்தார் இயல்பு என்ன? அவர் இனித்த முகமுடையாராக இருப்பர்; இனிய சொற்களையே பேசுவர்; யாரையும் இகழார்; நிறைய அள்ளிக் கொடுப்பர் என்பதை,

> **''நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
> **வகைஎன்ப வாய்மைக் குடிக்கு''**

என்ற குறளால் அறிக. இதன்கண் ''இகழாமை'' என்ற ஒழுக்கமே உணரத்தக்கது. நகையும் ஈகையும் இன்சொல்லும் இருந்தாலும் இகழ்தல் இருக்குமாயின் கேடு. இன்று பலர் ஈதல் புரிகின்றனர். ஆயினும் பாமரர், ஏழை, புத்தியில்லாதவர் என்று இகழ்ச்சியாகக் கருதியும் கூறியும் வருகின்றனர். இது தவறு என்பதை வள்ளுவம் சிறப்பாக உணர்த்துகிறது.

பெற முடியாதவற்றைப் பெற முடியுமாயினும் உயர்குடிப் பிறந்தோர், புகழ் குன்றுதலுக்குரிய காரி

யங்களைச் செய்யார். புகழ் குன்றிய பிறகு, அடுக்கிய கோடி செல்வத்தினாலாய பயனில்லை. அதனால்,

> "அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
> குன்றுவ செய்த லிலர்"

உயர்குடிப் பிறந்தார்க்குச் செல்வமின்மை வறுமையன்று. மற்றவர்களுக்கு வழங்க முடியாத நிலைமையே அவர்களுக்கு நல்குரவு. வழங்க முடியாத வறுமை வந்துற்றபோதும், தம்முடைய வழங்குகின்ற பண்பினின்றும் உயர்குடிப் பிறந்தார் மாறுபடார்; தமிழ்ப் புலவருக்குத் தலைகொடுத்தான் குமணன்; செத்தும் கொடுத்தான் சீதக்காதி. இதனை,

> "வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பில் தலைப்பிரிதல் இன்று"

என்று குறள் பேசுகிறது.

நல்ல குலத்தில் பிறந்து வாழ்வோர் வறுமை முதலிய கேடுகளின் காரணமாக வஞ்சனை முதலிய கேடுகளைச் செய்ய மாட்டார்கள் — செய்யவும் தெரியாது. இதனை,

> "சலம்பற்றிச் சார்பில செய்யார் மாசற்ற
> குலம்பற்றி வாழ்துமென் பார்"

என்கிறது குறள். ஒரு தனி மனிதனிடத்தில், தகுதியற்ற ஒழுக்கக் கேடுகளைப் பார்க்கிறோம். குறிப்பாக ஈகை, இரக்கவுணர்ச்சி யற்றவனாக விளங்கினான். இவனை நாம் பார்த்தவுடன், நமக்கு அவன்மீதே சினம் ஏற்படுகிறது. ஆனால், திருவள்ளுவர் அவனை ஆராயவில்லை. அவனுடைய தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்த குலத்தினையே ஆராய்கின்றார். நம்மையும் ஆராயச் சொல்லுகின்றார்.

பழங்காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்ருன். ஆங்கு அவனுக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது. சுற்றிலும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவனுடைய அமைச்சர் முதலாயிேனோர் தண்ணீர் கிடைக்காமல் போனதால், சாலை ஓரத்தில் வெள்ளரிக்காய் போலக் காய்த்துக் கிடந்த ஒன்றைப் பறித்து அரசனுக்குக் கொடுக்க எண்ணினர். அமைச்சர் முதலாயினோர் இங்ஙனம் பேசிக்கொண்டதைக் கேட்டுக்கொண்டிருந்த குருடன் ஒருவன், அது வெள்ளரிக்காய் அல்ல என்று சொல்லித் தடுத்தான். பிறவிக் குருடனுக்கு இது வெள்ளரிக்காய் அல்லவென்று எப்படித் தெரியும்! என்றனர் அமைச்சர் முதலாயினோர். குருடன், "எனக்குக் கண்களே குருடு; கருத்திற் குருடன் அல்ல" என்று கூறி, "இந்தக் காய் காய்த்துக் கிடக்குமிடம், பலரும் நடமாடும் பொதுவழி; இந்தக் காய் தின்னக் கூடியதாக இருக்குமானுல், யாரும் பறித்துத் தின்றிருப்பார்கள். அது பயனற்றது என்பதனுலேயே வாளா கிடக்கிறது" என்று கூறினுன்.

அரசன் குருடனின் நுண்ணறிவைப் பாராட்டி நாள்தோறும் அவனுக்கு 'ஒரு வேளை' சோறு போட உத்தரவு செய்தான். ஆனுல் குருடனே, அந்த ஒரு வேளைச் சோற்றில் மன நிறைவு கொள்ளவில்லை. காரணம், சோறு பற்ருக்குறையல்ல. நாடாளும் அரசன் உயர்குடிப் பிறப்பாளனுக இல்லாது இருக்கிருனே என்ற கவலை. "அரசன் உயர்குடிப் பிறப்பாளனுக இருந்திருப்பின் இயற்கை அறிவினைக் கண்டு பெரிதும் பாராட்டிப் பொன்னும் பொருளும் நிறைய அள்ளிக் கொடுத்துத் தரித்திரத்தை ஓட்டியிருப்பான். ஆனுல், அரசனே, தரித்திரம் பிடித்தாற்போல் ஒருவேளைச்

சோறு என்று உத்தரவு செய்தான். நான் இந்த அரசனைக் குற்றமாகக் கருதவில்லை. அவன் பிறந்த குடி ஆராய்தற்குரியது'' என்றான்.

> ''நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
> குலத்தின்கண் ஐயப் படும்''

என்ற குறள் இதனை எடுத்துக்காட்டுகிறது. மற்றை எல்லாத் தவறுகளும் எளிதில் மறைக்கப்பெறும்; மறக்கப் பெறும். ஆனாலும் ஒருவனும் ஒருத்தியும் கூடி, மக்கள் தோற்றத்திற்குக் காரணமாய மனையற வாழ்க்கையில் தோன்றும் தவறுகள், தரக் குறைவுகள் சீக்கிரம் மறைவதில்லை; மறக்கப் பெறுவதும் இல்லை. காரணம் அவர்களுடைய கூட்டு முயற்சியால் உற்பத்தி செய்யப் பெற்ற தரக்குறைவான மக்கள் நாட்டில் நடமாடுகிற வரையில் இவர்களுடைய மனை வாழ்க்கை ஐயப்பாட்டிற்குரியதாக—இகழ்ச்சிக்குரியதாக விளங்கும். ஆதலால், மனைவாழ்க்கை நடத்துவோர் தம்முடைய வழித் தோன்றல்களின் நலம் கருதியும், தங்களுடைய புகழ் கருதியும் தரங்குறையாமல் இனிய நல்லுணர்வுகளோடு வாழவேண்டும் என்பதை நினைவிற்கொள்க.

நிலத்தின் இயல்பை நிலத்தில் இட்ட வித்து முளைக்கும் நிலையிலேயே காட்டும். முளை செழுமையாக வெளிப்படுமாயின் நிலம் செழுமையானது. அது போல உயர்குடிப் பிறந்தார் இயல்பு அவர் வழங்கும் சொற்களாலேயே அறியப் பெறும்.

காற்று, அது படர்ந்து வரும் வழியில், நிலத்தில் கிடந்த பொருள்களின் தன்மையை மணத்தால் காட்டும். காற்று, படர்ந்துவந்த வழியில் கிடந்த பொருள்களின் இயல்பிற்கேற்றவாறு அமையும். அதுபோல் குடியிற் சிறந்தாருடைய மனத்தில் குடிப் பிறப்புக்குரிய உயர்பண்புகள் அமைந்து கிடப்பதை

அவர் தம் வாய்ச்சொல் காட்டும். உயர்குடிப் பிறந்தாரின் வாய்ச் சொற்கள் கனிவுடையனவாக—பயன் தரத் தக்கனவாக இருக்கும். இதனை,

**"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"**

என்று குறள் ஓதுகிறது.

நலம் வேண்டும். அந்நலனையடைய வழி, நாணமுடையனுதலேயாம். நாணம் உடைமை எல்லா நலனும் தரும். நாணம் என்பது உடலால் கூனிக் குறுகும் வெட்கத்தையல்ல. பழி பாவங்களுக்கு அஞ்சுதலே இந்த நாணமாகும். அதுபோல உயர்குடிச் சார்பும், பெருமையும் வேண்டுமெனில் பணிவு வேண்டும். எங்கே பணிதல்? தம்மினும் செல்வத்தில்—அதிகாரத்தில் உயர்ந்தோர்க்கு எல்லாரும் பணிவர். அது பணிவா? இல்லை, நடிப்பு! திருவள்ளுவர் யார்க்குப் பணிய வேண்டும் என்கிறார்? இதனை,

**"நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு"**

என்றார். இதனையே "புரவலன் போலும், தோற்றம், உறழ்கொள இரவன் மாக்களின் பணிமொழி பயிற்றி" என்று அகம் பேசுகிறது.

உயர்குடிப் பிறந்தார் எதை இழந்தாலும் இழப்பர். தன்னுடைய குடியின் சிறப்புக் குன்ற, சிறப்புச் சிதைய விரும்பமாட்டார்கள். உயர்குடிப் பிறந்தார் புகழ் பெறும் பொழுதும்கூட, குறையாகப் பேராண்மைச் செயல்களின் மூலமே புகழினைப் பெறுவர். சின்னஞ்சிறு செயல்களைச் சந்து பொந்துகளில் செய்து, புகழினைப் பெறுதல் உயர்குடிப் பிறந்தார் கருத மாட்டார்கள். உயர்குடிப் பிறந்தார் பெருக்கத்

தில் பணிவோடு இருப்பர். அவர்கள் அடக்கம் ஆழ்கடலினும் பெரிது. அவர்களே, இயற்கைக் கேடுகளினுலாவது, வேறு பிற காரணங்களினுலாவது வளங் குன்றுவார்களாயின் தம்முடைய பெருமையை—தம்முடைய குடிப்பிறப்பின் பெருமையை உயர்த்தியே பிடிப்பார்கள். ஒருபொழுதும் தாழவிட மாட்டார்கள். இதனை,

**"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய**
**சுருக்கத்து வேண்டு முயர்வு"**

என்று குறள் கூறுகிறது. சுருக்கத்து வேண்டும் உயர்வு என்ருல், பணிதலுக்கு மாருன உயர்வு அல்ல; அகங்காரமும் அல்ல, ஏழையராகி இகழ்ச்சி சொல, எளிதிற் போதலைத் தவிர்ப்பதே உயர்வு என்று கருதப்படுகிறது.

நம்முடைய தலையில், நமக்கு அழகும், பாதுகாப்பும் கொடுப்பதற்காக அழகிய ரோமங்கள் வளருகின்றன. இவை அடிக்கடி வீழ்தலும் உண்டு. அங்ஙனம் வீழ்ந்த ரோமங்களைக் கொண்டு, ஒன்ருக்கிப் பூண் முதலியன கட்டி, 'சவுரி' என்று பெயரிட்டு விலை வைத்து விற்பார்கள். அந்தச் 'சவுரி'க்குப் பூண்களும், பாதுகாப்பும், பெட்டிகளும் இருந்தாலும் அவை ஒரு முழமாக இருப்பவை ஒன்றரை முழமாக வளர்ந்து விடுவதில்லை. ரோமங்கள் தலையில் இருக்கிறவரையில் அதற்கு வளர்ச்சி உண்டு; அவை கீழே விழுந்து விட்டால் வளர்ச்சி இல்லை. ஒரோ வழி, சேர்ந்த இடத்தின் காரணமாகச் சவுரிக்கு மதிப்புக் கிடைக்கலாம். ஆனுலும், இயற்கைக்குள்ள மதிப்பு இல்லை. இந்த அழகான, சாதாரணச் செய்தியை எவ்வளவு சிறப்பாக மானம் என்ற பேரொழுக்கத்தோடு சேர்க்கிருர்! மாந்தரும் தம்முடைய மனித நிலையில், உயர்குடிப்

பிறப்பு நிலையில் நின்று ஒழுகினால், மேலும் வளர்வர்; புகழினைப் பெறுவர். அங்ஙனமின்றி, தமது நிலையி னின்றும் இழிந்து செயல்கள் செய்யின் தம்மையும் இழந்து, தமது குடிப்பிறப்பின் சிறப்பினையும் இழக் கின்றனர், என்பதை,

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்று குறள் கூறுகிறது. குன்றனைய வாழ்க்கையையும் கூட, ஒரு குன்றிமணி அளவு குற்றம் கெடுத்துவிடும். மிகப் பெரிய மலையைச் சிற்றுளி அடித்து நொறுக்க வில்லையா? உருத்தும் பருத்தும் உள்ள மரத்தினைக் கறையான் அரித்துத் தின்னவில்லையா? என்பதனை உணர்க.

பெருந்தன்மையும் குடிப்பிறப்பும் கெட்டவிடத்து வாழ்தல், ஊன் ஓம்பும் வாழ்க்கை என்று திருவள்ளுவர் நையாண்டிச் செய்கிறார்.

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

என்னும் குறளை நினைக. சாதாரண—ஒன்றுமறியாத கவரிமான் கூட மயிர் நீப்பின் வாழ்வதில்லை. அது போல உயர்குடிப் பிறந்தோர் மானம் போயின் உயிர் வாழார். அதற்குப் பாண்டியன் நெடுஞ்செழியனும், சேரமான் கணைக்கால் இரும்பொறையும் சான்றாவர்.

உலகு புகழினை ஏத்துகிறது. ஒளிபடைத்த புகழினை ஏத்துகிறது. எத்தகைய ஒளியை? தமக்கு இழிவு வந்துழி, உயிரைக் கொடுக்கும் சான்றோரின் ஒளி படைத்த புகழையே உலகு ஏத்துகிறது. இதனை,

"இளிவரின் வாழாத மான முடையவர்
ஒளிதொழு தேத்தும் உலகு"

என்ற குறளால் அறிக.

நம்முடைய நாடு பாரத நாடு, நாமனைவரும் பாரத குலம். இந்தப் பாரத குலத்துக்கு ஏற்ற நாட்டொழுக்கங்களை நாம் சிறப்பாகப் பெற்று, சிறந்த குடிமைப் பண்புகளோடு, நாணமும், மானமும் போற்றி வாழ வேண்டும் என்பதே திருக்குறள் உலகத்தின் கருத்து.

# வள்ளுவர் உலகம் VIII

## பெருமையும் சால்பும்

மனிதன் இவ்வுலக வாழ்க்கையில் பெறுதற்குரிய செவ்விகளை — குணங்களைப் பெரிதும் உடையனாகி அவைகளின் காரணமாக மற்றவர்களால் மதிக்கப்படுதல் பெருமை என்ற சிறப்பாகும். ஊன் உடம்பு எடுத்த பலவகை உயிரினங்களுக்குள்ளும் மனிதன் பிரித்துச் சுட்டியறியப்படுதலும் பேசப்படுதலும் அவனுடைய சாதனைகளைப் பொறுத்தும் பெருமைகளைப் பொறுத்துமேயாம். அங்ஙனம் வாழதார் வாழ்வு மதிக்கப் பெறுவதில்லை. ஏன்? மனித்த வாழ்வாகவே கருதப் படுவதில்லை. பெருமை அரிய விலை கொடுத்துப் பெறக் கூடிய ஒன்றாகும். என்ன விலை? பொன் விலையா? இல்லை, இல்லை! சாதனையே விலை! செய்தற்கரிய சாதனைகளைச் சாதிக்க வேண்டும் என்ற ஊக்கமிகுதியே பெருமைக்கு அடிப்படை, செயலும் சாதனையுமின்றி உண்டுடுத்து வாழ்வோம் எனக் கருதுதல் இகழ்ச்சி பொருந்திய வாழ்க்கை.

பெருமை, பிறர் கொடுக்க வருவதா? அல்லது கடைகளில்—சந்தைகளில் கொள்முதல் செய்யும் விலைச் சரக்கா? இல்லை! பெருமை தானே முயன்று பெறக்கூடிய ஒன்று. மகளிர் மனம் மெல்லியது; கவர்ச்சிகளுக்கு

ஆட்படக் கூடியது. அதுபோலவே, மற்றவர்களைத் தம் கவர்ச்சியால் ஆளாக்கக் கூடியது. ஆனால், இந்த மென்மையில் திண்மை ஒன்று வேண்டும். அதுதான் கற்பு. மென்மையும் கவர்ச்சியும் இழுக்குடையன அல்ல, ஒரு மனம் கொண்டு ஒழுகுவோரிடத்து. அது போல ஒழுக்கமெனும் கற்பும் இலட்சிய வேட்கையையும் கொண்டு ஒழுகுகிறவர்கள் பெருமையைப் பெறுவர். இதனை,

**''ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு''**

என்றார் வள்ளுவர்.

பெருமை சாதாரணச் செயல்களால் கிடைக்கக் கூடியதன்று. அதற்கு அதிக விலை கொடுக்க வேண்டும். சிலர் எளிய—சாதாரணக் காரியங்களைச் செய்துவிட்டுக் கூட பெருமையை எதிர்பார்க்கின்றனர். ஏன்? சிலர் மாடிவீட்டில் பிறந்ததற்காகப் பெருமை கேட்கின்றனர். சிலர் உடுத்தியுள்ள உடைகளுக்கும் அணிகலன்களுக்கும் பெருமை கேட்கின்றனர். சிலர் கொண்டுள்ள கோலங்களுக்குப் பெருமை கேட்கின்றனர். சிலர் பெற்றுள்ள அதிகாரங்களுக்குப் பெருமை கேட்கின்றனர். ஏன்? சிலர் ஒன்றுமில்லாமலே பெருமையை எதிர்பார்க்கின்றனர்! பெருமை யென்பது கேட்டுப் பெறுவதும் அல்ல; கொடுத்துப் பெறுவதும் அல்ல. அது சாதனையில் பிறப்பது. பெருமையில் நாட்டமுடையோர் சோதனைகளை ஏற்பர்; துன்பங்களை ஏற்பர்; மரணத்தையும் வலிந்து ஏற்றுக்கொள்வர். அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள்—கடமைகள் அருமையானவை; ஒளியுடையவை. இதனை,

**''பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை யுடைய செயல்''**

என்று கூறுகிறது குறள்.

இவ்வுலகில் நிறையக் கற்கள் உண்டு. எல்லாக் கற்களும் வைரக் கற்களாகுமோ? வையத்தில் சோற்றுக்கும் துணிக்கும் அல்லாடும் கோடானுகோடி உயிர்கள் உண்டு; மனிதர்கள் உண்டு. எல்லோரும் உயிராகப் பிறந்தவர்கள்தான். பிறப்பினுல் ஒத்த நிலையினரேயாம். அதனுலேயே சிறப்புத்தன்மை பொருந்தியவர்கள் ஆக மாட்டார்கள். சிறப்புத் தன்மை உருவாக்கிக் கொள்ளப் பெறுவது. இந்தச் சாதனையைச் செய்து கொள்ளும் பொறுப்பு அவரவர் களிடமே யிருக்கிறது. ஊனுடல் வயிற்றில் பசியிருப் பதைப்போல, உயிரியல் வாழ்க்கையில் புகழ்ப்பசியை அமைத்தான் இறைவன். ஆனுல், பலருக்கு ஊனுடல் பசியே தெரிகிறது. வேளை தவருது உண்கின்றனர். உயிர்ப்பசியாம் புகழ்ப்பசியைப் பலர் அறிவதில்லை; உணர்வதில்லை. இப்பசியைத் தணிப்பதற்குரிய வேலையை—கடமை வேள்வியை வேளை தவருமல் செய்வதில்லை.

**''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்''**

என்பது குறள்.

சிலர் சாதியால் உயர்ந்த வீட்டில் பிறந்து வாழ்வர்; சிலர் அடுக்கிய செல்வத்தால் உயர்ந்த மச்சு வீடுகளில் பிறந்து வாழ்வர். சிலர் தோற்றத்தால் உயர்ந்த கோலங்கள் கொண்டு வாழ்வர். இவையெல் லாம் உண்மையிலேயே மேன்மையை—பெருமையைத் தரா. சிலர் எளிய குடிசையில் தோன்றி வாழ்வர். சேரியில் பிறந்து வாழ்வர்; தோற்றங்களும் இல்லாம லிருக்கலாம். ஆயினும், கொண்டொழுகும் நிலையில், அரிய சாதனையால், மேலானவர்களாக மதிக்கப் படுவர். அரிமர்த்தன பாண்டியன் அரசு நிலையால்

மேலானவனே. ஆயினும், மாணிக்கவாசகரின் மேலாண்மையின் முன்னே நிற்க முடியவில்லை. பல்லவப் பேரரசன் அரசு நிலையால் மேலானவனே. ஆனால், அப்பரடிகளின் சீலத்தின் முன் அவனால் நிற்க முடியவில்லை. இதனை,

**''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்''**

என்ற குறளால் அறிக.

பெருமையுடையாருக்கும், அஃதில்லாதார்க்கும் வெளிப்படையான அடையாளம் ஒன்று உண்டு. இயற்கையில் பெருமையுடையார் முற்றிய நெற்கதிர் தலைசாய்ந்து கிடப்பதைப் போல அடங்கிக் கிடப்பர். மரத்தின் உயிர்வாழ்க்கைக்கும்—பசுமைக்கும்—பயன் படும் தகுதிக்கும் உறுப்பாயமைந்துள்ள வேர், மண்ணில் மறைந்து கிடக்கும். அடுக்கிய சிறப்பினை யுடைய மாளிகையினைத் தாங்கும் அடிக்கல் மண்ணில் மறைந்து கிடக்கும். இவைகள் எவற்றையும் ஏற்றுக் கொள்ளும். அதுபோல, பெருமைக்குரியவர் எதை யும் இகழார்; எவரையும் இகழார். ஆனால், சிறுமைக் குணமுடையவரோ தருக்கித் திரிவர். கழனிகளில் பசையற்ற பதர் நிமிர்ந்து ஆடுவதைப்போல ஆடுவர். தம்மினும் உயர்ந்தோரை—பெருமைக்கு உரியோரை அணுகி, அவர்தம் நெறியில் நின்று ஒழுகமாட்டார். இகழ்ச்சியும் அலட்சியமும் தருக்குதலும் தலைதடுமாறு தலும் சிறியோரின் இலக்கணம். இதனை,

**''சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு''**

என்ற குறளால் அறியலாம்.

சிறுமை தன்னையே பாராட்டிக்கொள்ளும். ஆம்! ஐயோ, பாவம்! வேறு யாரும் பாராட்ட இருந்தால்

தானே! பெருமையுடையோரைப் பலர் பாராட்டு வார்கள். ஆயினும், அவர்கள் பெருமைப்படார்; தம் புகழ் கேட்க நாணுவர்; அடியேன் என்றும் தாசன் என்றும் பணிவுரை பகர்ந்து நடப்பர்; என்றும் எப் பொழுதும் யார்மாட்டும் பணிவுடையவராகவே இருப்பர். சிறுமையுடையார் தம்மைத் தாமே வியந்து, தம்மைத் தாமே ஒப்பனை செய்துகொண்டு, தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டு, ஒரோவழி கூலி கொடுத்தும் புகழ்பெற்று, நிழற்படங்களும் எடுத்துக் கொள்வர் பெருமை யென்பது, பிறர் போற்றித் தமக்கு அணியாக ஏற்றுக்கொள்ளுதலால், சிறப்படை கிறது; பெருமையாகிறது. சிறுமையுடையோரைப் பாராட்டி ஏற்று அணியக்கூடியது ஏதும் இல்லாததால் அணிந்துகொள்வாரும் இல்லை. இந்த ஏக்கத்தால் அவர்களே தம்மை அணிந்து கொள்வர். பித்தளையை விளக்க வேண்டும். தங்கத்தை விளக்கவேண்டிய அவசியமில்லை. பித்தளை தங்கமானால், புளியின் அவசியமும் கூடும். பெருமை கொண்டாடும் சிறுமை பித்தளை நிகர்த்தது; பெருமை சொக்கத் தங்கம் நிகர்த்தது. இதனை,

> **"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
> **அணியுமாம் தன்னை வியந்து"**

என்றும்,

> **"பெருமை பெருமித மின்மை சிறுமை**
> **பெருமிதம் ஊர்ந்து விடல்"**

என்றும் கூறும் குறளால் அறிக.

பெருமை பெருமைக்குரியது. அது குணங்களையே பார்க்கும்; குற்றங்களை நாடாது; குற்றத்தினை மறைக் கும். சிறுமையோ குணங்களை நாடாது; குற்றங் களையே காணும்; குற்றங்களைத் தூற்றும்; பிறர்

குற்றத்திலேயே குளிர்காயும். பெருமை புகழ்ச்சியால் புகழ்பெறும். இகழ்ச்சியால் சிறுமை, பெருமை பெற முயலும். உணர்வில் தோன்றுவனவெல்லாம் தோன்றிய உணர்வு நிலைகளையே பிரதிபலிக்கும். இதுவே நியதி. புகழுணர்வில் தோன்றுவனவெல்லாம் புகழே பெற்று விளங்கும்; இகழுணர்வில் தோன்றுவன வெல்லாம் இகழ்ச்சியே பெற்று விளங்கும்.

"அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்"

என்பது குறள்.

குற்றமே கூறிவிடும் என்பதனால், குணங்களைக் கூற மாட்டார்கள் என்று உணர்த்தப் பெற்றது. நிறைந்த பல குணங்களால் உயர்ந்து பெருகிய சிறப்பின் காரணமாகப் பெருமையில் உயர்ந்தும், மற்றவர்களால் பெருமைப்படுத்தப் பெற்று, ஏற்றுப் போற்றிக் கொள்ளுதல் பெருமையாகும்.

பலர் சிறந்த குணங்களைப் பெற்றிருப்பார்கள். ஆனால், அவற்றை வாழ்க்கையில் வாய்ப்புக் கிடைத்துழி, நடைமுறைப்படுத்தி ஆட்சி செய்வதில் பலருக்குத் திறமை யிருப்பதில்லை. சிலர் செல்வம் இருக்கும் பொழுது கொடுப்பர். செல்வம் குறைந்துழி கொடுக்க மனம் ஒருப்படார். இவர்களிடத்தில். ஈகை என்ற பெருங் குணம் ஆட்சியில் இல்லை என்பது வெளிப்படை. சிலர் தைரியமாகப் பேசுவர்; வீராவேசமாகக் கதைப்பர்; ஆனால் தீங்கு குறுக்கிடும்போது, குலை நடுங்கி அஞ்சிச் சாவர். சிலர் இனிமையுளதான போது, மகிழ்ந்து உரைவர், நட்புக் காட்டுவர்; இன்னாதன தலைகாட்டும் போது வெகுண்டு பிரிவர். உடலால் மட்டுமல்ல, நெஞ்சத்தாலுமே பிரிவர். இதுபோன்று பல்வேறு குணங்களைப் பெற்றவர்களா

யினும் அவற்றை வாழ்க்கையில் ஆளும் திறனற்று இருப்பர். அதிலும் இடுக்கண் வந்துற்றபொழுது அவர்களிடத்திலிருந்த நற்குணங்கள் தலைகாட்டா. அதனாலன்றோ சான்றோரும், இறைவனும், மக்களிடத்தில் நற்குணங்கள் நிலைபெற்றிருக்கின்றனவா என்பதை ஆராய்ந்தறிய இடுக்கண்கள் நிறைந்த சந்தர்ப்பங்களையே சோதனைக்குப் பயன்படுத்தினர்! மெல்லிய பூங்காற்று வீசும்பொழுது, புல்லும் நிலை பெற்றிருக்கும். தென்றற் காற்றில் தெருப்புழுதி தோன்றுவதில்லை சுழன்றடிக்கும் புயற் காற்றின் பொழுதல்லவா மரங்களின் பிடிப்புள்ள வேர்களின் உறுதி தெரியவருகிறது. அதுபோல வாழ்க்கை வசதிகளோடும், வளத்தோடும் கூடியதாக அமையும் பொழுது எல்லோரும் நல்லவர்களாகத்தான் இருப்பர். வாழக்கையில் இடர்பாடுகள் வந்துற்றபொழுதுதான் சிறந்த குணங்களை ஆட்சி செய்யும் இயல்பு வேண்டும். இந்தப் பண்பினையே திருக்குறள், சான்றாண்மை யென்று பாராட்டிப் பேசுகிறது.

சான்றாண்மையுடையார்மாட்டு நற்குணங்கள் இயல்பாகவே அமைந்து விளங்கும். வாழ்க்கையின் சிறப்பு குண நலத்தினால் அமைவதேயாகும். குண நலம் இல்லாதபோது, பிற நலங்கள் இருந்தாலும் பயன் தராது; மாறாகத் தீமையே தரும். இதனை,

> **"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
> **என்னலத் துள்ளதூஉம் அன்று"**

என்று குறள் கூறுகிறது. "பிற நலம் என்னலத்துள்ள தூஉம் அன்று" என்ற சொற்றொடர் நினைந்து நினைந்து உணர்தற்குரிய ஒன்று.

வாழ்க்கையை ஒப்பற்ற மாளிகையாகத் திருக்குறள் கற்பனை செய்கிறது. இந்த ஒப்பற்ற மாளி

கையின் கூரை சால்பாகும். இதனை தாங்கி நிற்கும் தூண்கள் ஐந்து. அவையாவன: அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவைகளாகும். மனித வாழ்க்கைக்கு இந்த ஒழுக்க நெறிகள் வலிமை பெற்றால், அகத்தாலும் புறத்தாலும் வளரும். எந்தப் பகையும் இந்தச் சீலம் நிறைந்த வாழ்க்கைக்கு எதிராக இருக்காது.

சால்பு மிகச் சிறந்த இயல்பு. சால்புடையோர் இனிய நெஞ்சினர். மகவெனப் பல்லுயிரையும் ஒப்ப நோக்கும் இயல்பினர். அவர்கள் பிறர் தீமை சொல்ல மாட்டார்கள். "பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு" என்று குறள் பேசுகிறது.

வாழ்க்கை அறச் செயல்கள் செய்வதற்கென்றே அமைந்தது. அறச் செயல்களில் நாட்டமுடையோர் வீணான வம்புகளுக்கு ஆளாக மாட்டார்கள். தம் முடைய அறச்செயல்களுக்குத் துணையாக இருப் போரைத் தாழ்ந்து துணையாக ஏற்றுக் கொள்வர். சான்றோருக்குப் பகைவர் கிடையாது. ஒரோவழி இருந்தாலும் அந்தப் பகைவரை மனம் மாற்றித் துணையாக்கிக் கொள்ளவே சான்றோர் முயற்சிப்பர்.

**"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை"**

என்பது குறள்.

சாதாரண மனிதர்கள் பெரிய மனிதர்களிடத்தில் தோற்பதைப் பெருமையாகக் கருதுவர், அதாவது தம்மினும் வலியாரிடத்து. தம்மினும் வலியாரிடத்துத் தோல்வி கொள்வது இயற்கையே. அதைப் பெரி தெனக் கருதுதல் இழுக்காகும். சான்றோர் தமக்கு ஒப்பில்லாதாரிடத்தில் தோல்வி கிடைத்தாலும் தோல்

வியை ஒத்துக் கொள்வர். அங்ஙனம் ஒத்துக் கொள்ளு தல்தான், சால்பினை உரைத்துக் காட்டும் ஒழுக்க மாகும். இதனை,

**"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

தமக்கு இனியன செய்தார்க்குத் திரும்ப இனியன செய்தல், ஒருவகை வணிகமேயாம். வாழ்க்கை நப்பாசைகளில் ஊறியோர் இனியன செய்தார்க்கு இனியன செய்வர். இஃது ஒன்றும் பாராட்டுக்குரிய தல்ல. இன்னாதன செய்தார்க்கும் இனியன செய் தலே வாழ்க்கையின் சிறப்பும் பெருமையுமாகும். அங்ஙனம் செய்தலே சால்புடைமையின் பயன்.

**"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு"**

என்பது குறள். வறுமை முதலியன சாதாரண மனி தரை அழிக்கும். ஆனால், சான்றோருக்கு வறுமை இழிவன்று. சான்றோர் தம்முடைய சால்பொழுக் கத்தில் உறுதியுடன் இருப்பாராகில் வறுமை, அழி வையோ இழிவையோ தராது இதனை,

**"இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்"**

என்பதால் அறியலாம். ஊழி தவறினாலும் தவறும்; சான்றோர் தவற மாட்டார்கள். ஊழி பெயர்தல் முதலிய துன்பங்கள் வந்துற்றாலும், சான்றோர் தம் ஒழுக்கத்தினின்று மாறமாட்டார்கள்.

**"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்"**

என்பது குறள். இந்நிலவுலகம் நிலைபெற்றிருக்கிறது. கோடானுகோடி மக்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறது.

அங்ஙனம், சுமந்து நிற்பது சான்றோரின் இயல்புகளைக் கண்டு மகிழ்ந்தேயாகும். சான்றோர் சால்பிற் குன்று வாராயின் நிலம் வறிதே மக்களைச் சுமக்காது.

**''சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**
**தாங்காது மன்னோ பொறை''**

என்பது குறள்.

வள்ளுவர் உலகம் பெருமையுடைய உலகம்; பெருமைப் படுத்தும் உலகம். வள்ளுவத்தின் பெருமை சால்பில் தங்கி இருக்கிறது. சால்பு தன்னைத்தான் கொண்டொழுகுவதில் அமைந்து கிடக்கிறது. அங்கேயே இன்ப உலகமும் இருக்கிறது.

# வள்ளுவர் உலகம் IX

## பண்புடைமை

தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் ஆழமான அகலமான உறவை ஏற்படுத்தி, அந்த உறவு என்றும் அகலாமல் பேணிப் பாதுகாக்கும் ஒழுக்கம் பண்பாடு, விளையும் நிலத்தினை விளைவித்தற்குரிய ஆற்றலைப் பெறுதற்குச் செய்யும் முயற்சியைப் பண்படுத்தல் என்று கூறுகிறோம். பண்படுத்தப் பெற்ற நிலம், உயிர்நிலை பேணுதற்குரிய உணவினை வழங்குகிறது. அதுபோல, உயிர்க்குச் சிறந்த இன்ப நல்லுணர்வுகளை —பண்படுத்தப் பெற்ற உள்ளங்கள் வழங்குகின்றன. பெருமை, சான்றாண்மை முதலிய சிறப்பியல்புகள் அமையப் பெற்றும் பலரோடு ஒத்து இயைந்து வாழ முடியாது போனால் பயனென்ன? பலர்கூடி இணைந்து வாழ்வதற்கே வையகம். இந்த இணைந்த கூட்டு, வாழ்க்கைக்குப் பல சமயங்களில் பெருமையின் பேரால் முட்டுக்கட்டை போடுபவர்கள் உண்டு. சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு எதிரான பெருமை பெருமையன்று; சிறுமையேயாம். பலரோடு பழகி அவர்தம் இயல்பறிந்து தம்நிலை வழுவாமல் அவர்தம் நிலையொடு ஒத்து ஒழுகிப் பழகும் இயல்பே பண்பாடு. "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" என்பது கலித்தொகை.

பண்புடைமையென்ற ஆன்ற ஒழுக்கத்தை எவ்வழியில் அடைதல் இயலும்? பண்பாடு பெறுதற்குத் தனியே ஒரு முயற்சி தேவையில்லை. உயர்ந்தோர், தாழ்ந்தோர் பாராமல், யார்மாட்டும் எளியராகப் பழகும் இயல்பு அமைந்துவிட்டால், பண்புடைமையும் எளிதாக வந்து அமைந்துவிடும். எளிமையாகப் பழகினுல் மட்டும் போதாது. பிறர் இயல்பறிந்து செவ்வி பார்த்து அதாவது, சந்தர்ப்பம் சூழ்நிலை பார்த்து நடந்து கொள்ளவும் வேண்டும். இதனை,

**''எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு''**

என்று குறள் கூறுகிறது.

மக்கள் யாவருக்கும் உறுப்புக்களாலாய ஒப்பு கிடைத்து விடுகிறது. உறுப்புக்களால் ஒத்திருப்பதாலேயே ஒருவர் இன்னெருவ மனிதரோடு ஒத்து விடுவதில்லை. பெருமையும் சிறுமையும் உறுப்புச்களால் அமைந்து விடுவதில்லை. உறுப்புக்களைப் பயன்படுத்தும் பண்பட்ட வழிகளாலேயே, சிறப்பு வந்து பொருந்துகிறது. பிண நிலையினும் மக்கள் உறுப்புக்கள் உண்டு. அந்த நிலையில், அந்த உறுப்புக்களை விரும்பி நேசிப்பார் யார்? யாரும் நேசிக்கமாட்டார்கள். மாருக வெறுப்பர். மக்கள் தம்முள் ஒத்த நிலையினராதல், பண்பின் வழியிலேயே சாலும். வேறு எவ்வழியிலும் இயலா. ஒருவன் மற்றவரை நோக்கித் தம்முடைய பண்பாட்டு நிலையினை உயர்த்திக் கொண்டாலே, ஒப்புடையராகலாம். இதனை,

**''உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்ருல் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு''**

என்று குறள் கூறுகிறது.

மனித்த வாழ்க்கை மிகவும் அருமையானது இதன் அருமையறிந்து பயன்படுத்துவோர் மிகச் சிலரேயாம். மனித உலகத்தை நடைமுறைப்படுத்தி நிலைபேறுடைய தாகச் செய்யும் பேரியல்புகள் இரண்டு. ஒன்று நீதி; பிறிதொன்று அறம். நீதி உள்ளச் சார்புடையது; அறம் செயலின்பாற்பட்டது. இவ்விரண்டு இயல்பு களையும் வாழ்க்கையைப் பயனுடையதாக வாழ விரும்புபவர்கள் அனைவரும் விரும்பி ஏற்றுப் போற்று வர். இன்றைய உலகியலில் பலர் பயனடையவே விரும்புகிறார்கள். காதல், கணவன் மனைவி வாழ்க்கை, நட்பு, உறவு முதலிய எல்லா இடங்களிலும் ''உன்னால் எனக்கென்ன லாபம்'' என்ற கேள்வியே கேட்கப்படு கிறது. பயன்பட விரும்புவதில்லை. பயனடைதலை விட பயன்படுதலே சிறப்புடைய வாழ்க்கை. நீதியும் அறமும் உடையோர் மற்றவர்கள் பயன் கொள்ளத் தக்க வகையில் வாழ்வர். இதனைப் ''பயனுடையார்'' என்று குறள் கூறுகிறது. பயனுடையார் பிறருக்குப் பயன்பட வாழ்வர். அவ்வழி தமக்கும் பயன்படுவர். இதனை,

**''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டு முலகு''**

என்று குறள் பேசுகிறது.

பலர் பழகுவர்; சிரித்து மகிழ்ந்து பேசிப் பழகுவர். ஆனால் பலரிடத்தில் இச்சிரிப்புக்கூட உள்ளத்தின் பொலிவாகிய மகிழ்ச்சியிலிருந்து மலர்ந்த சிரிப்பாக இருப்பதில்லை; செயற்கையாக இருக்கும். சிரிப்பதற் காகச் சிரிப்பதில்லை. வெளிப்படையாக இகழ்ந்து கூற ஆற்றலின்மையின் காரணமாக, சிரிப்பில் மறை முகமாக இகழ்ந்து கூறுவர். குத்தலும் கேலியுமாகப் பேசுவர். இது மிகவும் தவறான தீயொழுக்கம். அதனால்,

"நகையுள்ளும் இன்னு திகழ்ச்சி" என்று கூறுகிறது குறள். சிலர் பகைமை காரணமாக இகழ்வர். அஃதும் நல்லதல்ல. இகழ்தலால், இகழப்படுவாருக்கு எவ்வளவு இழப்புண்டோ, அதே அளவு அதைவிட அதிகமாகக்கூட இகழ்வாருக்கும் இழப்புண்டு. இகழப்படுவோர் இகழ்வாரினின்றும் விலகிச் சென்றுல், புகழ்ச்சியைப் பெறலாம். ஆனல், இகழ்வாருக்கு இகழ்தல் பழக்கமும் வழக்கமும் ஆகிவிடின், பெருமையுடையோரை உறவாகக் கொள்ளும் வாய்ப்பை இழந்து விடுகின்றனர். ஆதலால், பகையுள்ளும் பண்பு பாராட்டுதலே சிறப்பு. பாராட்டுதலின் மூலம் பாராட்டப்படுபவர்கள் குற்றங்களின் நீங்கிச் சிறப்புறுவர். இஃது இயற்கை. பாராட்டும் பண்பின் மூலம் பாராட்டப்படுவோருக்கு மட்டுமே பயன் இல்லை, பாராட்டுவோருக்கும் உண்டு. பாராட்டுகின்ற குணம்—தெள்ளிய—வற்ருத நீர் ஊற்று உடைய சுனை போன்றது. பாராட்டும் குணம் மேலும் மேலும் உயர்த்தும். அதனலன்ரே, இறைவனும் "நந்தம்மை கோதாட்டி" ஆட்கொள்ளுகின்ருன். இதனல், நமக்கு மட்டுமா பெருமை. இறைவனுக்கும் பொருள்சேர் புகழ் கிடைக்கிறது.

> **"நகையுள்ளும் இன்னுது இகழ்ச்சி பகையுள்ளும்**
> **பண்புள பாடறிவார் மாட்டு"**

என்பது குறள்.

சிலருக்குக் கூர்மையான புத்தியிருக்கும்; அறிவிருக்கும்; ஆற்றலும் இருக்கும். ஆயினும் மக்கட் பிறப்புக்குரிய ஒழுக்க இயல்புகளும், ஒத்ததறிந்து வாழும் இயல்பும் பெற்றுப் பண்புடையராக வாழாது போனல், மரம் போன்றவர்கள் என்று குறள் கண்டிக்கிறது. மக்கள்மீதுள்ள இரக்கவுணர்ச்சியால் ஒப்புக்

கார்க மரம் போல்வர் என்று கூறுகிறது. உண்மையில் அவர்கள் மரம் போன்றவர்களும் அல்லர். மரமாவது பல்லுயிர் மகிழத் தண்ணிழல் தருகிறது. உயிரியக்கத் தேவையான காற்றைத் தருகிறது; காய்களைக் கனிகளைத் தருகிறது; மருந்தாகவும் பயன்படுகிறது. திருக்குறளில் பிறிதோரிடத்தில் "மருந்தாகித் தப்பா மரம்" என்று பாராட்டப்படுகிறது. ஆதலால், பண்பாடில்லாதவர்கள் மரத்தினும் மோசமானவர்களே என்று கருதுதல் சிறப்பு. இதனை,

**"அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"**

என்று குறள் கூறுகிறது.

சிலர், ஒருசிலரோடு ஒத்து உறுதுணையாக இருந்து வாழமாட்டார்கள். காரணம் கேட்பின் அவர் கோபக்காரர்; சிடுமூஞ்சிக்காரர்; அப்படி இப்படி யென்றெல்லாம் கூறி," அவருக்கும் நமக்கும் ஒத்து வராது" என்பர். ஒத்துவராமைக்குரிய கீழ்மைக்குணம் இவரிடத்திலா? அல்லது மற்றவரிடத்திலா? அல்லது இரண்டு பேரிடத்திலுமா? மற்றவர்கள் தம்மோடு ஒத்துவர வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, தாம் மற்றவர்களோடு ஒத்துப் போக வேண்டுமென்று கருதுவதேயில்லை. சிலர் நட்புக் காட்ட மாட்டார்கள். நட்புக் காட்டாதது மட்டுமல்ல; பகைமை கொண்டு தீமையே செய்வர். அவர்கள் மாட்டும் பண்புடையராகப் பழகுதலே உயர்ந்த சிறப்பு. அங்ஙனம் வாழ இயலாதாரைக் கடையராகவே அறிஞர் உலகம் கருதும். இதனை,

**"நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை"**

என்று குறள் கூறுகிறது.

இந்த உலகியல் மகிழ்ச்சியின்பாற்பட்டது. மகிழ்ச்சிக்காகவே ஏற்பட்டது. இந்த மகிழ்ச்சியை ஒளியூட்டி வளர்க்கப் பகல் வருகிறது. ஆனால் பலர் பகலை இருள் நிறைந்த இரவாக்குகின்றனர். எப்படி? கதிரவனின் ஒளிக்கதிர்க் கற்றை வீசுகிறது. ஏன்? ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, உணர்வால் உள்ளத்தால் கலந்து சிரித்துப் பேசி மகிழ்வதற்காகவேயாம். அங்ஙனம் வாழ்வோர் எத்தனை பேர்? பகையின் காரணமாக ஒருவரை ஒருவர் பார்த்தாலும் பாராதது போல ஒதுங்கிப் போவோரும், சிலர் அதுவுமின்றிக் கடுகடுத்த முகத்துடன் உறுமி முறைத்துப் பார்த்துப் போவோரும் எத்தனையோ பேர். முல்லைக் கொடியில் அரும்புகள் பூத்திருக்கின்றன! என்ன மகிழ்ச்சி! அதுபோல மனிதனுக்கு முத்துப்போன்ற பற்கள்! பற்கள் முறுக்கைக் கடித்துத் தின்னப் பயன்படலாம். தவறில்லை. ஆனால் பலர் பகை நினைத்து "நற நற" வென்று தம் பற்களைக் கடிப்பதைப் பார்த்தால் கொடுமையாக இருக்கிறது இத்தகையோருக்குக் கலந்து பழகும் பயனடையாமை காரணமாகப் பகலும் இருளாகிறது.

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்"

என்பது குறள்.

ஒரு குடம் நிறையப் பால்; குடித்து வளரக் கூடிய பால்; உணவும் மருந்துமாகப் பயன்படக் கூடிய பால். எனினும் அந்தக் குடத்துப் பாலில் மனிதனின் செயற்கையாகிய நஞ்சு ஒரு சொட்டுக் கலந்தால் என்னவாகும்? மகிழ்வுக்குப் பதில் மரணம்; இன்பத்துக்குப் பதில் துன்பம். செல்வம் மகிழ்ச்சியின் சாதனம்; இன்பத்தின் ஊற்று. அதுவும், பெருஞ்செல்வமாயின் எண்ணில் இன்பங்கள் கிடைக்கும். செல்வத்தின் இயல்பு

எதுவாயினும், அச்செல்வம் பண்பாடு அற்றவர்களிடம் சிக்குமாயின் அது இன்பத்தைத் தருவதில்லை. மாறாகத் துன்பத்தைத் தரும். இதனை,

> ''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
> கலந்தீமை யால்திரிந் தற்று''

என்ற குறளால் அறிக.

இந்த உலகத்தின் வரலாறு நெடிய வரலாறு. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் வரலாறு. எண்ணில் அடங்காத பக்கங்களில்—எண்ணில் அடங்காத கற்பனைகள்—செய்திகள் ஆகியவற்றால் வரலாறு பெருகி வளர்ந்து வந்திருக்கிறது. இப்பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இனிமேலும் வளரும். இந்த மனித குலத்தின் வரலாறு இடையீடின்றித் தொடர்வதற்கு எது அடிப்படை? பேரரசுகளா? போர்க்களங்களா? அறிவாற்றல்களா? இல்லை, இல்லை! இவைகளெல்லாம் பல சமயங்களில் மனித உலகத்தை அழிக்கவே முயன்றன. அந்த அழிவிலிருந்து மனித உலகத்தைக் காப்பாற்றியது சான்றாண்மையின் முதிர்ந்த பண்பாடுடையவர்களேயாவர். இயேசு சிலுவையில் தொங்கிச் சிந்திய செந்நீர் பண்பாட்டின் சின்னம். செந்நீரால் சிலுவை கழுவப் பெறவில்லை. பாபிகளின் பாபம் கழுவப்பெற்றது நபிகள் நாயகத்தின் புனித தியாகம் பாபத்தைக் கழுவி வரலாற்றுக்குப் புத்துயிர் ஊட்டியது. புத்தரின் போதனைகள் பண்பாட்டின் பொழிவு. அது உலகத்தைத் தொடர்ச் சரித்திரமாக்கியது. ஆட்சி மேலாதிக்கத்தின் கொடிய இரும்புப்பிடியை உடைத்து, கொடிய நீற்றறையைக் குளிர்சாதனமாக்கிய அப்பரடிகளின் தண்கருணை, வரலாற்றை வளர்த்தது. நம்முடைய தலைமுறையில் அண்ணல் காந்தியடிகள் பகையும் போரும் நீக்கிப்

பண்பாட்டு வழியில் நம்மைச் செலுத்தினர். இத்தகு பண்புடையோர்கள் இருப்பதனாலேயே இந்த உலகம் நிலைபெற்று இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனை, "உண்டா லம்மஇவ் வுலகம்" என்று புறநானூறு போற்றுகிறது.

நிலத்திற்குத் தனியே இயல்புண்டு. ஆயினும் அந்த இயல்புகள் ஏற்றம் பெறுதலும், பயன்படுதலும் மனித்த ஆற்றலின்பாற்பட்டது. உணர்விழந்த, செயலிழந்த மனிதர்கள் கையில் சிக்கிய நிலம் செழுமையானதாயினும் பயன்படாது. உணர்வும், செயலூக்கமும், திறனும் பெற்ற மனிதர்கள் கையில் பயனற்ற களர் நிலம் சிக்குமாயினும் வளங்கொழித்துப் பயன்படும். ஆக வளமும் பயனும் நிலத்திலா? மனிதனின் உழைக்கும் தன்மையுள்ள கரங்களிலா? உழைக்கும் திறம்படைத்த கைகளிலேயே மனித உலகத்தின் உயிர் வாழ்க்கை தங்கியிருக்கிறது; வாழ்கிறது; "கைவருந்தி உழைக்கும் நீ தெய்வம்" என்றார் பாரதியார். இதுவும் பண்பாடு. இந்தப் பண்பாட்டின் அடிச்சரட்டிலேயே உலகம் வளர்கிறது; வாழ்கிறது; நிலைபெற்று இலங்குகிறது. இத்தகு பண்பாளர்கள் எண்ணிக்கையில் சிலரேயாக இருக்கலாம். ஆயினும், இவர்களாலேயே உலகம் வாழ்கிறது. இவர்கள் இல்லையானால், உலகம் மண்ணோடு மண்ணாகப் போயிருக்கும். இதனை,

**"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"**

என்ற திருக்குறளால் அறிக.

"ஒன்று பரம் பொருள். நாம் அதன் மக்கள். உலகின்பக் கேணி" என்ற வாழ்க்கையின் பண்பாட்டுச் சுருதியை மறந்துவிடக் கூடாது. நற்குணங்களால் உள்ளத்தை வலிவூட்டிக் கொள்ள வேண்டும். பிற

ருக்குப் பயன்பட வாழ்தல் என்ற உயர்ந்த அற ஒழுக்கத்தில் ஒழுக வேண்டும். மறந்தும் பகை பாராட்டக் கூடாது. யாரையும் நினைப்பாலும், சொல்லாலும் இகழக் கூடாது. இத்தகு பண்பிற் சிறந்த வாழ்க்கையையே திருக்குறள் உலகம் காட்டுகிறது. திருக்குறளின் பண்பாட்டுலகத்தில் நாமனைவரும் வாழ வேண்டும்.

# வள்ளுவர் உலகம் X

## பயனற்ற செல்வம்

**உ**லகியல் வாழ்க்கையின் அமைப்பும் வளர்ச்சியும் செல்வத்திலேயேயாம். செல்வம் ஒரு சிறந்த கருவி. செல்வம் இன்பத்தின் ஊற்று; மகிழ்ச்சியின் அடிப்படை; அறத்தின் விளை நிலம். ஆயினும் தகுதியில்லாதார் கை செல்வம் சேருமாயின் துன்பத்தைத் தரும். செல்வமுடைமையைவிட செல்வமுடையாருடைய தகுதி, தரம், திறன் கவனத்துக்குரியன. செல்வத்தின் பயன், செல்வம் உடையானைப் பொறுத்து அமைவதேயாம்.

உயிர்கள் முழு நிறைத் தகுதியைப் பெற்று வளர்வதற்கே வாழ்க்கை. வாழ்க்கையில் உயிர்களுக்கு வழங்கப் பெற்ற உரிமை நுகர்தலும், அனுபவித்தலுமாகும். நுகர்ந்து அனுபவிப்பதன் வழி உயிர்களின் வேட்கை தணிகிறது. வேட்கை தணிந்துழி முழுநிறைவுடையன ஆகின்றன. உயிர்களின் நுகர்ச்சிப் பொருள்களைப் பெறுதற்கேசெல்வம். செல்வத்தைப் பெற்றவன் அதன் பயனைத் துய்க்காமலும், அனுபவிக்காமலும் இருப்பானாகில், அவன் இறந்தவனாவான், உயிருடலொடு கூடிய வாழ்க்கையின் இயல்பு நுகர்தல், அனுபவித்தல், மகிழ்தல், மகிழ்வித்தல், இன்புறுதல், இன்

புறுத்தல் ஆகியனவாம். இவற்றைச் செய்யாதவர்களின் வாழ்க்கை பயனற்றுப் போவதால் இறந்தவர்களாவர். பயனுடைய வாழ்க்கையே வாழ்க்கை. இதனை,

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்"

என்று கூறி விளக்குகிறது.

திருவருளால் கிடைத்த பிறப்பே உயிர்க்கு மருந்து. ஆனால், இறைவன் விதித்த நெறிமுறைகளாகிய பத்திய வாழ்க்கையை மேற்கொள்ளத் தவறினால், மீண்டும் மீண்டும் செத்துப் பிறக்கும் அவலத்திற்கு ஆளாக நேரிடும். பொருள் சக்தி படைத்ததுதான், ஆனாலும் தனியே பொருள் ஒன்றும் சாதிக்காது. ஆனால், அதனைப் பெற்றவன் உலகத்தில் எதையும் சாதிப்பான். பொருளுடைமையினாலேயே எல்லாம் ஆகிவிடாது. பொருளைப் பயன்படுத்தும் வகையினாலேயே அமையும். வாழ்க்கையின் பயன் நோக்கியே பொருளை ஈட்டத் தொடங்குகின்றனர். ஆனால், பொருள் கையில் புழங்கத் தொடங்கியவுடன் பொருளின் பயனைவிடப் பொருளுக்கே முதன்மையான இடத்தைக் கொடுத்து, தாமும் துய்க்காமல் மற்றவர்களுக்கும் கொடுத்து மகிழாமல், பொருளை இவறிக் கூட்டிப் பாதுகாக்கத் தொடங்கி விடுகின்றனர். இதனால், மனிதன் பொருளின் பயனை இழப்பதோடு துன்பத்தில் சிக்கி, தன் ஆன்மாவைத் தானே தற்கொலை செய்து கொள்ளுகிறான். இதனால், பிறப்பு நீங்கக் கிடைத்த பிறப்பு, மீண்டும் மயக்கத்தோடு கூடிய பிறப்பையே உண்டாக்குகிறது. இதனை,

"பொருளான்ஆம் எல்லாம்என் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு"

என்று குறள் கூறுகிறது.

உலகியலில் செல்வத்துக்கும், ஆடம்பரத்துக்கும் மதிப்பு இருக்கிறது. வெறும் செல்வமுடைமைக்குத் தரப்பெறும் மதிப்பே சமுதாயத்தின் ஒழுக்கக் கேடு களுக்கு அடிப்படை. ஆடவர் இம்மைக்கும் மறுமைக் கும் பெற்று மகிழக்கூடியது புகழேயாம். புகழுடைய வர்கள் நிலத்திற்கு வளம் தருபவர்கள். பிறரை மகிழ் வுறுத்தலின் மூலம் வரும் புகழே சிறப்புடையது. இந்தப் புகழைப் பெருதவர்கள் நிலத்திற்குச் சுமையா கிருர்கள் என்பதுகுறட் கருத்து.

'ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை''

என்பது குறள்.

மனிதன் பலரோடு கூடி வாழப் பிறந்தவன். அதுவே மனித ஒழுக்கம். துறவிகளும் தொண்டரொடு கூடி வாழ வேண்டும். சிலர், யாரும் தன்னை அணைய முடியாதபடி ஒதுங்கியும், ஒதுக்கியும் வாழ்கின்றனர். அவரிடத்தில் யாதிருந்து என்ன பயன்? இங்ஙனம் தனி விலங்காக வாழ்பவர் என்ன சாதனையைச் செய்யப் போகிருர்? அவர் இறந்த பிறகு இந்த உலகத்தில் எஞ்சியிருப்பது என்ன? மரணத்திற்குப்பின் பொருளைப் பிறிதொருவர் உரிமை கொண்டாடி எடுத்துக் கொள்வர். உடம்பு மண்ணுக்கு உரிமையாகி விடு கிறது. இவருக்கு உரியதாகவுள்ள புகழை விட்டுச் செல்ல வேண்டாமா? என்பது திருவள்ளுவர் கேள்வி.

''எச்சம்என் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்''

என்பது குறள். எச்சம் என்ருல், குற்றம் என்ற பொருளும் உண்டு. பலர் சூழத் தாம் வாழாமையைக் குற்றம் என்று எண்ணிப் பார்க்கின்ருரா? இல்லையா?

குற்றத்தை எண்ணிப் பார்த்தலே குற்றத்தின் நீங்க வழி. ஆதலால், கொடுத்து மகிழ்ந்து பலர்சூழ வாழ் வதே வாழ்க்கை.

இந்நிலவுலகத்தில் நிறையச் செல்வமிருக்கிறது. ஆயினும், பலர் வறுமையால் வாடுகின்றனர். ஏன்? செல்வ வறுமையினுல் அல்ல, சிலரிடம் உள்ள நற்குண வறுமையினுலேயாம். செல்வம் அடுக்கிய கோடி பெற்றுள்ளவராயினும் செல்வத்தைப் பயனறிந்து பயன்படுத்துவதில்லே. உலகில் செல்வத்தைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களேயும் தகுதியறிந்து பயன் படுத்துவோரே வைத்திருக்கிருர்கள். உதாரணமாக நாதஸ்வரம் வாசிக்கத் தெரிந்தவரே நாதஸ்வரம் வைத்திருக்கிருர். நாதஸ்வரம் வாசிக்கத் தெரியாத வர்கள் அதை வைத்திருக்கமாட்டார்கள். அப்படியே பெற்றிருந்தாலும் வாசிக்கத் தெரிந்தவர்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்து கேட்டு மகிழ்வர். ஆனுல், செல்வத்தின் பயனேத் தெரியாமலே, செல்வத்தைப் பலர் வைத்திருக்கிருர்கள். செல்வத்தின் பயன் ஈதல்; மகிழ்வித்து மகிழ்தல்; துய்த்தல் ஆகியவைகளாம். இந்த வகைகளில் பயன்படாத செல்வம், அடுக்கிய கோடி இருப்பினும் அஃது இல்லாததாகவே கருதப் பெறும். இதனே,

> ''கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
> கோடியுண் டாயினும் இல்''

என்று குறள் கூறுகிறது.

செல்வத்தை ஈட்டுதல், பேணிக்காத்தல் ஆகியவை துன்பந்தரும் பணிகளேயாம். ஆயினும் இத்துன்பம் அனேத்தையும் இன்பமாக மாற்றக்கூடியது. தாம் துய்த்து இன்புறுதலும், பிறருக்குக் கொடுத்து மகிழ் வுறுத்தும் வழி இன்புறுதலும் ஆகும். ஈதலும், துய்த்

தலும் இயற்றுதவர்கள் செல்வத்தின் பயனை இழக்கின்றனர். அதோடு இன்புறுதற்குக் காரணமாய செல்வம் நோயாகிச் செல்வமுடையவனை அழிக்கும். செல்வத்தினைத் தகுதியறிந்து பயன்படுத்தாதவன் களவு, காவல்களால் அலைக்கழிக்கப்படுகின்றான். உடம்பு, உள்ளம் இரண்டையும் அழித்துக்கொள்கிறான். ஐயோ, பாவம்! இதனை,

> "ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்
> றீதல் இயல்பிலா தான்"

என்று கூறி விளக்குகிறது.

உலகம் இன்பத்தின் வைப்பு. உயிர் இன்புறுதல் மூலமே அதன் வேட்கை தணிகிறது. அவ்வழிதான் உயிர் நிறை நலம் பெறுகிறது. இறைமைத் தன்மையை அடைகிறது. அதனாலன்றோ உயிர்க்கு இறைவன் நுண்ணிதில் இன்புறுதற்குரியனவாய—கருவிகளாகிய பொறிகளையும் புலன்களையும் தந்ததோடன்றி இன்புறுதற்குரியனவாய பொருள்களையும் படைத்தருளினன்.

காதலின்பத்திற்கு உரிய பெண் இன்பத்தைத் தருபவள்; இன்பத்தைப் பெறுபவள். மிகச் சிறந்த நலன்கள் அனைத்தும் பெற்ற நங்கை ஒருத்தி தனியே வாழ்ந்து மூத்தாள் என்றால் என்ன பயன்? "தமியன் மூத்தற்று" என்ற சொற்றொடர் வினாவாகவும் விடையாகவும் இருக்கிறது. பெண் மணம் உடையவள். அது கொடியில் மலர்கிறது. கொடியை மணம் பரப்பக் கொம்பு தேவை. நிறை நலம்பெற்ற நங்கை ஒருத்தி உரிய பருவத்தே கொழுநனாகிய தலைமகனைப் பெற்று மகிழ்தலும், மகிழ்வுறுத்தலுமில்லாமல் வறிதே மூப்பாளாயின் அவளுக்கும் பயனில்லை; மற்றவர்க்கும் பய

னில்லை; உலகத்தின் இடையருத வழிவழி மரபும் தடைப்படுகிறது. இத்தகு கொடுமை போன்றதே செல்வமுடையான் வறுமையுடையாருக்கு வழங்கி அவர்தம் வறுமையை மாற்ருத செல்வம் என்று திருக்குறள் கூறுகிறது. ஈயாதவனது செல்வத்தால் உடையானுக்கும் பயனில்லை. மற்றையோருக்கும் பயனில்லை. ஏன்? அந்தச் செல்வத்திற்கும் பயனில்லாமற் போய் விடுகிறது. இதனை,

"அற்ருர்க்கொன் ருற்ருதான் செல்வம் மிகநலம்
பெற்ருள் தமியள்மூத் தற்று"

என்று குறள் கூறுகிறது.

மரம் நிழல் தருகிறது; கனிகளைத் தருகிறது; அருமையாகச் சில நச்சு மரங்களும் உண்டு. நச்சு மரமும் பழுக்கும். நடுவூருள் நம் வீட்டுக்கு அருகாமையில் பழுத்துக் கனிகளை உதிர்க்கும். யார் போய் எடுப்பர்? கிளிகளாவது வந்து கொத்திப் பார்க்குமா? இல்லை! அப்படியே மீறி யாராவது ஆசையின் மிகுதியால் அறியாமையின் காரணமாகத் தின்றுவிட்டால், தின்றவன் உயிரைக் கொல்லும். அதுபோல நடுவூருள் நமது தெருவில் நமக்குப் பக்கத்திலேயே ஓங்கி உயர்ந்த மாளிகையில், நஞ்சு மனத்தோடு வாழ்கிருன் ஒருவன். அவனிடத்தில் ஏராளமான செல்வமுண்டு. ஆயினும், நெஞ்சில் நஞ்சுடையான் கையில் அகப்பட்ட செல்வமாக இருப்பதால், அச்செல்வமுடையானை யாரும் விரும்பிச் சேர்வது இல்லை. தவறிப்போய் யாராவது சேர்ந்தாலும் அவன் அவர்தம் உயிரை உறிஞ்சிக் குடிப்பானே தவிர, வாழ்விக்கமாட்டான். இதனை,

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத் தற்று"

என்று குறள் கூறுகிறது.

செல்வம் ஈட்டுவது மனிதனின் நிலையாய கடமை. அறவழியிலேயே ஈட்டவேண்டும். தண்ணீர் நமது வீட்டுக் குழாய்க்கு வரவேண்டும். ஆனால், தண்ணீர் வரும் குழாய் பாசி பிடித்ததாக இருக்குமானால், தண்ணீரின் தூய்மை கெட்டு, பருகுவோர் வாழ்க்கைக்கு உலை வைக்கிறது. அதுபோல, நமக்குச் செல்வந் தேவை. ஆனால், செல்வம் அறத்தின்வழி வராது போனால், செல்வம் இன்பத்தைத் தருதற்கு மாறாகத் துன்பத்தைத் தருகிறது. செல்வம் அறத்தின் வழி ஈட்டுவதென்றால் எப்படி? அறத்தின் வழி வரும் செல்வம், நிச்சயமாகத் தேவைக்கு மிஞ்சியதாக இருக்காது. தேவைக்கு மிஞ்சிய செல்வம் எதற்கு? நமது உடலில் தேவைக்கு அதிகமான ரத்தம் ஊறினாலும் நோய்; தேவைக்குக் குறைவான ரத்தம் ஊறினாலும் நோய். இந்த இயற்கை நியதியை நாம் ஏன் பாடமாக எடுத்துக்கொள்ளக் கூடாது? பலருடைய தேவையை நிறைவு செய்யவேண்டிய செல்வம், அங்ஙனம் செய்யப் பெறாமல், பழியுடைய வழியில் செல்வம் தேவைக்கு மேல் குவிகிறது. உழைப்பிற்கேற்ற ஊதியம் தருதல்கூட இன்னும் உலகத்தில் மலரவில்லை. ஆளையும் நேரத்தையும் வைத்து ஊதியம் கொடுக்க நினைக்கிறார்களே தவிர, ஒருவன் உழைப்பைக் கொண்டு உருவாக்கிய செல்வத்தை மையமாக வைத்து ஊதியம் தர முன்வருவதில்லை. முறையான ஊதியம் தராது ஈட்டிய செல்வம் அறத்தின் வழி வந்ததல்ல. செல்வத்தின் உற்பத்திக்கு — படைப்புக்கு அடிப்படையாகவுள்ள உழைப்பாளிகளின் தேவையை பூர்த்தி செய்யாது, குவியும் செல்வம், அறத்தின் வழி வந்த செல்வமல்ல. இச்செல்வ வாழ்க்கை மணற் பரப்பில் மாளிகை கட்டியதைப் போன்றது; பயனற்

றது. செல்வம் அறத்தின் வழியே வரவேண்டும். ஈட்டிய பொருளை, தன்னுடைய வாயை வயிற்றைக் கட்டாமல் அனுபவிக்க வேண்டும். பலரோடும் அன்பு பாராட்டிக் கொடுத்து மகிழ்ந்து அனுபவிக்க வேண்டும். இங்ஙனம், அறத்தின் வழி, பொருளீட்டித் தான் துய்த்து, பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்து அன்பு பாராட்டி மகிழாதவன், செல்வத்தைப் பெயரளவில் உரிமையுடையவன் ஆயினும், இவனுடைய உரிமையும் பறிக்கப்பெற்றுப் பிறர் கொண்டு துய்ப்பர். உடைமையாம் உரிமையும் இழந்து இரக்கத்திற்குரியவராகின்றனர். இதனை,

"அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்"

என்று குறள் கூறுகிறது. இதில் "கொள்வார் பிறர்" என்ற சொற்றொடர் நிறைந்த பொருளுடையது. நினைந்து நினைந்து உணர்தற்குரியது. "கொள்வார்" என்றதால் கொடுக்காமலே வலியக் கொள்ளுதலும், "பிறர்" என்பதனால் உரிமையும் உறவுமுடையார் அல்லர் என்பதும் உணர்க.

செல்வம் சீருடையது, செல்வத்தினைக் கொடுத்து மகிழ்ந்து வாழ்வோருக்கும் ஒரோவழி வறுமை வருவதுண்டு. ஆயினும், அந்த வறுமையை நன்மனம் உடையவர் விரும்பி, ஏற்றுக்கொள்வர். ஏன்? அவர் தம் உளம் நோக்க அது வறுமையுமல்ல. ஒன்றில் பற்றிருந்தாலல்லவோ, பற்றுடையதொன்று இன்மை, வறுமையாகக் கருதப்பெறும்; செல்வத்தில் உள்ள பற்றை விட்டுத்தானே ஈத்து உவந்து மகிழ்ந்தார்கள். செம்மனச் சான்றோர்களுக்குத் தேவையும் கூடப் பலவாகப் பெருகி நிற்காது. அவர்தம் உயிர் வாழ்க்கைக்குரிய தேவை, பிறர் மகிழ்தலேயாக அமைந்து

விடுதலும் உண்டு. மேகம் கருவுயிர்த்து முட்டி மோதுகிறது. அது மழையாகப் பொழிந்து தன்னை வறிதாக்கிக்கொள்வதே சிறப்பு. அதுபோல, பெற்ற செல்வத்தை வழங்கி மகிழ்வித்து மகிழ்ந்து எல்லா வற்றையும் இழப்பதையுங்கூடச் சிறப்பென்றே கருதுவர் சான்றோர். மேகம் மழை பொழிந்தவுடன் வறிதே காட்சியளிக்கின்றது மீண்டும் கருத் தாங்கி மழை பொழியும். அதுபோல, கொடுத்து மகிழ்வுறும் வாழ்க்கை ஒரோவழி வறுமைப்பட்டாலும் வறுமை நிலையானதல்ல. அவர்தம் வாழ்க்கையில் மீண்டும் செல்வம் செழிக்கும். இதனை,

"சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து"

என்று கூறுகிறது குறள்.

மாரி மழை பெய்யத் தவறின், உலகம் வளம் குன்றி வறுமையால் இடர்ப்படும். அதுபோலவே சீருடைச் செல்வர் கொடுப்பதொழிந்தால் உலகம் வறுமையால் இடர்ப்படும். மாரி கொடுப்பதை மறந்தால் மீண்டும் மாரி, தம்முடைய மாரி என்ற பெயரையும், புயல் சுமந்துவரும் இயல்பையும் இழக்க நேரிடும். அதுபோலவே சீருடைச் செல்வர் செல்வத்தைக் கொடுக்காவிடின், அந்த செல்வத்தை இழக்க நேரிடும் என்ற கருத்தும் இதன்பாலுள. செல்வமென்பது நன்று; நன்று தருவது, நன்று என்பது மகிழ்வித்தலும், மகிழ்தலுமாகும். இந்த இயல்பறிந்து வாழ்தலே திருக்குறள் உலக வாழ்க்கை.

# வள்ளுவர் உலகம் XI

## நாணுடைமை

திருக்குறள் ஒழுக்கத்தால் உயர்ந்த உலகத்தைக் காட்டுகிறது. திருக்குறள் பல்வேறு உடைமைகளைத் தருகிறது மனிதனுக்கு. அந்த உடைமைகள் அனைத்தும் ஒன்றினை ஒன்று சார்ந்து, அணிக்கு அணியாக—அழகுக்கு அழகு செய்கிறது; அத்தகு அணிகளுள் நாணுடைமையும் ஒன்று. ஏன்? மனிதன் கொள்ளத் தக்க உடைமைகளில் இதுவே தலையாயது என்று கூறினும் தகும். மனிதன் வெட்கப்படுகிறான். எதற்கு? ஏழை என்பதைக் காட்டிக்கொள்ள வெட்கப்படுகிறான். இஃது அவசியமா? அவசியமன்று. ஒருவன் ஏழையாக இருப்பது அவனுக்கு வெட்கமல்ல. அவனைச் சார்ந்த சமுதாயத்திற்கே வெட்கம். ஆனால், உண்மையில் எதற்கு வெட்கப்பட வேண்டும்? அறம் அல்லாதனவற்றை நினைக்கும்பொழுது, செய்ய முற்படும் பொழுது நாணுதல் வேண்டும். இந்த நாணமும் உடலில் வெளிப்படுவதன்று. உள்ளத்தில் வெளிப்படுவது.

**''கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணும் பிற''**

என்பது குறள்.

மக்கள் உயிர்க்கெல்லாம் தேவை ஊண், உடை மற்றும் இன்றியமையாத் தேவை. இவை எல்லா உயிர்களுக்கும் வேண்டிய பொதுப்படையான தேவைகள். இதில் எந்த மனிதருக்கும் வேற்றுமை யில்லை. இந்தப் பொதுப்படையான தேவைகளைப் பெற்று வாழ்தல் மனிதனுக்குச் சிறப்பாகாது. நல்லன அல்லாதவற்றைக் காணும்பொழுது தோன்றும். நாணத்தைப் பெற்று வாழ்தல். இதனை,

> "ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
> நாணுடைமை மாந்தர் சிறப்பு"

என்பது குறள். ஊணும் உடையும் இனப் பெருக்கமும் மாந்தர்க்கெல்லாம் பொது என்றும் கருத இடமிருக்கிறது. "எச்சம்" என்ற சொல்லுக்கு மக்கட்பேறு என்று பொருள் கொண்டால், "ஊணுடை அச்சம்" என்ற பாடமும் உண்டு. உணவினுடையது அச்சம். உலகத்து உயிர்க்கெல்லாம் வேறுபாடுடையன அல்ல. எனவே, உணவின் குறைபாடுகளுக்கு அஞ்சும் அச்சம் எல்லா உயிர்க்கும் ஒக்கும். மற்று தமது நெறிமுறை பிறழ்ந்த நிலைக்கு உள்ளஞ்சி நாணுதலே சிறப்புடைய மாந்தர்க்கு அழகு என்றும் சிந்திக்கலாம்.

உயிர் அருவப் பொருள்; உருவமற்றது. உருவ மின்மையால் பொருளின் உண்மை பொய்யாகாது. உருவமற்ற பொருள்கள் ஏராளமானவை உலகத்தில் இருக்கின்றன. மணம், மின்சக்தி, காற்று ஆகியவை வடிவமற்றவைகளேயாம். இவைகளை இல்லையென்பார் உண்டோ? அல்லது, இவற்றின் ஆற்றலை, இயல்பைக் குறைத்து மதிப்பிடுவாருண்டோ? இந்த உருவமற்ற பொருள்கள், உருவங்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது மணம் தருகிறது; காதல் விளைவிக்கிறது; ஒளி தருகிறது; இயக்குகிறது; மகிழ்வைத் தருகிறது;

உடலுயிர் உறவை இணைக்கிறது. அதுபோலவே, உயிர் வடிவமற்றதாயினும் வடிவமாகிய பருவுடலுடன் தொடர்பு கொள்ளும்போது, இயங்குகிறது. உயிர் தங்கியிருந்து பயிலும் பருவுடலுக்கு உணவு தேவை ஆதலால், உயிர்கள் உணவை நாடும். அது போல, நற்குணங்களைப் பெற்று ஆட்சி செய்யும் சால்பு நாணுடைமையை நாடும். நாணம் உடைமையின் வழியேதான் சால்பு விளங்க முடிகிறது. நாணத் தகுவனவற்றை நாணுது, ஒருகால் பழகிவிட்டாலும், நாணுமை உயிர்க்குப் பழக்கமாகி விடுகிறது. நம்முடைய உள்ளத்திற்கு இயல்பிலேயே நாணும் சக்தியுண்டு. பலர், அதை மரத்துப்போகச் செய்துவிடுகின்றனர். ஊனினுல் உடல் வாழ்க்கை; உடலால் உயிர் வாழ்க்கை; சால்பினுல் உயிர் வாழ்க்கை-நாணுடைமையினுல் சால்பு-என்ற வாழ்க்கை முறை எண்ணத்தக்கது. இதனை,

**''ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்**
**நன்மை குறித்தது சால்பு''**

என்று குறள் கூறுகிறது.

உலகில் ஏராளமான அணிகள் உண்டு. அணிகள் இருவகையன. ஒன்று புற அணியாம். பிறிதொன்று அக அணியாம். புற அணிகலன்கள் புல்லியரிடத்தும் உண்டு. ஏன்? விலங்குகளுக்கும் அணியலாம். புற அணிகலன்கள் புகழுடையன அல்ல. அவை இம்மையும் மறுமையும் தரா. அக அணிகலன்களே உயர்ந்தவை. அவற்றை முயன்று அணிதலே சிறப்பு. அக அணிகலன்கள் உடையோரே சான்றோர். அவற்றுள்ளும் நல்லன அல்லாதவற்றை நினைத்துழியும்கூட நாணும் இயல்புடைமையே சான்றோர்க்குச் சிறந்த அணி. இத்தகு சான்றோரே மதித்தற்குரியவர்கள்.

நாணுடைமை இல்லையேல், பீடு நடை பிணியாகும். சால்பின்றி—சால்புடையோர் போலக் காட்டிப் பீடு நடை நடத்தலால் வரும் துன்பம் அவராலும் மற்றவராலும் தாங்கமுடியாமையாலேயே பிணி என்ருர். இதனை,

> "அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
> பிணியன்றே பீடு நடை"

என்று குறள் கூறுகிறது.

சிலர், தம்பழி நாணுவர். ஆயினும் பிறர் பழி கண்டு மகிழ்வர். ஏன்? பிறர் பழி காண்பதிலும், பிறர் பழி எடுத்துக் கூறுவதிலும் ஆர்வமும் காட்டுவர். இது சீருடைச் செயலல்ல. உண்மையான நாணுடைமையும் ஆகா. நாணுடைமைக்கு உரியராக உலகம் கருதுவது, தம்பழி பிறர் பழி ஆகிய இரண்டையும் கண்டு நாணுபவரேயாம். இன்றைய உலகியலிலோ, பிறர் பழியில் தம் புகழ் வளர்க்க நினைக்கின்றனர். இந்த மனப்போக்கு புகழினைத் தராததோடு, காலப்போக்கில் பழியினையே தரும் என்பதறிக. இதனை,

> "பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
> குறைபதி என்னும் உலகு"

என்று குறள் கூறுகிறது.

உணவுப் பொருள்களாகிய காய்களும், கனிகளும் விளைவித்தற்குக் காடும், கழனியும் தேவை. காடும் கழனியும் கிடைத்து, அவற்றை உழுது, எரு இட்டு, வித்திட்டு, நீர் பாய்ச்சி வளர்ப்பதவசியம். இவையெல்லாம் எவ்வளவு அவசியமோ, அதைப்போல அதைவிடக் கூடவே அக்கழனிக்கு வேலி அவசியம். காடுகளையும் கழனிகளையும் பெருக்கி, வேலிகள் இல்லாது போயின் பாடுபட்டு வளர்த்த பயிர்கள் அழியும். அது

போலவே, பலர் பல்வேறு வகைப்பட்ட நல்ல குணங்களை அரிதில் முயன்று பெறுகின்றனர். ஆயினும், நாணுடைமை என்ற வேலியிடாமையினால், அவற்றை ஒரோவழி யிழந்து விடுகின்றனர். ஆதலால், சான்றோர் நாணம் என்ற வேலியை அமைத்துக் கொள்ளாது, உலகத்தைப் பெற விரும்பார். நாணம் உடைமையே உயிர்க்குப் பாதுகாப்பு. பழியும் பாவமும் புரிந்து, உயிர்க்குத் துன்பம் விளைவிக்காமல் உயிர்க்குப் பாதுகாப்பளிப்பதால், நாணுடைமை வேலியாகும். ஞாலமும் நாணும் பெரும்பாலும் முரண்படா. அப்படி முரண்பாடு தோன்றின் சான்றோர் ஞாலத்திலிருந்து நாணையே பெறுவர். இதனை,

> **"நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
> **பேணலர் மேலா யவர்"**

என்று குறள் கூறி விளக்குகிறது. இதனையே "பழி யெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" என்று புறநானூறு கூறுகிறது.

உயிர் உடலொடு கூடித் துய்த்து, மகிழ்ந்து வாழ்தல் இன்பமேயாம். பெறுதற்கரிய சிறப்புமாம். எனினும், உயிர்க்குரிய சிறப்பியல்புகளை இழந்து அதன் பின் உயிர் வாழ்தல் சிறப்பன்று. ஆதலால், நாணுடைமையைக் காப்பாற்றுவது உயிரையும் விலையாகக் கொடுப்பர் சான்றோர். இதற்குச் சான்று. அரச நீதிக்காகத் தம் உயிர் கொடுத்த பாண்டியன் நெடுஞ்செழியன். நாணை விலைகொடுத்து உயிர்வாழ விரும்ப மாட்டார்கள், சான்றோர். உயிரினும் நாண் சிறந்ததாகும். இதனை,

> **"நாணால்உயிரைத் துறப்பர் உயிர்ப் பொருட்டால்**
> **நாண்துறவா நாணாள் பவர்"**

என்று குறள் விளக்குகிறது.

சிலர் நாண மாட்டார்கள். அவர்கள் கண்டாரும் கேட்டாரும் வெறுக்கத் தக்க செயல்களையே செய்வர். அறியாமையின் காரணமாகவோ, அல்லது ஆசையின் காரணமாகவோ, தாம் நாணுதற்குரிய செயல்களை நாணமற் செய்வர். இவர்கள் தம் குற்றம் நோக்கி நாணுதொழியின், இவர்களை நோக்கி நாணும், நாணுதலோடன்றி நீங்கும் நாணுடைமையும் அறமும் நீங்கிய வழி பொருளும் நீங்கும். புகழும் நீங்கும்; இன்பமும் நீங்கும். இதனை,

**"பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்க துடைத்து"**

என்று குறள் கூறுகிறது.

தாமே நாண வேண்டியது இயல்பு; ஒழுக்கமும் கூட. அஃதின்றி இவன் செயல் கண்டு பிறர் நாணிய வழியும் நாணதிருப்பது இழிவுள் இழிவு என்பது கருத்து. நாணமற்ற வாழ்க்கையுடையோரை அறம் சேராது என்பது, தெளிவான முடிவு. ஆதலால், நம்முடைய மனச்சான்று தவறு என்றும், செய்யாதே என்றும் இடித்துக் காட்டும் இடங்களில் மனிதன் விழிப்பாக இருந்து திருத்திக் கொள்ள வேண்டும். எல்லாருடைய மனச்சான்றிலும் நாணும் இயல்பும், அறத்தினை எடுத்துக் காட்டும் இயல்பும் உண்டு. இதனையே அண்ணல் காந்தியடிகள் "அந்தராத்மா பேசுகிறது" என்று குறிப்பிட்டார். ஆதலால், நம்முடைய அடிமனம் ஆங்கு உறையும் நல்லுணர்வு, உயிர்க்கு உயிராக உறையும் இறைவன் எடுத்துக் காட்டும் அறத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தராத்மாவின் பேச்சைக் கேட்காமல் இருப்பவர்கள் வாழ்க்கையை இழக்கிறார்கள் என்பதனை நினைந்து நம்மை நாமே நகைத்தும், திருத்தியும் வாழ்க்

கையில் வெற்றி கொள்ள வேண்டும். "ஒழுக்கம் உயி ரினும் ஓம்பப்படும்" என்று முன்னர்க் கூறியது குறள். அதுபோலவே நாணுடைமையும், உயிரினும் சிறந்தது என்று குறள் கூறுகிறது. இவ்விரண்டில் எது உயிரினும் மேலாயது? என்று திருவள்ளுவர் ஆராய்ந்து, ஒழுக்கத் தினும் நாணுடைமையே சிறந்தது என்று கூறுகின்றார். ஒழுக்கக் கேடு தவறுதான். ஆயினும் ஒரோவழி ஒழுக் கத்தில் தவறுகிறவர்கள் மீண்டும் அந்த ஒழுக்கத்தில் முயன்றால், நிலைபெற முடியும். ஒழுக்கத்தில் எளிய ராஞர், பின் ஒழுக்கத்தில் வளர்ந்து ஒழுக்கத்தில் உறுதி பெற்றுப் புகழ்பெற்றோர் பலரைப் பார்க்கிறோம். திரு நீலகண்ட நாயனாரும், அருணகிரி நாதரும் சான்றாவர். நாணுடைமை தவறினால், மீண்டும் வளர்தல் அரிது. தீயனவற்றைக் கண்டு நாணும் இயல்பை நெஞ்சு மறந்து விட்டால், நெஞ்சு கட்டுக்கோப்பும் காவலு மில்லாத திறந்த வீடாகிவிடுகிறது. அங்கு பழியும் பாவமும் தன்னிச்சையாகப் புகுந்து ஆட்டம் போடத் தொடங்கிவிடுகிறது. ஆதலால், நாணும் இயல்பே நல்வாழ்க்கையின் வாசற்படிக் கதவு. அந்தக் கதவுகள் தீயனவற்றைக் காணும்பொழுது மூடாதொழியின், தீயனவற்றிற்கு ஆட்படும். ஆதலால், ஒழுக்கம் இழப் பினும் அவனுடைய குடிப்பிறப்பு ஒன்றினையே கெடுக் கும். நாணுடைமை இல்லையாயின் நலமனைத்தும் கெடும். இதனை,

"குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை"

என்று கூறுகிறது குறள்.

சிலர், "கொள்கையே பெரிது. அக் கொள்கையை எப்படியும் எந்த வகையாலும் நிறைவேற்றிக்கொள்ள லாம்" என்பர், அதற்காக நாணத்தைத் துறந்தும்

கொள்கைக்காகப் போராடுவர். இதுவும் தவறு. கொள்கையைவிடக் கொள்கையைச் சாதித்துக் கொள்ளும் நெறியும் முறையும் தவறானவைகளாக இருக்கக் கூடாது கொள்கைக்காக நாணத்தை இழந்துவிடக் கூடாது என்ற கருத்தும் இந்தக் குறளின் மூலம் பெறப் படுகிறது. இன்றைய சமுதாயப் பொது வாழ்க்கைத் துறைக்கு இந்த அறவுரை எவ்வளவு பயனுடையது என்பதை அன்பு கூர்ந்து எண்ணிப் பாருங்கள்.

நாட்டில் ஆங்காங்கு நடைபெறும் பாவைக் கூத்தைப் பார்த்திருக்கிறோம். அரங்கிலாடும் பாவைகள் ஆட்டப்படுவதால் ஆடுமே தவிர, அதற்கு உயிர்ப்பு மில்லை; உணர்வுமில்லை, அதுபோலவே நாணுடைமையை அகத்திலே கொண்டு வாழாதார் வாழ்க்கை மானுட வாழ்க்கையேயல்ல. அவர்களுடைய வாழ்க்கையெல்லாம், ஆட்டபாட்டங்களெல்லாம் உயிரியக்க வாழ்க்கையல்ல. நாணுகிய உயிர் இல்லாதவரையில், அந்த உயிர்வாழ்க்கை, உயிர் வாழ்க்கையாகவே கருதப் பெற மாட்டாது. அவர்கள் மிரட்டுவதும், உருட்டுவதும் வெறும் பொம்மலாட்டங்கள். அதனால், உயிர்களுக்கு உறுதியுமில்லை; பயனுமில்லை. இதனை,

> **''நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை**
> **நாணால் உயிர்மருட்டி யற்று''**

வன்று கூறிக் குறள் விளக்குகிறது.

ஆதலால், வாழ்க்கை என்ற மாளிகையில் உயிர் சிறக்க வேண்டுமாயின், நாணுடைமை என்ற வாயிற் கதவு திட்பமுடையதாக அமைய வேண்டும். மாளிகையின் கதவு சிறப்புற அமையாதுபோனால், மாளிகையின் உள்ளேயிருக்கும் பொருள்களுக்கும் ஆபத்து. உள்ளே உயிருக்கும் உயிர்பெற்றிருக்கும் உயரிய குணங்களுக்கும் ஆபத்து. அதுபோலவே, உயிர் வாழ்க்கையும், மனம்

என்னும் மாளிகையில் நாணுகிய கதவு உறுதியுடைய தாக அமையாது போனுல், பெற்ற கல்வியும் பேணிய ஒழுக்கங்களும், செய்த தவமும் கெடும். தலைமகனுகிய உயிர் இன்பத்தை இழந்து துன்பத்தில் ஆட்படும். ஆதலால், மனச்சான்றை மதித்து அந்தராத்மாவின் குரலுக்கு மதிப்புக் கொடுத்து நாணுடைமையைப் பேணி பெருமையுடன் வாழ வழி நடத்துகிறது திருக் குறள் உலகம்.

# வள்ளுவர் உலகம் XII

## குடிப் பெருமை காத்தல்

மனிதன் பிறந்தவனுமல்ல; தனித்துவாழப் பிறந்தவனுமல்ல. தாம் பிறந்து வாழும் குடியினருடன் கூடிக் கலந்து, மகிழ்ந்து, வாழ்வித்து வாழ்தலே சீலம் நிறைந்த வாழ்க்கை. தம்மைச் சார்ந்தோர் கிளைத்துச் சாக மகிழ்ந்து வாழ்தல் நாணத்தக்கதாம். தாம் உண்டு மகிழ்வதைவிட குடிசெயல் வகையில் மகிழ்வதும், உண்பதைவிட உண்பிக்க உண்பதே சிறப்பு; உயர்வு. இன்ப உணர்வு கலந்த சுவையும்கூட. அஃதாலன்றோ, ஒருவர்க்குக் குழந்தைப் பருவத்தில் தாயும், இளமைப் பருவத்தில் மனைவியும், முதுமைப் பருவத்தில் மகனும் உண்பிக்கும் பொறுப்பினை—கடமையினை ஏற்றுக் கொள்கிறார்கள். இதுபோக வீட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் திருக்கோவில் திருவிழாக்களிலும் பலர் கூடி விருந்துண்டு மகிழ்தலைக் காண்கின்றோம்; பலர் கூடி உண்பதே சிறப்பல்ல. உணர்வுடன் கூடிய உறவு கலந்து உண்பதே சிறப்பு. 'உறவு கலந்து உண்ணக் கண்டீர்' என்றார் தாயுமானாரும். ஒருவன் தன்னுடைய குடியை உயர்த்தும் பணியில் ஈடுபட்டு, குடி உயரும் வரையில் பசி நோக்காது பணியாற்று

வான். அங்ஙனம், ஆற்றுபவனே மனிதன்; பெருமைக் குரியவன், என்று குறள் பேசுகிறது.

**"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்"**

என்பது குறள்.

குடி செயலுக்கு ஆள்வினையாற்றல் வேண்டும். ஆற்றலைப் பயனுறத் தக்க வகையில் இயக்க நிறைந்த அறிவும் தேவை. இவையிரண்டும் பெயரளவில் இல்லாமல் செயல்பட வேண்டும். சிலர் செயல்படுவர். ஆனல் இடையீடுகள் நிகழும். தொடர்ச்சியின்றி விட்டு விட்டுச் செயல்படுகிறவர்களும் வீழ்ச்சியையே அடைவர். ஓயாது செயல்பட வேண்டும். ஒரு நொடிப் பொழுதும், ஓயாது தொடர்ந்து தொடர்ந்து இடையீடின்றி ஒரு செயலைப் பிறிதொரு செயல் தொடரச் செயல்பட வேண்டும். இதனை,

**"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி"**

என்ற குறளால் அறியலாம்.

தாம் பிறந்த குடியை உயர்த்தும் பணியில் ஈடுபடும்பொழுது தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு வந்து துணை நிற்கும் என்பது குறள் கருத்து. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்க்கையைப் பற்றி ஆயிரம் ஆயிரம் கற்பனைகள்; கனவுகள். இந்த இலட்சியங்களை—இன்ப வாழ்க்கையை அடைய முடியாமல் அல்லற்படுகின்றனர். திருவள்ளுவர் இன்ப இலட்சியங்களை அடைந்து மகிழ, எளிய வழி ஒன்று காட்டுகின்றார். அதாவாது, தன்னுடைய குடி தாழ்ந்து கெடாமல் உயர்ந்து விளங்கப் பணி செய்யும் ஒருவர்க்கு அவர் கருதிய கருத்தும் தானே முடியும்.

குடி செய்தலாகிய சமூக மேம்பாட்டினுக்குரிய பணிகளைச் செய்தல் உயர்ந்த திருத்தொண்டு. அதனு லன்றோ சிவஞானச் செல்வர்களாக விளங்கிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பசி நீக்குதல், நோய் நீக்குதல், திருமணங்கள் முடித்து வைத்தல் ஆகிய குடிசெயற்பணிகளைச் செய்தனர். இன்று சமூகப்பணி என்று கருதுவதற்கும் குடிசெயல் வகைக்கும் பெரிய வேறுபாடில்லை. சமுதாயப் பணி களைச் செய்வதற்குச் சிறந்த சீலம் தேவை. சமூக மேம் பாட்டுக்குரிய பணிகளைச் செய்வதற்குச் சிறந்த சமூக ஒழுக்கக் கூறுகள் ஒருவனுக்குத் தேவை. ஒழுக்க நெறி கள் இருதிறத்தன. ஒன்று தனது மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும் தனது ஒழுக்கங்கள். பிறி தொன்று பிறர் மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய சமூகத்துறைப் பழக்க வழக்கங்கள். பெரும் பாலோர் உடற்சார்புடைய தனது ஒழுக்கத்தில் வெற்றி பெற்று நின்று ஒழுகுவர். ஆயினும் சமூகத் துறை பழக்க வழக்கங்களில் — ஒழுக்கத்தில் அவர் களுக்கு நாட்டமிருக்காது. அதை அவர்கள் ஓர் ஒழுக்கமாகவே கருதுவதில்லை. நம்முடைய நாட்டில் குடி வெறியும், காம வெறியும் மிகக் குறைவு. அடுதலும் கொல்லுதலும் கூடக் குறைவேயாம். ஆயினும் சமூக ஒழுக்கக் கேடுகளாகிய பிரிவினை, பேத உணர்ச்சிகள் 'எனது', 'உனது' என்ற வேறுபாடுகள், பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் மலிந்து கிடக் கின்றன. இதனுல் நமது நாடு தனி மனித ஒழுக்கத்தில் ஓரளவு மனநிறைவு தரத்தக்கதாக இருக்கிறது என் பதையும், ஆனுல் அதே காலத்தில் மனிதகுல ஒருமைப் பாட்டை வளர்ப்பதற்குரிய பொருளியல் ஏற்றத் தாழ்வற்ற சமநிலைச் சமுதாய அமைப்பிற்குரிய சமூக

ஒழுக்கத் துறையில் நாம் மிகவும் பின் தங்கி யிருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. பலரோடு கூடி நோதலும் தணிதலுமின்றி வாழ்வித்து வாழ்தலும், மகிழ்வித்து மகிழ்தலும் ஓர் ஒழுக்கமேயாகும். இந்த சமூக ஒழுக்கத்தில் ஒரு மனிதன் தன்னை ஈடுபடுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னலம் ஒரு நஞ்சு. இந்த நஞ்சினைத் தாங்கி சமூகத்துக்குள் அடி வைக்கின்றவன் தன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதுமில்லை; தன்னலமும் நிறைவேறுவதில்லை; மாறாக சமூகத்துக்கும் கேடு செய்கிறான். உயிர், உடலின் நலனுக்காகப் பொறிகள் சுவைக்காமல், தன் நலனுக்காகச் சுவைக்குமானால், அது பொறிக்கும் கேடு; உயிருடலுக்கும் கேடு. அது போலத் தம்மைச் சார்ந்தோரின் நலனைக் கருதி உழைத்தல் சிறந்த ஒழுக்கமாகும். தம்மைச் சார்ந்தோர் மேம்பாட்டுக்கும் நல்வாழ்க்கைக்கும் உழைப்பதற்குரிய நல்லெண்ணம், நம்பிக்கை, பொறுத்தாற்றல், அடக்கம், எளிமை முதலிய பல்வேறு குணச் சிறப்புக்கள் தேவை. ஒருவர் சமூகத்தில் கலந்து பழகி, சமூக மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்து அதில் வெற்றியும் கண்டு சமூகம் இவரைத் தனது உடைமையாகக் கருதுகிற அளவுக்கு உயர்தல் என்பது ஒரு கலை இல்லை, அதுவே தெய்வீக வாழ்வு! இத்தகைய வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இடையூறாக இருக்கின்ற சமூக ஒழுக்கக் குறைகள், குற்றங்கள் இல்லாதவனாக நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்; பண்படுத்திக் கொள்ள வேண்டும். இங்ஙனம் வாழக் கற்றுக் கொண்டவர்களை உலகமே சுற்றமாகச் சுற்றும். இதனை,

> "குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
> சுற்றமாச் சுற்றும் உலகு"

என்று திருக்குறள் கூறுகிறது.

உலகத்தின் சிறப்புக்கள் நல்லாண்மையின் படைப்புக்களேயாம். அதனாலன்றோ, புறநானூற்றுக் கவிஞர்,

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று கூறினார். நல்லெண்ணம் என்பது பருவுடல் அமைப்பால் மதிப்பீடு செய்யக் கூடியது அல்ல. நல்லாண்மை என்பது ஆள்வினையுடையவராக இருத்தல்; பொருள் செய்யும் துறையில் வெற்றி பெறுதல்; தம்மைச் சார்ந்தோரின் வாழ்க்கையை வளமுறப் பேணிப் பாதுகாத்தல். தம்முடைய குடியினரையும், சுற்றத்தினரையும் தமதென பிறப்பின் சார்பாலும், உறவினாலும் மட்டுமல்லாமல் உணர்வு பூர்வமாகத் தமதாக்கிக் கொள்ளுதல் சிறப்பிலும் சிறப்பு. அதுவே நல்லாண்மை.

பலரோடு கூடி வாழப் பிறந்த மனிதன் சமூகக் கடமைகளை ஒருவரையொருவர் தாங்கும் பணியை, ஒருவரை யொருவர் சாட்டுதல் சொல்லித் தட்டிக் கழிக்கக் கூடாது; எண்ணிக்கையைக் காட்டியும் பணியின் பொறுப்பினைப் பங்கு போடக் கூடாது. "அவர் தரவில்லையே, அவர் செய்யவில்லையே! எனக்கு மட்டும் என்ன வந்தது?" என்றெல்லாம் ஒப்பிட்டுக் கூறுதல் சமூக ஒழுக்கமன்று. இந்த மனப்போக்கு நல்லாண்மையின் பாற்பட்டதுமன்று. சமூக மேம்பாட்டுக்கும் துணை செய்யாது. ஏன்? காலப் போக்கில் தனிமனித மேம்பாடும் தடைப்படும். ஒரு போர்க்களத்தில் பலநூறு ஆயிரம் போர் வீரர்கள் போர் செய்தாலும் அந்த வீரர்கள் அனைவரும் போரினால் வரும் விழுப்புண்கள் அனைத்தையும் தாங்கிக் கொள்வதில்லை. மிகவும் வலிமையும் வீரமும் உடைய வீரனே தாங்கிக் கொள்கின்றான். அதுபோல சமூகத்திற்குள்ளும் பலர் இருந்தாலும் சமூகத்தின் பொறுப்

புக்களை ஏற்று, தாங்கி, பொறுத்துச் செயலாற்று பவன்கண்ணேயே வந்து அமையும். அவர்கள் குடியின் பொறுப்புக்களைத் தாங்குதல் கடமை.

குடிசெயல்—சமூக மேம்பாட்டுக்குரிய பணிகளைச் செய்தல் எளியதொன்றன்று; கடினமானது; காலங் கருதிச் செய்ய வேண்டியது. குடிசெயல் பணிகளுக்குப் பருவம் கிடையாது; நாள் பார்க்கக்கூடாது. 'இன்று' 'நாளை' என்று நாள் பார்ப்பவர்கள் நாளைத் தள்ளு வார்களே தவிர, நல்ல காரியங்களைச் செய்யமாட் டார்கள். நம்முடைய சமூகத்தில் நாள் பார்க்கும் கெட்ட பழக்கம் நிலைத்திருக்கிறது. "நாள் உதவி செய்வதுபோல், நல்லவன் உதவி செய்யமாட்டான்" என்று சமாதானம் சொல்கிறார்கள். இந்தப் பழமொழி நாள் பார்ப்பவர்களுக்குச் சாதகமானதல்ல. இங்கு நாள், நாழிகையைப் பொறுத்ததுதான். ஆம்! அறிவு, செல்வம், சீலம், புகழ் அனைத்தையும் நாம் நாள் என்ற களத்தில் நின்றுதானே ஈட்டுகிறோம். இந்த நாளைச் சார்ந்ததுதானே எழுச்சியுடைய இளமை! அஃதில்லாத முதுமை! இளமை துணை செய்வதுபோல் முதுமை செய்ய முடியுமா? ஆதலால், நாள் பார்த்தல் என்பது நாளைக் கச்சிதமாகக் கணக்கிட்டுப் பயன்படுத்தல் என்றே பொருள் கொள்ள வேண்டும். அப்படியின்றி நாளை 'நல்லநாள் கெட்ட நாள்' என்று பகுத்துப் பார்க்கக்கூடாது. நாள் நம்மைக் கெடுத்து விடுவதில்லை; நாளை நாம் கெடுத்து விடுகிறோம். அதனால் நாள் கெட்டது அல்ல; நாமே கெட்டவர்கள். அதனாலன்றோ, திருஞானசம்பந்தர்,

**"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டு முடனே...**
**அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே"**

என்று அருளிச் செய்தார். திருவள்ளுவரும் குடிசெய லுக்குப் பருவம் பார்த்தல் தவறென்று கூறுகிறார்.

உயிரினைச் சார்ந்த உள்ளம் 'குபு குபு' என்ற சுறு சுறுப்புக்குரியது; உள்ளக் கிளர்ச்சிகள் நிறைந்தது. சோம்பலும், அலுப்பும், சலிப்பும் மனிதனின் செயற் கையேயாம். சிலர் பொருள் செய்கிறார்கள்; சிலர் புகழ் செய்கிறார்கள். சிலர் சோம்பலையும் முயன்றும் செய்கிறார்கள்! ஐயோ, பாவம்! இதனைத் திருவள்ளு வர் 'மடி செய்து' என்று நகைத்துப் பேசுகிறார். சோம்பலைச் செய்வான் சுற்றத்தைப் பேணமாட்டான். அதனால் குடி செய்தலும் ஆகா.

சிலர் எடுத்ததற்கெல்லாம் மானம் போகிறது என்பர். ஆனால், அவர்களையே மானம் எங்கிருக்கிறது என்று கேட்டால் சொல்லத் தெரியாது. அவர்களில் பெரும்பாலோருக்கு மானம், வேட்டியில் தானிருக் கிறது. ஒரு சிலர் தவறுகளைக் கண்டபோது இடித்துக் கடிந்து சொல்வதில்கூட மானம் போய்விடுவதாகக் கருதுகிறார்கள். நாடாளும் அரசனுக்கே இடித்துச் சொல்லும் இணையற்ற நட்புக்குழாம் தேவையென்பது வள்ளுவர் கருத்து. ஆதலால் மானம் என்பது ஒருவர் தனிப்பட்ட முறையில் நம்மை விருப்பு வெறுப்புக் களின் காரணமாக மதிப்பதிலோ அவமதிப்பதிலோ இல்லை. உண்மையில் மானம் நம்முடைய வினையின் கண் தங்கிக் கிடக்கிறது. நம்முடைய வினையின் மாட்சி, பயன் ஆகியன பற்றித் தொடர்பாகப் பிறர் மதிக்கும் மதிப்பீடுகளே நமக்கு மானமாகும். நம் முடைய நல்லாண்மையின் காரணமாக நாமும், நம் முடைய குடியினரும் ஆகிய அனைவரும் வளத்துடன் கூடி வாழ்வோமாயின், ஆங்கு மானமிருப்பதாகக் கருத்து. நம்மைச் சுற்றி வறுமை காணப்படுமாயின்

நம்முடைய குடியினர் வறுமையால் வாட்டமுறுவாராயின் ஆங்கு நல்லாண்மையுமில்லை; மானமுமில்லை. சூழ்ந்திருப்போரின் வறுமை அங்கு வாழ்வோரின் மானத்தைப் பறை சாற்றிக் கப்பலேற்றிக் கொண்டிருக்கும். ஆனால் இன்றோ கொடுமை! ஒரே குடியைச் சார்ந்த ஒருவன் வளத்துடன் வாழ்கிறான்; பிறிதொருவன் வறுமையில் வாடுகிறான். அவனுடைய வறுமையை இழித்துப் பேசி, தன்னுடைய மானத்தைத் தானே விலை கூறுகிறான். பெருமை, சிறுமை, மதிப்பு, மதிப்பில்லாமை ஆகியவைகள் தொடர்புடைய மான உணர்ச்சிகள்கூட, குடி செய்வானுக்கு இருக்கக்கூடாது என்பது வள்ளுவர் கருத்து. பிறப்பால், சார்பால், அந்நியனாக இருப்பவர்களிடத்திலேயே மானம் கருதுதல் வேண்டும். அதுபோலத் தன்னொழுக்கத்திலேயே மானம் போற்றுதல் வேண்டும். அதனை விட்டுவிட்டு, நம்மைச் சார்ந்த ஒருவர் மதிக்கத் தவறிவிட்டமையை பெரிய மான உணர்ச்சியாகக் கருதக்கூடாது. இதனை,

**"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்"**

என்று எவ்வளவு அழகாகக் கூறுகிறார்.

தாம் பிறந்த குடியினுடைய—குடும்பத்தினுடைய குற்றங்களை மறைக்கின்ற இனிய பணியைச் செய்பவர்கள் துன்பங்களை அடையலாம். அவர் தம் வாழ்க்கை இன்பத்திற்கு மாறாகத் துன்பத்திலேயே சுழன்று அல்லற்படலாம். அதுவும் போரில் விழுப்புண் படுதலைப் போலப் பயனுடையதே என்று திருவள்ளுவர் கூறுகிறார். ஆதலால், இழப்புக்களையும் துன்பங்களையும் காட்டி ஒருவர், குடி செயலிலிருந்து விலகக்கூடாது. பொதுவாக அறியாமை, பொருளற்ற

வறுமை, நோய் இவற்றினுல் வரும் துன்பமே துன்பமெனக் கொள்ளத்தக்கன. மாருக ஓயாத உழைப்பு, உதவுதலால் வந்த துன்பம் ஆகியன துன்பமேயல்ல. அவற்றினும் சிறந்த இன்பம் வேறு இல்லை. இதனை,

**''இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு''**

என்று திருக்குறள் பேசுகிறது.

ஒரு குடியில் ஒருவரோ, இருவரோ நல்லாண்மையுடையவராக இருத்தல் போதாது. ஏதோ ஒரு துன்பம் தோன்றி அந்த ஒருவனும வீழ்வானுனுல், அடுத்து அந்தக் குடியைத் தாங்கி நிறபாரில்லாது போனுல், அந்தக் குடி கெடும். ஆதலால், குடியினைச் சார்ந்த பலரும் நல்லாண்மையுடையவராகக் குடி செயற் பாங்குடையவராக வளர வேண்டும். ஒரு மனிதனுக்குத் தன்னுடைய குடிசெயல் பணியில் ஈடுபடுதலும், அந்தப் பணியை இடையீடின்றி முடித்தலும் பெருமைக்குரியது என்பதையும், ஆன்ற அறிவும், ஆள்வினையுடையோரால் குடி உயர்ந்து விளங்கும் என்பதையும் குடி செய்வார்க்குத் தெய்வம் துணை செய்யும் என்பதையும், குடியைத் தாழாது காப்பாற்றுவோனுடைய கருத்துக்கள் தாமே முடியும் என்பதையும், குடியோடு கூடித் தழுவி வாழுதற்குரிய சிறந்த குண நலன்கள் பெற்றவனை, மற்றவர்கள் சுற்றமாகச் சூழ்வார்கள் என்பதையும், குடி செய்வார்க்கு இல்லை பருவம், மடி, மானம் என்பதனையும் தேறத் தெளிந்தோம். நம்முடைய குடி, தமிழ்க்குடி; திருவள்ளுவர் பிறந்து வாழ்ந்த குடி. நம்முடைய குடியினை நாம் ஆக்க வேண்டும் என்ற உணர்வு நலம் நம்மை உந்திச் செலுத்துவதாக.

# வள்ளுவர் உலகம் XIII

## வேளாண்மை

உலகில் இன்னமும் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றார்கள். வறுமையில் வாடி ஏக்கமுற்று வாழ்ந்தும், வாழாதவராக இருப்பவர்களைப் பார்த்து, நிலமகளாகிய அன்னை, எள்ளி நகைக்கின்றாள். உண்டு உடுத்து மகிழும் பொருட்செல்வத்துக்கு நிலமே அடிப்படை. இந்த நிலம் தம்மை அணுகிக் கைவினையால் முயன்று நிற்போரை ஒன்றுக்குப் பத்தாக அள்ளிக் கொடுத்து வாழ்விக்கும் இயல்புடையது. ஆயினும், பலர் கைவினை கொண்டு நிலத்தையணுகிப் பெறுவன பெறாமல் கைகளை விரித்து ஏங்கி—தராதார்மாட்டு நின்று இரந்து கேட்டு இழிநிலை எய்துகின்றனர். இது கொல்லைப்புறத்தில் கோபுரமனைய செல்வமிருக்கக் கண்டும், காணாமல் கொல்லும் வறுமையில் வாடுவது ஒத்தது. இதனை,

> **"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
> **நிலமென்னும் நல்லாள் நகும்"**

என்று ஓதுகின்றார்.

உலகில் பல்வேறு தொழில்கள் உண்டு. ஆயினும் உழவுத் தொழிலே தலையாய தொழில். மற்றத்

தொழில்கள் வழி கிடைப்பன இல்லாமலும் வாழ முடியும். ஆனுல், உணவின்றி வாழமுடியாது. ''உண்டி முதற்றே உலகு'' என்றும் கூறினுர்கள். ஆதலால்,

**''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம், அதனுல்**
**உழந்தும் உழவே தலை''**

என்ருர் திருவள்ளுவர். மேலும் பல்வேறு தொழிலுடையாரையும், மற்றும் எல்லாரையும் தாங்கி நிற்கும் பெருங்குடி, உழவர் பெருங்குடியேயாகும்.

**''உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்ருது**
**எழுவாரை யெல்லாம் பொறுத்து''**

என்பது குறள். மிகப்பெரிய மணிநெடுந்தேராக இருந்தாலும் அந்தத் தேரின் இனிய செலவுக்கு அச்சாணி தேவை. அதுபோல, மாடமாளிகை, கூட கோபுரங்கள் மற்றும் பல்வேறு வகையான மேம்பட்ட உலகாயினும் உழவுத் தொழிலாகிய அச்சாணி இந்த உலகத்திற்கு இன்றியமையாதது.

தம்முடைய தேவைகளைத் தாமே உழுது உற்பத்தி செய்து, உண்டு வாழ்வோர், பிறரைத் தொழவேண்டிய அவசியம் இல்லாதவர்கள். அவர்களுக்கு இச்சை முகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை; பச்சைமொழி பகர வேண்டிய அவசியமில்லை. உழவர் வாழ்க்கை தன்மானம் நிறைந்த தகவுடைய வாழ்க்கையாகிறது. ஆனுல், இன்றே உழவனுக்கும் நிலத்தின் உரிமைக்கும் நீண்ட இடைவெளியிருப்பதால், உழவனின் வாழ்க்கை இத்தகு சிறப்புடையதாக இல்லை. எனினும், உரிமையுடையோனுக்கும் உணவு தேவையாதலால், இவனது மானம் ஓரளவு காப்பாற்றப்படுகிறது. அதுவும் மிகப் பெரிய அளவு நில உரிமை குவிந்துள்ள இடத்தில் இயலாமற் போகிற நிலைமையை எண்ணி வருந்த வேண்டியதிருக்கிறது. ஆனுலும் விடுதலைக்குப் பிறகு நம்

முடைய நாட்டுச் சுதந்திர அரசு, உழவர் பெருங்குடியின் வாழ்க்கை நிலைத்து நின்று உயரப் பல்வேறு புதிய சட்டங்களைச் செய்தது. அதன்வழி ஓரளவு முன்னேற்றம் காணப்பெற்றிருக்கிறது. உழவுத்தொழில் சுதந்திரமான—தகுதியுடைய தொழில். ஆனால், மற்ற வாழ்க்கைத் துறைகளோ அப்படியல்ல. தொழுதலும் பின்செல்லும் பிறதொழில்களோடு இணைப்புடையன. இதனை,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று குறள் ஓதுகிறது. இளங்கோவடிகளும் "வீழ்குடி உழவர்" என்று உழவர் பெருங்குடியை உயர்த்தினர்.

நாட்டை ஆளும் அரசின் குடை தாழாது, பேரரசுகளையும் தன்னுள் அடக்கிக் காட்டும் ஆற்றல் உழவுத் தொழிலுக்கே உண்டு. கழனிகளில் கிடக்கும் கதிர்களின் நிழலே, அரசுக் குடையின் நிழலுக்கு அரண் செய்கிறது. கதிர்கள் நிழலே கொற்றவன் குடைக்கு ஆண்மையும், தண்ணளியும், கொடையும் வழங்குகின்ற பெருமையுடையதாகும். அதனாலன்றோ,

> "பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
> ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என்றது புறநானூறு.

> "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
> உழவிடை விளைப்போர்"

என்றார் இளங்கோவடிகளும்.

இன்று நம்முடைய நாட்டைப் பற்றி வருத்தும் துன்பமும், உணவுப் பற்றுக் குறையேயாகும். இந்த உணவுப் பற்றுக்குறை காரணமாக நம்முடைய மக்கள் அல்லற் படுகின்றனர். வெளி நாட்டில் உணவுப்

பொருளை வாங்குவதன் மூலம், நமது அந்நியச் செலா வணி முடைப்படுகிறது. ஆதலால், இன்று நம்முடைய தாய் நாட்டுக்குச் செய்யும் உயர்ந்த பணி, உணவு உற்பத்தியைப் பெருக்குதலேயாகும். இன்று நமது தாய் நாட்டின் வலிமை, உணவு உற்பத்தியிலேயே யிருக்கிறது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

தம் கைகளால் தாமே உழுது உண்டு, வாழ்க்கை நெறியினை மேற்கொண்டோர் சிறந்த வேளாண்குடி மரபினர். அவர்கள் இல்லையென்று இரப்பவர்களுக்கு உள்ளதை 'இல்லை'யென்று ஒளிக்காது வழங்கும் இயல் பினர். உழவுத் தொழில் மூலம் வரும் செல்வம், காசுச் செல்வத்தைப் போல, இறுகிய மனத்தை உண்டாக் காது. காரணம், உழவுத் தொழில் மூலம் வரும் செல்வம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வரும் செல் வம். மற்றச் செல்வங்களை அப்படி உறுதியாகச் சொல்ல முடியாது. ஆதலால், பெரும்பாலும் உழவர் குடிப் பரம்பரையினராக வந்த வேளாளர் பெருங்குடி மக்கள் வரையாது வழங்குவர்; விருந்தோம்புவர்; உண் பித்து உண்பர். திருஞான சம்பந்தரும், "இரப் போர்க்குக் கரப்பிலா" என்று உழவர் பெருங்குடியை வாழ்த்துகிறார்.

உழவுத் தொழிலுடையோர், உழவுத் தொழிலை மறந்துவிடுவாராயின் உலகம் தலைகுடுமாறும். மக்கட் சமுதாயம் உண்ண உணவின்றி அல்லற்பட நேரிடும். ஏன்? முற்றத்துறந்த முனிவர்களேயானாலும் அவர்தம் வாழ்க்கையும் அல்லற்படும். துறவிகளும் தாம் கொண்ட ஒழுக்கத்தில் நிலைநிற்றல் அரிது. இதனை,

> **"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
> **விட்டேமென் பார்க்கு நிலை"**

என்றார்.

ஆக, சுற்றிச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தாரையும், நாடி வரும் விருந்தினரையும், நாடு காக்கும் அரசையும் அருளறம் பூண்ட துறவிகளையும் காப்பாற்றும் உயர்வு நலம் சிறந்த தொழில் உழவுத் தொழிலேயாம்.

திருவள்ளுவர் வழிவழி வேளாண்மைத் தொழில் சிறந்த தமிழ்க் குடியில் பிறந்தமையால் உழவுத் தொழில் நுட்பத்தையும் பேசுகிறார். நிலத்தை நல்ல இளகிய ஈரப் பதத்தில் ஆழமாக உழவேண்டும். அங்ஙனம் குறைந்தது நான்கு தடவையாவது உழவேண்டும். ஓர் உழவுக்கும் பிறிதோர் உழவுக்குமிடையில் நனைதலும், உழுதலும், காய்தலும் நிலத்திற்கு நல்லது. உழுத புழுதி காயவேண்டும். நிலத்தில் ஈரமும், காற்றும் கலந்திருப்பதன் காரணமாக 'மாய்ச்சர்' என்ற பொருள் கதிரவன் ஒளியால் காய்தலின் மூலம் எடை குறையும். அங்ஙனம், ஒரு பலம் புழுதி, கால்பலம் புழுதியாகக் குறைகிற அளவு காய வேண்டும் என்று கூறுகிறார். இங்ஙனம் உழுது புழுதியெடுத்து அந்தப் புழுதியைக் காயப்போட்டு வேளாண்மை செய்தால், பிடி எருவும் போடாமல் நன்றாக விளைவிக்கலாம். கதிர்ச் செடிகளின் வேர்கள் நிலத்தினூடே பரவிப் பணைத்து வளர்ந்து அதிகப் பயனைத் தரும். இதனை,

> **''தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
> **வேண்டாது சாலப் படும்''**

என்று குறள் கூறுகிறது.

திருவள்ளுவர் நல்ல உளவியல் வல்லுநர். நம்முடைய உளத்தின் இயல்பு ஒருசேரப் பல கடமைகளை எடுத்துக் கூறினால், கடமைகளின் சுமை கருதிச் செயற்படத் தயங்கும். அதற்கு மாறாக ஒன்றன்பின் ஒன்றாக முன் சொன்ன கடமையில் உளம் சென்று பற்றிச்

செயற்பட்டு நிற்கும்பொழுது, ஊக்கமும் மகிழ்ச்சியும் உளத்திடை இருக்குமாதலால், பிறிதொரு கடமையை எடுத்துக் கூறினுல், எளிதில் ஏற்றுச் செய்யும் இயல்பு உள்ளத்தின் பாங்காகும். அங்ஙனம் கூறும்பொழுது, உணர்த்தும் ஒவ்வொரு கடமையினையும் உயர்த்திக் கூறுதல் உள்ளத்தின்கண் ஊக்கக் கிளர்ச்சியும் எழுச்சியும் தோன்றவேயாகும். முன் ஒன்றினைப் பெரிதுபடுத்தி, பின்னை அதனினும் இது நன்றென்று கூறுதல் மேன்மேலும் உயிரினை—உள்ளத்தினை உந்திச் செலுத்தும். இந்த வகையில் உழவுத்தொழிலின் நுட்பத்தினை,

> ''ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு''

என்றோதுகிறார்.

உழுதலினும் சிறப்பு எருவிடுதல்; அதனினும் சிறப்பு களை யெடுத்தல்; அதனினும் சிறப்பு நீர்ப் பாய்ச்சுதல்; அதனினும் சிறப்பு விலங்குகளாலும் பூச்சிகளாலும் அழிவு வராமல் பாதுகாப்பது என்று எடுத்தோதும் நுட்பத்திறன் எண்ணி மகிழத்தக்கது. எரு இடுதல் மிகமிக அவசியமான ஒன்று. அதிலும் இயற்கை உரமிடுதலே சிறப்பு. பசுந்தழை உரமும், சாணம் குப்பைகளால் தயார் செய்யப்பெற்ற 'கம்போஸ்ட்' உரமும், நிலத்திற்கு மிகவும் ஏற்ற உரம். இத்தகைய உரங்கள் நிலத்திற்கும் பூசாரம் தருகிறது. அதே நேரத்தில் ஒருசேரப் பயிர்களுக்கும் ஊட்டச்சத்து கொடுக்கிறது. ஆதலால், இயற்கை எரு இடுதலே சிறப்பு. இயற்கை உரமிடுவதில் கொஞ்சம் குறைவாக உரமிட்டு விட்டாலும் கூடக் கேடு ஒன்றுமில்லை. ஆனுல், அமோனியம் சல்பேட், யூரியா போன்ற நவீன உரங்கள் இவ்வளவு சிறந்த பயன்களைத் தருவதில்லை. இந்த நவீன உரங்கள் பயிர்ச் செடிக்கு ஊட்டம் தருவ

தில்லை. நிலத்தில் ஏற்கனவே இருக்கின்ற உரத்தை— பயிர்ச் செடிகள் எடுத்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருப்பதை, பயிர்ச் செடிகள் எடுத்துக் கொள்ளும் வகையில் மாற்றித் தரும் வேலையைத்தான் இந்த நவீன உரங்கள் செய்கின்றன. இதை விவசாய வல்லுநர்கள் "கிரியா ஊக்கி" என்றே சொல்லுகின்றனர். ஆதலால், நவீன உரங்களில் நிலத்திற்கும் ஊட்டமில்லை; பயிருக்கும் ஊட்டமில்லை. மாறாக நிலத்தில் உரமேயில்லாதபோது, நவீன உரத்தை யிட்டால் பயிர் வளராமல் கருகிப்போகிறது.

"குப்பையில் கோடி பொன்" என்ற நமது நாட்டுப் பழமொழி, மிகச் சிறந்த அனுபவ வாக்காகத் திகழ்கிறது. மிகப் பரந்த இயற்கையின் வடிவமாக இயங்கும் திருவருள் எந்த ஒன்றையும் அழிப்பதில்லை; அழிய விடுவதில்லை. எந்த ஒன்றும் மாறுதலும், பயன்படுதலும் இயற்கையின் நியதி; திருவருள் சட்டம். ஆதலால், குப்பையும் கூளமுமே சுவைத்து உண்ணத் தக்க காய்களாகக் கனிகளாக மாறி வளரும் அதிசயத்தை என்னென்போம்; ஆதலால் பசுந்தழை உரச் செடிகளை வயல் வரப்புகளிலும், தோட்டக்கால் வேலிகளிலும் நிறையப் பயிரிடுங்கள். குப்பையினைக் கூளத்தினைப் பத்திரமாகக் குழியிலிட்டுப் பொன்னாக்குங்கள்! இது வள்ளுவரின் ஆணை!

பயிர்கள் வளரும்பொழுது களையும் வளரும். களையெடுக்கத் தவறினால் பயிரின் சாப்பாட்டைக் களை சாப்பிட்டுவிடும், உயிராற்றலுக்குரிய உணவை, ஊளைச் சதை சாப்பிடுவதைப் போல! ஆதலால், களை குறையாக எடுக்க வேண்டும். வாடாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின் வளரும்பொழுது இயற்கையின் மாறுபாட்டங்களால் வரும் பூச்சி நோய்களிலிருந்தும்,

விலங்குகளிடமிருந்தும் பயிரைக் காப்பாற்றவேண்டும். விவசாயத்தின் பல்வேறு துறைகளையும் முறைப்படுத்தி, இனிய எளிய முறையில் ஒன்றே முக்காலடியில் எடுத்துச் சொன்ன ஆற்றல் வியத்தற்குரியது.

நிலம் என்னும் நல்லாள், பெண்ணுக்குரிய இயல்புகளனைத்தும் நிறைந்தவள். புறத்தில் கடினமாகத் தோன்றினாலும், அகத்தில் மிகமிக மெல்லியள். தன்னையுடையானை எழில்பயில் கோலங்களாலும், பூத்துக் குலுங்கும் மலர்களாலும் சுவை நிறைந்த காய்களாலும், கனிச் சாறுகளாலும் இன்பவெறியூட்டி மகிழ்விப்பவள். ஆயினும், அவளையுடையவன் நாள்தோறும் அவளை அணுகிக் கண்களால் நோக்கிப் பழகித் தன்னுடைய கைகளால் அவளை ஒப்பனை செய்யத் தவறின் அவளுக்கும் பொல்லாத கோபம் வந்துவிடும். அவள் அகத்தே ஊடி விடுவாள்; அதாவது மாறுபாடு கொள்வாள். காதலனுக்குக் காத்திருக்கும் காதலியை ஏவலாள் போய் நிறைவு செய்ய முடியுமா? ஏவலாளனைக் கண்ட காதலியிடத்தில்தான் எழில் நகை அரும்புமா? அல்லது ஏவலாளன் மூலம்தான் நன்கலம் பெற முடியுமா? அதுபோன்றதே நில உரிமையாளனுக்கும், நிலத்திற்குமுள்ள உறவு என்கிறார் திருவள்ளுவர். இதனால் நிலம், உழுவோனிடத்திலேயே இருக்க வேண்டும். உழுவோனுக்குரிய நில உரிமையே நியாயமானது; இன்பமானது; வளம்பல படைத்துத் தருவது என்று வள்ளுவம் கூறுகிறது. இன்றோ, நமது நாட்டில் நில உரிமைக்கும் உழவுக்கும் பல இடங்களில் உறவில்லை. "மெரீனா" கடற்கரையில் உலாவி மகிழ்வோர், தஞ்சைத் தரணியில் நிலம் பெற்றிருக்கின்றனர். நிலம் என்னும் நல்லாள் எப்படி வளர்வாள்? அவளைப் பார்ப்பார் யார்? அவள் வயிற்றுப் பசிக்கு உரமிடுவார்

யார்? அவள் திருமேனியைத் தண்ணீரில் நனைத்துக் குளிப்பட்டுவார் யார்? களையாகிய நோய் கண்ட போது களைவது யார்? இத்தனை அவலங்களுக்கிடை யேயும் நிலமென்னும் நல்லாள் செந்நெல் கொழிக்க வேண்டும்; செங்கரும்பு தரவேண்டும், என்று கேட் டால் தருவாளா? ஏதும் செய்யாது இன்பத்திற்கு மட்டும் காதலியிடத்தில் உரிமை கொண்டாடக் காதல னுக்கு ஏது உரிமை? நிலமென்னும் நல்லாளை நாடாமல் அவளை உழுது பண்படுத்தி உவகை தராமல்—உற்ற பசிக்கு உரமென்னும் சோறிடாமல்—உற்ற தண்ணீர் வேட்கைக்குத் தண்ணீர் தராமல்—நோய்க்கு மருந் திடாமல் நிலமென்னும் நல்லாளிடத்தில் பயன் காண முடியாது. ஆதலால், எழுமின்! கதிரவன் எழுவதற்கு முன் எழுமின்! நிலமென்னும் நல்லாளைக் கையில் ஏருடன், தலையில் எருவுடன் ஓடிச் சென்று காண்மின்! உறவு கொண்மின்! உழுமின்! நீவிர் வாழலாம்! உலகமும் வாழும்!

# வள்ளுவர் உலகம் XIV

## வறுமையின் கொடுமை

உயிர்கள் நுகரும் இயல்பின. நுகர்ந்து அனுபவித்தல் உயிர்களின் பிறப்புரிமை. உயிர்கள் பூரண வளர்ச்சி பெருத நிலையில் உடல் தேவைகளையே நுகரும். வளர்ச்சி பெற்ற நிலையில் திருவருளையும் சுவைத்து நுகரும். உயிர் உடலிடைத் தங்கிப் பயிலும் வாழ்க்கைக்கு நுகரும் பொருள்கள் தேவை. அவை யாதொன்றும் இல்லாது அல்லற்படுவது வறுமை யாகும். வறுமை, இன்பத்திற்கும் கடவுளுக்கும் கொடிய பகையாகும். மாணிக்கவாசகர் வறுமையைத் தொல்விடம் என்ருர். வறுமையைப்போல் உலகில் கொடியது வறுமையேயாம், என்பது திருவள்ளுவர் முடிபு.

> **"இன்மையின் இன்ஞதது யாதெனின் இன்மையின்**
> **இன்மையே இன்ஞ தது"**

என்பது குறள்.

வறுமை என்பது என்ன? வாழ்க்கையின் தேவைகள் பலதிறத்தன. ஆஞலும், அவசியம்—அவசியமின்மையைக் கருதாமல் பலர் நிறைய ஆசைப்படுவார்கள். அவசியமில்லாதவைகளைக் கருதி அவை கிடைக்காதபோது, அதையும் வறுமை என்று கருதி

அல்லற்படுவார்கள் சிலர். ஆசையும் தனித்து வருவது அல்ல. அதற்குப் பல தோழமைகள் உண்டு. அலையின்பின் அலைமோதும் வெள்ளத்தை ஆசைக்கு உவமிப்பர் மாணிக்கவாசகர். ஆக வறுமையின் மறு பெயர் ஆசை என்றும் சொல்லலாம். ஆசையினால் வரும் வறுமை குடியின் உறவையும் கெடுக்கும்; குடியையும் கெடுக்கும்; அழகையும் கெடுக்கும்; வலிமையையும் கெடுக்கும்; புகழையும் கெடுக்கும். இதனை,

**''தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை''**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

வறுமைத் துன்பத்தால் உறக்கமும் வாராது. நெருப்பினுள்ளும் கிடந்து தூங்கலாம். ஆனால் வறுமையில் தூங்க முடியாது என்று கூறுகிறார் திருவள்ளுவர். நெருப்பு உடம்பை மட்டும் சுடும். வறுமையோ உயிரையும், உயிருணர்வையும் சுடும். ஆதலால் வறுமைத் துன்பத்தில் கண்ணை மூடவும் முடியாது என்கிறார் திருவள்ளுவர்.

**''நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பாடு அரிது''**

என்கிறார்.

நேற்று மகிழ்ந்த ஒன்றினை மீண்டும் அடைந்து மகிழ விரும்புவார்கள். ஆனால் வறுமையோ வாட்டுவது. அதை மீண்டும் யார் விரும்புவார்? வறுமையில் வாடுகிறவர்கள் வறுமையின் வழிச் சுவட்டைப் பார்த்தாலும் அஞ்சுவர். இதனை,

**''இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு''**

என்று கூறுகின்றார்.

வறுமை தனித்து வரும் துன்பமல்ல. வறுமைக்கு நிறையப் பரிவாரங்கள் உண்டு. வறுமை தன்னுடைய பரிவாரங்களுடன் வந்து ஆக்ரமித்து அழித்து நரகத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். வறுமையைத் தொடர்ந்து கவலை வரும்; கவலையைத் தொடர்ந்து சோம்பல் வரும்; பின் நோய். இப்படி ஒன்றன்பின் ஒன்ருகத் தொடரும். வறுமையின் நுழைவாயிலை அடைந்தால் மற்றத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறலாம். இதனை,

**''நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரை**
**துன்பங்கள் சென்று படும்''**

என்கிருர்.

வறுமை, பரம்பரையாக வந்த பண்பாட்டையும் கெடுக்கும். நல்ல குடியில் பிறந்தோர் எப்பொழுதும் சோர்வின்றி இருப்பர்; நல்ல சொற்களையே பேசுவர்; ஆயினும் வறுமை வந்துற்றபோது சோர்வடைவர்; தகாத சொற்களைப் பேசுவர். இதனை,

**''இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்''**

என்று கூறுகிருர்.

கற்றுணர்ந்து மெய்ப்பொருள் கண்டாராயினும் அவர் வறுமையினராயின் அக்கல்வி பயன்படா. சிறந்த மெய்ப்பொருளை நன்ருக உணர்ந்து கூறினுலும் பயன்படாது. கேட்பவர்கள் கேட்கமாட்டார்கள். இவர் தம் சொற்களைக் கேட்பவர்கள், இவர் தம் குறையைக் கேட்டு, அக்குறையை நிறைவு செய்ய வேண்டியதிருக்குமே என்று கருதி, இவரைக் கண்டாலே ஒதுங்கி ஒளிந்து விடுவார்கள். அப்படியே கேட்டாலும், அவர்கள் நன்குணர்ந்து சொன்னுலும்,

பரிவோடு கூறினாலும் அதைப் பிழைப்புக்கு வழி யென்றே கருதுவர். ஆதலால், வறுமையாளரின் கல்வி பயன்படாது. அவர்தம் சொல்லும் பயன் படாது. கல்லாதவர்களாக இருந்தாலும் வெள்ளை யப்பன் இருக்குமானால், அவர்தம் சொற்கள் மிகச் சிறந்த கல்வி கேள்வி ஆயதாக நாட்டு மக்கள் கருது வார்கள். ஆதலால், கல்வியும் கருத்தும் பயன்பட வேண்டுமானாலும் வறுமையைத் தொலைக்க வேண்டும். ஆனால் இன்றோ, கல்வியும் கருத்தும் வாணிகமாக்கப் பெற்று வருகின்றது. அதனால்தான் நாட்டில் நாள் தோறும் எண்ணற்ற மேடைகளில் சொல்லப்படும் சொற்கள் பயன் தராமல் போகின்றன போலும்! இதனை,

> **"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
> **சொற்பொருள் சோர்வு படும்"**

என்றார்.

வறுமை அன்புணர்ச்சிகளைத் தொட்டுத் தூண்டாது. ஒரோவழி தூண்டப் பெற்றாலும் அந்த அன்பு செயல்பட வழியில்லை. வறுமையின் காரணமாகப் பயன்படாத அன்பினை ஏற்றுக் கொள்பவர் யார்? காரியமற்ற அன்பு, விசுவாசம், உண்மை ஆகியன அனைத்தும் பயனற்றவையேயாம். வறுமை அன்பினைத் தடை செய்தலோடு, அறத்தினையும் தடை செய்யும். வறுமை அறத்தோடு இயைபில்லாதது; சார்பில்லாதது. வறுமையாளன் வாழ்க்கை பெரும் பாடாகிவிடும். ஆதலால் நாட்டில் வறுமையை வைத்துக் கொண்டு அன்பு வளர வேண்டும்; அறம் வளர வேண்டும்; ஒழுக்கம் வளர வேண்டும் என்றெல்லாம் வாடாத வயிற்றினையுடையோர் அணி, பிரச்சாரம் செய்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள்

சமாதானம் கூறுகிருர்கள், "வறுமையில் செம்மை" என்று. அவர்கள் கூற்றுப்படியே வறுமையில் செம்மை யாக இருக்கலாம். அது கோடியில் ஒருவருக்கே சாலும். அது பொது விதியல்ல. மேலும் பழமொழியின் நுண் பொருள், 'வறுமை நிலையில் வாடாமல் செல்வம் காண முயற்சிக்க' என்பதேயாகும். அன்பிற்கும் அறத்திற்கும் துணை செய்யாத வறுமையுடைய ஒருவனை சமூகம் உறவு கொண்டாடாது. பிறப்பினுல் உறவினராயினும் அது அவர்களுக்கு நினைவிருக்காது; மறந்து விடுவார்கள். வறியன் எடுத்துக் கூறினுலும் "அப்படியா?" என்று பார்த்தும், பாராமலும் கேட் பார்கள். மற்றவர்கள் மட்டுமா? ஏன்? ஈன்ற தாயின் கதி என்ன? உலகில் தாயன்பே தலையன்பு. ஈரிரு திங்கள் சுமந்து, ஈன்று புறந்தந்து எடுத்து மகிழ்ந்து விளையாடி, பாலூட்டிச் சீராட்டி, நோய்க்குத் தானே மருந்துண்டு வளர்த்த தாயாயினும் வளர்ந்துவிட்ட போது, வறுமையில் வாடுவானுகில் மகவெனப் பார்க்க மாட்டாள். அந்தப் பரிவும் பாசமும் பறந்தோடிப் போகும். அந்நியனைப்போல் பார்ப்பாள். என்னே! வறுமையின் கொடுமை! ஐயகோ, பரிதாபம்! குழைந்த தாயன்பையும் கொலை செய்யும் வறுமையின் கொடுமை சொல்லுந்தரத்ததன்று. நாட்டையும் வீட்டையும் கெடுக்கும் வறுமையை எதிர்த்துப் போராட வேண்டும்.

உடலிடைத் தங்கி வாழும் உயிர்கள் தாம் துய்த்த லுக்குரிய பொருள்களைப் பெருதபோது, முற்றத் துறந்து விடுதல் நல்லது. அங்ஙனம் துறவாமல் வாழ் தல் பிறர் வீட்டுப் பானையிலிருக்கும் உப்புக்கும் கூழுக் கும் பகையாகி, அவ்வழி அந்த இல்லில் வாழுவோரை யும் பட்டினி போட்டுச் சாகடிப்பதாக முடியும்,

வறுமை வந்துற்றும், மானத்திற்கு இடையூறு வாரா திருப்பதால், மானம் போற்றும் அடிப்படையில் துறந்து விடுதல் நல்லது. வறுமை வந்துற்றபொழுதே ஓரளவு துறவு வந்துவிட்டது. காரணம் சுற்றத்தார் கள் இவரைத் துறந்து வெளியேறிவிட்டனர். இங்குத் துறவு என்று குறிப்பிடுவது தன்னுடைய இச்சைகளைத் துறத்தலேயாகும். இச்சைகளையும் ஒன்றன்பின் ஒன்ருகத் துறத்தலோ அல்லது ஒன்றினைத் துறந்து ஒன்றினை அனுபவித்தலோ இரண்டும் கெட்ட நிலையை உருவாக்கும். இஃது எரிந்த வைக்கோற்போரில் ஒரு பகுதியை அணைத்துவிட்டோம் என்று கூறி அமைதி கொண்டது போலாகும். முற்றிலும் இச்சையை ஒடுக்குதலே துவரத் துறத்தல் ஆகும் என்கிருர் வள்ளுவர். இத்தகு துறவு நெறி நடைமுறையில் இந்த வையகத்தில் இல்லை. ஒருக்கால் மக்கள் பயி லாத பெருமலைக் காடுகளுக்குள் இருக்கலாம். இருப்பர் என்றே நம்புகின்ருேம்.

மானுடராய்ப் பிறந்தோர் முயன்று உழைத்து உறுபொருள் ஈட்டி, பெறுவன பெற்றுத் துய்த்து மகிழ வேண்டும். இஃது இல்லாதார் இச்சைகளைத் துறந்து விடுதல் வேண்டும். இதில் ஏதொன்றும் செய்யாது, செய்யத் துணிவில்லாது அல்லற்படுவோர் அதிசயப் பிறவிகள். அவர்தம் இச்சையோ, வெறி பிடித்துத் தூண்டுகிறது. அதனுல் அடுத்த வீட்டு உப்புக்கும் காடிக்கும் கூற்ருகின்ருர்கள். இங்கு அடுத்த வீட்டு நுகர்பொருளை உப்பென்றும் காடியென்றும் வள்ளுவர் ஏன் சொன்ஞர்? தரத்தில் உயர்ந்த நுகர் பொருள்கள் கோட்டைகள் போல் உயர்ந்த மாளிகை களிலேயே! ஆங்கு இந்த அப்பாவி எப்படிச் செல்ல முடியும்? உப்பும் கூழும் குடிசைகளின் சொத்து.

ஆங்கு எளிதில் செல்ல முடியும். மாளிகை கட்டி வாழ்பவன் மன இரக்கத்தின் மரணப் படுக்கையிலேயே கட்டி வாழ்கிறான். குடிசையில் வாழ்பவன் குடிசையில் தங்கியுள்ள குளிர் நிழலைப்போல் ஈர நெஞ்சினன்; இரக்க உணர்வினன்; இல்லையென்று சொல்லாது ஒரே வேளைக்குரிய உப்பையும் கூழையும் கூடக் கொடுத்து விடுவான். அவனுக்கு இவறிக் கூட்டி வட்டிக் கணக்கிட்டுப் பழக்கமில்லை. ஆதலால் போலும் உப்புக்கும் காடிக்கும் கூற்று என்றார்! துறத்தலாவது பொறிகளின் இச்சையை மட்டும் அடக்குதலல்ல. புலன்களின் இச்சையையும் அடக்குதல். 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்று புறநானூறு பேசும். திருக்கோவில் மதிற்சுவர் இடைவெளிகளுக்கிடையில் செடிகள் முளைப்பதுண்டு. திருக்கோவிலைப் பாதுகாக்க இந்தச் செடிகளை அப்புறப்படுத்த வேண்டும். சிலர் இந்தச் செடிகளை வேரொடு வெட்டாமல் மதிலுக்கு வெளியில் தெரிகின்ற பகுதியை மட்டும் வெட்டி விடுவர். இடைவெளிகளுக்கிடையில் வேர் எஞ்சி நிற்கும். செடியின் உயிருக்கும் வெளிச் செல்லுதல் தடைப்பட்டமையின் காரணமாக உள்ளேயே முன்னையினும் ஊக்கமாகப் பருத்து வளர்ந்து மதிலுக்கே கேடு செய்யும். அதுபோல மனத்தில் தோன்றும் இச்சை, புலன்களில் பரவி, பொறிகள் வாயிலாக வெளிப்படுகின்றது. பொறிகளின் இச்சையை மாற்றினால் புலன்களில் தங்கிவிடும். ஒருசேர புலன்களிலும், பொறிகளிலும் இச்சையில்லாமல் இருப்பது சிறப்பு. புலன்களில் இச்சையின்றி ஒரே வழியில் பொறிகளில் இச்சையிருக்கலாம். தவறேயாயினும் கேடில்லை. காலப் போக்கில் மாறும். பொறிகளில் இச்சையின்மை காட்டி, புலன்களில் இச்சை

தாங்கி வாழ்தல் பெருங்கேடு. வெளியறியா மரப் பொந்தில் விழுந்த நெருப்புப் போன்றது. எரிவது வெளியே தெரியாது. ஆனால் எரிந்து அழிக்கும். உப்பு இனிமை என்றும் பொருள்படும். காடி, நடுவு நிலை என்றும் பொருள்படும். நுகரும் பொருள் இல்லாதார் முயன்று பெற முடியாதார் துறத்தலுக்கும் துணியா ராயின், அவர் தம் இனிமைப் பண்பும் அவர் தம் நடுவு நிலையும் கெடும். தாமே வளர்த்துக் கொண்ட இனிய பண்பையும், நடுவு நிலைமையையும் இழந்து பொரு ளொடு கூடிய நல்குரவோடு, உயிர்ச் சார்பான குணத் தின் வறுமையும் ஏற்றுக் கொள்வது தற்கொலைக்கு ஒப்பு. அதனால் கூற்று என்றார்.

வறுமை, ஐயய்ய! மிகமிகக் கொடியது வறுமை பசியினால் வருத்துகின்றது; ஊக்கத்தைக் கெடுக்கின் றது; இனிய பண்புகளைக் கெடுக்கின்றது; கருணையிற் சிறந்த கடவுளினின்றும் விலக்குகின்றது. திருவள்ளுவ ருக்கு வறுமையின்மீது ஏராளமான கோபம். அதனால் ‘இன்மை’ என்ற பெயர் சூட்டிக் கொண்டு வருகின்ற பாவி என்றே அழைக்கின்றார். வறுமை இந்த உலகில் துய்த்து மகிழும் இன்பத்தையும் கெடுக்கிறது. சரி, பரவாயில்லை! அடுத்த உலகமாகிய அமரர் உலகத் திலாவது இடம் கிடைக்குமா என்று கேட்டால் அங்கும் கிடைக்காது. அந்த உலகத்தினைப் பெற அருளை, அறத்தினை, தூய்மையினை விலையாகத் தர வேண்டும். இந்த மூன்றையும்தான் வறுமை கெடுத்து விடுகிறதே! ஆதலால், அந்த உலகமும் இல்லை. வறுமையின் காரணமாகத் துறந்தாலும் துறக்கம் கிடைக்காது. வறுமையின் காரணமாகத் துறந் தால் துறவின் மூலம் வறுமையை மாற்றிக் கொள் ளவே முயற்சிப்பர். இத்தகு மனப்போக்கினாலேயே

துறவுநிலை இடங்களிலும் பொருட்சார்பு மிகுந்தன போலும்! வறுமையின் காரணமாகத் துறக்காமல், வறுமையின் கொடுமை நிலை அறிந்து துயப்பனவற்றிற் கும் எல்லையின்மை அறிந்து, எண்ணித் தொலையாத கடல் அலைகள்போல் எற்றி எற்றி வந்துறும் ஆசை அலைகளின் அவலநிலை அறிந்து வறுமையை மாற்றிக் கொள்ளும் நோக்கின்றி, சிந்தை நிறைவு பெறும் நோக்கத்தோடு துறக்கும் துறவு சீலம் நிறைந்த துறவு. இத்துறவு நிலையில் ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்கவே பார்க்கும் உணர்வினைத் தரும். நோதலும் தணிதலும் இல்லை. இத்துறவினையுடையார் பிறர் மகிழ மகிழ்வர். இந்தப் பேரறம் செய்வதால் அவ்வுல கம் கிடைக்கும். ஆதலால் துய்த்து மகிழ்ந்து தெவிட் டிய நிலையில் திருவருளை நாடுதல் முறையான வாழ்க்கை; இயற்கைப் பரிணாம வளர்ச்சியும்கூட. முறையாக உழைத்து, நிறைபொருள் குவித்து, துய்ப் பித்தும், துய்த்தும், மகிழ்வித்தும் மகிழ்ந்தும் வாழ் தல் மாந்தர் கடமை. வறுமை இயற்கை அன்று; செயற்கையே. மனிதனின் சுயநலமும் சோம்பலும் படைத்ததே வறுமை. எழுக! தளராது முயற்சி செய்க! வறுமையினை வையகத்தைவிட்டு விலக்குக! வாழ் வாங்கு வாழ்க! இதுவே வள்ளுவத்தின் வழி!

# வள்ளுவர் உலகம் XV

## இழிசெயல்கள்

உழைத்து உறுபொருள் ஈட்டி மகிழ்ந்து வாழ்தலே இயற்கை. ஒரோவழி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பிறரிடம் இரந்தும் வாழ வேண்டிய அவசியம் ஏற்படலாம். இயற்கையின் கொடுமைகளாலோ அல்லது சமுதாயக் கேடுகளாலோ இரந்து வாழும் அவசியம் ஏற்படலாம். அல்லது வாழ்ந்து முடிப்பதற்கு இரந்து கேட்காமல் வாழ்க்கையைத் தொடங்குதற்குரிய மூல முதற்பொருளை இரந்து கேட்கலாம். இரக்கின்றவன் சூழ்நிலை, இரக்கப்படுவோன் பண்பு ஆகியவை கருதி இரத்தல், ஈதல் ஆதலும் உண்டு. இந்த மாதிரி இடத்தில் வெட்கப்படாமல், கூச்சப்படாமல் அவசியம் ஏற்பட்டால் இரந்திடுக என்கிறார் வள்ளுவர்,

**''இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி யன்று''**

என்பது குறள். இரந்து கேட்டவன் நிலையினைக் கருதி பொருளைப் போற்றுதலினும், அவனைப் போற்றுதல் உயரிய அறம் என்று கருதும் இயல்பில்லாதவர்கள் இல்லையென்று உள்ளதையும் கரந்து கூறிடுவர். கர

வாது ஈயும் இயல்புடையோர் அருமை என்பதால் 'காணின்' என்றார். தாமே வறியனாகாமல் வறியனாக்கப்பட்ட ஒருவன் பொருள் பெற்ற ஒருவனிடத்தில் இரந்து கேட்கும் பொழுது, அவன் கொடுக்காமல் உள்ளதையும் இல்லையென்று மறைப்பானானால் அதனால் வரும் பழி இரப்பவனுக்கில்லை; இரக்கப்படுவோனுக்கேயாம். இதனை, அப்பரடிகள், 'கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்' என்றார்.

இரந்த பொருள்கள் யாதொரு துன்பமும் கொடாமல் கிடைக்குமாயின், ஒருவருக்கு இரத்தலும் இன்பம் என்பது வள்ளுவத்தின் கருத்து. கரந்து வாழாதார் மாட்டு இரந்து வாழ்தலும் ஓர் அழகேயாம்.

**"கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று**
**இரப்புமோர் ஏஎர் உடைத்து"**

என்பது குறள்.

"முன் நின்று இரப்பும் ஓர் ஏர் உடைத்து" என்றார். முன் நின்ற அளவிலேயே வாய் திறந்து இரந்து கேட்கும் இழிவு வாரா முன்னமே, குறிப்புணர்ந்து கொடுத்தலின் 'இரத்தலும் அழகு' என்றார்.

உள்ளதைக் கரந்து வாழும் இயல்பினைக் கனவிலும் கருதார்மாட்டு இரத்தலும் ஈதலே போலும். இரப்பவரைக் கண்டால், உள்ளோர் பலர் எள்ளி நகைப்பர்; இகழ்ந்து பேசுவர். சிறப்புடை மரபில் வந்தோர் இரப்போரைக் கண்டால் ஏற்றுப் போற்றி முகமன் கூறுவர்; இன்ப உரைகள் கூறித் தேற்றிடுவர்; ஏழ்மையில் நைந்த உள்ளத்தைத் தனது தூய அன்பினால் ஒற்றடம் கொடுத்து உருத்தேற்றுவர்.

**"புரவலன் போலும் தோற்றம்**
**இரவன் மாக்களின் பணிமொழி பயிற்றி"**

என்று அகம் பேசுகிறது. இங்ஙனம் மதித்து வழங்கும் மனப்பாங்கு உடையவர்களை இரப்போர் காண்பாராயின் மகிழ்வர். உள்ளத்தில் தங்கிய உவகையில் களிப்பர். பொருட்செல்வம் மட்டுமின்றி ஆரா இன்பத்தினையே அனுபவித்தலால் 'உள்ளுள் உவப்ப துடைத்து' என்றார்.

**"இகழ்ந்தெல்லாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்**
**உள்ளுள் உவப்ப துடைத்து"**

என்பது குறள்.

மானிட சாதியின் இம்மைக் குறிக்கோள் புகழுடையராக வாழ்தலேயாம். புகழ் பலவாறாகப் பலவகைகளில் வரலாம். ஆயினும் இரப்பார்க் கொன்றீவார் புகழே, புகழெனத் தக்க புகழ். இந்தப் புகழை நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்போர், இரப்போரேயாம். இத்தகு இரப்போரில்லையாயின் ஒருவருக்கு ஏது புகழ்? ஒருவன் இரந்து கேட்பதோ, சில நாளில் சம்பாதித்த பொருள். ஆனால் அவன் திரும்பத் தருவதோ உலகளாவி நிலைத்திருக்கும் புகழ். இரப்பவன் கேட்டுப் பெறுவதோ இந்த உலகில் அழித்தால் அழியக்கூடிய பொருள். ஆனால் அவன் திரும்பத் தருவதோ அழிவில்லாத அருட்பேறு. இந்த உலகியல் வாழ்க்கை உணர்ச்சியும், சுவையும் நிறைந்ததாக இருக்க வேண்டும். வற்றி வரண்ட வெறிச்சோடிப் போன பாலைவனமாகக் காட்சியளிக்கக் கூடாது, இந்த வாழ்க்கையின் சிறந்த சீலம், கொண்டும் கொடுத்தும் மகிழ்ந்து வாழ்தலேயாகும். கொடுப்பதற்கு வாங்குவோரில்லையானால் வாழ்க்கை உயிர் வாழ்க்கையா? அது மரப்பாவை வாழ்க்கையாகும்.

''இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று''

என்பது குறள்.

திருவள்ளுவர் மனிதனைப் பார்த்து 'இரவற்க' என்றார். ஆயினும் இயற்கையால் விளைந்த கேடுகளாலும், சமுதாய மாறுபாடுகளாலும் ஒரோவழி இரக்க வேண்டின் ''கரவாதவனிடத்தில் இரக்க!'' என்றார். ஆயினும் இரக்கப்பட்டோன் கொடாத வழி கோபப் பட வேண்டாம் என்றும் கூறுகிறார். இரத்தற்குரிய அவலநிலை வந்தது, முன்னை ஒழுக்கக் கேடுகளாலேயே யாம். நேற்றைய தனது முறையற்ற வாழ்க்கைக்கு இன்றைய வறுமை சாட்சி. கண்முன்னே நேற்றையத் தவறுகளைக் கண்டு அனுபவிக்கும் பொழுதும் மீண்டும் வெகுண்டு தவறு செய்தல், மீளவும் துன்பத்திற்கே ஆளாக்கும். ஆதலால், கொடுக்காதவன்மாட்டுச் சினந்து கொள்ளுதல், அவனைத் தாக்குவதைவிட, உன்னையே வலிமையுடன் திருப்பித் தாக்கும். அந்தத் தாக்குதலை உன்னால் தாங்க முடியாது என்பது குறிப்பு. மேலும் செல்வம் சுழன்று வருவதொன்றேயாம். நேற்றுச் செல்வம் உடையவனாக இருந்த ஒருவன் இன்றைக்கு இரப்பவனாகின்றான். செல்வமுடையவனாக இருந்த ஒருவன், அந்தச் செல்வத்தைப் பெற்றிருந்த பொழுது, கொடுத்தும் மகிழ்ந்தும் வாழ்ந்திருப்பானாகில், அவன் செல்வத்தை இழந்தாலும் அவன் நலங் கருதி முன்பு பயனடைந்தோர் பாராட்டிப் பாதுகாப்பார்கள். அப்படியின்றிச் செல்வத்தை வைத்து இழந்திருப்பானாகில் அவனைத் தேடுவாரில்லை. இத்தகையவனுடைய வறுமையும் இரவும் பயன் தராது. இதனை செல்வமுடையோன் அறிந்து உணர்ந்து அவனாகத் தராதபொழுது, அவனைச் சினந்ததால்தான் என்ன

பயன்? தானே உணரும் சக்தியில்லாதவனிடத்தில் சினப்பதனல் பயனில்லை. ஆதலால் இரத்தலையும் கூடப் பற்றற்றே செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் குறிப்பு. இதனை,

**"இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை**
**தானேயும் சாலும் கரி"**

என்றோதுகின்றார் திருவள்ளுவர்.

விதி வகுத்து இரக்கச் சொன்னலும் திருவள்ளுவருக்கு இறுதி இலட்சியம் இரந்து வாழ்கின்ற மக்களில்லாத—எல்லோரும் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ்கின்ற ஒப்பற்ற சமநிலைச் சமுதாயம் காண்பதேயாகும். கடைசி மனிதன் இரவாமல் வாழுதற்குரிய பெருஞ்செல்வம் பெறுகிற வரையில் மேலே யிருப்பவர்கள் கொடுத்து அழைத்துவரக் கடமைப்பட்டிருப்பதால் அந்தக் கடைமையை நிறைவேற்றுகிற காலக்கட்டம் வரையிலேயே இரவையும் உட்படுத்திப் பேசினர்.

தன் மதிப்பையும் இன்பத்தையும் ஒருசேர இழக்க வைக்கும் இரத்தல் அஞ்சுதற்குரியது. இரந்து இனிய சுவையொடு கூடிய உணவை உண்ணல் சிறப்பன்று. மாருக நெறியுடன் கூடிய முயற்சியின் பயஞகக் கிடைத்த—மோரொடும் கலக்கப் பெருத—சுவையில்லாத—நீரிலேயே கலக்கப்பெற்ற கூழாயினும் உண்ணற்கு இனிது; உடலுக்கும் இனிது; புகழுக்கும் அரண் செய்யும். இதனை,

**"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்கினிய தில்"**

என்ருர் திருவள்ளுவர்.

முயற்சியால் பொருளீட்டி வாழும் வாழ்க்கை பாக்கிய வாழ்க்கை. அப்படியின்றி இரந்து வாழ்தல்

இழிவான வாழ்க்கையேயாம். கரவாது மகிழ்ச்சியுடன் கொடுப்போரிடத்தில் இரந்தாலும் தன்மதிப்பு அழிவ தில்லையே தவிர உயர்வதில்லை. ஆதலால், யார் மாட்டும் இரவாதிருத்தலே இரந்து கோடி செல்வம் பெறுதலினும் கோடி நன்ரும்.

**"கரவாது உவந்தீயும் கண்ணன்ஞர் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்"**

என்பது குறள்.

வறுமை யென்னும் கடலே, வலிய முயற்சியிஞ லேயே கடக்கலாம். மாருகப் பாதுகாப்பும், உத்தர வாதமுமில்லாத இரவு என்ற தோணியைக் கொண்டு கடக்கக் கருதிஞல் கரையேற முடியாது. மாருக கரவுவன் பாறை தாக்கிஞல் வலிமையற்ற இரவுத் தோணி உடைந்து போகும். திருவள்ளுவர் நம்மை யெல்லாம் இரந்து கேட்கிருர்; கெஞ்சிக் கேட்கிருர்; அவருக்காக யாதொன்றும் கேட்கவில்லை; நமக்காகக் கேட்கிருர்! என்ன அவர் இரந்து கேட்பது? அதுவும் யாரை இரந்து கேட்கிருர்? இருப்பவரிடமா இரந்து கேட்கிருர்? இல்லை, இரப்பவரிடம் இரந்து கேட்கிருர்! அப்படி யென்ன கேட்கிருர்? இரக்கவேண் டிய அவசியம் வந்தால், தயவு செய்து உள்ளதைக் கரப்போரிடத்தில் சென்று இரக்காதீர்கள் என்று இரந்து கேட்கிருர். கரந்தும், கடுஞ்சினத்தோடும், உவகையின்றியும், தீராத் துன்பமாகக் கருதி, ஒரோ வழி கொடுப்போர் கொடுத்தாலும், அப்பொருளால் உடலுக்கு உணவு ஊட்டிய வழி, மானம் மரியாதை கொஞ்சம் உடையவராக இருப்பின் அந்த உடம்பும் நில்லாது, உண்டவழியும் சுருங்கிவிடும். கொஞ்சம் கூட மானமில்லாதவர்களுக்குக் கவலையில்லை,

''இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று''

என்பது குறள்.

திருவள்ளுவருக்கு நெஞ்சு உருகுகிறது. பலர் வறுமையின் கொடுமையால் இல்லையென்று கூறுபவர்களிடம் சென்று இரந்து நிற்கும் கொடுமையை நினைத்து நெஞ்சு உருகுகின்றார். திருவள்ளுவருக்கு இங்ஙனம் இரப்போர்மாட்டு ஓர் இரக்க உணர்ச்சி பிறக்கிறது. ஆனால் இரப்பவர்களுக்குக் கொடுக்காமல் கரந்து வாழும் மனிதர்களை நோக்கி இரக்க உணர்ச்சியும், உள்ள உருக்கமும் எங்கோ ஓடிவிடுகிறது. மனச்சான்று படைத்தோர் இரக்க நேரிடின் தம் விதியினை நொந்து உருகி வேறுவழியின்றியே இரப்பர். மனச்சான்று இல்லாதவரோ இரத்தலையே பிழைப்பாகக் கொள்பவர். அவருக்கு உயிர் உருகா; ஊனும் உருகா. காரணம் மானம் மரியாதைகளை விட்ட பிணம். கரப்பவர் கரந்தாலும், அவர்தம் உள்நெஞ்சு கரக்கும் நிலை கண்டு இரங்கும்; உருகும். ஆனாலும் பொருட்பிடிப்பு அந்த உருக்கத்தை மூடி மறைத்துவிடுகிறது.

ஒருவன் பல்லாற்றானும் முயன்று நல்லூழ் இன்மையின் காரணத்தால் தோற்றுவிட்டால் இரந்து, இழந்த வாழ்க்கையை எடுக்க எண்ணுகிறான். கரவாது உவந்து வழங்குபவன் என்று கருதிச்சென்று இரக்கின்றான். இரத்தற்குரிய சொல்பிறந்த போதே பழகிய மானத்தில் தங்கியிருந்த உயிர்நிலை பிரிகிறது. யார் எதிரில் நின்று இரந்தானோ, அவன் நிலைமை யறிந்து கொடுக்கவில்லை. இரத்தற்சொல் வெளிப்பட்டது. இரத்தற்சொல் வெளிப்பட்டவுடன் இழிவந்த உயிர் பிரிந்தது. எதிரில் நின்றவனோ கரக்கின்றான்; தன்

பொருளையும் கரக்கின்ருன்; தன்னையும் கரக்கின்ருன். இரப்பவனிடத்தில் ஒளித்துக் கொள்ளலாம். "கரப்ப வர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்" திருக்கின் ருனே பெருமான், அவன் முன்னேயும் இவன் ஒளிய முடியுமா? முடியாது, முடியாது. இதனை,

"கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்"

என்று குறள் கூறுகிறது.

மலையை எடுத்து ரோமத்தில் கட்டலாம். கடுகில் ஏழுகடலை அடைத்தலும் கூடும். ஆனுல் வறுமையை இரந்து மாற்றுவது என்றும் முடியாது; எப்பொழுதும் முடியாது. வறுமை தீர்தலுக்குரிய ஒரே வழி நன் முயற்சியுடன்கூடிய உழைப்பேயாகும். ஆதலால் மிகச் சிறந்த அறமாகிய பசுவினைப் பேணுதலுக்குக் கூடத் தண்ணீரை இரந்து கேட்கக்கூடாது. பசுவினைப் பாது காப்பது பேரறம். அதுவும் உயிர் போகும் தருணத்தில் கிடக்கும் பசுவுக்குத் தண்ணீர் வழங்குதல் தலையாய கடமை; அறமும்கூட. கேட்கப்படுவதோ தண்ணீர், காசு இன்றி எளிமையில் கிடைக்கக் கூடியது. ஆயினும் தண்ணீர் இரந்து கேட்ட அளவில் நாவிற்கு இழிவு வந்தே சேரும். அதற்கு மாருகக் கிணற்றினைத் தேடித் தண்ணீர் இறைத்துக் கொண்டுவந்து பசுவுக்குத் தரு வதே அறம்; அதோடு புகழுமாம். இதனை,

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்"

என்று கூறுகிருர். நுகர்தற்குரியன பெருத பொழுதும், இரவாமலிருத்தல் இந்த உலகமுழுவதும் அடங்கிய பெருமையுடையதாகும்.

திருவள்ளுவருக்கு இரந்து வாழும் உயிர்வாழ்க்கை யைக் கண்டால் கடும் சினம் உண்டாகிறது. குமுறிய உள்ளத்தோடு புரட்சிக்குரல் கொடுக்கிறார்.

**''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்''**

என்று பேசுகின்றார். ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண் டின்'' என்ற உம்மையினால், கடவுள் மனித உலகத்துக்கு இரத்தலை ஒரு தொழிலாக அமைக்கவில்லை என்பது பெறப்படுகிறது. ஒருநியதி கடவுள் நியதி. பிறிதொரு நியதி கடவுள் நியதியினைச் சார்ந்த, ஆனால் இந்த உல கிடை நிலவும் அரசியல் நியதி. கடவுள் நியதியும், அரசியல் நியதியும் இலட்சியததால் ஒன்றேயாம். ஆயி னும் முறைகளால் மாறுபடுகிறது. அரசியல் நியதியை அருட்சார்பின்றி, ஆணவச் சார்புடையோர் இயற்றி இயக்குவாராயின் ஆங்கு சமநிலை கெடும். தன்னலச் சார்புடையோர் அந்த முத்திரையுடன் சுரண்டுவர்; பொருள் குவிப்பர்; செல்வந்தராவர். அம்முத்திரை கிடைக்கப் பெறாதார் ஏழைகளாகி இரக்கும் நிலையினை எய்துவர். இந்த நிலையில் இரக்கும் நிலை யடைந்தோார் முயற்சியில் தாழ்ந்தவர்களல்லர், உழைக்காதவர்களு மல்லர். நேரிய முயற்சியும், கடுமையான உழைப்பும் உடையவர்களேயாம். உழைப்பாளிகள் இரக்கும் நிலை யடைந்தது, சமுதாயச் சீர்கேட்டினாலேயாம். அந்தச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்துவது அரசின் கடமை. இன்றைய மக்கட் சமுதாயத்திலும் உழைப்பவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். உழைக்காதவர்களில் பலர் உல்லாச வாழ்க்கையில் இருக்கிறார்கள். இரந்து வாழ்கின்ற நிலைமைக்குக் காரணமாய் அரசு கெடுக என்கிறார்.

"கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" என்றார் வள்ளலாரும். இங்கு 'இயற்றியான்' என்பது கடவுளைச் சாராது. ஆதலால், நமக்கு நம்முடைய நாட்டு மக்களை வறுமைக் கடலினின்றும் கரையேற்ற, நெறிவழிப் பட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பிறரிடம் இரந்து நம் வறுமை போகாது.

# வள்ளுவர் உலகம் XVI

## கயமை

திருக்குறள் ஓர் ஒப்பற்ற முழுதுறழ் அறநூல். திருவள்ளுவர் மனிதர்களைக் கெட்டவர்களென்று கருதியோ, அல்லது கெட்டவர்களாக ஆக்கியோ எளி தில் ஒதுக்குபவர் அல்ல. அவர், அவர்தம் நூல்வழி மிகவும் சாதாரண சராசரிக்கும் கீழ்ப்பட்ட மனிதனை வளர்க்கவே தமது திருக்குறள் மூலம் முயற்சிக்கின்றார். கற்பிக்கின்றார்; சொல்லித் தருகின்றார்; வழி நடத்து கின்றார்; ஊக்கமூட்டுகின்றார்; துணை சேர்க்கின்றார்; தீயன பிரித்து ஒதுக்கிக் காட்டுகின்றார்; சில இடங் களில் குறிப்பால் உணர்த்தினார்; பல இடங்களில் வெளிப்படையாக எடுத்தோதினார்; இத்தனையாலும் தேராத மனிதரை ஒதுக்குகிறார்; ஒதுக்கித் தள்ளுகிறார்; நம்மையும் ஒதுக்கச் சொல்லுகிறார். ஒதுங்கவும் சொல் லுகிறார். மனிதனை வளர்த்து வளர்த்துத் தேற்றித் தேற்றிக் கொண்டு வந்த வள்ளுவர் ஒன்றாலும் இய லாத பயனற்ற கீழ்மக்களைத் தள்ளி மூடும் அதிகாரமே 'கயமை' யாகும்.

விலங்குகளில் சாதி பிரிக்கிறோம்; காய்கறிகளில் சாதி பிரிக்கிறோம்; ஆனால் நாம் மனிதரில் சாதி பிரிப்ப தில்லை. சாதி பிரிப்பதில்லையா? இன்றுதான் ஏராள

மான சாதிப்பிரிவுகள் இருக்கின்றனவே என்று கருது கின்றீர்களா? இன்று பிரித்துள்ள சாதிமுறை பிறப்பி னாலும், ஆதிக்கத்தினாலும் ஏற்பட்டவையாகும் ஒரோ வழி தொழிலின்பாலும் பட்டவை. ஆனாலும், திருவள் ளுவர் இனம் பிரித்துக் காட்டுவது பிறப்பினாலுமல்ல; தொழிலாலுமல்ல. மேன்மக்கள், கீழ்மக்கள், என்று பிரிக்கிறார். இந்தப் பிரிவு குணத்தின்பாற்பட்டது. பலர் மக்கள் போலவே நடமாடுகிறார்கள். ஆனால் அவர்கள் உருவத்தினாலேயே மக்கள். ஆனாலும் குணங் கள் மக்கட் சாதிக்குரியன அல்ல. "மக்களே போல்வர்" என்ற சொற்களில், தேற்றேகாரத்தில் வேதனை நிறைந்த நகைச்சுவை மண்டிக் கிடக்கிறது.

நன்மக்கள் நாள்தோறும் தமது தகுதியினை, சீலத் தினை, குடிச்சிறப்பினை இழந்துவிடக் கூடாதே என்று எண்ணிக் கவலைப்படுவர். ஆனால், கீழ்மக்களோ கவலை யில்லாத மகாராஜாக்கள்! அவர்களுக்குப் பழி, பாவ மில்லை; சீலம், நோன்பு இல்லை; குடிச் சிறப்பும் இல்லை! எதைக் காப்பாற்றிக் கொள்ளக் கவலைப்படவேண்டும்? என்று பரிகாசமாக—ஆனாலும், வேதனை நிறைந்த உள்ளுணர்வுடன் திருவள்ளுவர் பேசுகின்றார்.

**"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்"**

என்பது குறள்.

தேவர்கள் பதவியால் உயர்ந்தவர்கள். ஆயினும், அவர்கள் போட்டுக் கொண்ட சண்டைகள் எண்ணி லடங்காதவை. அவர்கள் உயர்ந்தோர் என்று கருதித் தாம் விரும்பியபடியெல்லாம் செயல்படுகின்றனர். இதன் விளைவே தக்கன் வரலாறு. தேவர்களின் தலைமைப் பதவியாகிய இந்திரப் பதவிக்கு அடிக்கடி

சண்டை நடந்தவற்றைப் புராணங்கள் பேசுகின்றன. தேவர்களையும் கயவர்களையும் திருவள்ளுவர் ஒரு தன்மையர் என்றே பேசுகின்றார். ஒரே ஒரு வேற்றுமை. தேவர்கள் பதவியிலமர்ந்து செய்கிறார்கள். கயவர்கள் பதவியில் இல்லாமற் செய்கிறார்கள். கயவர்கள் தாம் விரும்பியவற்றையே செய்வார்கள். மற்றவர்கள் நிலை கண்டு யார் ஒருவருக்கும் துன்பம் தராது ஒழுகும் இயல்பு கயவருக்கு இல்லை. ஏன்? பழகியவர்களுக்கும் நீங்காத் துன்பம் கொடுப்பர்.

> **"தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**
> **மேவன செய்தொழுக லான்"**

என்பது குறள்.

கயவர் தம்மையொத்த கயவர்களைக் காணின் மகிழ்ந்து கூடி உலாவுவர்; சமுதாயக் கேடுகளைச் செய்யத் துணை கிடைத்ததே என்று துள்ளி மகிழ்வர். அது மட்டுமா? கயமைத்தனத்தில் போட்டி போடுவர். அதிகக் கீழ்த்தனமான காரியங்களைச் செய்து நானே வெற்றி பெற்றேனென்று செம்மாப்பர்.

> **"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
> **மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்"**

என்பது குறள். வலியனும், பிறதுறைகளிலும் தம்மின் கீழப்பட்டவரைப் பார்த்தாலும் அவரின் நான் உயர்ந்தேனென்றும் செம்மாக்கும். எப்பொழுதும் மேல் நோக்கி ஒப்பெடுக்க வேண்டுமே ஒழிய, கீழ் நோக்கி ஒப்பு நோக்கல் கூடாது. அதனாலன்றோ, மண்ணில் முளைக்கும் முளையும் வானோக்கி முளை விடுகின்றது.

கீழ் மக்கள் படாடோபமாக அரட்டி உருட்டினாலும் அச்சத்திலும் சிறந்தவர்கள். கீழ்மக்கள் அடங்கி நடப்பதோ அல்லது அதட்டி நடப்பதோ நடிப்பே

யாகும். அவர்களுக்கு இயல்பாக அடக்கமுமில்லை; ஆண்மையுமில்லை. அவர்கள் அடி உதைக்கு அஞ்சு வார்கள். அல்லது தனக்குக் கிடைக்கக்கூடிய இலாபம் போய்விடுமோ என்றும் அஞ்சுவார்கள். கீழ்மக்கள் எப்பொழுதாவது அடங்கி நடந்தால், அது மற்ற வருக்கு அச்சத்தைத் தரும் என்றும் கொள்ளலாம். எந்தக் காரியத்தை முடித்துக் கொள்ளக் கருதி இந்த நாடகத்தைத் தொடங்கியிருக்கின்றாரோ என்று! இதனை,

> "அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
> அவாஉண்டேல் உண்டாம் சிறிது"

என்றார். 'அச்சம் கீழ்களது ஆசாரம்' என்றால் சான்றோருக்கு அச்சம் வேண்டாவோ? அஞ்சுவது அஞ்சல் சான்றோர் கொள்கை. அதாவது பழி பாவங்களுக்கு அஞ்ச வேண்டும். கீழ்மக்களுக்கோ பழி பாவம் பால் பாயசம்! அவர்கள் அஞ்சுவதெல்லாம் அடிக்கும் உதைக்குமேயாம்.

கீழ்மக்களோடு உறவு வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரோ வழி தவிர்க்க முடியாத நிலைமையால் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படின் அளவோடு வைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையைச் சார்ந்த ரகசியங்களை அவர்களிடத்தில் சொல்லிவிடக் கூடாது. அவர்களுக்குக் கிடைத்த செய்தியை அவர்கள் தாமே தெருத் தெருவாகச் சென்று, பறைசாற்றிப் பல கேடு களை விளைவிப்பர். கயமைத் தனமுடையவர்களின் காதும், வாயும் சமூகக் கலகங்களின் நுழைவாயில் களாகும். ஆதலால், அவரிடத்தில் அதைச் சொல்லு வதற்குப் பயப்பட வேண்டும். அது போலவே அவ ருடைய வாய்ச் சொல்லை மதித்து ஏற்காமல் தள்ளிவிட வேண்டும். இதனை,

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்"

என்றார் திருவள்ளுவர்.

கயமைத்தனம் நாட்டின் நல்லூழ் இன்மையின் காரணத்தினால் எந்த இடத்திலிருக்கும் அல்லது இருக்க முடியாது என்று சொல்ல முடியா வண்ணம் நிலவும். கயவர்களுக்குப் பெரும்பாலும் தனது வரவிலேயே நாட்டம். மற்றவர்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். பெற்றுக் கொண்டதற்குத் திரும்பப் பணமாகவோ அல்லது உழைப்பாகவோ அன்றி நன்றிக் கடப்பாடாகவோ, ஈடாகத் திருப்பித் தர மாட்டார்கள். தரவேண்டுமென்ற எண்ணங்கூட வராது. மாறாக "இன்னும் கொடுக்கவில்லையே, என்ன பிரமாதமாகச் செய்து விட்டார்கள்?" என்று அங்கலாய்ப்பர். கயமைத்தனம் உடையவர்கள் பெரும்பொருளையுடையவராயிருப்பின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்க மாட்டார். கயமத்தனமுடையவர்களுக்கு, மற்றவர்களுக்குப் பசியும் கவலையும் உண்டு என்பதே தெரியாது அவர்கள் இயல்பாகக் கொடுக்க மாட்டார்கள். யாரொருவர் கையை வளைத்து மடக்கி மேல் வாய்க் குறட்டில் ஓங்கிக் குத்தி உடைக்கின்றானோ அவனுக்கே கொடுப்பர். மற்றப்படி வாட்டமுற்ற மக்களுக்கு ஈரக் கையைக் கூட உதறமாட்டார். அதாவது தன்னை வருத்துவோருக்கு அச்சம் நோக்கிக் கொடுப்பார்களே தவிர, 'ஈதல் அறம்' என்ற நெறிக்கு இவர்கள் வெகுதூரம். அறத்தின் அடிப்படையில் கொடுத்தால் சிறிது கொடுத்தாலும் போதும். வாங்குகிறவர்களும் மனநிறைவு அடைவார்கள். வருத்தத்திற்கு அஞ்சிக் கொடுத்தால் மேலும் மேலும் வருத்திப் பெற முயற்சிப்பர். வருத்துபவர்களுக்குப் பணம்

கொடுத்துப் பழகுவது வறண்ட பாலைவனத்தில் நடப்பதோடொத்த துன்பத்தைத் தரும். இங்ஙனம் செல்வம் சேர்ந்து கயமைத்தன உணர்ச்சி பெருகி வளர்வதே பலாத்காரப் புரட்சிக்கு வித்திடுகிறது. இதனை,

**"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்**
**கூன்கைய ரல்லா தவர்க்கு"**

என்று குறள் கூறுகிறது.

சான்றோர் சொல்லப் பயன்படுவர்; நல்ல மனமுடையவர்கள் சொன்னதைச் சொன்ன அளவிலேயே அறத்தினைச் செய்வர்; உதவி செய்து உவப்பர்; எடுத்துக்காட்டிய கடமைகளைச் செய்வர். ஆனால் கீழ்மைத்தனமுடையவர்களோ சொன்னால் செய்யமாட்டார்கள். அவர்கள் கடமை தவறுதலுக்கு அஞ்சிப் பயப்படுவதில்லை. காரியக் கேட்டுக்கும் அஞ்சிப் பயப்படுவதில்லை. மற்றவர் வருத்தம் பார்த்தும் அஞ்ச மாட்டார்கள். அவர்கள் அஞ்சுவதெல்லாம் அடிக்கும் உதைக்கும் தானே! ஆதலால் கீழ்க்குணம் உடையவர்களை நையப் புடைத்தாலே சொன்னதைக் கேட்பார்கள்; சொன்னதைச் செய்வார்கள். நல்ல கனிந்த மாம்பழத்தை மெதுவாகத் தொட்டாலே சாறு கிடைக்கும். ஆனால் கரும்பையோ, நைய உருவம் தெரியாமல் நசுக்கியே சாறெடுக்க வேண்டும். கீழ்மக்களிடத்தில் உதவி பெறுவதாயினும் சரி, அல்லது வேலை வாங்குவதாயினும் சரி, நையப் புடைத்தாலே செய்வர். இவர்களை நோக்கிப் பிறந்த பழமொழிகளே "அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்"; "அடியாத மாடு படியாது" என்பனவாகும்.

**"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்"**

என்பது குறள்.

கயமைத்தனமுடையவர்களுக்கு அழுக்காறு நிறைய உண்டு. நிறைய உண்டு என்பதைவிட அழுக்காற்றினுலேயே உருவமும் உணர்வும் படைத்தவர்கள் என்று கூறுவது பொருந்தும். இவர்களுடைய அழுக்காறு மிகவும் மோசமானது. பிறர் உண்டு உடுத்து வாழ்வதைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது. இவர்கள் பிறர் உண்டு உடுத்து மகிழ் வதைப் பார்த்துக் குறை சொல்லுவர். கீழ்மக்கள் குறை சொல்ல, குற்றங்கள் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. குற்றங்கள் இல்லையாளுலும் இவர்கள் துருவிக் கண்டுபிடித்து விடுவார்கள். இல்லையெனில் கற்பித்துவிடுவார்கள். "ஆ, பூ, அவர்தானே! நமக்குத் தெரியாதாக்கும். அவர் அதிலே கொள்ளையடித்துத்தானே வைத்திருக்கிருர்," என்று சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். இதனை,

**"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்ருகும் கீழ்"**

என்று குறள் கூறுகிறது.

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்' என்பது பார்த்த அளவானே அழுக்காறடைவர்; அலர் தூற்றுவர் என்ற ஆழ்ந்த கருத்தமைந்திருக்கிறது. ஆதலால், கயவர்கள் காண உண்ணலையும் உடுத்தலையும் ஊர்திகளில் செல்லலையும் தவிர்ப்பது நல்லது. அதனுல்தான் போலும், 'கண்ணேறு படுகிறது' என்று நமது நாட்டுத் தாய்மார்கள் சொல்லுகிருர்கள். இதுவும் உண்மையேயாம். அன்று உண்ணல் உடுத்தல் முதலிய வாழ்க்கையில் அழுக்காறு ஏற்பட்டது. இன்று பதவி, செல்வாக்கு, புகழ் ஆகிய துறைகளிலும் மிகவும் அதிகமாகவே அழுக்காறு ஏற்படுகிறது. அதன் காரணமாக நாள்தோறும் நாட்டில் பிறர்பழி தூற்றும்

மேடைகள் பெருகி வருகின்றன. குற்றமே கண்டு கூறிப் பழகினால், குணம் காணும் பழக்கமும் வராது; குணங்களும் வளராது. ஆதலால் பொது வாழ்க்கையிலும்கூட அழுக்காற்றின் வழிப்பட்ட கண்ணோறு படாமல் அடக்கமாக, எளிமையாக தம்மைப் புகழ் வந்து அடையாமல் தற்காத்துக்கொள்ளச் செய்வது நெடிய பயனைத் தரும்.

கயவர் தம்மொடு பழகினார்க்கு ஏதாவது கேடு வந்தபொழுது, அந்தக் கேட்டினால் அவர்களுக்கு இறுதி நேரிடும் வண்ணம் விரைந்து எற்றித் தள்ளி விடுவர். அப்படிச் செய்யத் தவறினாலும் உற்ற இடத்து உதவி செய்யாது நீங்கிவிடுவர். ஆதலால் தோற்றத்தால், பேச்சால் கயவர் நல்லவர் போலவும் வலியவர் போலவும் காணப்பெற்றாலும் அவர்களுடன் பழகி உறவு கொள்ளுதல் ஒருபொழுதும் உதவி செய்யாது. உதவி செய்வதற்குப் பதில் கேட்டினை இரட்டிப்பாகவும் விரைவாகவும் கொண்டுவந்தாலும் வரலாம். இதனை,

**''எற்றிற் குரியர் கயவர் ஒன்றுற்றக்கால்**
**விற்றற் குரியர் விரைந்து''**

என்று கூறுகிறது குறள்.

மேலும் கயவர் தோற்றத்தால் ஆண்மையுடையராயிருப்பர்; அரிச்சந்திரனைப் போல் நடிப்பர்; வையத்தை வாயால் அளப்பர்; 'உயிரெல்லாம் உறவுடையோர் பாசத்திற்கே' என்று பசப்புவர். ஆனால், அவர்களுக்கு யாதாவதொரு துன்பம் வந்துற்றால் விரைந்து ஓடுவர்! எங்கு? தம்மையே விலை பேச. ஐயோ, பாவம்! தம்மையும் விலை பேசுவர்; தம்மை நம்பிப் பழகிய நண்பர்களின் மானத்தையும் விலை

பேசுவர்; பழகினோர் உயிரைக்கூட விலை பேசிவிடுவர். நிலமகள் இத்தகு கயவர்களைத் தாங்கிக் கிடப்பது பொறையுடைமை நோக்கிப் போலும். மறந்தும் கயமைத்தனத்திற்கு ஆளாகக் கூடாது. கயவர்களையோ மறந்தும் நிழலுக்குக்கூட உறவு வைத்துக் கொள்ளக்கூடாது. இது வாழ்வாங்கு வாழ்ந்து வெற்றி பெற வள்ளுவம் கட்டித் தந்த அரண்.

## தோற்றமும் நோக்கும்

திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் மூன்றாவது பகுதியாக அமைந்துள்ளது காமத்துப் பால் ஆகும். ஆண், பெண் இருவருடைய இன்ப வாழ்க்கை இப் பகுதியில் தெளிவுற விளக்கப்படுகின்றது.

திருமணம் செய்துகொள்வதற்கு முன், ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் நட்பு பூண்டு காதலர்களாக வளர்ந்து மணம் செய்துகொள்ளும்வரை ஒரு பகுதியாகவும், திருமணம் செய்து இன்ப இல்லறத்தில் வாழும்பொழுது நிகழுகின்ற நிகழ்ச்சிகளை மற்றப் பகுதியாகவும் காணுகின்றோம்.

அழகும், இளமையும் நிறைந்த மங்கை நல்லாளைக் காணுகின்ற ஆண் மகன் தனது உள்ளத்தினை அப் பெண்ணின்பால் பறிகொடுத்து விடுகின்றான். அப் பெண்ணின் அழகும் ஆடவனின் பார்வையும், காதல் நிகழ்ச்சிக்கு வித்தாக அமைகின்றன. காதல் புனிதத் தன்மை நிறைந்ததாகும்.

மாசற்ற உள்ளங்களில் எழுகின்ற அன்பு உணர்ச்சியுமாகும். ஒத்த பருவமுடைய ஆடவனும்,

பெண்ணும் நேசித்து அன்பினை வளர்த்து இருவரும் ஒன்றாகக் கூடி மகிழ்வதே காதலாகும்.

காதல் வளர்ந்து வருகின்ற காலத்தில் காதலர்களுக்கு, இடையூறுகள் நேரிடும். அவைகளையும் மன உறுதியினால் திண்ணமான எண்ணங்களினால் காதலர்கள் வென்றுவிடுகின்றார்கள். காதலின் துவக்கம் ஆடவனின் வாயிலாகவே அமைகின்றது. வாலிபன் அப் பெண்ணின் அழகினைப் பார்த்து மயங்குகின்றான். தான் கண்ட அந்த அழகியின் சிறப்பினை மிகமிக உயர்ந்த இடத்தில் வைத்தே பேசுகின்றான். இப்பெண் தெய்வ மகளோ, பல வண்ணங்களில் தோன்றுகின்ற தோகை விரிக்கும் மயிலோ அல்லது இந்த உலகில் வாழுகின்ற பெண் தானோ! ஒன்றும் புரியாமல் எனது நெஞ்சம் மயங்குகின்றதே—என்று அந்த வாலிபன் எடுத்துக் கூறி, காதலினைத் தொடங்கி வைக்கின்றான். அவன் பேசுகின்ற எண்ணத்தினை அழகிய குறட்பா ஒன்று தந்துவிடுகின்றது.

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு."**

காதலைப் பற்றிப் பேசுகின்ற ஆசிரியர் வள்ளுவனார் அந்தப் பெண்ணின் முழுமையான அழகினைக் கண்டு வாலிபன் எவ்வாறெல்லாம் சுவைக்கின்றான் என்பதை முதலில் அமைத்துக் காட்டுகின்றார். பெண்ணின் அழகு தான் காதலுக்கு வழி காட்டுவதாக இருந்துவிடுகின்றது. அழகிலே மயங்கிய ஆடவன் அப் பெண் பார்க்கும் பார்வைகளை எல்லாம் உணர்ந்தறிந்து விளக்கம் கொடுக்கின்றான்.

அன்பிலும், இன்பத்திலும் அந்த வாலிபன் கட்டுப்பட்டவனாகி விட்டான். அழகில் மகிழ்கின்றான், திளைக்

கின்ருன் என்று மட்டும் கூறிவிடுவதற்கில்லை. அந்த அழகு தன் உயிரையே குடித்துவிடும் போல் இருக்கின்றதே என்று பேசுகின்ருன். ஏன் அவ்வாறு அவன் கூற வேண்டும்? இது சிந்திக்க வேண்டியதோர் இடமாகும்? உலக வாழ்க்கையில் ஆசை என்பது இயற்கையேயாகும். ஒரு பொருளினை ஆசையுடன் பார்த்தவுடனேயே மனதில் இன்பம் எழுகின்றது. ஆசைப்பட்ட பொருள் தனச்குக் கிடைக்க வேண்டுமே என்று எண்ணுகின்றபோது, கிடைக்காதோ என்கிற ஐயமும் தோன்றும். அதனுல் இன்பம் பெற்ற உள்ளம், துன்பத்திலேயும் துவண்டுவிடும்.

அழகிய தோற்றத்தினைக் கண்ட அவன் இப் பெண்ணின் பார்வை உயிரைக் கொண்டு செல்லும் எமனுகக் காணப்படுகின்றதே என்றுகூட சொல்லத் தயங்கவில்லை. அவன் வாய்ச் சொல் நமக்கு அதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கின்றது. காதலன் இதோ பேசுகின்ருன். நான் எமன் என்று சொல்லுவதைக் கேட்டுதான் இருக்கின்றேன். ஆனல் நேரில் பார்த்ததில்லை. இப்பொழுது இப் பெண் பார்க்கின்ற பார்வையினையும் அவள் கண்களையும் நினைத்துப் பார்த்தால், எமன் இப்படித்தான் இருப்பானே என்று தெரிந்து கொண்டேன்.

**''பண்டுஅறியேன் கூற்று என்பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேர் அமர்க் கட்டு''**

குறட்பா இவ்வாறு அமைந்துள்ளது.

காதலன் உள்ளம் வேகமாகவே சென்று கொண்டிருக்கின்றது. அழகுத் தோற்றம் என்ற நிலத்தில் காதலன் ஆசை என்கிற விதை விதைக்கப்பட்டு விடுகிறது. ஆதலால்தான் திரும்பத் திரும்ப அந்த ஆடவன் அப் பெண்ணின் அழகினையே பற்பல முறை

யில் பேசுகின்றான். இப் பெண்ணின் பார்வை தனது உள்ளத்தினை அப்படியே கொண்டு செல்லுவதால் கூற்றுவன் தான் என்று கூறினான்.

உடனே அவனுடைய இந்த எண்ணம் மாறி விட்டது. இப் பெண் என்மீது அன்புடனேயே பார்வையினைச் செலுத்துகின்றாள். ஆதலால் அவளுடைய பார்வையினைக் கூற்றுவன் என்று சொல்ல மாட்டேன். அழகிய பெண்ணேதான் இவள் என்பேன். உடனே வேறோர் எண்ணமும் அவனுக்கு வந்துவிடுகின்றது. அப் பெண்ணையே உற்று நோக்கினான் வாலிபன்தானே! அந்தப் பெண் அஞ்சிப் பார்ப்பதையும், மருண்டு பார்ப்பதையும் அவன் அறிந்து கொள்ளுகின்றான். ஆதலால் இவளொரு பெண் மானோ! என்றும் சொல்லுகின்றான்.

இவ்விதமான மூன்று வகைப்பட்ட பார்வைகளும் அப் பெண்ணிடத்திலே காணுகின்றேன் என்று கூறி, காதலன் அப் பெண்ணின் அழகினையும், பார்வையினையும் மேம்படுத்துகின்றான்.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம் இம்மூன்றும் உடைத்து"**

என்ற குறட்பா காதலியை நிறுத்திக் காட்டுகிறது. மீண்டும் அப் பெண்ணின் உறுப்புக்களில் சிலவற்றைக் கண்டு சுவைத்து, தனித் தனியாக அவைகளின் சிறப்பினைக் காதலன் பேசி விடுகின்றான்.

தான் ஒரு சிறந்த வீரன் என்றும் சொல்லுகின்றான். அவன் வீரத்தின் பெருஞ்சிறப்பினை அவனே தற்பெருமையாகக் கூறுகின்றான் என்றும் சொல்லலாம். அவன் போர்க்களத்தில் போரிடுவதை போர்க் களத்திற்கு வந்து காணாதவர்களும் கண்டவர்

சொல்லக் கேட்டு, அஞ்சி ஓடுவார்களாம். அவ்வளவு பெரிய வீரனும் இக் காதலன். அப்படி என்ருல் அவனுடைய ஆற்றலும், வலிமையும் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்? இவ்வளவு வன்மை படைத்த அவன் அப்பெண்ணின் நுதலினை, அதாவது "நெற்றியின் அழகினைக் கண்ட மாத்திரத்திலேயே தன்னுடைய வலிமை எல்லாம் உடைந்து விட்டதே" என்று கலங்குகின்ருன். மென்மை பொருந்திய அம்மாதின் ஒரே ஒரு அவயத்தின் அழகிற்கே அவனுடைய பலமெல்லாம் எங்கேயோ போய் உடைந்து விட்டதே என்பதைக் கேட்கும்பொழுது நமக்கும் ஒரு மாதிரியாகத்தான் தோன்றும். இதனைக் கூறுகிறது இந்தக் குறட்பா.

**''ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்குமென் பீடு''**

காதலுக்கு முன் வீரம் என்ன செய்யும்?

பகைவர்கள் பலரையும் வென்ற அவ் வீரன் அந்த வீரக் காதலனும் அம்மாதின் அழகில் சிக்கித் தவிக்கின்ருன் என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். இவ்வாறு அக் காதலனின் பார்வையால் நேர்ந்ததைக் கூறுகின்ற ஆசிரியர் அப் பெண்ணின் உள்ளமும் காதல் வாயிலினைத் திறக்கின்றது என்கின்ருர்.

அவன் பார்த்த பார்வைகளும் அதற்கு உடன்பட்டு இசைவு தருவதுபோல அமைந்துவிடுகின்ற அப் பெண்ணின் பார்வைகளும் கூறப்படுகின்றன. அந்த நங்கையின் பார்வையில் இரண்டு உண்மைகளைப் புரிந்து கொண்டேன் என்று அக் காதலன் கூறுகின்ருன். இன்பத்தினைப் பெருக்கிவிட்ட அப் பெண்ணின் பார்வை முதலில் அவனுக்கு நோயினைத் தந்ததாம். உடனேயே அப் பார்வையில் அவளும்

தனது எண்ணத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றாள் என்பதை ஆ...என்னே அவன் மகிழ்ச்சி...அவன் கண்டு கொள்ளுகின்றான்...ஆதலினால் அப் பெண்ணின் அதே பார்வை அவனுக்கு நோய் தீர்க்கும் மருந்தாகவும் ஆகிவிட்டதாம்.

மகிழ்ச்சியில் திளைத்துவிட்ட அவன் உள்ளம் பேசுகின்றது.

**"இருநோக்கு இவள்உண்கண் உள்வது ஒருநோக்கு,**
**நோய்நோக்கு,ஒறுன் அந்நோய் மருந்து"**

இக் கருத்தினை அவனுடைய கற்பனை என்று கூறிவிட முடியாது. உண்மையினை உணர்ந்தே சொல்லுகின்றான். நோயினையும் தந்து, அந்நோய்க்கு மருந்தும் தந்துவிட்டான் என்று பேசலானான்.

மறு முறையும், காதல் உள்ளம் வளர்கின்ற அப் பெண்ணின் பார்வையினை நுணுகி நுட்பமாகக் கண்டு கொள்ளுகின்றான். அதனையும் தெளிவுபடுத்துகின்றான். அந்த மாது அவனைப் பார்த்து அப்படியே நின்றுவிடவில்லை; ஏதோ குறிப்பினை அன்புடன் வெளியிடுவதைப் போன்று தலை குனிந்து கொள்ளுகின்றாள். ஆம். அந்தக் குறிப்பில் எவ்வளவு பெரிய காதல் நுட்பம் நிறைந்துவிடுகின்றது.

அப் பெரிய கருத்தினை அவனால்தான் புரிந்து கொள்ள முடிகின்றது. காதலனாயிற்றே! அவ்வாறு அப் பெண் செய்வது எப்படி இருக்கின்றது என்றால் அவர்கள் இருவருக்குள்ளும் வளர்ந்து வருகின்ற காதல் என்கின்ற பயிரினை வளர்ப்பதற்கு தண்ணீர் ஊற்றுவது போல இருந்ததாம். காதலியின் குறிப்பில் கருத்தாழம் கண்டவன் காதலனே! காதலை, நீர் ஊற்றி வளர்க்கின்றாள்!

**''நோக்கினள் நோக்கி இறைஞ்சினள் அஃதுஅவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்''**

என்பது குறட்பா.

வளர்க்கின்ற பொறுப்பு பெண்களையே சாரும் என்பதும் பொதுவான உண்மையன்றோ! காதல் பயிரினை வளர்க்கின்ற குறிப்பினையும் அப் பெண்ணின் பார்வை உணர்த்துகின்றது. அவ்வளவுதானா அப் பெண்ணிடம் அக் காதலன் காண முடிந்தது? மேலும் பல அரிய நிகழ்ச்சிகளை அப் பெண்ணின் உணர்ச்சி நிறைந்த பார்வையில் அவன் கண்டுகொள்ள முடிகின்றது.

பெண்களுக்கென்றே இயல்பாக அமைந்துவிட்ட தனிப்பட்ட இன்ப குணங்களும் செயல்களும் பலவுண்டு. அவன் அம்மாதினை உற்று நோக்கினான். நாணம் நிறைந்தவளாயிற்றே அப் பெண்! நாணம் என்பதுதானே பெண்களின் அழகிற்கும், இன்பத்திற்கும் அடிப்படையானது. அவன் பார்த்தவுடனேயே அப் பெண் நிலத்தை நோக்கிக் கொண்டாளாம். அதாவது, தலை குனிந்து பூமியைப் பார்த்து நின்றாள்.

அவனும் அம்மாதினைப் பார்க்காமல் வேறு எங்கேயோ பார்ப்பது போல் இருந்தாலும். அந்த நேரத்தில் அப் பெண் அவனைத் தானாகப் பார்த்துப் புன்முறுவல் செய்தாளாம். இந்தச் சிரிப்பில் உள்ள குறிப்பும், அர்த்தமும் எவ்வளவோ உண்டு. இதையும் அந்த ஆடவன் சொல்லி மகிழ்கின்றான்...காதலனாயிற்றே...சொல்லாமலா இருப்பான்!

**''யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்''**

இந்தக் குறட்பா தன்னுள் வைத்துள்ள கருத்து மிகவும் ஆழமானதாகும். அந்த மாது புன்முறுவல்

செய்து மெல்ல நகைத்துக்கொண்டாள் என்று அவன் கண்டான். இதனால் இருவரும் காதல் கொண்டவர்களாகி அன்பு வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டனர் என்பது புலப்படுத்தப்பட்டது.

அப் பெண்ணின் பார்வைகளைப் பற்பல வகைகளாகப் பிரித்துப் பிரித்துக் காணுகின்றான். ஒவ்வொன்றிலும் அவனுடைய உள்ளம் திளைத்து இன்பத்தில் தாவுகின்றது. சில நேரங்களில் அப் பெண் அவனைக் குறி வைத்துப் பார்ப்பதுபோல் பார்க்காமல் ஒரு கண்ணைக் கொஞ்சம் சுருக்கி அரைப் பார்வையில் பார்ப்பது போலும் பார்க்கின்றாளாம். அப்படிப் பார்த்துக்கொண்டு புன்முறுவலும் செய்கின்றாள். இப்படிப்பட்ட பார்வையும், நகைப்பும், அவன் உள்ளத்தில் அம்மாதினை அடைந்தேவிட்டோம் என்ற எண்ணத்தினை வலியுறுத்தி விடுகின்றது.

**''குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்''**

இக் குறட்பாவினால் இரு காதலர்களுக்கிடையே பறிமாறிக்கொள்ளப்பட்ட பார்வைகள் எவ்வளவு பயனளித்துவிட்டன என்பதை அறிகின்றோம்.

இருவரும் உள்ளம் ஒன்றுபட்டு விட்டார்கள். காதல் பயனளித்துவிட்டது. காதல் வாழ்விலே இன்பம் நுகரும் பக்குவத்தில் இலகின்றனர். திருக்குறள் காமத்துப் பாலில் அம்மாதின் அழகினைக் கண்டு அந்த ஆடவன் மயங்குவதைக் கூறும் "தகையணங் குறுத்தல்" என்ற அதிகாரத்தின் தொகுப்பினையும், இருவர் பார்வைகளின் உண்மையினை உணர்த்தும் "குறிப்பறிதல்" என்ற அதிகாரத்தின் விளக்கத்தினையும் கண்டோம்.

## மன அமைதி

இல்லற வாழ்க்கை மிகவும் பொறுப்புள்ள சிறந்த வாழ்க்கையாகும். மனைவி மக்களுடன் உற்றார், உறவினருடன் இவ்வுலக இன்பத்தில் ஒருவன் இருந்து வாழ வேண்டிய வாழ்க்கையே ஆகும். அவ்வாறு வாழ்கின்ற இல்லறத்தான் பல நற்குணங்களைக் கடைப்பிடித்து வாழ்தல் வேண்டும். இல்லையென்றால் பொல்லாத வாழ்க்கையாகவே முடியும். இல்லற இன்பம் கெட்டு, துன்பம் மிகுந்து துயரத்தில் மூழ்கிக் கெட்டுவிடுவான். உலக மக்களிடையே வாழ்பவன் ஆனபடியால் அறிவுத் திறனும் ஆற்றலும் பண்பாடும் அவனிடத்தில் என்றும் இருத்தல் வேண்டும். மயக்கமான எண்ணங்களுக்கு இடம் கொடுத்துவிடுதல் ஆகாது. தீய எண்ணங்களுக்கு இரையாகிவிடக் கூடாது. இல்லறத்தான் உலகச் சூழ்நிலைக்குள் இருந்து கொண்டே வாழ்பவனாகின்றான்.

தீமைகளை நீக்கவும், நல்லறத்தை மேற்கொண்டு வாழவும் இன்பம் பெற்று இல்லறப் பயன் அடையவும் பற்பல வழிமுறைகளை ஆசிரியர் முறையாக வகுத்துக் கூறுகின்றார். மிகத் தீமையான எண்ணங்களிலே அயலான் வாழ்க்கைத் துணைவியை விரும்புதல் என்ற கொடிய தீமையினையும் குறித்துக் காட்டுகின்றார். பிறன் மனைவியை விரும்புதல் எளிது என்று எண்ணாதே என்று இடித்துரைத்துக் கண்டிக்கின்றார். அப்படிப் பட்ட எண்ணத்தைக் கொண்டவனைச் செத்த பிணமாகவே எண்ண வேண்டும் என்கின்றார். பகையும், பாவமும், பழியும், அச்சமும் ஆகிய இந்த நான்கும் பிறன்மனை நயக்கும் பேதையை விட்டு நீங்காது என்று,

**"பகை, பாவம், அச்சம், பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண்"**

என்று குறட்பாவினைத் தருகின்றார். இத்தகைய கொடிய தீமையினை நீக்கி வாழ்பவனே இல்லறத்தான் ஆவான்.

பேராண்மை பெரிய வீரம்—ஆண் தன்மை—என்று கூறப்படுவதெல்லாம் பிறன்மனை நோக்காத பேராண்மை தான் என்று விளக்கம் தருகின்றார். அத்தகைய தீமையினை நீக்கி வாழ்பவனே உண்மையான வீரனாவான். அப்படிப்பட்டவன் உள்ளமே, மனமே வீரம் நிறைந்ததாகும். பண்பட்ட உள்ளத்தில்தான் பொறுமை என்கின்ற பெருங்குணம் காணப்படும். "பொறையுடைமை" என்பது அரியதொரு குணமல்லவா? பொறுமை இல்லாதவன் சீர் கெட்டுப் போவானே? பொறுமையுள்ளவர்கள் நிலையான இன்பத்தினைப் பெறுவார்கள். உலக மக்களும் பொறுமை நிறைந்த பெரியார்களைப் போற்றிப் புகழ்வார்கள். அவர்களின் சிறப்பினைப் பொன் போல உள்ளத்தில் வைத்துப் பாராட்டுவார்கள். பொறுமையிழந்து பிறர்க்குத் துன்பம் செய்பவர்களை இவ்வுலகம் வெறுத்து ஒதுக்கியே விடும். ஆனால் பொறுமை நிறைந்த பெரியார்களை உலகோர் மறக்க மாட்டார்கள். வணங்கி வாழ்த்துவார்கள்.

**"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து"**

என்பது குறட்பா.

பொறுமை இழந்தவர்கள் பிறர்க்கும் துன்பம் தருவர்; தாமும் துன்பப்படுவர் என்பதாகும்.

பொறுமையினை இழந்து பிறர்க்கு உடனே துன்பம் தருகின்றவர்கள் இன்பம் அடைவதாக நினைக்

கிறார்கள். அந்த இன்பம் எத்தனை நாளைக்கு? ஒரு நாளைக்குத்தானே! பொறுமையிழந்து தீமை செய்தவனைத் தண்டித்துவிட்டோம், என்ற எண்ணம்—ஒருவித மகிழ்ச்சி—அன்றைக்கு மட்டும்தானே இருக்கும். ஆனால் பிறன் கொடுத்த துன்பத்தினைப் பொறுத்துக் கொண்ட பெரியவர்களுக்கோ என்றால், இவ்வுலகம் உள்ள அளவும் புகழும், இன்பமும் இருந்து கொண்டல்லவா இருக்கும். பொறுமை குணத்தின் அருமையான பயனைச் சிந்திக்க வேண்டாமா? இதோ குறட்பா விளக்குவதைப் பார்ப்போம்.

**''ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்''**

நீடித்து நிலைத்து நிற்கின்ற புகழினையல்லவா பொறுமை என்னும் பண்பாடு அளிக்கின்றது. ஒரு நாள் இன்பம்தானே பொறுமை இழந்து பிறருக்குத் துன்பம் செய்பவர்களுக்கு! இன்பம் என்று அவர்கள் நினைக்கின்றார்களே! மனச்செருக்கினாலே பிறர் நமக்குத் தீமையினைச் செய்வதுண்டு. அந்தச் செருக்கு என்ன பயனைத் தரும்? ஆனால் நாம் பொறுமையினால் தாங்கிக் கொண்டால் உயர்ந்த தகுதியல்லவா அது! பொறுத்துக் கொள்ளுவதையே தகுதியென்று ஆசிரியர் அழகாகக் கூறுகின்றார். பொறுமை என்னும் தகுதியுள்ளவர்களே வென்றவர்களாவார்கள். வெற்றியும் அதுவேயாகும். மனித வெற்றியே பொறுமைக் குணமாகும். மனச் செருக்கால் தீமை செய்வது அற்ப நேரத்திலே முடிந்துவிடும். நாம் தகுதியால், பொறுமையால், வென்று விடுதல், உயர்ந்த மனித குணமாகும்.

**''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்''**

என்று குறளறம் பேசுகின்றது. இந்தப் பூமியே பொறுமை என்னும் குணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதாகும். இப் பூமியில் வாழும் நாமும் அப் பூமியில் பொறுமைக் குணத்தினைப் பெற்று பின் பற்றி வாழ வேண்டாமா?

தன்னைத் தோண்டுபவனையும் இப் பூமி தாங்கிக் கொண்டிருக்கின்றதே. தன்னைத் தோண்டுகிறவனுக்கு இந்த நிலம் தீமையா செய்கின்றது. இல்லையே; நன்மை தானே செய்கின்றது. அத்தகைய பொறுமைக் குணத்தினையே நாமும் பழகிக் கொள்ள வேண்டாமா? அதுதான் தலையான குணம் என்று ஆசிரியர் வள்ளுவனார் அழகுற எடுத்துக் காட்டுகின்றார்.

**''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.''**

நம்மை இகழ்ந்து பேசுவோர் அற்பர்களாகவே இருப்பர். நாம் பொறுமையினைக் கைக் கொள்ளுவோமேயானால் அப்பண்பு நம்மை என்றும் உயர்த்திக் கொண்டே போகும்.

உண்ணாமல் விரதம் நோற்கின்ற பெரியார்களை விடவும், பொறுமையுடையவன் சிறப்பித்துப் பேசப் படுகின்றான். பிறர் நம்மைத் தாழ்த்திக் குறைவான கொடுமையான சொற்களைச் சொன்னால் அவைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் முடியாததாகத்தான் இருக்கும். இருந்தாலும் அதனையும் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொள்ளும் பண்பினை ஒருவன் பெற்றுவிட்டால் ஆம் அவன் பெருமையே பெரிது. உண்ணாமல் நோன்பு நோற்கின்ற முனிவர்களையும்விட மேலானவனாகக் கருதப்படுவான் என்பது வள்ளுவனாரின் திருவாக்காகும்.

"உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்"

என்று பொறுமையாளன் உயர்த்தியே பேசப்படு கின்றான். பொறுமை என்கின்ற குணத்திற்கு எவ்வளவோ பெரிய இடத்தினை ஆசிரியர் தந்து விடுகின்றார். பொறுமையாளர்களே புகழேந்துவார்கள். எவ்வாறு பொறுமை என்பது உயர்ந்த பண்போ, அதற்கு முற்றிலும் மாறான தீயகுணம்தான் அழுக்காறு என்கின்ற தன்மையாகும். இத்தீய குணத்தினைத்தான் பொறாமை என்று கூறுகின்றோம். நெஞ்சத்தில் அழுக்காறு கொண்டு வாழ்பவன் என்றைக்குமே தேறமாட்டான். அவன் கெட்டழிவது உறுதி. தன்னை உடையவனுக்குப் பெரும் தீமையினைத் தந்து அவனை அப் பொறாமை என்னும் குணம் ஒழித்து விடுவதாகும். அழுக்காறு உடையவனுக்குப் பகைவர்கள் வந்து தீமை செய்ய வேண்டும் என்பது இல்லை; பகைவர்களே தேவையில்லையாம். ஏனென்றால், பொறாமை அழுக்காறு என்கின்றே ஒன்றே போதுமாம்; அவனைக் கெடுப்பதற்கு.

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடு ஈன்பது"

என்று கூறுகிறது குறட்பா. பகைவர்களும் செய்ய முடியாத கொடிய தீமையினை அந்த அழுக்காறே அவனுக்குச் செய்துவிடும். இந்தக் குணத்தினையும் கொண்டிருக்கும் மக்களும் வாழ்கின்றார்களே! அந்தோ! மற்றவர்கள் செல்வப் பெருக்கில் வாழ்ந்தால் அழுக்காறு கொண்டவனால் தாங்க முடியவில்லையே! பிறர் நன்றாக இருந்தால் நாம் கண்டு மகிழ வேண்டுமே! அழுக்காறு உடையவன் அப்படி இருக்க மாட்டானும். பிறருடைய செல்வத்தினைக் கண்டால் பொறாமை கொண்டு பேசு

வான். அழுக்கறுப்பான்; அவனுக்கும், அறத்திற்கும் சம்பந்தமே இருக்காது. அவனுக்கு அற வாழ்க்கையே இருக்காது. அப்படி என்ருல் தீய பிறவியாகவே அவன் வாழ்ந்து கெட்டு விடுவான்.

**"அறம்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்**
**பேணுது அழுக்கறுப் பான்"**

என்று குறட்பா சொல்லுகின்றது. பிறரைப் பார்த்துப் பொருமைப்படாதே என்று பன்முறையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்ருர். அழுக்காறு என்ற தீய குணத்தின் ஆபத்தினே, கொடுமையினேப் பலர் இன்னும் தெரிந்து கொள்ளாலாமலேயே இருக்கின்ருர்கள் என்றும் கூறலாம். தெரிந்து கொண்டிருந்தால் அத்தீய அழுக்காற்றினே வைத்துக் கொள்ள மாட்டார்களே; அழுக்காறு, பொருமை என்கின்ற இத் தீய தன்மையினே "ஒரு பாவி" என்று ஆசிரியர் அழைக்கின்ருர்.

அழுக்காறு என்கின்ற பாவி தன்னே உடையவனேக் கெடுத்து, வறுமையாளனுகச் செய்து செல்வமே சேராதபடி தடுத்து அவனே மீளாத கொடிய துன்ப உலகத்திலும் கொண்டுபோய்த் தள்ளிவிடுமாம். என்னே கொடுமை!

**"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்"**

என்று குறளறம் அச்சுறுத்திப் பேசிவிடுகின்றதே. எத்தகைய பெரிய தீங்கினே இப் பொருமையான பாவிப் பயல் செய்து விடுகின்ருன். பொருமைப் பேயினேக் கண்டு அஞ்சுவோமாக.

செல்வத்துக்குரியவளேத் திருமகள் என்று கூறுவது வழக்கம். செய்யவள் என்றும் குறிப்பதுண்டு. ஆசிரியர் வள்ளுவனுரும் அவ்வாறே கூறுகின்ருர். அந்தச் செய்யவள்—வறுமைக்கு அடையாளமாகக் கூறப்படும்

தங்கையை — அதாவது மூதேவியைக் கூப்பிட்டுப் பொறாமையுள்ளவனிடத்தில் போய் இருக்கும்படிச் சொல்லி விடுவாளாம். பிறரைக் கண்டு மனம் சகிக்காமல் பொறாமை கொண்டு அலைபவர்களைக் கண்டித்துத்தான் இந்த உண்மையினைக் கூறுகின்றார்.

**"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்."**

இனியேனும் பொறாமை கொண்டவர்கள் மனம் திருந்துவார்களாக. இவர்களெல்லாம் சமுதாய வளர்ச்சிக்கே பெரும் தீங்கிழைப்பவர்களாயிற்றே! பொறாமைக்காரனுடைய தீய எண்ணங்கள் பலவகைகளாக இருக்குமாம். யாருக்காவது ஒருவர் ஏதேனும் கொடுத்து உதவி செய்தால், அதைக் கண்டு பொறுக்க மாட்டானும் இந்த அழுக்காறு கொண்டவன். ஐயோ கொடுக்கிறானே—அவன் வாங்கி மகிழ்கின்றானே! என நினைத்துப் பொறாமைப்படுவானும். அப்படிப்பட்டவனைப் பார்த்து ஆசிரியர் வள்ளுவனார், மிகக் கடுமையாகவே கண்டித்து விடுகின்றார். அப்படிப்பட்டவனும், அவனுடைய பெண்டு பிள்ளைகள் அவனைச் சார்ந்திருக்கின்ற சுற்றத்தார் எல்லோருமே உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றித் தவிப்பார்கள் என்று கூறுகின்றார். இதைவிட இந்தப் பொறாமையின் கொடுமையினை எவ்வாறு தான் கூற முடியும். குறட்பா எளிமையாக அந்த உண்மையினைக் காட்டி விடுகின்றது.

**"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்"**

—பொறாமைக் குணத்தினை அறவே ஒழிப்பீர்களாக.

எனவே தான் மனித ஒழுக்கத்தில் தலையான ஒழுக்கமாக இதனைக் கொள்ளுதல் வேண்டும். தமது நெஞ்சத்தில் பொறாமைக் குணத்திற்குச் சிறிதளவுகூட

இடமே கொடுக்கக் கூடாது. அழுக்காறு இல்லாத மனத்தினையே என்றென்றும் கொண்டிருக்கப் பழகுதல் வேண்டும். அதுவே ஒருவன் உயர்ந்த ஒழுக்கமாகக் கொள்ளக் கடவன் என்று ஆசிரியர் அமைக்கின்றார்.

**"ஒழுக்காறுக் கொள்க ஒருவன்;தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு"**

என்பது குறட்பாவாகும். மனிதத் தன்மையினைக் கெடுத்து மற்றவர்களுக்கும், தீமையினை விளைவிக்கின்ற பொறாமைக் குணம் அறவே அற்றுப் போகட்டும்!

இந்தக் கொடிய பொறாமைக் குணத்தைச் சேர்ந்ததுதான் "வெஃகுதல்" என்ற தீமைக் குணமாகும். வெஃகுதல் என்றால் மற்றவர்களிடம் இருக்கும் பொருளை செல்வத்தினை அபகரிக்க எண்ணுவதாகும். தான் உழைத்துப் பொருள் தேடவேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தினை விட்டுவிட்டு மற்றவர்களிடம் இருக்கும் பொருளினைக் கவர்ந்து கொள்ள நினைக்கும் வஞ்சனையான எண்ணத்திற்குத்தான் "வெஃகுதல்" என்று பெயர். இந்தத் தீய எண்ணங் கொண்டவர்களையும் பலரும் அறியும்படிச் செய்து விளக்கம் தருகின்றார் ஆசிரியர். அப்படி வஞ்சித்துப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ள நினைப்பவனுடைய குடி—குடும்பம் அழிந்தே போகும் என்கின்றார். அது மட்டுமல்ல, பல குற்றங்களுக்கும், அவன் ஆளாகி நிற்பவனாவான். மனச் சாட்சியையும் மறந்து, நடுவுநிலைமை என்கின்ற நேர்மைக் குணத்தையும் விட்டுப் பிறர் பொருளை வெஃகுவானேயானால் அபகரிக்க நினைப்பானேயானால் அவன் குடி முழுதும் தேய்ந்து அழிந்தே விடும் என்று கூறுகின்றார்.

**"நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே மிகும்"**

என்பது குறட்பாவும். சிலர் பரந்த அறிவு பெற்றவர்களாகக்கூட இருப்பதாகக்கூறலாம். அப்படி இருந்தும் என்ன பயன்? மற்றவன் பொருளை வஞ்சித்து, வெஃகி அபகரிக்க எண்ணுவானேயானல் நுட்பமான அறிவினை அவன் உடையவன் என்று கூறுவதில் என்ன பயன் உண்டோ? என்று கேட்கிறார் ஆசிரியர்.

"அஃகி அகன்ற அறிவுஎன்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்"

என்று குறளறம் ஓதுகின்றது.

அறிவின் நுட்பத்தினை இந்த வேலைக்காகவா பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பால் சுட்டிக் காட்டி இடித்துரைக்கின்றார். வெஃகுதல் என்ற இந்த இழிந்த செயல் பழிபாவத்திற்கே ஆளாக்கி விடுவதாகும். பிறன் பொருளை வஞ்சித்து, அபகரித்துக் கொள்ள ஒரு போதும் எண்ணாதே; அப்படியே நீ அபகரித்துக் கொண்டாலும் அப்பொருளினை நீ அனுபவிக்கவே முடியாது. அனுபவித்தால் வருகின்ற பயன் தீமையே ஆகும் என்பது வள்ளுவனாரின் வாக்காகும்.

"வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன்"

என்ற குறட்பா வெஃகுபவர்களைச் சுட்டிக் காட்டி உரைக்கின்றது.

வெஃகுதல் செய்தே செல்வந்தர்களாகிவிட வேண்டும் என்று நினைக்கின்ற கொடியவர்களும் இருப்பார்கள் அல்லவா? அவர்களுக்குப் பல முறைகளிலும் ஆசிரியர் அறவுரைப்பு காட்டுகிறார்.

உலக வாழ்க்கையில் அனுபவித்து மகிழ வேண்டிய இன்பச் சூழ்நிலைகள் பற்பல உண்டு. அவைகளை எல்லாம் பெற்று இன்பம் அடையவேண்டாமா?

அற்ப இன்பத்திற்காக வெஃகுதல் செய்பவர்கள் அதாவது பிறர் பொருளை வஞ்சித்து அபகரிக்க நினைப்பவர்கள் அற்ப இன்பத்தினை அடைந்துவிட்டதாக நினைத்துக் கொள்ளலாம். அதுவும் தவறேதான். அவர்கட்கு உலகில் மற்ற இன்பங்கள் எதுவுமே வராமல் போய்விடுமே. அறிவார்களாக.

**''சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே,**
**மற்றின்பம் வேண்டு பவர்.''**

எல்லாவிதமான உலக இன்பத்தினைப் பெற விரும்புபவர்கள் அற்ப இன்பமான வெஃகுதலைச் செய்யவே மாட்டார்கள். இதுவரை இல்லறப்பகுதியில் வள்ளுவர் அருளிய திருக்குறளில், பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறுமை, வெஃகாமை என்ற அதிகாரங்களின் கருத்துரைகளைக் கண்டோம்.

## காதல் சிறப்பும் நாணமும்

காதலர்கள், காதல் வாழ்க்கையினை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த வாழ்க்கை அவர்களை உச்சக்கட்டத்திற்குக் கொண்டுபோய் விடுகின்றது. அவனும் அவளும், உடம்பும் உயிரும்போல் ஆகிவிட்டார்கள். இந்த நிலையில் பரிசுத்தமான தூய்மையான உள்ளமும், அன்பும் எண்ணமும் அவர்கள் இருவரையும் இறுகப் பிணித்து வைத்துவிட்டது. ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசி, தங்களின் உயிர்க் காதலினை வெளிப்படுத்துகின்றார்கள். உடம்பும், உயிரும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்க முடியாது. உடம்பு இல்லையென்றால் உயிர் இல்லை. உயிர் இல்லை என்றால்

உடம்பு இல்லை. இரண்டினையும் தனியாகப் பிரித்துப் பேசுகின்ற வழக்கமும் கிடையாது.

ஒருவனோ அல்லது ஒருத்தியோ சென்றால் அவள் போகின்றாள், ஒருவர் போகின்றார், அவள் செல்கின்றாள், என்றுதான் சொல்வோம். அப்படி அல்லாமல் போகிற ஒருவரைப் பார்த்து உடம்பும், உயிரும் சேர்ந்து போகிறது என்று சொல்லமாட்டோம். அது மாதிரி அக்காதலனும், காதலியும் உயிரும் உடம்பும் போல ஒன்றாகிவிட்டார்களாம். இனி எங்களைத் தனித் தனியாகப் பிரித்துப் பேசுவதோ, இருக்கச் செய்வதோ முடியாது என்கின்றான் அக் காதலன்.

**''உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு''**

என்ற குறட்பா இந்த உண்மையினை மெய்ப்படுத்திவிடுகின்றது. இந்த கருத்து காதலன் வாயிலாக வருகின்றது. எனக்கும் இந்த மாதிற்கும் ஏற்பட்டுவிட்ட தொடர்பு, நெருக்கம் நட்பு இன்பச் சேர்க்கை உடம்பும் உயிரும் போல் ஆகிவிட்டது என்கின்றான். இந்தக் குறிப்பின் மறைபொருளினை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் பிரிக்கப்பட்டுவிட்டால் உயிர் வாழ முடியாது என்பதையே இவ்விதமாக அவன் கூறி வைத்தான். அன்பு நிறைந்த எழிலரசியாகிய அந்த மங்கை நல்லாள் கூறுகின்ற வார்த்தைகள் மிகச் சிறந்த அவளுடைய காதல் வேகத்தினைக் காட்டுகின்றது.

இணை பிரியாமல் எந்த நேரத்திலேயும் காதலனை அவள் நெஞ்சத்திலேயே எண்ணிக் கொண்டிருக்கின்றாள். அவனுக்கு அவன் வாழ்வதற்கு அவன் தங்கி இருப்பதற்கு, நிலையான இடம் அவளுடைய நெஞ்சமே யாகும். இந்தக் கருத்தினை அப்பெண் கூறுகின்ற பொழுது, கொஞ்சம் நகைப்பானதாக இருக்கின்றது

என்றே கூறலாம். அப்பெண் உணவு சாப்பிடுகிற பொழுது அந்த உணவு சூடாக இருந்தால் சாப்பிடுவதற்குப் பயப்படுகிறாளாம். ஏன் பயப்படவேண்டும்? அதற்குக் காரணத்தையும் நல்லபடியாகவே சொல்லுகிறாள்.

அவளுடைய காதலன் அவள் நெஞ்சத்திலேயே எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கின்றானும். அப்படி இருக்கும்போது சூடான உணவை அவள் சாப்பிட்டுவிட்டால் அந்தச் சூடு அவனைப் போய் சுட்டுவிடுமாம்; அவன் துன்புறுவானும். அதற்காகவே சூடான உணவையும், உண்ணுதற்கு அஞ்சுகிறேன் என்கின்றாள். காதலர்களின் எண்ணங்கள் இப்படியெல்லாம் இருந்துவிடுகின்றன.

**"நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துஉண்டல்**
**அஞ்சுவதும் வேபாக்கு அறிந்து"**

இந்தக் குறட்பா அந்தக் காதலியின் காதல் ஆழத்தினைப் பேசுகின்றது

காதலன் தன்னுடைய கண்களில் இருக்கும் பாவைகளைப் பார்த்து, கண்களைவிட்டுப் போய்விடுங்கள் என்று கூறுகின்றான். ஏன் அவ்வாறு கூறினான்? தன்னுடைய காதலியைக் கொண்டுவந்து கண்களிலேயே வைத்துக்கொள்ளப் போகிறானும். ஆதலால் கண்ணின் கருமணியின் பாவைகளும், அங்கேயே இருந்துகொண்டிருந்தால், காதலி வந்து இருப்பதற்கு இடமில்லாமற் போய்விடுமாம். ஆதலால் இடத்தைக் காலி செய்துவிடுங்கள் என்று கண்களில் இருக்கும் அந்தப் பாவைகளை நோக்கிக் கூறினான். கண்களில் பாவைகள் இல்லையென்றால் கண்களுக்குப் பார்வை கிடையாதே, குருடனாகிவிடுவோமே என்பதையும் மறந்தான்.

இவ்வுண்மையினை அழகாகக் கூறுகின்றது குறட்பா:

''கருமணியிற் பாவாய் நீபோதாய், யாம்வீழும்
திருநுதற்கு இடம் இல்லை''

அக்காதலின் எண்ணமும், ஆசையும் அளவிட முடியாததாகக் காட்டப்பட்டுள்ளது. காதலர் வாழ்க்கை இவ்வாறு இருந்து வருகின்றபோது, காதலியின் வீட்டாரின் குறுக்கீடு வந்துவிடுகின்றது. அப்பெண்ணனவள் பெற்றோரால் வீட்டில் காவல் செய்யப் பட்டுவிட்டாள். இன்பத்தில் திளைத்த இருவரும் பிரிந்திருக்கும் நேரங்கள் வருவதுண்டு. காதலியைக் காதலன் சிற்சில நாட்களாகக் காண முடியவில்லை. ஏக்கமுறுகின்றான். ஏங்கித் தவிக்கின்றான். உயிருக்குயிரான தனது அருமைக் காதலியை இனிமேல் பெற முடியாமல் போகுமோ என்ற அச்சம்கூட அவனுக்குத் தோன்றிவிடுகின்றது.

காதலினால் வளர்ந்த காம உள்ளம் படைத்த அவன் இனி தனது நிலையினை மறைத்துவைக்க முடியாதென்று முடிவு கட்டுகிறான். தன்னுடைய நிலைமையினைப் பலரும் அறியச் செய்கின்ற முடிவுக்கு வந்து விடுகின்றான். இதனால் மக்களுக்கு இருக்கவேண்டிய உயிர்ப் பொருளாகிய நாணத்தையும் விட்டுவிட அவன் தயங்கவில்லை. மடல் ஏறவேண்டுமென்று திட்டமிட்டுவிட்டான். காதலில் தோற்ற ஆண்மகன் செய்கின்ற செயலினை ''மடலூர்தல்'' என்று கூறுவது வழக்கம். அதாவது தனக்குத்தானே துன்பத்தினை உண்டாக்கிக்கொண்டு காதலியினிடமிருந்து தான் பிரிக்கப்பட்டிருக்கும் செய்தியை, பலரும் அறியச் செய்வதாகும்.

இப்படிப்பட்ட செயலைச் செய்வதற்கு யாருமே நாணுவார்கள். அதாவது வெட்கப்படுவார்கள். ஆனால்

காதலன் மடலேறுவதைவிட பாதுகாப்பு வேறு இல்லை என்கின்றான். காமத்தில் துன்புறுகிறவர்களுக்கு மடலேறுவதுதான் பாதுகாப்பாகும் என்கின்றான். இந்த நிகழ்ச்சி தன்னுடைய எண்ணம் கைகூடும்படி செய்யும் என்றும் நம்புகின்றான்.

''காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி''

என்ற குறட்பா அவன் எண்ணத்தைக் கூறுகின்றது.

காதலியைப் பிரிந்திருக்கும் துன்பம் தாங்க முடியாத நிலையில், அவன் இருக்கின்றபடியால், அவன் இப்படியெல்லாம் செய்ய முனைந்துவிட்டான். நாண முடையவர்கள் இவ்வாறு செய்யலாமா? ஆண்மை யுடையவர்கள் இவ்வாறு நடந்துகொள்ளலாமா? என்று பலரும் கூறுவது அவனுக்குத் தெரிகின்றது. இருந்தாலும் அவன் இப்பொழுது இன்பவேகம் மிகுந் தவனாகக் காட்சி அளிக்கின்றான். ஆதலால் நாணத் தினையும் நல்ல ஆண்மையினையும் ஒரு காலத்தில் நான் வைத்துக்கொண்டுதான் இருந்தேன் என்கின்றான். ஆனால் அவைகளை இப்பொழுது விட்டுவிட்டேன் என்று சொல்லுகின்றான். காமவேட்கை மிகுந்தவ னுக்கு—காதலி பிரிக்கப்பட்டு இருப்பவனுக்கு மடல் ஏறுதல்தான் வழி என்கிற தனது எண்ணத்தினை படுத்துகின்றான்.

''நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்''

இக்குறட்பா அவன் எண்ணத்தினைக் கூறிவிடுகின்றது. காதல் மிகுந்தவர்கள் நாணத்தினையும் இழக்க, தயங்க மாட்டார்கள் என்ற உண்மை உணர்த்தப்பட்டது.

ஆனால் ஆண்மகனைப்போன்றே, இன்னும் சொல்லப் போனால், ஆடவனைவிடவும் அதிகமாக இன்ப உள்ளம் படைத்த அப்பெண்ணே எல்லாவற்றையும் மறைத்தே வைத்துக்கொண்டிருக்கின்றாள். எதையுமே பிறர் அறியக்கூடாது என்று எண்ணுகின்றாள். மடலேறுதலை அவள் நினைப்பவள் அல்ல. கடல்போன்ற இன்ப வேகத்தினையும் மனத் துணிவால், அடக்கத்தால் தாங்கிக்கொண்டிருக்கும் பெண்ணைவிட பெருந் தன்மையானது வேறு எதுவுமே இல்லை என்று ஆசிரியர் வள்ளுவனார் கூறுவது பன்முறையும் சிந்திக்கத்தக்க தாகும்.

**"கடலென்ன காமம் உழந்தும்; மடலேறும்**
**பெண்ணிற் பெருந்தக்கது இல்"**

பாதுகாப்பிலே வைக்கப்பட்டிருக்கிற அக் காதலி யும், தன்னுடைய நிலைமையினை மறைத்து வைத்திருந் தாலும் எப்படியும் பலரும் புரிந்துகொள்கிறார்கள் என்று கூறுகின்றாள். ஒருவரை ஒருவர் பார்க்க முடி யாமல் தடைப்படுத்தப்பட்டிருக்கின்ற நிலை, மிகவும் வருத்தத்திற்குரியதேயாகும். அந்த நேரத்தில் ஊரார் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதும் உண்டு. அப் பெண் ஒருவனைக் காதலித்துவிட்டாள் என்று அறிந்து பலர் எப்படியோ தெரிந்துகொண்டார்களாம்.

அவளைப் பார்க்கின்றபொழுது நகைக்கின்றார் களாம். அந்த நகைப்பு அப் பெண்ணிற்கு வேதனை யைத்தானே உண்டாக்கும். அறிவில்லாதவர்கள் தன்னைப் பார்த்து நகைக்கின்றார்கள் என்றே கூறு கின்றாள்.

**"யாம்கண்ணில் காண நகுவர் அறிவில்லார்**
**யாம்பட்டது தாம்படா வாறு"**

என்கிற குறட்பா அப் பெண்ணின் துன்ப உள்ளத்தினைக் காட்டுகின்றது.

பிரிக்கப்பட்டிருக்கின்ற காதலர்கள் இருவருமே வேதனைப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மறைவாக இருந்த இவர்களுடைய காதல் வெளிப்படுவதாகி விடுகின்றது. பெற்றோரும் அறிந்துகொண்டனர். ஊராரும் தெரிந்துகொண்டனர். அக்கம் பக்கம் உள்ளவர்கள் தெரிந்துகொண்டால் அவர்கள் பேசுகின்ற பேச்சுக்குத்தான் கணக்கு இருக்க முடியுமா? அப் பெண்ணைப்பற்றியும், அக் காதலனைப்பற்றியும் ஊரார் பலவாறாகப் பேசுகின்றனர். ஊர் முழுவதும் காதலர்கள் பற்றிய பேச்சு அடிபடுகின்றது. இப்படி ஊரார் பேசுகின்ற பேச்சினை அலர் தூற்றிப் பேசுதல் என்று கூறுவது வழக்கம்.

தங்களைப்பற்றி ஊர் மக்கள் பேசுகின்ற பேச்சு காதலர்களின் காதிலேயும் விழுகின்றது. காதலர்கள் இருவரும் அப்படி ஊரார் பேசுகின்ற பேச்சு தங்களுக்கு நன்மையையே தரும் என்று முடிவு செய்கின்றனர். ஏன்? என்பதை நாம் சிந்திக்கவேண்டும். தாங்கள் இருவரும் காதலர்கள் என்பதை பெற்றோரும் மற்றோரும் தெரிந்துகொண்டால், அவர்கள் திருமணம் செய்துகொள்கிற நிலை எளிதாக முடியும் என்ற எண்ணம் உண்டாகிவிடுகின்றது. ஆதலால் ஊரார் பேசுகின்ற பேச்சும் நல்லதுதானே!

ஊரார் அலர் தூற்றிப் பேசுவதால்தான் எங்கள் உயிர் இருக்கின்றது என்று காதலர்கள் கூறுகின்றனர். இது எங்கள் பாக்கியமே என்றும் சொல்லுகின்றனர்.

**''அலர்எழ ஆருயிர் நிற்கும்; அதனைப்**
**பலர்அறியார் பாக்கியத் தால்''**

தாங்கள் இருவரும் காதலின்பத்தில் சேர்ந்து விட்டதை ஊர் மக்களே விளம்பரம் செய்து விட்டார்கள். இது எங்களுக்கு நன்மையே ஆகும் என்பது காதலர்களின் கருத்தாகும்.

இனி திருமணம் செய்துகொண்டு நாயகன் நாயகியாக இல்லறம் நடத்தி இன்பம் பருகும் வாழ்க்கையில் வந்துவிடுதல் திண்ணம் என்று காதலர்கள் முடிவு செய்துவிட்டனர். திருக்குறளில் காதல் வாழ்க்கையின் கடைசிப் பகுதிகளான "காதல் சிறப்புரைத்தல்", "நாணுத் துறவுரைத்தல்", "அலர் அறிவுறுத்தல்" என்ற அதிகாரங்களின் தொகுப்பின் விளக்கத்தினைக் கண்டோம்.

## பிரிவின் துயரம்

காதலர்களாக வாழ்ந்த ஆடவனும், பெண்ணும் தங்கள் காதலில் வெற்றி பெற்றனர். காதல் வாழ்க்கை சிறப்பாக முடிந்தது. திருமணம் நடந்தது. நாயகனும் நாயகியுமாக இன்ப இல்லறத்தை நடத்தி வருகின்றார்கள். இல்லறத்தில் இருக்கும் நாயகன் தொழிலின் காரணமாக வெளியூர் செல்கின்றான். நாயகியை விட்டுப் பிரியவேண்டிய நேரம் வந்தது. பிரிவின் துன்பத்தினைப் பொறுத்துக்கொள்ள முடியாதவள் அந்த நாயகி. நாயகனும் பிரிந்துசெல்ல வேண்டிய செய்தியை நாயகியிடம் கூற வந்தான்.

பிரிவின் துயரத்தினை தனது அருமை இன்ப நாயகி தாங்கிக்கொள்ள முடியாதவள் என்பதை அவன் அறிந்தே இருந்தான். ஆதலால் பிரிந்து செல்லவேண்டிய செய்தியினை அவளிடத்தில் கூறும்

பொழுதே, அதிவிரைவில் திரும்பிவிடுவேன் என்பதையும் சொல்லி வைத்தான். அப்படிச் சொன்னுல் பிரிதல் என்பதை மறந்து அந்த நாயகி மன அமைதி கொள்ளுவாள் என்று எண்ணினுன். நாயகியோ, விரைவில் திரும்பி வருவேன் என்று அவன் சொல்லிய வார்த்தைகளேக் கேட்க விரும்பவில்லே. என்னேப் பிரிந்து போகவில்லே என்கிற செய்தி இருந்தால் எனக்குச் சொல்லுங்கள். நீங்கள் பிரிந்து சென்று விரைவில் வந்துவிடுவேன் என்கின்ற வார்த்தைகளே, நீங்கள் வரும்பொழுது உயிருடன் இருக்கின்ருளே, அவளிடத்தில் சொல்லுங்கள் என்ருள். இது அந்த நாயகி அவனுக்குச் சொன்ன பதில்.

அதன் கருத்து, நாயகன் பிரிந்தவுடனேயே, அவளுடைய உயிரும் பிரிந்துவிடுமாம். அப்படி என்ருல் அவன் திரும்பி வந்தபொழுது அவளேப் பார்க்க முடியாது. கற்பும் இன்பமும் கண்ட,

"செல்லாமை உண்டேல் எனக்கு உரைமற்று
நின்வல்வரவு வாழ்வார்க்கு உரை"

என்ற குறட்பா அந்த நாயகியின் மேலோங்கிய இன்ப உள்ளத்தினேக் காட்டிவிடுகின்றது.

நாயகன் பிரிவினே ஒருகணமும் சகித்திருக்கமாட்டாள் என்பதே ஆழ்ந்த கருத்தாகும். நாயகன் பிரிந்து சென்று விரைவில் வருவார், வந்து அன்பு செய்வார் என்று நம்பிக்கையினேயும் அவள் இழந்துவிட்டதாகக் குறிக்கின்ருள். ஏன் அவ்வாருன எண்ணம் அவளுக்குத் தோன்றிவிட்டது? சிந்திக்கவேண்டிய இடமாகும். நாயகனும், நாயகியும் உயிரும் உடம்பும்போல் இணே பிரியாது வாழ்ந்து வருபவர்கள். அப்படி இருந்தும் பிரிந்து சென்று வருகின்றேன் என்று அவர் கூறி விட்டாரே.

அந்த வார்த்தைகளே அவளுக்குக் கடுமையாகத் தென்பட்டுவிட்டது. ''பிரிவு'' என்கிற எண்ணத்தினை தனது நாயகன் சொல்லிவிட்டதால், அவர் கல் நெஞ்சம் படைத்தவராக ஆகிவிட்டார் என்று முடிவு செய்துவிடுகிருள். அப்படி இருக்க பிரிந்து போய், வருவார் என்று அவளால் நம்ப முடியவில்லையாம்.

பிரிவு என்பதைக் கூறிய வன்கண்ணர் ஆகிய நாயகர் திரும்பி வந்து என்மீது அன்பு காட்டும் நிலைமை உண்டாகாது என்கின்ருள். மென்மைத் தன்மை நிறைந்தது பெண்ணினம் அல்லவா? நாயகியின் உள்ளம் பேசுகின்ற நயம் அருமையாக அமைந்து விட்டது. குறட்பா கூறுவதைக் கவனிப்போம்.

> **''பிரிவுரைக்கும் வன்கண்ணராயின் அரிதுஅவர்**
> **நல்குவர் என்னும் நசை''**

பிரிவால் ஏற்படும் துயரம் அருமை நாயகியை இப்படியெல்லாம் பேசவைக்கின்றது. நாயகி தன்னுடைய தான் அணிந்திருக்கும் வளையல்களைப்பற்றிப் பேசுகின்ருள். நாயகன் பிரிந்து செல்ல இருக்கின்ருன் என்ற செய்தி அவள் உள்ளத்தில் தோன்றிய உடனேயே அவள் உடம்பு மெலிந்துவிடுகிறதாம். அந்தோ! அதனுல், வளையல்கள் இருந்த இடம் விட்டு முன்கைக்குக் கழன்று வந்துவிடுகின்றனவாம். இதனுல் நாயகன் பிரிவினை அந்த வளையல்கள் முன்கூட்டியே தெரிந்துகொண்டு பலரும் அறிந்துகொள்ளும்படி செய்துவிட்டன என்கின்ருள்.

நாயகன் பிரிவு கற்பு நிறைந்த நாயகியின் உடம்பினை எவ்வளவு விரைவில் மெலிந்துவிடச் செய்கின்றது என்பதற்கு வளைய்ல்களே எடுத்துக்காட்டாக அமைந்துவிடுகின்றன. இக் கருத்தினை,

"துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை"

என்ற குறட்பா மெய்ப்பித்துவிடுகின்றது. நாயகன் பிரிந்திருப்பதை நாயகியின் உடம்பு உடனே அறிவித்துவிடும் என்பதே குறிப்பாயிற்று.

நாயகன் பிரிவினால் இன்ப நோய் என்கின்ற காமம் தன்னைத் துன்புறுத்த ஆரம்பித்துவிட்டது என்றும் உணர்த்துகின்றாள். தான் படுகின்ற காம நோய்க்குத் தீயினை நெருப்பினை உவமையாகக் காட்டுகின்றாள்.

தீயானது, தன்னைத் தொட்டவர்களைத்தான் சுடும். ஆனால் காம நோயோ விட்டுப் பிரிந்தவர்களைச் சுடும் என்கின்றாள். ஆதலால் நாயகன் பிரிவு இன்ப நோயானது தன்னைச் சுடும்படி செய்துவிட்டது என்று கூறி நொந்துகொள்ளுகின்றாள்.

"தொடிற் சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ"

என்பது அவள் சுட்டிக்காட்டியதாகும்.

தீயின் கொடுமை மிகவும் சிறியதாகக் கூறப்பட்டுவிட்டது. பிரிவுத் துயரத்தில் வாடுதல் என்பது அவளால் பொறுத்திருக்க முடியாதுதான். இப்படிப்பட்ட துன்பத்தினை, தாங்கியும் இன்ப நோயினை நீக்கியும் பிரிந்திருந்தும் வாழ்கின்ற பெண்கள் உலகில் பலர் இருந்தாலும் இருப்பார்கள் என்று கூறுகின்றாள். ஆனால் அவளோ அவ்வாறு தாங்கிக்கொண்டிருக்க முடியாதவள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றாள்.

"அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றி
பின் இருந்து வாழ்வார் பலர்"

என்று கூறுகின்றாள்.

பிரிவுத் துயரத்தைத் தாங்கிக்கொள்ளும் பெண்கள் பலர் இருக்கலாம். என்ஞல் அவ்வாறு இருக்கமுடியாது என்று குறிப்பிட்டாள். பிரிகின்ற நேரத்தில் பிரிந்து செல்லவேண்டிய எண்ணம் கொண்ட நாயகனும் நாயகியிடம் கலந்து பழகியதில், அந்த நாயகி உண்மையினைக் கண்டுகொண்டாளாம். அவன் அவளுடன் கூடிப் பழகிய முறை, அவன் பிரிந்துசெல்ல இருக்கிருன் என்பதை அவளுக்கு உணர்த்திவிட்டதாம். என்னே, நாயகியின் நுட்ப அறிவு.

நாயகனுடைய பார்வை இனிமையாகத்தான் இருந்தது. ஆனால் அவர் கலந்து பழகிய விதம் விரைவில் அவர் பிரிந்துபோக இருக்கின்ருர் என்பதை நாயகிக்கு உணர்த்திவிட்டது. நாயகியே இந்த உண்மையினை வெளிப்படையாகக் கூறுகின்ருள்.

''இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு''

என்ற குறட்பாவினல் நாயகி கண்டுகொண்ட உண்மை எடுத்துக் கூறப்பட்டது.

பிரிவுத் துன்பத்தினை தனக்கு அந்த நாயகன் உண்டாக்கிவிடுவான் என்று அவள் எண்ணியதே இல்லை. நாம் பிரியாமலேயே இருப்போம். நீ அஞ்சவே வேண்டாம் என்று நாயகன் பன்முறை அவளிடத்தில் சொல்லியதுண்டு. அப்படிச் சொன்னவரே பிரிந்து விட்டார். அப்படி இருக்க அவர் சொல்லிய வார்த்தைகளை நம்பி இருந்த தன்மீது குற்றம் இல்லை என்றும் கூறுகின்ருள். தவறு செய்தது நாயகன்தான் என்பதை குறிப்பால் உணர்த்திஞள். அவளுடைய இந்தக் கருத்தினை ஒரு குறட்பா விளக்கம் செய்கின்றது.

''அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு''

இவ்வாறு நாயகி தன்னுடைய நாயகன் பிரிந்து தனக்கு இன்ப நோயினை உண்டாக்கிவிட்ட குற்றத்தினை எடுத்துக் காட்டுகின்றாள்.

அறிவிற் சிறந்த நாயகனும் எப்பொழுதுமே பிரிய மாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் சொல்லியதற்கு மாறாகப் பிரிந்து சென்று விட்டான். அப்படி இருக்க, பிரியேன் என்று நாயகன் சொல்லுகிற வார்த்தையை இனி நம்ப முடியாது என்று கூறுகின்றாள். நாயகன் பிரிந்தவுடன் தான் உயிருடன் வாழ்வதென்பது முடியாததாகும் என்று கூறுகின்றாள். ஆதலால், அவர் பிரிந்து செல்லாமல் செய்வதுதான் அவள் உயிரைக் காப்பாற்றும் வழியாகும். நாயகன் பிரிந்து செல்லாதிருக்கும்படி செய்வாயாக என்று தன்னைச் சார்ந்த தோழியிடம் சொல்லுகின்றாள்.

''ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு''

என்ற குறட்பா அந்த நாயகியினுடைய உள்ளம் துடிக்கின்றது என்பதைக் கூறுகின்றது.

நாயகன் பிரிந்தால் அவள் உயிரும் பிரிந்துவிடுமாம். பிறகு கலந்து மகிழ்தல் எப்படி முடியும்? ஆதலால் இப்பொழுது அவர் பிரிந்து போவதையே தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றாள். பிரிவு ஓம்பல் என்பது அவளுடைய வாக்காகும்.

பெண்களுக்கு உயிரினும் அரிய பண்பு கற்பே யாகும். ஒரு பெண்ணின் கற்பின் சிறப்பு நாயகனைப் பிரிந்திருக்கின்றபொழுதுதான் முழுமையாக அறியப் படுகிறது. ஆதலால்தான் கற்பியல் பகுதியைப் பேச வந்த ஆசிரியர் ''பிரிவாற்றாமை'' என்ற அதிகாரத்

தினை முதலாவதாக அமைத்தார் என்பது குறிப்பிட வேண்டியதாகும். "இனியார் பிரிவு இன்னாது" என்பது நாயகியின் வாக்காகும்.

நாயகனைப் பிரிந்து வாழ்தல் என்பது பெரிய துன்பத்தினைக் கொடுக்கும் என்பதே அவள் குறிப்பாகும். ஆண் மகன் பொருள் தேடும் பொருட்டும், தொழில் துறை காரணமாகவும் ஆட்சியாளர் கட்டளைப்படியும் வெளியூர் செல்வது இயல்பாக இருக்கும். நாயகன் பிரிந்து செல்ல வேண்டியவனாகத்தான் இருப்பான். அப்படிப் பிரியும் பொழுதெல்லாம் கற்பு நிறைந்த காதலியின் உடல் மெலிகின்றது.

தனித்து இருக்கும் துன்பத்தைத் தாங்க முடியாதவளாகி விடுகின்றாள். தன்னை வெறும் உடம்பாகவும், தனது நாயகனை அந்த உடம்பினுள் இருக்கும் உயிராகவும், அவள் கொண்டுவிட்டாள், ஆனபடியால் தனது நாயகன் பிரிவினை தனது உயிர் பிரிவதாகவே குறிப்பிடுகின்றாள்.

கற்பு நிறைந்த பெண்ணின் இலக்கணத்திற்கு இதுவே எடுத்துக் காட்டாகும். பிரிவு என்கிற சொல்லினையே கேட்பதற்குத் துன்பம் அடைகின்ற நாயகி உண்மையாகவே நாயகனைப் பிரிந்து தனியாக இருப்பதைப் பொறுத்திருக்க மாட்டாள். ஆதலால்தான் அவள் உடல் மெலிந்து கொண்டே வருகின்றது. அழகும் குறைந்து போகிறது.

இந்தப் பகுதியில் பிரிவினால் ஏற்படும் துயரத்தை அந்த நாயகி எவ்வாறு கூறுகின்றாள் என்பதைக் காட்டும் "பிரிவு ஆற்றாமை" என்ற அதிகாரம் விளக்கப்பட்டது.

# உடலின் மெலிவு

**நா**யகியின் கற்பு நிலைமையினை அறிந்து கொள்ளும் காலம் நாயகன் பிரிந்திருக்கின்ற பொழுதே யாகும். நாயகன் பிரிவினுல் மிகுந்த துன்பத்தினை நாயகி அடைந்து வருகின்ருள். இன்ப நோயினை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துயரத்தின் அடையாளமாக வேதனையின் அறிகுறியாக அவள் உடல் மெலிந்து விடுகின்றது. தனக்கு உண்டாகி இருக்கின்ற இன்ப நோயினைப் பிறர் அறியாமல் மறைத்து வைத்திருக்க வேண்டும் என்பதே அவளுடைய எண்ணமாகும்.

பெண்களுக்கே இயல்பாக இருக்கும் குணமும் இதுவேயாகும். மறைத்து வைக்க அவள் முயற்சித்தாலும் அவ்வாறு செய்ய முடியவில்லையே என்று வருந்துகின்ருள். மறைத்து வைக்க, வைக்க இந்த நோய் அதிகப்பட்டுக் கொண்டே வருகின்றதாம். இதற்குப் பொருத்தமான உதாரணம் ஒன்றினையும் கூறுகின்ருள். ஊற்றிலிருந்து வருகின்ற தண்ணீரை இறைக்க, இறைக்க தண்ணீர் பெருகிக் கொண்டுதான் போகும். அதுபோல அவளுடைய இன்ப நோயும் அவள் மறைக்க, மறைக்க அதிகப்பட்டுக் கொண்டே போகிறதாம்.

அழகிய குறட்பா ஒன்று இக் கருத்தினைக் கூறுகின்றது:

**"மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு**
**ஊற்றுநீர் போல மிகும்."**

நாயகியின் நிலைமையினை மிகத் தெளிவாக இக் குறட்பா விளக்கி விடுகின்றது. தனக்கு உண்டான

துன்பத்தினைப் பிறரிடம் சொல்லி மனத்தினைத் தேற்றிக் கொள்ளுதல் உலக இயல்பாகும். ஆனால் இன்ப நோயினையோ வாய் விட்டுப் பிறரிடம் சொல்ல முடியாது.

நாணம் மிகுந்திருக்கின்ற நாயகி, பிறரிடம் இதனை எவ்வாறு கூறுவாள்? தனது நோயினை தனது காதலனிடமும் கூற முடியாத நிலையில் இருக்கின்றாள். அவளுடைய நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாகவே இருக்கின்றது. ஒரு பக்கம் காம நோயும், மற்றொரு பக்கம் நாணமும், அந்த நாயகியைத் துன்புறுத்துகின்றனவாம். தன்னுடைய நிலைமையினை மிகத் தெளிவாக அவள் கூறுகின்றாள்.

அவளுடைய உடம்போ மெலிந்து துன்பம் தாங்க மாட்டாமல் இருக்கின்றது. அந்த உடம்பில் இருக்கும் உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு ஒரு பக்கம் காமமும், மற்றொரு பக்கம் நாணமும் தொங்கிக் கொண்டு இருக்கின்றனவாம். இதனை எவ்வாறு தாங்கிக் கொண்டிருப்பேன் என்றுவேதனைப் படுகின்றாள்.

**''காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்**
**நோனா உடம்பின் அகத்து''**

என்ற குறளறம் அப்பெண்ணின் நிலைமையினை மெய்ப்பித்து விடுகின்றது. இவ்வளவு வேதனையையும், பிரிவுத் துன்பத்தையும் அவளுக்கு உண்டாக்கி விட்டதாகும். தன்னிடத்தில் இன்ப வேகம் என்கின்ற கடல் இருக்கின்றது என்று கூறுகின்றாள். அவ்வளவு பெரிதாக அவளுடைய ஆசை இருக்கின்றது என்பதே குறிப்பாகும்.

அப்படிப்பட்ட கடலில் அவள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அக் கடலினை நீந்திக் கரையேறு

வதற்கு தோணி வேண்டுமல்லவா? அதுதான் இல்லை யென்று வருந்துகின்றாள்.

காமக் கடலில் இருக்கின்றேன். அதனை நீந்து கின்ற புணை இல்லையே என்பது அவளுடைய பேச் சாகும். குறட்பாவினைச் சிந்திப்போம்.

**"காமக் கடல்மன்னும் உண்டே, அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்"**

என்று பேசுகிறது குறளறம். நாயகன் திரும்பி வந்தால்தான் இக் கடலிலிருந்து அவள் கரை சேர முடியும் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

நாயகருடன் கூடி மகிழ்ந்த காலத்தில் இன்பம் நுகர்ந்த அவள், மிகப் பெரிதாக கடல்போல இன்பம் இருக்கின்றதே என்று மகிழ்ந்தாள். இன்பத்தின் அளவு கடல்போல மிகவும்பெரிதாகத்தான் அவளுக்கு இருந்தது. ஆனால் நாயகன் பிரிந்தபொழுது, அவ ளுக்கு உண்டான துன்பத்தின் அளவினையும், சொல்லி விடுகின்றாள். அந்தத் துன்பத்தின் அளவோ, கட லினையும்விட மிகப் பெரிதாகப் போய்விட்டதாம்.

**"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது"**

என்று கூறுகின்றாள். பிரிவிற் துன்பம் கடலினையும் விடப் பெரிதாக இருக்கின்றதே! பாவம். அவளுந் தான் எப்படி தாங்கிக் கொண்டிருப்பாள்? உடல் மெலிவால் வருந்துகின்றாள் என்பது மட்டும் அவளுக்குத் துன்பம் அல்ல, கண்கள் அழுதுகொண்டே இருக்கின்றனவாம். இரவில் தூங்குவது இல்லை. பிரிந்த கணவனைக் காண வேண்டுமென்று துடித்துக் கொண் டிருக்கின்றனவாம்.

தன்னுடைய கண்களைப் பார்த்து அவள் ஒரு கேள்வி கேட்கின்றாள். "கண்களே, நீங்கள் ஏன் கலங்கி அழுகின்றீர்கள்? பிரிவின் துயரத்தால் நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? இந்த நோயினை உண்டாக்கிய காதலரை, நீங்கள் காட்டியதனால்தானே நான் பார்த்தேன். ஆதலால் இந்த நோய் உண்டாவதற்கு முதற் காரணம் நீங்கள்தானே!"

பெண்மையின் தன்மை நன்றாகப் புலப்பட்டு விடுகின்றது.

> "கண்தாம் கலுழ்வது எவன்கொலோ, தண்டாநோய்
> தாம்காட்ட யாம்கண் டது"

என்ற குறட்பா கண்களைப் பார்த்து நாயகி கேட்கும் கேள்வியினை உணர்த்தி விடுகின்றது.

நாயகி தன்னுடைய கண்களின் போக்கினை பல வாறாக எடுத்துரைக்கின்றாள். நாயகன் பிரிந்திருக்கின்ற பொழுதும், கண்கள் துயரத்தால் தூங்குவது இல்லையாம். அவன் வரவை நோக்கி விழித்துக் கொண்டே இருக்கின்றன. நாயகன் திரும்பி வந்த பொழுதாவது கண்மூடித் தூங்கலாம் அல்லவா? அப்பொழுதும் தூங்குவது இல்லையாம். ஏன்? நாயகன் மறுபடியும் பிரிந்து விடுவானோ என்று பயந்து, அவனையே பார்த்துக் கொண்டிருக்கின்றனவாம்.

ஆகவே, இரண்டு நேரங்களிலும் கண்கள் தூங்காமல், துன்பம் அடைந்து கொண்டே இருக்கின்றன என்று சொல்லுகின்றாள்.

> "வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
> ஆரஞர் உற்றன கண்"

என்கின்ற குறளறம், கண்களின் வேதனையை, நாயகியின் வாயிலாக நமக்குச் சொல்லி விடுகின்றது.

உறுப்புக்களிலே கண்கள் மிகவும் நுட்பமானவைகள் என்றும், சிறப்பு வாய்ந்தவை என்றும் கூறுதல் உலக வழக்காகும். இது முற்றிலும் உண்மையுமாகும். அந்தக் கண்களுடனே நாயகி வாதம் செய்வது போலவே பேசிக் கொள்கின்ருள்.

முதன் முதலில் காதலனைக் கண்கள் பார்த்த பொழுது ஆராய்ந்து, பின்னால் இன்னது நேரும் என்பதை இந்தக் கண்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நாயகன் பிரிவினால் துன்பம் வருமே என்பதை அவைகள், அந்தக் கண்கள் ஆராய்ந்து பார்க்கவில்லை. அவரைப் பார்த்து, நேசித்து இன்பம் அடைந்தன. இப்பொழுது பிரிவால் துன்பமுறு கின்றன. துன்பம் அடையலாமா? என்பதுதான் நாயகி கண்களைக் கேட்கும் கேள்வியாகும்.

இந்தத் துன்பம் நம்மால்தானே வந்தது என்று நினைத்து, அந்தக் கண்கள் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், இந்தக் கண்கள் அழுது கொண்டிருப்பது ஏனோ? என்று நாயகி கவலை யுடன் கேட்கின்ருள். இத்தனை கருத்துக்களையும் ஒரு குறட்பா அடக்கிக் காட்டுகின்றது.

> **"தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்**
> **பைதல் உழப்பது எவன்"**

கண்களினுடைய அறியாமையினை நாயகி கூறிக் கொள்ளுகின்ருள். மீண்டும் நாயகி சொல்லுவது மிகவும் வியப்பாக அமைந்து கிடக்கின்றது. கண் களின் செயலினைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பு வரு கின்றது என்று அவள் சொல்லுகின்ருள். அக் கண் களின் செயல் நகைப்புக்கு இடமாகிவிட்டதாம்.

காதலனை விரைந்து போய் அந்தக் கண்கள் பார்த் தன. கண்களைப் பார்க்கும்படி யாரும் சொல்லவில்லை

யாம். தானுகவே அந்தக் கண்கள் விரைந்து போய் அந்தக் காதலனை முதலில் பார்த்தன. இப்பொழுது அவைகளே அழுது கொண்டிருக்கின்றன. பார்த்ததும் அவைகளே. இப்பொழுது அழுவதும், அந்தக் கண்களே. இந்தச் செயல் நகைப்புக்கல்லவோ இடமாக இருக்கின்றது. நாயகியின் பேச்சு இது.

**"கதுமென தாம்நோக்கித் தாமே கலுழும்**
**இதுநகத் தக்க துடைத்து"**

என்ற ஒரு குறட்பா கண்களோடு அந்த நாயகி பேசுகின்ற பேச்சினை எடுத்துக் கூறுகின்றது.

உடல் மெலிந்து, கண்கள் அழுது, வேதனைப் பட்டுக் கொண்டிருக்கின்ற நாயகிக்கு, மற்ருெரு துன்பமும் உண்டாகி விடுகின்றது. பிரிவின் வேதனையால் அவள் உடம்பின் நிறமும் வேறுபடுகிறது. அவள் உடம்பில் பசலை நிறம் உண்டாகிவிடுகின்றது. பிரிந்த மகளிர்க்குக் கற்பின் அடையாளமாக பசலை நிறம் தோன்றுவது இயல்பேயாகும். இந்தப் பசலை நிறம் தோன்றிவிட்டதை நினைத்து வருத்தமுறுகின்ருள். இருந்தாலும், அதே நேரத்தில் தன்னுடைய அறியாமைக் குணத்தையும் வெளிப்படுத்துகின்ருள். நாயகன் பிரிந்து செல்ல அன்றைய தினம் நானே உடன்பட்டு விட்டேன்.

பிரிந்த பிறகு பிரிவின் துன்பத்தால் பசலை நிறமும் வந்துவிட்டது இந்த பசலை நிறம் வந்ததற்குக் காரணமும் நானே தான். இதை எங்கு போய்ச் சொல்லுவேன் என்று தனக்குத்தானே வருந்திக் கொள்கிருள். "பாவி இப்படிச் செய்வேனு" என்று பெண்கள் சில நேரத்தில் தங்களைத் தாங்களே நொந்து கொள்ளுவார்கள். மகளிரிடத்தில் இருக்கும் இயல்

பான குணமேதான். இக்கருத்தினை மிகவும் நயமாக குறட்பா ஒன்று அமைத்துக் காட்டுகின்றது.

**''நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்**
**பண்பியார்க்கு உரைக்கோ பிற''**

தானேதான் இந்தப் பசலை நிறத்தை வருமாறு செய்து கொண்டதை நினைத்து வருந்திக் கொள்ளு கின்றாள். பேதை மனம் வேறு என்னதான் பேசும்? தன் உடம்பின் மீது வந்த பசலை நிறமும் உடம்பு முழுதும், ஊர்ந்து சென்று பரவுகிறதாம். அதனைத் தவிர்க்க முடியவில்லை. அந்த நிறம் தன்னுடைய மேனியின் மீது பரவுகின்ற விதத்தை அந்த நாயகி குறிப்பான கருத்தோடு விளக்குகின்றாள். பிரிந்து போன நாயகன் தான் என்னை உண்டாக்கினான் என்று அந்தப் பசலை நிறம் சொல்லிக் கொண்டு செருக்கோடு அவள் உடம்பின்மீது ஏறி ஊர்ந்து போகின்றதாம்.

என்னே! அந்த நாயகியின் எண்ணம்?

**''அவர்தந்தார் என்னும் தகையால், இவர்தந்துஎன்**
**மேனிமேல் ஊரும் பசப்பு.''**

நாயகன் பிரிந்த காலத்திலிருந்தே நாயகியின் அழகு குறைந்துவிட்டது. அழகின் சாயல் அவளிடத் தில் காணப்படவில்லை. தன்னுடைய உள்ளத்தில் மறைத்து வைத்திருக்க வேண்டிய காம நோயும் எப்படியோ வெளியே தெரிந்து விடுகிறது. ஆகை யினால் அவளுடைய நாணமும் போய்விட்டது என் கின்றாள். இந்த இரண்டையுமே அந்த நாயகன் கொண்டு சென்று விட்டார் என்று கூறுகின்றாள். அதற்குப் பதிலாக காம நோயினையும், பசலை நிறத் தினையும், கொடுத்துவிட்டாராம். இரண்டை எடுத்துக் கொண்டார்.

அதற்குப் பதிலாக இரண்டினைக் கொடுத்து விட்டார்.

**''சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு**
**நோயும் பசலையும் தந்து''**

என்ற குறட்பா நாயகியின் துன்ப வேதனையைப் புலப் படுத்துகின்றது.

விளக்கினையும், இருட்டினையும் ஒப்பிட்டுக் காட்டி நாயகி தன்னை, தனது நிலையை எடுத்துரைக்கின்றாள். விளக்கில் ஒளி இருக்கும் வரையில் இருள் அங்கே தோன்றாது. விளக்கின் ஒளி மறைகின்ற சமயத்தில் அதே நேரத்தில் இருள் சூழ்ந்து கொள்ளும். ஒளி வெளிச்சம் போவதும், இருள் வருவதும் ஆகிய அந்த நேரம் கண்டு கொள்ள முடியாதபடிகூட இருக்கும்.

இருள் கவ்விக் கொள்ளுவதைப்போல நாயகனும் சேர்ந்து பிரிந்தவுடனேயே, பசப்பு நிறம் அவள் உடம்பின் மேல் வந்துவிட்டதாம்.

பசப்பு நிறம் வந்ததால் வந்த வேதனையினை அவளால் பொறுக்க முடியவில்லை. உடனேயே பசப்பு வந்துவிட்டதே என்று துன்புறுகின்றாள்.

**''விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு''**

என்ற குறட்பா, பசப்பு நிறம் வந்த காரணத்தையும், அது விரைவாக வந்த நேரத்தையும் சொல்லி விடு கின்றது.

இவ்வாறு இன்ப வேதனையினால் பசப்பு நிறம் கொண்டு விட்டாளே, இவளால் பிரிவை சகிக்க முடிய வில்லையே என்று பலரும் பேசுவது அவளுக்குத் தெரி கிறது. நாயகன் பிரிந்துவிட்டாரே—இவளை விட்டு

அவர் பிரியலாமா என்று அவர்மீது யாரும் பழி சுமத்தவில்லையாம்.

இவளைத்தான் குறையாகப் பேசுகின்றார்களாம். இதைக் கேட்டதும் அவள் வருந்துகின்றாள்.

**''பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்**
**துறந்தார் அவர்என்பார் இல்''**

என்பது குறளறம்.

பிரிந்த துயரால் வருந்தும் நாயகியின் நிலைமையினை எடுத்துக் கூறும் படர் மெலிந்து இரங்கல், கண் விதுப்பழிதல், பசப்புறு பருவரல் என்ற மூன்று அதிகாரங்களின் கருத்துரைகளைக் கண்டோம்.

## தனிமையும் கனவும்

**த**னித்தே இருந்து கொண்டிருக்கின்றாள் நாயகி· பிரிந்து போன நாயகன் இன்னும் திரும்பி வரவில்லை, அவன் வரவினை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றாள். நாளுக்கு நாள் ஏக்கம் மிகுந்து வருகின்றது. அவள் தனியாக இருந்து அறியாதவள்; நாயகனுடனேயே கூடி மகிழ்ந்து இன்பம் துய்த்துப் பழக்கப் பட்டவள். இப்பொழுது தனித்திருக்கின்ற நிலைமை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உண்மை தானே. நாயகன் அன்பினை நாள்தோறும் அவள் பருகியவள். நாயகன் அன்பு அவள்மீது பொழிந்து கொண்டிருந்தால்—அவள் தளிர்த்து மகிழ்ச்சியுடன் இருப்பாள்.

உலகில் வாழும் உயிர்கள் மழைக்காக வானத்தை நோக்கி இருக்கும். மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்தால் உலகில் வாழ்பவர்கள் இன்பம் செழிக்க

வாழ்க்கை நடத்துவார்கள். மழை இல்லை என்றால் வாழ்க்கை வறண்டு போகுமே. அது மாதிரியே விருப்பம் நிறைந்த காதலிக்கு விரும்பிய கணவன் அன்பு மழை பொழிவதுமாகும். நாயகன் பிரியாதிருந்து அன்பு மழை பெய்தால் அவள் செழித்திருப்பாள்.

உலகிற்கு மழை போன்று நாயகிக்கு நாயகன் தரும் அன்பாகிய இன்பமுமாகும். இக் கருத்தினை குறட்பா அழகுற எடுத்தோதுகின்றது.

**''வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி.''**

இக் குறட்பாவினால் வானம் அளிக்கும் மழையும், நாயகன் தரும் இன்பமும் ஒன்றாகக் கூறப்பட்டது.

தனித்து நின்று வேதனைப்படுகின்ற காதலி, இன்பத்திற்குத் தலைவனான, காமனைப்பற்றிக் குறித்துப் பேசுகின்றாள். காம வேதனையை உண்டாக்குவோன் காமதேவன் என்பது, உலக வழக்கின் பேச்சாகும். அந்தக் காமன் அந்த நாயகியை மட்டும்தான் துன்புறுத்துகின்றானும். பிரிந்திருக்கின்ற நாயகனைத் துன்பப் படுத்தவில்லையாம்.

நாயகனைத் துன்பப்படுத்தியிருந்தால் அவன் பிரிந்திருக்க மாட்டானே. என் ஒருத்தியிடம் மட்டும் காமன் போர் செய்கின்றானே! என்னுடைய பருவரலையும், அதாவது இன்ப நோயினையும் அதன் துயரத்தையும் அவன் அறிய மாட்டானோ? இவ்வாறு குற்றம் சாட்டி, காமனைக் கடிந்து கொள்ளுகின்றாள்.

**''பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
**ஒருவர்கண் நின்றுஒழுகு வான்''**

இக் குறட்பா மிகவும் எளிமையாக நாயகி பேசும் பேச்சினை எடுத்துரைக்கின்றது.

தனித்து இருக்கும் நாயகி தன்னைத் தானே அடிக்கடி நொந்து கொண்டு பேசுகின்றாள். பிரிந்திருக்கின்ற நாயகன் இன்னும் வராததால் அவள்மீது அவன் காதல் கொண்டு இருக்கவில்லையோ என்று சொல்லுகின்றாள். அப்படிக் கொண்டிருந்தால் அவர் வந்திருக்க வேண்டுமே. நம்மால் காதலிக்கப்பட்ட அவர், தானும் தன் மீது காதல் கொண்டவராக இல்லையென்று தெரிகிறது.

அப்படி இருக்க அவர் என்ன இன்பத்தினை நமக்குச் செய்யப் போகின்றார்? என்று முடிவு செய்தவள் போல நாயகி பேசுகின்றாள். தனித்து தானே இருக்கின்றாள். எத்தனையோ எண்ணங்கள் எப்படியெல்லாமோ அவளுக்கு வந்துவிடுகின்றன.

**''நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ**
**தாம்காதல் கொள்ளாக் கடை.''**

இக் குறட்பாவினால் தனித்து வாடுகின்ற நாயகிக்குத் தோன்றுகின்ற எண்ணங்கள் கூறப்பட்டன.

தூக்கிக் கொண்டு போகின்ற காவடித் தண்டுக்கு இரண்டு பக்கமும் பாரம் இருந்தால்தான் அதாவது சமமான பாரம் தொங்கிக் கொண்டிருந்தால்தான் நன்றாக இருக்கும். அப்படி இல்லாமல், ஒரு பக்கம் பாரமும், மற்றொரு பக்கம் ஒன்றுமில்லாமல் இருந்தால் என்ன கதியாகும்? அது மாதிரி காம வேட்கை என்கிற இன்பத் தாகம், நாயகன் நாயகி ஆகிய இருவரிடத்திலும் ஏத்தமாதிரி இருந்தால்தான் இன்பப் பயனை அளிப்பதாகும்.

இப்பொழுது கதாநாயகிக்கு மட்டும்தான் அந்த நோய் இருக்கின்றதாம். ஆதலால் துன்பம்தான் அடைகின்றாள்.

**"ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது"**

இருவரிடத்திலும் சமமாக இருக்க வேண்டிய இன்ப வேட்கை இல்லையே என்று நாயகி மிகவும் வருந்துகின்றாள். இவ்வாறு தனித்திருந்தே பற்பல எண்ணங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற நாயகி பழைய நினைவுகளை எண்ணி மேலும், மேலும் துன்புறுகின்றாள்.

நாயகன் பிரிவதற்கு முன்னே, தன்னுடன் கூடி மகிழ்ந்து இருந்த காலத்தில், அவள் அடைந்த இன்பத்தினை நினைத்து நினைத்துப் பார்க்கின்றாள்.

அப்படி இருந்த இன்பத்தினை நினைத்துப் பார்த்தாலும், அந்த நினைப்பு இனிமையாகவே இருக்கின்றதாம் மது குடித்து, அதாவது கள்ளுண்டு மயங்கி களிப்பவர்கள் உண்டு. அந்தக் கள்ளும் காமமும் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. கள் குடிப்பவர்கள் கள்ளினை நினைத்தால் அவர்களுக்கு இன்பம் வந்துவிடாதாம். அதனைக் குடித்தால்தான் மயக்கமும் இன்பமும் வருமாம். ஆனால் இன்பம் எனப்படும் காமமோ, அப்படிப்பட்டதல்ல, உள்ளத்திலே நினைத்துப் பார்த்தாலும் பெரிய மகிழ்ச்சியினை காமம் உண்டாக்கி விடுகின்றதாம்.

**"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது."**

இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கின்ற நாயகி பிறகு வருந்திப் புலம்புகின்றாள். நாயகனையே நினைத்துக் கொண்டிருக்கின்றாள். எப்பொழுதும் நாயகன் நினைப்பே அவளுக்குத் தோன்றிக் கொண்டிருக்கிறது. நாயகன் தன்னைப் பற்றி நினைப்பானோ என்றும் அவள் அடிக்கடி எண்ணுகின்றாள். உலக வழக்கில் தும்மல் வருவதுண்டு. தும்மல் வந்தால் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் நினைக்கின்றார்கள் என்று சொல்வது

வழக்கம். நாயகிக்கும் அப்படித் தும்மல் வந்தால் நாயகன் நினைக்கின்ருன் என்பதே பொருளாகும்.

நாயகிக்கும் தும்மல் வருகின்றதாம். ஆனுல் அந்தத் தும்மல் முழுமையாக வரவில்லையாம். தும்மல் வருவது போல இருந்து, பிறகு வராமற் போய்விடுகின்றதாம். அதற்குக் காரணத்தை நாயகியே சொல்லுகின்ருள். என்று நாயகன், என்னை நினைப்பவர் போல இருந்து, நினைக்க மாட்டார் போல் இருக்கிறதே, நன்ருக என்னை நினைத்திருந்தால், தும்மலும் எனக்கு நன்ருக வந்திருக்குமே. எனக்குத் தும்மல் வருவது போல வராமற் போகிறதே என்கிருள்.

அவள் எண்ணத்தை அப்படியே சொல்கின்றது ஒரு குறட்பா.

**"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்**
**சினைப்பதுபோன்று கெடும்"**

இவ்வாறு பலப்பல எண்ணி நாயகி வருந்துகின்ருள்.

தான் மட்டும், அவரை நினைத்துக் கொண்டிருப்பதாகவும், ஆனுல் அவரோ தன்னை நினைக்காமல் இருக்கின்ருர் என்றும் குறை சொல்லிக் குற்றம் சாட்டுகின்ருள். அப்படியானுல் அவளும் நாயகனைப் பற்றிக் கோபமாக நினைக்காமல் இருக்கலாமல்லவா? அப்படி இருந்தால் அவள் உயிர் வாழவே முடியாது என்கின்ருள். நாயகன் பிரிந்திருந்தும் அவள் உயிரோடு இருப்பதற்கு என்ன காரணம் என்பதனைக் கூறுகின்ருள். நாயகன் பிரியாதபொழுது அவள் தன்னுடனே கூடி மகிழ்ந்து, கலந்து இன்புற்ற நேரங்களையும் காலத்தையும் அடிக்கடி நினைத்துக்கொண்டே இருக்கிருளாம். அப்படி நினைக்கின்ற நினைப்புதான், அவள் உயிரோடு இருப்பதற்குக் காரணம் என்று கூறுகின்ருள்.

காதலராகிய எவருடன், நான் கூடி இருந்த இன்ப நாட்களை நினைத்துக் கொள்வதால்தான் உயிரோடு இருக்கின்றேன். ஆதலால் நான் உயிரோடிருப்பதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை.

''மற்றியான் என்னுளேன் மன்னோ அவரோடுயான்
உற்றநாள் உள்ள உளேன்''

என்ற குறட்பா அந்த நாயகி நாயகனைப் பிரிந்த பிறகும் எந்தக் காரணத்தினால் உயிரோடு இருந்து கொண்டிருக்கின்றாள் என்பதை எடுத்துரைத்து விட்டது.

எனவே, பிரிவால் துன்பப்பட்டும், புலம்பினாலும் நாயகனை அவள் நினைத்துக் கொண்டேதான் இருக்கின்றாள். அப்படி நினைத்துக் கொண்டிருக்கும்பொழுதே பிரிவு என்கின்ற எண்ணம் அவள் உள்ளத்தைச் சுட்டு விடுகின்றது. நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கின்றோம் என்று அவள் எண்ணுகிறபோதெல்லாம், பிரிவு அவள் உள்ளத்தைச் சுடுகின்றது. நாயகன் பிரிந்திருந்தாலும், எப்பொழுதும் அவனுடைய நினைவாகவே அவள் இருந்து கொண்டிருக்கின்றாள். இந்த நேரத்தில் அவள் சொல்லும் ஒரு கருத்து ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதேயாகும்.

நாயகரை மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே பிரிவு என் உள்ளத்தைச் சுட்டுவிடுகின்றதே. அப்படி என்றால் அவரை நினைக்காமல் மறந்து விட்டால் என் கதி என்ன ஆகுமோ என்று கேட்கின்றாள்.

''மறப்பின் எவன்ஆவன் மன்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்''

என்ற குறட்பா, அந்த நாயகி நாயகனை என்றுமே மறந்தறியாள் எனும் உண்மையினைக் கூறுகின்றது.

இவ்வாறு பற்பல எண்ணி, பகல் முழுதும் வருந்திக் கொண்டிருப்பாள். இரவில் தூங்கும்பொழுது கனவிலும், நாயகன் நினைப்பே அவளுக்கு இருந்துகொண்டிருக்கின்றது. கனவு வருகின்ற பொழுது அவள் வெளியிடுகின்ற கருத்துக்கள் பற்பல வகைகளாகக் காணப்படுகின்றன. கனவில் நாயகனைக் கண்டாள். பெருமகிழ்ச்சி கொண்டாள். பல நாட்களாகப் பிரிந்திருக்கும் நாயகனைப் பார்க்க முடியாமல் இருக்கின்ற நாயகி கனவில் காணுகின்றாள். கனவு என்பதுதானே நாயகனைக் கொண்டு வந்து காட்டிற்று என்பதால் கனவைப் பாராட்டுகின்றாள்.

நாயகனிடமிருந்து தூதினைக் கொண்டு வந்ததாக அந்தக் கனவை எண்ணுகின்றாள். அவ்வளவு நன்மை செய்த கனவுக்கு என்ன விருந்து செய்வேன் என்றும் சொல்கிறாள். தன்னுடைய வருத்தத்தை அறிந்து அந்தக் கனவு அவளுக்கு உதவி செய்ததாம். நாயகனைக் கொண்டு வந்து காட்டிய கனவே! உனக்கு விருந்தாக நான் என்ன செய்வேன்? என்று பேசுகின்றாள்.

**''காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**
**யாதுசெய் வேன்கொல் விருந்து''**

என்ற குறட்பா நாயகியின் பேச்சினை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. கனவுதானே என்று அவள் எளிதாக அதை நினைத்துவிடவில்லை. நேரிலே வந்து, நாயகர் அன்பு காட்டாமல் பிரிந்தே இருக்கின்றார். இருந்தாலும், கனவினில் அவரைக் காண்கின்றேன். கண்டு கொள்ளுகின்றேன். அதனால்தான் என் உயிர் போகாமல் இருக்கின்றது என்கிறாள்.

**''நனவினால் நல்கா தவரை கனவினால்**
**காண்டலின் உண்டுஎன் உயிர்''**

என்று குறட்பா பேசுகின்றது.

அவள் காணுகின்ற கனவு அவளுக்குப் பெரும் உதவியினைச் செய்து விடுகின்றது. கனவிற் காணும் பொழுதும் இன்பம் பெறுவதாகவே கூறுகின்ருள். நாயகன் நாயகியை விட்டுப் பிரிந்திருந்தால் நாயகி மட்டும் வருந்துகின்ருள் என்கிற குறைமட்டும் இருப்ப தில்லை. மற்ருெரு குறையும் உண்டு. ஊரார்கூட குறை கூறிப் பேசுவார்கள். நாயகனேடு கூடி வாழ்க்கை நடத்துகின்ற பெண்ணைத்தான் எல்லோரும் பாராட்டு வார்கள்.

அப்படியில்லாமல், நாயகனைவிட்டுப் பிரிந்திருந் தால் நாயகியையும் முறையாகப் பேசுவார்களாம். அப்படிப் பேசுவது நாயகியின் காதில் விழுகின்றது. நாயகன் என்னை விட்டுப் பிரிந்து விட்டாரென்று எல்லோரும் குறிப்பாக இவ்வூர் பெண்களும் பேசு கின்றனரே!

அவர் கனவில் என்னிடம் வந்து போனதை இவர்கள் அறிய மாட்டார்களோ என்று பேசி நாயகி மனநிறைவு கொள்ளுகிருள். இதனைக் கூறும் குறட் பாவினைச் சிந்திப்போம்.

**"நனவினுல் நம்நீத்தார் என்பர்; கனவினுல்**
**காணூர்கொல் இவ்வூ ரவர்."**

எப்பொழுதுமே நாயகனேடுதான் நாயகி வாழு கின்ருள் என்று மற்றவர்கள் சொல்வதில்தான் நாய கிக்குப் பெருமையும், சிறப்பும் உண்டு. நாயகன் பிரிந் திருந்தாலும் ஊர் மக்கள் தனது நாயகனைக் குறை கூறிப் பழித்துப் பேசுவதை அவள் பொறுத்திருக்க மாட்டாள். அவளை விட்டு நாயகன் பிரிந்துவிட்டாரே என்று ஊரார் பழித்துப் பேசுகிருர்களாம். நாயகன் அன்பில்லாதவராகி விட்டார் என்றும், நாயகரைக்

குறைவாகச் சொல்லுகிறார்களாம். அப்படிப் பேசுபவர்களுக்கு நாயகியே நல்ல பதில் சொல்லுகின்றாள்.

கனவினில் எனது நாயகன் அடிக்கடி வந்து போகின்றாரே! அவரை இந்த ஊர் மக்கள் காணாமல் இருப்பதால்தான் இப்படிச் சொல்லுகிறார்கள் என்கின்றாள். நாயகனுக்குப் பரிந்து பேசும் நாயகி அல்லவா அவள்?

**''நனவினால் நல்காரை நோவர் கனவினால்**
**காதலர் காணா தவர்''**

என்று குறட்பா நாயகி பேசும் உண்மையினை நவில்கிறது.

நனவில், அதாவது உண்மையிலேயே நேரில் வந்து அன்பு செய்யாத நாயகரைத் தேடி அழைத்துக்கொண்டு வந்துவிட்டது இந்தக் கனவு. நாயகனைப் பார்த்து இன்பம் பெறுகின்றேன். ஆதலால் இந்தக் கனவிலும் காலத்திலும் எனக்கு இன்பம் உண்டாகிவிடுகின்றது.

**''கனவினான் உண்டாகுங் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு''**

என்ற குறட்பா கனவனிடத்தும், இன்பத்தினைப் பெறுகின்ற, இன்பம் அடைகின்ற நாயகியின் நிலையினை உணர்த்தி விடுகின்றது.

இதுவரை காமத்துப் பாலில், தனிப்படர் மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவு நிலையுரைத்தல் என்ற மூன்று அதிகாரங்களின் கருத்துரை விவரிக்கப்பட்டது.

## மாலைப் பொழுதும், உடல் சோர்வும்

கற்புள்ளம் நிறைந்த நாயகி நாயகனைப் பிரிந்திருப்பதால் பிரிவுத்துன்பம் என்கிற வேதனைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டாள். உடல் சோர்வு பெற்றாள். அழுதழுது புலம்பினாள். கண்களும் வேதனையடைந்த, பசப்பு நிறம் பெற்றுவிட்டாள். இவ்வாறெல்லாம் பற்பல இன்னல்களுக்கு உட்பட்டு இருக்கின்ற அவளுக்கு மாலை நேரம் இன்னும் அதிக வேதனையைத் தருகின்றது. மாலை நேரம் வந்துவிட்டது.

காதலர்கள் இணைந்திருந்தால் மாலை நேரம் மகிழ்ச்சியைக் கொடுக்கும். காதலர்கள் பிரிந்திருந்தால் மாலைநேரம் துன்பத்தைக் கொடுக்கும். இந்தத் தன்மை இயல்பேயாகும். நாயகனைப் பிரிந்திருக்கும் நாயகியும், மாலைப்பொழுது வந்தவுடனேயே துன்பப்படுகின்றாள். மாலை நேரத்தில் மகிழ்ச்சி தரவேண்டிய நாயகன் பிரிந்திருக்கின்றானே என்று எண்ணுகின்றாள். அவள் எண்ணம், அந்த மாலைப்பொழுதினையே கடிந்து கொள்ளுகின்றது.

நேருக்கு நேரே பேசுவதைப்போல மாலைப் பொழுதினைப் பார்த்துப் பேசுகின்றாள். மாலைப் பொழுதே, முந்திய நேரங்களில் எல்லாம் என்னுடைய நாயகன் என்னைப் பிரியாதிருந்தபொழுது—வந்த மாலைப் பொழுது அல்ல நீ! அப்பொழுதெல்லாம் எங்களுக்கு இன்பம் தருவதற்காகவே நீ வந்துகொண்டிருந்தாய். இப்பொழுதோ அந்த மாலைப்பொழுதாக நீ இல்லை; நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கின்ற என்னுடைய, உயிரையே உண்ணுகின்ற முடிவுக் காலமாக வந்திருக்கின்றாய். நாயகனைப் பிரிந்திருக்கும்

நேரத்தில், வருகின்ற மாலைப்பொழுது அவளுடைய உயிரையே கொண்டுசெல்லும்போல் இருக்கின்றதாம்! அவள் படுகின்ற வேதனை அவ்வளவு பெரிதாகி விட்டது!

அந்த நாயகி மாலைப் பொழுதினைப் பார்த்துப் பேசுகின்ற பேச்சினைக் குறட்பா விளக்கிவிடுகின்றது.

''மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது''

காதலர்களிடையே இன்ப உள்ளம் மலர்கின்ற நேரம் மாலைப் பொழுதல்லவா? ஆகவேதான் அந்த நாயகி வருந்திக் கூறுவதில் பொருள் நிறைந்து பொதிந்து இருக்கின்றது.

மீண்டும் அவள் படும் துன்பத்தினைக் கொலை வேதனையாகவே கூறுகின்றாள். கொலை செய்யும் இடத்திலே கொலை செய்பவர்கள் வருவாரேயானால், கொலைக்கு ஆளாகி நிற்பவன் உள்ளம் எப்படிப்பட்ட வேதனைப்படும், என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? கொலை செய்பவர்கள் வருகிறார்களென்றால் உயிர் போகின்றது என்பதுதானே பொருள்? நாயகன் இல்லாதபோது, நாயகி இருக்கும் இடமே கொலைக் களம் போல தோன்றுகிறதாம்! என்னே! அவள் படும் வேதனை! அப்பொழுது மாலை நேரம் வருகின்றது! அவள் உயிரைக் கொண்டு போகும் கொலை செய்பவர்களைப் போல, அந்த மாலைப் பொழுது வருகின்றதாம். அவளுடைய காதலர் அங்கு இல்லாததினால்தான் இப்படிப்பட்ட நிலை அவளுக்கு ஏற்பட்டு விட்டது. இக்கருத்தினை,

''காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்''

என்கிறது குறட்பா!

கொலை செய்யப்படுகின்ற இடத்தைக் கொலைக் களம் என்று சொல்லுவார்கள். நாயகியின் மனோநிலை எவ்வளவு, அளவிட்டுக் கூறமுடியாத வேதனையடைந் திருந்தால், நாயகன் இல்லாதபோது துயிலும் இடத் தினைக் கொலைக் களம் என்று சொல்லிவிடுவாள்! சிந்திக்க வேண்டிய இடமாகும். மாலை நேரம் இவ் வளவு துன்பத்தைத் தருகின்றதே என்று எண்ணி எண்ணி வாடுகின்றாள். காலை நேரத்தையும் மாலை நேரத்தையும் ஒப்பிட்டுச் சொல்லுகின்றாள்.

காலை நேரத்தில் இன்ப எண்ணங்கள் துன்புறுத்து வ்து இல்லை. ஆதலால் காலை நேரம் அவளுக்கு நன்மை யினையே செய்கின்றது. ஆனால் மாலை நேரமோ அவ ளுக்குப் பகைவனாக மாறி துன்பத்தைக் கொடுக்கின் றது. அவள் கூறுகின்ற சொற்கள் நேர்மையாகவே இருக்கின்றன. காலை நேரத்திற்கு நான் என்ன நன்மை செய்தேன்? மாலைப் பொழுதிற்கு என்ன தீமை செய்தேன்? ஒன்றும் இல்லையே! அப்படி இருக்க, காலைப் பொழுது எனக்கு நன்மையாய் அமைந்திருக் கின்றது. மாலைப் பொழுதோ, பகைவனாக மாறி விட்டதே.

**"காலைக்குச் செய்தநன்று என்கொல், எவன்கொல்யான்**
**மாலைக்குச் செய்த பகை?"**

இக்குறட்பா நாயகியின் உள்ளத்தினை, அவள் பேசும் பேச்சினை எளிமையாக நமக்கு உணர்த்திவிடு கின்றது.

இன்பத் தாகம் கொண்டவர்களுக்கு காலை நேரம், பகற்பொழுது, மாலை நேரம் என்ற இந்த மூவகைக் காலங்களிலும், மாலை நேரத்தில்தான் இன்ப நோய் மலர்வதாகின்றது. காமம் என்கின்ற மலர், காலை

நேரத்தில் அரும்பாகத்தான் இருக்கும். அரும்பு என்பது மிகச் சிறியதாக இருப்பதாகும். இது இயற்கையின் தன்மையேயாகும். அந்தச் சிறிய அரும்பு, பகற்பொழுதில் போதாக மாறும். அதாவது பேரரும்பாக விரிந்து வரும். மாலை நேரம் வந்தவுடனேயே நன்றாக மலர்ந்து விரிந்து இதழ்கள் தோன்ற காட்சியளிக்கும். இன்ப நோயும் அப்படிப் பட்டதேயாகும்.

**"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்"**

என்ற குறட்பா இந்த உண்மையினைத் தெளிவுபடுத்திவிடுகின்றது.

மாலை நேரமானது இவ்வளவு கொடிய துன்பத்தினைச் செய்துவிடுமென்று அவள் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டாள்! தன்னை மணந்த காதலர் பிரியாமல் தன்னுடனேயே இருந்தபோது, மாலை நேரம் துன்பம் செய்யும் என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை. மாலைப் பொழுது இவ்வளவு கொடுமை செய்யும் என்பதனை அவள் உணர்ந்திருந்தால், நாயகனைப் பிரிவதற்குக்கூட அவள் உடன்பட்டு இருக்கமாட்டாள். ஆதலால்தான், "என்னை மணந்த காதலர் என்னைப் பிரியாது இருந்தபொழுது மாலை நோயின் துன்பத்தினை தெரிந்துகொள்ளாமல் இருந்து விட்டேனே!" என்று கூறுகின்றாள்.

**"மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்தது இலேன்"**

இக்குறட்பா பெண்களுக்கென்றே—பெண்களிடத்தே, சில சமயம் காணப்படுகின்ற அறியாமை போன்ற குணத்தினை வெளிப்படுத்துவதுபோல அமைந்துள்ளது!

மாலை நேரம் என்பது, இருளும் இல்லாமல் பகலும் இல்லாமல் இரண்டும் கலந்தாற்போன்ற ஒரு நேர மாகும். ஆதலால், மாலை நேரமும் மயக்கமான தன்மையை உடையதாக இருக்கின்றதாம்! அந்த மாலைப் பொழுதும் மயக்கம் கொண்டு துன்பப்படு வதைப் போல அந்தக் காதலிக்குத் தோன்றிவிடுகின் றது! மாலை நேரமே நீயும் மயக்கம் கொண்டு கலங்கியது போல தோன்றுகின்றாயே! உன்னுடைய கணவனும் என்னுடைய நாயகனைப் போல பிரிந்திருக்கும் கொடிய வரோ, என்று மாலைப் பொழுதைப் பார்த்து அந்த நாயகி பேசுகின்றாள். அவள் பேச்சின் போக்கினைக் குறட்பா ஒன்று நயமாகக் காட்டுகின்றது.

**"புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை."**

மாலை நேரமும் நாயகிக்குக் கொடுமையினையே செய்வதாகின்றது.

இவ்வாறு பற்பல எண்ணங்களினால் வாடுகின்ற நாயகியின் உறுப்புக்கள் எல்லாம் பிரிவுத் துன்பத் தைத் தாங்க முடியாமல் அழகினை இழந்துவிடுகின் றன. நாயகிக்குத் துன்பத்தைக் கொடுத்துவிட்டு நாயகன் பிரிந்து, தொலை தூரத்திற்குச் சென்று விட்டான். பிரிந்த நாயகன் வருவார், வருவார், என்று ஏக்கமுடன் பார்த்த கண்கள் ஒளியிழந்து அழ கினையும் இழந்துவிட்டன. ஒரு சமயத்தில் நாயகியின் அழகிய கண்களைப் பார்த்து மலர்கள் நமக்கு அழ கில்லையே என்று நாணமுற்றன. ஆனால் இப்பொழுதோ அந்த மலர்களைப் பார்த்து அவளுடைய கண்கள் நாணம் அடைய வேண்டிய நிலை உண்டாகி விட்டதாம்!

"சிறுமை நமக்குஒழியச் சேட்சென்றார் உள்ளி,
நறுமலர், நாணின கண்"

என்ற குறட்பா நாயகியின் அழகிழந்த கண்களின் தோற்றத்தை விளக்கிக் காட்டிவிடுகின்றது.

நாயகன் கூடி வாழ்ந்த பொழுதெல்லாம் பிரியாது இருந்த காலத்தில் இன்ப மிகுதியால் அவளுடைய தோள்கள் பூரித்துக் கம்பீரமாக இருந்தன. இப்பொழுதா அவைகள் மெலிந்து காணப்படுகின்றன. அவைகள் மெலிந்து தோன்றும் காட்சியானது, நாயகன் பிரிந்திருக்கின்றான் என்பதனை வெளிப்படையாகச் சொல்வது போலவே இருக்கின்றதாம்! இக்கருத்தினைக் கூறும் குறட்பாவினைக் காண்போம்.

"தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்"

தோள்கள் மெலிந்துவிட்டன என்று கூறியதால், நாயகியின் உடல் நலமே குன்றிவிட்டது என்பது உணர்த்தப்பட்டுவிட்டது. இவ்வாறு உறுப்புகளெல்லாம் நிலைகெட்டு வருகின்றபொழுது, அந்த நாயகி தனது நெஞ்சத்தினைப் பார்த்து வேண்டிக்கொள்கின்றாள்.

"என்னுடைய நெஞ்சமே, தோள்கள் மெலிந்து வாடுவதால் பிரிந்திருக்கின்ற நாயகர் கொடுமையானவர் என்று சொல்லப்படுகின்றது. இதனை எனது நாயகர்க்கு எடுத்துரைத்து அந்தப் பெருமையினை நீ அடையலாமே."—இவ்வாறு நாயகி தன்னுடைய நெஞ்சத்தினிடம் முறையிட்டுக் கொள்கின்றாள்.

"பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்
வாடுதோள் பூசல் உரைத்து"

என்ற குறளறம் நாயகி படுகின்ற வேதனைக் குழப்பத்தினைச் சொல்லிக் காட்டுகின்றது. தோள்கள்

தங்கள் அழகினை இழந்து மெலிந்து விட்டதால், வளையல்களும் கழன்றுவிட்டன. 'தொடி'யென்ற தோள் வளையல்களை பெண்கள் அணிவது வழக்கம். தோள்கள் தங்கள் நிலையில் இருந்தால்தான் தோள் வளையல்களும் அந்த இடத்திலேயே இருக்கும். இப்பொழுது வளையல்களும் கழன்றன, தோள்களும் மெலிந்து அழகிழந்தன. இந்தச் செயல்கள் அவளுடைய காதலர் பிரிந்து சென்ற கொடுமையைப் பலரும் அறியச் செய்துவிடுகின்றன. பலருக்கும் எடுத்து உரைக்கின்றன'' என்று கூறுகிறாள்.

**''கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்''**

என்ற குறட்பா இக்கருத்தினை மெய்ப்பித்துவிடுகின்றது.

நாயகியினுடைய உறுப்புக்கள் ஒவ்வொன்றும் துன்பமுறுவதால் நாயகன் பிரிவினை அவைகளே வெளிப்படுத்திவிடுகின்றன, என்று பன்முறையும் நாயகி சொல்லிவிடுகின்றாள். கண்கள், பசலை நிறத்தைப் பெற்றுவிட்டன. எல்லா நேரத்திலேயும் நீரைச் சொரிந்துகொண்டே இருக்கின்றன. இவ்வாறு இருக்கின்ற காட்சி தனது நாயகர் அன்பு செய்யாமல் பிரிந்துவிட்டார் என்பதையே காட்டுவதாக இருக்கின்றது, என்றாள்.

**''நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்''**

என்ற ஒரு குறட்பா, கண்கள் என்ன சொல்லுகின்றன என்பதைப் பேசுகின்றது.

நாயகனை மற்றவர்கள், கொடியவர் என்று கூறுவதை அவளால் பொறுத்துக் கேட்க முடியவில்லை.

பிரிந்திருக்கும் நாயகனை மற்றவர்கள் கொடியவர் என்று சொல்லுகின்றார்களாம்! அப்படி மற்றவர் களுக்குத் தெரியும்படி செய்தவை, மெலிந்துவிட்ட தோள்களேயாகும். தோள் வளையல்களும், கழன்று விழும்படியல்லவா தோள்கள் மெலிந்துவிட்டன! இதைக் கண்டுதானே இப்படித் துன்பத்தை உண் டாக்கிவிட்ட நாயகர் கொடிய்வர்என்று கூறுகின் றனர்? கண்டவரெல்லாம் இவ்வாறு கூறுவதைக் கேட்டு வருந்தி நான் துயரமுறுகின்றேன். இது அந்த நாயகியின் பேச்சாகும். குறளறம் கூறுவதைக் காண் போம்.

**"தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
**கொடியர் எனக்கூறல் நொந்து"**

நாயகன் பிரிந்திருப்பதால் தனக்குத் துன்பமே யென்றாலும், மற்றவர்கள் தனது நாயகனைக் குறை கூறிப் பேச அவள் பொறுத்திருக்க மாட்டாள். கற் புள்ளம் நிறைந்த நாயகியல்லவா அவள்?

நாயகனும் நாயகியிடம் நெருங்கிக் கலந்து பழகி யிருந்த பொழுது—கூடி மகிழ்ந்து இருந்தபொழுது, மகிழ்ச்சியொடு இருந்த ஒளிவீசிய அவளுடைய நெற்றியானது, இன்ப நாயகன் விட்டுப் பிரிந்த அந்தக்கணமே பசப்பு நிறம் பெற்றுவிட்டதாம்! இப் படி இருக்க தொலைதூரத்தில் நாயகன் இப்பொழுது இருக்கின்றான் என்றால், அவள் படும் வேதனையை சொல்லவும் முடியுமோ? அவளுடைய ஒளி பொருந்திய நெற்றியானது பசலை நிறத்தை அடைந்துவிட்டதை அவளுடைய கண்கள் பார்த்துவிட்டனவாம்! உடனே கண்களும் நெற்றியைப் போலவே பசலை நிறத்தை யடைந்து, துயரமும் கொண்டுவிட்டன.

"கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு"

என்று குறட்பா கூறிவிட்டது!

அவளுடைய உறுப்புக்களெல்லாம் ஒவ்வொன்ருகவே அழகினை இழந்துவிட்டன என்று குறிப்பிடுகின்ருள்.

மாலை நேரத்தில் பிரிந்திருக்கும் நாயகி அடைகின்ற துன்பத்தினைக் கூறும்பொழுது கண்டிரங்கல் என்ற அதிகாரத்தின் கருத்துரையினையும், அவளுடைய உறுப்புக்கள் அழகினை இழந்துவிடும் தன்மையினைக் கூறும் "உறுப்பு நலன் அழிதல்" என்ற அதிகாரத்தின் கருத்துரையினையும் கண்டோம்!

## நெஞ்சொடு குமுறுதல்

**நா**யகியுடன் கூடி மகிழ்ந்திருந்த நாயகன் வெளியூர் செல்லும் வேலையின் பொருட்டு நாயகியைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கின்ருன். பிரிவின் துயரத்தால் கற்புள்ளம் கொண்ட நாயகி பிரிவின் துயரம் தாங்க முடியாமல், வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிருள். அவளுடைய மனம் பற்பல எண்ணங்களை எண்ணிக் கலக்கமுற்று இருக்கின்றது. இன்ப நோயினுல் வாடுகின்ற அவள் தன்னுடைய நெஞ்சுடனே பற்பல பேசுகின்ருள். நெஞ்சமே, ஏதாவது நினைத்து எனக்கு வழியொன்று சொல்ல மாட்டாயா? எந்த விதத்திலும் தீராத இந்த இன்ப நோயினைத் தீர்த்துக்கொள்ளும் மருந்தொன்றினை எனக்குத் தெரிவிக்கக் கூடாதா, என்று தன்னுடைய நெஞ்சினைப் பார்த்து நாயகி பேசுகின்ருள்.

இக்கருத்தினை அழகிய குறளொன்று நமக்கு எடுத்துரைக்கின்றது.

**"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே, எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து."**

மகளிர்க்கு, தங்களைத் தாமே நொந்து கொள்ளுகின்ற பழக்கம் இயல்பு என்பதை நாயகியின் பேச்சு மெய்ப்பித்து விடுகின்றது. தனக்கு உண்டான துன்பத்தை, தீர்த்துக்கொள்ளும் வழி தெரியாமல் தவிக்கின்றாள், என்பது விளக்கமாகி விட்டது!

இவ்வாறு தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்துப் பற்பல கூறுகின்றாள். பிரிந்த நாயகனை நினைத்து நினைத்து அவள் நெஞ்சம் நொந்து கொண்டிருக்கின்றதாம்; காதலரிடத்தில் அன்பு குறையாமல் அவரையே நினைத்துக் கொண்டிருக்கின்ற தன்னுடைய மனதைப் பார்த்து, அவள் சொல்லுகின்றாள்: "என் மனமே, நம்முடைய நாயகருக்கு என் மீது காதல் இல்லை, அன்பு இல்லை, இருந்திருந்தால் இதற்குள் வந்திருப்பார்; அப்படி இருக்க நீமட்டும் அவரை நினைத்து நினைத்து நொந்துகொண்டிருப்பது எவ்வளவு அறியாமை? எவ்வளவு பேதைமை?" என்று நாயகி கூறும் சொற்கள் நயமாக அமைந்துவிட்டன.

**"காதல் அவர்இல ராகநீ நோவது
பேதமை வாழிஎன் நெஞ்சு."**

இக்குறட்பா குழப்ப நிலையில் இருக்கும் நாயகியின் உளப்பாங்கினை உணர்த்திவிட்டது. தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்து விண்ணப்பமாக ஒன்று கேட்கின்றாள். நெஞ்சத்திடம் நேருக்கு நேராக அவள் பேசுவதை ஆசிரியர் வள்ளுவர், இன்ப நயமாக அமைத்து விடுகின்றார். நெஞ்சமே, நீ நாயகனிடத்தில் செல்லுவ

தற்குத் துடிக்கின்றாய்; அப்படி நாயகனிடத்திற்கு நீ போகும்பொழுது, செய்ய வேண்டியது ஒன்று உண்டு. எனது கண்களையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு போவாயாக. இந்தக் கண்கள், நாயகரைக் காட்டு, காட்டு என்று என்னைப் பிடுங்கித் தின்னுகின்றன.

இவ்வாறு நாயகி பேசுவதை ஆழ்ந்து சிந்தித்து, நாயகன்பால் அவள் கொண்டிருக்கும் அன்பினை, உய்த்துணர்தல் வேண்டும்.

**''கண்ணும் கொளச்சேறி, நெஞ்சே, இவைஎன்னைத்**
**தின்னும் அவர்காண லுற்று''**

என்ற குறளறம் நாயகியின் கண்கள் துடிக்கின்ற துடிப்பை உரைத்து விடுகின்றது.

மீண்டும் தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்து நாயகி ஆறுதலாக கருத்தொன்றினைக் கூறுகின்றாள். நெஞ்சமே, நமது காதலர் எங்கே இருக்கின்றார் என்பது உனக்குத் தெரியாதா? எங்கேயோ போயிருக்கின்றார் என்று நினைக்கின்றாயே. என்னுடைய காதலர், என்னுடைய உள்ளத்திலேதானே எப்பொழுதும் இருக்கிறார்? இது உனக்குத் தெரியுமே! தெரிந்திருந்தும் வெளியிலே போய்த் தேடி யாரிடம் சொல்லுவாய்? இப்படியும் அந்த நாயகியின் பேச்சு அமைந்துவிடுகின்றது. இதனைக் கூறும் குறட்பாவினைச் சிந்திப்போம்.

**''உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ,**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு.''**

தன்னுடைய நெஞ்சுடனே, குமுறிக்கொண்டு பற்பல பேசும் நாயகியின் இன்ப வேகம், தெளிவாகப் புலப்பட்டு விடுகின்றது. நமது நாயகர் நம்மை வெறுத்து விட்டாரோ என்று நினைத்து தனது நெஞ்சினிடம் கூறுகின்றாள். ''நெஞ்சமே, நம் காதலர் நம்மைக் கைவிட்டு

விட்டாரோ?" என்று கேட்கின்ருள். ஏனெனில், நாம் எப்பொழுதும் அவரை விரும்பிக்கொண்டே இருக்கின்ரும். அவரோ நம்மை விரும்புவதாகத் தெரியவில்லை. அப்படி விருப்பம் இருந்திருந்தால் இதற்குள் வந்திருப்பார். அப்படி நம்மை விரும்பாதவர் என்று நினைத்து, நம்மால் அவரை நினைக்க முடியாமல் கைவிட்டு விடுகின்ற வலிமை, நமக்கு இருக்கின்றதோ? இல்லையே, நெஞ்சமே! இது நாயகியின் பேச்சாகும்.

**"செற்ருர் எனக்கை விடல்உண்டோ, நெஞ்சேயாம்**
**உற்ருல் உருஅ தவர்"**

என்று வருகின்ற குறட்பா நாயகியின் உள்ளத்தில் மோதிக்கொண்டிருக்கின்ற பற்பல எண்ண அலைகளைக் காட்டிவிடுகின்றது. கற்பு நிறைந்த உள்ளத்தில் இவ்வாருன எண்ணங்களெல்லாம் தோன்றுவது இயல்பேயன்ரே?

தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்து மற்ருென்றும் சொல்கின்ருள். "நெஞ்சமே, காதலரிடம் நீ கோபித்துக் கொண்டிருப்பது பொய்யான கோபமேயாகும். நம்முடனே, கலந்து மகிழும், காதலரைக் கண்டுவிட்டால், அவரிடம் சிறிது நேரமாவது ஊடல் செய்து பிணங்கிக் கொண்டிருக்க மாட்டாய். அப்படிக் கூட இல்லாத நீ, ஏ, நெஞ்சமே அவரை கொடியவர் என்று சொல்லி பொய்க் கோபம் கொள்ளுகின்ருயே இப்போது" என்று தன்னுடைய நெஞ்சத்தில் தவருன போக்கினைக் கண்டித்துப் பேசுகின்ருள்.

**"கலந்துணர்த்தும் காதலர் கண்டால், புலர்ந்துணராய்,**
**பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு"**

என்ற ஒரு குறட்பா அந்த நெஞ்சத்தின் பழக்க வழக்கத்தினை நாயகி எவ்வாறு தெரிந்து வைத்துப் பேசுகின்ருள் என்பதைச் சொல்லி விடுகின்றது.

இன்ப வேதனை அவளுக்கு மிகுதிப்பட்டுக் கொண்டே வந்து விடுகின்றது. நாணம் என்கிற குணமோ, அவளுடைய வேதனையை வெளியிட்டுச் சொல்ல முடியாமல் தடுக்கின்றது. அதனால் அவள் படும் துன்பத்திற்கு துன்பத்தை நீக்குவதற்கு முடியாமல் இருக்கின்றாள். ஆதலினால் தனது நெஞ்சத்தைப் பார்த்து அவள் ஒன்று கேட்டு விடுகின்றாள். நெஞ்சமே, ஒன்று காமத்தை விட்டுவிடு, அதாவது இன்ப எண்ணத்தை மறந்துவிடு. அல்லது, நாணத்தை யாவது விட்டுவிடு! இந்த இரண்டினையும் சேர்த்து ஒன்றாக வைத்து, என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

**''காமம் விடுஒன்றோ நாணவிடு நன்னெஞ்சே**
**யானோ பொறேன் இவ் விரண்டு''**

என்ற குறட்பா, நாயகி பேசுகின்ற பேச்சினை அப்படியே வெளிப்படுத்தி விடுகின்றது.

மேலும் மேலும், நாயகனை நினைக்காமலும் இருக்க முடியவில்லை. நினைத்துக் கொண்டே இருந்தாலும், இன்ப வேதனை அதிகப்பட்டு அழகெல்லாம் போய் விடுகின்றதாம்! தன்னுடனே கூடி இருக்க விரும்பாமல் பிரிந்து சென்ற நாயகரை துன்னார் துறந்தார் என்று கூறுகின்றாள்.

அவ்வாறு பிரிந்து சென்றுவிட்ட காதலரை அவள் நெஞ்சத்திலே வைத்துக் கொண்டிருக்கின்றாளாம். அப்படி வைத்துக் கொண்டிருப்பதால் இன்னும் அழகை இழக்கின்றேன் என்று கூறுகின்றாள்.

**''துன்னத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா**
**இன்னும் இழத்தும் கவின்''**

என்று கூறுகின்ற குறட்பா நாயகியின் எண்ணத்தையெல்லாம் அடக்கிக் காட்டி விடுகின்றது.

நாயகி தன்னுடைய நெஞ்சுடனே பற்பல பேசுகின்றாள் என்றால், அதனுடைய கருத்து, ஆசை மிகுந்தவளாகிவிட்டாள் என்றுதானே கூறவேண்டும். எவ்வளவுதான் உள்ளத்தில் இன்ப எண்ணங்கள் இருந்தாலும் நிறைகுணம் என்கின்ற ஒன்று எல்லாவற்றையும் மறைத்துக் காப்பாற்றி வருகின்றது. அந்த நிறை குணம்தான், நாயகியின் உள்ளத்திலுள்ளதை வெளிக்குத் தெரியாமல் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்பொழுதோ, அந்த நிறை குணம் என்பதும் அழிக்கப்பட்டு விடுகின்றதாம்! நாணம் என்கின்ற தாழ்ப்பாளை கொண்டிருக்கின்ற நிறை என்கின்ற கதவினை காமம் என்கின்ற கணிச்சி, அதாவது உலக்கை உடைக்கின்றதே! என்று நாயகி மிகவும் துடிக்கின்றாள்.

**''காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு''**

என்ற குறட்பா இந்தக் கருத்தினை எளிமையாக விளக்கி விடுக்கின்றது.

மகளிர் எப்பொழுதுமே தங்களின் இன்பத்தினை, இன்ப எண்ணத்தினை மறைத்தே வைத்திருப்பார்கள். அப்படித்தான் வைத்திருக்க வேண்டும். நாயகனைப் பிரிந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாயகியும், அப்படியேதான் இருந்து கொண்டிருந்தாள். ஆனால், இப்பொழுதோ மறைத்து வைக்க முடியவில்லையாம்! எப்படி மறைத்து வைத்திருந்தாலும், தும்மல் போல அந்தக் காமம் வெளிப்பட்டு விடுகின்றது என்று கூறி மிகுதியாகவே வருந்திப் பேசுகின்றாள்.

**''மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்''**

இக்குறளறம் அவள் எண்ணங்கள் எப்படியோ வெளியிற் தெரிந்து விடுகின்றன என்பதைக் காட்டிற்று. நிறைகுணம் என்பது மிகவும் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டிய உயர்ந்த குணமாகும். குறிப்பாக மகளிர்க்கு, நிறைகுணம்தான், பெரிய பாதுகாப்பாக இருக்கும். அப்படித்தான் நிறை குணத்தை வைத்துக் கொண்டிருப்பதாக அந்த நாயகி எண்ணிக் கொண்டிருந்தாளாம். ஆனல், காமமோ அவள் உள்ளத்திற்குள் மறைந்து இருக்காமல் எல்லே கடந்து பலரும் அறிய வெளிப்பட்டு மன்றத்திற்கு வந்து விடுகின்றதாம். இதற்கு நான் என் செய்வேன் என்று நாயகி வருந்துகின்ருள்.

''நிறையுடையேன் என்பேன்மன் யானேஎன் காமம்
மறையிறந்து மன்று படும்''

இக்குறட்பா அந்த நாயகியின் ஆதரவற்ற நிலேயினேச் சொல்லுகின்றது. இன்ப நோய் என்பது ஒருவருக்கு உண்டாகிவிட்டால், அவருக்குப் பெருந்தன்மை என்கிற குணம் தெரியாதாம். நாயகர் நாயகியை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். நாயகியை வெறுத்தே போய் விட்டார், என்று நாயகி சொல்லுகின்ருள். அப்படி சென்றுவிட்ட அவரின் பின் "நான் மட்டும் போகலாமா" என்ற எண்ணம் நாயகிக்கு உண்டாகவில்லேயாம். அவர் வெறுத்துப் போய்விட்டதால் நாமும் பெருந்தன்மையுடனே போகாமல் இருந்துவிட வேண்டியதுதானே என்று அவள் நெஞ்சம் நினேக்கவில்லேயாம்! அவர் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறதாம்! ஆதலால் விட்டுப் பிரிந்தவர் பின்னே, செல்லாமலிருக்கின்ற பெருந்தன்மை காமநோய் வந்தவருக்குக் கிடையாது என்கிருள். அவளுடைய

எண்ணத்தினை ஒரு குறட்பா தெளிவாகக் கூறு கின்றது.

"செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதுஒன்று அன்று"

இன்ப நாயகியின் மனத்தின் போக்கு தெள்ளத் தெளிய தெளிவாக்கப்பட்டது. நாயகன் பிரிந்திருப் பதாலும், நாயகி பற்பல வேதனைக்கு உட்பட்டு இருப் பதாலும், நாயகன் வந்தால், அவருடனே கோபித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும், என்கிற எண்ணம் அப்பெண்ணிற்கு வரவேண்டுமல்லவா? அதுதான் முடியாது என்கின்றாள். மகளிருடைய நெஞ்சம் அப்படிப்பட்டது என்று கூறி தன்னுடைய நெஞ்சத் தின் தன்மையினையும் சொல்லிவிடுகின்றாள். நெருப் பிலே கொழுப்பினைப் போட்டால் என்ன ஆகும்? அந்த நிணம்—அதாவது கொழுப்பு மிக எளிதாக இளகிவிடுகின்ற நெஞ்சத்தையுடையவளாம் அந்த நாயகி. அப்படி இருக்க நாயகன் வந்துவிட்டால், தன்னால் ஊடிக்கொண்டு—பிணங்கிக்கொண்டு இருக்க முடியாதே என்று சொல்லிவிடுகின்றாள்.

"நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்துஊடி நிற்பேம் எனல்"

இக்குறட்பா நாயகியின் இளகிய நெஞ்சத்தினை எடுத்துக் காட்டிற்று.

நாயகியானவள் தன்னுடைய நெஞ்சுடனே பல வாறாகப் பேசுவதைக் கூறும் "நெஞ்சொடு கிளத்தல்" என்ற அதிகாரமும், "நிறையழிதல்" என்ற அதிகார மும் தொகுப்புக் கருத்துக்களாகக் கூறப்பட்டன.

## காதலியின் ஏக்கம்

நாயகியைவிட்டுப் பல நாட்களாக நாயகன் பிரிந்திருக்கின்றான். இன்னும் திரும்ப வரவில்லை. அவனுடைய வரவை மிகவும் ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டே இருக்கின்றாள். நாயகனைக் காண வேண்டிய வேகம், உள்ளத் துடிப்பு, அதிகமாகிக் கொண்டே வந்துவிட்டது. நாயகனுக்கும் விரைந்து சென்று நாயகியைக் காணவேண்டும் என்ற எண்ணம் மிஞ்சிவிட்டது. நாயகி தன்னுடைய கண்களைப்பற்றி யும் கைவிரல்களைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசு கின்றாள். அவளுடைய கண்கள் ஒளி இழந்துவிட்டன. அழகிழந்துவிட்டன. அவ்வாறு அந்த நிலையடைந்து விட்டதற்குக் காரணம் என்ன?

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நேரமும், பிரிந்த நாயகன் வந்துவிடுவார் என்று அவரையே கண்கள் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே இருக்கின் றனவாம். அதனால் கண்கள் ஒளியையும் அழகினையும் இழந்துவிட்டன. நாயகன் இத்தனை நாளைக்குள் வந்து விடுவார் என்று சுவரில் கோடுகளைப் போட்டு அவை களைத் தொட்டுத் தொட்டு நாள்தோறும் எண்ணிக் கொண்டிருக்கிறாளாம். அவ்வாறு ஒவ்வொரு நாளும் சுவரில் வைத்த குறியைத் தொட்டுத்தொட்டு எண்ணி அவளுடைய விரலும் தேய்ந்துவிட்டதாம். இன்னும் நாயகன் வரவில்லையே என்று துடித்த உள்ளத்துடன் துவண்டுகொண்டிருக்கும் நாயகி, தன்னுடைய நிலை மையினை எடுத்துக் கூறி விளக்குகின்றாள்.

> ''வாள்அற்று புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல்''

இக்குறட்பா நாயகியின் உள்ளத்தின் எண்ண வேகத்தினை வெளிப்படுத்திவிடுகின்றது. நாயகன் வருகை அதிசீக்கிரத்தில் நிகழ்ந்துவிடும் என்று ஆவலுடன் அவள் எண்ணிக்கொண்டும், எதிர் நோக்கிக்கொண்டும் இருக்கின்றாள். வந்தவுடனேயே எப்படியெல்லாம் இருப்பேன் என்று எண்ணிக் கொள்ளுகின்றாள். தன்னுடைய உடம்பின்மீதும், குறிப்பாக மெல்லிய தோள்களின்மீதும் பசலை நிறம் வந்திருக்கின்றது. வந்த அந்த நிறம் உடனே போய் விடும் என்று சொல்லுகின்றாள். எப்பொழுதும் போகும், என்பதற்கு விடைகூறி, தெளிவுபடுத்துகின் றாள். "எனது நாயகன் வரட்டும்" என்று குறிப்பிடு கின்றாள். நாயகன் வந்தவுடனே கண்கள் மகிழ கண் ணுர அவனைக் காண்பேன் என்று சொல்லுகின்றாள். அப்படிக் கண்டவுடனேயே அவளுடைய தோள்களின் மீது காணப்படும் பசப்பு நிறம் நீங்கியே விடும் என் கின்றாள். இக்கருத்தினை வெளியிடும் குறட்பாவினைக் காண்போம்.

**"காண்கமன் கொண்கனைக் கண்ணுரக் கண்டபின்**
**நீங்கும்என் மென்தோள் பசப்பு"**

நாயகன் வருகையினால் எவ்வளவு இன்பம் உட னேயே பெற்றுவிடுவேன் என்பதை துடித்த உள்ளத் துடன் அவள் கூறுகின்றாள்...உடனேயே நாயகனைக் கண்டுவிட வேண்டும் என்பது அவள் எண்ணமாகும். நாயகன் முன்பு பிரியாமல் இருந்து கூடி மகிழ்ந்து வாழ்ந்தார். இப்பொழுதோ, பிரிந்திருக்கின்றார். அவருடைய வரவு அதிக விரைவில் இருக்கின்றது; விரைவில் வந்துவிடுவார். விரைவில் வந்துவிட வேண் டும் என்று எண்ணி அவளுடைய நெஞ்சம் இன்ப வெள்ளத்தில் பொங்கித் ததும்புகின்றதாம்.

''கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகோடு ஏறும்என் நெஞ்சு''

என்ற குறட்பா அவளுடைய நெஞ்சம், இன்ப நாயக்னின் வரவினைக் கருதி எவ்வளவு துள்ளிக் குதிக்கின்றதென்பதனைக் காட்டுகின்றது. நாயகன் வந்தவுடனேயே தன்னுடைய வேதனையெல்லாம் கெட்டு ஓடிவிடும் என்கின்றாள். நாயகன் பிரிவினால் அடைந்த துன்பமெல்லாம், நீங்கிவிடும் என்று உறுதியாய்ச் சொல்லுகின்றாள். அவன் வந்தவுடனேயே, நாயகர் வந்த நாளிலேயே அவர் தரும் இன்பத்தினைப் பருகுவேன் என்று மகிழ்வோடு சொல்லுகின்றாள். அப்படிப் பருகியவுடனேயே பிரிவுத் துன்பமெல்லாம் கெட்டுவிடும் என்கிறாள். அவள் எண்ணத்தின் வேகத்தினைக் குறட்பா கூறிவிடுகின்றது.

''வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட''

இக்குறட்பாவினால், நாயகன் வந்தவுடன் ஒரே நாளில் தன்னுடைய துன்பமெல்லாம் பறந்தோடிவிடும் என்று பெருமகிழ்ச்சியோடு சொல்லுகின்றாள்.

நாயகனுடைய அன்பையெல்லாம் மிகச் சிறப்பித்துப் பேசுகின்றாள். பிரிந்திருக்கும் நாயகனை நினைத்து நினைத்து வாடிய நாயகி அவன் வந்தவுடனேயே என்னென்ன நிகழும் என்பதை எடுத்துரைக்கின்றாள். தான் எப்படியெல்லாம் இருப்பாள் என்று பேசுகின்றாள். திரும்பி வந்த நாயகனைக் கண்டு எப்படியெல்லாம் நடந்துகொள்ளுவேன் என்பதை பல எண்ணங்கள் ஒன்று சேர்ந்தாற்போல குறிப்பிட்டுப் பேசுகின்றாள். என்னுடைய கண்கள் போன்ற எனது காதலர் வந்தவுடனே, அவருடன் ஊடிக்கொண்டு பிணங்கிக்கொள்

வேனோ? அல்லது அவரைத் தழுவி மகிழ்வேனோ? அல்லது அவருடன் கூடிக் கலந்து இன்புறுவேனோ? இவ்வாறெல்லாம் நாயகிக்குப் பேசத் தோன்றி பேசி விடுகின்ருள். இன்பத் தாகத்தில் மிதந்து கொண் டிருக்கும் நாயகியின் சுவை மிக்க பேச்சுக்களுக்கு எல்லையுண்டோ?

அவள் பேச்சினை அழகிய சொற்களில் குறட்பா ஒன்று வெளியிடுகின்றது.

**"புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்அன்ன கேளிர் வரின்"**

நாயகிக்குத் தனது நாயகன் வருகை எவ்வளவு பெரிய இன்பத்தைக் கொடுத்துவிடும், என்ற கருத்து தெளி வாக்கப்பட்டது.

காதலர் பிரிந்திருந்தால் அந்த அளவு பிரிந்திருக் கின்ற காலத்தின் அளவு, பிரிவுத் துன்பத்தில் இருக் கும் நாயகிக்கு எப்படித் தோன்றும் என்பது கூறப்படு கின்றது. ஒருநாள் பிரிந்திருந்தாலும் அது பல நாட்கள் போலத் தோன்றிவிடுமாம்; பிரிந்திருக்கும் நாயகனின் வரவினை எதிர்பார்த்து அவர் வருகின்ற நாளை குறியாக வைத்து, ஏங்கிக்கொண்டிருக்கும் மகளிர்க்கு ஒருநாள் பல நாட்களாகத் தோன்றிவிடும். நாயகியின் உள்ளம் தூரதேசத்திற்குச் சென்ற நாயகன் வரவினை நினைத்து ஏங்கிக்கொண்டிருப்பதால், அவன் பிரிந்திருக்கின்ற காலமும் கொஞ்சமேயாலுைம், அது மிகப்பெரிய பிரிவுக் காலமாக அவளுக்கு இருக்கின்ற தாம்.

**"ஒருநாள் ஏழுநாள்போல் செல்லும்சேட் சென்ருர்**
**வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு"**

இக்குறட்பா ஏக்கம் மிகுந்தவரின் எண்ணம் எப்படி இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இவ்

வாறுக வருந்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில் உயிர்க்குயிராகிய நாயகன் திரும்பி வந்து சேர்ந்தான்.

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் இன்பத் தாகத்தால் பார்த்துக் கொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும், தங்கள் உள்ளத்தில் இருக்கும் எண்ணங்களைக் குறிப்பால் உணர்த்துகின்றனர். வந்த நாயகனை நாயகி அன்புடனே நோக்கினாள், நோக்கியவாறே இருந்தாள். ஆனால், உள்ளத்தில் உள்ளதை வெளியிலே சொல்லாமல் மறைத்து வைத்துக் கொண்டிருந்தாள். அவள் மறைத்து வைத்திருந்த எண்ணத்தினை அவளுடைய கண்கள் வெளியில் உரைத்து விடுகின்றனவாம்:

அவள் மறைத்து வைத்திருப்பதையும் மீறி, அவள் மறைப்புக்கு அடங்காமல், அவள் எண்ணத்தை— அவள் உள்ளத்தில் ஏதோ ஓர் எண்ணத்தினை வைத்துக் கொண்டிருக்கின்றாள் என்ற உண்மையினை அந்தக் கண்கள் சொல்லுகின்றனவாம். நாயகன் அதனைப் புரிந்து கொண்டான்; நாயகியைப் பார்த்துப் பேசுகின்றான். 'பெண்ணே! நீ வெளியிட்டுச் சொல்லாமல் மறைத்தாலும், அதையும் மீறி உன்னுடைய கண்கள் எனக்குச் சொல்லிவிடுகின்ற செய்தி ஒன்று இருக்கின்றது.' நாயகியைப் பார்த்தவுடன் நாயகன் இவ்வாறு சொன்னான். பிரிந்திருந்த நாயகன் திரும்பி வந்து விட்ட நேரமல்லவா?

அவனைக் கண்டவுடனே, அவள் உள்ளத்தில் ஏதோ ஓர் எண்ணம் இருக்கின்றதென்பதனை கண்டு கொண்டு சொல்கின்றான். அழகிய குறட்பா ஒன்று அவள் பேசுகின்ற பேச்சினை எடுத்துக் காட்டுகிறது.

**"கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்**
**உரைக்கல் உறுவதுஒன்று உண்டு"**

அவள் மறைத்து வைத்தாலும், அவளுடைய உள்ளத்தில் நிகழ்வதை அவளுடைய கண்களின் மூலமாகவே நாயகன் குறிப்பால் உணர்ந்து கொண்டான். அவள் எண்ணத்தைக் குறிப்பால் அறிவுறுத்தினுள் என்பதே பொருளாகும். கோர்க்கப்பட்ட பளிங்கு மணிகள் மாலையாகக் காட்சியளிக்கும். அந்த மணிகளைக் கோர்த்துக் கொண்டிருக்கும் நூலொன்று வெளியே தெரிந்துவிடாது....இருந்தாலும், அந்த மணிகளின் மூலமாகவே கோர்த்துக் கொண்டிருக்கின்ற நூலினை தெரிந்துகொள்ள முடியும். அதுபோலவே அந்த நாயகியின் அழகினைக் கண்டு சுவைக்கின்ற நாயகன் அவளுடைய அழகிற்குள்ளேயே ஒரு குறிப்பு வெளிப்படுத்தப்படுகிறது என்று கூறுகின்ருன். தனது நாயகியின் குறிப்பினை நாயகனு புரிந்துகொள்ள மாட்டான்?

**"மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதுஒன்று உண்டு"**

என்ற குறட்பா நாயகியைப் புரிந்துகொண்ட நாயகனின் பேச்சினை விளக்கமாகவே கூறிவிடுகின்றது.

இன்ப எண்ணத்தினைக் குறிப்பினுல் உணர்த்துவது தானே மகளிர்க்கு இயல்பும், அழகுமாம். மலர் அரும்பாக இருக்கின்றபொழுது அதனுடைய இதழ்கள் எல்லாம் உள்ளேயே அடைந்திருக்கும். அதனுடைய, அந்த மலரினுடைய நறுமணமும், வாசனையும், அரும்புக்குள்ளேயே இருக்கும்; வெளிப்பட்டு வராது. அதுவே போன்று நாயகியிடம் நாயகன் கண்டானும்!

நாயகியிடம் புன்முறுவல் தோன்றிற்று. புன்முறுவல் கொண்ட தோற்றத்துடனேயே அவள் நின்ருள். தன் எண்ணத்தை வெளியிட்டு சொற்களால்

அவள் சொல்லவில்லை. இருந்தாலும், அவள் நகைத்துப் புன்முறுவல் செய்தாளே அதுவே அவள் ஏதோ குறிப்பு வைத்திருக்கின்றாள் என்பதைப் புரிந்து கொள்ளச் செய்தது என்கின்றான் நாயகன்.

இக்கருத்தினை வைத்துக்கொண்டிருக்கும் குறட்பாவினைச் சிந்திப்போம்.

> ''முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
> நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு''

அரும்புக்குள் வெளிப்படாமல் இருக்கின்ற வாசனையைப்போல, அந்தப் பெண்ணின் நகைப்புக் குறிப்பிலேயும் மறைத்து வைக்கப்பட்டுள்ள செய்தி ஒன்று இருக்கின்றது என்பதனை நாயகன் உணர்ந்து பேசுகின்றான். தான் பிரிந்து வந்து, நாயகியைக் காணுகின்றான். ஆனபடியால், இருவர் உள்ளத்திலேயும் இன்பவேகம் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. இன்ப நோயினால் அந்த நாயகன் வருந்திக் கொண்டிருக்கின்றான் என்பது உண்மையேயாகும். பல நாட்களாக நாயகியைவிட்டுப் பிரிந்திருக்கின்ற நாயகன் அல்லவா அவன்? தன்னுடைய நாயகி காட்டுகின்ற குறிப்பில் கள்ளத்தனம் இருந்தது என்றும் கூறுகின்றான் நாயகியானவள் மறைத்து வைத்திருக்கின்ற எண்ணம் என்பதே அவனுடைய கருத்தாகும்.

நிறைந்த வளையல்களை அந்தப் பெண் அணிந்து கொண்டிருந்தாளாம். அதனையும் குறிப்பிடுகின்றான். என்னுடைய நாயகி கள்ளத்தனமாகக் குறிப்பொன்று காட்டுகின்றாள். அந்தக் குறிப்பு எனக்கு நன்மையாகவே இருக்கின்றது. ஏனென்றால் நான் அடைந்து கொண்டிருக்கின்ற இன்ப நோய்க்கு மருந்தொன்று

இருக்கின்றது என்பதனை நாயகியின் குறிப்பில் கண்டு கொண்டேன் என்று கூறுகின்றான்.

> ''செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
> தீர்க்கும் மருந்துஒன்று உடைத்து''

என்ற குறட்பா, நாயகன் பேச்சினை விளக்கிவிட்டது.

நாயகன் திரும்பி வந்தவுடன் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் கூறும் ''அவர் வயின் விதும்பல்'', ''குறிப்பறிவுறுத்தல்'' என்ற இரண்டு அதிகாரங்களின் கருத்துரைகளைக் கண்டோம்.

## இன்ப வேட்கை

**பி**ரிந்த நாயகனைக் காணாது வருந்திய நாயகியின் துயரம் நீங்க நாயகன் வந்து விட்டான். ஏங்கியிருந்த எண்ணம் நீங்கி இன்பம் நிறைந்த உள்ளம் குடி கொண்டுவிட்டது. நாயகனைக் கண்டு களிப்பெய்துகின்றாள். நாயகியைக் கண்ட நாயகனும் உவகை உள்ளத்திற் பூரிக்க, மகிழ்ச்சி பொங்கி இன்ப வேட்கை நிரம்பி இன்பம் நுகர விரைகின்றான். நாயகி, தன்னுடைய உள்ளத்திலிருக்கும் ஆவல் மிகுதியினையும் இன்பத் தாகத்தையும் மறைத்து வைக்கின்றாள்.

அவள் எவ்வாறு மறைத்து வைத்தாலும் அவளுடைய கண்களும் புன்முறுவலும் அவளுடைய உள்ளத்தினைக் குறிப்பினாலேயே நாயகன் உணரும்படி செய்து விடுகின்றது. கள் குடிப்பவர்களுக்கு மயக்கம் உண்டு. மயக்கத்தில் அவர்கள் நுகரும் இன்பமும் உண்டு. ஒருவகையில் பேசுகின்ற பொழுது, ஒவ்வொரு தன்மையில் கள்ளினையும் காமத்தையும் ஒன்று

படுத்திப் பேசுவார்கள். இது அனுபவத்தின் அடை யாளமாகும். அவ்வாறு ஒன்றுபடுத்திக் கூறினாலும் இன்பக் காமத்தின் இயல்பு, அந்த இன்பத்தின் தன்மை, உயர்வு, சிறப்பு, கள்ளுக்கு சிறிதுமே இல்லை. காதலர்கள் தங்களின் இன்பத்தினைப்பற்றி உள்ளத்தில் நினைத்த மாத்திரத்திலேயே களிப்பு அடைகிறார்கள்.

காதலர்கள் ஒருவரையொருவர் கண்டு கொண்ட மாத்திரத்திலேயே இன்பம் அடைகிறார்கள். நினைத் தாலும் இன்பம், கண்டாலும் இன்பம் என்பது ஆடவர் மகளிர் இன்பத்திற்கே பொருந்தும். ஆனால் கள்ளின் தன்மையோ நினைத்தாலும், கண்டாலும் இன்பம் தந்துவிடுவதாகாது. அதைப் பருகினால்தான் இன்பத் தைப் பெறக் கூடும். இவ்வாறாக காமத்துறையில் இன்பப் பெருமையினைக் குறட்பா ஒறுன் தெளிவாக விளக்கிக் காட்டி விடுகின்றது.

**"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்குஇல், காமத்திற்கு உண்டு"**

இக்குறட்பா பன்முறையும் சிந்தித்து உணர வேண் டிய உண்மையினைப் புலப்படுத்தி விடுகின்றது. காமம் என்பது, உலகோர் பலராலும் புரிந்துகொண்டு இருப் பதுதான் என்று பேசப்பட்டாலும், அந்த இன்பத்தின் நுண்ணிய தன்மையினை சிலரேதான் அறிந்து கொண் டிருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். மிகவும் மென்மைத் தன்மை பொருந்திய பொருளாகப் பேசப் படுவது மலரேயாகும். மலர் மென்மையான இதழ் களைக் கொண்டது. மலரில் மணம் உண்டு, தேனுண்டு. மலரை நாடி வரும் வண்டுகளுக்குத் தேனை மாந்தி மகிழும் உயிரினங்கள் உண்டு. அவ்வித மெல்லிய மலரைப் பக்குவமாகப் பறித்தல் வேண்டும். பக்குவ

மாகத் தொடுத்தல் வேண்டும். விரைவில் வாடி விடு கின்ற தன்மையும் மலருக்கு உண்டு. மலர் நினைத்த போதெல்லாம் மலராது. மலர் மலரும் நேரமும் உண்டு. அந்த நேரத்திலேயே அதினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு பற்பல அருமையான தன்மைகளை மென்மையான மலருக்கு உரிமையாகப் பேசலாம்.

காமம் என்பதோ இத்தகைய மலரினையும் விட மென்மைத் தன்மை வாய்ந்ததாம். என்னே! ஆசிரியர் வள்ளுவனார் எடுத்துக் கூறும் சிகரம் போன்ற அரிய உண்மை. இத்தகைய நுண்ணிய தன்மை வாய்ந்த காம இன்பத்தின் நற்பயனை அனுபவிப்பவர்கள், இவ் வுலகில் சிலரேதான் என்பது ஆசிரியரின் குறிப்பாகும்.

**''மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
**செவ்வி தலைப்படு வார்''**

மிகச் சிறிய சொற்களினால் மிகப் பெரிய உண்மையினை இக்குறட்பா பேசிவிடுகின்றது.

உலகியல் வழக்கில் சிலர், பலர் என்று பிரித்துக் காட்டி தவறு செய்பவர்கள் பல பேர் என்பதையும் இக்குறட்பா சுட்டிக் காட்டிவிட்டது. நாயகன் பிரிந் திருந்த காலத்தில் கொடிய துன்பத்திற்கு ஆளாகி யிருந்த நாயகி, மிகவும் வருந்திக் கொண்டிருந்தாள். நாயகன் தனக்குத் துன்பத்தைக் கொடுத்து விட்டார் என்று கூறினாள். தன்னுடைய உடல் மெலிவுக்கும் தன் மீது வந்த பசலை நிறத்திற்கும் இவை போன்ற பல வேதனைகளுக்கும், நாயகனே காரணம் என்று குறை கூறினாள்.

நாயகன் தன்னைத் தனியே விட்டுப் பிரிந்திருக்கக் கூடாது என்றும், அப்படிப் பிரிந்து சென்றது பெரும்

தவறு என்றும் முறையிட்டு குறைபட்டாள். ஆனாலோ பிரிந்திருந்த நாயகன் திரும்பி வந்த பிறகு, அவனைக் கண்ட உடனேயே அவன்மீது சொன்ன குறைபாடுகள் அத்தனையும் மறந்துவிட்டாள். இன்பத்துடிப்புடனே உள்ளம் நெகிழ நாயகனுடன் கூடிக் கலந்து திளைத்து இன்புறுகின்றாள். சிறிதேனும் குறை இருப்பவனாகவே நாயகன் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை! குறையே இல்லாத, தவறு என்பதே அறியாத நாயகன் என்று மகிழ்ச்சி கொள்ளுகின்றாள்.

இதனைக் கண்ட தோழி நாயகியைப் பார்த்து, 'அம்மா, நாயகன் வராதபொழுது பற்பல குறைகளை அவர்மீது சுமத்திப் பேசிக் கொண்டிருந்தாயே!' என்று கூறினாள்? அதற்குப் பதிலாக நாயகி சொல்லுவாள். 'எனது நாயகனைப் பார்க்கின்ற பொழுது அவர்மீது தவறு இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை! நாயகனைக் காணாத போது தவறு செய்தார் என்று நான் பேசியது எல்லாம், ஒன்றுகூட இப்பொழுது தெரியவில்லையே! நாயகனை, நான் காணாத பொழுது அவர் செய்த குற்றங்கள்தான் எனக்குத் தோன்று கின்றன! அவரைக் காணாதபொழுதுதான் வேறு தவறு செய்தாரென்று எனக்குப் படுகின்றது. ஆனால் அவரைக் கண்டுவிட்ட பொழுதோ, அவர் யாதொரு தவறுமே செய்யாத அன்பு நாயகன் என்றே எனக்குத் தோன்றி விடுகின்றது. பெண்மைத் தன்மை நிறைந்து கற்பு உள்ளம் படைத்த நாயகியின் அன்புக்கு அதை விட வேறு என்ன சான்று இருக்க முடியும்!

நாயகியின் கருத்தினைக் குறட்பா ஒன்று சிறப்பாகக் கூறுகின்றது.

**''காணுங்கால் காணேன் தவறாய, காணாக்கால்**
**காணேன் தவறுஅல் லவை''**

பொதுவாகவே மகளிரிடத்தில் காணப்படும் அன்பு உள்ளம் பேசப்படுகிறது என்ருலும், இன்பத்தினைத் தாங்கிக் கொண்டிருக்கும் நாயகியின் சிறப்பான பண்பு புலப்படுத்தப்பட்டது.

பிரிந்த நாயகன் திரும்பி வந்ததும், அவனுடன் பேசாமல் பிணங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தாள். அவ்வாறு பிணங்கிக் கோபித்துக் கொண்டிருந்தால் பிரிந்த நாயகன் தன்னுடைய தவறினை நினைத்து வருந்துவான் என்று எண்ணிஞள். நாயகன் திரும்பி வந்து விட்டான். முன்பு நினைத்த மாதிரி சிறிது நேரமாவது பிணங்கி ஊடிக் கொண்டிருக்கலாமா என்று நினைத்தாள். ஆனுல் அவள் உள்ளத்திலிருக்கும் இன்ப வேகமோ ஊடுதலை நிலைத்து நிற்கவிடாது என்றும் தெரிந்து கொண்டாள்.

அப்படி இருக்க, ஊடிக் கொண்டும் அதாவது பிணங்கிக் கொண்டும் இருப்பதில் பயனில்லை என்பதை அவளே முடிவு செய்து கொண்டாள். நாயகியின் இன்ப வேகம் அப்படி இருந்ததாம். ஆற்று வெள்ளத்தில் குதித்தால் ஆறு, இழுத்துக் கொண்டுதானே போய்விடும். அதை அறிந்திருந்தும் நீரிலே குதிப்பவரைப் போல நாயகனேடு பிணங்கிஞல் அந்தப் பிணக்கு நிலைத்து நிற்காது என்பதை அறிந்தும் பிணங்குவதுபோல் இருப்பதில் என்ன பயன்? என்று தனக்குத்தானே கேட்டுக் கொள்ளுகின்ருள். குறளறம் பேசுவதைக் காண்போம்.

**''உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்**
**பொய்த்தல் அறிந்துஎன் புலந்து''**

பன்ஞட்களாகப் பிரிந்திருந்துவந்த நாயகனைக்கண்டதும் நாயகியின் இயல்பான பண்பு பேசப்பட்டது.

தன்னுடைய நெஞ்சம் இன்ப வேகத்துடனே விரைந்து ஓடுகின்றதே என்று நினைத்து தன்னுடைய நெஞ்சுடனேயே பிணங்கிப் பேசுகின்ருள். 'ஏ, நெஞ்சமே, எனது நாயகனுடைய மனம் அவர் சொல்வதையே கேட்டு என்னை நினைக்காமலேயே இருக்கின்றது. அவருடைய நெஞ்சு, அவர் பக்கமே இருப்பதை நீ பார்த்திருந்தும், நீ மட்டும் என் வசப்பட்டு இருக்காமல் அவரையே நினைத்துக் கொண்டிருப்பது ஏனோ? இவ்வாறு கூறி தன்னுடைய நெஞ்சத்துடனேயே அந்த நாயகி பிணங்கிக் கொண்டு பேசுகின்ருள்.

''அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது''

என்ற குறட்பா நெஞ்சுடனே பிணங்கிப் பேசும் கருத்தினைக் குறித்துக் காட்டுகின்றது. மீண்டும் தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்து வருத்தப்பட்டுக் கூறுகின்ருள்.

'நெஞ்சமே, எந்தக் காலத்திலும், நீங்காத துன்பத்தினையே வைத்துக் கொண்டிருக்கிருயே; நாயகன் பிரிந்து சென்றிருக்கும்பொழுது பிரிந்தவர் வரவில்லையே, வரவில்லையே என்று எண்ணி எண்ணி துன்பப்பட்டாய்! அவர் வந்த பிறகு பிரிந்து போய் விடுவாரோ என்று நினைத்து நினைத்துத் துன்பப் படுகின்ருய்! இப்படியே எந்த நேரத்திலும் தன்னுடைய நெஞ்சம் துன்பத்திலேயே இருக்கின்றது என்று அந்த நாயகி பேசுகின்ருள்.

''பெருஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அருஅ இடும்பைத்துஎன் நெஞ்சு''

என்று வருகின்ற குறட்பா மயக்கமும் கலக்கமும் கொண்டுள்ள நெஞ்சுடனே நாயகி எவ்வாறு உரை

யாடுகின்ருள் என்பதனைப் புலப்படுத்துகின்றது. நாயகனும் வந்துவிட்டபொழுது அவனோடு கூடி மகிழ்ந்து திளைத்திருக்கவே அவள் உள்ளம் விரைகின்றது. இனியும் அவள் தனியாக இருந்து வேதனைப் பட விரும்புவாளோ? நாயகன் பிரிந்திருந்தபொழுது தனித்தே இருந்தாள். தான் மட்டும் தனித்திருந்து நாயகனை நினைத்து நினைத்து ஏக்கம் கொண்டிருந்தாள். தனித்திருந்து நாயகனை நினைத்தபொழுது அவள் மனம், என்ன செய்தது என்பதைக் கூறுகின்ருள். தனித்திருந்து நாயகனை நினைத்த பொழுது அவளுடைய மனம் அவளைத் தின்னுவது போலவே துன்புறுத்திக் கொண்டிருந்ததாம்! அதை அப்படியே எடுத்துச் சொல்கின்ருள்.

> ''தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
> தினிய இருந்ததுஎன் நெஞ்சு''

இவ்வளவு கொடிய துன்பத்தினை அடைந்த பிறகும் இனியும் தனித்திருக்க நினைப்பாளா என்பதே குறிப்பாகும். நாயகன் எவ்வளவுதான் தனக்குத் துன்பம் கொடுத்து பிரிந்துவிட்டார் என்ருலும் அவரை ஏளனமாகப் பேசிவிட்டால் அது தனக்குத்தானே குறைவு என்று நினைத்து எப்பொழுதும் நாயகனுடைய பெருமையினையே அவள் நெஞ்சு நினைத்துக் கொண்டிருக்கின்றதாம்.

> 'எள்ளின் இளிவாம் என்றுஎண்ணி அவர்திறம்
> உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு''

என்ற குறட்பா தனது நாயகனை எந்நேரமும். புகழ்ச்சியாகவே பேசும் நாயகியின் பண்பாட்டினை உணர்த்திவிட்டது.

இதுவரை திருக்குறள் காமத்துப்பாலில், கற்பியல் பகுதியில், கூறப்பட்டுள்ள ''புணர்ச்சி விதும்பல்'',

"நெஞ்சோடு புலத்தல்" என்ற இரண்டு அதிகாரங்களின் கருத்துக்களைக் கண்டோம்.

## புலவியின் அருமை

புலவி என்பதும், ஊடல் என்பதும் இன்பக் காதலர்களிடையே நடைபெறுகின்ற சிறிது நேரமே இருக்கக்கூடிய பிணக்குகளாகும். இருவரும் கோபம் கொண்டவர்கள்போல் ஒருவரோடு ஒருவர் பிணங்கிக் கொண்டிருத்தலாகும். இப்புலவி நாயகியின்பால் தான் தோன்றுவதாகும். நாயகி கொண்ட பிணக்கினை நாயகன் தீர்த்து வைப்பான். ஊடல் என்கின்ற புலவி கூடலுக்கு முன் நிகழ்வதாகும். இன்ப வாழ்க்கையின் நுணுக்கமான செய்திகளேயென்றாலும், உலகிற்குப் பொதுமறை அளிக்க வந்தவர் அல்லவா வள்ளுவர்? ஆதலால் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் இலக்கணங் கூறுகின்ற முறையில் நுட்பமான புலவியின் தன்மையினையும் விளக்குகின்றார்.

நாயகன் நாயகியர் இடையே நடைபெறுகின்ற கூடலுக்கு முந்தியதாகிய ஊடல் என்னும் புலவி சிறிது நேரந்தான் இருத்தல் வேண்டும். புலவியாகிய இப்பிணக்கிற்கு, கால அளவு மிகச் சிறியதாகும். சிறிது நேரமே இருக்கவேண்டியது ஊடல். அதாவது புலவி நீடித்திருக்கக் கூடாது. நீடித்திருந்தால், இன்பத்தின் நிலைமை கெட்டுவிடுமாம்! ஆனால் புலவியாகிய ஊடல் இல்லாமலும் இருக்கக்கூடாது. உப்பில்லாத பண்டம் உண்பதற்கு முடியாததாகும். உணவிற்கு சுவையளிப்பது உப்புதானே! அந்த உப்பினை இனிமை என்றும் கூறுவார்கள். ஆனால்,

உணவிற்கு அளிக்கப்படும் உப்பு மிகமிக அளவோடு இருத்தல் வேண்டும். தேவையான, உப்பிற்கு மேற் பட்டு அதிகமாகிப் போனால் உணவையே கெடுத்து விடும். உணவு உண்பதற்கே முடியாததாகிவிடும். ஆகையினால், உணவிற்கு, இன்பத்தினைத் தரக்கூடிய உப்பினை அளவோடு அறிந்துணர்ந்து சேர்த்தல் வேண்டும்.

அதுபோல, புலவியும் இன்பத்திற்குத் தேவைப் பட்டதே என்றாலும், அது அளவுடனேயே இருத்தல் வேண்டும் என்பதாகும். உப்பினைப் போலவே, ஊடலும் இருக்க வேண்டும் என்கின்ற உண்மையினை எளிமையான முறையில் குறட்பா ஒன்று எடுத்துக் கூறுகின்றது.

**''உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்''**

இவ்வாறு ஊடலில் இன்ப வழிகாட்டுபவள் நாயகியேயாகும். அவ்வாறு பிணங்கிக் கொண்டிருக் கும் நாயகியின் உள்ளத்தின் உண்மையினை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நாயகி ஊடிக்கொண்டே இருக்குமாறு விட்டுவிடுதல் கூடாது. உண்மையென்ன என்பதை உணர்ந்துகொண்டு ஊடலை நீக்கி கூடலுக்கு வழிவகுத்தல் வேண்டும். நாயகி ஊடல் நீங்கி அதை எதிர்பார்த்திருக்கின்றாள். ஊடல் நீங்கிய கூடலே, வாழ்க்கைத்துறையில் நிகழ வேண்டிய முறையாகும்.

அவ்வாறு ஊடலினை நீக்கிக் கூடல் நிகழா விட்டால், பன்னாட்களாகத் தண்ணீரில்லாமல் வாடிக் கொண்டிருந்த வள்ளிக் கொடியை வேரோடனே அறுத்து எறிந்தது போலாகும் என்ற கருத்தினை குறளறம் பேசுகின்றது.

''ஊடிய வரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று''

ஊடல், கூடல், என்று பேசப்படுகின்ற நுட்பமான ஆழ்ந்த கருத்தின் உண்மையினை இக்குறட்பா மெய்ப்பித்து விடுகின்றது. ஊடுதல் செய்து கொண்டிருக்கின்ற நாயகியின் ஊடலினை, நாயகன் பலவிதத்திலும் தீர்த்து வைக்க முயற்சிக்கின்றான். ஊடிக் கொண்டிருப்பதற்குக் காரணத்தினை அறிந்தால்தானே அந்த ஊடலை அவனால் தீர்த்து வைக்க முடியும்? ஆதலால் பிணங்கிக் கொண்டிருக்கும் நாயகியைப் பார்த்து, அவள் அப்படியாக பிணங்கிக் கொண்டிருப்பதன் காரணம் என்ன என்பதைக் கேட்கின்றான். பொய்க்கோபம் காட்டி ஊடல் செய்து கொண்டிருக்கின்ற நாயகி பற்பல காரணங்களைக் கூறுகின்றாள். அவள் கூறுகின்ற காரணங்கள் பொறுத்தமற்ற காரணங்கள் தான் என்றாலும், அவள் தனது நாயகன்பால் கொண்டிருக்கின்ற அன்பினையும், அவருடைய நுட்பமான அறிவினையும் காட்டி விடுகிறது என்றே சொல்ல வேண்டும்.

நாயகன், அவள் பிணங்கிக் கொண்டிருப்பதன் காரணத்தைக் கேட்டான். நாயகி அதற்குச் சொல்லுகிறாள் பதில்: 'நாயகரே! நீங்கள் வெளியிலே செல்லுகின்றீர்கள்! அப்பொழுது தங்களைப் பார்த்த பெண் தன்மை நிறைந்த பரத்தையர் எல்லாம் அழகு நிறைந்த உங்களைக் கண்ணால் கண்டு, அன்புறுகின்றார்கள். உன்னுடைய அழகைக் கண்டு அப்பெண்கள் எல்லோரும் பொதுப்பட கண்களினாலேயே உன்னை அனுபவிக்கிறார்கள். அவ்வாறு பல பெண்களும் இன்பம் நுகர ஆளாகிவிட்ட உன்னை, நான் நெருங்கமாட்டேன்.' இது அந்த நாயகியின் வார்த்தை! நாயகி, நாயக

னிடம் ஊடிக்கொண்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரண மாம்.

''பெண்இயலார் எல்லாரும் கண்ணில் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு''

இந்தக் குறட்பா புலவி செய்கின்ற நாயகி கூறுகின்ற நுட்பமான கருத்தினை வெளிப்படுத்தி விடுகின்றது. நாயகருடன் பேசாமல் நாயகி ஊடிக்கொண்டேயிருந்தாள். அவள் ஊடலினை நீக்கும் பொருட்டு நாயகனும் தன்னுடைய அன்பு நிறைந்த இன்பம் ததும்பியிருக்கும்—காதல் உள்ளத்தினை வெளிப்படுத்த ஆசைப்பட்டான். தங்கள் இருவரின் காதல்—காதல் உள்ளம் மிகவும் சிறப்பானது என்று கூறினால், காதலியின் கோபம் மாறி ஊடல் நீங்கிவிடும் என்று கருதினான். அவளைப் பார்த்துச் சொன்னான்! 'நாம் வேறு எல்லோரையும் விட— யாரையும் விட, மிகவும் சிறந்த காதல் கொண்டவர்களாக இருக்கின்றோம்' என்று சொன்னான். இவ்வளவு சிறப்பாக நாம் காதல் பூண்டு வாழ்கின்றோம் என்று சொன்னால் நாயகி மனம் குளிர்ந்து மகிழ்வாள் ஊடல் நீங்கும் என்று எண்ணியே அவ்வாறு கூறினான். ஆனால், நாயகி அந்த நாயகனைக் கேட்ட கேள்வியோ அவனைத் திகைக்க வைத்துவிட்டது. நாயகி சொல்லுவாள்: 'நாயகரே! மற்ற யாரையும் விட நம் காதல் சிறந்தது என்று சொன்னீர்களே, அப்படி என்றால் வேறு பல பெண்களிடம் நீங்கள் காதல் கொண்டு இருக்கிறீர்கள் போன்று தெரிகின்றதே! அதனால்தான் அந்தக் காதலையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டி நம்முடைய காதல் சிறந்தது என்று சொல்கிறீர்கள்' என்று. இவ்வாறு பேசி ஊடல் செய்துகொண்டாளாம்! புலவியின் நுணுக்கம் தெரிந்த பெண்ணல்லவா நாயகி! இக்கருத்தினைக் கூறும் குறளறத்தினைக் காண்போம்.

**''யாரினும காதலம் என்றேனு ஊடினுள்,**
**யாரினும் யாரினும் என்று''**

இவ்வாறு தான் சிறிதளவுகூட மனத்தில் எண்ணி யில்லாத காரணத்தைச் சொல்லி ஊடல் செய்கின்ருளே என்று நினைத்த நாயகன் ஊடல் தணிக்க மற்ஞெரு சிறந்த கருத்தினைச் சொன்னுன். 'பெண்ணே! இந்தப் பிறவியில் உன்னை என்றென்றும் பிரியவே மாட்டேன்' என்று நாயகன் பரிவுடனே, பாசத் துடனே, அன்பும், இன்பமும் குழைந்த வார்த்தை களிஞல் பேசினுன். இதைக் கேட்டு அவள் மிகுதியும் மகிழ்வாள் என்றுதான் எண்ணினுன். ஆனுலோ, அவன் எதிர்பாராததே நடந்துவிட்டது. அவன் சொன்னதைக் கேட்டவுடனேயே அந்த நாயகி துக்கம் மேலிட்டவளாகி கண்கள் நிறைய நீரைக் கொண்டு அழுகின்ற நிலைக்கு ஆளாகிவிட்டாள். ஏன் அப்படி செய்தாள்? நாயகனும் இந்தப் பிறவியில் பிரியேன், என்று சொன்னதால் மறுபிறவியில் பிரிந்து விடு வானே, என்று வருத்தமுற்றுக் கண்ணீரால் கண்கள் நிறைய துன்புற்ருளாம்; இதனைக் கூறுகின்றது, அழகிய குறட்பா!

**''இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனுக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்.''**

எப்படிச் சொன்னுலும், நாயகியின் ஊடலினைத் தீர்க்க முடியவில்லையே! அவள் சொல்லுவது ஒவ் வொன்றும் நுணுக்கமாக இருக்கின்றதே, அந்தோ! அந்த நாயகன்தான் என் செய்வான்? அவள் ஊட லினைத் தீர்க்க மீண்டும் ஒரு சிறந்த கருத்தினை அவ ளிடம் கூறினுன். 'பெண்ணே, உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிற என் உள்ளத்தில் இப்பொழுதும் உன்னைத்தான் நினைத்தேன்' என்று கூறினுன். இதனைக்

கேட்டவுடனேயே அப்பெண் ஊடல் நீங்கி கூடலுக்கு விழைவாள் என்று நினைத்தான். ஆனால், அந்த நாயகியோ மீண்டும் பிணங்கிக் கொண்டாள். அவள் கூறியதாவது: ''என்னை நினைத்துக் கொண்டிருந்தேன் என்று சொன்னீர்களே, இப்பொழுது நினைத்தீர்க ளென்றால் இதற்கு முன் என்னை மறந்திருந்தீர்கள் என்றுதானே அர்த்தம்? என்னை மறந்தவரோடு கூடி மகிழேன்'' என்று சொல்லி மறுபடியும் ஊடிக் கொண் டாளாம்!

''உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றுஎன்னை
புல்லாள், புலத்தக் கனள்''

என்று வருகின்ற குறட்பா நாயகிக்கும் நாயகனுக்கும் இடையே நடைபெறும் நுட்பமான ஊடல் பேச்சின் சுவையினைக் காட்டிவிடுகின்றது. இவ்வாறு ஊடல் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த பொழுது நாயக னுக்குத் தும்மல் வந்துவிட்டது. உலக வழக்கத்தில் தும்மல் வந்தால், நடைபெறுகின்ற பழக்கம் ஒன் றுண்டு. அதாவது, தும்மல் வந்தவர்களைப் பார்த்து பக்கத்தில் இருப்பவர்கள், 'பல்லாண்டு வாழ்க' என்று வாழ்த்துவார்கள்! அந்த வழக்கத்தினையொட்டியே நாயகனுக்குத் தும்மல் வந்தவுடனேயே நாயகி அவனை வாழ்த்தினாளாம்! நல்ல காலம், ஊடல் நீங்கிவிட்ட தென்று அவன் மகிழ்ந்தான்! ஆனால், அவள் அப் பொழுதே அழ ஆரம்பித்து விட்டாளாம்! நாயக னுக்கோ ஒன்றும் புரியவில்லை! நாயகி—தான் அழுத காரணத்தைச் சொன்னாள். உலக வழக்கில் ஒருவருக்கு தும்மல் வந்தால் யாரோ நினைக்கிறார்கள் என்றுதானே பொருள்! ஆகவே, நாயகன் வேறு ஒருத்தியைக் காதலித்திருக்கிறான் என்றும், அக்காதலி நினைத்த தினால்தான், அவனுக்குத் தும்மல் வந்தது என்றும் கூறி

பழையபடியே பிணங்கிக் கொண்டாளாம்! இக்கருத்தினைக் கூறுகிறது அக்குறட்பா! வழுத்தினாள் தும்மினேன் ஆக என்செய்வான் அந்த நாயகன்! இப்படி இருக்கும் பொழுது நாயகனுக்கு மறுபடியும் தும்மல் வந்தது. ஆனால், அவன், கெட்டிக்காரத்தனமாக, அந்தத் தும்மல் வெளிவராதபடி அடக்கிவிட்டானும்! ஏனென்றால், தும்மல் வந்தால்தான் தனது நாயகி கோபித்துக் கொள்ளுகிறாளே, என்று நினைத்து மறுபடியும் வந்த அந்தத் தும்மலை அடக்கினான்! ஆனால் அந்த நாயகியோ நாயகன் தும்மலை அடக்குவதைக் கண்டு, மீண்டும் அழுதாளாம்! அதற்குக் காரணமும் சொன்னாள். 'யாரோ உங்களைக் காதலித்து நினைக்கின்றார்கள்; அந்தச் செய்தி எனக்குத் தெரியக்கூடாது என்று மறைத்து வைக்கப் பார்க்கிறீர்களா?' என்று சொல்லி அழுதாளாம்.

"தும்முச் செறுப்ப அழுதாள், நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"

என்கிறது குறளறம்.

இப்படியாக—அந்த நாயகன் தன்னால் எந்தெந்த விதத்தில் நாயகியின் ஊடலைத் தீர்த்துவைக்க முடியுமோ, அந்தந்த வழிகளிலெல்லாம் தன்னுடைய கருத்தினைச் சொல்லிப் பார்த்தான். ஒன்றுமே பயனளிக்கவில்லை. பிறகு ஒன்றுமே பேசாமல் நாயகியை உற்றுப் பார்த்த வண்ணமாகவே இருந்தான். அவன் பேசவே இல்லை! அவளுடைய முகத்தழகினையும், அவயவங்களின் அழகினையெல்லாம் பார்த்த வண்ணம் அழகினைப் பருகிக் கொண்டிருந்தான். இவ்வாறு உற்று உற்று நோக்கிக் கொண்டிருந்த நாயகனைப் பார்த்து நாயகி கோபமாக மீண்டும் பிணங்கிக் கொண்டாளாம். நாயகனுக்கு அவள் எண்ணத்தினைப்

புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த நாயகி பிணங்கிக் கொண்ட காரணத்தை அவனுக்குச் சொல்லுகின்றாள். 'நாயகரே, நீங்கள் என்னுடைய அழகையும் உறுப்புகளையும் இவ்வளவு உன்னிப்பாக நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! இதைப் பார்த்தால், நீங்கள் காதலித்துக் கொண்டிருக்கின்ற வேறு பெண்ணின் அழகினை என்னுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்போல் தோன்றுகிறது என்று சொல்லிப் பிணங்கிக் கொண்டாளாம். இந்த உண்மையினை,

> "நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீ
> யார்உள்ளி நோக்கினீர் என்று"

என்ற குறட்பா விளக்கப்படுத்திவிடுகிறது.

இதுவரை புலவி, புலவி நுணுக்கம் என்ற இரண்டு அதிகாரங்களின் தொகுப்பான கருத்துக்களைக் கண்டோம்.

## ஊடல் இன்பம் (ஊடலும் கூடலும்)

இன்பத்தில் திளைக்க இருக்கும் காதலர்களிடையே கூடலுக்கு முன்னதாகவே நிகழ்கின்ற நிகழ்ச்சி ஊடலாகும். இந்த ஊடலுக்கு, சிறு பிணக்கு என்று பெயராகும். இன்ப உள்ளம் கொண்ட காதலர்களிடையேதான் இந்த ஊடல் நிகழ்வதாகும். ஊடலில் பெறுகின்ற இன்பம் மிகமிகச் சிறந்ததாகும். கூடல் இன்பத்தைவிட, சேர்க்கை இன்பத்தினைவிட, ஊடல் இன்பமே சிறந்ததென்று ஆசிரியர் வள்ளுவர் சிறப்பித்துக் கூறுவார். அன்பு உள்ளம் கொண்ட காதலர்கள், ஊடுவதினால் பெற்ற இன்பத்தினையே பெரிதாகக் கருதுவர். ஊடலினால் காதலர்

களின் நுட்பமான அறிவு புலப்படுகின்றது. இன்ப வேகம் அதிகப்படுகிறது. காதல் உள்ளத்தின் பிணைப்பு மிகுதிப்படுகின்றது.

உயிர்க் காதலர்கள் என்ற தன்மை ஊடல் காலத்தில் உணர்த்தப்படுகிறது. ஊடிக் கொண்டிருக்கும் நாயகியின்பால் நாயகன் நுட்ப அறிவினைக் காணுகின்றான். ஊடல் செய்து கொண்டிருக்கும் நாயகி இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் நாயகன் உள்ளத்தினைக் காண முடிகின்றது. தான் ஊடல் செய்து கொண்டிருப்பதால், நாயகனைப் பரிந்து பரிந்து பேச வைக்கின்றாள். அவன் அன்பினையெல்லாம் பொழியும்படி செய்கின்றாள். நாயகன் பற்பலவும் பேசப்பேச நாயகிக்கு இன்பமே வளர்கின்றது. நாயகன் குழைந்து பேசுகின்றான்; பரிந்து பேசுகின்றான்; வணங்கியும் பேசுகின்றான்; அத்தனையும் கேட்கக் கேட்க நாயகிக்கு இன்பம் வழிந்தோடுகின்றது. இவைகளெல்லாம் ஊடலினால் ஏற்படும் பயன்கள் ஆனபடியால், அவள் ஊடிக்கொண்டிருக்கிறாள். ஆதலால்தான் ஊடல் என்பது, காதலர் இருவருக்குமே இன்பம் தருவதாக அமைந்துவிடுகின்றது, இவ்வளவு பெரிய இன்பத்தினைத் தருவதற்குக் காரணமாக இருக்கின்ற ஊடலினை நாயகி செய்யாமல் இருப்பாளோ! ஆதலால்தான் நாயகன் மீது யாதொரு தவறும் இல்லாமலிருந்தாலும் ஏதேனும் பொய்க் காரணம் காட்டியாகிலும் நாயகி ஊடிக் கொண்டிருக்கின்றாளாம். கூடல் இன்பத்திற்கு ஊடல் மிகவும் தேவைப்பட்டது ஆனபடியால் நாயகி நாயகனிடம் கோபம் கொண்டு பிணங்கிக் கொண்டாள். அதாவது ஊடல் செய்து கொண்டிருக்கின்றாள். ஒருவர்மீது கோபம் கொள்ள வேண்டு

மென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டு மல்லவா? ஆனால் நாயகன் யாதொரு தவறும் செய்யா திருக்கும் பொழுதே, நாயகி அவனிடம் ஊடிக் கொண்டாளாம். அதாவது அவனிடம் பிணங்கிக் கொண்டிருக்கின்றாள். "இல்லை தவறு அவர்க்கு" என்பது நாயகியினுடைய வாக்காகும். நாயகனிடம் ஒரு தவறும் இல்லை என்று அந்த நாயகியே ஒத்துக் கொள்கின்றாள். அப்படி இருக்க, கூடலுக்கு விரும்பும் நாயகனிடம் இவள் ஏன் ஊடல் செய்து கொண்டிருக்க வேண்டும்? அறிவு நிறைந்தவளாயிற்றே அந்த நாயகி? தான் ஊடல் செய்வதற்கு மிகவும் பொருத்த மான காரணத்தினைச் சொல்கின்றாள். அவள் பிணங்கிக் கொண்டிருந்தால், தனது நாயகன் அவளிடம் வந்து பற்பல பேசுவானாம்! அன்பு வார்த்தைகளை எல்லாம் சொல்லுவானாம்! தன்னுடைய அன்பை எல்லாம் அவள்மீது கொட்டுவானாம்! தன்னுடைய நாயகன் தன்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றான் என் பதையெல்லாம் அவள் தெரிந்து கொள்ளுவாளாம்! அதற்குத்தான் ஊடுகின்றாளாம். என்னுடைய நாயகன்மீது தவறு இல்லை என்பதை அறிவேன். இருந்தாலும் நான் ஊடுதல் செய்கின்றேன். ஏனென்றால் அவர் தன்னுடைய அன்பையெல்லாம் மிக அதிமாக என்னிடம் காட்ட, அதை நான் சுவைப் பதற்கு இதுதான் நல்ல வாய்ப்பும், நேரமும் ஆகும் என்கின்றாள்.

> **"இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்**
> **வல்லது அவர்அளிக்கு மாறு"**

என்ற குறட்பா நாயகி உள்ளத்திலே வைத்திருக்கும் மறைபொருளான ஆழ்ந்த இன்பத்தின் வேகத்தினைக் காட்டி விடுகின்றது. நாயகன் தன்னிடம் வந்து

பரிந்தும், குழைந்தும், பணிந்தும் பேசுவதில் நாயகி அடையும் இன்பந்தான் எவ்வளவோ? ஊடல் நிகழ்ச்சியில் எத்தனை இன்பங்கள் உண்டு என்பதனை பல சிறந்த கருத்துக்களினால் ஆசிரியர் வள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கின்றார். அருமையான உதாரணம் ஒன்றினைக் காட்டி ஊடல் இன்பத்தின் பெருஞ் சிறப்பினை விளக்கிவிடுகின்றார்.

நுட்ப அறிவுடையவர்கள், கூடலினைவிட ஊடலே இன்பம் பொழிவது என்பதனை உணர்வார்கள். உண்ணுகின்ற உணவு, உடம்பின் நன்மைக்கேயாகும். உணவு உண்ணுவது நாவின் சுவைக்குத்தான் என்று எண்ணுவது அறியாமையாகும். உணவினை உண்ணும் பொழுதுதான் மகிழ்ச்சி இருக்கின்றது என்று பலர் நினைக்கலாம்! அந்த மகிழ்ச்சி சிறந்த மகிழ்ச்சியே ஆகாது என்பது ஆசிரியர் வள்ளுவனாரின் உயர்ந்த கருத்தாகும். உணவு உண்ணும்பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதைவிட, முன்னமேயே சாப்பிட்ட உணவு செரித்ததினால் அதாவது ஜீரணித்ததினால் உண்டான இன்பந்தான் இனிமையானது. "அறல் இனிது" என்று கூறுகிறார். அதாவது இதற்குமுன் சாப்பிட்ட உணவு முழுமையும் செரித்துவிட்டால், அப்பொழுது உண்மையான இன்பம் ஒருவனுக்குத் தோன்றும். ஆதலினால் ஒருவன் சாப்பிடுகிறபொழுது அடைவதாக நினைக்கிற இன்பத்தினைவிட உண்ட உணவு ஜீரணத்தினால் அடைகிற மகிழ்ச்சியே மிகுந்த இனிமையானதாகும். அதுவேபோல, காம இன்பம் என்பது சேர்க்கை இன்பத்தைத் தருகின்ற மகிழ்ச்சியைவிட, ஊடலின்பொழுது பெறுகின்ற இன்பமே முதன்மையானதும் மிகுந்த இன்பத்தைக் கொடுப்பதும் ஆகும்.

இவ்வளவு சிறந்த அருமையான கருத்தினை, உண்மையினை, எளிமையாக விளக்குகின்ற குறட்பாவினைக் காண்போம்.

"உணவினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது."

இக்குறட்பா ஊடலுக்கும் கூடலுக்கும் உள்ள வேறுபாட்டினையும் அடைகின்ற இன்பத்தின் பெருக்கத்தினையும் மிகத் தெளிவாகக் காட்டிவிடுகின்றது. "புலத்தல்" என்பது அன்பு நெஞ்சம் கொண்ட காதலர்களிடையேதான் நிகழ்தல் வேண்டும். அப்படி நிகழ்கின்றபொழுது காதலர் இருவரும் தங்கள் அன்பினை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவர். அன்பு நிறைந்த உள்ளம் கொள்ளாத, கொண்டிராத காதலர்களுக்கு இடையே ஊடலும் தோன்றாது' ஊடல் இன்பமும் தோன்றாது; காதலர்களுடைய இரண்டு உள்ளங்களும் நீரும் நிலமும்போல இரண்டறக் கலந்து இருத்தல் வேண்டும். நிலத்தொடு கலந்திருக்கின்ற நீர் தனித்துப் பிரிக்க முடியாததாகும். நிலம் நீரினை இழுத்துக் கொள்கின்றது.

இழுத்துக்கொண்ட மண்ணோடு, நீர் ஒன்றித்து விடுகின்றது. நீர் எங்கே இருக்கிறது? நீரைக் கொண்ட நிலம் எப்படி இருக்கிறது? என்று சொல்லும்படியாக இல்லாமல் நிலத்தோடு நீரும், நீரோடு நிலமுமாக ஒன்றாகி விடுகிறதல்லவா? நீர் பொழிந்தவுடனே நிலம் அதைத் தாங்கி தன் உள்ளே கொண்டுவிடுகிறது. காதலர்கள் இருவர் உள்ளமும் நிலமும் நீரும் போல ஒத்து ஒற்றுமைப்பட்டு, சேர்ந்து, கலந்து பிணைந்து, இணைந்து இருக்க வேண்டுமாம். அப்படிப் பட்ட காதலர்களிடையே புலவி தோன்றினால்,

அதனால் அவ்விருவரும் அடைகின்ற இன்பத்திற்கும் எல்லையுண்டோ?

தேவலோகத்தில்கூட இத்தகைய இன்பத்தினைப் பெற முடியுமோ? இந்தப் புலத்தலினால் உண்டாகின்ற இன்பத்தைக் காட்டிலும், பெரிய இன்பத்தைத் தருகின்ற தேவலோகம் வேறு ஒன்று இருக்குமோ என்று காதலர் பேசுகின்றனர். காதலியின் உள்ளமே இதனை வற்புறுத்திச் சொல்லுகின்றது. தேவலோக இன்பத்தையும் புலந்து காணுகின்ற இன்பத்திலேயே அடைந்துவிடுகிறோம் என்று சொல்லுகின்றாள்; ஆதலினால் பிணங்கிக்கொண்டும் அதாவது புலந்து கொண்டிருப்பதிலேயே நிறைய இன்பம் உண்டு என்பதே குறிப்பாகும். இக்கருத்தினை குறளறம் இதோ கூறுகின்றது.

"புலத்தலில் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து"

நீரும் நிலமும் கலப்பதுவே நாயகனும் நாயகியும் சேர்ந்து வாழும் இன்பமாகும் என்ற கருத்து பன்முறையும் சிந்திக்க வேண்டிய ஒன்று ஆகும். ஊடலையும் கூடலையும் மிகவும் நுணுக்கமாகவும் மறைபொருள் வைத்தும் அமைத்தும் கூறுகின்ற ஆசிரியர் ஊடல் என்கிற நிகழ்ச்சியிலேயே தோல்வியையும் வெற்றியையும் கணித்துக் காட்டுகின்றார். நாயகன் நாயகி ஆகிய இருவர்களிடையேயும் ஊடல் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி நடந்து கொண்டிருக்கிற ஊடலில் காதலர்களாக இருக்கும் இருவரில் ஒருவர் தோற்றுவிடுகின்றார். ஆனால் ஊடலில் தோற்றவர் கூடலில் வென்றவர் ஆனார்; அவர் பெற்ற வெற்றி என்பதைக் கூடலில் கண்டுகொள்ள முடியும்; இந்தக்

குறிப்பின் நுணுக்கத்தினை ஆசிரியர் அமைத்துக் காட்டினார்.

**"ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும்**
**கூடலில் காணப் படும்"**

ஊடலில் தோற்றவர் எப்படி சென்றார் என்கிற உண்மை ஊடல் காலத்தில் தெரிந்துகொள்ள முடியாது. அந்த உண்மையினைக் கூடல் காலத்தில்தான், அறிந்துணர்ந்து தெரிந்துகொள்ள முடியும் என்பதனை தெளிவுபடுத்தவே கூடலிற் காணப்படும் என்றும் விரித்துப் பேசினார். நாயகி ஊடிக் கொண்டிருப்பதில் நாயகனும் மிகுந்த மகிழ்ச்சி கொள்ளுகின்றான். அவள் ஊடிக் கொண்டிருப்பதால் அவளிடம் நாயகன் சென்று சென்று யாசிக்கின்றானும்; யாசிக்கின்றான் என்றால் உலக வழக்கில் பேசப்படுகின்ற "யாசிப்பு" அல்ல. "யாம் இரப்ப" என்பது நாயகனின் வார்த்தையாகும். இருப்பவனிடத்தில் இல்லாத வறுமையாளன் போய்க் கெஞ்சிக் கேட்பதை யாசித்தல், இரத்தல் என்று சொல்லுகிறோம். "இரந்துண்ணல்" என்பதும் உலக வழக்கில் நடைமுறைப் பேச்சாகும். நாயகன் விரும்பி ஆவலுடன் வேண்டிக்கொள்வதும் அதுவேயாகும். நாயகியிடம் நான் போய் பணிவாகவும், பரிவோடும் யாசிப்பது போலவும் பேசிப்பேசி அவள் ஊடல் தணிவிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டே இருப்பேன். அப்படிக் கேட்டுக் கொண்டிருப்பதிலேயே எனக்கு நிறைந்த இன்பம் உண்டு. ஆதலினால் என்னுடைய நாயகி ஊடிக்கொண்டே இருக்கட்டும்! ஊடல் தீர்க்குமாறு கூடல் வேண்டி அவளை நான் குழைந்து குழைந்து யாசிப்பதுபோல கேட்டுக் கொண்டே இருப்பேனாக; இந்தச் செயல் நீண்ட நேரம் நடக்கவேண்டும்; அப்பொழுதுதான் எனது